கழக வெளியீடு : சுகூ0

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை

பகுதி - உ

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: Feb., 1954.

Sangath Thamizh Pulavar Varisai

Part - II

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1—C. 620.

பதிப்புரை

தேனினும் இனிய செழுந்தமிழ்ப் பாக்களால் மொழியையும் நாட்டையும் வளம்படுத்தியவர், பழங்காலச சங்கப்புலமை நல்லோராவர். அவர்களுள் நல்லிசைப் புலமை மெல்லியராகிய ஔவையாரும் ஏனைய பெண்பாற் புலவர்களும், உவமையாற் பெயர்பெற்றோர்களும் போற்றத்தக்க புலமையோராவர்.

இவர்தம் வரலாறுகள், சிந்தைகவினிய செவிகவினிய வாய்கவினியவாய்ச சிறந்தனவாகும். இவ்வருமை பெருமை மிக்க வரலாற்றுணைமைகளோ அவர்தம் பாவின் அகச சான்றுகொண்டே ஆய்ந்தெழுதிய நூல்கள் இவையாகும். இம முப்பகுப்பினர வரலாறடங்கிய நூல்களை ஒரே தொகுப்பாக ஆக்கி உதவினால், கற்பாகுமர, கற்க விழைவாக்கும், துறைபோவார்க்கும் நற்பயனும எனக் கருதி ஒரே கட்டடமாகக்கட்டி அழகிய முறையுடன் அமைத்து வெளியிட்டுள்ளோம்.

அறிஞருலகம் இதனையும் இதனோடு தொடர்ந்து வெளிவரும ஏனைய இதுபோன்ற தொகுப்பு நூல்களையும் வாகுகிக்கற்று நற்பேறெய்தி இன்புறுமென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	ஔவையார்	1—122
உ.	பெண்பாற் புலவர்கள்	1—111
ங.	உவமையாற் பெயர்பெற்றோர்	1—126

கழக வெளியீடு : சுசச

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - IV

ஔவையார்

ஆசிரியர் :
புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1953.
Reprint: Nov., 1956.

Sangath Thamizhp Pulavar Varisai—Book IV

AUVVAIYAR

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200

பதிப்புரை

சங்ககாலத்துப் பெண்மணிகள் பலர் கல்வி கேள்வி வீரப்பண்பு முதலிய எல்லாத்துறைகளிலும் சிறந்திருந்தனர். ஒருநற்றாய், தன் மைத்தனை வேல் கைக்கொடுத்துப் போர்முகத்துக்கு அனுப்புவளாயின், அவள்தன் வீரத்தறுகண்மையை யாதெனபது ?

இதற்கையாள் போன்ற அக்காலப்பெண்களுள் தலை மணியாகத்திகழ்ந்தவர் ஔவையாராவர். இவர்தமகென வாழ்ந்தாரில்லை : தமிழுக்காக அரசுமுறைக்காக நாட்டு ஆக்கத்துக்காக அறமுறையைப் பரப்புதற்காக வாழ்ந்தவர். இசைசீரிய இவர்தம் நற்பண்புகளை அவர்தம் பாடல்களே நமக்கு அகச்சான்றாகக காட்டுகின்றன.

இவாதம்மக்கட்பண்பின் மாண்பையறிந்த பேரரசர்களும் குறுநில மன்னரும் வள்ளல்களும் அறிஞரும் பிறரும் போற்றிப் பாராட்டினர். இவ்வகை மாட்சிமிகக்வான ஔவையார் வாழ்க்கை வரலாறு நம்மோரால் நன்கறிதற்கியலாததாய் அவர்தம் வரலாற்றில் பொய யொடுமிடைந்த மாசு மண்டிற்று. அப் போக்கை அவாதம் பாடலாகிய அகச்சான்றென்றே கொண்டு நெடுநுகத்துப் பகல்போல நடுநின்றாய்ந்து செப்பமான அரிய நூலாகப் **புலவர், திரு கா. கோவிந்தன்**வர்கள் ஆகித தந்துள்ளாகள்.

இந்நூலை நன்முறையில் பதித்துச **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை**யில் நான்காவதாக வெளியிட்டுள்ளோம். இவ்வரிசை நூல்களையும் தமிழ்கூறு நல்லுலக மக்கள் வாங்கிக் கற்று நற்பயன் எய்துவார்கள் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க	தோற்றுவாய்	1
உ.	ஔவையார் வரலாறு	8
ங.	ஔவையாரால் பாடப்பெற்றோர்	56
ச.	ஔவையார் சென்ற தூது	80
ஞ.	ஔவையாரைப் பற்றிய கதைகள்	92
ட.	ஔவையார் கதைகளின் ஆராய்ச்சி	111

ஔவையார்

க. தோற்றுவாய்

உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கின், முற்றிலும் மாறுபட்ட இரு பொருள்கள், ஒன்றையொன்று இன்றியமையாதனவாய் இணைந்து தொழில் புரிவதாலேயே, உலக வாழ்வு, வளமுற்று இன்பம் பெருகி இயங்குகிறது என்ற உண்மை உணரப்படும். அறிவுருவாகிய உயிரும், அறிவில்லா உடலும் மாறுபட்டனவே என்றாலும், அவை ஒன்றையொன்று இன்றியமையா நிலையில் ஒன்றுபடுவதாலேயே நம் வாழ்க்கை நடைபெறுகிறது. நுண்பொறிகளை ஆக்கித் தரும் அறிவுநூல் கைவரப்பெற்ற அறிஞரும், அந் நுண்பொறிகளை இயக்கும் கல்லா மக்களும் முற்றிலும் மாறுபட்டவரே எனினும், அவர் இருவரும் ஒன்றுபட்டு உழைப்பதிலேயே, உலக மக்கள் வாழ்வு வளம் பெறுவதைக் காண்கிறோம். சட்டக்கலை தேர்ந்த நீதியாளனும், படை பல பயின்று பெற்ற உடல் வலியுடையானும் முற்றிலும் மாறுபட்ட நிலையினரே எனினும், முன்னேன் மொழிவதைப் பின்னேன் ஏற்று நடப்பதாலேயே உலகில் அமைதி நிலவக் காண்கிறோம. அவ்வாறே, "இருவேறு உலகத்தியற்கை; திருவேறு; தெள்ளியராதலும் வேறு," என்பதற்கேற்பக் கல்வியும், செல்வமும் மாறுபட்ட பண்புடையனவே என்றாலும், கல்வியாளன் காட்டிய வழியில், செல்வம் உடையோன் செல்வதிலேயே, உலக மக்கள உயர்நிலை பெறுதலும் கூடும். ஆகவே, எந்த நாட்டில், எந்தக் காலத்தில், மிகுந்த கல்வியும், திரண்ட செல்வமும் ஒருங்கே பெருகி மண்டிக் கிடக்கின்றனவோ, அந்த நாடு

ஒன்றுதான், அக்கால நாடுகளுக்குள்ளே, நாகரிகத்தின் நடுநாயகமாய் விளங்கும் என்பது தெளிவு.

கல்வியும் செல்வமும் சிறக்கப்பெற்ற நாட்டில், செல்வர் சொல்வழி கல்வியாளர் செல்லுதல் இன்றி, கல்வியாளர் காட்டிய வழியே செல்வம் படைத்தோர் செல்லுதல் வேண்டும். அப்பொழுதுதான, அந்நாடு நல் வாழ்வின் இருப்பிடமாய் அமையும். கண்ணும் காதும் முதலாயின, ஒன்றன் நன்மை தீமைகளைப பிரித்தறியும உணர்வுடைய அறி கருவிகளாம்; கையும் காலுமம முதலாயின அவ்வுணர்வு அற்றுத் தொழிலாற்றுவதற்கென்றே தோன்றிய தொழிற் கருவிகளாம். கண்ணும் காதுமம முதலாய அறிகருவிகள அறிவித்தவாறே, கையும் காலுமம ஆகிய தொழிற் கருவிகள் தொழில் ஆற்றினுல்தான் உடலிற்கு உளறு நேராது. அவ்வாறின்றி, கையுமம காலும் செய்யும அவ்வளவு தொழிலையும் பாத்துக் கொண்டிருகக்வே, கண்ணும் காதுமம உள்ளன என்று கொண்டு இயங்குவதாயின், உடல் அழிவது உறுதி! உறுதி! முக்காலுமம உறுதி! சென்ற விடதததால் செலவிடாது, தீது ஓரீஇ, நன்றின்பால் உய்பபதன்றே அறிவு. இவவாறே நாட்டின் நல்வாழ்வு நடைபெற வேண்டுமாயின், ஏவுமம வினைமுதல கல்வியாளராகவுமம, இயற்றும வினைமுதல் செல்வராகவும் அமைதல் வேண்டும்.

நம் தமிழகமம, பண்டு பெருமைக்குரிய நாடாக விளங்கிற்று என்றுல், அதற்குக் காரணமம, அக்காலத்தில் அறிவன அறிந்த அறிவுடையோராய புலவர் சொல்வழி, அக்கால அரசர்களும், பிறசெல்வர்களுமம பின்பற்றி நடதனர் என்பதே; ஆகவே, ஒரு நாடு வாழ்வதும், தாழ்வதும் அந் நாட்டுச் சானறோர் வாழ்வதாலுமம, தாழ்வதாலுமேயாம் என்பது தெளிவு. "எவ்வழி நல்லர் ஆடவர்; அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்றார் ஔவையார். "சான்றோர் பலர்யான் வாழுமம ஊரே" என்றார் பிசிராந்தைய பெருந்தகையார். "வழுகெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே; நிகழ்ச்சி அவர்கட்டாகலான" என்றார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்; "தக்காரும், தாழ்விலாச்

செல்வரும் சேர்வதுநாடு;" "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின்றேல், மண்புக்கு மாய்வது மன்" என்றார் திருவள்ளுவர்.

இவ்வுண்மையை உணர்ந்தனர் அக்காலத் தமிழ்நாட்டு அறிஞரும், அரசரும்; ஆகவேதான் அக்கால அறிஞர்கள் தம வயிற்றுபபாட்டிற்கு வழிகாண்பதே வாழ்க்கை; அதற்காகப் பிறரைப் பாடிப்பிழைப்பதே தம்தொழில் என்பதை மறந்து, தவறு கண்டவழி, அத் தவறு செய்தான் அந நாடாளும் அரசனே யெனினும், அவன் அரசன், தமக்கு வேண்டும் பொன்னும் பொருளும் அளித்துப் புரப்பவன்; ஆகவே, அவனைக் கடுஞ்சொல் கூறிக் கண்டிப்பதா என எண்ணாது, இடித்துக்கூறித் திருத்துவதையே தொழிலாகக கொண்டிருந்தனர். அரசருமம, அவர்கள் அண்டிப்பிழைகக வந்தவரேயன்றி, அறிவூட்ட வந்தவரன்று என்று கொள்ளாது, அவர் அறிவிற்கு அளவி, அவர் ஆட்டியவாறு ஆடுவதே அரசர்கு அழகு எனக் கொண்டு வாழ்ந்தனர்.

புலவர் வழி காட்ட, அவ்வழியே அரசர்கள் சென்ற காரணததால்தான், செந்தமிழ்நாடு, சீருமம சிறப்பும் செழிக்க, பாரோர் போற்றுமம பெருநிலையுற்றுத் திகழ்ந்தது. பாடலை புனைவது ஒன்றே பாவலா தொழில என்று கருதி அடங்கியவர்கள் அல்லர் அப் புலவர்கள். அரசர்கள்பால் சென்று அறிவூட்டும் பணியினை மேற்கொண்ட அவர்கள், தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கான வேறு தொழில் களையும் மேற்கொண்டே யிருந்தனர். இளந்தச்சனர், பெருந்தச்சனர், பொற்கொல்லன் வெண்ணாகனர், இளம் பொன் வணிகனர், அறுவை வாணிகன் இளவேட்டனர், கூலவாணிகன் சாத்தனர், மருதநுவன் தாமோதரனர், மதுரைக் கணக்காயனர் என அப் புலவர்களுக்கு வழஙகும் இப் பெயர்களே அவ் வுண்மையை மெய்ப்பித்தல் காண்க. பாடிப் பிழைப்பதையே பிழைப்பிற்காம் வழியெனக் கொள்ளாமல், தமக்கென ஒரு தொழில வரைந்து கொண்டு வாழ்வு நடாத்தியமைதாடு, காவலர்க்குத் துணை

யாய்க் கருத்துரை பல கூறுவதைக் கடனுகவும் கொண்டு வாழ்ந்த அப் பழந் தமிழ்ப் புலவர் வாழ்க்கை வரலாறு, இக்காலப் புலவர்க்கும், 'அறிவு கூறும் உரிமை அற்றவர் புலவர்' எனக் கருதும் அரசியல் தலைவர்க்கும் வழி காட்டியாய் நின்று வாழ்விக்குமாக.

நாம் யாருடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள விரும்புகின்றோமோ, அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்தவராவர். ஒருவர் வாழ்க்கை வரலாற்றை அறிவிக்கும் வாயில்களாய் இருப்பன ஒன்று: தங்கள வாழ்க்கை வரலாற்றைத் தாங்களாகவே எழுதி வைத்திருக்கும் தம் வரலாறுகள் (Autobiographies); இரண்டு: தங்கள வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளைத் தாங்களாகவே எழுதி விட்டுச் சென்ற நாட்குறிப்புக்கள (Diaries); மூன்று: அவர்கள் காலத்தே வாழ்ந்து அவர்களோடு பழகியோர் சிலர் எழுதி வைத்த அவர் வரலாறுகள் (Biographies); ஈண்டுக் குறிப்பிட்ட இவையே, ஒருவர் வரலாற்றை உள்ளவாறு அறிய உதவும் வரலாற்றுச் சான்றுகளாம் இவற்றுள் ஒன்றும் இல்லாவிடத்தே, அவர்கள் வாழ்ந்த காலத்தே வாழாது போயினும், அவருக்குப் பிற்பட்ட, ஆனல் அவர்க்கு மிகவும் அண்மைக் காலத்தில் வாழ்ந்த சிலர், அவர்பற்றி முன்னோர் கூறக் கேட்டனவற்றைக் குறித்து வைத்தனவும வரலாற்றுத் துணையாம் இயல்பினவே ஆம்

ஆனல், இங்கு நாம் அறிய விரும்பும் புலவர்தம் வாழ்க்கை வரலாற்றை அறிவிப்பதில் மேற்கூறியன துணை புரிகின்றனவா எனின் இல்லை என்றே கூறலாம. புலவர்கள், தம் வாழ்க்கை வரலாற்றை வகைதொகையாக எழுதி விட்டுச் சென்றிரல்லர்; அவர் காலத்தே வாழ்ந்த வேறு பிறரும் அவரைபபற்றி எழுதி வைக்கத் தவறி விட்டனர்; அவர காலத்திற்கு அண்மையான பிற்காலத்தே வாழ்ந்தோரில் யாரேனும் அவர் பற்றிக் குறித்து வைத்தனரா எனின், அதுவும் இல்லை. இப்போது நமக்குக் கிடைக்கும் சான்றுகள் எல்லாம், புலவர்கள் அவ்வப்போது எழுதி

விட்டுச்சென்ற சிலபாடல்களுரும், அப் புலவர்களுக்கு, மிக மிகப் பிற்பட்ட காலத்தே வாழ்ந்த யாரோசிலர், அவர் பற்றி எழுதிவைத்த சில வரலாற்றுப் பாடல்களுமே ஆம். புலவர் கள் எழுதிவைத்த பாடல்கள்முழுதும் அவர் தம் வாழ்க்கை வரலாற்றை அறிவிக்கும் இயல்பினவா எனின், அதுவும் இல்லை, அவர்பாடிய பாடல்கள எல்லாம் இருவகையுள் அடங்கும்: அகத்துறைப்பாடல்கள், புறத்துறைப்பாடல் கள் என. முன்னவை முழுதும் யாருடைய வரலாற்றையும் சிறபபாகக் குறிப்பதின்றிப் பொதுவாக, அக்கால ஆண், பெண் கூடிவாழும் வாழ்க்கைவகையினை வகுத்துரைபபன வாம; ஆதலின், அவை புலவர்வாழ்க்கையை வகுத்துரைக் கதுணை புரிவன அல்ல; புறத்துறை தழுவிய பாடல்களே புலவர் தம் வாழ்க்கையினைக் காண்பதில் ஓர் அளவு நமக்குத் துணை புரியும இயல்பின என்றாலும், அவைகாமும, புலவர் வாழ்க்கை ஒன்றையே விளங்க உரைக்க வந்தன அல்ல; அக்காலப் பேரரசாகளையும் சிற்றரசாகளையும கண்டு, அவர் அளித்த பரிசில் பெற்ற மகிழ்சசியால், அவரைப் பாராட்டி யும, அவரிடையே குறைகண்ட விடத்துக் கடிந்து கூறித் திருத்தியும் பாடிய பாடல்களேயாம் ஆகவே, அவை அப் புலவர்தம் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதிலும, அவ்வரசர் தம் வரலாற்றையே பெரிதும விளக்கிச்செல்லும் இயல்பினவாய்த் தோன்றுகின்றன எனறாலும், அரசர் பற்றிக்கூறுமபொழுது, அவ்வரசரோடு அப் புலவர்கள் கொண்டிருந்த தொடர்புகள் சிலவற்றையும் குறிக்கின்றன ஆதலின், அப் புலவர் வரலாற்றை அறிவதில், அவை நமக்கு ஓரளவு துணைசெய்கின்றன என்பது உண்மையே எனினும் அவை, அவர் வரலாறு அனைதையும் அறிவிக்கும் ஆற்றல் உடையன ஆகா.

இனி, புலவர் தம் வரலாறு பல தலைமுறைவரை ஒருவர் கூற, மற்றவர் கேட்பது என்ற முறையிலேயே அறியப் பட்டு வந்ததாதலின், அம்முறையால், அவர் தம் உண்மை வரலாற்றுள் உள்ள பகுதி விடப்பட்டும், இல்லாதபகுதி இணையப்பெற்றும், ஒன்று பிறிதொன்றாகத் திரிக்கப்பெற்

றும், ஒருவர் வரலாறு மற்றொருவருடையதாக மாற்றப்பட் டும்இருத்தல் இயல்பே; ஆதலின், காதுவழிச் செய்தி (Heai-say evidence) யாய இச் சான்றுகளைப் புலவர்கும் வரலாற்றை அறிவிக்குமு உண்மைச் சான்றுகளாகக் கொள்வது கூடாது ஆகவே, புலவர் வரலாறு என்பது, புராணங்களும், பிற்கால நூல்களும் கூறுவனவே என்று கொள்ளாது, அப புலவர்கள்தம் வாய்ப்படப்பாடிய பாடல் களில் காணப்படும் ஒருசில குறிப்புக்களைக் கொண்ட தென்றே கொள்ளுதல் வேண்டும. அதுவே, அவர் தம் உண்மை வரலாற்றை உள்ளவாறு உணரும வழியாம் ஆதலின் அம்முறையைப் பின்பற்றிப் புலவர் பாடல்களாகப பதுப்பாட்டினும, எட்டுத்தொகையினும கிடைக்கும் பாடல்களின் துணைகொண்டே புலவர்கள் வரலாறு வகுத துரைக்கபபடும

பாடல்புனையும் பண்புடைக கல்வியாளராய்ப் பெண் கள் பலர வாழ்ந்த நன்னாடு என்ற பெருமையை உடையது நம தமிழகம் தாய்நாட்டைக்காத்தலே தம்மகளின் தலையாயகடன்; அக் கடமையில் தவறும தறுகணினரைப பெற்றேமு எனக்கூறலும பெருமபழியாம் என்ற உணர்ச்சி யின் ஊற்றுக்களாக மகளிர் பலர் மகிழ்ந்து வாழ்ந்த நாடு என்ற பெருமை உடையது நம தமிழகம் பெண் கல்வியிற சிறந்து பெருமிதங்கொண்ட நாடு; மறக்குல மகளிர மல்கிய நாடு; என்ற இப் பாராட்டுரைகளைப பண்டு பெற்றிருந்தது நம தமிழகம. "தமிழகத்தைப்பார்; அநநாட்டு மகளிரைப் பார், அவர்தம் அறிவின் ஆழதகைப்பார்; ஆடவரிற் சிறந்த அவர்தம் ஆண்மையின ஆற்றலைப்பார்; அவர்கள் ஒழுக்கததின் உயாவைபபார; உயர்ந்த பண்பாட்டைப் பார," எனப் பிறநாட்டு மக்கள் எல்லாம், தங்கள் நாட்டுப் பெண்மக்களுக்கு எடுத்துககாட்டி ஏற்றம்பெற முயன்றனர அன்று நாம் பெற்றிருந்த உயர்நிலை இது! அந்தோ! இன்று நம் நிலைஎன்ன? "தருக்கியைப்பார. முகமூடி அணிந்த அந் நாட்டு மகளிர்தம இன்றைய முன்னேற்றத்தைப்பார்; ஆயுதம் ஏந்துகின்றனர் ஆடவர்களைப்போல; ரஷ்யாவைப்

பார்; சிலைவைப்பார்; அந் நாட்டுப் பெண்கள்உழைப்பால் அந் நாடுகளின் வனப்பும், வளமும் பெருகியுள்ளன. அவர்கள் ஆற்றலால் வாழ்வும வெறறியும்வளர்ந்துள்ளன,' எனப் பிறநாட்டுப் பெண்களின் வாழ்வையும் வனப்பையும் இன்றையத் தமிழகப்பெண்களின் நிலைக்கு, நம் நாட்டுப் பெண்களுக்கு எடுத்துக்கூறி வழிகாட்ட வேண்டியதாகி விட்டது. என்னே அவர்தம் வீழ்ச்சி!

என்றாலும், நம்பிக்கை முற்றும் அற்றுப்போய் விட வில்லை; மீண்டும் இங்கே இருள்நீங்கி ஒளிவீசும் நிலை தோன்றியுளது "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப் பேன்?" என்ற இடைக்கால இழிநிலையின் நீங்கி, "பெண் கல்வி தேவைதானே?" என்ற ஐயநிலை உற்று, "பெண்களும் கற்றற்குரியரே; கல்வி அவர்களுக்கும் தேவைதான்," எனத் தெளிந்து, "அவ்வாறாயின், அவர்களுக்கு எததகைய கல்வி அளித்தல் வேண்டும்!" என்ற ஆராய்ச்சி நிலைக்கு வந்துள்ளனர் இன்றையத் தமிழ்நாட்டார்; நாட்டின் நற்காலத்திற்கு இஃது ஒரு நல்ல அறிகுறி.

பிறநாட்டுப் பெண்கள், பாரோர் போற்ற வாழ்வதைப் போன்றே, பேரும புகழும் பெருக வாழ்ந்த பெண்கள் நம்தமிழகத்திலும் இருந்தனர்; பிறநாட்டுப் பெண்கள் காட்டும் வழியைக் கடைப்பிடித்து உயர்நிலைபெற முயல் வதேபோல், நம்நாட்டுப்பெண்கள் நமக்குக் காட்டிய நல்வழி யிற் செல்லவும் முன்வாருங்கள் என்று கூறுமு நற்பணியை நினைவிற் கொண்டே, நம்நாட்டில் பண்டு வாழ்ந்த பெண்கள் பலர் வரலாற்றை விரித்துரைக்கப் பெரியோர் பலர் விரும்பு கின்றனர் அப் பெண்கள் வரிசையில் முதற்கண் நிற்கும் மூதறிவாட்டி ஔவையாராவர்; அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அறிந்த அளவில் அறிவிப்பதே இந்நூல்.

உ. ஔவையார் வரலாறு

"ஔவையாரைப் பெற்றெடுத்த தந்தை யார்? தாய் யார்? உற்றூர் யார்? உடன் பிறந்தார் யார்? அவர் பிறந்து வளர்ந்த ஊர் யாண்டுளது? அவரைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய குடி எது? அவர் கல்வி கற்றது எங்ஙனம்? கற்றுத் தந்த நல்லாசிரியர் யார்?" என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாணும் வாய்ப்பு, அவர் பாடலைப் பயின்றூாக்குக் கிடைத்திலது.

(1) பிறந்த குடி:

பழந்தமிழ்க் குடிகளில் பாணர் குடி என்பதுமை ஒன்று; "பாணன் பறையன் துடியன் கடம்பனென்று இந்நான் கல்லது குடியுமை இல்லை" என்பது புறநானூறு. அவர் களுள், ஆண்மகன் பாணன் எனவும், பெண்மகள் பாடினி அல்லது விறலி எனவும அழைக்கப்பெறுவர். பாணன், இசைக்கருவியோடு இணையுமாறு இன்குரல் எழுப்பிப் பாடிப் பாராளும் அரசர்களையும், ஊராளும் தலைவர்களையும் மகிழ்வித்துப் பரிசில்பெற்று மீள்வன். விறலியர், அப் பாணர் பின்சென்று, அப் பாணர் பாடுமை பாடற்பொருளும், தாமே பாடும் பாடற்பொருளும் தெளிவாகத் தோன்று மாறு கண்ணாலும் கையாலும் நடித்து, ஆடிப்பாடிப் பரிசில்பெற்று மீள்வர். தாம் செல்லும் இடந்தோறும், தம் இன்னிசைக் கருவிகள் அனைத்தையும் பையுள் இட்டுக் கட்டித் தோளிற் சுமந்துகொண்டு செல்வதும் அவர் வழக்க மாம். மேற்கூறிய குடிகள் எல்லாம் தொழில்பற்றித் தோன்றினவே எனினும், இப் பாண்குடி ஓர் அளவு தாழ்வுடைக் குடியாகவே கருதப்படும்.

ஔவையார், இப் பாணர் குடியில் பிறந்தவரே என்று கூறுவர் சிலர். அதற்கு ஆதாரமாக அரசன் ஒருவன், ஔவையாரை "விறலி!" என அழைத்தான் என ஔவை யார் அவர்களே பாடிய, "இழையணிப் பொலிந்த ஏந்து கோட்டல்குல், மடவரல் உண்கண் வாணுதல் விறலி!"

என்ற பாட்டையும், அதியமான் என்ற அரசன், பரிசில் அளிக்காது நீட்டித்தபோது, அவன் மீது சினங் கொண்ட ஔவையார், "வேற்றிடம் நோக்கிச் செல்கின்றேன்" என அவன் வாயில்காவலனிடம் கூறிப் புறப்படும் பொழுது, "இதோ காண்; என் கலன்களையும், என் இசைக்கருவிகள் அடங்கிய பையினையும் தூக்கிக் கொண்டேன்." "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" எனக் கூறியதையும் காட்டுவர்.

அரசன் ஒருவனை, ஒரு புலவர் பாடும் வழக்கம் தோன்றிய அககாலத்திலேயே புலவர்கள், எக்குலத்தில் பிறந்தவராயினும், தங்களைப் பாண்குடியிற் பிறந்தாராகக் கொண்டு, பாணன் ஒருவன், அரசன் ஒருவனிடத்தில் சென்று, யாழ் இசைத்துப பாடுவதைப் போல் பாடல் புனைவதையே கவிமரபாகக் கொண்டு விட்டனர். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர் அந்தணர் மரபினர் என்று கூறியுள்ளார் தொலகாப்பியப் பொருளதிகாரத்திற்கு உரையெழுதிய பேராசிரியர். அம முடமோசியார் ஆய் என்ற வள்ளல் ஒருவனைப் பாடிய பாடல் ஒன்றில், விறலி பின்வர யாழ் இசைத்து அவனைப் பாடியதாகப் பாடியுள்ளார்.

"வளைக்கை விறலின் பினனளாகப்
பொன்வார்ந தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந்து இசைப்பப்
படுமலை நின்ற பயங்கெழு சீறியாழ
ஒல்கல் உள்ளமொடு ஒருபுடை தழீஇப்
புகழ்சால் சிறப்பின்நின் நல்லிசை உள்ளி
வருதனென்." (புறம். கஉ)

வேளாளர் என்பதைக் குறிக்கும் கிழார் என்ற பட்டப் பெயருடைய அரிசில் கிழார் என்பவர், பேகனைப் பாடிய பாடல் ஒன்றில், "சீறியாழ் செவ்வழி பண்ணி நின் வன்புல நன்னாடு பாட என்னை நயந்து" எனப் பாடியுள்ளார். அந்தணருள் ஒரு பிரிவினர் எனக் கருதப்படும்

நக்கீரர் சோழநாட்டுப் பிடவூர் கிழான் பெருஞ் சாத்தன் என்பானைப் பாடிய பாடலுள், "அரிக்குரல் [1]தடாரியோடு ஆங்கு நின்ற எற்கண்டு" எனப் பாடியுள்ளார். ஆகவே, அவ்வாறு பாடுதல் கவிமரபே அன்றி உண்மையாகவே அவ்வாறு பாடினரா என்பது உணரப்படும்.

மேலும் அரசன் ஒருவனைப் பாடும் பொழுது தங்களை யாரோ சில பாணர் பரிசில் பெறும் இடம் யாண்டுளது எனக் கேட்பது போலவும், அதற்கு விடையாகப் பரிசில் அளிப்போன், அவன் ஆற்றல், அருள் அவன் பால் தான் பெற்ற பரிசில், அவனிடைச் செல்லும் வழி ஆகியவற்றை அவாக்கு அறிவிப்பார போலவும் கவி பாடுதலை மரபாகக் கொண்டனர் புலவர் அவ்வாறு வந்த பாடல்களில் விளிக்கப்படும விறலியரோ, அல்லது அப்பாட்டைப் பாடியவராகக் கூறப்படும் விறலியரோ, உண்மையில் விறலியராகார். கவிமரபு கருதிய புலவர்கள் தங்களைத் தாங்களே அவ்வாறு அழைத்துக் கொண்டனர் என்றே கொள்ளுதல் வேண்டும இதற்கான சான்றுகள் சங்கப் பாடல்களில் நிறைய உள்ளன. பத்துப் பாட்டில் வரும் **பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை** முதலாய பாடல்கள் இவ்வாறு வந்த பாடல்களே. விறலி ஒருத்தியை விளித்துக் கூறியதாக ஔவையாரே பாடிய பாட்டும் உண்டு.

"ஒருதலைப் பதலை தூங்க, ஒருதலை
தூம்பக சிறுமுழா தூங்கத் தூக்கிக
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச
சுரன்முதல் இருந்த சில்வளை விறலி
செல்வை யாயின் சேணோன் அல்லன்." (புறம் · 80)

என்ற பாடல், அவ்வாறு வந்த ஔவையார் பாடல்களுள் ஒன்று. ஆகவே, ஔவையார் பிறந்த குடி பாணர் குடியே; அவர் பாணர் மகளே எனக் கொள்வது உண்மையன்று. பெரும்பாலான புலவர்களைப் பற்றிக் கூறுவதைப் போன்றே

---

1. தடாரி - ஒருவகைப் பறை.

அவர் வரலாறு அறியமுடியாதவாறு இருள் சூழ்ந்துளது என்றே கூறுதல் வேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு." (திருக்: சஉஉ)

என்பதற்கு மாறுக, ஆளைக் கண்டே அவர் கருத்திற்கு மதிப்புத் தரும் மாண்பு கெட்ட மக்கள் வாழ்கின்ற இவ் வுலகில், ஔவையார் வரலாறு விளங்காது மறைந்ததும் ஒரு வகையில் மகிழ்ச்சிக்குரியதே உண்மையில் அவர் ஓர் இழிகுலப் பெண்ணைப்ப் பிறந்து, மணஞகொண்டு வாழா மங்கையாகவோ, அன்று மணங்கொண்ட மறு ஆண்டி லேயே கைமபெண் ஆன களங்கமுடையளாகவோ ஆகிக், கணவன் இழந்த பின்னாக் கட்டுக்கடங்காமல் காவல் மீறி, காவதம் பல கடந்து காவலர் பலர் முன் நின்று, கவிபாடிப் பிழைப்பவளாய் மாறியதாக, அவர் தம் அவ் வரலாறறை அறியும் வாய்ப்புமை இக்கால மக்களுக்குக் கிடைத்திருப் பின், அவா தம வாழ்வு வனப்புடையதன்று. ஆகவே, வனப்பிலா வாழ்வுடையாள் வாயினின்றும் வந்த அப் பாடல்களும் வாழ்கதுதற்குரியன அல்ல; வைகற்குரி யனவே என்று கொண்டு, ஒரு வேளை வெறுத்திருப்பினும் இருபபா. அத்தகைய ஒரு நிலை ஏற்படாமல் இருக்க, ஔவையார்தம வரலாறு விளங்காமற் போனது நன்று என்றே இக்காலப் பெரியோர் சிலர் எண்ணுவர். அதனை லன்றே அவ்வியல்புடையாருமை, ஔவையார் பாடலைக் குறையுடையதெனக கொண்டு கள்ளாது, குணம் உடைய தாகக் கொண்டு போற்றவும் செய்கின்றனா.

(2) சார்ந்த சமயம்:

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறபபின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்தலொடு கணணிய வருமே."
(தொல். புறத்திணை - சுக)

என்ற தமிழர் தம் இயற்கை வழிபாட்டுமுறை மறைய, சிவன், திருமால், முருகன போன்ற வைதீகக் கடவுளரை

யும், கொற்றவை போன்ற சிறு தெய்வங்களையும் வழிபடும் வழக்காறு, ஔவையார் காலத்திலேயே தமிழகத்தில் இடம்பெற்று விட்டது. ஆகவே, தமிழர்கள் ஒவ்வொரு வரும் இக் கடவுளரில் யாரையேனும் ஒருவரை வழிபடு தெய்வமாகக் கொண்டே வாழத் தொடங்கினர். ஔவையார் இம் முறைக்கு மாறுபட்டவரல்லர்.

தமக்குப் பரிசில் அளித்த அரசர்களை வாழ்த்திய விடத்தெல்லாம், "காவிரி எக்கரிட்ட மணலினும் பல நாள் வாழ்க." "மாமழை பொழிந்த நுண்பல் துளியினும் வாழ்க பலநாள்;" "பஃறுளி ஆற்று மணலினும் பல நாள் வாழ்க;" "தண்கதிர் மதியம் போலவும், ஒண்கதிர் ஞாயிறு போலவும் மன்னுகபெரும" எனப் புலவர் பலரும் இயற் கைப் பொருளை எடுத்துக் காட்டியே வாழ்த்தினர். நெடு நாள் வாழ உதவும் நெல்லிக்கனி ஒன்றைத் தமக்கு அளித்த அதியமானை வாழ்த்திய ஔவையார் மட்டும் "நஞ்சுண்ட நீலகண்டனைப் போல் நெடிது வாழ்க"—"நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக! பெரும! நீயே" என்றே வாழ்த்தி யுள்ளார். மேலும், கரும்பைத் தமிழகத்திற்கு முதற்கண் கொணர்ந்தோர் அதியமான் முன்னோராவர் என்று கூறிய விடத்து, அக் கரும்பு "அந்தரத்து அரும்பெறல் அமிழ் தம் அன்னது" என்றும், அவற்றை அவன் முன்னோர், "அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்" வழிபட்டுக் கொணர்ந்தனர் என்றும் கூறியுள்ளார். போர்க்களத்தில் வீரப்புண் பெற்று வீழ்ந்து மடிந்தார் வீரசுவர்க்கம் புகுவர் என்றும், அவ்வாறு போர்ப்புண் பெறுது இறப்போர் உண்டாயின், அவர்க்கும் அவ் வீரசுவர்க்கம் கிடைக்குமாறு இறந்த அவர் உடலைத் தர்ப்பைப்புல்மீது கிடத்தி, வாளால் வெட்டிப் புதைப்பர் என்றும்,

"ஓடல் மரீஇய பீடில் மன்னா
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்து அவர் தீதுமருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்

திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள்கழல் மறவர் செல்வுழிச செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும்" (புறம். கூகூ)

உயிர்களுக்கு வாழ்நாள் வரையறுக்கப்பட்டுளது; அவ் வரையறை தவறுது, கூற்றுவன் உயிர்களைக் கொண்டு செல்வன்; அவ் வாழ்நாள முடியுமநாளன்று வெண்கடுகுப் புகையெழுப்பித் தடுப்பினும் அவன் தவறுது கொண்டு செல்வன் என்றும்,

"ஐயவி புகைப்பவும் தாங்காது ஒயென
உறுமுறை மரபில் புறம்நின்று உய்க்கும்
கூற்றம்." (புறம். கூஅ)

வைதிக முறைகளை விளங்க எடுத்துக் கூறியுள்ளார். உலகம் நிலையாமை உடைத்து,

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்லா
வேற்றோ ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்."
(புறம்: கூசுஎ)

மேலைத் தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்; பார்ப்பார்க்குப பூவும புனலும் சொரிந்து பொன்தானம் புரிதல்வேண்டும்.

"ஏற்ற பார்ப்பாக்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச சொரிந்து." (புறம். கூசுஎ)

உயிர்க்கு உளறுவந்துழி, நல்வினையே நற்றுணையாம், "வாழச்செய்த நல்வினையல்லது ஆகுங்காலைப் புணைபிறி தில்லை," அந்தணர் செந்தீ வளர்ப்பர், "ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர் முத்தீ" என்ற கருத்துக்களை யும் ஏற்றுக் கூறியுள்ளார். இவற்றையெல்லாம் கொண்டு நோக்கியவிடத்து, ஔவையார், சிவனை வழிபடுகடவுளாகக்கொண்ட வைதீகச்சமயச்சார்புடையார் என்றே கொள்ளுதல் வேண்டும்.

(3) அவர் வாழ்நாள் :

ஆண்டாலும், அறிவாலும் முதிர்ந்த ஒரு பெண் மகளைச் சுட்டுவதற்காகவே ஔவையார் என்ற சொல்லைத் தமிழ்மக்கள் ஆளுகின்றனர். ஆதலின் ஔவையார் நெடு நாள் வாழ்ந்தவர் என்பதைக் கூறத்தேவையில்லை தான் நெடுநாள் வாழ்ந்ததாகவும், அதற்குக் காரணம் அதிக மான் அளித்த கருநெல்லிக்கனியே என்றும் அவரே கூறி யுள்ளார்.

> " சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
> ஆதல் நின்னகத்து அடக்கிச
> சாதல் நீங்க எமக்குஈத் தனையே " (புறம் : கூக)

அவர் இறவாது என்றும் இருக்கச்செய்தது என்பதல்ல இச் சொற்றொடர் அளிக்கும கருத்து ; அந் நெல்லிக்கனி உண்பதற்கு முன்னர், அவர் ஆண்டு நிரம்பித் தளர்ந்த உடலினராகி யிருத்தல்வேண்டும். அவர் உடல் பேணப் படாது விடப்படின், அவர் இறப்பு விரைவில் எய்துவ தாகத் தோன்றியிருத்தல் வேண்டும் ; ஆகவே, அதைத் தடுக்க யாதேனும செய்தாகல் வேண்டும் என எண்ணிய அதிகன், அவ்வாற்றல் வாய்ந்த அருமருந்தாயது, அந் நெல்லிக்கனியே என உணர்ந்து அதைக் கொணர்ந்து அவர்க்குத் தந்தாளுதல் வேண்டும் ; அதனல் அவர் அன்றே மறைவது நீங்கி, மேலும பலநாள் வாழ்ந்து, பாடல் பல புனைந்து, தாமும மகிழ்ந்து, பிறரையும் மகிழவித்தாராதல் வேண்டும் இவ்வாறு அண்மையில் நேர இருந்த சாவை நீக்கி நெடுநாள் வாழச்செய்ததன்றி, சாவே இன்றி வாழச் செய்தது என்பதன்று.

நெடுநாள் வாழ்ந்த ஔவையார், தம் வாழ்நாளின் பிற்பகுதியிலேயே பாடல்புனையப் பழகினரல்லர் ; இள மையிலிருந்தே இன்கவிபுனைவதில் ஈடில்லாதிருந்தனர் என் பதற்கு அவர் பாடல்களிலேயே சான்றுகள் உள. "உங் கள் நாட்டில் பொருநரும் உளரோ?" என அரசன் ஒரு வன் கேட்டதாகவும், அதற்குத் தாம் விடையளித்ததாக

வும் வரும் பாடல் ஒன்றில், அவ்வரசன், அணிகள் பல அணிந்ததனால் தோன்றிய ஔவையார் தம் செயற்கை அழகு, இளமைநலம் குன்ற அவர் உடலின் இயற்கை அழகு, நற்குடிப் பெண்டிர்பால் பிரியாது நிற்க வேண்டிய நிறைகுணங்களாய மடம் முதலாயின, மைதீட்டப்பெற்ற அவர் கண்கள், பேரொளிவீசும் நெற்றி ஆகியவற்றைக் கண்டு பாராட்டியதாக அவரே கூறியுள்ளார்.

" இழை யணிப்பொலிந்த எந்து கோட்டல்குல்
மடவரல், உண்கண், வாள்நுதல், விறலி!" (புறம் : அகூ)

ஆகவே, ஔவையார் பேரழகுவாய்ந்த சீரிளமைப்பருவத்தராய் இருந்த நாள் முதலே பாடல் தொழிலில் பயிற்சியுடையராய் இருந்தனர் என்பது தெளிவாம்.

(4) அவர் வாழ்க்கைநிலை :

" இருவேறு உலகத் தியற்கை ; திருவேறு ;
தெள்ளிய ராதலும் வேறு." (திருக : நஎச)

என்பர் திருவள்ளுவர். கல்வி பல கற்றவர் கடும் வறியராகவும், செல்வத்தில் செழித்திருபவோர் எழுத்தறிவு காணும் இலராகவும் இருப்பதையே நாம் எங்கும காண்கின்றோம் கல்வியும் செல்வமும் பொருந்த வாழ்வோர், மிகச் சிலரே ; பெருஞ்செல்வம உடையார்பால் வேண்டுமாயின், சிறிதளவு கல்வியிருக்கக் காணலாமே அன்றிப் பெருங்கல்வி உடையார்பால் சிறிதளவு செல்வமாவது இருக்கக் காண்பது அரிதே ; இஃது இன்றும் இருக்கும் இயல்பு. இவ்வியல்பு இந் நாட்டிற்கு மட்டும் ஏற்புடைய தன்று ; இஃதோர் உலகியல் ; உலகப் பெருங்கவிகள் அனைவரும், வறுமையில் வாடி மறைந்தாராகவே மாநில வரலாறுகள் அறிவிக்கின்றன. காம செல்வத்தில் திளைத்துச் செருக்குடன் வாழ்ந்ததாக எந்தப் புலவரும் கூறியதாகத் தமிழ்நூல்கள் அறிவிக்கவில்லை. பெரும்பாலான அவர் பாடல்கள் அவர்தம் வறுமைநிலையைப் பல்வேறு வகையில் விளக்கிக் காட்டவே பாடப்பட்டுள்ளன ;

ஔவையார், தம் வறுமை நிலையை விளக்க, நீர்ப்பாசியின் வேர்போல் நெகிழ்ந்து கிழிந்துபோன தம் உடைகளையும், எண்ணெயும் தண்ணீரும் கண்டு எத்தனையோநாள் ஆகிய காரணத்தாலும், விட்ட வியர்வைநீர் துடைக்கப் பெறுமல், வற்றிப்போனதாலும் புலால் நாற்றம் நாறும் தம் தலையையும் காட்டும் காட்சி கழிவிரக்கம் தருவதாகும்! "என்னை, முதுநீர்ப்பாசி அன்ன உடை களைந்து," "பாசி வேர் புரை சிதா அர் நீக்கி," "புலவுநாறும் என்தலை." வறுமையில் உழலும் வாழ்வில்தான் செந்தமிழ்ப் பாக்கள் செழிக்கத் தோன்றுகின்றன போலும்!

வறுமையில் வாடிய ஔவையார், தம்பாடல் பெருமையால், தமக்கோர் வாழ்வுமுறையை வகுத்துக் கொண்டார் எனின், அவர் தம சுற்றத்தை மறந்து தம் வாழ்வு ஒன்றையே கருதுபவர் அல்லர் "தக்கவன் ஒருவன் வாழத் தன் கிளை வாழும்" என்பர் பெரியோர். ஔவையாரைச் சூழவாழும் சுற்றம் பெரிது; ஔவையாரும், "தாம பெற்ற பேறு, பெறுக இவ்வையகம்" என்னும் உயர்பேருள்ளம் உடையாராதலின், அரசரை அண்டி, அரண்மனை வாழ்வுபெற்று, அவ்வரசரோடிருந்து இன் சுவை உணவு உண்ணும் அக்காலத்திலும், தம் சுற்றத்தை மறப்பவரல்லர்; அதியமான்அஞ்சியோ டிருந்தகாலை, தம்மையே எண்ணி ஏங்கி இருக்கவும் ஓர் இடமின்றி, ஊர்ப் பொதுவிடத்தையே உறைவிடமாகக்கொண்டு, வாழும் தம் சுற்றத்திற்கு ஆம்வகையில் செந்நெற் குவியல்பல கொடுக்குமாறு அஞ்சியை அவர் வேண்டினர்; அவனும் அவ்வாறே அளித்து அருளினன்.

"முன்னூர்ப் பொதியில் சோந்த, மென்னடை
இரும் பேரொக்கல் பெரும்புலம்பு அகற்ற
பகடுதரு செந்நெல் போரொடு நல்கிக்
கொண்டி பெறுக என்றோன்." (புறம்: ஙகூ0)

(5) அவர் அறிந்த நாடுகள்:

ஔவையார் தமிழகம் முற்றும் சுற்றிப் பார்த்தவர்; அவர் செல்லாத நாடு இல்லை; ஒவ்வொரு நாட்டிற்கும்

நேரில் சென்று அந் நாட்டின் பரப்பு, செல்வச் சிறப்பு, மக்கள் பண்பு முதலாயின அறிந்துள்ளார் அவர்; சேர, சோழ பாண்டிய நாடுகள் என மூப்பெரும் பிரிவாக இருந்த தமிழகம், அவர் காலத்தில் மேலும் பல நாடுகளைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டிருந்தது; அவர் காலத்திற்கு முன்பே, தொண்டைநாட்டுப் பிரிவினை தோன்றிவிட்டது; நாஞ்சில் நாடும், தமிழகத்தின் ஒரு பிரிவே எனத் தழுவப் பட்டிருந்தது; ஔவையார், சோழநாட்டில் உள்ள கிள்ளி என்பானுக்குரிய வெண்ணி என்ற ஊரையும், அவ்வூரில் உள்ள பொய்கையையும், அதில் வாள்போல் பிறழும் வாளைமீன்களையும், அம் மீன்களைப் பிடித்து உண்ணக் காலம் பார்த்துக் கரையில் நிற்கும் நீர்நாய்களையும், அவ் வூரைச் சூழப் பரந்துகிடக்கும் வயல்களையும், அவ் வயல் களில் வளர்ந்து படர்ந்திருக்கும் ஆம்பற்கொடிகளையும் பார்த்து மகிழ்ந்துள்ளார்;

> "வாளை வாளிற் பிறழ நாளும்
> பொய்கை நீர்நாய் வைகுதுயில் எற்கும்
> கைவண் கிள்ளி வெண்ணி சூழ்ந்த
> வயல்வெள் ஆம்பல்." (நற். ஈஉ0)

சேரனுக்குரிய கொல்லிமலை அவருக்குத் தெரியும்; பெரு மழை பெய்வதால் பெருகி ஓடும் அம் மலையருவிகளின் இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்ததும் உண்டு.

> "..... .....பொறையன்
> கார்புகன்று எடுத்த, சூர்புகல் நனந்தலை
> மாயிருங் கொல்லி உச்சித் தாஅய்த்
> தழைதந்துசெல் அருவி." (அகம்: ஈ0ஈ)

பாரிக்குரிய பறம்புமலையும் அவர் பார்த்துப் பாராட்டி யதே; தொண்டைநாடு சென்று அந் நாட்டு அரசன் தொண்டைமானிடம் தூதுரைத்து மீண்டு வந்துள்ளார்; நாஞ்சில்நாட்டில் பெருவள்ளலாய் விளங்கிய நாஞ்சிற் பொருநனைப் பாராட்டிப் பரிசில் பெற்றுள்ளார். மேலும்

சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன்* கானப்பேர் கடந்த உக்கிரப் பெருவழுதியும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தவழி, அவர்களைப பாராட்டி, அறிவுரை பல கூறி, அவர்கள் நட்புவளர வாழ்த்தி வந்துள்ளார்; இவ்வாறு நாடுபல சுற்றி, ஆங்காங்கே நல்ல நண்பர் பலரைப் பெற்றுள்ள பெருமையாலன்றே, அதியமான் பரிசில் நீட்டித்தவழி, "உலகம், அறிவும் புகழும் உடையோர் அனைவரையும் இழந்து விடவில்லை; நாங்கள் எங்கே செலினும், அங்கெல்லாம் எம்மை அன்புடன் வரவேற்றுச் சோறு அளிப்பார் உளர்;" என்று பெருமிதம் தோன்றக் கூறி வெளியேற முடிந்தது! மேலும், நாடனைத்தையும், நன்றாகச் சுற்றிப்பார்த்துப் பழகிய காரணத்தாலேயே, ஒவ்வொரு நாடும் எவ்வெப் பொருளாற் சிறந்தது என்பது தோன்ற,

"வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னெடு முத்துடைத்து; தெண்ணீர் வயல் தொண்டை
நன்னெடு சான்றோர் உடைத்து."

என்ற பாடலைப் பாட முடிந்தது அவரால் என்று கூறுவாரும் உளர்.

(6) வாழ்ந்த காலம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப்படும் சங்ககாலமே ஔவையார் வாழ்ந்த காலமாகும்; சங்ககாலம், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்றும், ஐந்தாம் நூற்றாண்டு என்றும் இருவிதமாகக் கூறுவாரும் உளர். எனினும், கிடைத்துள்ள வரலாற்றுச்சான்றுகள் எல்லாம், சங்ககாலம இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பதையே உறுதி செய்கின்றன ஆதலின், சங்ககாலப் புலவராகிய ஔவையார், அவ்விரண்டாம் நூற்றாண்டில்

---

* கானப்பார்—காளையார் கோவில்; இது பாண்டிநாட்டில் உள்ள பதினெண்கு தலங்களுள் ஒன்றாக இற்றைநாளில் அமைந்து விளங்குகின்றது.

வாழ்ந்தவரே; ஒருவர் பிறந்த காலத்தை, ஆண்டு, திங்கள், நாள், நாழிகை, ஓரை தவறுமல் குறிக்கும இயல்பினராய தமிழர், ஔவையார் போன்ற பெரும்புலவர் பிறந்த நாட்களைக் குறிக்காது விட்டது வியப்பினும் வியப்பே.

(7) அவர்காலத்துப் புலவர்:

ஔவையார் வாழ்ந்த காலம், சங்ககாலம் என்பதை அறிந்தோம்; சங்ககாலம் என்பது ஔவையார் காலத்திற்கு முன்னும் பின்னுமாகச் சில ஆண்டுகளைக்கொண்ட கால எல்லையைக் குறிப்பதாகும்; ஆகவே, அச் சங்ககாலப் புலவர் அனைவரையும், ஔவையார் காலத்தில் வாழ்ந்தோராகக் கொள்ளுதல் பொருந்தாது; சிலர் அவருக்கு முற்பட்ட காலத்தும், சிலர் பிற்பட்ட காலத்தும், சிலர் அவரோடு ஒத்தகாலத்தும் வாழ்ந்திருத்தல் வேண்டும். ஔவையார் பாராட்டைடப் பெற்ற அரசர்கள் யார்? அவ் வரசர்களைப் பாராட்டிய புலவர்கள் யார் என்பனவற்றைக் கொண்டு நோக்கியவிடத்து, கபிலர், பரணர், பெருஞ்சித்திரனர், அரிசில்கிழார், ஐயூர்மூலங்கிழார், ஒருசிறைப் பெரியனர், உலோச்சனர், மோசிகீரனர், மருதன்இளநாகனர், கருவூர்க்கதப்பிள்ளை, வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தன், அஞ்சி அத்தனமகன் நாகையார் முதலாய புலவர் பெருமக்கள் ஔவையாரோடு, ஒருகாலத்தே வாழ்ந்தவர் எனக் கொள்ளுதல் கூடும். இவருள் கபிலரும், பரணரும், வெள்ளிவீதியாரும் காலத்தால் ஔவையாருக்குச் சிறிது முற்பட்டவர் என்பதை, அவர் பாடல்களைப் பயின்றூர் அறிவர்.

(8) குணநலம்:

(க) வறுமையிற் செம்மை

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றூர் பிற்காலப் புலவர் ஒருவர். புலவர்கள் பொருளால் வறியரே என்றூலும்,

"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு." (திருக்: ஙசுஙட)

என்ற மான உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுப்பவர்; பேரரசர் களையும், குறுநில மன்னர்களையும் பாடினர்கள் என்றால், அவர்கள் அளிக்கும் பரிசில் ஒன்றே கருதிப் பாடினரல்லர்; பரிசில் பெறுவதற்காக என்றே அவர்பால் இல்லாதன எல்லாம் ஏற்றிக்கூறிப் போற்றினரும் அல்லர்; "கொடுக்கிலாதானைப் பாரியே" எனக் கூறிப் பாராட்டிப் பரிசில் பெறும் பண்பு, அவர்பால் காணல் அரிது. மேலும், தாங்கள் விரும்பிய பொருளை விரும்பிய அளவு அரசர்கள் அளித்தால் ஏற்பரேயன்றி, அரசர்கள் எது அளிப்பினும் ஏற்றுக்கொள்ளும் இழிகுணம் உடையாரல்லர்; அன்றியும், அரசர்கள் விரும்பாது அளிப்பன எவ்வளவு பெரியன ஆயினும், அவற்றை ஏற்றுக்கொள்வாரல்லர்; இவ்வியல்பு புலவர்தம் பெருமைக்குரிய பண்பாடுகளாம்; அவ்வியல்பு ஔவையார்பாலும் அமைந்திருந்தது எனக் கூறத் தேவையில்லை; அதியமான் தலைவாயில் நின்று, தடாரிப்பறை ஒலித்துத் தன் வரவு உணர்த்திச் சிறிது காலை நின்று பார்த்தனர் ஔவையார்; அவன் ஆங்கு வினைந்து வந்திலன்; அதுகண்ட ஔவையார் சினங் கொண்டு அவ் வாயில்காவலனை நோக்கி,

"எத்திசைச செலினும் அத்திசைச சோறே"

எனக்கூறி எழுந்த அவ்வுரை, ஔவையார் தம் வறுமையிற் செம்மையாம் பண்பை வகுத்துரைப்பது காண்க.

(உ) தன்னடக்கம்

ஔவையார் இவ்வாறு சினந்து கூறிச்செல்வது, அவர் தம் செருக்கினை உணர்த்துவதாகாது; ஔவையார் அடக்கமே உருவானவர்; "பரணர் பாராட்டைப் பிறர் பெறுதல் அரிதினும் அரிதே" எனப் பரணர் தம் புலமையைப் பாராட்டிப் பரவும் ஔவையார், தம் பாட்டின் தன்மை குறித்துக் கூறுவன, அவர்தம் அடக்கத்திற்கு அரண் செய்வதாகும். "பணியுமாம் என்றும் பெருமை," "பெருமை, பெருமிதம் இன்மை" என்பர் வள்ளுவர்; கல்விக் கழகு கற்றுணர்ந்து அடங்கல் அன்றே? இவ்

வுண்மைகளை உணர்ந்தவர் ஔவையாராதலின், அவர்தம் பாடல்கள் அருமை பெருமை வாய்ந்தனவாகவும், "குழந்தைகளின் மழலைமொழி, யாழ்போல் இனிய ஓசை யுடையதா என்றால், இல்லை; அல்லது, பொருள் செறிந்து பயன் அளிக்கும் சொல்லா எனின், அதுவும் இல்லை; என்றாலும், அம்மழலை, பெற்றோர்க்கு இன்பம் பயக்கிறது; குழல், யாழ் ஓசைகளினும் இனியது, தம் குழந்தைகள் மழலை எனப் போற்றுகின்றனர் பெற்றோர்; காரணம், அப் பெற்றோர் தம் குழந்தைகள்மாட்டுக் கொண்டுள்ள அன்பே; அதைப்போல, என் பாடல், பிறர் பாராட்டும் அளவு பெருமையுடையது அன்று; அவர்கள் பாராட்டு கின்றனரே எனின், அது பாட்டின் பெருமை கண்டன்று; என்பால் அவர்கள் கொண்டுள்ள அன்பு கொண்டு" என்று கூறுகிறார் அவர். எவ்வளவு தன்னடக்கம் பாருங்கள்!

"யாழொடும் கொள்ளா, பொழுதொடும் புணரா;
பொருளறி வாரா; ஆயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
என்வாயுச சொல்லும் அன்ன;" (புறம்: கூஉ)

(ஈ) வீர உணர்ச்சி

இவ்வளவு அடக்கம் உடையாரே எனினும், அக்கால மகளிர்க்கு இயல்பான வீர உணர்ச்சியில் சிறிதும் குறைந் தவரல்லர் ஔவையார்; அதியமான் படைக்கலச் சிறப் பைப் பகைவர்க்கு எடுத்துக் கூறி, "ஓடி உய்ம்மின்" என அறிவுரை கூறிய வழியெல்லாம், ஔவையார்தம் வீர உணர்ச்சி, பொதுவாக வீறுகொண்டெழக் காண்கின்றோம். என்றாலும், அவ் வீர உணர்ச்சி, வெள்ளம் என வெளிவரும் பாடல் ஒன்றும் உண்டு; வீரப்புண் பெற்று மாண்டா ரொருவர் குறித்து மகிழ்ந்து கண்ணீர் விடும் நிகழ்ச்சியைக் குறிக்கும் உவகைக் கலுழ்ச்சி என்ற துறைக்கு எடுத்துக் காட்டாக அவர் பாடிய பாடல் ஒன்றினைப் பாருங்கள்! கடல் போன்று இடமகன்ற பாசறை, அதன் நடுவே ஒரு

பெரு வீரன்; பகைவர் படை கண்டு மனம் புழுங்கு கின்றான்; உதட்டைக் கடித்துக் கொள்கிறான்; கையில் ஏந்திய வேலைப் பல வகையாலும் சுழற்றிச் சுழற்றி அதன் வன்மையைக் காண்கிறான்; இறுதியில் அவனுக்குப் படைத் தலைமை கிட்டிற்று; படையைச் செலுத்திக் கொண்டு போர்க்களம் புகுந்தான்; தன் படைநோக்கி வரும் பகைவர் படையைச் சிதற அடித்து, இடைவெளி உண்டாக்கிப் பெரும் போரிட்டுக் கொண்டிருக்கிறான்; பகைவர் பலர் ஒன்று சேர்ந்து, அவன் ஒருவனைத் தாக் கினர்; அவன் உடலெங்கும் வீரப்புண்கள்; உருத் தெரி யாமல் அழிந்தது அவன் உடல்; இறந்து வீழ்ந்தான் அவனும்; இச் செய்தி எட்டிற்று அவன் தாய்க்கு.

அவளோ, தோல் தளர்ந்து, தலை நரைத்த கிழம், அவள், அச் செய்தி கேட்டவுடனே, அவனைப் பெற்ற ஞான்று பெற்றிருந்த உடற்கட்டும், உள்ள மகிழ்ச்சியும் கொண்டாள் என்ற வீர நிகழ்ச்சியை விளங்க உரைத் துள்ளார் ஔவையார். அப் பாட்டில், அவ் வீர இளைஞனைச் "சிறப்புடையாளன்," "மாண்புடையாளன்" என்றெல் லாம் பாராட்டியதோடு நில்லாமல், அவன் தாயை நமக்கு அறிவிக்கும் முறையின் அழகே அழகு! போர்க்களத்தே முன்வைத்த காலைப் பின்வைத்தல் பேடித்தனம் என் பதைக் கொள்கையாகக் கொண்ட ஆண்டகையின் தாய் அவள் என்று, அவ் வீரமகனை முன்காட்டி, அவனைப் பெற்ற பெருமைக்குரிய தாய் எனப் பின்னர் அவளை அறிமுகம் செய்து வைக்கிறார்; ஔவையார்தம் வீரம் என்னே! அவர் எழுத்தும் சொல்லும் எடுத்தூட்டும் வீர உணர்ச்சியும்தான் என்னே! என்னே!!

"கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்,
வெந்து,வாய் மடித்து, வேல்தலைப் பெயரித்,
தோடுஉகைத்து, எழுதரூஉத் துரந்தெறி ஞாட்பில்
வருபடை போழ்ந்து, வாய்ப்பட விலங்கி,
இடைப்படை அழூஉத்துச சிதைந்து வெரூஉய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி

வாடுமுலை யூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே.” (புறம் : உகூ)

(சு) புலவரைப் பாராட்டல்

ஒரு புலவர், இன்னொரு புலவரை மதிப்பது அரிது; புலவர்க்காய்ச்சல் என்பது புலவர் எல்லாரிடத்தும் பொருந்தி நிற்கும் பண்பாகும் என்ற பழியுரைகளைப் புலவர்கள்மீது சூட்டுவோர், ஔவையார் வரலாற்றையும், தம் காலத்தே வாழ்ந்த பிற புலவர்களிடத்தே அவர் கொண்டிருந்த மதிப்பையும் அறிதல் வேண்டும்; புலவர்கள், அப் புலமையைப் பெற எவ்வளவு பாடுபடுதல் வேண்டும் என்பதை விளங்க உரைத்துள்ளார் ஔவையார்; ‘சொற்களுள் செஞ்சொற்கள் யாவை என்பதை நுண்ணிதாக ஆராய்ந்து மேற்கொள்ள அப் புலவர்கள் பட்டபாடுதான் என்னே!’ என்ற அருமை தோன்ற, அழகிய சொற்களை ஆராய்ந்தறியும் நுண்ணிய ஆராய்ச்சியோடு கூடிய அறிவுடையோர்—“அந்தோ, நுண்தேர்ச்சிப் புலவர்”—என அப் புலவர்களைக் குறிப்பிடுங்கால் சிறப்பித்துக் கூறியுள்ளார்: அம்மட்டோ! அப் புலவர்தம் நாக்கினைப் பற்றிக் கூறும்பொழுது, செவ்விய நாவினை உடைய புலவர்—“செந்நாப் புலவர்”—எனச் சிறப்பிக்கிறார்; நாவிற்குச் செம்மையாவது வாழ்தல் வேண்டிப் பொய் கூறாமையும், பொருள் சேறிந்த செய்யுள் செய்தலும் ஆம் என்பர் அறிவோர்; ஆகவே, புலவர்களைச் செந்நாப் புலவீர் எனப் பெயரிட்டு அழைத்து, அவர்கள் பொய்கூறாப் பெருந்தகையார் என்றும், பொருள் சேறிந்த செய்யுள் செய்யும் சிறப்புடையார் என்றும் புகழ்ந்துள்ளார் ஔவையார்.

பெண்களுக்குரிய குணங்களுள் ஒன்றாகிய நாண் பற்றிக் குறிபபிட வேண்டி வந்தது ஔவையாருக்கு; இந் நாணைக் குறித்து முன்னரே புலவர் பலர் புகழ்ந்து கூறியுள்ளது அவர்க்கு நினைவு வந்தது; “உயிரினும் சிறந்தன்று நாண்” என்று கூறினர், தொலகாப்பியர்; “தாயிற் சிறந்தன்று நாண்” எனறார் திருக்கோவை ஆசிரியர்;

ஆகவே புலவர்கள் உயிரினும் சிறந்தது, தாயினும் சிறந்தது எனப் பாராட்டியதற்கு மேலும், அந் நாணைத் தாமும் பாராட்டல் மிகையாம் என்று எண்ணுகிறார்; என்றாலும் அந் நாணைப் பாராட்டாமல் விடுதல் அவர்க்கு இழுக்காம் என்றும் எண்ணுகிறார்; நாணைப் பாராட்டவும் வேண்டும்; தாமும் பாராட்டி, அதனால், புலவர் பாராட்டியது போதாது; தன்னுடைய பாராட்டும் தேவையாக இருந்தது என்று தோன்றச் செய்து, புலவர்க்கு இழுக்கு உண்டாக்கவும் கூடாது; இது அவர் உள்ளம்; இதற்கு வழி யாது? அதற்கு அவர் கண்ட வழி அருமை வாய்ந்தது; நாணையும் பாராட்டினர்; புலவர்க்கு இழுக்கும் தேடவில்லை; மாறாக அவர்களையும் பாராட்டினர்; அது எவ்வாறு முடிந்தது அவரால்; "புலவர் புகழ்ந்த நாண்" என்றார். புலவர் புகழ்ந்த என்ற அடை, எளிதில் யாரையும் புகழாத புலவர், புகழ்ந்த சிறப்பினை உடைய நாண் என, அந் நாணிற்கும் சிறப்பளித்தது; புலவர் புகழ்ந்து கூறியதாலேயே நாணிற்குப் புகழ் உண்டாயிற்று எனப் பொருள்படுதலால், புகழ்ந்த புலவர்க்கும் சிறப்பளித்தது; இவ்வாறு, வாய்க்குமிடம் எங்கும் புலவர் புகழைப் போற்றுதுவிடார் ஔவையார்.

இவ்வாறு, பொதுப்படையாகப் புலவர்களைப் புகழ்ந்த தோடு அமையாது, கபிலர், பரணர், வெள்ளிவீதியார் போன்ற பெரும் புலவர்களைப் பெயர் கூறிப் பாராட்டியும் உள்ளார்; மன்னன் கரிகால் வளவன் மகளாகிய ஆதிமந்தி என்பார், காவிரியில் மறைந்து மாண்ட தம் கணவனைத் தேடி, ஊர்ஊராக அலைந்து திரிந்தனர்; அவ் ஆதிமந்தியாரைப் போன்றே, வெள்ளிவீதியாரும் கணவரை இழந்து அலைந்து திரிந்தனர்; இதை அவரே கூறி அழுது பாடியுள்ளார்; நல்லிசைப் புலமை மெல்லியராகிய வெள்ளிவீதியார் தம் வாழ்வில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சி, ஔவையார் உள்ளத்தை அலைத்து வாட்டுவதாயிற்று; அவர்பால் தாம் கொண்டிருந்த இரக்க உணர்ச்சியை வெளியிடுதற்கான ஏற்ற இடத்தைத் தேடிப் பிடித்து வெளியிட்டுள்ளார் ஔவையார்; பொருள்வயிற் பிரிந்துவிட்டான் கலிவன்;

தலைவன் பிரிவால் நேர்ந்த தனிமை, தலைவியைப் பெரிதும் வருத்துவதாயிற்று; எப்பொருளிடத்தும் வெறுப்பு; சோறுண்ணும் உணர்வே அற்றுப் போய்விட்டது; அதனால் உடலும் மெலிந்தது; உடல்மெலியவே, உயிரும் மெலிய லாயிற்று; அழகும் இளமையும் அழியத்தொடங்கின; இவ்வாறு அவர் பிரிவால் வருந்தி அழிவதினும், அவரைச் சென்றடைய, அவர் சென்ற கொடிய காட்டுவழியே, அலைந்து திரிவதையே விரும்புகின்றேன் என்கிறாள் தலைவி; அத் தலைவியின் துயர்தோன்ற ஒருபாடலைப்பாட எண்ணிய ஔவையார் உள்ளத்தே, கணவனை இழந்து கலங்கும் வெள்ளிவீதியார் உருவம் காட்சியளிக்கத் தொடங்கிற்று; உடனே, "நெறிபடு கவலை நீரமபா நீளிடை வெள்ளி வீதியைப்போல நன்றும் செலவு அயர்ந் திசினால் யானே." (அகம் : கசன) என அத் தலைவியின் வாயில் வைத்துத், தம்மோடொத்த பெண்பாற் புலவர் ஒருவர்க்கு நேர்ந்த இன்னலையும், அதுகுறித்துத் தம்மனத்திடைத் தோன்றிய இரக்க உணர்வையும் ஒருங்கே வெளியிடுவாராயினர்.

பெரும்புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெருமை வாய்ந்தவர் பரணர்; அவர் ஒருவரைப் பாராட்டினர் எனில், அப் பாராட்டைப் பெற்றவர், உண்மையில் சிறப்புடைப் பெருங்குணங்கள் பலவற்றைப் பெற்றவராகவே இருத்தல் வேண்டும்; இவ் வுண்மையை அறிந்து கூறியுள்ளார் ஔவையார்; "புலம் மிக்கவரைப் புலமை தெரிதல் புலம் மிக்கவர்க்கே புலனும்" என்பர் பெரியோர்; பரணர் ஒரு பெரும் புலவர்; ஔவையாரும் ஒரு பெரும் புலவரே; ஆகவேதான், பரணர் பெருமை அறிந்து பாராட்ட முடிந்தது; அதியமானைப் பாடினர் ஔவையார்; ஒரு பாட்டால் அல்ல; பல பாடல்களால்; அவன் பெருமையுடையோன் என்பதை விளக்க அஃதொன்றே போதும்; ஆனால் அது ஔவையார்க்கு அமைதிதரவில்லை; அதியமான் புகழை மேலும் மிகுத்துக்கூற விரும்புகிறார்: அதற்கு, அவன்தன் சிறப்புடைக் குணங்கள் பலவற்றை மேலும் தொகுத்துக் கூறுவதற்குப் பதிலாக, "அதிய

மானே! நின்னைப் பரணரும் பாடியுள்ளார்—‘இன்றும் பரணன் பாடினன்’—எனின் நின்பெருமைக்கு ஓர் எல்லை கூறல் இயலுமோ” என்று கூறி, அதியமான் புகழ்பாடு வார்போல் பரணர் புகழைப் பாராட்டியுள்ளார்.

ஔவையார் அறிய வாழ்ந்த பெரும் புலவர்களுள் கபிலரும் ஒருவராவர்; கபிலர் முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளியோனை பாரியின் உயிர்நண்பர்; பாரி, பறம்பு மலைக்குரியோன்; படையாலும், கொடையாலும் புகழ் பெருக வாழும் அவன் வாழ்வு காணப்பொறாத மூவேந்தர், அவனை வென்று அழிக்க எண்ணினர்; பறம்புமலையைச் சூழ, யானையும் தேரும் கொண்டு முற்றுகையிட்டனர்; முற்றுகை நெடுநாள் தொடர்வதாயிற்று; பறமபு இயற்கை வளத்தில் இணையற்றதே எனினும், அது ஒன்றையே நம்பி யிருத்தல் கூடாது, என எண்ணினர் கபிலர்; உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதன்றோ நட்பு? கிளிகள் பலவற்றைப் பிடித்துப் பழக்கினர்; காலையில் மலையரண் கடந்து வெளியே காவதமபல கடந்து சென்று, ஆங்கே காய்த்துக் கிடக்கும் செந்நெற் கதிர்களைக் கொண்டு மாலையில் மீளப்பணித்தனர்; அவையும் அவ்வாறே செய்தன; அதனல் அரணில் உள்ளார்க்கு வேண்டிய உணவுப்பொருள் கிடைப்பதாயிற்று; மூவேந்தர் முற்றுகை பயனற்றுப் போயிற்று; கபிலர்தம் இத் தொண்டு எவராலும் எளிதில் மறக்கக் கூடியதன்று எனின், செயற்கருஞசெயல் செய்த பெரியார்களைப் பாராட்டுவதையே பண்பாகக் கொண்ட ஔவையாரால், இந் நிகழ்ச்சி மறக்கக் கூடியதாமோ? ஏறை இடத்தில், இவ்வரும் பணியினை எடுத்துக் கூறிக் கபிலரை, நாவார மனமார வாழ்த்துகின்றனர்.

பொருள்வயிற் பிரிந்து சென்றுள்ளான் தலைவன். தனித்துத் துயரட வருந்தும் தலைவிக்கு, அவள் நெஞ்சம், “நிற்பாரல்லர் நம் தலைவர்; நீ மகிழ விரைவில் மீள்வர்” எனக்கூறித் தேற்றுகிறது; அவ்வாறு கூறும் தன்நெஞ்சை நோக்கி அவள் கூறுகிறாள்: “ஏ! மடநெஞ்சே! ‘தலைவர்

வந்துவிடுவார்; தலைவர் வந்து விடுவார்' என வாய் ஓவாது கூறுகின்றனையே, நினக்கு அறிவு இருக்கிறதா? பாரியின் பறம்புமலைக் குருவிகள், காலையில் சென்று கதிர்களைக் கொண்டு மாலையில் மீளுகின்றனவே, அப்படி இவரும் காலையில் சென்று மாலையில் மீள்வர் என்று நினைக்கிறாய்? அவ்வாறு நினைக்காதே; அவர் வாரார்" என்று இவ்வாறு உரைக்கும் தலைவியின் கூற்றிலே வைத்துக் கபிலரைப் பாராட்டியுள்ளார் ஔவையார்.

"..... ....பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினம், காலைப் போகி,
முடங்குபுறச செஞ்செவி தீஇயர், ஓராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தரு தாங்கு
வருவர்என் றுணர்ந்த மடநெஞ் சினளே!"

(அகம்: 48)

(5) அவர் பெருமை

ஔவையார், முடியுடை மூவேந்தர்களாலும், வேறு சில குறுநில மன்னர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர்; அதியமானால், அரசியல் தூதுவராக அனுப்பப்பெறும் அளவு மதிக்கப்பெற்றவர்; ஔவையார் வழிவந்தோர் அனைவராலும், கல்வியறிவும் கடவுள் அனபும் உடைய ஆண்டால் முதிய அம்மையார் எவர்க்கும் ஔவையார் என்ற தம் பெயரே இட்டு வழங்கும அளவு பெயர்போன பெருமையுடையார் ஆவர்; மேலும யாப்பருங்கலவிருத்தி உரையாசிரியர், "பெருஞ்சித்திரனர் செய்யுளும், அவ்வையார் செய்யுளும், பத்தினிச்செய்யுளும் முதலாக உடையன எல்லாம் எப்பாற்படும எனின், ஆரிடப் போலி என்றும், ஆரிட வாசகம் என்றும் வழங்கபபடும் என்க. இவைகள் எல்லாம், இருடிகள் அல்லா ஏனையோராகி மனத்தது பாடவும், ஆகவும், கெடவும் பாடல்தரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்தலைச் சாத்தனர் இத்தொடக்கத்தோராலும், பெருஞ்சித்திரனர் தொடக்கத்தோராலும் ஆரிடச் செய்யுட்போல மிகவும் குறையவும் பாடப்படுவன

எனக் கொள்க" எனக் கூறுவதை நோக்கின், அவ்வுரை யாசிரியர் காலத்திலேயே ஔவையார் தெய்வத்தன்மை உடையவராகப் பெருமைப்படுத்தப் பட்டுள்ளார் என்பது தெளிவாம்.

(சு) அவர் உள்ளம்

தமிழரசர்கள், தங்கள் நாட்டில் வாழ்வோர் நல் வாழ்வு வாழவேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டி னார்களோ, அவ்வளவு ஆர்வத்தைப் பகைவர்நாட்டில் வாழ்வோரிடத்திலும் காட்டினரல்லர்; தங்கள்நாட்டில் வாழ்வோரை மக்களாக எண்ணியதைப்போன்று, பகைவர் நாட்டில் வாழ்வோரையும் எண்ணினரல்லர்; அந் நாட்டு அரசன்பால் கொள்ளுமை வெறுப்பு, அவன் நாட்டில் வாழ் வோரும் மக்களே என்ற உணர்வை மறைத்துவிடும் போலும்! அதனல் பகையரசனைப் போரில் வெற்றி கொள்வதோடு அமையாது, அவன் நாட்டை-நெல்லும், கரும்பும் விளைந்து சிறக்கும் நன்செய் வயல்களையும், மாடங்களும், மன்றங்களும் நிறைந்து நாகரிகத்தின் இருப் பிடமாய் விளங்கும் நகரங்களையும் கொண்ட அவன் நாட்டை-அழித்து, அவ் விடங்களில் கழுதை ஏர்பூட்டி உழுது, எள்ளும் கொள்ளும் விதைத்து, அந் நாட்டில் வாழ்வோர்க்கு வற்றுத துன்பம் விளைத்தலையும் வழக்க மாகக் கொண்டார்கள் அக்கால அரசர்கள்; அவ் வழிவுக் காட்சியைப் புலவர்கள் பலமுறை கண்டு, மனம் மிக நொந்து, கண்ணீர்விட்டுக் கலங்கியும் உள்ளார்கள்; அத் தகைய புலவர்களுள் ஔவையாரும் ஒருவர்.

தம்மிடம் அன்புகாட்டி ஆதரிக்கும் அதியமான் நெடுமான் அஞ்சியின் காலத்திலும் அத்தகைய நாடழிவு நடைபெற இருந்தது; அதியமானும், அவன் பகைவரும் ஒருவருக்கொருவர் பணிந்து போகாமையால், போர் தொடங்கும் நிலை உண்டாகிவிட்டது; அதுகாண, ஔவை யார் தம் அருள் உள்ளம் அல்லற்படத் தொடங்காகிற்று பகைவர் நாட்டையும், அந் நாட்டு வளத்தையும் பார்த்து; மகிழ்ந்தவர் ஔவையார்; அந் நாட்டு வயல்களில் விளைந்து

நிற்கும் செந்நெற் கதிர்கள், நெருங்கி வளர்ந்து முற்றி யிருப்பதால், கனத்துத் தலைதூக்கி நிற்கமாட்டாமல், வயலைச்சூழ உள்ள வரம்புகளில் வளைந்து வீழ்ந்துகிடக்கும் வளம் அவர் கண்முன் காட்சியளிக்கிறது. 'இவ்வளவு வளம்பொருந்திய அந் நாடு, அந்தோ! நாளை முற்றும் அழிந்துபோய்விடுமே!' என்று எண்ணியதும் அவர் இதயம் நடுங்கிற்று; 'அந்நாடு அழியவேண்டியதுதானே? அதைத் தடுப்பார் யாரும் இல்லையா?' என ஏங்குகிறார்; அவர்தம் ஏக்கம்,

"இரங்க விளிவது கொல்லோ! வரம்பணைந்து
இறங்குகதிர் அலம்வரு கழனிப்
பெரும்புனற் படப்பைஅவர் அகன்தலை நாடே." (புறம்: கூஅ)

என்ற அடிகளில் தோன்றி வெளிப்படல் காண்க.

இவ்வாறு நாடழிவது கண்டும், அதைத் தடுக்கச் செய்வதொன்றும் அறியாது, "அந்தோ!" என்று இரங்கிப் பெருமூச்சுவிட்டு அடங்கும் இயல்பினர் அல்லர் ஔவையார். இவ்வழிவைத் தடுத்தே ஆகவேண்டும் என்று எண்ணினார்; அதற்குவழி, அக்கால அரசர்கள் ஒருவரோடு ஒருவர் பகையின்றிக் கலந்துவாழ வழிசெய்வதேயாம் என்பதை யுணர்ந்தார்; பகை வளர்வது, பற்றுமை காரணமாக; பற்றுமை எண்ணம், பொருள்கள் நிலைபேறுடையன; அவற்றைப் பெரும் அளவில் சேர்த்துவைத்தலே செல்வர்க் கழகு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது; அடிப்படையில் நிகழும இத் தவற்றினைப் போக்கிடின், எல்லாம் நன்றும் என்று எண்ணினார்; தமிழ் அரசர்களுள் பேரரசர்களாக விளங்கியவர், சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தராவர்; இவர்கள் மூவரும் பகையின்றிப் பண்புடன் பழகி வாழத்தொடங்குவரேல், தமிழ்நாட்டில் போரே இராது. மூவேந்தாகள் தங்களிடையே ஒற்றுமையின்றிப பகைத்து வாழ்வதாலேயே குறுநிலமன்னர் பலர் தோன்றவும், அவர்களுமபோர மேறகொள்ளவும் செய்கின்றனர்; ஆகவே, அப் பேரரசர்களிடையே தோன்றும்

பகைமையை முதற்கண் போக்கவேண்டும் என்று முடிவு செய்கிறார்; ஆகவே, அவர்கள் மனத்தே நிலையாமை எண்ணத்தைப் புகுத்தி, அதன்வழியே பொருள்கள் மேற் றோன்றும் ஆசையையும், அவ்வாசை காரணமாக எழும் பற்றுமை உணர்வையும், அப் பற்றுமை காரணமாகத் தோன்றும் பகையுணர்ச்சியையும், அப் பகை காரண மாக விளையும் நாடழிவினையும் தடுக்க முயன்றுள்ளார் ஔவையார்.

ஔவையார்காலத்தே வாழ்ந்த மூவேந்தர்களாகிய, சேரமான் மாரிவெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக் கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற் கிள்ளியும் ஒருசமயம், பகையின்றிக் கலந்து ஓரிடத்தே இருந்தனர்; அவ்வொற்றுமை ஔவையார் உள்ளத்தே உவகைப் பெருக்கையும், இவ்வொற்றுமை இன்றேபோல் என்றும் நிலைபெற்று வாழாதா என்ற ஆசையையும் எழுச் செய்தன. பகையின்றிக் கூடியிருக்கும் அக்காலமே, அவர்க்கு அறிவுரைகூற ஏற்ற காலமாம் என எண்ணினார்.

அவரை அணுகி, "நான் அறிவிற் சிறந்தவள் என்ப தைத் தாங்கள் மூவரும் உணருகிறீர்கள்; ஆகவே, நான் உண்மை என அறிந்து கூறுவனவற்றை ஏற்றுக்கொள்வீர் களே அன்றித் தள்ளமாட்டீர்களே" என அவர் ஒப்புதல் பெற்று, "நான் நூல்பல கற்றும், நாள்பல வாழ்ந்தும் அறிந்த உண்மை இது" 'யான் அறி அளவையோ இதுவே' என்று,

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும், தம்மொடு செல்லா
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்."
....
வாழச செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை." (புறம்: ஈகூள)

என்ற நிலையாமை நினைவுகள் அவர் நெஞ்சிடைத் தோன்று மாறு செய்தார்.

இவ்வாறு மூவேந்தர் மனத்தே நிலையாமையுணர்வு தோன்றச்செய்து, அதன் வழியே நாடு அழிதல் இன்றி, அமைதிவாழ்வு காணமுயன்ற ஔவையார்தம் அருள் உள்ளம் அறிந்து பாராட்டத் தக்கதாம்.

(எ) அறிவுரை கூறல்

நிலத்தியல்பால் நீர் திரியும்; கலந்தீமையால் நன்பால் திரியும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பெறும் ஒரு பொது இயல்; இடத்தின் தன்மைக்கு ஏற்ப, இடத்து நிகழ்பொருளின் தன்மை மாறும் என்பது உலகியல்; நீரின் தன்மையைக் காண விரும்புவோன், அது நிற்கும் நிலத்தின் தன்மையைக் கண்டால் போதும்; நிலம் நன்றாயின் நீர் நன்றும்; நிலம் தீதாயின் நீரும் தீதாம்; பாலின் தன்மையை ஆராய்வோன், அப் பால் வைக்கப்பட்டிருக்கும் கலத்தை ஆராய்தல்வேண்டும்; கலம் நன்றாயின் பால் நன்றும்; கலம் தீதாயின், பாலும் தீதாம்; நிலத்தைச் சென்றடைவதற்குமுன் நீர் நன்றாயினும் நிலத்தின் தீமையால் தானும் தீதாம; கலத்தில் வைக்கப்படுவதற்குமுன், பால் நன்றாயினும், கலத்தின் தீமையால் பாலும் தீதாம். இவ்வுண்மையை மறக்கிறார் ஔவையார்.

இடம், இடத்துநிகழ்பொருள் ஆகிய இரண்டனுள், இடத்துநிகழ்பொருளின் ஆற்றலினும், இடத்தின் ஆற்றல் மிகுதியும் வலிவுடைத்து என்பது இதனால் பெறப்படும். அவ்வாறின்றி, நிலத்தின் ஆற்றல், நிலத்தில் வாழ்வோர் ஆற்றலினும் குறையுடையதாயின், வாழ்வோர் வழியே நிலம் செல்லும்; நிலத்தின்வழி வாழ்வோர் செல்லார்; வாழ்வோர், வாழும் இடம ஆகிய இருபொருளினும், வாழ்வோர், அறிவும், ஆண்மையுமுடையராயின், வாழும் இடம், அவர்க்கு ஏற்ப மாறும்; அவ்வாறின்றி வாழ்வோர், அறிவும் ஆண்மையுமற்றவராயின், அவர் தாம் வாழும் நிலத்தைத் தமக்கு ஏற்றவாறு மாற்ற வகையற்று வாழும் நிலத்திற்கேற்பவே, தம்மை மாற்றிக்கொள்வர். தம் இயல் பிற்கேற்ப, தம்மிடை வாழ்வோரை மாற்றும் ஆற்றல்

வாய்ந்த இடங்களை, அதன் ஆற்றலுக்குட்பட்டுத் தாம் மாறிவிடாமல், தம்வழி அவ்விடங்களை மாற்றுவதே ஆண்மையும், அறிவும் உடையோர் செயலாம்.

"இசையாது எனினும் இயற்றி ஓராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை" (நாலடியார் : ஙஙச)

"சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு." (திருக்குறள் : சஉஉ)

வாழும் மக்கள் அனைவரும் அத்தகைய அறிவும், ஆண்மையும் உடையராயின், அப்போது அவர் வாழும் நிலத்தின் இயல்புபற்றிக் கவலை கொள்ளவேண்டியதில்லை; இரும்பு பொன் ஆகிய இரண்டனுள், இரும்பு, இடத்திற் கேற்ப மாறும் இயல்புடையது; ஈரம்பட்ட இடமாயின் தருப்பிடிக்கும் இயல்பினது; ஆகவே, அதற்கு ஏற்ற இடம் எது எனக் காணவேண்டுவது இன்றியமையாததே; பொன், எவ்விடத்தில் இடப்படினும், இயல்பிற் குன்றுவதில்லை; ஆதலின் அதற்கு இடத்தின் இயல்புபற்றிக் கவலைகொள்ள வேண்டியதின்று; ஆகவே, வாழ்வோர் நல்லவராயின், அவர் வாழும்இடம் அவர் வாழ்வதற்குமுன் எத்துணைத் தீயதாயினும் நன்றாகிவிடும்; அவ்வாறின்றி வாழ்வோர் தீயராயின், அவர் வாழும்இடம், அதற்கு முன்னர் எத் துணைச் சிறப்புடையதாயினும் தீதாகிவிடும்.

"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்? உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை?" (திருக்குறள் : நிக)

என வள்ளுவரும் வினவுவது காண்க.

ஆகவே, 'நிலம், காடும் மலையும் காட்டாறும் சேர்ந்து பாழ்பட்ட நிலமாக இருப்பினும், அதுபற்றிக் கவலை கொள்ள வேண்டுவதின்று; அந்நிலத்தில் வாழச்சென் றோர், அறிவும் முயற்சியும் ஆண்மையும் உடையராயின், அந்நிலமே, நன்னிலமாய் மாறி நின்று மாண்புறும்; என்ற இக்கருத்தை உட்கொண்டே ஔவையார், நிலத்தைப் பற்றிக் கூறுவார்போல் "நிலமே! நீ, நாகரிகத்தின் வாழ் விடம் எனக் கருதப்படும் நாடாகவாவது இரு; அன்றிக்,

கொடுவிலங்கு வாழும் காடாகவாவது இரு; அன்றி, நீரோடையும், நெருப்பாறும் பிளந்த பெரும் பள்ளமாகவாவது இரு; அன்றிப் பனியும் பாறையும் சேர்ந்த மலை நாடாகவாவது இரு; அதைப்பற்றிக் கவலைக்கொள்வார் யாரும் இல்லை; உன் தோற்றம் ஒன்றையே கொண்டு, உன் இயல்பை மதிப்பிடும அறிவற்றோர் அல்லர் நாங்கள்; நின்கண் வாழும் மக்கள், நல்லாண்மை உடைய நல்லோராயின், நீயும நல்லை; அவ்வாறின்றி, அவர் தீயோராயின்: நீயும் தீயை, என்றே கொள்வோம்.''

''நாடா கொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய! நிலனே.'' (புறம்: கஅஎ)

என்று கூறுவார்போல், உலக மக்களுக்கு ஓர் அறிவுரை கூறுகிறார்: ''உலக மக்களே! உலகம் உங்கள் கையில்; அதை நன்மை நிறைந்த நல்லுலகமாக ஆக்குவதோ, அன்றி இன்னல்களுக்கிருப்பிடமான இருட்டுலகமாக ஆக்குவதோ எல்லாம் உங்களால்தான் முடியும்; உலகத்தால் ஒன்றும் இயலாது; அது அசைவற்றது; அறிவற்றது; ஆகவே, 'அந்த உலகம் நல்லுலகம்; ஆகவே, அங்கு மக்கள் நன்மையடைகிறார்கள்; இந்த உலகம் இழிவுடையது; ஆகவே, மக்கள் இங்கு இழிநிலை அடைகிறார்கள்' என்று வேண்டாதன கூறி வீணராகி வாடாதீர்கள்; நல்லோர் வாழ்வால் இன்று நல்லுலகமாக நிற்பது, நாளை அந் நல்லோர் அற்றுத் தீயோர் வாழ்வராயின் தீயுலகமாக மாறும்; அதைப்போன்றே, இன்று தீயோர் வாழ்வால் தீயுலகமாக இருப்பது, நாளை, அத் தீயோர் அற்று நல்லோர் வாழ்வராயின் நல்லுலகமாக மாறும்; ஆகவே நிலத்திற்குத் தனக்கென நன்மையோ, தீமையோ இல்லை; எல்லாம் உங்கள் கையில்.''

''நன்னிலக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச செய்வானும் தான்.'' (நாலடியார்: உசஅ)

என்று பிறரும் கூறுவதைப்போல், எல்லாம் உங்கள் கையில் இருக்கும்; இடத்தால் ஒன்றும் இல்லை என்று ஔவையார் கூறிய அறிவுரைகள், அனைவரும் ஏற்றுப் போற்ற வேண்டியதொன்றும்.

(9) அவர் பாடிய அகத்துறைப் பாடல்கள்:

அகமே புறம்; புறநிகழ்ச்சியெல்லாம், அகநிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே நிற்கும். ஆகவே, புறவாழ்வு திருந்தியதாக இருத்தல்வேண்டும் என விரும்புவோர், தம் அகவாழ்வைத் திருந்திய ஒன்றாக ஆக்கிக் கொள்ளுதல்வேண்டும். அகவாழ்வு, மனைவி மக்களோடு வாழும் இல்வாழ்க்கை; புறவாழ்வு, ஊராரோடும் உலகத்தாரோடும் உறவாடும் உலக வாழ்வு; வாழ்வில் அமைதி வேண்டின், இவ்விரு வாழ்விலும் அமைதி காணல் வேண்டும். யாண்டு பலவாகியும் நரையின்றியிருப்பது யாங்ஙனம் என்று கேட்டவர்க்கு, "என் மனைவியும், மக்களும் நிரம்பிய அறிவினர்" - 'மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' - எனத் தன் அகவாழ்வில் அமைதி காண்பதற்கான காரணத்தை முதற்கண்கூறி, "என் இளையரும் என் சொற்படி நடப்பர்; வேந்தனும் அல்லவை செய்யான்; என் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றனர்."

"யாண்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச
சான்றோர் பலாயான் வாழும் ஊரே." (புறம்: ௧௯௯)

எனத் தன் புறவாழ்வில் அமைதி காண்பதற்கான காரணத்தைப் பின்னர்க் கூறினர் புலவர் ஒருவர்.

புறவாழ்வினும், அகவாழ்வே திருந்திய வாழ்விற்கு வழிகாட்டும் என்பதைக் கண்ட புலவர்கள், தமிழர் தம் அகவாழ்வு திருந்தவேண்டும் என்பதிலே மிக்க கவலை கொள்வாராயினர்; அதற்கு அவர்கள் கையாண்ட முறைதான் அகத்திணைப் பாடல்கள்; ஆடவரிற் சிறந்தான் ஒரு

வனும், பெண்டிரிற் சிறந்தாள் ஒருத்தியும், தம்மோடு ஒத்த உறவினா சிலரோடுகூடிச் சிறந்ததோர் வாழ்வு நடாத்தியதாகக் கற்பனை செய்துகொண்டு சிறந்த வாழ்வு எனப் புலவர்கள் சிந்தனையில் தோன்றிய வாழ்வுமுறை, அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக்கூறி, அச் சிறந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும், ஒவ்வொரு பாடலுள் அமைத்துப்பாடி, அபபடிபபட்ட வாழ்வுமுறை, எக்கால மக்கள்வாழ்விலும் அமையவேண்டுமெ என விரும்பினர்; அவ்வாறு அவர்கள் பாடிய பாடல்களே, அகத்துறை தழுவிய பாடல்களாம். ஆகவே, அப்பாடல்கள், அப்புலவர்கள் விரும்பிய வாழ்வுநெறியினை வகுத்துக் கூறுவனவாம்; ஆதலின், ஔவையார பாடிய அகத்துறைப்பாடல்களை நோக்கின், அவர் விரும்பிய அகவாழ்வுநெறி நமக்குப் புலனும்; ஆகவே, அப பாடல்களுள் சிலவற்றைக் கண்டு, அவர் காட்டும் அகவாழ்வுநெறியினை மேற்கொள்வோமாக.

ஆடவரிற் சிறந்தான் ஒருவனும், பெண்டிரிற் சிறந்தாள் ஒருத்தியும், கண்டு, காதல்கொண்டு கலந்து உறவாடி வாழ்கின்றனர்; அவர் தம் இன்பவிளையாட்டிற்கு ஒருநாள் இடையூறு ஒன்று உற்றது; அவன் வருதற்கு முன்னரே பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது; அவன் அங்கே; இவள் இங்கே; துணையின்றித் தனித்திருப்பதை அவளால் தாங்க இயலவில்லை; துணைவருது சேர்வனைத் தடுக்கிறது அப் பெருமழை; அவள், தன்மென்மை, தனித்துறைவ தால் உண்டாகும் துயரின் கொடுமை, அத் துன்பத்திற்குக் காரணமான மழையின் வன்மை ஆகியவற்றை உணரு கிறாள்; உடனே மழையை நோக்கிக் கூறுகிறாள்: "உண்மை வீரர், தன்னோடு ஒத்த வீரரோடே போர் புரிவர்; ஆனல், நீயோ, என்னோடு போர்தொடுக்கின்றனை; நான் ஒரு பெண்; தன்னைத்தான் காத்துக்கொள்ளும் வலியற்றவள்; ஆதலின் பிறர்துணைபெற்றே வாழவேண்டியவள்; இப் போது நான், காக்கும் துணையற்ற நிலையில்; துணைவர் எங்கோ இருக்கிறார்; இவ்வளவு துயர்நிலையில் இருக்கும் என்னை வருத்துகின்றாய் நீ; நீயோ, பெரும்புகழ்படைத்த

இமயமலையையும் இடம்பெயர அசைக்கும் ஆற்றல் வாய்ந் தோய்; அத்தகைய பேராற்றல் வாய்ந்தீ, தனித்து வந்தா வது வருத்துகின்றனையா? உயர்ந்த மலையில் வாழும் பாம் பும் கேட்டாலே இறந்துபோகும் பேரிடியொலி ஒருபால், அவ்விடியோசையை விழைந்து இழுத்துக்கொண்டு எங்கும் சுழன்றடிக்கும் சூறாவளி ஒருபால், ஆக இவற்றின்துணை கொண்டுவந்து தாக்குகின்றனை; இவ்வளவு பெரும்படை சேர்த்துக்கொண்டு, ஆதரவற்றுத் தனித்துத் துயருறும் என்னை வருத்துகின்றனை; இயல்பாக நிறைந்த இரக்கத்தை உடையாய் நீ என்று கூறுவரே! அவ்விரக்கத்தை இப் போது நீ, இழந்து விட்டாயோ?"

"தெடும்வரை மருங்கின் பாம்புபட இடிக்கும்,
கடுவிசை உருமின், கழறுகுரல் அளை இ,
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!
ஆர்அளி இலையோ? நீயே, பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை;
துணைஇலர்; அளியர்; பெண்டிர்; இஃதுளவனே?"

என்று தன் உள்ளத்துயரை ஒருவாறு உணர்த்தினள்; இவ்வாறு மழையும் பிறவும் வருத்துவது, நாம் தனித் துறைதலால் அன்றே? தலைவரின் நீங்கித் தனித்து வாழாது கூடிவாழத் தொடங்கிவிடின், இவை நம்மைத் துயர் உறுத்தா; ஆதலின், அவரோடு உடனுறை வாழ்வை வேண்டுகிறேன்," என்று துணிகிறாள்; துணிந்த அவள், தலைவன் களவுவாழ்க்கையையே பெரிதும் விரும்பும் இயல்பினனுதலின், அதை மறுத்தல் வேண்டும் என்று எண்ணி, களவொழுக்கைக் கைவிட்டுக் கடிமணம் செய்து கொள்ள விரும்பி, களவு வாழ்க்கையில் அவனுக்கு அரி யள் ஆயினாள் இதனால் அவனுள்ளம் வாடிற்று.

அவள் தனக்குக் கிடைத்தற்கரியள் என்பதை அவன் உணர்ந்தானெனினும், அவன் நெஞ்சம், அவள்பால் கொண்ட ஆசையை மறக்க மறுக்கிறது; மறுக்கும் தன் நெஞ்சை நோக்கி அவன் கூறுகிறான்: "அவளோ கிடைத் தற்கரியளாய்க் காணுகிறாள்; அவள், உன் ஆசையறிந்து

நடந்துகொள்பவளாய்த் தோன்றவில்லை; ஆனல், அவள் பால் நீ கொள்ளும் ஆசையோ அளவிடற்கரியது; கிடைத் தற்கரிய பொருள் ஒன்றின்மீது அளவிடற்கரிய ஆசை கொள்வதால் யாது நேரும்? அதைத் தாங்கும் ஆற்றல் நினக்கு உண்டா? இறுகிய கல்நெஞ்சமன்று நீ; இளகிய ஈர நெஞ்சு நீ, அவ்வாசையும நிறைவேறுது; அதை மற வாது போயின், நீயும் இடிந்து போவாய்; ஆகவே, அவள் பால் கொண்ட அநிலேணவை அறவே மறந்துவிடு.'' இவ் வாறு அறிவுரை கூறும் அவன், தாங்கும் ஆறறல் அற்ற தன் நெஞ்சம், அரிய பொருள்மீது ஆசை கொள்வதைப் பசுமட்கலத்தில் பெயல்நீர ஏற்கும் மதியிலார் செய லோடு ஒப்பிட்டு, ''நெஞ்சே! பச்சை மண்ணல் செய்யப் பெற்று, ஈரம்புலராத கலத்தில பெய்யும் மழைநீரைப் பிடித்துவைக்க முயல்வார யாரையேனும் கண்டதுண்டா? பிடித்துவைபபராயின், அநீர், அதன்கண் நில்லாது ஓடி விடுதலோடு அக் கலத்தையும அழித்துவிடும என்பதை அறிவர்; ஆகவே, அறிவுடையோர் யாரும் அவ்வாறு செய் யார; நீ அத்தகைய செயலைச் செய்பத் துணிகிறாய்; என்னே நின் பேதைமை!'' என அறிவுரை கூறுவதாக ஔவையார் கூறும் திறம கண்டு மகிழ்தற்குரியதாம.

''பெயல் நீரகரு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,
அரிது அவாவுற்றனை நெஞ்சே!''

இவ்வாறு உள்ளம வாடிய அவனும, இறுதியில அவ ளோடு உடனுறைவாழ்வை விருமபினன், விருமபினன் ஆயினும், அவளைக் கொடிய காட்டுவழியே அழைதசு செல்ல அஞ்சினன்; கோடையின் கொடுமையை அவள ஆற்றுள் என எண்ணிக் கொண் டுடன்சேறற்குத் தயங்கி னன்; தயங்கிய அவனுள்ளம் அறிந்தாள், தலைவியின் உயிர்த்தோழி; அவள் அறிவே உருவானவள்; அவள் தலைவனை அணுகி, ''அனபுடையீர! விரைவில் வாடும் மெனமை உடையதே குவளை மலர, என்றாலும, அது வளர்ந்திருக்கும் பாத்திகளில நீர் நிறையக் கட்டப்படற்

றிருப்பின், எதையும் வறட்டும், கோடைகாலத்து வீசும் வறண்ட கொடுங் காற்றுகிய மேல்காற்றடிக்கினும் வாடாது வளம்பெறும்; அதைப்போல், தலைவி இயல்பால் மிகவும் மெல்லியளே என்றாலும், அவள் நின்னை நீங்கப் பெறுமல், நின்னோடு வருவாளாயின், அவளுக்கு உன் ஆருருள் இருக்கின்ற காரணத்தால், யானையும் வருந்தும் கொடுமையுடையதே எனினும், அக் கானம் கண்டு கலங் காள்; அக்கானமும் அவளுக்கு இனிக்கும்; ஆகவே, அவள் மென்மைகண்டு கைவிடாது, கொண்டுசென்று மணப்பீராக!" எனக் கூறினுள். அவனும், அவளைக் கொண்டுசென்று மணந்தனன்.

"நீர்கால் யாதத நிரையிதழ்க் குவளை,
கோடை ஒற்றினும், வாடா தாகும்;
யானை கைமடித்து உயவும்
கானமும் இனியவாம்; நும்மொடு வரினே."

அண்மையில் மணமகொண்ட மணமக்கள் அவர்கள்; இளமையின் இயல்பையும், இளமைக்கால இன்பத்தின் அருமையையும் அறிந்தவர், இன்பமுமை, இளமையும் இருந்து வாழாது, கழியும் இயல்பின; இளமைக் கால இன்பத்தினும், சிறந்த இன்பம் வேறு இல்லை; இளமை கழிந்தவழி, வாழ்வு அவர்க்கு இன்பம் தருவதும் இல்லையென்ப; இவ் வுண்மைகளை அறிந்தவர்கள்; அவர் கள், ஒருவர்பால் ஒருவர் கொண்டிருக்கும் அன்போ, வான்போல் வளர்ந்துள்ளது, ஆகவே, ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து வாழ்வதோ இயலாது; அதை அவர்களும் விரும்பார்; ஆகவே, பிரியாது வாழுவே விரும்புகின் றனர்; எனினும், அவர்கள் உலகியலோடு மாறுபட வாழுமை மாண்பிலர் அன்று; உலகியலோ, வினைமேற் சென்ற மனத்தினராய், வேண்டிய பொருள் சேர்ப் பதையே ஆடவர், தம பண்பெனக் கொள்ளுதல் வேண் டும் என்று அறிவிக்கிறது; இதையும் அறிந்தவர்கள் அவர்கள்; ஆதலின், அவன், ஒருவாறு தேறி, பொருள் வயிற்பிரிய எண்ணுகிறான்; பிரிந்தான்; பொருள் சேர்த்

தான் ; மீண்டும்வந்து சேர்ந்தான் ; வந்த அவனை நோக்கி, அவளும் அவள் தோழியும் வினவுகிறார்கள், "சென்ற விடத்து எங்களைப்பற்றிய எண்ணம், எப்போதாயினும் வந்ததுண்டோ?" என்று. அதற்கு அவன், "எப்பொழுதும் உங்கள் நினைவேதான் ; உங்களை நினைக்குந் தோறும், நினைக்குந்தோறும் செயல்படுமனத்தராய்ச் செய்பொருட்கு அகல்வதே ஆடவர் பண்பு என அறிவுரை கூறிப், பிரிதற்கரியராகிய உங்களைப் பிரியுமாறு செய்த இவ்வுலகியலை நொந்துநொந்து என் அறிவும் மயங்கினேன்," என்று விடைகூறி மகிழ்வித்தான் என்று, அவ் விளங்காதலர்களின் வரலாறு கூறுவார்போல், மனைவியர் பால் மாறு அன்பும் கொள்ளுதல்வேண்டும் ; அதே நிலையில் அவரோடு இடைவிடாது பிரிதலின்றி வாழ்தல் வேண்டும் என்று எண்ணுமல், உலகியலோடு ஒட்டிப் பிரிந்துசென்று, பொருள் தேடும் முயற்சியினையும் மேற் கொள்ளுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்தி,

"மனைவிழைவார், மாண்பயன் எய்தார் ; வினைவிழைவா
வேண்டாப் பொருளும் அது." (திருக : கூபக)

என்ற திருக்குறட்கு இலக்கியம் காட்டிய ஔவையார் அறிவுரை அகத்தேற்று அறிவுகொள்ளற் குரியதாம்.

"உள்ளினென் அல்லனோ யானே ? உள்ளி,
நினைத்தனென் அல்லனோ பெரிதே ? நினைத்து
மருண்டனென் அல்லனோ உலகத்துப் பணையே ?"

தலைவனைப் பிரிந்து தனித்திருந்தகாலை, தலை யின் உள்ள நிலையின் உயர்வையும, உறுதிப்பாட்டையும் விளக்க ஔவையார் கூறுவனவும் சிலவுள.

பொருள் தேடும் முயற்சியை முன்னிட்டுப் பிரிந்த தலைவன், தலைவியிடம் கூறிக்கொள்ளாமலே பிரிந்து போய் விட்டான் அதுகண்டு வருந்துகிறாள் தலைவி ; அவளுக்கு ஆறுதல் கூற வருகிறாள் அவள்தோழி ; வந்தவள், "கூறாது பிரிந்து சென்ற அவர், உண்மையில் அன்புடை யார் அன்று," என அவனமீது பழிகூறத் தொடங்கி

ளுள், தன்முன், தலைவனைப்பழிப்பது காணப்பொறாள் தலைவி; உடனே, அவள் தன் தோழியை நோக்கி, "தோழி! அவர் அன்புடையர். ஆகவே, பிரியார் என்று தான் நானும் எண்ணியிருந்தேன்; ஆனால் உலகியல் அவரைப் பிரியச் செய்தது; அவர் பிரியுங்கால் அன்புடையராயின், கூறிப் பிரிந்திருக்கலாகாதா? என வினவுகிறாய்; அந்த உண்மையை நீ அறியாய்; தனித்திருக்க நான் ஆற்றேன்; அவர்பால் அத்துணை நிறையன்புடையேன்; இதை அவர் அறிவார்; ஆகவே, அவர் பிரிவுணர்த்தி யிருப்பராயின், நான் அதற்கு உடன்படேன் என்பதையும் அவர் அறிவார்; ஆகவேதான், கூறாது பிரிந்தார்; அன்பின்மையால் அன்று; அன்போடு கலந்த கடமையுணர்ச்சியால்;" என்று கூறித் தலைவனைப் புகழ்ந்தாள்.

"செல்வார் அல்லர் என்றுயான் இகழ்ந்தனனே;
ஒல்வாள் அல்லள் என்று அவர் இகழ்ந்தனரே."

பிரிந்துசென்ற தலைவன், விரைவில் வந்திலன்; அவன் கூறிச்சென்ற கார்காலமும் வந்துவிட்டது; எனினும், அவன் பிரிவுக்கு மனம கலங்காது ஆற்றியிருக்கிறாள் தலைவி; அது, கற்புடை மகளிர்க்குக் கடன் எனக் கொண்டு ஆற்றியிருக்கும அவளைக் கண்டு, "அவரைப் பிரிந்து, எவ்வாறு ஆற்றியுள்ளாய்?" என வினவுகிறாள் அவள்தோழி; அதற்குத் தலைவி கூறுகிறாள்: "தோழி! கார்காலம் தொடங்கியவுடனே, நம் தலைவர் சென்ற நாட்டிலும், கொன்றை மலரும்; அக் கொன்றைமலரைக் கண்டவுடனே, நம உடலை மறைத்துக் கொடுமை செய்யும் அவர் பிரிவால் உண்டாம் பசலைநோய், அவர்க்கு நினைவு வரும்; மேலும், தாம் செல்லும் இடந்தோறும, விலங்குகள் எல்லாம், பெண்ணொடு ஆண் கலந்து உறவாடும் காட்சியைக் காண்பரே அன்றி, பெண்ணை விட்டுப் பிரிந்து தனித்து வாழும் ஆண்விலங்கினைக் காணார்; பெண்ணொடு ஆண் கலந்து வாழ்வதை விலங்குகளும் விரும்பும் கார்காலத்தில், அறிவுடை ஆண்மகனாகிய அவர், என்னைப் பிரிந்துறைய நினையார்; பிரிந்து தனித்துவாழ அவரா

லும் இயலாது; விரைந்து மீள்வர்; இந்த உறுதியுள்ளமே என்னை ஆற்றியிருக்கச் செய்கிறது," எனத் தலைவன்பால் தனக்குள்ள, தளரா நம்பிக்கையை உணர்த்துகிறாள்.

"சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ,
நம்போல் பசக்கும் காலத், தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த, நெறிகோட்டு
இரலை மானையும், காணபாகொல்? நமரே."

"கார்காலம் தொடங்குவதற்கு முன்னரே வருவேன்" என்று தலைவன் சூளுரைத்துச் சென்றான்; கார்காலம் தொடங்கிவிட்டது; ஆனால், அவன் வந்திலன்; தலைவி, தன் உறுதி குலைந்து கலங்கத் தொடங்கினாள்; அந்நிலைக் கண், அவள் தோழி, "இது கார்கால மழையன்று; கால மல்லாக் காலத்துமழை; கார்காலம் இன்னும் தொடங்கப் பெறவில்லை," என்று பொய் கூறி அவளைத் தேற்ற முயலுகிறாள்; அது கண்ட தலைவி, "தோழி! மழைநீர் தாங்கி வரும் கரிய மேகங்கள் இடிக்கவும் தொடங்கிவிட்டன; மலையில் பெருமழை பெய்தும் விட்டது; வாடி வீழ்ந்து கிடக்கும் மலர்களை அடித்துக் கொண்டு அருவிகளும் பாய்ந்தோடத் தொடங்கிவிட்டன, அதோ காண்; ஆகவே, இது காலமல்லாக் காலத்து மழையன்று, கார்கால மழையேயாம்," என்று கூறினாள். உடனே, தோழி, "கார்காலமாயின், தலைவர் வந்திருப்பாரே; வந்திலரே; ஒரு வேளை வருவேன் என்று சூளுரைத்துச் சென்றது பொய்யோ?" எனக் கேட்டாள். அதற்குத் தலைவி, "இல்லை; இல்லை; வருவேன் என்று சூளுரைத்துச் சென்றார் என்பதும் பொய்யன்று; சூளுரைத்துச் சென்ற அவர் பொய்த்தலும் செய்யார்; அவர் தவறார்; பின், அவர் வந்திலரே எனின், 'தலைவி நிலையே வினையிடத்துரையார்' என்பர் பெரியோர்; எடுத்த காரியம் இனிது முடியும்வரை, தலைவர் பிறிதொன்றன் மீது கருதத்துச் செலுத்துபவர் அல்லர்; அவ்வாறு செலுத்தலும் சரியன்று; ஆகவே, வேலையின் மிகுதியால், அவர் நம்மை மறந்திருக்கிறார்; இதுதான் உண்மை; மறவாதிருப்பின், சூளுரைத்துச்

சென்றவர் வாராதிராார் ; வந்திலர் ; அவர் சூளும் பொய்க் காது ; ஆகவே, அவர் நம்மை மறந்திருப்பவரே,” என்று கூறி, தலைவன் தவறியவிடத்தும், தவறிலன் என அவன் பால் குறை காணுது, அவன் தவற்றிற்கு ஒரு காரணம் கண்டு, தலைவன் தவறிலன் ; தவறுன் எனக் கொள்ளும் அத் தலைவியின் உள்ளமே உள்ளம் !

“பெய்த குன்றத்துப் பூநாறு தணைகலுழ்
மீமிசைத் தாஅய வீஇசுமந்து வந்து
இழிதரும் புனலும் ; வாராார் ; தோழி !
மறந்தோ மன்ற ; மறவாம் நாமே ;
கால மாரி ; மாலை மாமழை
இன்னிசை உருமின முரலும் ;
முன்வரல் ஏமம் செய்து அகன்றோரே.”

(10) ஔவையார் எடுத்தாண்ட உவமைகள் :

பழந் தமிழ்ப் புலவர்கள் மேற்கொண்ட செய்யுள் அணிகளுள், உவமவணியே சிறப்புடையது ; அவர்கள் கையாண்ட அணி, உவமனி ஒன்றே எனக் கூறினும் தவறில்லை ; பின்னர்த் தோன்றிய அணிகள் எல்லாவற்றையும், ஒருவாறு உவமவணியின் பகுதிபாகவே கொள்வர் புலவர்கள் ; அதனாலேயே தொல்காப்பியர் உவமவணி ஒன்றிற்கு மட்டுமே இலக்கணம் கூறுவாராயினர் ; இதனால், புலவர்கள் பிற அணிகளை அறியாதவர் எனபதல்ல பொருள் ; தாம சொல்ல விரும்புமு பொருள்களைத், தெளிவாகவும் அழகாகவும் சொல்ல உவமவணி ஒன்றே போதும் எனக் கண்டனர். ஆகவே, அவர்கள் பிற அணி பற்றி எண்ணினர் அல்லர்.

ஆங்கிலம் கற்ற நண்பர்கள், ஆங்கிலப் பெரும புலவராய கோல்ரிட்ஜைத் போன்றார், அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்தாண்டிருக்கும் உவமைகள சிலவற்றை வைத்துக் கொண்டே, ஆங்கிலப் புலவர் தம் புலமையை, அம மொழிக்கண் ஆளப்படும் உவமைகளின் சிறப்பை வானளாவப் புகழ்வதைக் காண்கிறோம் ; அவர்கள், பழந்

தமிழ்ச செய்யுட்கண் செறிந்து கிடக்கும் உவமைகளின் எண்ணிக்கையினையும், அவற்றின் உயர்வையும் உணர நேரின் வியப்பால் உணர்வற்றுப் போவர் என்பது உறுதி. பழந தமிழ்ப் பாடல்களுள் பொதிந்து கிடக்கும் அவ் வுவமைகளுள், ஔவையார் எடுத்தாண்ட உவமைகள் சிலவற்றை எண்டுத் தருகின்றேன்.

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல." (புறம். கூக)

ஔவையார் ஆண்ட உவமைகளில் இஃதொன்று; அதிய மான் அரிதின் முயன்று பெற்றான் நெல்லிக்கனி ஒன்றை; அக் கனியுண்டார் நோயின்றி நெடிதுநாள் வாழ்வர் என்ப; அதியமான், அதைத் தான் உண்டு நெடிதுநாள் வாழ் வதினும், ஔவையார் உண்டு நெடிதுநாள் வாழ்வராயின் அதனல் உலகிற்குப் பெரும் பயனும் என உணர்ந்தான்; அக் கனியை ஔவையார்க்குக் கொடுக்கத் துணிந்த அவன், அக் கனியின் இயல்பறியின், ஔவையார் அதைத் தாம் உண்ணுது இரவலர் புரவலனுய அவன் உண்ணவே வற்புறுத்துவா என அறிந்தாணுகவே, அக் கனியின் இயல்பை அவர்க்கு முன்னர் அறிவியாது, அவர் உண்ட பின்னர் உணர்த்துவாணுபினன்; அதியமானின் இச்செயல், ஔவையார் உள்ளத்தே, அளவிலா மகிழ்வெழச் செய்தது. எவரும் முதற்கண் தாம் வாழவே விரும்புவர்; தாம் வாழ்ந்த பின்னரே, பிறர் நல்வாழ்வு குறித்துக் கவலை கொள்வர்; இதுவே, உலகியல்; ஆனல், அதியமான் செயல் உலகியற் போக்கையே மாற்றிவிட்டது கண்டார்; தன் வாழ்வு பற்றிக் கவலை கொள்ளாது, பிறர் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட அதியமான் செயல், சிவபெருமான் செயல் ஒன்றை நினவூட்டுவதாயிற்று.

சாவா மருந்தாகிய அமிழ்தினைப் பெறத் தேவர்கள் பாற்கடலைக் கடைந்த காலத்தில், முதறகண் அதில், அமிழ்தத்திற்குப் பதிலாக, ஆலகாலப் பெருநஞ்சு தோன் றிற்று; அது கண்டு அஞ்சினர் அனைவருமே; சிவன், அவர்

களுக்கு நேர இருந்த கேட்டைப் போக்க, அவ்வாலகால நஞ்சைத் தான் உண்டு, சாவா மருந்தாகிய அமிழ்தை அவர்களுக்கு அளித்தான்; அதனலேயே, நஞ்சுண்ட நீல கண்டன் என்பதும் அவனுக்குப் பெயராயிற்று; இவ்வாறு கேட்டினைத் தான் தாங்கிக் கொண்டு, வாழ்வைப் பிறர்க் களித்தான் அவனும்; அதியமானும், நீடிய வாழ்வு தான் பெறுவதை வெறுத்து, ஔவையார்க்கு அளித்தான்; ஆகவே, அதியமான், நீலகண்டனுக்கு நிகராயினன்; நஞ் சுண்டும் சாவாது நெடுநாள் வாழ்ந்தான் சிவன்; அதைப் போன்றே, நெடுநாள் வாழ்வதை அதியன் வெறுத்தாணையி னும், அவன் நெடுநாள் வாழ்வன்; அவன் வாழ வேண்டும் என்று அவனுக்கு நல்வாழ்த்துக் கூறுகிறார் ஔவையார்.

அதியமானுக்கும், அரனுக்கும் உள்ள தந்நலந் துறந்த உள்ள வொற்றுமை கருதி, அதியமானை நீலகண்ட னுக்கு ஒப்பிட்ட ஔவையார், "நீலமணி மிடற்று ஒருவன் போல" என்று கூறினுலே போதும், அவர் அவ்வளவோடு நில்லாமல், "பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி" என்ற வேறோர் சிறப்பினையும சிவனுக்கு ஏற்றிக் கூறியுள் ளார்; அவ்வாறு, அவனை விசேடித்துக் கூறியதால், தன் பத்தால் தேய்ந்து வந்தாரைத் தலையில் வைத்துப் போற்றிக் காக்கும் அவன் பண்பைக் குறித்தாராயிற்று; அதனல், நாம் பெறும் பொருள், சிவனேடு ஒப்புக் கூறப்படும் அதியமானும, பொருளால் வறியராய்த் தன்கண் வரும் புல வர்களைச் சிறப்பாக வரவேற்றுப் போற்றிப் பேணும இயல் புடையான் என்பதாம. சிவனை அடைந்த திங்கள், அதிய மானை அடைந்து வாழும் புலவர்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுளது; அதனல், திங்கள் வளர்வதும் தேய்வ தும்போல, புலவர்களும், புரவலர்கள் பொருள் தரும் தோறும் செல்வராய்ப் பின்னர் வறியராய் வாழ்வர் என் பதும், திங்கள், தன்னை ஒருபால், பாம்பு கௌவிக் கொண்டு துன்புறுத்தும் காலத்தும், உலகிற்கு ஒளி செய்தலாகிய தன் கடமையில் தவறுதல் இல்லை; அதைப் போல, புலவர்களும் தாங்கள் வறுமையுற்ற காலத்தும்,

தம் வறுமையிற் செம்மையாம் குணத்தில் பிறழார் என்பதும், திங்கள் தன்னிடத்தே உள்ள இருளைப்போக்க முயலாமல், உலகிருளைப் போக்குவதேபோல், புலவர்களும் தம் துயர் களைவதைக் கருதாமல், உலகமக்கள் உயர உழைப்பதையே கடனாகக் கொள்வர் என்பதும், ஞாயிற்று ஒளி கண்டு பொங்காத கடல், திங்கள் ஒளி கண்டு பொங்குவதேபோல், வேந்தர்தம் வில்லாற்றலால் பெறமுடியாத ஒன்றைப புலவர்கள்தம் சொல்லாற்றலால் பெறுவர் என்பதும், திங்களைச் சேர்ந்த முயலும் பிறரால் தொழப் படுதல்போல், புலவரோடு சேர்ந்த அவர்தம் சுற்றத்தாரும் பிறரால் போற்றபபடுவர், பேணப்படுவர் என்பதும் பெறப்படும்; இனி, புலவர்க்குத் திங்களை உவமையாகக் கொண்டால், திங்கள்பால் உள்ள எல்லாக் குணங்களும் புலவர்பாலும் இருக்கும் எனக் கொள்ளுதல் கூடாது; உவமையெல்லாம் ஒருபுடை யொப்புமை யுடையனவே; புலிபோலப் பாய்ந்தான் எனின், அவனுக்கும், வாலும் நாலு காலும் இருக்கும் என எண்ணுதல் கூடாது; அது போலவே, திங்கள், வாழ வேறு வழியின்றி வலிய வந்து இறைவன் தாளில் பணிந்து அடைக்கலம் அடைந்தது; ஆனல், புலவர்கள் அவ்வாறு வாழ வழியின்றி அரசர்களை அடைந்தனர் அல்லர்; அரசர்கள் ஏற்றுப் போற்றப் பெருமையோடு வாழ்ந்தனர் புலவர் என்பதும், திங்கள், தன்னிடையே கறையுண்டாய விடத்தும், அது கண்டு கலங்குவதின்றி வாழ்கிறது; ஆனல், புலவர்கள் தம்இடையே பழியுண்டாக வாழார் என்பதும் பெறப் படும். ஆக இபபொருள் எல்லாம் அடங்க, "பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி, நீலமணி மிடற்று ஒரு வன் போல" எனச் சுருங்கச் சொல்லி, விளங்கவைக்கும் முறையால் உவமை கூறிய ஔவையார் புலமைநலம் போற்றிப் புகழ்தற்குரியதாம்.

"ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்
தாள்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் காஅத் தன்ன என்னை." (புறம் : 150)

'பணிதல் நும் கடன்' என அதியமான் பகைவர்க்கு அறிவுரை கூற விரும்பும் ஔவையார், அவன் ஆற்றலை விளக்க ஆண்ட உவமை இது.

ஒருவர் ஆற்றல், அவருக்கு ஏற்ற இடமாயின் மேலும் மிகுதலும், ஏலா இடமாயின் உள்ள ஆற்றல் குறைதலும் இயல்பு ; இதை விளக்க, முதலை நீர்நிலையிடத்ததாயின் ஆற்றல் மிகும் ; அந்நிலைக்கண், எதிர்த்த எதையும் அழித்தொழிக்கும் அதற்கு மாறுக எதிர்த்த எதையும் அழித்தொழிக்கும் ஆற்றல் வாய்ந்ததே யாயினும், யானை சேற்று நிலத்தில் சிக்கிக்கொள்ளின், அதை ஆற்றல் குறைந்த குறுநரியும் கொன்று வீழ்க்கும் என்றுமை கூறுவர் வள்ளுவர். "நெடும் புனலுள் வெல்லும் முதலை ;" "கால் ஆழ் களரில் நரி அடும் கண் அஞ்சா, வேலாள் முகத்த களிறு."

நீர் நிலைக்கண் முதலைக்கு ஆற்றல் மிகும் என்று கூறும் வள்ளுவர், முதலை நீரில் வாழ்ந்து விடுவதிலேயே, அத்தகைய பேராற்றலைப் பெற்றுவிட்டதாகாது. வாழும் நீர்நிலையின் அளவும் அதற்குத் துணை செய்தல் வேண்டும் ; வாழும் நீர்நிலை, அளவில் பெரிதாய வழியேயும் முதலைக்கு அவ்வாற்றல் உண்டாம் ; அதற்கு மாறாக அஃது அளவில் சிறிதாயின், முதலை அவ்வாற்றல் பெறுதல் அரிதே என்ற குறிப்புத் தோன்ற, "புனலுள் வெல்லும் முதலை" என்று மட்டும் கூறாது, "நெடும் புனலுள் வெல்லும் முதலை" எனப் புனலுக்கு நெடுமை அடை கூட்டிக் கூறினர். அதைப்போன்றே, யானை இடமல்லாஇடம் சேரின் ஆற்றல் குறையுமை என்று கூறவந்த வள்ளுவர், நிலத்தைவிட்டு நீரில் சென்று விடுவதாலேயே யானையின் ஆற்றல் குறையும் என்று கொள்வது கூடாது ; அந்நீர் நிறைவிடம், அவ்யானையின் ஆற்றலைக்குறிக்கும் ஆற்றல் உடையதாதல் வேண்டும் ; அது சென்ற இடம், வைத்த காலை ஆழ இழுத்துக்கொள்ளுமை சேற்று நிலமாக இருத்தல் வேண்டும் ; அத்தகைய சேற்று நிலத்தில் சென்றால் தான் யானையின் ஆற்றல் குறையுமேயன்றி, அது சென்ற இடம் இயற்கையாகவுள்ள சேறாக மட்டும் இருப்பதா

லேயே ஆற்றல் குறைந்துவிடாது என்ற குறிப்புத் தோன்ற, "களரில் நரி யடும்" என்று மட்டும் கூறுது, "காலாழ் களிரில் நரி யடும்" எனக் களருக்கு ஆற்றல் ஏற்றிக் கூறினர்.

ஆனல், அதிகன் புகழ் கூறவந்த ஔவையார், அதிய மானை முதலையோடும், அவன் பகைவரை முதலையால் ஈர்க்கப்படும் யானையோடும் ஒப்பிட்டார் எனினும், அம் முதலை நெடுப்புனல் வாழ்முதலையும் அன்று; காலாழ் களரில் அகப்பட்ட யானையும் அன்று என்றே கூறியுள் ளார். முதலை, சின்னீரில் வாழ்வதே; பெருநீர்த் துணை யினைப் பெற்றது அன்று; யானை அகப்பட்ட இடம் சிறிய நீர்நிலையே; காலாழ் களரில் அகப்பட்ட துன்பநிலையால் துயருற்றதன்று; ஈர்க்கும் முதலையும் ஈர்க்கப்படும் யானையும் நிற்கும் இடம், சிறுவர் காலிட்டு ஆடுவதாலேயே கலங்கிவிடும் அளவு குறைநீர் நிற்கும் நிலையே; அச் சிறுநீ ரால், முதலை வேறுவலி பெறுவதுமில்லை; யானை உள்ள பலம் குன்றுவதுமில்லை; முதலையின் ஆற்றல் ஒன்றினை லேயே யானையின் முழுப்பலமும் குன்றி அழியும்.

அதைப்போலவே, அதியமான் பெற்ற பிறர்துணையும் குறைவே; இடத்தால் பெற்ற பெருந்துணை உடையா னல்லன்; அவன் பகைவர் போராற்றல் பெற்றவரே; சூழ் நிலையால் ஆற்றல் குறைந்தவரும் அல்லர்; பெருந்துணை பெற்று, குறைவலிப் பகைவரை வெல்ல எண்ணுபவன் அல்லன் அதியமான்; பிறர்துணை எதையும் பெறுமல், குறைந்த தன் துணை ஒன்றைக்கொண்டே, பிறிதொன்றால் தன்வலி குன்றிக் குறையாத பெரிய பகையையும் வெல் லும் போராற்றல் வாய்ந்தவன் அதியமான் என்ற இப் பொருள் எல்லாம் தோன்ற, அவ்வூர்ச் சிறுவர்கள் கூடிக் காலிட்டு ஆடுவதாலேயே கலங்கிவிடும அளவு குறைந்த நீரில் நின்றே, ஆற்றல் மிக்க யானையைக் கொன்று இழுக் கும் ஆற்றல் மிக்க முதலையோ டொப்பன் அதியமான் என்று உவமை கூறிய ஔவையார் திறம் கண்டு மகிழுதற் குரியதாம்.

ஔவையார் எடுத்தாண்ட உவமைகள் அனைத்தையும் இவ்வாறே விரித்துரைப்பதாயின், நூல்விரியுமாதலின் இடச்சுருக்கம் கருதி, அவர் மேற்கொண்ட சிறப்புடை உவமங்கள் சிலவற்றைச் சுட்டிச்செல்கின்றேன்; படிப்போர் விரித்துப் பொருள் கொள்வாராக.

கற்றோர் சென்ற இடமெங்கும் சிறப்பே பெறுவர் என்பதற்குத் தொழில் வல்ல தச்சன், தன் தொழிற் கருவிகளோடு காட்டுளவிடப்படின், அவனுக்கு அக் காடு முழுதும் பயன் அளித்தலையுமை,

"மரங்கொல் தச்சன் கைவல் சிறார்
மழுவுடைக் காட்டகத் தற்றே;
எத்திசை செலினும் அத்திசை சோறே."

தன்பால் வந்து பாராட்டிய புலவர்க்கு, அதியமான் பரிசில் அளித்தல் தவறுது என்பதைக் குறிக்க, யானை தன் கையில் கொண்ட பொருள், அதன் கோட்டளவும் சென்ற பின்னர், அதற்குப் பயன்படுதல் தப்பாது என்பதையும்,

"அதியமான் பரிசில்..... ..யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்தது அது பொய்யா காதே." (புறம்: 80)

புலவர்க்கு இனியனாய்ப் பகைவர்க்கு இன்னாதோன்றும் அதியமானுக்கு நீரிற்குளிப்புழி, சிறுவர்கள் தன் கொம்பைப் பிடித்துக் குதிததுக் கழுவினும் அவர்கள்பால் அன்பும், மதங்கொண்டவிடத்து எவரும் தன்னை அணுகுதற்கரிய சினமும் கொள்ளும் யானையையும்,

"ஊர்க்குறு மாககள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறுபோல
இனியை பெரும! எமக்கே; மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய்; பெரும! நின்னொன்னு தோர்க்கே." (புறம்: 88)

பகைவனை வென்ற பின்னர் பிறந்த மகனைக் கண்டு நிற்கும் காலத்தும், வாடாத சினம்கொண்டு, கண் சிவந்து

கிற்கும் அதியமானுக்குப் புலியொடு போரிட்டு வென்ற பின்னரும் சினம் மாறு யானையையும்,

"வரிவயம் பொருத வயக்களிறுபோல
இன்னும் மாறாது சினனே." (புறம் : 600)

பகைவர் படை கண்டு பதுங்காது பாய்ந்து தாக்கும் போர்வீரர்க்கு, அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எழுந்து கடிக்கும் பாம்பையும்,

"எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளர்." (புறம் : 88)

பகைவர், அதியமான் படைகண்டு வலிமை மிக்க தற காப்பு முறைகளை மேற்கொள்ளினும், அவரைத் தவறாது அழிக்கும ஆற்றல் வாய்ந்த அதியமானுக்கு, வெண்கடுகுப் புகை எழுபபித் தடுப்பினும், தவறாது வந்து உயிர்களைப் பற்றிச் செல்லும் எமனையும்,

"ஐயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென
உறுமுறை மாபில் புறம் நின்றுய்க்கும்
கூற்றத் தனையை." (புறம் : 88)

அழிக்கமுடியா ஆற்றலும், திண்மையும் வாய்ந்த அதியமானுக்கு நாள் ஒன்றிற்கு எட்டுத் தேர் செய்ய வல்ல தச்சன் ஒருவன், ஒரு திங்கள்காறும செய்த ஒப்பற்ற திண்மை வாய்ந்த தேர் உருளையினையும்,

"வைகல் எண்தேர் செய்யும் தசசன்
திங்கள் வலித்த கால் அன்னை." (புறம் : 88)

தன்கீழ் வாழ் மக்களுக்கு எதிர்பாரா வகையில் இன்னல் நேர்ந்தால் தான் முன்னின்று காக்கும் பொருட் டெழினிக்கும் பாரம மிகுதியால், இடைவழியில் அச்சு முறிந்தவழி பயன்படுத்துதற்கென்றே அவ் வண்டியோடு கொண்டு செல்லும் சேம அச்சினையும்,

"சேமஅசசன்ன இசைவிளங்கு கவிகை நெடியோய்!"

கிடைத்தற்கரிய பொருள்மீது நெஞ்சம் அதிக ஆசை கொள்வதற்குப் பெய்யும மழைநீரைச் சுடப்படாத மட் கலத்தில் பிடிப்பார் செயலையும்,

"பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா [1]வெள்ளம் நீந்தி
அரிது அவாவுற்றனை நெஞ்சே!"

கணவன் பொருள்வயிற் பிரியத் தனித்திருக்கும தலைவி, இரவில் துயில் இன்றித் துன்புறுதற்குப் போர்க் களத்தின் அண்மையில் வாழ்வார், போர் அச்சத்தால் இரவில் உறக்கமின்றி இன்னல் உறுவதையும்,

"கொன்முனை இரவூர் போல
இலவாகுக நீதுஞ்சும் நாளே."

ஒருவர் கூறிய கருத்தை அவ்வாறே ஏற்றுத் தழுவி, இசைவதற்குக் குட்டிக்குரங்கு தன் தாய்க்குரங்கை விடாது இறுகத் தழுவிக் கொள்வதையும்,

"மகவுடை மந்திபோல்
அகலுறத் தழீஇக் கேட்குநர்.

தலைவன் பிரிந்த பின்னர்த் தனித்திருப்பின் வாழோம்; இறந்து படுவோம் எனக்கண்டு, அவன் சென்ற வழியே தானும் சென்று தலைவனை அடைய எண்ணும் தலைவியின் செயலுக்கு, நீர் அற்ற இடத்தில் நின்று வாழாது, நீருறையிடம் நோக்கிச் செல்லும் மீனின் செயலையும் உவமை கூறியுள்ளார்.

"அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு அவர்
வழிநடைச் சேறல் வலித்திசின்."

(11) ஔவையார் காலத்து நாட்டு நிலை :

புலவர் எவரும் தாம் வாழுங் காலத்தில், தாம் வாழும் நாட்டின் நிலவளம் நீர்வளம், மக்கள் மேற்கொண்ட

---

1. வெள்ளம் - ஆசை.

தொழில்வளம், அவர்கள் நடாத்திய வாழ்க்கைமுறை, அன்று நிலவிய ஆட்சிநிலை, வாணிபவழிகள், செல்வச் சிறப்பு ஆகியவற்றைக் குறிக்காமல் பாடல் புனையார் ஆதலின், இலக்கியங்கள எழுந்த காலத்தின் நிலையைக் காட்டும் காலக் கண்ணாடி என்பர்; [1]தொலைதேற்றம் [2]தொலை நோக்கிபோன்ற தொலைநோக்கிகள் எல்லாம், இடத்தால் சேய்மையவாம் பொருள்களை மட்டுமே அண்மையில் கொணர்ந்து காட்டும் இயல்பின; ஆனல், இலக்கியத் தொலைநோக்கிகள், இடத்தால் சேய்மையான பொருள் களையே அலலால் காலத்தால் சேய்மையான பொருள்களை யும் தெளிவாகத் தெரிவிகும் இயல்பினவாம; இஃது, எந்நாட்டு இலக்கியங்கட்கும பொதுப்பண்பாம்; அத் தகைய தொலைநோக்கிகளுள், ஔவையார் ஆக்கித் தந்த தொலைநோக்கியின் துணைகொண்டு நோக்கியவழி, நம் கண்ணிற்குப புலனக அவர் வாழ்ந்த காலத்து நாட்டு நிலைக் காட்சியே கீழே காட்டப்பெறுவது.

தனக்கு வேண்டும் உணவிற்குப் பிற நாடுகளின் துணையை நாடும் இன்றையத் தமிழகம் போன்றதன்று பழந தமிழ்நாடு; செந்நெற் கதிர்கள் செழித்து வளரும் செந்தமிழ்நாட்டின் சிறப்பை ஔவையார், அகநகுளிரக் கண்டு அழகாகப் பாராட்டியுள்ளார். அவர் காலத்துத் தமிழர்கள், உழவின் சிறப்பறிந்து அத் தொழிலை மேற் கொண்டு வாழ்ந்ததோடு அமையாது, நல்வாழ்விற்குத் துணைபுரியும் வேறு பல தொழில்களையும் பயின்று மேற் கொண்டிருந்தனர், பொதுவாக ஒரு நாட்டின் செல்வ நிலை சிறகவேண்டுமானல், அந்நாடு கைத்தொழிலாற் சிறந்து, கடல்வாணிபம் கொண்ட நாடாகத் திகழ்தல் வேண்டும்; தமிழகத்தின் கடற்றுறைகள் பலவற்றிலும், கடல்கடந்த நாடுகளினின்றும், பல்வேறு பண்டங்களை ஏற்றிக்கொண்டு, வாணிபம் கருதிவந்த நாவாய்கள் பல நிற்கும். இக்கால நாவாய்கள், எண்ணெய் முதலாயின துணைகொண்டு பொறிகள் இயக்க இயங்குவதுபோல்

1. Television. 2. Telescope.

இல்லாமல், காற்றால் உதையுண்டே கடல் பல கடந்து ஒரு நாட்டினின்றும் ஒருநாடு போய்ச் சேரும் நாவாய்களைத் துணைகொண்டு புறநாட்டு வாணிபம் புரிந்தனர் அக்காலத் தமிழர்கள்; கடல்வாணிபம் மேற்கொண்ட தமிழர்கள், பல்வேறுவகைக் கைத்தொழிலாலும சிறந்திருந்தனர்; எத் தொழிற்கும் இன்றியமையா இருமபை, ஏற்ற பொருள் களாக ஆககித்தரும இரும்புத தொழிலாளரும் இருந தனர்; அவர் பொதுவாகக் கொல்லர் என அழைக்கப பெற்றனர்; அக கொலலர், தம இரும்புத் தொழிற்சாலை களை ஊரின் கோடியில், ஒதுக்குபபுறமாக உள்ள தனி யிடத்தே அமைத்துத தொழிலாற்றுவர்; இவரேயன்றி நினைத்தால் நாள் ஒன்றிற்கு எட்டுததோ செய்யும ஆற் றல வாய்ந்த தச்சருமம இருந்தனர்; காட்டுமரம எதை யும், ஏற்றவாறு பயன்படுததவல்ல முறைகளையும அவர் கள் உணர்ந்திருந்தனர, அவர்கள் கையாண்ட கருவி களில், மழுபபோன்ற சில கருவிகளையும் ஔவையார அறிந் திருந்தனர்; தொழில வளாச்சிகுத துணைபுரியும இரும்புக் கொல்லருமம, மரத தச்சருமேயன்றி, வாழவின் பயன்பெற உதவுமம அணிகள் பல ஆக்கிதகரும் பொற் கொல்லருமம பணிபுரிந்து வாழ்ந்து வந்தனர; அவர்கள் தொழிற்சாலையையும், அத் தொழிற்சாலைக்கண் பொன்னை அறுப்பதும, வெட்டுவதுமாகிய தொழில்களை நிகழ்த்துழி, அக் கருவிகள் எழுப்பும் இன்னிசைகளின் இயல்பையும அறிந்து பாராட்டியுள்ளார் ஔவையார; நுண்ணிய நூலால் மெல்லிய ஆடைநெய்யும் நெசவாளரும், அவர் கள் ஆக்கித்தந்த ஆடைகளை மாசுபோககி வெளுத்துத் தரும் வண்ணரும் வாழ்ந்திருந்தனர் ஔவையார் கண்ட தமிழகத்தில்; வெளுக்குமம பணியினைப் பெரும்பாலும் அக் குல மகளிரே மேற்கொண்டிருந்தனர்; அவாகள் உவர்நிலத்தே தோண்டிய நிணற்றுநீரில் ஆடைகளை வெளுத்துத் தருவர்.

இவ்வாறு தொழிலாலும், வாணிபத்தாலும் வளம் பெற்றுச் சிறந்த தமிழகத்தில், சேர, சோழ, பாண்டிய

ராகிய தமிழ் மூவேந்தர்களும், வேறு பல குறு நில மன்னர் களும் ஆண்டு வந்தனர்; அரசர், காவல் செறிந்த அரண்கள் பல அமைத்து ஆண்டு வந்தனர்; அத்தகைய அரண்களுள், தகடூர், பறம்பு என்ற இரு அரண்களை அறிந்திருந்தார் ஔவையார்; ஒருநாட்டு அரசன், பிற அரசர்களிடம் திறைவாங்கிக்கொண்டு, அவர்களை அவர்கள் நாட்டை ஆளவிடும் பேரரசுமுறையும் அன்றையத் தமிழகத்தில் நிலவக்காண்கிறோம்; திறைகொடா அரசர்களை அழிப்ப தோடு, அவர்கள் நாட்டையும் அழித்துக் காடாக்கும் காட்டுமிராண்டி முறையும் அங்கே கையாளப் பட்டுளது; அரசர், தம போர்முரசினை ஊர்ப்பொது விடத்தேயுள்ள மன்றங்களில் உயரே கட்டித் தொங்கவிட்டு வைப்பர்; படைக்கலங்களைப் போரற்ற காலங்களில், கொல்ல னிடத்துக் கொடுத்துப பழுதுபாராதது, நீடிதது உழைக்க நெய்பூசி, நல்ல காவலமைந்த இடததே, அணியாகநிறுத்தி, பீலியும், மாலையும் சூட்டிவைப்பா; பெய்யும் மழைநீரைத் தான் ஏற்றுகொண்டு தன்னைப்பிடித்து வருவார்மேல் படாமல் காக்கும் குடைகளைப்போன்று, பகைவர் அம்பும், வேலுமை தம் அரசர் மீது படாமல் தங்கள் மெய்யில் ஏற்றுக் கொண்டு தம் அரசாகளைக்காக்கும் உண்மைவீரம செறிந்த மறவர்களை அரசர்கள் தம் மெய்காப்பாளராகக் கொண்டு வாழ்ந்தனர்.

ஔவையார் கண்ட தமிழகத்தில், "மலையோ!" என்று கண்டார கண்களை மருளவைக்கும் மாடம் பல அமைந்த மாளிகைகளைக் கட்டி மகிழ்ந்து வாழ்ந்தனர்; அக்காலத் தமிழ்மக்கள், நுண்நூற் கலிங்கம் உடுத்து, பொற்கோல அவிர்தொடி அணிந்து, நாநகம் நாறி நெய் விரவு கறி சோற்றைப் பொன்னாலும் வெளளியாலும் ஆன கலங்களில் பெய்து உண்டு, மணிகள் ஒலிக்க விரைந்து ஓடுமை குதிரைகள் பல பூண்ட தேர ஏறிச்சென்று விழாக் கண்டு மகிழ்வர்; விழாகாலத்தே மகளிர்தங்களை, இலை ஆடைகளாலும், வேறுபிற அணிகளாலும், மலர்களாலும் அழகுமிக அணிசெய்து கொள்வதும் உண்டு; விழாக்

களத்தே ஆடவரும், மகளிரும், மற்போர் விளையாட்டும், துணங்கையும் ஆடிமகிழ்வர்; ஆற்றில் புதுப்புனல் வருங் கால், நீர்விழா நிகழ்த்துவதும் உண்டு.

இவ்வாறு செல்வவாழ்வு வாழும் தமிழர்களிடையே, நீர்ப்பாசியின் வேர்போல் நெகிழ்ந்து, கிழிந்துபோன ஆடையும், எண்ணெய்காணுது நாற்றம்நாறும் தலைமயிரும் அரிசி உணவு விரவுதல் இல்லாத வெறும் இலை உணவும் கொண்டு வாழும் வறுமைமிக்க தமிழர்களுமம் வாழக்காண கிடைக்கும்.

நம் அருந்தமிழ் மூதாட்டியார் அறியவாழ்ந்த தமிழர், குதிரைபூட்டிய தேர்களோடு, எருதுகள் இழுக்கும் வண்டி களையும் பெற்றே வாழ்ந்தனர்; இளைய, வலிய எருதுகள் பூட்டிய வண்டிகளில், உப்பினை ஏற்றிக்கொண்டு, ஊர்பல திரிந்து வாணிபம செய்யும் உப்புவணிகரும் இருந்தனர்; இவர்கள் எப்பொழுதும் பலர்சேர்ந்தே செல்வர்; எருதுகள் இளையன ஆதலாலும், ஏற்றிய பண்டம் மிகுதியாதலாலும், செல்லும்வழி, மேடும்பள்ளமும் பெருமணலும் சேர்ந்து செல்லுதற்கரியவாம் ஆதலாலும், இடைவழியில் வண்டி அச்சுமுறிந்து போயினும்போம என அஞ்சி, அவ்விடத்து உதவுவதற்காக, வேறு ஒரு அச்சினை அவ்வண்டியோடு எடுத்துச் செல்வதும் அவர்கள் வழக்கமாம்; அவர்கள் வண்டி மேற்கூடு பெறுவதில்லை; அவ்வுப்பு வணிகர் உமணர் எனப்படுவர்.

தமிழர், தம் மணவிழாக்காலத்தே, முரசும், சங்கும் ஒலிக்கச் செய்வர்; அவர்கள் அமரைப் பேணினர்; வேள்விசெய்து ஆவுதி அருத்தினர்; பார்ப் பார்க்குப் பூவும், புனலும் சொரிந்து பொன்தானம் புரிந் தனர்; முத்தீ வளர்த்தனர்; அதை வழிபட்டனர்; குலமக னிர்க்குக் குறை நேர்ந்தவழி, குறமகளிரை அழைத்துக் குறிகேட்டறிந்து அமைதி கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்; போர்ப்புண்பெறுது வீரர் மடிந்தால், மறைந்த அவர் உடலைத் தருப்பைப்புல்மீது கிடத்தி, வாளால் வெட்டி, "வீரப்புண் பெற்று மாண்டாரைப்

போன்றே இவர்களும் வீரசுவர்க்கம் பெறுக!" என வேண்டின் அவர்களுக்கும் அதுகிடைக்கும் என்பதையும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலை எய்தியோர் அருகே, வெண்கடுகுப்புகை எழுப்பின், அப் புகைகண்டு அஞ்சி எமன் வாரான் என்பதையும் நம்பிவாழ்ந்தனர், ஔவையார் காலத் தமிழர்கள்; அவர்கள் இறந்தோர் உடலைச்சுட்டும், கல்லைநட்டு, அக் கல்லிற்கு ஆடையும், பீலியும் சூட்டிச் சுட்டஇடத்தே, இறந்தவர் பீடும், பெருமையும பொறித்து வழிபாடு செய்தும் வாழ்ந்தனர்; பிறந்த மகன் முகத்தைத் தந்தை காண்பதையும், மாலையில் மகளிர் மாளிகைகளில் மணிவிளக்கேற்றுவதையும வழக்கமாகக் கொண்டனர் அவர்கள். ஊரில்வாழும் இளஞ சிறுவர்கள், நீர்நிலை தேடிச் சென்று, அந் நீர்கலங்கக் குதித்து ஆடுவதோடு, அந நீர் நிலைக்கு நீராடவரும் அரசயானையின் கொம்புகளைப் பிடித்துக் குதித்து ஏறி அவற்றைக் கழுவி முடிப்பர் என அக் காலச் சிறுவர்களையும விடாது படம் பிடித்துக் காட்டி யுள்ளார் நம் பைந்தமிழ்ப் பாட்டியார்.

நாம் இப்போது கண்ட இத்தமிழகமே, ஔவையார் கண்டு மகிழ்ந்து பாராட்டிய பழந்தமிழ்நாட்டின் படமாம்.

கூ. ஔவையாரால் பாடப்பெற்றோர்

“ புலவர் பாடும் புகழுடையோர் விசும்பில்
வலவன் ஏவா வானவூர்தி எய்துப ”

என்பதை நம்பியவர் நம் தமிழர் ; “ புலவர் பாடாது வரைக ” எனப் புலவர் பாடாமை தமக்கு இழிவாம் என்று கொண்டனர் பழந்தமிழ்க் காவலர் ; பழந்தமிழ்ப பாவலர்களும், “ பாடறிந்தாழுகும பண்பிணை ” யன்றிப் “ பீடில் மன்னரைப் ” பாடாமையைத் தம பண்பெனக் கொண்டு பாராட்டினர் ; சிறந்த புலவர் பாடலைப் பெறுவது தமக்குப் பெருமையாம் என அரசர்கள் கொள்வதைப் போன்றே, பேரரசர்களைப் பாடி அவா பால் பரிசில் பெறுவதைத் தமக்கும பெருமையளிக்கும் செயலாகக் கொண்டனர் புலவர்களும். ஔவையார் பாக்கள தூணை கொண்டு நோக்கியவழி, அதியமானும, அவன் மகன பொகுட்டெழினியும், நாஞ்சிற்பொருநனும், சேரமான் மாரிவெண்கோவும், சோழன இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியும். பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும அவர் பாடலை நேரிற்பெற்றுத், தாம் பெருமையுற்றதோடு, அவா வேண்டும் பரிசில் அளித்து அவரையும் பெருமைப்படுத்தினர் என்பது புலனும் தனக்குரிய பறம்புமலைக் குருவிகளை ஔவையார் பாராட்டினர் என்ற புகழ் பாரிக்கு உரித்து ; இவ்வாறு அக்கால அரசர்களைப் பாராட்டியதோடு, அருந்தமிழ்ப் புலவர்கள் சிலரையும் ஔவையார் பாராட்டியுள்ளார் ; கபிலரும், வெள்ளிவீதியாரும் அவ்வாறு, அவர் பாராட்டுதலைப் பெற்ற புலவர்களாவர் ; இவர்களையே அன்றி, கோசர் என்ற இனத்தாரையும் ஔவையார் பாராட்டியுள்ளார் ; இங்குக் கூறிய இவர்கள் வரலாறு ஒவ்வொன்றும், விரிந்து நீண்டு கிடப்பதால், அவர் வரலாறு முற்றும் அறிவிக்காமல், அவர் பற்றி ஔவையார் கூறுவனவற்றை மட்டும் தொகுத்துரைக்க விரும்புகிறேன்.

(1) அதியமான் :

சேலமமாவட்டத்தில் தர்மபுரி என வழங்கும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதியர் என்ற குறுநில அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர்; தகடூர், போரிடை வெற்றியல்லது தோல்விகாணப்போராண்மை யொன்றையே பெறற்கரும பேறுகக் கருதும் வீரர் பலர் வில்லேந்திக் காத்து நிற்கும் காவற்காடு சூழ்ந்தது; அந் நகருள், அரசர்புகழ் பாடிவரும இரவலர் வேண்டுமாலல் நுழைதல் இயலுமேயன்றிப் பகையரசர் எவரும, கனவிலும் நுழைய நினையார்; அத்துணைக்காவல் அமைநதது அந்நகர்; அவ்வதியர் சேரமரபினரோடு உறவுடையவர்; அதனல், "போந்தை வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந்தானை மலைந்த பூவும" எனக் கூறியவாறு, அச் சேராக்கு உரித்தெனப்பட்ட பனந்தோட்டையே இவர்களும் மாலையாகப் பெற்றிருந்தனர். பெறற்கரும பெருமைவாய்ந்த கரும்பைப் பிறநாட்டினின்றும் முதற்கண் இவன் கொணர்ந்த பெருமை, இவ்வதியர்க்கே யுரித்து கொல்லிக் கூற்றமும், குதிரைமலையும் இவர்க்கு உரியவாய் இருந்தன; கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனப்படும் சங்ககாலத்தே வாழ்ந்த இவர்கள், கி. பி பன்னிரண்டாம நூற்றாண்டிலும், விசயாலயன் வழிவந்த பிற்காலச் சோழர்களுக்குத் துணைவர்களாக விளங்கினர் என அறியபபடுதலால், இவர்களும், மூவேந்தர்களைப் போன்றே நெடிதாண்ட பெருமரபினர் என்பது புலனும்.

இவ்வளவு பீடும் பெருமையும் மிக்க மரபிலே, அஞ்சி என்பான் ஒருவன் இருந்தான்; இவன் அதியர்மரபிலே வந்த பல்லோருள்ளும் சிறந்தோன் ஆதலின், கிழார் என்ற வேளாளர்குடியிலே பிறந்து சிறந்தமையால், பெரியபுராண ஆசிரியர் இயற்பெயரான் அன்றி, குலப் பெயரால் சேக்கிழார் என அழைக்கப்படுதலேபோல், இவனும் இயற்பெயரான் அன்றி, குலப்பெயரால் அதியமான் எனவும், அதியர் மரபிலே வந்த அரசருள் சிறந்தோன் என்ற பொருளில் அதியமான் நெடுமான் எனவும்,

அச் சிறப்புப்பெயர்களோடு இயற்பெயர் இணைய அதியமான் நெடுமானஞ்சி எனவும், குலப்பெயர் தொடராது, சிறப்படை ஒன்றே தொடர, நெடுமானஞ்சி எனவும், இயற்பெயர் ஒன்றே தோன்ற அஞ்சி எனவும் அழைக்கப்பெறுவன்; சில இடங்களில், அவன் பெயர் எழினி எனவும் காணப்படுகிறது; இப் பெயர், பொதுவாக இவன் மரபைச் சார்ந்தோர்க்கும், இவன் பகைவராயினர்க்கும், வேறு பிறர்க்கும் வழங்கக் காண்கிறோம்; இப பெயர்க்காரணம் யாது என்பது அறியக்கூடவில்லை; கடையெழுவள்ளல்களுள் ஒருவனவன் எனப் பெருஞ்சித்திரனர் என்ற புலவர் பெருந்தகையாராலும், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாராலும் பாராட்டப்பெற்றவன இவ்வதியமான் நெடுமானஞ்சியே, இவனைப் பாடிய புலவர் பலராயினும், பாரியைப்பாடிய கபிலர்போலவும், ஆயைப்பாடிய மோசிபோலவும், இவன் புகழ் விளங்க விரிவாகப் பாடியவர் ஔவையார் ஒருவரே

நீண்ட பெரிய தேர்; தலை உயர்த்தி நடக்கும் மதம் மிக்க களிறு; விரைந்து செல்லும் குதிரை; வேலேந்திய வீரர் ஆகிய நால்வகைப் படைகளாலும் நிறைந்தது அதியமான் பெரும்படை; இந் நாற்படைகளே அன்றி, வாழ்வின் துணையென வில்லையன்றி வேறு காணுதவரும், எதிர்த்துவருவோர் எத்துணை ஆற்றல்வாய்ந்தோராயினும், இன்னல்விளைவித்து இயற்கையொடு இரண்டறக் கலக்கச் செய்யாதுவிடாத இயல்பினரும் ஆகிய மழவர் என்ற ஒருவகைப் போர்வீரர் குழுவையும் பெற்றிருந்தான். மேலும், இவ்வாறு பெரும்படைத்தலைவனுய் விளங்கியதோடு, அப் பெரும்படையைப் பணிகொள்ளும், பெருவீரனுய், அதற்கேற்ற ஆற்றலும், ஆண்மையும், முழுவனப்பருதத தோளும், முழங்கால் அளவும் நீண்ட கைகளும், அகன்ற வலிய மார்பும் கொண்ட, உறுதிமிக்க உடலமைப்பும் உடையவனுவன். தான் பெற்றிருந்த பெரும் படைத்துணையால், தன் நாட்டைச் சூழ ஆண்டிருந்த அரசர் அனைவரையும் வென்று திறைகொண்டு வாழ்வானுயினன்;

இவ்வாறு, பெரும்படையும், போரசும் பெற்றிருந்தும், சிறந்த அரசுரிமையைப் பெற்றுள்ளோம் என்று பெருமை கொண்டு, அதுவே போதும் என அமைதிகொள்ளும் உள்ளத்தான் அல்லன்; தன் காலத்தில், தன்னிலும் சிறந்தாரை ஓர் அரசன் உளன் என்ற நிலையிருத்தலே வெறுத்தான்; அவன் காலத்தில், திருகோகோவலூரில், மலையமான் வழிவந்த அரசன் ஒருவன் ஆண்டு வருதனன்; அவன், தன் முன்னோர்களைபோன்றே ஆற்றல் மிக்கோன்; தமிழ் வேந்தர் மூவரும், அவனைத் தம் படைத்துணையாகப் பெறுவதைப் பெரிதும் விரும்புவர்; மூவேந்தர்களிடையே மூளும் போரில், அவன் யார்பால் நின்று போர்த்துணை புரிவானோ, அவரே வெற்றி பெறுவர், அத்துணைப் போர்ப் பயிற்சி யுடையானவன்; இது அதியமானுக்கு, அளவிலாப் பொருமையை உண்டாக்கிற்று; உடனே பெருமபடை கொண்டு, கோவலூரைத் தாக்கினன்; கோவலூர் முற்றும் அழிந்தது; மலையமானும் தோற்றான்; பின்னர்த்தான் அதியமான் போர்வேட்கை ஓர் அளவு தணிந்தது.

இத்தகைய போர்வேட்கை மிக்குடையனே எனினும், அவன்பால் சிறந்த குணங்கள் பலவும் தெரிந்து விளங்கின; உலகம் வாழ வாழும் பெரியோர், "புகழ் எனின் உயிரும் கொடுப்பர்; பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" என்பர் ஒரு பெரியார். "நல்லாறு எனினும் கொளல் தீது" என்றார் வள்ளுவர். "தென்புல மருங்கின் விண்டு நிறைய வாணன்வைத்த விழுநிதி பெறினும் பழி நமக்கு எழுக எனனுய்" எனப் பிறர் கொடுக்கக் கொள்வதைப் பழி எனக் கொள்வர் பெரியோர் என்றார் மாங்குடி மருதனர். இவ்வாறு "கொள" எனக் கொடுப்பதன்றி, "எ" என இரத்தலாகிய இழிபண்பினை அதியமான் பால் காணல் இயலாது: அதியமான், ஏழரசர் ஆட்சியையெள்ளளவும் வழுவின்றி எய்தியும் அமைதி கொள்ளா நாடாசை கொண்டவனே எனினும், நாடுகளைப் போரில் வென்று கொள்வதல்லது, பிறர் கொடுக்க ஏற்றுக்கொள்ளும் இழிகுணமுடையானல்லன்; உயர்ந்த உச்சிகளை

யுடைய மலைவளம் நிறைந்த நாட்டைக் கொள் எனக் கொடுப்பினும் ஏற்றுக்கொள்ளா உயர்பேர் பண்பாளன் ஆவன் அதியமான். "கோடுயர் பிறங்கு மலைகெழீஇய, நாடுடன் கொடுப்பவும் கொள்ளாதோன்."

அதியமான்பால், புகழத்தக்க மற்றொரு பண்பும் உண்டு; அவன் காண்பார்க்கு எளியன்; எளிய பண்புடை யான்; அடக்கம அமரருள் உய்க்கும்; பணியுமாம் என்றும் பெருமை என்பதற்கேற்ப, தன் ஆற்றல் அனைத்தையும் பிறாக்குப் புலனுகாவாறு அடகிவைத்துக் கொள்பவன்; ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கேபோல், ஏற்ற காலத்தை எதிர்நோக்கி யிருப்பார், அக்காலம் வரும்வரை, இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதைபோல் ஏதும அறியாதார்போல் அடங்கியிருப்பர்; காலம் வந்தவிடத்துப் புலியெனப் பாய்ந்து காரியததை முடிப்பர்; "கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து" என்பது வள்ளுவர் கண்ட போர்முறை; அதியமான் அப போர் முறை யுணர்ந்த பெருவீரன்; ஆகவே, தன் ஆற்றல வெளியிடும் காலம் வருவதற்குமுன், தன்னிடம அவ்வாற்றல் இருப்பதாகவே காட்டிக்கொள்ளான்; ஆனல், அக்காலம் வந்துவிட்டது எனிலோ, தன் ஆற்றல் அவ்வளவையும் வெளியாக்கி வெற்றிபெறுவன்; பழங்காலத்தில், மக்கள் தமக்கு வேண்டிய நெருப்பினை உண்டாக்க மேற்கொண்ட முறைகளுள, தீக்கடைகோலு, மரங்களுக்கிடையே இட்டுக் கடைந்து, தீ உண்டாக்குவதும் ஒன்றும்; கடைந்தவழிப் பெருநெருப்பை வெளியிடும ஆற்றல் வாய்ந்த அத் தீக்கடைகோல், தொழிற்படுதற்கு முன்னர், எத்தகைய தீங்கும் அற்ற நல்ல பொருளாகக் கருதப்பட்டு வீட்டுக் கூரைகளிலும் செருகி வைக்கப்பெறும். அத் தீக்கடைகோலைப் போன்றே, அதியமானும், மற்றக் காலங்களில் எவரிடத்தும் இனியனாய்ப் பழகி, தன் ஆற்றல் காட்ட வேண்டி வந்தவிடத்து, தீக்கடைகோலினின்றும் வெளியாம் தீ, எல்லாக் கொடுமைகளுக்கும் நிலைக்களமாய் மாறு

வதேபோல், சினங்கொண்டு பகைவரைக் கொன்று குவிப்பதில் கூற்றினையொப்பன்.

இச் சிறபபுக் குணங்களுக்கு நிலைக்களனைய அதியமான், தன் புகழ்பரவும், புலவாபெருமக்களைப புரக்கும் பேருள்ளமும் கொண்டிருந்தான்; சிறிது நேரமும் ஓழியாமல், மாரிபோல் ஈயும வண்கையுடையானவன்; அகமும, முகமும மலர, அரசனைவயமாகது அண்டி வரு வோாசகுத் தேர் பல வழஙகிய நாட்கள். அவன் வாழ் நாளில் பலவாம் விருந்தும், மருந்தும் மூன்றுநாள் என்பது வழக்காறு; நேற்று வநதவரே, இன்றும் பிச்சை ஏந்திவரின், "என்றைக்கும இதே உளாதாணை? இன்றைக்கு இந்த உளர்; நாளைக்கு அடுத்த உளர் என்று போவது தானே!" எனச் சிறிவிழும் சிறந்தோா வாழ்வதையே எஙகும் காண்கிறோம; அதியன் அத்தகையானல்லன்; "ஒருநாள் அல்ல; இருநாள் அல்ல; பலநாள் தொடர்ந்து, பலரோடு சென்று இரப்பினும், அவ் விரவலர்பால், முதல் நாள் கொண்ட அன்பில் சிறிதும குறையாத அன்பையே காட்டும் அருள் உள்ளததன; ஒருவேளை, பரிசில் அளிப்பதில், அவன காலம் கடததுவன் எனினும, அவன் பரிசில் அளித்தல் தவறுது; அளிதகே அனுபபுவன்; யானை, தன கையில் பற்றிக்கொண்டு, தன் இரு கொமபுகளுக் கிடையே கொணடுசென்ற உணவுபபொருள, அதன் வாயினுள் செல்வது எவ்வளவு உறுதியோ, அவவளவு உறுதி, அதியமான் வாயில் வந்துநின்றோர், அவன் பரிசிலப் பெறுவது; ஆகவே, அவன்பால் சென்றால், அவன் புகழ் பாடினால், பரிசில் அளிப்பானே, மறுப்பானே என மயங்குதல் வேண்டா" என, அவன்பால் பரிசில்பெற்றுப் பழகியோர் சிலர் கூறுவர்.

அதியமான், இத்தகைய பெருந்தகையாய்ப் புகழ் பரவ வாழ்ந்த காரணத்தால்தான், பரணர் பாடினர்; பெருஞ்சித்திரனர் புகழ்ந்தார்; அவன் அத்தைமகள் நாகையார், என்ற பெண்பாற் புலவரும பாராட்டினர்; கடையெழுவள்ளல்களுள் ஒருவனவன என உயர்த்திக்

கூறினர், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர்; இவ் வாறு ஆண்மையும், அருளும் ஒருங்கே பெற்று, உயர்ந் தோர் புகழ வாழ்ந்த காரணத்தால்தான், அவனபால் சென்று, அவணைப்பாடி, அவன் அளிக்கும் பரிசில்பெற விரும்பினர் ஔவையாரும்.

விரும்பிய ஔவையார், காடும், மலையும் பல கடந்து தகடூர் சென்று சேர்ந்தார்; அரண்மனைவாயில் அடைந்து, "ஔவை வந்துள்ளாள் அரசனைநாடி" என்று அறிவித் துச சிறிது இருந்தனர்; அதியமான், அவரை விரைந்து வரவேற்றான் இல்லை; ஔவையார்க்கு ஆத்திரம் மூண் டது: மதியாதார் கடைவாயில் மிதியாமை கோடியுறும் என்ற உயர் பேருள்ளம் உடையார். அவர் தம் பாடலைக் கேட்கப் பேரரசர் பலர் ஏங்கிக் கிடக்கின்றனர்; அவ் வளவு உயர்வுடையார் அவர்; அத்தகையார், அவன் அரண்மனை வாயிலில் வந்து நிற்பவும, வரவேற்கவில்லை எனின், அவர்கது ஆத்திரம் மூண்டதில் வியப்பொன்றும இல்லையன்றே? உடனே வாயில் காவலனை விளித்தார்; "உங்கள் அரசன் வாயிலில் வந்துநிற்கும் என்போன்ற புலவர்கள், பொருளால் வறியரே ஆயினும், புலமையால் வறியர் அல்லர்; அவர்கள் பாடிப் பிழைப்பர் எனினும், வழியில் போவார் எவரையும பாடி ஏமாறும் இழிவுடையா ரல்லர்; வண்மையுடையாரை வரிசையான் அறிந்தே பாடுவர்; அவர் பாடிய பாடல் பயனற்றுப்போனது இதுவரை இல்லை: வள்ளல்களைப பாடிய பாடல்கள், அப் புலவர்கள், உள்ளதே யுள்ளியதை முடித்துத் தருவதில் ஒருபோதும் தவறியது இல்லை; உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளமுடையோரே எனினும், புரவலர்பால் சென்று, பரிசில் பெறுவதில் பேராவம் கொண்டேநிற்பர்; அத்தகைய இரவலர்தமக்கு, 'இல்லை' என்றுகூறி அடைக் கும் வாயில் அன்று, உங்கள் அரசன் வாயில் என மதித்தே யானும இங்கு வந்தேன்; ஆனல், அதியமான் அன்புடன் வரவேற்றான் இல்லை; என் உண்மை உயர்வை உள்ளவாறு உணரும் அறிவு இல்லையோ; அல்லது அவன்

தன் உண்மைநிலையை உயர்த்தி மதிப்பிட்டு விட்டாளே அறியேன்; எவ்வாறுயினும் ஆகுக; புலவர்தம் உயர்வை உள்ளவாறு உணரும் அறிவும், அவரை அன்புடன் ஏற்றுப் போற்றிக் காப்பதால் பெறும் புகழும் உடையவர் அனைவரும் அழிய, உலகம் வறுமை எய்திவிடவில்லை: ஆகவே, புறப்படுகின்றேன் வந்தவழிநோகக்கி; மரத் தொழில் வல்ல மக்கள், ஏற்ற கருவிகளுடன், எந்தக் காட்டிற்குள் சென்றாலும, அவர்க்கு அக் காடுமுற்றும் பயன் அளிப்பதேபோன்று, நாங்கள் எங்குச் செல்லினும் மங்காது எங்கள் புகழ், கற்றோர்க்குச் சென்ற இடமெலாம் சிறப்பு," என்று சினந்து கூறித் திரும்பினர்.

"வாயிலோயே! வாயிலோயே!!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி விதந்திட், தாம்
உள்ளியது முடிககும், உரனுடை உள்ளதது,
வரிசைககு வருந்தும் இப்பரிசில் வாழக்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!!!
கடுமான் தோன்றல், நெடுமான் அஞ்சி,
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?
அறிவும், புகழும் உடையோர மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருககினெம் கலப்பை;
மரஙகொல் தச்சன், கைவல் சிறு ஆ
மழுவுடைக் காட்டகத் தற்றே!
எத்திசைச செலினும் அத்திசைச சோறே."

(புறம்· 20கூ)

அதியமான் காதிற்கு எட்டியது இச் செய்தி.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது" (திருக்குறள்: 20கூ)

என்பதை அறிந்தவன் அவன்; ஆகவே விரைந்தான் ஔவை இருந்த வாயில் நோக்கி; அகமும், முகமும் மலர அன்புமொழி கூறி வரவேற்றான்.

ஔவையார் வறுமையில்வாடி வருந்துபவர்; அரச வாழ்வில் அகமகிழ்ந்திருக்கும் மன்னன் தான் என்று வேற்றுமை பாராட்டினன் அல்லன் அதியமான்; அழுக் கேறி முடைநாறும் அவாதலை. நீரில் வளர்ந்து முதிர்ந்த நீர்ப்பாசியின் வேர்போல் நெகிழ்ந்து கிழிந்துபோன அவர் ஆடை, இவைகண்டு அவரை அணுக அருவருப்புக் கொண்டானல்லன்; ஆண்டுமுதிர்வால் ஆடித்தளரும் அவரை அணைத்துக்கொண்டே அழைத்துச்சென்றான் அரண்மனையுள்ளே; அவாதம் வழிநடைத்தளர்ச்சியும், உடல்மாசும் ஒருங்கேபோக நீராட்டினன். அழுக கேறிய அவா ஆடையை நீக்கி, மல்லிகைமலர்போல் மென்மையுமை, வெண்மையும் வாய்ந்த ஆடை அளித் தான்; இருக்கையில அருகே இருத்தி, திங்களைச் சூழ்ந்த உடுக்களே போன்று, பொன்னலான சிறுகலம பல சூழ இடையே அமைந்த வெள்ளியாலான வெண்கலத் தில் கறிவிரவு நெய்சோறிட்டு, அதைக கையாலெடுத்து ஊட்டினன்: மேலும அவர் மகிழ்ந்து பாடுமாறு, மணம் வீசும் தேன்பல அளித்து மகிழ்ந்தான்; இவ்வாறு ஔவை யாரை வரவேற்று ஆவனசெய்து வழிபட்ட அவன், அவரோடுவந்து, அவ்வூர்ப் பொதுவிடததே அயர்ந்து வதியும அவா தம் சுற்றதாரையும் அழைத்து, அவர்க்கும், அவர்வறுமை நீங்கும அளவு வேண்டும் சொநெற்குவியல் பல அளித்துச் சிறப்புச் செய்தான்.

அதியமான் வழிபட, அவன் அரசவைப்புலவராய் அமர்ந்திருந்தா ஔவையார், ஒருநாள் அதியமானுக்கு அருமையான நெல்லிக்கனியொன்று கிடைத்தது; அதிய 'மான் தகடூர்க்கணமையில் ஒருபெருமலை; அம மலையின் உச்சி அடைதற்கரிய உயரமும் அருமையும் உடையது; அங்கே உளது ஓர் அருமையான நெல்லிமரம்; அதிலுள்ள கனி, உண்டார உடலை ஊறுஇன்றி நெடுநாள் வாழச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது; அக கனியில் ஒன்றை அரும் பாடுபட்டுக் கொணர்ந்தான் அதியமான். அக் கனியுடன் அரண்மனை நுழைந்த அதியமான், அரண்மனையில் ஔவை

யார் இருப்பது கண்டான்; அவன் எண்ணம் மாறிற்று; தன்னினும் அவரே உலகில் வாழத்தக்கவர்; தான் வாழ்வதினும், அவர் வாழின் உலகிற்குப் பெரும்பயன் விளையும் என்று எண்ணினான். ஆகவே, அந் நெல்லிக்கனியினை ஔவையார்க்கே அளிப்பது என முடிவுசெய்தான். ஆனல், ஔவையார் அக் கனியின் அருமை அறியின் அதை அவர் உண்ண மறுப்பார்; தன்னையே உண்ண வற்புறுத்துவர் என்பதையும் அறிந்தான்; ஆகவே, அக் கனியின் அருமை பெருமைகளை அவர்க்கு முன்னர் அறிவியாதே, அதை ஔவையார்க்கு அளித்தான்; அன்புடையார் அளிக்கப் பெறுவன யாவையே யாயினும், அவற்றை இனிமை நிறைந்ததாகக் கொண்டு ஏற்றுக்கொள்வதே ஔவையார் பண்பாதலின், அது எளிதான நெல்லிக்கனி தானே என்று குறைவாக மதியாது, அன்புடன் வாங்கி வாயிலிட்டு உண்டார். அவர், அதை உண்டார் என்பது அறிந்த அதியமான், ஔவையாரை நோக்கி, "அறிவுசான்ற ஔவையே! தாங்கள் இப்போது உண்ட நெல்லிக்கனி ஏனைய கனிகளைப் போன்றதன்று; உண்டார், கேடின்றி நீண்டநாள் இந்நில உலகில் வாழ்வர்; அவ்வளவு அருமையுடையது; மேலும் எளிதில் கிடைக்கக் கூடியதுமன்று; நாமும், இவ் வுலகமும் வாழ்வது, தங்கள் அறிவுடைமையால்; தங்களைப்போன்ற பெரியோர்கள் வாழ்வதாலேயே உலகம் வாழ்கிறது; ஆகவே, தாங்கள் வாழவேண்டும் பல்லாண்டு என விரும்பினேன்; ஆகவே, தங்களுக்களித்தேன் இக் கனியினை; இக் கனியின் சிறப்பைத் தங்களுக்கு முன்னரே அறிவித்திருப்பின், அதைத் தாங்கள் உண்ண மறுத்து என்பால் கொண்ட அன்பின் மிகுதியால் என்னையே உண்ண வேண்டுவீர் என்று அறிந்தே, அதை முன்னர் அறிவியாது போனேன்," என்று அக் கனியின் அருமையினை ஔவையார் உணரச் செய்தான்.

அக் கனியினை உண்ட ஔவையார், அதியமான் அதைத் தான் உண்ண மறுத்ததோடு, அதன் அருமையை அறிவியாது அளித்த அவன் அன்பின் பெருக்கை அறிந்து

மகிழ்ந்து, அவனைப் பெரிதும் பாராட்டி, அவன் நெடுநா
வாழ வாழ்த்தினர்; மருந்து முதலாயின அளித்து ஒ
வரை வாழவைப்பதினும், நல்லோர் வாழ்த்துரை பெற்று
பிறரை வாழவைப்பதே சிறந்த முறையாம் என்பதை அற
தவர் ஆதலின் அவனை வாயார வாழ்த்தி வாழச் செய்தா
அதியமானின் செயற்கரும் இச்செயல், ஔவையாராலேயே
அன்றி வேறு பலராலும் பாராட்டும் பெருமை பெறு
தாயிற்று. "மால்வரைக் கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்
அமிழ்தவினை தீங்கனி ஔவைக்கு ஈந்த அதிகன்" என்
பாராட்டினர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனா
"இனிய கனிகள் என்றது, ஔவை உண்ட நெல்லிக்கன
போல அமிழ்தாவனவற்றை" என்று பாராட்டினரே
பரிமேலழகியார்.

அதியமானுடைய அரசவைப் புலவராய் அமர்ந்
அவன் அன்பிற்குரியராய் இருந்த ஔவையார், அவ
புகழ் பாடுவது, அதற்கு அவன் அளிக்கும் பரிசி
பெறுவது என்பதோடு அமைதிகொள்ள விரும்பினரல்லர்
பாடிப் பிழைப்பது ஒன்றே புலவர்தொழில் என
கொள்ளும் குறுகிய உள்ளம் உடையாரல்லர் அவர்
தம்மை அன்புடன் ஆதரிக்கும் அரசனும், அவன் நாடுமே
யன்றித் தமிழக முழுதுமே நல்வாழ்வு வாழ்தல் வேண்டு
என விரும்பி, அதற்குத் தம்மாலான தொண்டாற்றலு
தம்கடனே எனக் கொள்ளும் உயர் பேருள்ளம் உடையா
அவர்; ஆதலின், அதியமான் அரசியலிலும் பெரும்பங்
கொள்வதை விரும்பி மேற்கொண்டார் அவர். அதியமான
போர்வேட்கை மிக்க பெருவீரனாய் இருத்தலின், அவனு
குப் பகைவர் பலராயினர்; அப் பகைவரால் ஊறுநேருமே
அவனுக்கு என எண்ணும்போதெல்லாம் அவர் உள்ள
தணுக்குறும்; ஆகவே, அப் பகைவர் படையெடுப்
நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதை அவர் பெரிது
விரும்பினர்.

அதியமான் ஆற்றல் மிக்கவன்; ஆற்றல்மிக்க பெரு
படை உடையான்; ஆதலின், அவன் படைவலி காட்

அவன் பகைவர்க்கு அச்சம் உண்டாகச் செய்தால் ஒரு வேளை போர் நிகழ்வதைத் தடுத்தலும் கூடும் என எண்ணினர்; ஆகவே, அதியமான் பகைவர்களை நோக்கிக் கீழ்வரும் அறிவுரைகளைக் கூறலாயினர்; "தன்பால்வரும் இரவலர்க்குப் பரிசாக அவன் அளிக்கும் தேர்களை, மாறுபெய்யும் மழைத்துளிக்கு உவமை கூறுவர் புலவர் எனின் அவன் தேர்ப்படையின் பெருமை என்னல் கூறல் இயலாது; அவன் நாட்டுத் தச்சர் ஒவ்வொருவரும், நாள் ஒன்றிற்கு எட்டுத்தேர் செய்யும் அளவு தொழில் துணைபுரியும் இயல்பினர்; ஆதலின் அவன் தேர்ப்படை மிக்கோன் என்பது தெளிவு; கோடுகளிற் செறிக்கப்பெற்ற இரும்புத் தொடிகள் பிளவுறுமாறு பகைவர் கோட்டை வாயிற்கதவைக் குத்திக்குத்தி அழிக்கும் ஆற்றல் வாய்ந்தது அவன் யானைப்படை; போர்க்களத்தே பரந்து வந்து, ஒன்று கூடித் தாக்கும் வீரர்களின், மாலை யணிந்து மலர்ந்த மார்பு பிளந்து உருவழியுமாறு துளைத்துப் பாய்ந்து ஓடுதலால், அவர்தம் இரத்தக் கரைபட்ட காலுடையன அவன் குதிரைப்படை; பகைவரை வெட்டி வெட்டி மழுங்கின வாள், பகைவரைக் குத்திக் குத்திக் கோடும், நுதியும் சிதைந்து, செப்பனிடப்பெற்ற வேல் ஆகியவற்றை ஏந்தி, அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர்மண்டும் அரவினை யொத்த ஆற்றல் வாய்ந்து விளங்குவர் அவன் வீரர்கள்; அவன் படை பெரிதே எனினும், அப் படையினைப் பயன் கொள்ளும் அவன், அதற்குத் தகுதியிலனாயின்,

"நிலமக்கள் சால உடைத்துஎனினும், தானை
தலைமக்கள் இல்வழி இல்." (திருக்குறள்: எஎ0)

எனக்கூறும் வள்ளுவர் வாக்கேபோல், அப் பெரும்படையால் பயன் இன்றும் என எண்ணத் தோன்றும். ஆனால், அதியமான் அத்தகையான் அல்லன்; அப் பெரும்படையினைப் பணிகொள்ளும் பேராற்றல் பெற்றவன்; அதற்கேற்ற உடற்கட்டும் உறுதியும் ஊக்கமும் உடையான்; படையைப்போன்றே அவனும் போர்வேட்கை மிக்கோனே; ஆகவே, பகைவீர்! 'அதியமான், இளையன்;

எளியன்' என்று இகழன்மின்! அவனேடு போரிட்டு யாமும் வெல்வோம் என்று எண்ணன்மின்! உங்கள் நாடும் ஊரும் உங்களுக்கே உரித்தாக விரும்பின், அவன் வேண்டும் திறைகொடுத்து உய்ம்மின்! மறுப்பின் அவன் விடான்; இவ்வாறு நான் கூறுவன கேட்டு நடவீராயின், நீங்கள், உங்கள் உரிமை மகளிரைப் பிரிந்து உயர்ந்தோர் உலகம் செல்வது உறுதி; ஆதலின் களம்புகல் கனவிலும் கருதன்மின்!"

இவ்வாறு, அவன் பகைவர்க்கு அறிவுரை கூறி, போர் நிகழாவண்ணம் முயன்ற ஔவையார் அவ் வறிவுரையினை அதியமானுக்கும் கூறத்தவறினரல்லர். "புலியொன்று சீறி எழுந்தக்கால், அதை எதிர்த்துத் தாக்கவல்ல மானைக் கண்டார் யாரும் இலர்; செஞ்ஞாயிறு சிவந்து தோன்றிய பின்னரும், இருள் நீங்காது அதன்முன் நிற்பதுண்டோ? இல்லையன்றே! பாரும் அச்சும் ஒன்றோடொன்று பொருந்தி உராயுமாறு, மிக்கபாரம் ஏற்றப்பட்ட வண்டி மணலின்கண் ஆழப்புதைந்த வழியும், அப் பாரம கண்டு சிறிதும் கலங்காது, தன்காற்பட்டு மணல் பரக்கவும், கல் பிளக்கவும் நடக்கவல்ல எருதிற்குப் போதற்கரிய வழியிது எனக் கூறத்தக்க வழியெதையும் காட்டல் இயலாது; அதைப்போன்றே, அரும்போர்வல்ல அதிய! நீ போர்க்களம் நோக்கிப் புறப்படின், நின்னை எதிர்த்துத் தாக்கவல்ல வீரரும் உளரோ? இல்லையன்றே? ஆதலின் களம்புகல் கருதற்க!"

"மறப்புலி உடலின் மான்கணம் உளவோ?
மருளின் விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ, ஞாயிறு சினவின்?
அசைசொடு தாக்கிப் பார்உற்று இயங்கிய
பண்டச சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் வெருமரக், கல்பக, நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ?
எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கை,

வழுவில் வன்கை மழவர் பெரும!
இருநிலம் மண்கொண்டு சிலைக்கும்
பொருகரும் உளரோ நீகளம் புகினே?" (புறம்: கூ0)

என்று அதியமானுக்கும் அறிவுரை கூறினர் ஔவையார்.

ஆனல் அதியன் ஆத்திரம் அடங்குவோனைகத் தோன்றவில்லை; ஔவையார் அறவுரை அவன் காதில் நுழைந்திலது; அவன் போர்வேட்கையும், வெறியும் ஔவையார் அறிவுரையினையும் வெல்லும் ஆற்றல் வாய்ந்தன ஆயின; அவன், அவரை நோக்கி "அன்புடையீர்! பகைவர் என் படைவலி கண்டு பயந்து பணிந்துபோவர்; பாய்ந்து தாக்கார் எனறெல்லாம் கூறுகின்றீர்; ஆனல், பகைவர்பால் அப்பண்பு காணல் அரிது; அதோ பாரீன், அவர்கள் போருக்கான முன்னேற்பாடுகளை முறையாக மேற்கொள்கின்றனர்; நம யானைப்படை நடமாடல் கண்ட அபபகைவர், தங்கள் அரணைச் சேர்ந்த வாயில்கட்கெல்லாம், கதவும் கணையமரமும் புதியவாகப் பொருத்துகின்றனர; நம் குதிரைப்படையின் குளம்பொலி கேட்ட அவர்கள் அதைத் தடுத்து நிறுத்துமாறு, தம் காட்டு வாயில்களை எல்லாம் இரண்டிரண்டாகக் கவைத்த வேல முட்கொண்டு அடைக்கத் தொடங்கிவிட்டனர்; நம் வீரர் ஏந்திய வேற்படை கண்டு வெகுண்ட அவர்கள், தங்கள் கேடயங்களுக்கெல்லாம் பிடி பொருத்தத் துணிகின்றனர்; இவை எல்லாவற்றிற்கும மேலாக, பேராண்மை மிக்க நம் போர்வீரர், போர்ப் பரணிப்பாடல் கேட்ட அவர்கள், தங்கள் அம்பறுத்தூணிகளில் அம்புகளை அடைக்கவுமாயினர்; இவ்வாறு நம் படைகண்டு பயந்துபோவதன்றி, அவற்றின் எதிர்ப்பை ஏற்று நடத்துதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அவர்களா பணிந்துபோவர்? பணியார். அவரைப் போரிட்டுப் பணியவைத்தல் இயலுமே அன்றி அச்சங்காட்டிப் பணியவைத்தல் இயலாது; ஆகலின், அவரை வெல்லாது விடேன்," என வெகுள்வானுயினன்.

அதியன், அவ்வாறு வெகுண்டவிடத்தும், ஔவையார் அமைதிகாணும் ஆர்வத்தை விட்டார் அல்லர்;

"அதிய! நின்னை ஒன்று வினவுகின்றேன்: சினவாது விடை கூறுவாயாக; உயிர் போமளவு உடல்நலம் குன்றிய ஒருவர் அருகில் இருக்கும் அவர் உறவினர், வெண் கடுகுப் புகையினை அவர் இருக்கும் அறையில் எழுப்புகின் றன்றே ஏன் தெரியுமா? அவன் உயிரைக் கவர்ந்துசெல்ல வரும் எமன், ஆங்கே ஐயவிப்புகை எழல்கண்டு அஞ்சி, அவன் உயிரைக் கவர அவ்வறையினுள் நுழையாதே திரும்பிவிடுவன் என்ற நம்பிக்கையால் அன்றே அவர்கள் அப் புகை எழுப்புகின்றனர்? ஆனால், அவர்கள் அவ் வாறு செய்வது கண்டு எமன் அஞ்சி வராமல் நின்றுவிடு வது உண்டோ? இல்லையன்றே? அதைப்போன்றே, நின் படைவலி கண்ட நின் பகைவர், தற்காப்புமுறைகளை மேற்கொள்கின்றனர் எனினும், அவர்களைத் தப்பாது அழிக்கும் ஆற்றல் நினக்குஉண்டு; அத்தகையபேராண்மை வாய்ந்தோய் நீ: ஆதலின், அவர் செயல்கண்டு எள்ளி நகையாது, எதிர்த்துப் போரிட நினையாதே! போர் நிகழின், வளமிக்க நாடெல்லாம் நின்படையால் பாழாகும். அது கண்டாவது இரக்க உள்ளம் கொள்வாயாக," என்று வேண்டினர்.

அதியமானுக்கும், அவன் பகைவர்க்கும் அறிவுரை பலகூறி நாட்டில் அமைதிநிலவ முயன்ற ஔவையார், அஃதோடு நில்லாது, அதியமான் பகைவர்பால் தானே நேரில் சென்று ஆவனகூறி அமைதி காணவும் தயங்கி னரல்லர்; அதியமான் பகைவருள் ஒருவனும், தொண்டை யர்குலத் தோன்றலும், பெரும்படை உடையானும் ஆய தொண்டைமான் என்னும் அரசன்பால், அதியமானுக் காகத் தூதுசென்று, அவனிடத்தே, அதியமான் பீடும் பெருமையும் தோன்றக்கூறி, அத் தொண்டைமானை அதியமானோடு போரிட அஞ்சுமாறு செய்து மீண்டார்.

இவ்வாறு, தம்மால் ஆகும்வரை முயன்றும் அமரைத் தடுத்தல் அவரால் இயலாது போயிற்று; அதியமானுக் கும், அவன் பகைவர்க்கும் கடும்போர் தொடங்கிவிட்டது

போரில் புறமுதுகுகாட்டி ஓடி உய்யுமாறு, அப் பகை வருள் ஒருவரையும் விடாது அனைவரையும் கொன்று குவித்தான் அதியமான்; எனினும், அப் பெரும்போரில், அவன் பகைவர் ஏவிய அம்பொன்றுபட்டு, அவன் மிடற் றில் புண் ஒன்று உண்டாகிவிட்டது; அப் புண்ணைக் காணக் காண, அதியமான், அடிபட்ட புலியெனச் சினந்து சீறி விழுவானுயினன்; எதிர்க்கும் பகைவர் ஒருவரும் இலராகவும், அவன் ஏந்திய வேலைக் கையினின்றும் கீழே வைத்தானல்லன்; காலில் கட்டிய வீரக்கழலையும் அவிழ்த் தானல்லன்; வியர்வை வழியும் மெய்யும், சினத்தால் சிவந்த கண்ணும் உடையனுய்ப் போர்க்கோலமே கொண்டு விளங்குவானுயினன்.

அதியமானின் அச் சினநிலை, அவன் பகைவர்க்கும் அவர் தம் நாட்டிற்கும் யாது கேட்டை விளைக்குமோ என அஞ்சினர் ஔவையார்; அதியமானை அணுகி, "அதியர் கோவே! விழுப்புண் பெற்றேம் என வீறுகொண்டு விரைந்து செல்கின்றனையே நீ, அங்குச்சென்று யாரொடு போரிடுவாய்? நின்னெடு போரிட அங்கே யார் உள்ளார்? நின் தூசிப்படைக்கு ஆற்றாது, தோற்று ஓடிப் பிழைத் தார் யாரேனும் இருப்பின் அன்றே, அவர்களைத் தேடிப் பிடித்தாவது போரிடல் இயலும்? நின்னல் புண்பெறாது பிழைத்து ஓடினர் அவருள் ஒருவரும் இலர்; நீ ஒருவன் மட்டுமே புண் பெற்றனை என நினையாதே; நின் பகைவர் அனைவரும், ஒருவர் விடாமல் நின் படைபட்டுப் புண் பெற்றவரே; நீயாவது புண்பெற்றும் இறவாது பிழைத் துளளாய்; ஆனல், புண்பெற்றுப் பிழைத்தார் நின் பகை வருள் ஒருவரும் இலர்; அவர்களனைவரும் நின் அம் பேறுண்டு அழிந்தே போயினர்; ஆதலின், ஆறுக நின் சினம்! அடங்குக நின் ஆத்திரம்! தணிக நின் போர் வெறி!" என்றுகூறி அவன் சினம் மாற்றுவராயினர்.

பகை வளர்தல் அதியமானுக்கு ஆபத்தாம் என்ப தறிந்தே, அப் பகை வளராவண்ணம், ஔவையார் எவ் வளவோ முயன்றார் எனினும் முடியவில்லை; முடிவில்

அவன் பகை வளர்ந்தேவிட்டது; அதியமான் போர் வேட்கை, அவனுக்குப் பார்க்குமிட மெங்கும் பகை வர்களைத் தோன்றச் செய்துவிட்டது; இறுதியில் அவன் பகைவர் அனைவரும் ஒன்றுகூடி அதியமானை எதிர்க்கத் துணிந்தனர்; பகைவர் பலரும் ஒன்றுசேர்ந்துவிட்டமை யால், அவர் வலிமை, தன் வலியினும் பெரிதாகிவிட்டது தெரிந்த அதியமான், அப் பகைவரை எதிர்த்துத் தாக்கு வதைவிட்டுத் தன் தகடூர்க் கோட்டையின் உள்ளே தங்கி யிருக்கலாயினன்; அஞ்சி, பகைவர்க்கஞ்சித் தகடூர்க் கோட்டையினுள் அடங்கியது கண்டும், அடங்கிஞரல்லர் அவன் பகைவர்; அழிக்கலாகா அரண்பல அமைந்தது அவன் தகடூர்க்கோட்டை என்பதையும் எண்ணிஞரல்லர்; யானைப்படையாலும், குதிரைப்படையாலும் சிறந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் துணைபெற்று அதியமான் அரண்மிக்க தகடூரைத் தாக்கி, அதையும் அழித்து, அவனையும் கொன்று வென்றனர்.

அமர்க்களத்தில் அல்லலுறும் அந்நிலையிலும், தம் பால் வந்து இரந்தாரைப் புரக்கவல்ல அதியமான், அந்தோ! மறைந்துவிட்டான்; அருநெல்லிக்கனியினை ஔவையார்க்கீந்த அதியமான், அந்தோ! மறைந்துவிட் டான்; அரும்பெறற் கரும்பை இவண் கொணர்ந்த அதியர் குலத்தோன்றல் அதியமான், அந்தோ! மறைந்துவிட்டான். அவன் உடலை ஈமத்தீயிட்டு எரித்து, எரித்த அவ்விடத் தில், அவன் பீடும் பெருமையும் பொறித்த கல்லைநட்டு, அக் கல்லிற்குப் பீலியும், மாலையும் சூட்டி வழிபட்டுக் கல் நாட்டு விழாவும் செய்துமுடித்தனர்; அதியமான் அழிவு தன்னுல் தடுக்க இயலாதுபோனது காண ஔவையார் உள்ளம் ஆராத்துயரில் ஆழலாயிற்று; அவன் பிரிவு கண்டு அவர் அழுது பாடியபாடல், அனைவரையும் அழச் செய்யும் இரக்கமும் உருக்கமும் வாய்ந்தன.

அதியமான் மறைய, அவனை நினைந்து நினைந்து வருந் தும் ஔவையாருக்கு வாழ்ந்த காலத்தே அவன், அவர்க் குச் செய்தன எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருய் நினைவிற்கு

வரவே, அவர், அவற்றை எண்ணி எண்ணி இரங்குவா ராயினர்.

"கிடைத்த மது சிறிய அளவினதாயின், அது முழு தையும் எமக்கே தந்துவிடுவான். இவ்வாறு, தனக்கென வரையாது எனக்கே கொடுக்கும் அவ் வன்புடையாளனை இனி எங்கே காண்பன்? அளவால் மிக்க மது கிடைப் பின், அதை முதலில் எமக்குக் கொடுத்து, யாங்கள் உண்டு மகிழ்ந்து பாடுவதுகண்டு தான் மகிழ்ந்து, பின்னர் எஞ்சிய மதுவைத் தான் உண்பான்; இப்போது, எம மகிழ்ச்சி தன் மகிழ்ச்சி எனக்கொள்ளும் அவ் வருள் உள்ளம் உடை யானை இனி எங்கே காண்பன்? பெருஞ்சோறு கிடைத்த வழியேயன்றி, சிறுசோறு கிடைத்த வழியும், பலரையும் கூட்டி உடன்வைத்து உண்ணும் உயாவுடையான்; இனி, அவ்வாறு உணவளிக்கும் உயர்வுடையார் யாருளர்? உண் ணும் சோற்றில், கிடைக்கும் எலும்பையும், கறியையும் எடுத்து எமக்கே தருவன், இவ்வாறு விருமபுவன அறிந்து கொடுக்கும் அன்பொடுகலந்த அறிவுடையானை எங்கே காண்பன்? போர்க்களம் புகுந்தால், வேலும், அம்பும் விரைந்து பாயும் இடம் எங்கே என்று கண்டு அங்குச் சென்று போரிடும் ஆற்றலுடையான்; அத்தகைய ஆண் மையாளனை இனிக் காணல் இயலுமா? நரந்தம் பூமணம் நாறும் தன் கையால், புலால் நாறும் என் தலையைத் தட விக் கொடுப்பான் அதியமான்; அத்துணை அன்புடை யாளனை இனிக் காண்டல் அரிதினும் அரிதே; அந்தோ! அவன் பகைவர், அவன் மார்புபிளக்க அம்பு எய்துவிட்ட னரே; அவர் எய்தஅம்பு அதியமான் மார்பிலா தைத்தது? அன்று, அன்று; என்னைப்போன்று இரப்போர்தம் கையில் ஏந்திய உண்கலத்தை உடைத்து, அவர் கையைத்துளைத்து, ஊடுருவிச்சென்று, அதியமானல் புரக்கப்பட்டோர் கண் கள் நீர்மல்க, அருஞ்சொற்கொண்டு அழகிய பாடல் புனை யும் புலவர்தம் நாவிலன்றே சென்று தைத்துவிட்டது! எனக்கும், என்போன்ற புலவர்க்கும் பற்றுக்கோடாய் விளங்கிய அவன் யாண்டுளன் கொல்லோ? இனிப் பாடும்

புலவரும் இரார்; அவர் பாடல்கேட்டு மகிழ்ந்து பரிசில் அளிக்கும் புரவலரும் இரார்; அதியமான் இறந்தான் என்பதுகொண்டு இரங்குகின்றீர்களே, அவனைப்போல் மறைந்தார் பலர் எனக் கூறத்தோன்றும்; அதியமான் மறைவு, அவர் மறைவு ஆகாது; நீர்த்துறையில் மலர்ந் தும், பிறரால் சூடப்பெறுமல் பயனற்ற பகன்றைப்பூப் போல, பிறர்க்குப் பயனின்றி வாழ்ந்து இறந்தோராவர் அவரெல்லாம்; ஆகவே அவர் மறைவுகுறித்து வருந்து வார் யாரும் இரார்; அத்தகையானல்லன் அதியன். ஆகவே, அதியமான் மறைந்தபின்னர், அவனையின்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி எனக்கு இல்லையாகுக; அவனையின்றி வாழ்வதால் எனக்கும் யாதொரு பயனும் இல்லையாதலின், என் வாழ்நாள் வளராது இன்றோடு ஒழிக," என்றெல்லாம் கூறிப் புலம்பித் துன்புற்றார் ஔவையார்.

" சிறியகள் பெறினே, எமக்குஈயு மன்னே!
பெரியகள் பெறினே,
யாம்பாடத், தான்மகிழ்ந்து உண்ணு மன்னே!
சிறுசோற் றுணும் நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ்சோற் றுணும் நனிபல கலத்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்குஈயு மன்னே!
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான்நிற்கு மன்னே!
நரந்தம் நாறும் தன்கையால்,
புலவு நாறும் என்தலை தைவரு மன்னே!
அருந்தலை இரும்பாணர் அகல்மண்டைத் துளையுரீஇ,
இரப்போர் கையுளும் போகிப்,
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்சசிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று,அவன்
அருநிறத்து இயங்கிய வேலே;
ஆசுஆகு எந்தை யாண்டுளன் கொல்லோ?
இனிப், பாடுநரும் இல்லை: பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள்மா மலர். [இல்லை;

சூடாது வைகியாங்குப், பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே.” (புறம், உகஅ)

“இல்லா கியரோ காலை மாலை ;
அல்லா கியர்யான் வாழும் நாளே.” (புறம் : உகஉ)

(2) பொகுட்டெழினி :

அதியமான் பிரிவால், அவன் வழிவந்தார் வருந்தித் துன்புறுங்கால், ஔவையார் அவன் தகடூரைவிட்டு நீங்கிஞரல்லர் ; அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் உற்றுழித் தீர்வார் உறவல்லர் என்பதை உணர்ந்தவர் ஔவையார் ; அதியமான் மகன், மிக இளையபொகுட்டெழினியோடிருந்து, அவனுக்கும் தம்மாலான துணைபல புரிந்து வாழ்ந்து வந்தார் ; அதியமான் மறைவால் அல்லற்பட்டு ஆற்றாது அழும் அவன் நாட்டுமக்கள் நிலைகலங்கி மனந்தளராது, அவன் பிரிவால் நேர்ந்த துன்பம் மறந்து மகிழும் வண்ணம், நாடாள் திறம்பெற்று விளங்கிய நல்லோன் ஆயினன் பொகுட்டெழினி ; பொகுட்டெழினியின் இவ் வாட்சித்திறம் கண்டுவியந்த ஔவையார், அவனைப், ‘பாரம் மிகுதியாலும் வழி அருமையாலும் இடைவழியில் வண்டியின் அச்சுமுறிந்துபோயின், அவ்விடத்து உதவுக என்றே எடுத்துச் செல்லும் சேமஅச்சிற்கு ஒப்பாவன்’ என்று கூறிப் பாராட்டுவாராயினர் :

“எருதே இளைய ; நுகம்உண ராவே ;
சகடம்·பண்டம் பெரிதுபெய் தன்றே ;
அவலிழியினும், மிசையேறினும்
அவணது அறியுநர் யார்என, உமணர்
கீழ்மரத்து யாத்த சேமஅச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய் !” (புறம் : கஉஉ)

பொகுட்டெழினியும், அவன் தந்தை அதியமானைப் போன்றே, போராற்றலும் போர் வேட்கையும் உடையான் ; பகைமன்னர் பலரை வென்று அவன் அரண்களைக் கைக்கொள்வதோடு, அமையாது, ஆங்கு இறந்துவீழ்ந்த வீரர்

களின் உடலினின்றும் வெளிப்போந்த குருதியால் ஈரம் பட்ட நிலத்தில், கழுதை ஏர்பூட்டி உழுது, வெள்ளை வரகும் கொள்ளும் விதைத்து, அப் பகைவர் நாட்டைப் பாழாக்கிப் பார்த்து மகிழும் போர்வெறியும் உடையான்.

பொகுட்டெழினி, போர்வேட்கை மிக்குடையனே எனினும், அவனும், அவன் தந்தை அதியனைப்போன்றே, தன்பால் பாடிப் பரிசில் பெறவரும் பாணரையும், பாவலரையும் அன்புடன் ஏற்று, அவர் வறுமைபோகப் பரிசில் பல அளிப்பதோடு, அவரைத் தம்மோடு பலநாள் இருத்தி, உடனிருந்து உண்டு மகிழும் மனநலனும் உடையன்; பொகுட்டெழினி, அதியனைப்போன்றே ஆட்சித்திறனும், அருள் உள்ளமும், போர்ப்பயிற்சியும் பெற்ற ஆண்டகையாய் விளங்குவது கண்டு, இனி அவனைக் குறித்துக் கவலை கொள்ள வேண்டுவதின்று என்ற துணிவுடையராய்த் தகடூர் நீங்கிச் செல்வாராயினர் ஔவையார்.

(3) மூவேந்தர்

தகடூர் நீங்கிப் புறப்பட்ட ஔவையார், தமிழகம் முழுதும் சுற்றிவருவாராயினர்; அந்நிலையில், அக்காலத் தமிழ்நாடாண்ட தமிழரசர்களாய, சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், வழக்கத்திற்கு மாறுகப், பகை நீங்கி உறவுடையராய் ஒருங்கே இருக்கக்கண்டார்; அக்காட்சி, ஔவையார் உள்ளத்தை, உவகைப் பெருங்கடலுள் ஆழச் செய்தது; அவர்கள் உறவு, தமிழகத்தின் உயர்விற்கு உறுதுணை புரியும் என்பதை உணர்ந்தவர்; ஆகவே, அவ்வொற்றுமை நீடித்துவாழ நினைந்தார்; தம் உள்ள வேட்கை நிறைவேற அவர்க்கு அறிவுரைகூறத் தொடங்கினர்; "தமிழ்ப்பெரு வேந்திர்! தாங்கள் மூவரும், உங்கள் பகைமறந்து உறவுடையராய் ஒன்று கலந்திருக்கும் இக்காட்சி, அந்தணர் வளர்க்கும், ஆகவனீயம், காருகபத்தியம், தென்திசையங்கி என்ற முத்தீயை நினைப்பூட்டுகின்றது; முத்தீயில் ஒன்று குறையினும், அந்தணர் கடனுற்றல் இயலாது;

அஃதே போன்று, மூவரில் ஒருவர் பகைத்து நீங்கினும், தமிழக வாழ்வு தளைக்காது; ஆகவே, நீங்கள் மூவரும் இன்றேபோல் என்றும் கூடி வாழ்வீராக; உங்களுக்கு நான் அறிந்த உலகியல் குறித்து உணர்த்த விரும்புகின்றேன்: அவற்றை உளங்கொளல் வேண்டுவல், ஆளும் உலகம் உயர்ந்தோர்வாழ் தேவருலகொப்ப உயர்ந்ததே ஆயினும், இறந்து போவுழி உடன் வருதல் இல்லை; அன்றியும், தம் வாழ்நாள் உள்ள வரையிலாவது, அந் நாடு தம் ஆட்சியின் கீழ் மாறுதிருக்கும் என்று கூறுவதற்கும் இல்லை; ஆதலின், இங்கு வாழும் வரையில், தம்பால் வந்து ஏற்போர்க்குப் பூவும் பொன்னும் புனல் வார்த்துக் கொடுத்து உதவி, அவர்க்கு வேண்டுவன அளித்து மகிழ்ந்து வாழ்தல் வேண்டும்; இறந்து மறைந்து போவுழி, நாம் இவ் வுலகில் வாழுங்காலத்துச் செய்த இதுபோன்ற இந்நல்வினையல்லது, இந்நாடோ, இந்நாட்டுச் செல்வமோ நமக்குத் துணையாகா; நல்வினையே நற்றுணையாம் என்பதை உணர்ந்து வாழ்மின்.” என்று வாழ்த்தி விடைபெற்றுப் போயினர்.

“நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும், தம்மொடு செல்லா;
வேற்றோ ராயினும் நோற்றோர்க்கு ஒழியும்:
ஏற்ற பார்ப்பாக்கு ஈகுகை நிறையப்
பூவும் பொன்னும் புனலபடச சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
நாரரி தேறல் மாந்த, மகிழ்சிறந்து,
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல்வேண்டும் இவண் வரைந்த வைகல்:
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங காலைப் புணைபிறிது இல்லை;
ஒன்றுபுரிந்து அடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடிதேர் வேந்தர்!
யானறி அளவையோ இதுவே; வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும், இம்மென
இயங்கு மாமழை உறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிகநும் நாளே!”

(புறம்: 235)

(4) நாஞ்சிற் பொருநன் :

ஔவையார் காலத்தே, நாஞ்சில்நாட்டு நாஞ்சில்மலைக் குரியோன் ஒருவன் இருந்தனன். அவன் நாஞ்சிற்பொரு நன் எனவும், நாஞ்சில்வள்ளுவன் எனவும் அழைக்கப் பெறுவன்; பெரிய வீரன்; சிறந்த கொடையாளி; அவன் பால் பரிசில் பெற விரும்பும் புலவர்கள், அவன் நாடு கடத்தற்கரிய கொடு வழிகளை இடையில் உடையது என் பதையும் எண்ணுமல், அவற்றைக் கடந்துசென்று அவனைப் பாடிப் பரிசில் பெறுவர்; மூவரைப் பாடிப் பரிசில் பெற வேண்டுமென விரும்பாதவரும், இவனைப் பாடிப் பரிசில் பெறுவதை, விரும்புவர் என ஒரு புலவர் கூறுகின்றார் எனின், அவன் பெருமையை மேலும் எடுத்துக் கூற வேண்டியதின்று; அவனைப் பாடிப் பரிசில் பெற விரும் பினர் ஔவையார்; பலாமரம், பல வளர்ந்து வளம் பெற் றிருக்கும் அவன் நாஞ்சில்மலை யடைந்து அவனைக் கண்டு பாராட்டினர்: அவன், தன் பெருமை தோன்றப் பெரிய யானை ஒன்றைப் பரிசாக அளித்தான்; அதைப் பெற்றுக் கொண்ட ஔவையார், அவனைப் பாராட்டிய பாடல் மிகவும் நயமுடையது. அவனைப் பாடிய புலவர்களை நோக்கி, "புலவர் பெருமக்களே! 'எங்கள் நாக்கு, செம்மையான நாக்கு; தகுதியில்லோர் செல்வம் வியத்தல் செல்லாப் பெருமை மிகுகது எங்கள் நாக்கு' என்றெல்லாம் பெருமை கொள்கிறீர்களே, அவ்வாறு பெருமை கொள்ளும் நீங்கள், கடைசியில் அறிவிற் குறைந்த இவனைப் போய்ப் பாடினீர் களே; இவன் அறிவின்மைக்கு ஓர் எடுத்துக் காட்டுக் கூறுகிறேன் கேளுங்கள்; வீட்டில் அரிசியில்லாக் குறை யால், பெண்கள், கொல்லையில் விளைந்திருக்கும் கீரையைப் பறித்துக் கொணர்ந்து உணவாக்கி வைத்திருந்தனர்; அக் கீரை உணவை மட்டும் உண்ணுவதா என்ற எண்ணத்தால், இந் நாஞ்சிற் பொருநன்பால் சென்று, சிறிது அரிசி வாங்கி வருவோம் என்று அவன்பால் சென்று பாடினேன்; அவன் என்ன கொடுத்தான் தெரியுமா? பாலை நிலத்திற் கிடையே படுத்திருக்கும் பெருமலை போன்ற பெரிய யானை ஒன்றைக் கொடுத்தான்; அதைக்கண்ட நான், 'ஐய! எங்க

ளுக்கு இப்போது வேண்டுவது அரிசி ; அரிசியில்லாமை யால் பசியால் வருந்துமெங்களுக்கு யானையைக் கொடுக் கிறீர்களே, இது முறையா? இதைக் கொண்டு போய் நாங்கள் என்ன செய்வது? எங்கள் சிறு வயிற்றிற்கே உணவின்றி வாடும் நாங்கள், இப் பெரிய யானையை எவ்வாறு பேண வல்லேம்?' என்று குறை கூறினேன். அவ்வாறு கூறியும் அதைப் புரிந்து கொள்ளும் அறிவு அவன்பால் இருப்பதாகத் தெரியவில்லை ; அதற்கு அவன் கூறினான் : 'நீங்கள் உங்கள் நிலைக்கு ஏற்ற பொருளை என்பால் வேண்டினீர்கள் ; அதைப் போன்றே, நானும் என்னுடைய தகுதியை எண்ணி, யானையைப் பரிசாக அளித்தேன் ; அவ்வாறு கொடுப்பதுதான் என் தகுதிக் கும், பெருமைக்கும் உரியது' என்றான்; இவ்வாறு யாருக்கு எதைக் கொடுப்பது என்பதையும், தன்னுடைய கடமை யாது என்பதையும் எண்ணிப் பாராமல் நடக்கும் இவனை அறிவுடையான் என்று எவ்வாறு கொள்வது? இவன் உண்மையில் அறிவற்றவனே ; அறிவற்ற இவனைப் பாடி னீர்களே ; உங்கள் நாக்குமை ஒரு நாக்கா?" என்று கூறி அவன் புகழ் விளங்கப் பாடினார்.

"தடவுநிலைப் பலவின் நாள்சிற் பொருநன்
மடவன் மன்ற : செருநாப் புலவீர் !
வளைக்கை விறலியா படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக, யாம்சில
அரிசி வேண்டினெ மாகத் தான்பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கியோனே ; அன்னதோர்
தேற்ரு ஈகையும் உளதுகொல்
போற்றூர் அம்ம ! பெரியோர்த்தம் கடனே." (புறம்:கூ0)

இவ்வாறு அரசர்களைப் பாடிய ஔவையார், தம்மைப் போன்ற புலவர்களாய, கபிலர், பரணர், வெள்ளிவீதியார் முதலியோரையும் பாராட்டிப் பாடியுள்ளார் ; அவர் குறித்து ஔவையார் பாராட்டியதை, 'ஔவையார் வரலாறு' என்ற தலைப்பின்கீழ்க் கண்டுகொள்க.

ச. ஔவையார் சென்ற தூது

பிறநாட்டு அரசரவையில், தூதுவராயமர்ந்து தொழி லாற்றப் பெண் ஒருத்தி சென்றாள் என்ற பெருமையை முதற்கண் பெற்ற நாடு, நம் பைந்தமிழ் நாடே; ஒரு நாட்டு அரசியல் தூதுவர், பிறநாடுகளில் தொழிலாற்றுவதை இன்று நாம் காண்கிறோம் என்றாலும், இன்று தூதுவர் அனுப்பப் பெறுதல், பகைவர் வாழ் நாடுகளுக்கு அன்று; இரு நாடுகளுக்குமிடையே பகையின்றி யாதேனும் ஒரு வகையால் உறவுடைய நாடுகளுக்கு மட்டுமே, அன்னர் அனுப்பப் பெறுகின்றனர்; அந் நாடுகளோடு நட்புறவு அற்றுப் பகை தோன்றிவிட்டது; இனிப் போர் மூண்டு விடும் என அறிந்தவுடனே, அந் நாடுகளுக்கு அனுப்பப் பெற்றிருந்த அரசியல் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டு விடுவர்; ஆகவே பகை தோன்றும் வரை, அது தோன்றாதிருக்குமாறு பார்த்துக் கொள்வதே, இக்கால அரசியல் தூதுவர் ஆற்றும் பணியாம்; உள்ள பகையைப் போக்க உழைப்பதன்று அவர்கள் தொழில்; ஆனால், பண்டைக் காலத்தில், தூதுவர், நட்பரசர் அவைக்கு அனுப்பப்படுவதினும், பகையரசர் அவைக்கு அனுப்பப்படுதலே மிகுதியாம் உள்ள உறவை வளர்த்துப் புதுப் பகை தோன்றாமல் பார்த்துக் கொள்வதினும், உள்ள பகையை ஒழிக்க முயல்வதே அக்காலத் தூதுவர் ஆற்றவேண்டிய அரும்பணியாம்; ஆகவே, இக்காலத் தூதுவர் தொழிலினும, அக்காலத் தூதுவர் தொழில், தொல்லை நிறைந்தது என்பது தெளிவு; தொல்லை தரும் அத் தொழிலினைத்தான் துணிந்து மேற் கொண்டார் ஒருவர்; அவர், பெருமையும், உரனும் பிறவிக் குணமாய்க் கொண்ட ஆடவர் இனத்தைச் சார்ந்தவர் அன்று; அச்சமும், நாணும், மடனும் ஆயவற்றை அணி யெனக் கொண்டபெண் குலத்திலே பிறந்தாரொருவர்; என்றால், அது, பெருமைக்குரிய செயலன்றே? செயற் கரிய செய்வாரன்றே பெரியார்? அவ் வரும்பெரும் செயல் செய்த பெண்டிர்ப் பெருந்தகையார் ஔவையா ராவர்.

வேற்று வேந்தர்பால் தூதுரைக்கச் செல்பவர், தாம் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான், ஓலை கொடுத்து நிற்பான் என மூன்றுவகையினராவர். தம் அரசரிடத்தும் தாம் பிறந்த நற்குடியிடத்தும நிறைந்த அன்புடையராதல், தூதுவர்பால் அமையவேண்டிய முதற்பெரும் பண்பாம். நற்குடி என்ற புகழைப் பெறுதற்கேற்ற குணங்கள் எல்லா வற்றிலும் நிறைந்த குடியில் பிறந்தாரையே, தூதுசெல் தொழிற்கு மேற்கொள்வர் அக்கால அரசர்கள். பெயர் கேட்ட அளவிலேயே, தம் அரசராலும், பகையரசர்க ளாலும் விரும்பிப் பாராட்டத்தக்க பண்புடையராதலும் தூதுவர்க்கோர் இலக்கணமாம்.

தூதுரைக்கச் செல்வோர், தம அரசனுக்குத் தமமால் ஆவன யாவை என்பதை இயல்பாகவே உணரும் நல்லறி வோடு, கற்கவேண்டுவன யாவை என அறிந்து, கற்று உணடான நூல்அறிவும் உடையராதல், அவா மேற் கொண்ட தொழிற்கு இன்றியமையாததாம் ஒருவன் நற்குண நற்செயலகளைக் கேட்டு அறியாதார, முதற்கண் அவனைககாண நேரின், அவர் மனததிடை அவனைப்பற்றிய விருபபு வெறுப்புக்களைத் தோற்றுவிப்பது அவன் உடல் தோற்றமே ஆம்; ஆதலின், தூதுவர், கண்டாரால் விரும் பப்படும் தோற்றப் பொலிவுடையராதலும் வேண்டும்.

தம்மொடு மாறுபடுவார் அனைவரையும் கொன்று ஒழித்தலையே தொழிலாகக் கொள்வது வேநதர் இயல்பு; அத்தகையார் ஒப்பாத ஒன்றை ஒபபவைக்கவே தூதுவர் செல்வர்; ஆதலின் தூதுவர்பால் எடுத்த எடுப்பிலேயே பகையரசர் சினங்கொண்டு சீறிவிழுவர்; ஆதலின், அவ் வரசரிடையே தூதுரைக்கச் செல்வார், இதைக்கூறின், நம் உயிர்க்கும், உடற்கும் ஏதம்பல உண்டாகுமே என அஞ் சாது, தம் அரசற்கு ஆவனவற்றை எடுத்து இயம்பவல்ல அஞ்சாமை உடையராதலும் வேண்டும.

பொதுவாக அரசர் எவர்க்கும் பொறுமை என்பதே இராது; வேற்றரசர் விடுத்த தூதுவன் கூறுவனவற்றை அவர்கள் காதுகொடுத்துக் கேட்பர் என எதிர்பார்த்தல்

கனவிலும் இயலாது ; ஆதலின், தூதுரைக்கச் செல்வோர், சுருங்கக்கூறி விளங்கவைக்கும் வல்லமை உடையராதல் வேண்டும் ; அன்றியும், அவனிடத்தில, தம் அரசனுக்கு ஆகவேண்டுவன அவ்வளவையும், ஒன்று, இரண்டு என எண்ணிட்டுக் கூறுதல் கூடாது ; இவ்வளவுமா விட்டுக் கொடுப்பது ? என்ற எண்ணம, இயல்பாக அவனுக்குத் தோன்றுத் தாம் சென்ற காரியம் கைகூடாமற் போக விடுதல் கூடாது ; ஒன்றைக் கூறவேண்டும் ; அவ் வொன் றிற்கு அவன் இசைவதிலுலேயே, தமக்கு ஆகவேண்டுவன அவ்வளவும் நிறைவேறுவதாகவும் இருத்தல் வேண்டும் ; "இஃது ஒன்றுதானே" என எண்ணி, அவன் இசையினும் இசைவன்.

மேலும், வேற்றரசரிடையே சென்று, தம் அரச னுக்கு வேண்டுவனவும், அவனுக்கு வேண்டாதனவும் ஆகிய செயல்களைக் கூறும் தூதுவர், தம் சொல்லின்கண், அப் பகையரசர் காது வெறுக்கும் கடுஞ்சொல் ஒன்று கூடக் கலவாது இருப்பதில் கருத்தைச் செலுத்தவேண்டும் ; கடுஞ்சொல் கலவாது இருப்பதுமட்டும அன்று ; வெல்லத் தில் நஞ்சு கலந்து கொடுபபதேபோல், அவனிடம் எதிர் பார்ப்பது, அவன் விரும்பாத ஒன்றே ஆயினும், சொல்லும் போது, "இதற்கா இசைவது ?" என எண்ணம், அவன் சொல்லும் பொருள்மீது செல்லாது, சொல்லும் சொல்லின் நயத்திலே நின்று சொக்கி மயங்கி இசையுமாறு இன்சொல் கூறும் ஆற்றலும் அவர்க்கு இருத்தல்வெண்டும்.

தூதுரைக்கச் செல்வோர், பகையரசர் அவையிலும், அரசியல் உணர்ந்த அறிஞர் பலர் இருப்பர் என்பதை உணர்ந்து, தாம், அவரினும் வல்லாராய் இருத்தல்வேண்டும் என்பதை மறத்தல் கூடாது. இவ்வளவு பெரிய பொறுப் பான செயலை மேற்கொண்டு செல்லுமம தூதுவர், உள்ளத் தூய்மையற்றவராயின், அவர், ஆசைகளுக்கடிமையாய்த் தம் அரசனுக்கு ஆகாதன செய்ய இசையினும் இசைவர் ; ஆதலின், உளளத்தூய்மை உடைய உயர்பேரொழுக்க முடையாரையே தூதுவராக மேற்கொள்ளுதல் வேண்டும்,

இறுதியாகப் பகையரசர் அவையிலே நின்று, அவர்க்கு ஆகாதன கூறுவதே, தூதுவர் இயல்பாம் ஆதலின், அத் தூதுவர்பால் அரசர்க்குச் சினம் பிறத்தல் இயல்பே; அவ்வாறு சினம்கொண்ட நிலையில், பகையரசர், தம அரசவையில் நிற்கும் அத்தூதுவர்க்கும் கேடுவினைக்க எண்ணுதலும் கூடும். அந்நிலைக்கண், அவ்வரசர்க்கு, "இதற்குக் காரணமாயவன், இவன் அரசனேயன்றி, இவ னல்லன;" எனத் தூதுவர் இயல்புகூறி அக்கேட்டினின் றும் மீட்கவல்ல நல்ல துணைவர்களைப் பகையரசர் அவையி லேயே தேடிக்கொள்ளும் ஆற்றலும் அத்தூதுவர்பால் இருத்தல் வேண்டும்.

தூதுவர்பால் காணவேண்டிய, அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்தவாம் பண்புடைமை, அறிவு, உரு, அஞ்சாமை, தொகச்சொல்லல், தூவாத நீக்கல், நகச் சொல்லல் ஆகிய ஆராய்ந்த சொல்வன்மை, நூலாருள் நூல்வல்லுனக்கும் ஆராய்ந்த கல்வி, தூய்மை, துணை உடைமை ஆகிய அவ்வளவு பண்புகளும் ஔவையார்பால் அமைந்திருந்தன ஆதலின், தொண்டைமானுழைத் தூது செலவும் அப்பெருந் தொண்டை அவர்பால் ஒப்படைத் தான் அதியமான்.

தொண்டைமானுழைத் தூது சென்றுள்ளார் ஔவை யார்; ஔவையார் வந்துள்ளதன் நோக்கத்தைக் குறிப் பான் அறிந்துகொண்டான். அவனும், அதியமானிடும், தான் படைவலியால் குறையுடையானல்லன் என்பதை ஔவையாருக்கு அறிவித்துவிடின், அவர், தாம் எடுத்த காரியம் இனிது முடியாது என்பதை, அஃது ஒன்றைக் கொண்டே உணர்ந்து, வந்த காரியத்தை உணர்த்தாதே மீள்வர் என எண்ணினான். எண்ணிய அவன், அதை வாயால் அறிவித்தானல்லன்; தான் அக்கருத்துடையான் என்பதையும் ஔவையார் அறிதல் கூடாது என எண்ணினான்; அதற்கு அவன் கையாண்டமுறை மிக மிக அருமையானது; வந்த ஔவையாரை, வந்தது ஏன் என வினவாதே, தன் அரசவை நாடிவரும் புலவர் பெருமக்களை

விரும்பி வரவேற்பதே போன்று வரவேற்று, அவர்க்குத் தன் அரண்மனை முற்றும் சுற்றிக் காட்டுவான்போல், அழைத்துக்கொண்டே சென்று, படைக்கலங்களை அழகாக அணிசெய்து வைத்திருக்கும் தன் படைக்கலச்சாலைக்குள் அவரோடு நுழைந்து. ஆங்கே, அடுக்கிவைக்கப்பெற்றிருக்கும் அவ்வளவு படைக்கலங்களையும் பார்க்குமாறு செய்துவிட்டான். ஆனால், அந்தோ! அவன் எண்ணியது ஒன்று; நிகழ்ந்தது வேறு; முற்றிலும் எதிராரா ஒன்று.

தொண்டைமான் உட்கருத்தை உணர்ந்துவிட்டார் ஔவையார்; இங்கே உள்ள படைக்கலங்களின் வரிசையைப் பார்க்கிறார், அவற்றின் எண்ணிக்கைப் பெருக்கையும் அளவிடுகிறார்; அங்கே, தகடூர்க்கண்உள்ள அதிகமான் படைச்சாலை. அவர் மனப்பார்வைமுன் வந்துநிற்கிறது. அப் படைக்கலங்களின் பாழ்பட்டுப பயன்படாநிலையும, பழுதுபார்க்கவேண்டிக் கொல்லன்குடிசையில் குவிந்து கிடக்கும் காட்சியும தோன்றுகின்றன அவர் மனக்கண்ணிற்கு. இவ் வேற்றத்தாழ்வு, அவர் நெஞ்சைக் கலக்குகிறது; என்றாலும், அவர் அதை வெளிக்குக் காட்டிஞரல்லர்; ஏற்றத் தாழ்வு இருப்பினும், எண்ணியதை முடியாதுவிடேன்; அதியமானுக்கு வில்லின்துணை வேண்டிய அளவு இல்லாது இருக்கலாம; ஆனால், என்சொல் துணை அவனுக்கு உண்டு: வில்லினும சொல வன்மையுடையது; என் சொல்லாற்றலால் இவன் வில்லாற்றலை வீழ்த்திவிடுகிறேன் என்று முடிவு செய்கிறார்.

ஆயுதப்பெருக்கைக் கண்ட ஔவையார் உள்ளம் அஞ்சி, அதியமானுக்கு அறிவுட்டும் எனற அகமகிழ்ச்சியில் திளைத்துப் பெருமிதம் தோன்ற நிற்கின்ற தொண்டைமானை அருகி, "அரசே! இவ்வேலின் காம்புகள் எவ்வளவு அழகும், அருமையும், திண்மையும் அமையப் ஆக்கப்பட்டுள்ளன! வேலின் இலைகள்தாம் எவ்வாறு தீட்டப்பெற்றுப் பளபள என மின்னுமாறு நெய் பூசப்பட்டுள்ளன! இவையனைத்தும், அழகாக, வரிசையாக, நிறுத்தப்பெற்று, மாலையாலும், மயிற்பீலியாலும் அணி

செய்யப்பெற்றுக் காணும் காட்சியே காட்சி! இறுதியாக இவை வைக்கப்பெற்றுள்ள கற்கோட்டைபோன்ற இவ் விடத்துக் காவலின் கடுமையே கடுமை! இவ்வளவு சீரிய, பெரிய படையுடைய உன் பெருமையே பெருமை!" எனப் பாராட்டுவராயினர்; இப்பாராட்டுரையினை உண்மைப் பாராட்டெனக் கொண்டு மயங்கி மகிழும் தொண்டைமான் அறிவை மேலும் தன்பால் இழுக்க, அவன் காது இனிக்க மேலும சில கூறுவாராயினர்.

அரசர்கள், தங்கள்முன்பாகத் தங்களைப் பாராட்டு வதைக் கேட்பதிலும், தங்கள் முன்பாகவே தங்கள் பகை வர்களைப் பழித்துரைப்பதைக் கேட்பதிலேயே மிகவும் மகிழ்வர் என்ற உண்மையை அறிந்தவர் ஔவையார் ஆதலின், தொண்டைமான் காது குளிர, அதியமானை இழித்துக்கூறத் தொடங்கிவிட்டார் " அரசே! அதியமான் படைக்கலத்தின் நிலை நினக்குத் தெரியுமா? கூறுகின்றேன் கேள்; அவனிடம் உடையாத வேல் ஒன்றுகூடக் கிடையாது; ஒன்றின் நுனி மடங்கிப்போய் இருக்கும் என்றால், மற்றொன்றின் காம்பு ஒடிந்துபோய் இருக்கும; இப்படியே, அவன் பெற்றிருபபன அனைத்தும முற்றும் பாழ்பட்ட படைக்கலங்களே; அவை அரண்மனையிலாவது வைத்துக் காக்கப்பட்டுள்ளனவா என்றால், அதுவும் இல்லை; ஊர்க்கோடியில், ஒதுக்குப்புறமாக உள்ள, கொல்லன் தன் தொழிற்சாலை வைத்திருக்கும் சிறிய குடிசையிலே, கேட்பாரற்றுப் போடப்பட்டுளளன; அவ்வளவு பாழ் பட்டது அவன் படைநிலை," என்று அதியமான் படைகளைப் பழித்துரைத்தனர்; இதைக் கேட்ட தொண்டைமான் உளளம, மகிழ்ச்சியால் துளளும் என்பதைக் கூறவும் வேண்டுமா?

என்ன! அதியமான் ஆட்சிநலம் கருதி, தொண்டை மானிடம் தூதுசென்ற ஔவையார், இவ்வாறு பகையர சனைப் பாராட்டித், தன்னைப் போற்றிய பேணும் அரசனைப் பழித்தார் எனின், அவர் பண்புடையார் எனப் பாராட் டற்குரியார் அல்லர்; பழிபாவங்களுக்கு அஞ்சாப் பாதகர்

எனப் பழிக்கவே தோன்றும். ஆனல், ஔவையார், அவ்வளவு அறைபோகும் அறிவுடையாரல்லர்; கடமையில் தவறும் கயவரும் அல்லர்; எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் ஆற்றல் உடையவரே; அவர் அதைத் தவறுதும் செய்து முடித்துள்ளார் எனபது, அவர் சொற்களை உற்று நோக்க வல்லாரால் உணரப்படும்.

தொண்டைமான் படைக்கலம்பற்றி அவர் கூறியன யாவை? காவல் நிறைந்த கோட்டையின் உள்ளே, காப் பாற்றிவைக்கப்பட்டுள்ளன; இலையும், காம்பும் பழுதின்றி உள்ளன; பீலியும், மாலையும சூட்டிப் பெருமைப் படுத்தப் பட்டுள்ளன; பூசிய நெய் புலராமலே உள்ளன; இவை. இதனல் என்ன புலப்படுகிறது? அப் படைக்கலங் கள், போரில் பயன்பட்டுப் பழகாதன; போர்க்களத்தையே எட்டிப் பாராதன; பூவும், புகையும் காட்டிப் பூசிக்கத் தக்கனவே ஒழிய, போரிற்குப் பயன்படாதன; தாம் பிறரைக் காக்கும் ஆற்றல் அற்றன; தமக்கு இடமாகக் காவல் செறிந்த இடத்தைத் தேடுவன; இவைதானே அவர் கூறியுள்ளன; அவன் ஆண்மையை, எவ்வளவு அழகாக, ஆனல் சிறிதும் அஞ்சாமல் எள்ளி நகையாடியுள்ளார் நோக்குங்கள்.

தொண்டைமான் படைக்கலத்தைப் பழித்துக்கூறிய ஔவையார், அதியமான் படைக்கலங்களைப் பாராட்டாம லாவது விட்டாரா எனின், அதுதானே இல்லை; அவனைப் பழித்துக்கூறிய அதே நாவால், அவன் முன்பாகவே, அவன் பகையரசன், அதியமானைப் போற்றிப் புகழவும் செய்துள்ளார்; அதியமான் படைக்கலம் குறித்து அவர் கூறினவற்றை உற்று நோக்குங்கள்! உண்மை விளங்கும். அவர் என்ன கூறினர்? அதியமான் படைக்கலங்கள் அவ் வளவும், அடியும், நுனியும் சிதைந்தன; கொல்லன் குடி சையிலே கிடபபன; இது அவன் படைக்கலங் குறித்து அவர் கூறியது; இதனல் புலனவது என்ன? அவன் படைக்கலம் பழுதுபட்டவை? எப்படிப் பழுதுபட்டன? ஏன் பழுதுபட்டன? பலகால் போரில் பயன்படுத்தப்

பட்டன ஆதலின், அங்கே பகைவர், தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப் படைகளையும தாககித் தாக்கிப் பழுதுபட்டன ; ஆகவே, போர்ப் பழக்கம் பெற்றவை ; மேலும், பயன்படாதன எனக் கழிக்கப்பெற்றால் குப்பையில் அன்றே போட்டிருப்பர்? கொல்லன் குடிசையில் அவை கிடப்பானேன்? அங்கே அவற்றிற்கு என்ன வேலை? மீண்டும் போர் வரின், பயன்படுமை வகையில் பழுது பார்க்கவே அவை அங்கே அனுப்பப்பட்டுள்ளன ; அவற்றைப் பழுது பாாக்கும் கொல்லரும் அங்கே ஏராளம் ; அவர்கள் அதற்கு எப்போதும் தயார் ; இவைதானே அவர் கூறுவதினின்றும் பெறலாகும் பொருள்? கேட்ட தொண்டைமான் உள்ளம்—என் கேட்டவர் யாவராயினும் அவர் உள்ளந்தான் என்ன—அஞ்சி நடுங்காமல் இன்பப் பெருக்கிலா ஆழும்? காதிற்கினிய சொற்களால், அவன் மனதை மருட்டும் கருத்துரைகளைக் கூறிய ஔவையார் தம் கல்வியின் பெருமையே பெருமை!

அம்மட்டோ? தொண்டைமான் வேல் பற்றிக் குறிப்பிடும்போது, எவ்வளவு இழிவாக, "அட! இந்த வேலா?" என்று தோனிக்குமாறு, இழிவுப் பொருள் குறிக்கும் சுட்டோடு கூட்டி, "இவ்வே" எனக் கூறி, அதியமான் வேல் பற்றிக் குறிபபிடுமபோது, கூரிய முனையை உடைய வேல் என்று பொருள்படுமாறு, "வைந்நுதிவேல்" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். மேலும், தொண்டைமான் படைக்கலம்பற்றிக் கூறுழி, அவனைப்பற்றி ஒன்றும் கூறாது கொன்னேவிட்டு, அதியமான் படைக்கலம்பற்றிக் கூறுழி, பொருள் நிறைய உள்ளவழி, அவற்றைத் தனக்கென ஓம்பாது, வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கியுமை, பொருட் குறையுண்டான காலத்து, வாரி வழங்க இயலாதாயினும், வருவோரை உடன் வைத்து உண்டும், பொருளால் வறியர் ஆயினர் பலரைத் தனக்கு உறவாக உடையவன் ; அவன் அன்பிற்கு அடங்கியோராக, எண்ணற்ற பலர் உளோம் ; அத்தகைய தலைமைப் பண்புடைய அவன் எங்கள் வேந்தன் ஆவான் ; இத்தகு சிறப்புடையான் படைக்கலம் என,

அவன் படை, தன்னளவிலே பெற்ற பெருமையோடு அவற்றைக் கொண்டான் பெருமையும் உடையன என்றும் புகழ்ந்துள்ளார்.

இவ்வளவோடு நில்லாமல், அதியமான் பெற்றுள்ள மற்றோர் பெருவலி ஒன்றையும் குறிப்பாக எடுத்துக் காட்டித் தொண்டைமானைத் துணுக்குறச் செய்துள்ளார். ஒருவனுக்கு, அவன்மாட்டு அன்பு குறையாத சுற்றத்தார் பலர் கிடைப்பாராயின், அவனுக்கு மேலும் மேலும் வளர்தற்கு வழியாம் செல்வம் பல கிடைக்கும்.

"விருப்பறுச சுற்றம் இயையின், அருப்பறு
ஆகம் பலவும் தரும்." (திருக்குறள் : ருஉ உ)

அவ்வாறின்றி, ஒருவன், கோடிகோடியாகப பொருளைக் குவிததிருநதுமம, உளளம் கலந்து உறவாடும் சுற்றத்தாரைப் பெறுணையின், கரையற்ற குளத்தில், நீர் நில்லாது வெளியே போய்விடுதல்போல், அப்பொருள் விரைவில் அழிநதுபோவது உறுதி.

"அளவளா வில்லாதான் வாழ்ககை, குளவளாக்
கோடின்றி நீாநிறைந் தற்று." (திருக்குறள் : ருஉ ஊ)

இஃது உலகியல்; அதியமான் பொருளை அள்ளி அள்ளிக் கொடுத்தமையால், அன்புள்ள சுற்றததாராக, ஏற்போர் பலரைப் பெற்றுள்ளான்; ஆகவே, அவனழிவு, அவ்வளவு எளிதன்று; அவன் அழிய அவர் பார்த்திரார்; பக்கததுணையாகப் பரிந்து வருவர்; ஆனல் உனக்கு அத்தகைய பெருஞ் சுற்றம் இருபபதாகத் தோன்றவில்லை; சுற்றமற்ற உன்வாழ்வு, பெருவாழ்வாகத் தோன்றினும், இறுதியில் அழிதல் உறுதி; அதை அழியாமல் தடுத்து நிறுத்துவார் யாரையும் காணேன்," என அவன் அஞ்சுதற்கான மற்றொரு காரணத்தையும் எடுத்துக் கூறியுள்ளார். இனிய சொற்கூறும இயல்பிலே, ஈடு இணையற்றிருந்த காரணத்தால், இவ்வளவும் கூற முடிந்தது.

இவ்வளவு பொருளும செறிய, அவர் கூறியன கேட்ட தொண்டைமான், அவ்வளவோடு ஒரு முடிவிற்கு வந்திருப்

பின் நன்றும். ஆனல், அவன் அவ்வாறு செய்யவில்லை. அதியமான் போர்வன்மையை உள்ளவாறு அறியவிரும்பினன்; விருமபிய அவன், ஔவையார்க்கு மகிழ்ச்சி உண்டாகுமாறு, அவரைப் போற்றிப் புகழ்ந்தால், ஒருவேளை அவர், தனக்கு ஆவன கூறுவார் என எண்ணினனேயாதோ? ஔவையாரை, அவர்க்கு அழகு செய்யும் அணிகளின் சிறப்பு, அவர் தம பெண்மை நலப பண்பு, மைதீட்டிய அவர் கண்கள், அறிவொளி வீசும நுதல் ஆகியவற்றின் பெருமை கூறிப் பாராட்டினன்; பின்னர், "அம்மையே! இவ்வளவும் கூறினையே, உங்கள் நாட்டிற்கான போரில் பெரும்பங்கு கொள்வார் யார்? உங்கள் நாட்டுப்படை, கைக்கூலி பெற்றுக் கடமைக்குப் போரிடும கூலிப்படையா? அன்றி, உங்கள் நாட்டு வீரர், போரை விருமபி மேற்கொள்கின்றனரா? எவ்வளவு துன்பம வருவதாயினும் தாங்கிக் கொண்டு எவ்வளவு பெரும் படையையும தாக்கும் உறுதியான உள்ளம் அவர்க்கு உண்டா? அல்லது, பகைவர் படை பாய்ந்து தாக்கிய உடனே, பினவாங்கிவிடுவரா? யாது நும வீரர் இயல்பு? உம அரசன், போர்க்கள நிகழ்ச்சியைப் படைவீராபால் ஒப்படைத்து ஓய்வுகொள்ளும் இயல்புடையனு? அல்லது அவனே நேரிற் போரிற்கலந்து கொள்ளும் பெரு வீரனு?" எனக் கேள்வி பல கேட்கலாயினன்.

இவ்வாறு கேட்ட அவவரசன் செயல், ஔவையார்க்கு நகைப்பை அளித்தது; அவ்வரசன் அறியாமை கண அவர்க்கு அவன்பால் இரக்கமும தோன்றிற்று; நாம அவ்வளவு கூறியும், பகைவர் படைவலியை அறிந்துகொள்ளும் பக்குவமற்றவனுய் உளனே! இவனும் ஓர் அரசனு? இவனுக்கும ஒரு படையா? இவனுக்கேன் இப்பெருமபடை? என்ற எண்ணம் தோன்றிற்று; அவ்வெள்ளற் பொருள் தோன்ற அவனைப் "பொருபடை வேந்தே" என வேடிக்கையாக விளித்துக் கூறத் தொடங்கினர.

"பாம்பைக் கோல்கொண்டு தாக்கினல், அடங்கிவிடாது அப் பாம்பு; அடிக்கும் அக்கோலுக்கு அஞ்சாது,

அடிக்கத் தாழ்த்திய கோல், உயரே எழுவதற்கு முன்பே, தான் விரைந்தெழுந்து, அடித்தாரைக் கடிக்கவே முயலும்; அதைபபோல், பகைவர் படைக்கலம் கண்டு பயந்து பதுங் காது, பாம்பெனபபாய்ந்து தாக்கும் பண்புடைப் பெரு வீரர்களே எங்கள்நாட்டுப போவீர்; 'ஆற்றல் மிக்க பெரும்படை நமக்குளது; ஆகவே, போர்க்களம் போக வேண்டிய தொல்லை நமக்கின்று' என அரண்மனையகத்தே அடங்கிக் கிடக்கும் இயல்புடையான் அல்லன் அரசனும்; போர் என்றவுடனே பூரிக்கும் தோள் உடையான் எங்கள் அரசன்; அவன் போர் வெறிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருகிறேன் கேள்! ஊர் நடுவே அமைந்த மன்றில் உயரத்தே தொங்கவிடப்பட்டிருந்தது எங்கள் நாட்டுப் போர்ப்பறை; ஒருநாள், பெருங்காற்று அடித்ததால், அம் முழவு அப்படி யும, இப்படியுமாக ஆடத்தொடங்கிற்று; அவ்வாறு ஆடியபொழுது, யாதோ ஒன்று, அம முழவின் கண் ணிடத்தே பட்டுவிட்டது; உடனே எழுந்தது ஒரு பேரொலி; அவ்வொலியைக் கேட்டாரே இல்லையோ, 'அதோ போர்ப்பறை ஒலித்துவிட்டது; போர் மூண்டு விட்டது; போர்க்களம் நோக்கிப் புறப்பட்டுவிட்டேன்' எனக் கூறிக்கொண்டே புறப்பட்டுவிட்டான்.

"அவ்வளவு போர் வேட்கையுடையான்; ஆகவே, எங்கள் நாட்டு அரசனும் ஆண்மையாளன்; வீரரும் போர் விருப்புடையார்; படைகலங்களோ, பல போர்கண்டு பழகியவை; அத்தகையானெடு எதிர்த்துப் பகை கொள் ளின், யாது நேரும் என்பதைச் சற்று எண்ணிப் பார்ப்பா யாக," எனப் பக்குவமாக, ஆனால், பயன்விளையும் வகையில், எடுத்துக் கூறித் தம் கடமையைத் திறமையாக முடித்து மீண்டார் ஔவையார்; இவ்வளவு பொருளும் பொதிய அவர் பாடிய பாடல்கள் புறநானூற்றிலே காணப்படு கின்றன; அவை இதோ:

"இவளே, பீலி அணிந்து மாலைசூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,
கடியுடை வியன் நகரவளே; அவளே,

பகைவாக குத்திக், கோடுறுதி சிதைந்து,
கொற்றுறைக குற்றில மாதோ? என்றும்,
உண்டாயின், பதம் கொடுத்து,
இல்லாயின், உடன் உண்ணும்,
இல்லோரா ஒக்கல் தலைவன,
அண்ணல், எம் கோமான், வைந்நுதி வேலே.”

(புறம் : கூ)

“இழையணிப் பொலிந்த, ஏந்து கோட்டடல்குல்,
மடவரல், உண்கண், வாள்நுதல், விறலி!
‘பொருநரும் உளரோ, நும் அகன்தலை நாட்டு?’ என
வினவல ஆனாப் பொருபடை வேந்தே!
எறிகோல் அஞ்சா, அரவின் அன்ன,
சிறுவன் மள்ளரும் உளரே : அதா உன்று,
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை,
வளிபொரு தெணகண் கேட்பின்,
‘அதுபோர்’ என்னும் என்னையும் உளனே.”

(புறம் · அக)

ரு. ஔவையாரைப் பற்றிய கதைகள்

உலகோர் போற்றும உயர்பேரறிவும், புலமையும செறிந்த அரும்பெரும்பாடல்களை ஆக்கும் ஆற்றலைப் புலவர்கள், பலநூல்களைப் பல்லாண்டு, பலகால், பலரோடு பயினறே பெற்றனராகவும், அவ்வருமையை மனதிற் கொள்ளாது, "ஆண்டவன் அருள் பெற்றவர் அவர்; ஆகவேதான் அவரால் அப்படி அழகாகப பாடமுடிகிறது; காளி கருணைசெய்தாள்; ஆகவேதான், கன்னித்தமிழில் அவரால் கவிமழை பொழிய முடிகிறது; அவர் தெய்வப் புலவர்; ஆகவேதான், திகதிக்கும் நடையில் செநதமிழ்ப் பாக்களைப் பாடினர்," என்று கூறி, அப் புலவர்தம் புல மைக்கு மாசுதேடுவதை வழக்கமாகக் கொண்டு விட்டனர் இடைக்காலத்தார் சிலர். அப்புலவர்களைத் தெய்வத் தன்மை பொருந்தியவராகவோ, தெய்வ அருள்பெற்றவ ராகவோ கருதிய அவர்கள், அதற்கேற்றவாறு, அப புலவர் கள் வரலாற்றோடு அற்புத நிகழ்ச்சிகள் சிலவற்றைத் தொடர்புபடுத்தவும் தொடங்கிவிடடனர; இநத இடர்ப் பாட்டினின்று ஔவையாரும் மீண்டவர அல்லர்; ஔவை யார் பிறப்புக் குறித்தும, அவர்தம் வரலாறு குறித்தும் வழங்கும், அவ்விடைக்காலத்தார் கற்பிதத கதைகள் சில வற்றை இனிக் காண்போம.

(1) பிறப்பு:

ஔவையார் பிறப்புக் குறித்துக்கூறும் நூல்கள், திருவள்ளுவர் கதை, கபிலரகவல, நாலுமிர்தம், புலவர் புரா ணம, விநோதரச மஞ்சரி, பன்னிருபுலவர் சரித்திரம் முதலா யின ஆகும.

(க) திருவள்ளுவர் கதை: ஆதிகாலத்தில் பாண்டி நாட்டு மதுரையில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்து வாழ்ந்த புலவர்கள், தம் கல்விச்செருக்கால் சிவபெருமானை மதியாது இகழ்ந்தனர். அவ்விகழ்ச்சியைப் பொறுக்க மாட்டாச் சிவன், அப்புலவர்தம் செருக்கை அடக்குவதற்

காகவே, நான்முகனைத் திருவள்ளுவராகவும், திருமாலை, இடைக்காடராகவும், கலைமகளை ஔவையாராகவும் உலகில் திருவவதாரம் செய்ய அருளுள்ளம கொண்டார்.

நான்முகன் செய்த வேள்வியொன்றில், குறுமுனிவராகிய அகத்தியர் தோன்றினர்; அவர் கடற்கன்னியொருத்தியை மணந்து, பெருஞ்சாகரன் என்ற மகனைப் பெற்றார்; அப் பெருஞ்சாகரன் திருவாரூர்ப் புலைச்சி ஒருத்தியை மணந்து பகவன என்பானை என்று, கலைபல கற்பித்து வளாத்து வருதார்; இது நிற்க. பிரம்ம வம்சத்தில் வந்த தவமுனி என்பவரொருவர் அருண்மங்கை என்ற அம்மையாரொருவரை மணந்து, பெண்மகவு ஒன்றைப் பெற்றுப் பெற்ற இடததிலேயே விட்டு விட்டுத் தவஞானம் மேற்கொண்டு விராலிமலை நோக்கிச் சென்றுவிட்டனர், அப் பெண்குழந்தையை, உறையூர்ச் சேரியில் வாழ் பெரும் பறையன் என்பான் கண்டெடுத்துப் பேணிவளர்த்து வருவாளாயினன்; அப்போது எதிர்பாராமல், அங்குத் தோன்றிய மண்மாரியால், அப் பெண்குழந்தை ஒன்று நீங்க, அச் சேரி முற்றுமம அழிந்து போயிற்று; அப் பெண மட்டும் எவ்வாறோ பிழைத்து அவ்வூரையடுத்த மேலூர் அகரத்தில் வாழும் நீதியையன் என்பான் வீட்டில் வளர்ந்து வருவாளாயினள்.

இந்நிலையில், எல்லாக் கலைகளையும் கற்றுத்துறைபோய பண்டிதராய்க் கங்கைநீராடக் காசிநோக்கிச் செல்லும் பகவன், இடைவழியில், அம் மேலூர் அகரம்வந்து, ஆங்கே யுள்ள அறச்சாலை யொன்றில் தங்கி, ஒருநாள் இருந்து போக எண்ணினன். ஆங்கே, அவன் நாட்கடன் முடித்து, உணவிற்கு ஆவன ஆக்கிக் கொண்டிருக்குங்கால், அவ் வறச்சாலையின் காப்பாளரான, அந நீதியையனின் வளர்ப்புப் பெண்ணாகிய அப் பெண் ஆங்கேவந்தாள்; பகவன், அவளைக்கண்டு, சினங்கொண்டு "யார் நீ? புலைச்சியோ, வலைச்சியோ? ஏன் இங்கு வந்தாய்?" என்று அதட்டித் தன்கையிற் பிடித்திருந்த சட்டுவத்தால் அவள் தலையில் இரத்தம் பெருக அடித்துத் துரத்திவிட்டான்.

ஆண்டுகள் சில கழிந்தன; காசிசென்ற பகவன், கங்கைநீர் கையிற்கொண்டு மீண்டு வரும்போது, அதே அறச்சாலையில் தங்க, விதி கடைக் கூட்டிற்று; அப்போது இளமை அளித்த ஈடிலா அழகோடு விளங்கும் அதேபெண், அங்குவர, பகவன், அவளைக்கண்டு காதல்கொண்டு கருத் திழந்து நிற்பாளையினன். அவனை, அந்நிலைக்கண் கண்ட நீதியையன், பகவனை அடுத்து, "ஐய! அவள் என்பெண்; விரும்பினால் மணம் முடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினர்; அவனும் இசைந்தனன்; திருமணம் இனிது நடந்தது; திருமணத்தன்று ஐந்தாம் நாள் நிகழ்ந்த எண் ணெய் நீராட்டின்கண், அவள் தலையில் சட்டுவத்தால் ஏற் பட்ட வடு இருப்பதுகண்டு, அவள் வரலாறு கேட்டறிந்து, தன் கையால் அடியுண்ட ஆதியாள் (அப் பழைய பெண்) அவள் என்பதறிந்து, அவளோடு வாழமறுத்து வெளி யேறிச் செல்லலாயினன்; அன்றுமுதல் அப் பெண்ணிற்கும் ஆதி என்பதே பெயராயிற்று.

அவன், தன்னை வெறுத்துச் செல்லுகிறான் எனினும் அவள் அவனைவிடாது பின்பற்றிச் செல்லத் தொடங் கினள்; ஏதுகூறியும் விடாது பின்தொடரும் அவளை, இடைவழியில் மறுத்து, "பெண்ணே! நான் எவ்வளவு கூறியும் நீ நிற்க மறுக்கிறாய்: உனககு உண்மையில் என் பால் அன்பிருக்குமாயின், நான் கூறியவாறு கேட்டல் வேண்டும்; அஃதாவது, உனக்குக் குழந்தைகள் பிறக்கு மாயின், அவற்றைப் பிறந்த இடத்திலேயே விட்டுப் பின் தொடர்ந்து வருதல் வேண்டும; இதற்கு இசைவையாயின், நின்னையான் ஏற்றுக்கொள்வேன்" என்றனன்; அவளும் அதற்கு இசைந்து அவனுடன் சென்றாள்; இடையில் பாணர் சேரியில் ஒருநாள் இரவு தங்கினர்; அங்கே அவள் வயிற்றில், அரன் கட்டளைப்படி, கலைமகள், ஔவையாராக வந்து பிறந்தாள்; கணவன் கட்டளைக்குப் பணிந்து, குழந்தைகளை விட்டுப்பிரியும் அவள், குழந்தையின் எதிர் காலம் நோக்கி எண்ணி இரங்கி ஏங்குவாளாயினள்; தாயின் துயர்நிலைகண்ட அக் குழந்தை,

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானே?—முட்டமுட்டப்
பஞ்சமே ஆனலும், பாரம் அவனுககு; அன்னைய்
நெஞ்சமே அஞ்சாதே நீ"

என்று பாடி அவள் கவலையைப் போக்கிற்று; அப் பாட லைக் கேட்ட ஆதியும் அகம் மகிழ்ந்து, மனந்துணிந்து அக் குழந்தையை விட்டுச்சென்றனள்; இவ்வாறே, ஔவையா ருக்கு இளையோராக, உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, வள்ளுவர் ஆகியோர் பிறந்தனர்; அக் குழந்தை களையும், அவர்கள், அபபடி அப்படியே விட்டுச் சென்ற னர்; அக் குழந்தைகளும், ஒவ்வையாரைப்போன்றே, ஒவ்வொரு பாடல் பாடிப், பெற்றுள் மனத்துயர் களைந்து மகிழச்செய்தன.

(உ) கபிலராகவல்: அருந்தவ மாமுனியாம் பகவற்குக் கருவூர்ப் புலைச்சியாகிய ஆதிவயிற்றில் கபிலர்முதலா எழுவர் மக்கள் பிறந்தனர்; அவருள் ஆண்பால் மூவர், பெண் பால் நால்வர்; அவருள் ஔவையார் பாணர் அகத்தில் வளாந்தனர்.

(ஊ) ஞாலமித்தம்: யாளிதகதன் என்னும் முனிவன், தன்னுல் வெட்டுண்டு, கிணற்றில் தள்ளப்பட்ட ஆதப் புலைச்சி யென்னும் அறிவில்லாத சண்டாளப் பெண்ணை, ஒரு பிராமணன் எடுத்துக்கொண்டுபோய் உத்தரபூமியிலே வளர்த்துப் பின்பு தனக்கே மணம் செய்துகொடுக்கக் கொண்டு, கபிலர் முதலாக ஏழு மக்களைப் பெற்றான்.

(எ) புலவர் புராணம்: நான்முகன் அம்சமான பகவன் என்னும் அந்தணனும், கலைமகள் அம்சமான ஆதி என்ப வளும், ஒவ்வோரிடத்தில், ஒவ்வோர் குழவியாக ஏழு குழவிகளைப் பயந்தனர்; அக் குழவிகளுள் முதற்குழ வியே ஔவையார்; ஔவையைப்போல் பண்படைந்தவர் பிறரில்லை; வள்ளுவர், கபிலர், சேரமான் என்னும் மூவ ரும், தம் புலமை உலகில் விளங்கி நிற்குமாறு செய்தனர்; மற்றைப் பெண்கள் மூவரும் தம் இயல்பினை வெளிக் காட்டாதிருந்து விட்டனர்.

(ரு) **விநோதரச மஞ்சரி :** ஔவையார், மதுரையில் கடைச்சங்கமிருந்த காலத்தில் உறையூர் என்னும் பட்டணத்தின் ஒரு சாவடியில் ஆதி என்பவளுக்கும், பகவன் என்னும் அந்தணனுக்கும் ஜேஷ்ட புத்திரியாகப் பிறந்தனர்.

(சு) **பன்னிரு புலவர் சரித்திரம் :** வேதமொழி என்பாருக்குப் பேராளி என்று ஒரு மகன் பிறந்தான்; அம் மகனுக்குப் பன்னிரண்டாம யாண்டு நிகழ்கையில், அவ்வூரில் வாழ் ஓர் இழிகுலத்தானுக்குப் பெண் மகவொன்று பிறந்தது; அப பெண் பிறந்தமையால், ஊர்க்கு அழிவுண்டாம் எனக்கொண்டு ஊரார் அப் பெண்ணைக் கொல்லத் துணிந்தனர்; ஆனல், வேதமொழியார், அப் பெண்ணை, ஒரு பேழையுள் வைத்துக் காவிரியில் விடுத்தார்; ஆற்றில் வந்த அப் பெண்ணை, அந்தணன் ஒருவன் எடுத்து வளர்த்தான்; சில ஆண்டு கழித்து, தீர்த்த யாததிரை குறித்து அங்குவந்த பேராளியார், அப்பெண்ணை மணம் செய்து கொண்டார்; மணம முடிந்த பின்னர், அவள் தன் தந்தையால் ஆற்றில் விடப்பட்ட இழிகுலப் பெண்ணே என்பதறிந்து அவளை விட்டுப் பிரிந்துபோயினர் பேராளியார்; அப் பெண் தன்னைக் காத்துவந்த அந்தணன் விட்டுச் சென்ற பெரும் பொருளோடு காசி சென்று, ஆங்கே அறச்சாலை யொன்று அமைத்து, ஆங்கு வருவோாக்கு அன்னமிட்டு, அவர்பால் தன் வரலாறு கூறி அழுது வருவாளாயினள்; ஒருநாள், பேராளியார் அங்குவர, அவள் அவர்க்கும அன்னமிட்டு, வழக்கமபோல் தன் வரலாறு கூறி அழுதாள்; அந் நிலையில், அவர், அவள் நற்குணம் கண்டு, அன்று முதல் அவளோடு வாழத் தொடங்கினர்; பின்னர் அவர்களுக்குப பிறந்த மக்கள் எழுவரில் ஔவையாரும் ஒருவர்.

ஔவையார், பிறந்த முறைகுறித்தும், அவர் பெற்றோர் குறித்தும் வழங்கும் கதைகள் இவை.

(2) ஔவையாரும் விநாயகரும் :

ஔவையார், நாள்தோறும் காலையில் எழுந்ததும், கடவுளரில் முதல்வராகக் கருதப்படும் விநாயகரை வழி

பாடு செய்தல் வழக்கம். ஒரு நாள், தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி அடிகளாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் சிவபிரான் திருமுன், சேரமான் பெருமானர் இயற்றிய பொன்வண்ணத் தந்தாதியையும், ஆதியுலாவையும் அரங்கேற்றம் செய்ய கைலைமலை நோக்கிச் செல்லத் தொடங்கினர்; செல்லத் தொடங்கிய அவர்கள், "நாங்கள் கைலை செல்கிறோம்; தாங்களும் உடன் வருகின்றீர்களா?" என ஔவையாரையும் அழைத்தனர்; அவர்கள் அழைத்தபோது, ஔவையார் விநாயகரை வழிபட்டுக் கொண்டிருந்தனர்; அவர்களுடன் கைலை சென்று அங்கு நிகழ இருக்கும் அரங்கேற்றத்தைக் காண வேண்டும் என்ற பெருவிருப்பால், விநாயகர் வழிபாட்டை விரைந்து செய்யத் தொடங்கினர்; ஔவையார்தம் விரைவுகண்ட விநாயகர், அவரை நோக்கி, "ஔவையே! வழக்கம்போல் விரைவின்றி வழிபாடு செய்க; அவர்க்கு முன் நின்னை அங்கே சேர்க்கின்றேன்" என்றனர். அது கேட்ட ஔவையார், நள்தோறும் நடத்துவதேபோன்று, "சீதக் களபச் செந்தாமரைப்பூம" எனத் தொடங்கும் அகவற்பா பாடி அவரை வழிபட்டு நின்றனர். அந் நிலைக்கண், அவ் யானை முகக்கடவுள், ஔவையாரைத் தம் துதிக்கையால் தூக்கிக் கைலையில் ஆண்டவன் திருமுன் விட்டனர்; அவர் அங்குச் சேர்ந்து சின்னேரம் கழிந்த பின்னரே, சுந்தரரும் சேரவேந்தனும் அவண் வந்து சேர்ந்தனர்; தங்களுக்கு முன் ஔவையார் அங்கே வந்திருப்பது காண அவர்கட்கு ஒன்றுமே தோன்றவில்லை; தாங்கள் வரும்போது, வழிபாடு மேற்கொண்டிருந்த அவர், தங்களுக்கு முன் அங்கு வந்து சேர்ந்தது எவ்வாறு என்பதறியத் துடித்தனர்; அவர்கள் துடிப்பும் வியப்பும் கண்ட ஔவையார், அவர்களை அணுகி, நிகழ்ந்தது கூறி,

"மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லாக்கு அரிதோ? முகில்போல் முழங்கி,
அதிர வருகின்ற யானையும், தேரும் அதன்பின் சென்ற
குதிரையும் காதம்; கிழவியும் காதம்; குல மன்னனே!"

என்ற பாட்டையும் பாடினர்.

(3) ஔவையாரும் முருகனும்:

ஒரு நாள் ஔவையார், தாம் செல்லக் கருதிய ஓர் ஊருக்குச் செல்பவர், காடொன்றைக் கடந்து செல்ல வேண்டியதாயிற்று; அப்போது முருகன், ஔவையாரின் அறிவுத் திறன் கண்டு அக மகிழ எண்ணினன்; உடனே அவன் எருமைக்கன்று மேய்க்கும் இடையர்குலச் சிறுவன் போல் உருவெடுத்து, ஔவையார் வரும் வழிக்கண் உள்ள, நாவல்மரத்தின் நிழலில் மாடுகளை மேயவிட்டு, மரமேறிக் கனி பறிப்பான்போல் அமர்ந்திருந்தான்; கோடை வெயில் கொளுத்தும் அக் காட்டு வழியில், ஆண்டு முதிர்ச்சியால், நடை மெலிந்து களைத்து வந்த ஔவையார், அந் நாவல் மரத்தையும், மரத்தில் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கும் கருநாவற் கனிகளையும், அக் கனிகளைப் பறித்து உண்ணும் சிறுவனையும் கண்டார்; நாவறட்சி, நாவற் கனியைக் கண்டதும் மிகுதியாயிற்று; அச் சிறுவனை அன்புடன் அழைத்துச் சில கனிகளைப் பறித்துப் போடு மாறு வேண்டினர்; உடனே, அச் சிறுவன், "பாட்டி! இங்கே இரண்டு வகைப் பழங்கள் உள்ளன; ஒன்று சுடும்; மற்றொன்று சுடாது; அவற்றுள் உனக்கு எது வேண்டும் சொல்," எனக் கேட்டனன்; ஔவையார்க்கு அவன் கேள்வி வியப்பை அளித்தது; நாவற்கனியில் சுடுபழம், சுடாப்பழம் என இருவகையிருப்பதாக, அவர் அன்றுவரை அறிந்தவரல்லர்; ஆண்டிலும், உலக அனுபவத்திலும் முதிர்ந்த தனக்குத் தெரியாத ஒன்றை, அச் சிறுவன் அறிந்திருப்பது காண ஔவையார்க்கு நாணம் மிகுந்தது; அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, அப் பையனை நோக்கி, "அப்பா! கொளுத்தும் வெயிலின் கொடுமையை என்னால் தாங்க இயலவில்லை; இதற்கு மேல் சுடுபழம் உண்பது கூடாது; சுடாப்பழமாயின் நாவறட்சியையும் தணிக்கும்; ஆதலின், சுடாப்பழமாகவே பறித்துப் போடு," என்றனர். உடனே சிறுவன் நன்கு கனிந்த கனிகள் சிலவற்றைப் பறித்து ஔவையா முன்னே மணலில் வீசினன்; பழங்கள் நன்கு பழுத்திருந்ததால், மணல் மீது விழுந்த உடனே,

அப் பழங்கள் சிறிது நசுங்க, அவ்விடத்தே மணல் சிறிது ஒட்டிக் கொண்டது; அப் பழங்களைக் கையில் எடுத்த ஔவையார், அப் பழத்தில் படிந்து கிடக்கும் மணலைப் போக்க, எல்லோரும் செய்வதேபோல், வாயால் ஊதினார்; உடனே சிறுவன், "பாட்டி! நீ கேட்டது சுடாப்பழமன்றோ? நான் சுடும்பழம் போட்டுவிட்டேன்போல் இருக்கிறதே! பழம் மிகவும் சுடுகிறதோ? ஊதிஊதித் தின்கிறாயே!" என்று நகைத்துக் கேட்டனன்; உடனே ஔவையார்க்கு, அச் சிறுவன் கூறிய சுடுபழம், சுடாப்பழம் யாவை? என்பது புலனுயிற்று; அரும்பெரும் புலவராலும் பாராட்டப் பெறும் அறிவிலே சிறந்த தன்னை, ஆடு மாடு மேய்க்கும் அறியாச் சிறுவன் ஒருவன், அறிவுப் போட்டியில் வென்று விட்டானே என்று வெட்கி, வேதனைப்பட்டுக்,

"கருங்காலிக கட்டைக்கு நாணைக் கோடாலி,
இருங்கதலித் தண்டுக்கு நாணும்—பெருங்கானில்,
கார் எருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்றது,
ஈரிரவும் துஞ்சாது என்கண்."

என்ற செய்யுளைப் பாடினர்; வீணை அவர்க்கு வேதனை தந்தோம்; விளையாடியது போதும் என்று எண்ணிய முருகன், ஔவையார் முன் தோன்றித், தான் இன்னன் என்பதறிவித்து மகிழ்வித்தான்; பின்னர்க் 'கொடியது யாது? இனியது யாது? பெரியது யாது? அரியது யாது? என்று கேட்ட அம் முருகன் ஐய வினாக்களுக்கு விடையாக, அழகிய கருத்து நிறைந்த ஆசிரியப் பாக்கள் நான்கு பாடினர் ஔவையார்.

(4) ஔவையாரும் பாரிமகளிரும்:

"கொடுக்கிலாதானைப் பாரியே எனக் கூறினும் கொடுப்பாரிலை," எனச் சுந்தரரால், கொடை வள்ளல்களிற் சிறந்தோன் எனச் சிறப்பிக்கப்பெற்ற பாரி, பறம்பு மலைக்கும், அதைச் சூழ உள்ள முந்நூறு ஊர்களைக் கொண்ட

பறம்பு நாட்டிற்கும் உரியோனுவன்; குறுநில மன்னனுகிய அவன், புகழ் பெருக வாழ்தல், பேராசர்களாகிய தங்கள் பெருமைக்கு ஏற்றதன்று என்று எண்ணிய தமிழ் மூவேந் தர் எப்படியோ அவனை அழித்துவிட்டனர்; அவன் இறந்த பின்னர், அவன் உயிர் நண்பராகிய கபிலர், அவன் மகளிர் இருவரையும் உடன் அழைத்துக் கொண்டு விச்சிக் கோன், இருங்கோவேள் என்ற இரு குறுநில மன்னர்பால் சென்று "மணம் செய்து கொள்ளுங்கள் இம் மகளிரை," என மன்றுடியும், பாரிக்கும், மூவேந்தர்க்கும் உண்டாய பகை கண்டு அஞ்சி, அவர்கள் மறுப்பது கண்டு, மனம் மிக நொந்து, மகளிர் இருவரையும் தமக்கினிய பார்ப்பார் சிலர் பால் ஒப்படைத்துப் பாரியின பிரிவாற்றுது வடக்கிருந்து உயிர் விட்டார்.

பார்ப்பார் இல்லத்தில், அவ்விள மங்கையர் வாழ்ந் திருந்தகாலை, ஒரு நாள், பெருமழை பெய்து கொண்டிருக் கையில், ஔவையார் முழுதும் நனைந்த மேனியராய் அவ் வில்லுள் நுழைந்தனர்; வந்தவர் ஔவையார் என்பதை உணர்ந்த அம் மகளிர், ஔவையாரை அணுகி, நனைந்த அவர் ஆடையை அகற்றினர்; உடுத்துக் கொள்ள அவர்க்கு வேறு ஆடை இன்மை அறிந்து, தங்கள் நீலச் சிற்றுடை கொடுத்து நடுங்கும் அவர் குளிர் போக்கினர்; கொல்லையில் கொழுந்துவிட்டு வளர்ந்திருக்கும் கீரையைப் பறித்துக் கொணர்ந்து, சுவைபடச் சமைத்துச் சூடுடன் அளித்து, ஔவையார் பசியையும் போக்கி, அவர் உடற்கும், உள்ளத் திற்கும் ஊக்கம் ஊட்டினர்;

"இன்னது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு." (திருக்குறள் : உஉச)

என்ற குறள் உரையைப் போற்றுது, வந்தவர் இன்முகம் காணும் வரை பொருள்களை வாரிவழங்குவதே வாழ்வின் பயன் எனக் கருதியதாலேயே அவர்கள் தந்தை உயிர் துறந்தான்; அவர்கள் அதை அறிந்திருந்தார்கள்; அறிந் திருந்தும்,

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்று, அவன்
மைந்தர், தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீ!
நின்று, பயன் உதவி, நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி." (நன்னெறி : கள)

என்பதைப்போல், தந்தையை இழந்து, தனித்துயர் உற்றுத் தவிக்கும் அந்நிலையிலும், தமக்கு ஆடையும் உணவும் அளித்துப் பேணிய அவ் விளமகளிர் செயல், ஔவையார் உள்ளத்தில் அளவிலா மகிழ்ச்சியை உண்டாக்கிற்று ; அது, ஔவையார் வாழ்க்கையில் நிகழ்ந்த மூன்று பெரும் நிகழ்ச்சிகளை நினைவூட்டச் செய்தது.

பாரிபால் பரிசில்பெறச் சென்றார் ஔவையார்; ஔவையார் தம் அருமை பெருமை அறிந்த அவ் வள்ளற் பெருந்தகை, அவரோடு நெடுநாள் இருந்து பழக விரும்பினன்; அதனால், அவர்க்கு வேண்டும் பரிசிற்பொருளை, உடனே அளிக்காது நீட்டிப்பானுயினன்; ஓரிடத்தே இருந்து வாழ்வதினும், வேந்தர் பலர் அவைக்குச் சென்று பாடி வாழ்வதையே புலவர் விரும்புவர்; ஔவையாரும் அந்நோக்குடையவரேயாதலின், பாரியைப் பிரிந்து, வேறிடம் செல்ல விரும்பும் தம் எண்ணத்தைக் குறிப்பால் வெளியிட்டனர்; வாய்திறந்து கேட்ட பின்னரும் வழங்குவன வழங்காது வாழ்வது வள்ளல் தன்மைக்கு இழுக்காம் என எண்ணினான்; அவர்க்கு வேண்டும் பொன்னும பொருளும் கொடுத்து வழிவிட்டான்; என்றாலும், அவர் பிரிவுத் துயர் அவனால் பொறுக்க இயலாதாயிற்று; அவருடன் மேலும் சில நாட்களாவது இருந்து மகிழாதுபோயின், மனம் அமைதிகொள்ளாது என்பதை உணர்ந்தான்; உணர்ந்து யாதுபயன்? அவரோ போய்விட்டார்; இருந்தாலும், அவ்வாசையை அடக்க அவனால் இயலவில்லை; ஏதேதோ எண்ணி இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தான்; தன் ஆட்கள் சிலரை அழைத்தான். "பொன்னும் பொருளும் நிறையக்கொண்டு ஔவையார் செல்கிறார்; நீங்கள் வழிப்பறியாளர்போல் சென்று அவர்க்கு ஒரு கேடும் செய்யாது, அவர் கைப்பொருளைக் கவர்ந்து வருதல் வேண்டும்;

உங்களை ஏவியோன் நான் என்பதும், அவர்க்குத் தெரிதல் கூடாது,'' என எச்சரித்து அனுப்பினன்; அவர்களும் அவ்வாறே செய்து முடித்தனர்; காட்டு வழியில் கைப் பொருள் இழந்த ஔவையார், பாரிபால் சென்று நடந்தன கூறி மீண்டும் பரிசில் பெற்றுச் செல்லலாம் என எண்ணி, அவன்பால் மீண்டும் வந்து நிகழ்ந்தன கூறி நனிவருந்தினர்; பாரி, அவர் துயர்க்கு வருந்துவான்போல் காட்டிக் கொண்டு அவர் மீண்டதுகண்டு அகத்தே மகிழ்ந்து, அவரை மேலும் சிலநாள் தன் அரசவையில் இருத்தி மகிழ்ந்து, பின்னர் அவர்க்கு வேண்டுவன அளித்து வழி அனுப்பினன். இஃது ஒரு நிகழ்ச்சி.

பெண்ணையாறு பாயும் திருமுனைப்பாடி நாட்டைத் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த வன் மலையமான் திருமுடிக்காரி என்பவன்; போரில் போராற்றல் வாய்ந்த பெருந்தகை; தமக்குத் துணையாக இவனைப் பெறுவதில், மூவேந்தரும் போட்டியிடுவர்; இவன் யார்க்குப் படைத்துணை அளிக்கின்றானே அவரே வெற்றி பெறுவர்; அத்தகைய ஆண்மையாளன்; மேலும் பெருங் கொடைவள்ளல்; புலவர் பலர் புகழ வாழ்ந்தவன்; அவனைப் பாடி அவன்பால் பரிசில் பெறச் சென்றிருந்தார் ஔவை யார். அவனும், பாரியைப்போன்றே அவரை எளிதில் விட்டுப் பிரிய விரும்பாது, பரிசில்கொடாது நீட்டித்தான்; ஔவையாருக்கோ வேறிடம செல்ல விழைவு; ஒருநாள் காரி, அவன் கொல்லையில் பயிர்களுக்கிடையே தோன்றிய களைகளைக் கொத்திப் போக்கிக் கொண்டிருந்தான்; தன் விருப்பத்தை அறிவித்து விடைபெறவேண்டி அவ்விடம் சென்றார் ஔவையார்; அவர் அங்கு வந்ததன் காரணத் தைக் குறிப்பால் அறிந்த அவன், ஔவையாரை நோக்கிப் ''புலவர்ப்பெருந்தகையீர்! நிலமோ அளவிற் பெரிது; களையோ கணக்கின்றி முளைத்துள்ளன; போக்கும் ஆட்கள் கிடைப்பதோ அரிதாக உளது; ஆகவேதான், நானும் இத் தொழிலை மேற்கொண்டேன்; தாங்களும் தங்களால் இயன்ற அளவு சற்றுத் துணைபுரியின் நலம்,'' எனக் கூறிக்

கொண்டே அவர் கையிலும் கரியைப் போக்கும் கருவியொன்றைக் கொடுத்தனன்; அவன் வேண்டுகோளை மறுக்க மாட்டாத ஔவையாரும் அவன் அளித்த பணியை ஏற்றுக்கொண்டு அவனுக்குத் துணைபுரிந்தனர்; பின்னர் நாள்பல கழித்து அவன் அளித்த பரிசில்பெற்று மீண்டார்; மற்றொரு நிகழ்ச்சி இது.

சேர வேந்தன் அவையில் சிறப்புடன் வாழ்ந்திருந்தார் ஔவையார்; அப்போது, அங்குப் பெரியதோர் விருந்தொன்று நடைபெற இருந்தது; விருந்துண்ணப் பலரும் வந்து, தமக்கென அளிக்கப்பட்டிருந்த இடங்களில் அமர்ந்துவிட்டனர்; அவர்களுள் ஒருவராய் ஔவையாரும் அமர்ந்திருந்தார்; அது சேரமானுக்குப் பிடிக்கவில்லை; ஔவையாரைத்தன்னோடு இருத்திக் கலந்துண்ண விருப்பம் என்றாலும் அமர்ந்தவரை எழுப்புவது நன்றன்று; எழுப்புவதாயின் யாது கூறி எழுப்புவது என எண்ணிக் கொண்டிருந்தான்; அந்நிலையில், சிறந்த விருந்தினர் ஒருவர் வந்து சேர்ந்தார்; ஆனால் அவர் இருக்க இடம் இல்லை; அவர்க்கு இடம் அளிக்க வேறு யாரையும் அழைத்தல் கூடாது; இடம் ஒழித்துத் தருமாறு உரிமையோடு அழைக்கக்கூடியவர் ஔவையார் ஒருவரே என்பதை உணர்ந்தான்; அதனால், வந்தவர்க்கும் இடம் கிடைக்கும்; தன் ஆசையும் நிறைவேறுமே; ஆகவே, அவரை விளித்து "ஔவையே! வாராய்; பின்னர் நாம் இருவரும் ஒருங்கிருந்து உண்ணலாம," என உரிமையோடு அழைத்தான்; அவரும் எழுந்து, வந்தோர்க்கு இடம் அளித்துப் பின்னர்ச் சேரனோடு இருந்து உண்டு மகிழ்ந்தனர்; இது அவர் வாழ்வில் நிகழ்ந்த வேறொரு நிகழ்ச்சி.

இம் மூன்று நிகழ்ச்சிகளையும், தம்மனக்கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தி, அவற்றோடு, வாழ்வுகெட்ட தம் வறுமை நிலையிலும், அவ்வள மங்கையர், தமக்கு அளித்த நீலச் சிற்றுடைப் பரிசிலை ஒப்பிட்டு நோக்கி, உயர்த்திக் கூறிக் கீழ்வரும் பாக்களைப் பாடிப் பாராட்டினர்.

"வெய்தாய, நறுவியதாய், வேண்டளவும் தின்பதாய்,
நெய்தான் அளாவி, நிறையிட்டுப்—பொய்யே
அடகு என்றுசொல்லி அழுதத்தை யிட்டார்
கடகம் செறியாதோ கைக்கு."

"பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரி அன்று ஈந்த களைக்கொட்டும்—சேரமான்
'வாராய்' என அழைத்த வார்த்தையும்; இம்மூன்றும்,
நீலசிகிற் றூடைக்கு நேர்."

தம்பால் அன்புகாட்டி ஆதரித்த அம் மகளிர் மணப் பருவம் எய்திய மங்கையராதலின், அவர்க்கு மணம் முடித்துவைத்தலே, தம்முடைய தலையாய கடன் என எண்ணினர் ஔவையார்; அம் மகளிர்க்கு மணம செய்து வைக்க முயன்று தோற்றூர் கபிலர் என்பதையும் அவர் அறிவார் ஆதலின், அவர்களை, அவ்வாசர்பால், மீண்டும் அழைத்துச்செல்ல விரும்பவில்லை; பாரிமகளிரை மணந்து கொள்ளத்தக்க பீடும், பெருமையும், அறிவும், ஆற்றலும், ஆண்மையும், அழகும், ஒழுக்கமும், உயர்வும் உடையான் யாவன் என எண்ணிப்பார்த்து, இவ்வளவு உயர் குணங் களும் ஒருங்குடையான், பெண்ணையாறு பாயும் திரு முனைப்பாடி நாட்டுத் திருக்கோவலூர் அரசன், தெய்வீகனே என்பதறிந்து, அவன்பால் அவ்விரு மகளிரையும் அழைத் துச் சென்று மணம் முடித்துக்கொள்ளுமாறு வேண்டினர்; புலவர் வேண்டுவனவற்றைக் குறிப்பான் அறிந்து, அவர் அகமும், முகமும் மலர அள்ளி அள்ளிக் கொடுக்கும அருள் உள்ளத்தனகிய அவனும், ஔவையாரின் வேண்டு கோளை ஏற்க மறுத்தான்; ஔவையார்க்குச் செய்வ தொன்றும் புலப்படவில்லை.

"ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?
பேடியர் அன்றே பெற்றியில் நின்றிடின்?"

(மணிமேகலை: சு-உசு-கூ)

என்று பாராட்டுதற்கேற்ற பேரழகும், சீரிளமையும் வாய்ந்தவர் பாரிமகளிர்; குலத்தால், குணத்தால் குறை யுடையாரல்லர்; அறிவிலும், அன்பிலும் அனைவரினும்

சிறந்தவர்; இவ்வளவும் இருந்தும் இவர்களை மணக்க மன்னர்கள் மறுப்பானேன்? மன்னர்கள் ஒருவேளை, மகளிர் முகத்தையே காண மறுக்குமளவு துறவுள்ளம் கொண்டு விட்டனரோ என்றால், இல்லை; அரசன் ஒருவன்பால் அழகுள்ள மகள் ஒருத்தி உள்ளாள் என அறிந்தால் போதும்; அவள் இசையினும் இசையாவிடினும் அவளை மணந்துகொள்ளத் துடிப்பர்; பெற்றோரும், உற்றோரும் மறுப்பின் பெரும்படைகொண்டு அவர் நாட்டையும், கோட்டையையும் அழித்து, அவளை வலிதிற்பற்றி கொணரு மளவு வெறிபிடித்தவர்கள்தான் அக்கால அரசர்கள்; என்றாலும், அவ்வரசர்கள், அழகிற்சிறந்த ஆரணங்குகள், அவர் அரண்மனைவாயிலில் வந்து காத்துக்கிடப்பினும், அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பானேன்? என்று எண்ணி யெண்ணிப் பார்த்தனர்; ஒன்றும் விளங்கவில்லை; "மறுப்பது ஏன்?" என்று அரசனையே கேட்டனர். தெய்வீகன், "புலவர் பெருந்தகையீர்! இவ்விள மங்கையர் இருவரையும் மணந்துகொள்ள மறுக்கும உள்ளம் எவர்க்கும் எளிதில் உண்டாகாது என்பது உண்மையே; என்றாலும், இவர்களோ பாரியின் மகளிர்; பாரியோ, பேரரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர் பகைவன்; அதனாலேயே, அவனை அழித்தும் ஒழித்தனர்; இப்போது நான் இம் மகளிரை மணந்துகொள்வேனையின், அம் மூவேந்தர் பகையை இருகையேந்தி வரவேற்றவனாவேன்; இன்பம் எனக் கருதித் துன்பத்தை மேற்கொள்ளேன்; இன்று இவர்கள் இன் முகம் கண்டு இரங்கி, இவர்களை ஏறறுக்கொண்டால், மூவேந்தர்படை நாளை எங்கள் நாட்டின்மீது போர் தொடுக்குமே; அப்போது அதைத்தடுத்து என்னைக் காப்பார் யார்? ஆகவேதான், இவர்களை மணக்க மறுக்கிறேம்," என்று தன் மனத்திடை ஒருங்கே மண்டிக்கிடந்த ஆசையையும், அச்சத்தையும் வெளியிட்டான்.

பாரிமகளிரை மணக்கப் பாரரசர் மறுத்ததற்கான காரணத்தின் உண்மையை உணர்ந்த ஔவையார், அதற்கு யாது செய்வது என எண்ணிப் பார்த்தனர்; அவர்க்கு ஒரு

வழி தோன்றிற்று ; வேந்தர் மூவரும் தன்பால் பேரன்
புடையவர் ; தான் விரும்பும் எதையும் செய்யும் நெஞ்சம்
பாங்குமுடையவர் ; அவர்களிடத்தே பாரிமகளிர் நிலைகூறி
அவரை மணக்கவிரும்பும் மன்னர்பால், பகைகொள்ளுதல்
கூடாது என்று வேண்டின் அவர்கள் மறுக்கமாட்டார்கள்
மனம் ஒப்புவர் ; ஆதலின், அவர்கள் இசைவினைப் பெ
றுத்தர உறுதிமொழி அளித்து, அரசனை, அம் மகளினை
ஏற்குமாறு செய்தல்வேண்டும் என எண்ணினர். அர
னும் அதற்கு இசைந்தான் ; உடனே ஔவையார், தெ
வீகன் பாரிமகளிரை மணந்துகொள்ள இசைந்ததை அ
வித்து, அம் மணவிழாவிற்கு வந்து, மணமக்களை வாழ்
திச் சிறப்பிக்குமாறு, அம் மூவேந்தர்க்கும் கீழ் வரு
அழைப்புச் செய்யுட்களை அனுப்பினர்.

“சேரலாகோன் சேரல் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவும் தான் வருக ! உட்காதே ;—பாரிமகள்
அங்கவையைக கொள்ள அரசன் மனம் இயைந்தான்
சங்கவையையும் கூடத் தான்.”

“புகார்மன்னன், பொன்னித் திருநாடன், சோழன்.
தகாதென்று தான் அகங் இருந்து—நகாதே,
கடுக வருக ! கடிகைகோவ லூர்க்கு
விடியல் பதினெட்டாம் நாள்.”

“வையைத் துறைவன, மதுராபுரித் தென்னன்,
செய்யத் தகாதென்று தேம்பாதே,—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடிய ஈரொன்பான்நாள்
ஈண்டு வருக ! இசைந்து.”

அழைப்பு அனுப்பிய ஔவையார், பின்னர்த் தி
மணத்திற்கான செலவு வகைகளுக்கு வேண்டும் பொ
னும், பொருளும் ஏராளமாகத் தேவை என்பதை உணர்ந்து
அவற்றைப் பிற அரசர்பால் இரந்து பெறுவதினும், த
ஆற்றலால் தானே தேடலே சிறப்பாம் எனக் கொண்
வருணனை நோக்கி,

“கருணையால் இந்தக் கடல் உலகம் காக்கும்
வருணனே ! மாமலையன் கோவல்—திருமணத்தில்
மும்மாரி பெய்யும் முதுவாரி மையாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.”

என்ற பாடலைப் பாடினர்; உடனே, அவ்வூராரக்கும், அம் மணவினைக்கும் வேண்டுமளவு பொன்மழை பெய்து, மக்கள் மனதில் மகிழ்ச்சியை விளைத்தது; இனி, மண விழாக் காண வருவோர்க்கு மனம் விரும்பும் ஆடையும், உணவும் அளித்தல் மணமக்கள் கடனுதலின், அவற்றைப் பெறுவதற்காக,

"பொன்மாரி பெய்யும் ஊா, பூம் பருத்தி ஆடையாம்;
அருநான் வயலரிசி ஆகும் ஊா—எந்நாளும்
தேனுகுபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருககோவ லூா."

"முத்தெறியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்ந்து
தத்திய நெய், பால், தலைப்பெய்து—குத்திச
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா."

என்ற இரு பாடல்களைப் பாடினர்; உடனே, அந நாட்டில் விளைந்திருக்கும் பருத்திச் செடிகள் எல்லாம், ஆடை யாகவே காய்த்தன; அந் நாட்டு நன்செய் வயல்களில் வளர்ந்திருக்கும் செந்நெற் பயிாகளெல்லாம் அரிசியாகவே விளைந்தன. அத் திருக்கோவலூரை அடுத்துப் பாயும் பெண்ணையாற்றில் நீர் ஓடுவது நீங்கி, நெய் ஒருபாலும், பால் ஒருபாலுமாகப் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கின.

இவ்வாறு திருமணத்திற்கான எல்லாம் இனிது நிறை வேறின. மணநாளும் வந்துற்றது; முடியுடை மன்னரும், குறுநிலமன்னருமாக எல்லா அரசர்களும் அங்குவந்து சேர்ந்தனர்; மணவிழாத் தொடங்கவேண்டிய நேரத்தில் தெய்வீகனுக்கு அளித்த வாக்குறுதியின்படி, "அங்கவை, சங்கவை ஆகியோரை அவன் மணம்செய்து கொள்வதைத் யாம் தடுக்கவில்லை; அதுகுறித்து அவனோடு பகை கொள் ளோம்; இம் மணநிகழ்ச்சியில் எங்களுக்கும் விருப்பமே," என அறிவிக்குமாறு ஔவையார் மூவேந்தரையும் வேண்டி னர்; அவர்கள், ஔவையாரை நோக்கி, "அன்புடையீர்! இம் மணம் எல்லோராலும் ஏற்கத்தக்கதாயின், இம் மணப்

பந்தலில் ஏதேனும் ஓர் அற்புதம் நிகழ்தல்வேண்டும்; அவ் வாறுயின், இத் திருமணத்திற்கு எங்கள் இசைவினையும் தருவோம்: மணமக்களையும் வாழ்த்திப் போற்றுவோம்," என்றனர்; உடனே ஔவையார், அம் மணப்பந்தலுக்குக் காலாக நிற்கும் பனந்துண்டு ஒன்றை நோக்கி,

" திங்கட் குடையுடைச சோனும், சோழனும், பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் ரூர்மணைப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத்து ஈன்று, பசசோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு,
நுங்குக்கண் முற்றி, அடிக்கண் கறுத்து, நுனிசிவந்து,
பகுக்கு மூன்று பழம்தர வேண்டும் பனந்துண்டமே!"

என்ற பாடலைப் பாடினர்; உடனே, வெட்டுண்டு உலர்ந்து போன அப் பனந்துண்டு, உயிர்பெற்றது; வெண் குருத்து வெளிவந்தது; பின்னர்ப் பச்சோலையாக மாறி ஒலித்தது; ஒருபால் பனங்குலை தோன்றி, நுங்கு முற்றிக் காயாகி, காய் கனியாகி, வேந்தர் ஒருவர்க்கு மூன்றுக, மூவேந்தர்க்கு மாக ஒன்பது கனிகளை ஈந்தது. ஔவையாரின், இவ்வருந் பெரும் செயல்கண்டு, அச்சமும் வியப்பும் கொண்டு, மண வினைக்கு மேலும் தடையாக இருத்தல் தகாது எனக் கொண்டு மணவிழாவை முன்னின்று முடித்து, மண மக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்; இவ்வாறு, இரவலர் இன் முகம் காணுமளவும் ஈதலே கடனெனக்கொண்டு இறந்து போன ஒரு வள்ளலின் மகளிர்க்குத் துணைபுரிதலே, அவன் பால் பொருள்பெற்று வாழும் புலவர்கள் கடனும் என்ற உயர் பேரெண்ணம் உடையவராய்ப் பாரிமகளிர்க்கு மணம் முடித்து மகிழ்ந்தார் ஔவையார்.

(5) பலாத்தழைக்கப் பாடியது:

குறவன் ஒருவனுக்கு மனைவியர் இருவர்; அவருள் இளையாள்மீதே அவனுக்கு மாறு அன்பு; அவன் தன் வீட்டு வாயிலில் பலாமரம் ஒன்றை மிகவும் அருமையாகப் பேணி வளர்த்து வந்தான்; ஒருநாள் வேற்றூர் போகும் அவன், அப் பலாவைப் பேணிக்காக்கும் பணியை இரு

மனைவியர்பாலும் ஒப்படைத்துச் சென்றான்; அவன் மீண்டும் வருவதற்குள், இளையாள் அம் மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டு, மூத்தாள்மீது பழி சுமத்தத் துணிந்தாள்; இளையாள்பால் கொண்டிருக்கும் அன்பால், அவள் கூறுவதையே அவனும் உண்மையெனக் கொள்வன்; அவனுக்கு அப் பலாமீது இருக்கும் ஆர்வத்தால் தன்னை யாது செய்வானே என அஞ்சி அழத்தொடங்கினள்; அப்போது அவ்வழியாக வந்த ஔவையார், அழுதுகொண்டிருக்கும் அவள்பால் சென்று, அவள் துயர் கேட்டறிந்து, அவள்பால் அன்பும் இரக்கமும் கொண்டு, அவள் அளித்த ஒரு படி தினையைப் பெற்றுக்கொண்டு,

"கூரிய வாளால் குறைத்திட்ட கூன்பலா,
ஓரிதழாய்க், கன்றாய், உயர்மரமாய்—சீரியதோர்,
வண்டுபோல் கொட்டையாய், வண்காயாய்த், தின்பழமாய்ப்,
பண்டு போல் நிற்கப் பலா.

எனப் பாடி, அப் பலாமரத்தைப் பண்டேபோல் தழைத்து நிற்கச்செய்து, மூத்தாள் துயர் துடைத்துச் சென்றார்.

(6) ஔவையாரும், கம்பரும்:

ஔவையாருக்கும், கல்வியிற் பெரியாராகக் கருதப்படும் கம்பருக்கும் யாது காரணத்தாலோ பகை உண்டாகிவிட்டது; அதன் காரணத்தால் கம்பரையும, அவர் பாடல்களையும் பழிப்பதை வழக்கமாகக்கொண்டார் ஔவையார்; கம்பரை அரசவைப் புலவனாகக்கொண்டு பெருமை செய்யும் சோழ அரசன், அவர் பாடலைப் புகழ்ந்து பாராட்டுவதைக் காணப்பொறாமல், ஔவையார், "கம்பன் பாடல் கற்றோர் போற்றுதலைப்பெறும் பெருமை வாய்ந்ததன்று; அவர், பாராட்டப் பெறுதற்குப் பேரரசன் ஒருவனைச் சார்ந்து பெருவாழ்வு வாழ்வது காரணமேயன்றி, அவர் அறிவோ, புலமையோ காரணமாகா; அறிவுடையோர் இல்லாவிடத்தேதான் அவர் பாட்டுப் பெரும் பாட்டாகப் பாராட்டப்பெறும்; கற்றோர்முன்னர் அவர் புகழ் அற்றுப் போகும்," என வசைபாடி வருவாராயினர்; மேலும்,

அப் பகை காரணமாகவே, சிலம்பி என்ற பெண் ஒருத்தியிடம் ஐந்நூறு பொன் பெற்றுக்கொண்ட கம்பர், அவள் மீது பாதிப்பாட்டே பாடிவிட்டுவர, ஔவையார், அவள் அளித்த கூழ் உணவிற்காகவே, அப் பாட்டின் பின் இரண்டு அடிகளைப் பாடிமுடித்து, அவளைப் புகழ்ந்தோதாடு, ஏழை அளிக்கும் கூழுக்கும் பாடும் எளியவள் ஔவை எனத் தனக்குப் புகழையும், கைந்நிறையப் பொருள் பெற்றும், குறைபாட்டுப் பாடும் செருக்குடையோன் கம்பன் எனக் கம்பர்க்குப் பழியையும் பெற்றுத் தந்தாள். இவ்வாறு தன்னைப் பழிப்பதையே தொழிலாகக்கொண்டிருக்கிறாள் ஔவை என்பதறிந்த கம்பன், ஔவையார்பால் சினங் கொண்டு, அவரை "அடி" என அழைத்து இழிவு செய்தாராக, ஔவையார், கம்பன் தன்னை ஒரு சொல்லால் இழிவுபடுத்தியதற்காக அவரை, அவலட்சணம், எருமைக் கிடா, கழுதை, குட்டிச்சுவர், குரங்கு என்ற இழிசொற்கள் பல கூறி அழைத்துத் தாழ்வுபடுத்தினர்.

மேலும், வேளூர்ப்பூதன் விருந்தின் சிறப்பு, கோரைக் கால் ஆழ்வான் கொடையின் இழிவு, சோமன் கொடை அருமை ஆக இவை குறித்தும் ஔவையார் அழகிய பாடல்கள் பல பாடினர் எனவும் தமிழ் நாவலர் சரிதை நமக்கு அறிவிக்கிறது. இவையேயன்றி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலாய நூல்களையும் ஔவையாரே பாடினர் என்றும் கூறுவர்.

கூ. ஔவையார் கதைகளின் ஆராய்ச்சி

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு." (திருக்குறள்: சஉக)

என்ற பொருளுரையை மேற்கொண்டு, கூறும் ஆளின் தகுதி திறமைகளை நோக்காது, அவர் கூறிய, பொருளின் உண்மை அன்மைகளை அறிந்துகொள்வதை விடுத்து, கூறிய பொருளின் உயர்வுதாழ்வுகளை உள்ளவாறு உணர்ந்து மதிக்க மறுத்து, கூறிய ஆளின் தகுதி, தகுதி யின்மைகளுக்கேற்ப, அவர் கூறும் பொருளை ஏற்பதும் தள்ளுவதும் ஆகிய இழிநிலைக்கு நாடு வந்துவிட்டது; நாட்டின் நிலை இதுவென அறிந்துகொண்ட காரணத்தால், தம் மனத்திடை மலர்ந்த எண்ணங்கள் நல்லன ஆயினும் சரி, தீயன ஆயினும் சரி, அவற்றை நாட்டு மக்கள் ஏற்க வேண்டும் என்று எண்ணியவர்கள், அவ்வளவு பேரும், அவை தம் கருத்தே, தம் உள்ளத்திடை உதித்தனவே என்று கூறுவதற்குப் பதிலாக, அன்று, அந் நாட்டு மக்கள் மனத்தில் இடம்பெற்றிருக்கும் மதிக்கத்தக்க பெரியார் ஒருவரைக் காட்டி, அவர் கூறிய கருத்து இது, என்று கூறுவதை வழக்கமாக மேற்கொள்வராயினர்; "அவர் கூறினரா? சரி; அது நல்லதாகத்தான் இருக்கும்; அதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்;" என்று எண்ணி ஏமாந்து விடுகின்றனர் மக்கள்; எப்படியோ "நம் கருத்து, நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதே," என்பதிலே அக் கருத்தாளர்களுக்கு அகமகிழ்ச்சி. இந்த வழக்கம் இன்று மட்டும் காணக்கூடியதன்று; எத்தனையோ நூறு ஆண்டுக்காலமாகவே, இவ்வழக்கம் நாட்டில் இடம்பெறத் தொடங்கியுள்ளது.

இடைக்காலத்தில் யார் யாரோ பாடல் புனைந்தனர்; அப் பாடல்கள், எத்தனையோ பொருள்களை அடிப்படை யாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளன; ஆனால், அப் பாடல் களைப் பாடிய புலவர் யார்? என்பதை இப்போது அறிதல் இயலாது; பாட்டைப் பாடிய புலவர்கள், அப் பாடல்கள்,

தம்மால் பாடப்பெற்றனவே என்பதை, அக்கால மக்கள் அறிந்தால், அவற்றை ஏற்க மறுப்பரோ என அஞ்சினர்; ஆகவே, அவர்கள், அக்கால மக்களால் மதித்துப் போற்றப் பெறும். மறைந்துபோன புலவர் சிலர் பெயரைக் கூறி, "அவர்கள் பாடிய பாடல் இவை; இன்ன இடத்தில் கண்ட ஏட்டில் கண்டவை இவை" எனக் கூறினர்; அதனால், அக் கால மக்களும் அவற்றை ஏற்றுப் போற்றினர்; அன்று முதல், புலவர் ஒருவர் பாடாத பிறர் பாடிய பாடல்கள் பல, அப் புலவர் பாடியனவாகத் தமிழ்நாட்டில் உலவலாயின; ஏமாறுவதும், ஏமாற்றுவதும் ஆகிய இந் நாடகம், இங்ஙனம், எங்கும் நிகழத்தொடங்கவே, அந் நாடகம் மேலும் வளர லாயிற்று; பாடாத பாடல்களைப் பாடினர் என்பது ஏற்றுக் கொள்ளப்படவே, "இப் பாடல் பாடியது இன்ன காலத்தில்; இன்ன காரணத்திற்காக; இப் பாடல் பாடியதால் விளைந்த பலன் இது' எனச் சில கதைகளை இட்டுக் கட்டிக்கூறவும், அவற்றை நம்பவும் மக்கள் தொடங்கிவிட்டனர்; இவ்வழி யாகப் பண்டைப் புலவர்கள் பாடாத பல பாடல்கள், அவர் பாடியனவாகக் கருதப்பட்டதோடு, அவர்கள் வாழ்க்கை யில் நடைபெறா நிகழ்ச்சிகள் பலவும், அவர்கள் வாழ்க்கை யோடு தொடர்பு படுத்தவும் பட்டுள்ளன. முற்பகுதியில் கூறப்பட்ட ஔவையார் வரலாறு குறித்த கதைகள் எல்லாம், இம்முறையாகத் தோன்றியனவே ஆதலின், அக் கதைகளின் உண்மை அன்மைகளை உள்ளவாறு அறிய முயலுதல் தமிழறிஞர் கடனும்.

ஔவையார் பிறப்புக் குறித்தும், அவரோடு உடன் பிறந்தாராகக்கொள்ளும் உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளி, வள்ளுவர் முதலியோர் பிறப்புக் குறித்தும் வழங்கும் கதைகளை, ஒரு முறை நோக்கினாரும், அக் கதை களுக்கிடையே ஒருமைப்பாடு இல்லாமையை உணர்வர்.

திருவள்ளுவர் சரித்திரம், அகத்தியர் புதல்வர் பெருஞ் சாகரர் என்பவருக்கும் திருவாரூர்ப் புலைச்சி ஒருத்திக்கும் பிறந்தவர் பகவன் என்றும், தவமுனி என்பவருக்கும், அருள்மங்கை என்னும் பார்ப்பனப் பெண்ணிற்கும்

பிறந்து உறையூர்ப் பெரும்பறையனாலும், நீதி ஐயன் என்னும் பார்ப்பனனாலும் வளர்க்கப் பெற்றவள் ஆதி என்றும் கூறுகிறது.

கபிலரகவல், பகவன் பிறப்புக் குறித்து ஒன்றும் கூறாது, அவனை அருந்தவ மாமுனி என்று மட்டும் குறிப்பிட்டு, ஆதியைக் கருவூர்ப் புலைச்சி என்று கூறுகிறது.

ஞானமிர்தம், ஔவையார் தந்தை பகவன் என்பதற்குப் பதிலாக, யாளிதத்தன் என்றும், தாய் ஆதப் புலைச்சி என்றும் கூறி, அவர் இருவர் தொடர்பு குறித்துப் புதிய தோர் கதை கூறுகிறது.

திருவள்ளுவர் சரித்திரம், நான்முகன் வள்ளுவராகவும், நாமகள் ஔவையாராகவும் அவதரித்தனர் என்று கூறப், புலவர் புராணம், நான்முகன் பகவனாகவும், நாமகள் ஆதியாகவும் அவதரித்தனர் என்று கூறுகிறது.

திருவள்ளுவர் சரித்திரம் முதலாயின, ஔவையார் பிறந்த இடம் பாணர்சேரி என்று மட்டும் குறிப்பிட்டு, ஊர்குறிப்பிடாமற்போக, விநோதரசமஞ்சரி, அவர் உறையூர்ப் பட்டினத்துச் சாவடியில் பிறந்தார் என்று குறிப்பிடுகிறது.

பன்னிருபுலவர் சரித்திரம், ஔவையார் தந்தை வேத மொழி என்பார் மகன் பேராளி என்னும் பார்ப்பனன் என்று மட்டும் கூறி, அவர் தாய் பெயர் குறியாது, அவள் ஓர் இழிகுலபபெண் என்று மட்டும் குறிபபிட்டு, அவ்விரு வர் வரலாறு குறித்து முற்றிலும் வேறுபட்டதோர் கதை காட்டுகிறது.

இவ்வாறு, ஔவையார் பிறப்புக் குறித்து வழங்கும் கதைகள் எல்லாம், ஒன்றற்கொன்று மாறுபடுவனவாகவே காணப்படுதலாலும், இக்கதைகளைக் கூறும் நூல்கள் எல்லாம், ஔவையார் காலத்தே எழுதப் பெறுமல், அவர் காலத்திற்கு மிகமிகப் பிற்பட்ட காலத்தே எழுதப் பெற்றன ஆகலாலும், அக்கதைகள் எல்லாம், பிற்கால

மக்கள், மனக்கற்பனையில் தோன்றி வளர்ந்தனவேயன்றி உண்மை வரலாறுகளாகா என்பதும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு ஔவையார் முதலியோர் வரலாற்றினை வரையறுப்பது கூடாதாம் என்பதும் தெளிவு.

இனி, அவ்வரலாறு உரைக்கும் நூல்களுள் ஒன்றான "கபிலரகவல்" என்ற நூலை, இயற்றியவர், ஔவையாரோடு ஒரு காலத்தே வாழ்ந்த கபிலர் ஆதலின், அவர் கூறுவனவற்றையும் ஆதாரமற்றது எனத் தள்ளிவிடுவது அறிவுடைமையாகுமா என எண்ணுவர் சிலர்; கபிலர் அகவல் என்ற அந்நூல், "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டு, மக்களிடையே காணும் சாதி வேறுபாடுகளைக் களைந்து ஒழிக்க விரும்பிய பிற்காலப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்டதே அன்றி, பழந்தமிழ்ப் புலவரும், பாணர் தோழரும் ஆய கபிலரால் இயற்றப்பட்டது அன்று என்பதே ஆன்றோர் முடிபாதலின், அந்நூல் கூறும் வரலாறும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று.

"அகர முதல எழுத்தெல்லாம்; ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற முதற்குறளில் வரும் ஆதிபகவன் என்ற சொல்லை, ஆதியும், பகவனும் என இரு சொல்லாகக் கொண்டு, அவை, அக்குறளாசிரியராய திருவள்ளுவரின் காய், தந்தையரைக் குறிக்கும் எனக் கொண்டோர் கற்பனையை அடிப்படையாகக் கொண்டே இக் கதைகள் எல்லாம் தோன்றியிருத்தல் வேண்டும்.

ஔவையார் விநாயக வழிபாடு செய்யும் வழக்கமுடையார்; அவ் வழிபாட்டின் பயனாகவே, அவர் கைலை செல்ல முடிந்தது எனக் கூறும் கதையும் ஆதார மற்றதே; சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரரும் கைலை சென்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடும் சேக்கிழார், அவரோடு ஔவையாரும் சென்றார் என்ற நிகழ்ச்சியைக் குறித்தாரல்லர்; அப் புராணம் கூறுவதற்கும், ஔவையார் கதை கூறுவதற்கும் வேறுபாடுகள் இருக்கக் காண்கிறோம்; பெரியபுராணம், சிவபெருமான் அனுப்பிய வெள்ளை யானை மீது சுந்தரர்

சென்றுவிட்டார்; அவர் சென்று விட்டது கண்ட சேரமான் தம்குதிரைமீது அவரைத் தொடர்ந்தார் என்று கூறுகிறது; ஔவையார் கதை, இருவரும் இணைந்தே சென்றனர் என்று கூறுவதோடு, அவ்விருவர் சென்ற ஊர்திகள் என யாதேனும் இரண்டினைக் கூறுவதற்குப் பதிலாக, யானை, தேர், குதிரை என மூன்றைக் குறிப்பிடுகின்றது; இருவர் செல்ல மூன்று ஊர்திகள் ஏன்? அல்லது தேரில் சென்ற மூன்றுவது ஆள் யார்? என்பன பற்றிய தெளிவுமில்லை; மேலும், அப்பாட்டு, விநாயகரை வழிபடுவார்க்கு ஆகாதன இல்லை என்று கூறி, "யானையும், தேரும், அதன் பின் வரும் குதிரையும் காதம்; கிழவியும் காதம்" என்று கூறுவதன்றி, சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரர் இவர் பற்றிய வரலாற்றை அறிவிக்கும் ஆற்றலுடையதாகத் தோன்றவில்லை.

மேலும், சங்கப்புலவர்கள் அறிந்து கூறிய கடவுளர் களாகச் சிவன், திருமால், முருகன், வருணன், இந்திரன், பலராமன், கண்ணன் முதலியோரைத்தான் சங்கச் செய்யுட் கள் அறிவிக்கின்றனவே யன்றி, அவர் அறிந்த கடவுளர் களில் ஒன்று யானைமுகக் கடவுள் என்று அறிவிக்கவில்லை. ஆதலின், சங்ககாலப் புலவராகிய ஔவையார் விநாயகரை வழிபடும் வழக்கமுடையார் என்பதை ஏற்றுக்கொள்ளுமா றில்லை. மேலும், விநாயக வழிபாடு, தமிழர்க்குப் புறம் பானது என்றும், சாளுக்கிய இரண்டாம் புலிகேசி என்பானை வெல்ல, பல்லவ நரசிம்மவர்மனால் அனுப்பப் பெற்ற, பெரியபுராணத்தில் சிறுத்தொண்டர் என அழைக்கப் பெறும், அவ்வரசன் கண்டத் தலைவர் பரஞ் சோதி என்பார், கி. பி. 642-ல் சாளுக்கிய தலைநகர் வாதா பியை வென்று அழித்து, ஆங்கிருந்து கொணர்ந்த அரிய பொருள்களுள் யானைமுகக் கடவுளும் ஒன்று என்றும், அதுவே வாதாபி விநாயகர் என அழைக்கப்பட்டது என்றும், அன்று முதல்தான் விநாயக வழிபாடு தமிழ் நாட்டிலும் இடம் பெற்றது என்றும் வரலாற்றுக் குறிப்பு உண்டு.

ஔவையார் வாழ்ந்த சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்; இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர், கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகே, வழக்கத்தில் வந்த விநாயக வழிபாட்டினை மேற் கொண்டிருந்தார் என்பது எவ்வாறு பொருந்தும்? ஆகவே, விநாயக வழிபாடு பற்றிய ஔவையார் கதையும் கற்பனையன்றி உண்மையன்று என்பதே முடிபாம்.

பாரிமகளிர் மணங்குறித்துப் பல்வேறுபட்ட கருத்துக்கள் நாட்டில் நிலவுகின்றன :—பாரிமகளிரைப் பார்ப்பார்க்கு மணம்புரிவித்தார் கபிலர்—பாரியின் அடைக்கலப் பெண்ணை மலையர்க்கு உதவினர் கபிலர்—பாரிமகளிர் இருவரையும் தெய்வீகனுக்கு மணம்புரிவித்தார் ஔவையார்—பாரிமகளிருள் ஒருத்தியை மலையனுக்கு மணம் செய்வித்தார் கபிலர்; மற்றொருத்தியை தெய்வீகனுக்கு மணம் புரிவித்தார் ஔவையார்—அங்கவை, சங்கவை என்பார் சிங்கள நாட்டுப் பார்சாலன் புதல்வியர்; அவர்களை ஔவையார் தெய்வீகனுக்கு மணம்புரிவித்தார்—விச்சிக்கோன், இருங்கோவேள் இருவரிடத்துப் பாரிமகளிரை உடன் கொண்டு சென்று பயனின்றி மீண்ட கபிலர், அம்மகளிரைப பார்ப்பார்பால் அடைக்கலமாக விட்டு, மலையமானிடம் சென்று, அவனை உடன் படுத்தி, பின்பு அம்மகளிரைக்கொடு சென்று அவனுக்கு மணம்புரிவித்தனர்.

இவ்வாறு பாரிமகளிர் மணவினைக்குத் துணைபுரிந்தார் கபிலரா? ஔவையாரா? ஔவையார் துணைபுரிந்தார் எனின் ஒருவர் மணவினைக்கா? இருவர் மணவினைக்குமா? என்பன போன்ற ஐயங்களுக்கு ஏற்றதோர் தெளிவுகாண மாட்டாமையாலும், அவ்விருவர், மணவினைக்கு, ஔவையார் தம் அறிவும் ஆற்றலும் துணைபுரிந்ததாகக் காணுமல், அவர்தம் ஆண்டவன் அன்பே பெருந்துணை புரிந்ததாகக் காணப் படுதல் அறிவிற்குப் பொருந்தாது ஆதலாலும், பாரிமகளிர் மணத்திற்கு முயன்றூர் கபிலர் எனக்கூறும் புறநானூற்றுச்சான்றும், அம்மகளிரை மலையற்கு மணம் புரிவித்தார் கபிலர் எனக்கூறும், திருக்கோவலூர்ச் சாஸனச் சான்றும்

(South Indian Inscription Vol. VII No. 863) அவரைத் தெய்வீகனுக்கு மணம் செய்வித்தார் ஔவையார் எனக் கூறும் தமிழ் நாவலர் சரித்திரச் சான்றினும் வலிவுடையன, ஏற்றுக்கொள்ளத்தக்கன ஆதலாலும், பாரிமகளிர் மணத்திற்கு ஔவையார் துணைபுரிந்தார் எனக்கூறுவதை உண்மையென ஏற்றுக் கோடற்கின்று.

ஔவையார் வாழ்க்கையோடு தொடர்புடையதாகக் கூறப்படும் பிற நிகழ்ச்சிகளுக்கும் சான்றுக நிற்பது தமிழ் நாவலர் சரிதையில் வரும் ஔவையார் பாடல்களாம்; அத் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படும் அப் பாடல்கள் ஔவையார் பாடியன அல்ல என்பதே அறிஞர்கள் கருத்து; அதற்கு அவர்கள் காட்டும் ஆதாரங்கள் பல.

"தண்ணீரும் காவிரியே" என்ற செய்யுளைப் பொய்யா மொழிப் புலவர் பாதிபாட, ஔவையார் பாதி பாடினர் என்று கூறுகிறது தமிழ் நாவலர் சரிதை; கம்பர் பாதிபாட ஔவையார் பாதிபாடினர் என்று கூறுகிறது தனிப்பாடல் திரட்டு. இவ்வாறு, பாட்டு ஒன்றே ஆகவும், அப் பாட்டு குறிப்பிடும் வரலாற்றைக் குறிப்பிடுவதில், தமிழ் நாவலர் சரிதையும், தனிப்பாடல் திரட்டும் வேறுபடுகின்றன.

சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாம் எனப்படும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறுத, தொல்காப்பியர் ஏற்றுக் கொள்ளாத, நேரிசை வெண்பாக்களும், எண்சீரடி ஆசிரிய விருத்தமும் தமிழ் நாவலர் சரிதையில் இடம் பெற்றுள்ளன.

சங்கச் செய்யுட்களில் வழங்கப்பெறுத ஆலகம், பிரமன், கோடாதுகோடி, கங்காளன், கண்ணுலம, அகளங்கர், சபித்து, சங்கியாதே போன்ற வடசொற்கள் தமிழ்நாவலர் சரிதையில் காணப்படும் ஔவையார் பாடல்களில் காணப் படுகின்றன.

ஆகவே, அத்தமிழ் நாவலர் சரிதைக்கண்வரும் பாடல் களை ஆதாரமாகக் கொண்டு கூறப்படும அக்கதைகளும் ஆதாரமற்றன என்பதே முடிவாம்.

தமிழ் நாவலர் சரிதைச் செய்யுட்களில் காணப்படுவதுபோன்றே, சங்ககாலத்துச் செய்யுட்களில் பயிலாத சில சொல்லாட்சி முறைகள், ஔவையார் பாடியவை எனக்கூறப்படும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலாய நூல்களிலும் பயின்றுவரக் காண்கிறோம்.

ச, சை, ஞ இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா என்று தொல்காப்பியம் கூறுகிறது: சனிநீராடு; ஞயப்படவுரை; சையெனத்திரியேல்; சந்தனிக்கழகு வந்தி செய்யாமை; சையோத்திருந்தால் ஐயாயிட்டுண்; என்னும் தொடர்கள் அவர் நூல்களில் வந்துள்ளன; சங்ககாலத்துப் பயின்று வாராத, உடாகாய், விடகாரி போன்ற பல வட சொற்களும் அந் நூல்களில் ஆளப்பட்டுள்ளன.

வான்கோழி என்ற பறவை ஆங்கிலத்தில் டர்க்கி (Turkey) என அழைக்கப்பெறும்; இப் பறவை துருக்கி நாட்டினின்றும் கொண்டுவரப்பட்டது எனக்கருதப்படுவதால் அதற்கு அப்பெயர் இட்டு வழங்குவர்; துருக்கர் கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்தவராவர்; ஆகவே, இப்பறவையைப் பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே நம் நாட்டினர் அறிந்திருத்தல் கூடும் அப் பறவை கோழியின் இனத்தைச் சார்ந்து பெரிதாய் இருந்தமை பற்றி, அதற்கு "வான் கோழி" எனப் பெயர் இட்டு வழங்கினர். ஔவையார், அப் பறவையை அறிந்துள்ளார்; "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என அதைப் பாடியும் உள்ளார்; இரண்டாம் நூற்றாண்டு ஔவையார், பத்தாம் நூற்றாண்டுப் பறவையைப் பார்த்துப் பாராட்டியது எவ்வாறோ!

"மதுரமொழி நல்லுமையாள்" என்ற செய்யுள், ஔவையார், சுந்தரரோடு கைலை சென்றார் என்று கூறுகிறது; "தேவர் குறளும்" என்ற செய்யுளில் வரும் "மூவர் தமிழும்" என்ற தொடர் சுந்தரர் பாடிய தேவாரத்தைப் பாராட்டினர் ஔவையார் என்று கூறுகிறது; மூவர் தேவாரமும், மணிமொழியார் இருமொழியும்

முறைப்படுத்திப் பாராட்டப் பெற்றது அந் நால்வர் காலத் திற்குப் பின்னரே என்பர்; என்றால், சுந்தரோடு தாமும் கைலை சென்றதாகக் கூறும் ஔவையார் பாடலை உண்மை யெனக் கொள்வதா? சுந்தரருக்குப்பின் வாழ்ந்து அவர் பாடலைத் தாமும் பாராட்டியதாகக் கூறும் ஔவையார் பாடலை உண்மையெனக் கொள்வதா?

இம் முரண்பாடுகளையும், இடர்ப்பாடுகளையும் நோக் கின், சங்க நூல்களாகிய அகநானூறு, புறநானூறு, நற் றிணை, குறுந்தொகைக்கண் வரும் ஔவையார் பாடல்கள் அறிவிக்கும ஔவையார் வரலாறே அவர் உண்மை வரலா றும்; தமிழ் நாவலர் சரிதையும் பிறவும் கூறும் ஔவை யார் வரலாறு அவர் வரலாறு ஆகாது என்றும், மேற்கூறிய சங்கச் செய்யுட்கள்மட்டுமே ஔவையார் பாடல்களாம்; ஏனைய அவர் பாடியன ஆகா என்றும் கொள்வதே அறிஞர் கள் முடிபாம்.

இனி, இவ் இடர்ப்பாடுகளைப் போக்க, ஔவையார் என்ற பெயருடையார் ஒருவரல்லர்; இருவர்; ஒருவர், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து சங்கச் செய் யுட்களைப் பாடியவர்; மற்றொருவர், பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் நாவலர் சரிதையில் வரும் பாடல்களையும், பிற நீதிநூல்களையும் பாடியவர் என்று கொள்வாரும் உளர்.

அவ்வாறு கொள்வதால், ஔவையார் சுந்தரோடும். பொய்யாமொழிப் புலவர் அல்லது கம்பரோடும் தொடர்பு கொள்வதற்கும், விநாயகரை அறிந்து வழிபடுதற்கும். வான்கோழியைத் தெரிந்து பாடுவதற்கும், நேரிசை வெண் பாக்களாகவும், எண்சீரடியாசிரிய விருத்தமாகவும் பாடித் தள்ளுவதற்கும், வடசொற்களையும், வடசொற் சிதைவு களையும் தம் பாட்டில் வாரி வழங்குவதற்கும் உள்ள தடை கள் நீக்கப்படுகின்றன என்றாலும், போக்க முடியாப் பெருந்தடைகள் சில புதியவாகத் தோன்றுதலை அவர்கள் அறிய மறுத்து விடுகின்றனர்.

தமிழ் நாவலர் சரிதையில் காணப்படும் செய்யுட் களைப் பாடியவர் இரண்டாம் ஔவையாரே என்பதை ஒப்புக்கொள்வதாயின், அச் செய்யுட்கள் கூறும் வரலாறு கள் அனைத்தும், அவ் விரண்டாம் ஔவையாரோடு தொடர்புடைய உண்மை வரலாறுகளாம் என்பதையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்; அப் பாடல்களைப் பாடிய ஔவையாரே, பாரிமகளிர்க்கு மணம்செய்து வைத்ததாக வும், அதிகமான் கொடுத்த நெல்லிக்கனி உண்டு நெடுநாள் வாழ்ந்ததாகவும்,

> "பூங்கமல வாவிசூழ் புல்வேலூர்ப் பூதனையும்
> ஆங்குவரு பாற்பெண்ணை ஆற்றினையும்—ஈங்கே,
> மறப்பித்தாய்; வாழ்அதிகா! வன்கூற்றின் நாவை
> அறப்பித்தாய்; ஆமலகம் தந்து."

அப்பாடல்கள் அறிவிக்கின்றன; இவற்றையும் உண்மை யென ஒப்புகொள்ளுதல் வேண்டும்; ஆனல், அதியமான் கொடுத்த நெல்லிக்கனி உண்டவர் சங்க காலத்து முதல் ஔவையாரே; பாரிமகளிர் மணத்திற்கு ஔவையார் துணைபுரிந்தது உண்மையாயின், அவ்வாறு துணைபுரிந் தாரும் அம்முதல் ஔவையாராகவே இருத்தல் வேண்டும் என்பது அனைவரும் அறிந்த உண்மை; ஆகவே, முதல் ஔவையார்க்கு உரிய இச் செயல்களைத் தமக்கு உரியதாக இரண்டாம் ஔவையார் ஏற்றுக்கொண்டு கூறுவது எவரும் ஏற்றுக்கொள்ளக்கூடாத ஒன்றும்; அவ்வாறு கூறுவது தவறு; ஆகவே, அவ்வாறு கூறும, தமிழ் நாவலர் சரிதைச் செய்யுட்களும் தவறுடையனவே. இவ்விருவரலாறு குறித் துக் கூறும் செய்யுட்கள் தவறுடையன என்பது பெறப் படவே, அவ்விரண்டாம் ஔவையாரின் பிறவரலாறுகளைக் கூறும் பிற செய்யுட்களும் தவறுடையனவே என்று கொள்வதே நேரிய முறையாம்.

ஆகவே, முன்னர் முடித்துக் கூறியதைப்போன்றே, தமிழ் நாவலர் சரிதைக்கண் வரும் பாடல்கள்முதல் ஔவையாரால் பாடப்பெற்றனவும் அல்ல; ஔவையார்

என்ற பெயர்கொண்டு பிற்காலத்தே வாழ்ந்த ஒருவரால் பாடப்பட்டனவும் அல்ல; அவை அனைத்தும் யாரோ, பெயர் அறியாப் பிற்காலப் புலவர் ஒருவரால் பாடப் பெற்று, ஔவையார் கூமீது சுமத்தப்பெற்ற அநாதைப் பாடல்களே என்று கொள்வதே முடிபாம்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி என்ற இந் நூல்கள் ஔவையாரால் பாடப் பெற்றன எனக் கூறப்படுவதும் தவறே எனக் கேட்கலாம். நாலடியார் என்ற நூல் ஒருவரால் பாடப்பெற்ற நூல் அன்று; சங்கம் அமைத்து வாழ்ந்த சமணப்புலவர் பலரும் ஒவ்வொரு பாடல்பாட, அப் பாடல்களை எல்லாம் திரட்டித் தொகுக்கப்பெற்ற நூலே நாலடியார்; இஃது உண்மை யென்பது, ஒரே கருத்தினைக் கொண்ட பல பாக்கள் முன்னும் பின்னுமாக அந் நூலுள் காணப்படுவதால் மெய்ப்பிக்கப்பெறும். அதைப்போன்றே, ஆத்திசூடி முதலிய நூல்களை நோக்கியவழி, ஒரு கருத்தே மீண்டும் மீண்டும் கூறப்படுவது உய்த்துணரப்படும். அதனால், அவற்றை இயற்றியோரும் ஒருவராக இரார்; பலர் பல காலங்களில் பாடின அவற்றைத் தொகுத்து நூலாக ஆக்கினர்; என்று கொள்ளத் தோன்றும்; அவ்வாறு பாடிய அவர்கள் அனைவரும் கூடி ஓர் அவை அமைத்து வாழ்ந் திருத்தலும் கூடும்; அவர்கள் பாடியன ஆதலின், அந் நூலாசிரியர் பெயராக "**அவையார்**", என்பது குறிப்பிடப் பட்டிருத்தலும் கூடும்; ஔவையார் என்ற சொல் பழந் தமிழ் ஏடுகளில் "அவ்வையார்" என்றே காணப்படும்; "அவையார்" என்பதையும், "அவ்வையார்" என்பதையும் கண்ட ஏடு எழுதியோர், "அவையார்" என்ற சொல் தோன்றிய காரணத்தை அறியமாட்டாமையால், அச் சொல்லை, "அவ்வையார்" என்ற சொல்லின் பிழைபட்ட வடிவமாகக் கொண்டு, அதையும் "அவ்வையார்" என்றே திருத்தியிருத்தலும் கூடும், பின்னர் அதுவும் ஔவையார் என்றே எழுதப்பட்டிருத்தலும் கூடும்; இம் முறையால், ஒரு அவையைச்சார்ந்தோர் பாடித்தொகுத்த அந் நூல்கள்,

ஔவையாரால் பாடப் பெற்றனவாகக் கருதப்பட்டது எனக் கொள்வாரும் உண்டு.

சங்க காலத்தைப்போன்றே, பிற்காலத்திலும் பெண் பாற்புலவர் பலர் வாழ்ந்திருத்தலும் கூடும்; முதலில் தாய் என்ற பொருள் குறிக்கவந்த "அவ்வை" என்ற சொல் பின்னர், முதிர்ந்த அறிவுடைய பெண்ணைக் குறிக்கவும் வழங்கியிருத்தலும் கூடும்; இம் முறையால், பிற்காலப் பெண்பாற்புலவர் ஒவ்வொருவரும் ஔவையார் என்றே அழைக்கப்பட்டிருத்தலும் கூடும்; அத்தகைய பெண்பாற் புலவர்களுள் ஒருவரோ, பலரோ, மேற்கூறிய நூல்களைப் பாடியிருத்தலும் கூடும் எனக் கொள்வதாயினும் இழுக்கு ஒன்றும் இல்லை என்க.

கழக வெளியீடு : சுசஅ

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை - V

பெண்பாற் புலவர்கள்

ஆசிரியர் :

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Feb., 1953.
Reprint: Nov., 1956.

Sangath Thamizhp Pulavar Varisai - Book V
PENNBAR PULAVARGALL

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

பதிப்புரை

புலத்துறை முற்றிய நலத்துறையில் நம் செந்தமிழ் நாடு, பண்டை நாளில் முதற்கண் நின்றது. அற்றை நாளில் கற்புக்கடம்பூண்ட பெற்புடை மகளிரும், பொருந்திய கல்வி திருந்திய மகளிருமாக இலகி, நாட்டைப் பொன்னாடாக்கிப் புகழுற்றனர்.

அக்கால மகளிர், பெண்மை யென்னும் உடலுக்கு உண்மை உயிராகத் திகழ்ந்திருந்தனர். அவர்தம், அன்பு அறம் மறம் தாய்மை காதல் முதலிய பண்புகளுக்குச் சங்கநூல்கள் சான்று தருகின்றன. அச் சங்கநூல்களிலும் இப் பெண்ணியலார் தந்த அரிய கருத்துக்கள் நிறைந்த பாமணிகள் மிளிர்கின்றன. அவைகளை ஆக்கிப் புகழுடல் பெற்று இன்றும் நம்மிடையே நிலவும் பண்டைத் தமிழ்ப்புலமைப் பெண்மணியார் **இருபத்தறுவர்** வரலாறே இந்நூல்.

இதனை நன்முறையில் அவர்கள்தம் பாவே துணையாகக் கொண்டு நுணுகிச் சென்றாய்ந்து, உண்மையையே திரட்டிக் கொணர்ந்து வரலாறாக—உண்மை நூலாக—**புலவர் திரு. கா. கோவிந்தனவர்கள்**, தெளித்துத் தந்துள்ளார்கள்.

இந்நூலை உயரிய முறையில் பதித்து நம் தமிழக மாந்தர்க்குக் கூட்டுண்டு மகிழ, **சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை**யில் ஐந்தாவதாக வெளியிட்டுள்ளோம் தமிழ் கூறு நல்லுலகமக்கள் இதனை ஏற்றுப் போற்றிக கற்றுப் பயன் பல பெறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
க.	அஞ்சி அத்தைமகள் நாகையார்	1
உ.	அள்ளூர் நன்முல்லையார்	4
ங.	ஆதி மந்தியார்	9
ச.	ஊண்பித்தை	14
ஞ.	ஒக்கூர்மாசாத்தியார்	16
ட.	கச்சிப் பேட்டு நன்னாகையார்	21
ண.	கழார்க்கீரன்எயிற்றியார்	23
அ.	காக்கைபாடினியார் நச்செள்ளையார்	25
கூ.	காமக்கணிப் பசலையார்	36
கo.	காவற் பெண்டு	39
கக,	குமுழிஞாழலார் நப்பசலையார	42
கஉ.	குறமகள் இளவெயினி	44
கங.	குறமகள் குறிஎயினி	47
கச.	தாயங்கண்ணியார்	49
கஞ.	பாரி மகளிர்	51
கட.	பூங்கணுத்திரையார்	63
கண.	பெருங்கோப் பெண்டு	66
கஅ.	பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார்	69
ககூ.	பேய்மகள் இளவெயினி	74
உo.	பொன்முடியார்	76
உக.	போந்தைப் பசலையார்	82
உஉ.	மாற்பித்தியார்	85
உங.	மாறோக்கத்து நப்பசலையார்	88
உச.	வெண்ணிக் குயத்தியார்	99
உஞ.	வெள்ளிவீதியார்	101
உட.	வெறிபாடிய காமக்கண்ணியார்	109

பெண்பாற் புலவர்கள்

க. அஞ்சி அத்தைமகள் நாகையார்

நாகையார் என்பது இவர் இயற்பெயர்; அஞ்சி அத்தைமகள் என்பது அவர் உறவைக்குறிப்பது; உறவைக் குறிக்கும் தொடர்கள் புலவர் பெயர்களுக்குமுன் வழங் கப்படுவது அக்கால வழக்கமாம்: பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணை யார், அளக்கர் ஞாழலார் மகனார் மாளனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்ற பெயர்களையும் நோக்குக. அத்தொடரால், அஞ்சி யென்பானெருவனுடைய அத்தையின் மகள் நாகையார் என்பது பெறப்படும். தகடூரைத் தலைநகராகக்கொண்டு நாடாண்ட ஓர் அரசன் பெயர் அதியமான் நெடுமான் அஞ்சி என்பது; நாகையார், இவ்வதியமான் நெடுமானஞ் சியின் கடிய குதிரையையும், நெடிய தேரையும், பாணர் பலர் அவன் புகழ்பாடிப் பரவுவதையும், தன் பாட்டில் பாராட்டியுள்ளார். இவர் பெயரையும், பாட்டின் பொரு ளையும் ஒருங்கே வைத்து நோக்கினால், இவர் அவ்வஞ்சியின் அத்தை மகளே என்று உறுதிகொள்ளலாம். ஆகவே, அரசர்குடியிற் பிறந்த பெண்பாற் புலவர்களுள் இவரும் ஒருவர் என்பதும் உறுதிசெய்யலாம். இவர் பாடிய பாட் டாக நமக்குக் கிடைத்திருப்பது அகநானூற்றில் காணப் படும் செய்யுள் ஒன்றே.

அண்மையில் மணம்செய்து கொண்டவள் ஒருத்தி, கணவன வீடுசென்று வாழ்ந்து வருகிறாள்; அவள் உயிர்த் தோழி ஒருத்தி, அவள் அங்கே வாழும் வாழ்க்கையைக்

காணவேண்டும் என்று விரும்பினாள். அவள், அவனைப் பெற்றுவாழத் துணைபுரிந்தவள் இத்தோழியே; அவள் அவனை அறியாமுன், அவன் உயர்குடிப் பிறப்பையும், அன்புகொண்டு நட்புச் செய்தவர்களை என்றும் பிரிந்தறியாப் பெருந்தன்மையையும், பிறர்க்குக் கேடுதரும் தீச் சொல்லை என்றும் கூறியறியா அவன் நாவின் சிறப்பையும், எவ்வுயிரும் தன் உயிரெனக்கொள்ளும் அவன் அன்புடைமையினையும அறிந்துவந்து அவளுக்குக் கூறி, அவனை மணந்துகொள்ள இசைய வைத்தவள் இத் தோழியே.

தானும அவளும் தனியேயிருந்த நேரம்பார்த்து அவளைநோக்கி, "உன் கணவர் உன்னிடத்தில் எவ்வாறு பழகுகிறார்?" என்று கேட்டாள் தோழி. அதற்கு அவள், "தோழி! நமதுடைய ஊரில் திருவிழா நடைபெறுங் காலத்தில் கூத்து நிகழ்வதை நீ பார்த்திருப்பாய் அல்லவா? அப்போது, விறலி முன்னே ஆட, அவள்பின்னே முழா ஏந்திய கூத்தன் நிற்பதைக் கண்டிருப்பாய்; அதை நினை வூட்டும் காட்சிகள் பல இங்கே உள்ளன; அவற்றுள் ஒன்றை யாவும் கண்டேன்; அழகிய அருவியின் அருகே மயிலொன்று ஆடிக்கொண்டிருந்தது; முழவுபோன்ற பெரிய பலாப்பழத்தைத் தன் வயிற்றில் தழுவிக்கொண்டே, அம் மயிலின்பின் நின்று அதன் ஆடலைக்கண்டு மகிழும் ஆண் குரங்கொன்று அக் காட்சியைக் காணுமாறு தன் இனக் குரங்குகளையும் கூவி அழைத்தது; இதையேன் உனக்குக் கூறுகிறேன்? எங்கள் நாட்டில் உள்ள விலங்குகள் இவ்வாறு மகிழ்ந்து வாழ்கின்றன என்றால், என கணவர் இயல்பைச் சொல்லவேண்டுவதே இல்லை என்பதற்காகவே. நாள்தோறும் இனத்தாரையும் விருந் தினரையும் அழைத்து உடனிருந்து உண்டும், என்மேடு அன்பு காட்டியும் வாழ்கிறார்; நம் அரசியின் புகழ்பாடும் பாணன், புதிது புதிதாக இயற்றிப்பாடும் பண்ணைக் காட்டிலும் அவர் இனியர்; என் திருமணத்தன்று அவர் நமக்கு எவ்வளவு இனியராகவும் நல்லவராகவும் தோன்றினரோ, அதைக்காட்டிலும் பன்மடங்கு இனியர்; நல்லவர்; அவ

ரைப்பற்றி முன்பு நீ கூறியன எல்லாம் உண்மையே என் பதையும் உணர்ந்தேன்; அத்தகையாரை நான் மணம் செய்துகொள்ளத் துணைபுரிந்தவள் நீயன்றே? நீ வாழ்க பல்லாண்டு!'' என்று கூறி மகிழ்ந்து வாழ்த்தினள்.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் இவ்வளவு சிறந்த கருத்துக்கள் பலவற்றையும் அழகாக அமைத்துப் பாடி யுள்ளார்; குடம்போலும பெரிய பழாப்பழத்தினைத் தழு விக்கொண்டே ஆடுமமயிலின் பின்நிற்கும் குரங்கு, ஆடுமவிறலியின்பின் முழவிசைத்து நிற்பானை ஒக்கும் என உவமை காட்டிக் கண்ணிற்கும், உயர்குடிப் பிறப்பும், பிரிந் தறியாப் பெருநட்பும், கொடுமை கூறுமையும், ஆருயிர் மாட்டு அன்பும் உடையான் ஆண்மகனுவன் எனக் கூறிக் கருத்திற்கும், விருந்தளிக்கும் கவின் மிகுந்துளது அப் பாட்டு.

''முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்ன தாகக் கோடியர்
விழவுகொள் முழுதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிரும் குன்ற நாடன்,
குடிநன் குடையன். கூடுநர்ப் பிரியலன்;
கெடுநா மொழியலன்; அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை; காணில் காதலம் தோழி!
கடும்பரிப் புரவி, நெடுந்தேர் அஞ்சி,
நல்லிசை நிறுத்த நயவரு பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்,
வதுவை நாளினும் இனியனால் எமக்கே.'' (அகம்: கருஉ)

உ. அள்ளூர் நன்முல்லையார்

"'எனக்கே உரிய என்தாய் நாடிது' என எண்ணு தான் உள்ளம் இழிந்த உள்ளமாம்; அத்தகைய இழிந்த உள்ளம் உடையாரும் உளரோ உலகில்?" என்று கேட்கி றார் ஆங்கிலப் புலவர் ஒருவர்.

"Breaths there the man, with soul so dead,
Who never to himself hath said,
This is my own my native land?"

புலவர்கள், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்ற பரந்த பேருள்ளம் உடையவரே எனினும், எந்நாடும் தம் நாடாய் எவ்வூரும் தம்மூராய்க்கொண்டு வாழ்பவரே எனி னும், தாம் பிறந்தநாடு நற்றவ வானினும் நனி சிறந்ததுவே என்ற எண்ணம் அவர்க்கும் தோன்றுமல் இராது. அள்ளூர் நன்முல்லையார் அத்தகைய நாட்டுப்பற்றும், ஊர்ப் பற்றும் கொண்ட உயர்உள்ளம் உடைய புலவராவர்; தம் பெயரோடு, தாம பிறந்த ஊர்ப் பெயராகிய அள்ளூர் என்பதையும் சேர்த்து "அள்ளூர் நன்முல்லையார்" என்று வழங்கி, தம் புகழோடு தம் ஊர்ப்புகழையும் வளர்த் துள்ளார் அவர்; அமமட்டோடு அவரை நிற்கவிடவில்லை அவர் ஊர்ப்பற்று; தாம் பிறந்த அவ்வூரைத் தாம்பாடிய பாட்டொன்றில் வைத்துப் பாராட்டியும் உள்ளார்.

அகத்துறைப் பாடல்களில் வரும் தலைவியின் அழகு நலத்தை அக்காலத்துத் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங் கிய நகரங்களின் அழகு நலத்திற்கு ஒப்பிடுதல் புலவர்கள் வழக்கமாம். அவ்வாறு ஒப்பிட்டுக் கூறும புலவர்கள் மேற்குக் கடற்கரையைச் சார்ந்த தொண்டி என்ற துறை முகப் பட்டினத்தையே பெரும்பாலும் ஒப்பிட்டுக் கூறுவர்: "தொண்டியன்ன என் நலம்" "தொண்டியன்ன எம் ஒண்தொடி" "தொண்டியன்ன இவள் நலன்" என வருதல் காண்க. ஆனால், நம் நன்முல்லையார், தாம் பாராட்டிய தம் தலைவியின் நலத்திற்கு அத் தொண்டிநகரை ஒப்புமை

கூறுது, தாம் பிறந்து வாழ்ந்த தம் அள்ளூரையே ஒப்புக் கூறுகின்றார்; தம் ஊர்நினைவு வந்தவுடனே, அவ்வூரின் சிறப்பெல்லாம் அவர் மனக்கண்முன் வந்து நிற்கலாயின; அவ்வூரெங்கும் மலைபோல் குவிந்துகிடக்கும் செந்நெற் குவியல்களை நினைந்து நினைந்து மகிழ்ந்தார்; ஊர்ப்பற்று ஊரோடு நின்றுவிடவில்லை; அவர்க்கு ஊராளும் அரசனையும் நினைப்பூட்டிற்று. பகைவரின் யானைப்படையையும் கொன்றழிக்கும் தம் அரசன் வாட்படை; அவ்வாட்படைக்குத் தலைவனாகிய தம் அரசன் கொற்றம் ஆகிய அவ்வளவையும் எண்ணி எண்ணி இறும்பூதெய்தினர் அவர்; "இவ்வளவு சிறப்பும் உடையது எங்கள் ஊர்" என்று பாராட்டினர்:

"செறுநர்,
களிறுடை அருஞ்சமம் கடைய நூறும்,
ஒளிறுவாள் தானைக் கொற்றச செழியன்
பிண்டநெல்லின் அள்ளூர்" (அகம்: சகூ)

என்று பாடினர்.

அவர் பாடிய இப் பாட்டினால், அவர் பாண்டி நாட்டினர் என்பதும், அவர் ஊராகிய அள்ளூர் நீர்வளமும் நிலவளமும் மிக்க மருதவயல்கள் சூழ்ந்தது என்பதும் அறியப்படும்.

அள்ளூர் நன்முல்லையார் பத்திற்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்; எனினும், அவற்றுள் ஒன்றும், அவர் வாழ்க்கை வரலாற்றை அறியத் துணைபுரிவன அல்ல; அவை, அவர் வாழ்க்கையை அறிய வழி காட்டவில்லை எனினும், அவர்தம் புலமையின் சிறப்பைப் புலப்படுத்த அவை சிறிதும் தவறவில்லை. அள்ளூர் நன்முல்லையார், நல்லிசைப் புலமை வாய்ந்த நற்பெருங் கவிஞர்; கண்ணில் காணும் காட்சிகளைக் கருத்தோடு இழைத்துக் கவி பாடும் இயல்பினர்; அவர் பாடல்களில் பொதிந்துகிடக்கும் உவமைகள் சிலவே, அவர் புலமைச்சிறப்பைப் புலப்

படுத்தப் போதியனவாம்; அவற்றுள் இரண்டைமட்டும் எண்டுத் தருகிறேன்:

அள்ளூர் நன்முல்லையார் வாழ்ந்த பாண்டிநாடு, செல்வத்திற சிறந்த நாடு; அந்நாட்டில் வாழும் மக்கள் அழகிய அணிபல அணிவதில் ஆர்வமிக்கவர்; அவர் ஆர்வத்தை நிறைவேற்றித்தரும் வகையில் அழகிய அணிகளை ஆக்கித்தரும் ஆற்றல்மிக்க பொற்கொல்லர் பலர் பாண்டி நாட்டில் பெருகி வாழ்ந்துவந்தனர்; ஆதலின், அப் பொற் கொல்லரையும, அவர்கள் தொழிலாற்றும் முறைகளையும் அறிந்திருந்தனர் நம் முல்லையார்; அவர்களுள் ஒரு பொற்கொல்லன், பொற்காசுமாலை ஒன்று செய்துகொண் டிருக்கிறான்; பொற்காசுகள் பவழவடிவில் அமைந்துள் ளன; அவற்றினூடே துளையும் செய்யப்பட்டுளது; அவற்றைக் கோப்பதற்கான பொற்கம்பியையும் இழைத்து வைத்துக்கொண்டுள்ளான்; பொற்காசை இடதுகைப் பெருவிரல் ஆள்காட்டிவிரல் இரண்டின் நுனியில் பற்றிக் கொண்டான்; வலது கையில் பொற்கம்பியைப் பற்றி, அதன் கூரிய நுனியை இடதுகையில் பற்றியுள்ள அப் பொற்காசின் இடையே அமைந்த துளையூடே செலுத்திக் கோத்துக் கொண்டிருக்கிறான்; இக் காட்சியைக் கண்டு கண்டு மகிழ்ந்துள்ளார் நம் முல்லையார்; கடித்த பெரு விரல் கீழே இருக்க, ஆள்காட்டி விரல் சிறிது நீண்டு வளைந்து பெருவிரலின் நுனியைச் சேர, அவ்விரண்டிற் கும் இடையே பொற்காசு அமைந்திருக்கும காட்சி, அவர் கண்ணையும் கருத்தையும்விட்டு அகலவில்லை; அதைக் கண்டு மகிழ்ந்த அவர், அவ்வூரை யடுத்த சோலையுள் நுழைந்து செல்கின்றார்; அங்கே ஒரு வேப்பமரம், நன்கு பழுத்து விளங்குகிறது; பழுத்த பழங்களைப் பறவைகள் பலவும் கூடிக் கவர்ந்து செல்கின்றன; அப் பறவைகளுள் ஒரு கிளி, தன் வளைந்த வாய்க்கிடையே நன்கு கனிந்த அப் பழங்களுள் ஒன்றைக் கவ்விப் பற்றிக்கொண்டுளது; அடி அலகு கடித்து, மேல் அலகு வளைந்து விளங்கும் கிளியின் வாயில், பொன்னிறம்போற் பழுத்து விளங்கும் வேப்

பங்கனி ; இக் காட்சியையும் காணுகின்றார் முல்லையார் ; ஊரில்கண்ட பொற்காசு ஏந்திய பொற்கொல்லன் கையின் காட்சிக்கும், இக் காட்சிக்கும் உள்ள ஒற்றுமையை உணர் கிறார் ; அவர் உள்ளம் அவ் வொப்புமையில் ஊறிவிடு கிறது ; கிளிவாய் வேம்பிற்குப பொற்கொல்லன் கைப் பொற்காசை ஒப்புமை கூறியும் உள்ளார் ;

“ கிள்ளை
வளைவாய்க கொணட வேப்ப ஒண்பழம்,
புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலநகல வொருகாசு எய்க்கும்.” (குறுந் : சுஎ)

காணும் காட்சிகளை எவ்வளவு கருத்தூன்றிக் கவ னித்துள்ளார் என்பதை உணருங்கள் !

தரையோடு தரையாகப் படர்ந்திருக்கும் செடி வகை களில் நெருஞ்சியும் ஒன்று ; சிறுமழை பெய்தவுடனே தளிர்த்துப் பூக்கத் தொடங்கிவிடும் ; பூக்கள் மிகவும் சிறியதாய், மஞ்சள் நிறமுடையதாய் நெருங்கப் பூத்திருக் கும் ; அக்காட்சி கண்டோர் மனதை மகிழ்விக்கும் ; இவ் வழகிய காட்சி சின்னாள் வரையிலுந்தான் ; பின்னர், அப் பூக்கள் காயாக மாறத்தொடங்கும் ; அக் காய்கள் முற்றின் முள்ளாக மாறும ; அந்நிலையில், அது, தன்னை மிதிப்பார் காலளையேயன்றித் தன் அண்மையில் வருவார் காலளையும் தைத்துத் துன்புறுத்தும். நெருஞ்சியின் இவ்வியல்பை நன்கு உணர்ந்தவர் நம் நன்முல்லையார் ; தொடக்கத்தில், கண்ணிற்கு விருந்தளித்துக் கடைசியில் காலிற்குக் கடுந்துயர் அளிக்கும் நெருஞ்சியின் இக்கொடுஞ் செயலை உலகத்தார்க்கு உணாத்த எண்ணினர்.

ஒரு தலைவி, ஒரு தலைவனை மணந்து வாழ்ந்துவந்தாள் ; தொடக்கத்தில் அவன் அவளிடத்தில் அன்பு மிகக்கொண்டு வாழ்ந்துவந்தான் ; அதனால் அவள் மிகவும் மகிழ்ந்து வாழ்ந்தாள் ; இவ்வின்ப வாழ்க்கை சிலநாள் நடைபெற் றது ; அவன், அவள்பால் கொண்டிருந்த அன்பு சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கிற்று ; அவளை மறந்து

மறைந்து வாழவும் முற்பட்டான்; அதனால் அவ்வில்லற வாழ்க்கை அவளுக்குத துயர்தரத் தொடங்கிவிட்டது; முன்னர் அன்புகொண்டு இன்பம் அளித்த அவனே, பின்னர் அவளை மறந்து துன்பம் செயயவும் தொடங்கினன்; தலைவனின் இக் கொடுஞ்செயலைத் தமிழார்க்கு எடுத்துக் காட்டி இடித்துரைக்க விரும்பிய நம நன்முல்லையார், அவன் செயலை நெருஞ்சிப்பூவின் செயலோடு ஒப்பிட்டுக் கூறிக் கண்டிப்பாராயினர்:

"சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாஅங்கு,
இனிய செயதகம் காதலர்
இன்ன செய்தல் நோமென் நெஞ்சே." (குறுந்: உ0உ)

எவ்வளவு அழகிய உவமை!

பொருள் பொதிந்த பாடல்களைப் புனைவதோடு, அப்பாக்கள்வழியே அரிய அறிவுரைகள் பலவற்றையும் அள்ளிக் கொடுத்துள்ளார் அள்ளூர் நன்முல்லையார்; தமமோடு தொடர்புடையார், தமக்குத துன்பம் செய்தார் எனினும், அவர்தம் அச் செயலைப் பலர் அறியத் தூற்றித்திரிதல் பண்புடையோர் செயல் அன்று; தகுதியுடையோர் அதைச் செய்யார் என்று ஓரிடத்தே கூறுகிறார்.

தம்மீது அன்பும் ஊர்வமும்கொண்டு மதியாதார் பின் சென்று மண்டியிட்டு வாழ்வதினும் மாண்டு மறைதல் மாண்புடையதாம்.

"கன்னலம் தொலைய, நலம்மிகச சாஅய்,
இன்னுயிர் கழியினும் உரையல்" (குறுந்: கூஉ)

என்று மற்றோரிடத்தே பெருமையைப் பேணுகிறார். இத்தகைய அழகிய அவர் பாடல்களை, அகநானூற்றினும், புறநானூற்றினும், குறுந்தொகையினும் கண்டு களிப் புறுக.

5. ஆதிமந்தியார்

காவிரியாற்றின் இரு கரைகளிலும் வாழ்ந்த சோழ நாட்டு மக்கள், அவ்யாற்றில் புதுவெள்ளம் வரும்பொழுது புனல்விழாக் கொண்டாடி மகிழ்வர், விழா நடைபெறு மன்று ஆற்றலும் ஆண்மையும் மிக்க இளைஞர் பலர் அவ் யாற்றுநீரில் குதித்து எதிர்த்து நீந்தி ஆண்மைதோன்ற ஆடி மகிழ்வர். அவர்கள் அவ்வாறு ஆடி மகிழ்வதை அந் நாட்டு அரசன்முதல் அவ்வூர் மக்கள் அனைவரும், ஆற்றின் கரைக்கண் அமைந்த அரண்மிக்க அழகிய இடங்களி லிருந்து கண்டு மகிழ்வர்; இவ்வாறு புனல்விழா நடை பெறும் இடங்களிலொன்று கழார்ப்பெருந்துறை. அது கடற்கரைக்கு அண்மையிலுள்ளது; காவிரிப்பூம்பட்டி னத்திற்கு நான்கு அல்லது ஐந்துகல் தூரத்தில் இருப்பது. காவிரியாறு அவ்வூரருகே கிழக்கு நோக்கி ஓடும். அது, ஆற்று வெள்ளம் கரைகளை மோதி அழிக்கும் ஆற்றலோடு பாயும் இடம். ஆற்றுப்புனல் மோதி மோதி அழிப்பினும், அழிவுறுமல் வானுற வளர்ந்த மருதமரங்கள நிறைந்தது அத்துறை. அங்கே நடைபெறும் புனல்விழாவினை, அர சர்களும் வந்து காணுவர். அவ்வளவு சிறப்புடையது! விழா நடைபெறும்பொழுது முழவொலியும் வேறு பிற ஆரவாரங்களும் அங்கே நீங்காமல் ஒலிக்கும். இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் அப்புனல் விழா.

இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் அப்புனல் விழா வில் ஓராண்டு விழாவின்போது, அப்பொழுது சோழ நாட்டை ஆண்டிருந்த கரியாற் பெருவளத்தான் தன் சுற்றம் சூழ்ந்துவர, விழாக்காணைக் கழார்ப் பெருந்துறைக்கு வந்திருந்தான். அரசனோடு வந்து ஆற்றில்வரும் புதுப் புனலையும் அதில் குதித்து ஆடித் திளைக்கும் அந்நாட்டு இளைஞர்களையும் கண்டு நின்றோருள் அத்தி என்பானும் ஒருவன். அத்தி, அரசன் மைத்துனன்; மன்னன் கரிகால் வளவன் மகள் ஆதிமந்தியாரின் ஆருயிர்க் கணவன்; வஞ்சியைத் தலைநகராகக்கொண்ட சேரநாட்டுத் தலைவன்;

ஏறுபோல் நடையுடையான்; நிமிர்ந்து திரண்ட தோளுடையான்; அடர்ந்து சுருண்டு கருத்த மயிருடையான்; கலீர் கலீர் என்ற ஒலியும், காண்டற்கினிய அழகும் வாய்ந்த கழல்புனை காலுடையான்: கரிய கச்சினை அரையிலே கட்டிப் பசும்பொன்னலாகிய ஒலிக்கும் பாண்டில் மணிகளை அக் கச்சின் மீது அழகுபெற அணிந்தவன்; வகைவகையான மலர்கொண்டு வனப்புமிக அமைந்த மாலையினை மார்பிலே அணிந்தவன்; ஆற்றல் மிக்கோன்; ஆற்றுப் புனலில் குதித்து ஆற்றல்தோனற ஆடிப் பழகியோன்; அதனால் ஆட்டன் அத்தி (ஆடுதலில் வல்ல அத்தி) என்ற சிறப்புட பெயரும் பெற்றோன்

ஆடிப் பழகிய அவனல் அமைதியாய் அமர்ந்து அவ் வாடலைக்காண இயலவில்லை; ஆடை அணி அணிந்து ஆற்றில் குதித்தான், விழாக்காண வந்திருந்தோர் அனைவரும் கண்டுமகிழ அருமையும் அழகும் தோன்ற ஆடிக்கொண் டிருந்தான். அத்தி, அருமிய நாடாகிய சேரநாட்டான்; காவிரியாற்றில் அதற்குமுன் ஆடிப் பழகியறியான். ஆதலின், அவனல் அவ்வாற்றுப் பெருக்கின் ஆற்றலை அறிந்து கொள்ள முடியவிலலை, அதனால் ஆற்றுப்புனலில் ஆட வல்ல அவனை, அக் காவிரிப்புனல் அழுத்தி இழுத்துக் கொண்டு போய்விட்டது. ஆற்றில் ஆடிக்கொண்டிருந்த அவனை அங்கே காணுத மக்கள் அவலமுற்று அவனைத் தேடுவதில ஆரவங் காட்டலாயினர். ஆற்று வெள்ளத்தின் விரைவு அவனை வெகு தொலைவு கொண்டுபோய் விட்டபடி யால், அவாகள் அவனை அத்துறைக்கண் தேடியும் காணமாட்டாமல் கண்ணீர்விட்டுக் கலங்கி நின்றனர்.

தந்தை கரிகாலன் அருகே யமர்ந்து தம் காதற் கொழுநன் அதிதியின் ஆடலகண்டு அகமகிழ்ந்திருந்த ஆதிமந்தியார்க்கு அவன் மறைவு, ஆற்றொணாத் துயர் அளித்தது. ஆற்றுப்புனலின் ஆற்றலை எதிர்க்கும் ஆற்றல் அற்றுப்போனவிடத்து அப்புனல் வழியே தாமும் சென்று கரையேறவே அறிவுடையோர் முயற்சிப்பர். ஆடும்

தொழில்வல்ல அத்தி அதை அறிந்திருப்பன் என்று எண்ணினர் ஆதிமந்தியார். ஆகவே ஆற்றின் இருகரையிலும் இருக்கும் நாடுகளிலும், ஊர்களிலும் சென்று அவனைத் தேடுவாராயினர். அவ்வூர்களிலும் நடைபெறுகிறது இப் புனல்விழா; ஆடவரும் மகளிரும், மற்போர் விளையாட்டும், தணங்கைகக் கூத்தும் ஆடி மகிழ்கின்றனர். அவர்களை அணுகி, "உங்களைப்போல் ஆடல் தொழில் வல்லான் என் கணவன். அவன் பெயர் அத்தி. உங்களைப் போல் ஆடி மகிழும் இளமைப்பருவம் உடையேன் யானும். என் உடலும், உயிரும் மெலிந்து வருந்தப் புனலாட்டு விழாவிலே மறைந்துபோயினன் அவன். உங்களில் யாரேனும் அவனைக் கண்டீரோ? என்று கேட்டுக் கேட்டு ஆதிமந்தியார் மனம் அலுத்துப்போனர் அவன் ஆடிய இடத்தினின்றும், பலநாடு பல ஊர்வரை தேடியும் அவனைக் காணமாட்டாமையால், ஆதிமந்தியார் அறிவு திரிந்தது மதி மருண்டது; அத்தியின் ஊரும் பேரும் உருவும் கூறி, "அவனைக் கண்டீரோ?" என எதிர் வருவார் யாரையும் கேட்டு ஏங்குவாராயினர். அவர் முயற்சி வீண் போகவில்லை. இறுதியில் கடற்கரை யருகே, ஆற்றுப் புனலால் அல்லலுற்று மாழ்க இருந்த அவனை, மருதி என்னும் நல்லாள் ஒருத்தி கண்டு, கடலுள் புகுந்து, கடிது முயன்று கரைசேர்த்துக் காதது ஆதிமந்தியார்பால் ஒப்படைத்தார். ஆனால், அந்தோ! அம் முயற்சியில் அம் மருதியார் கடலலைகளால் இழுப்புண்டு எறிலாப் புகழ் பெற்றார்.

ஆதிமந்தியாரின் புலமைச் சிறபபைப் புலப்படுத்தும் அழகிய பாடல் ஒன்று குறுந்தொகைக்கண் உளது. இனத்தாலும், குணத்தாலும் ஒத்த ஒரு தலைவனும் ஒரு தலைவியும் காதல்கொண்டு, களவொழுக்கம் மேற்கொண்டு ஒழுகினர். அக் களவொழுக்கத்தை, அவர் இருவர் ஒழிய அயலார் யாரும் அறியார் தலைமகள் உயிர்த்தோழியும் உணர்ந்திலள். அவர்கள்தம் இவ் அன்புவாழ்க்கைக்கு இடையூறு ஒன்றுவரக் காத்திருந்தது மணப்பருவம்

எய்தினள் தலைவி ; ஆகவே, தாயும் தந்தையும் அவளுக்கு மணஞ் செய்துவைக்கத் துணிந்தனர். அவளை மணம்பேச யாரோ சில சான்றோர்களும் வந்திருந்தனர் ; அஃதறிந்தாள் தலைவி ; விரும்பி மேற்கொள்ளும் தலைவன் ஒருவன்பால் தன் உள்ளம் சென்றுளது என்பதைத் தன் தாயும் தந்தையும் அறியார் ஆதலின், அவர், வந்த சான்றோர்க்கு ஒப்பு தல் அளிப்பினும் அளிப்பர் என அஞ்சினள். தன் களவொழுக்கைப் பிறர் அறியாவண்ணம் இதுவரை மறைத்து வந்ததேபோல் இனியும் மறைத்து வைப்பின் ஏதமாம் என எண்ணினள். தன் அன்பிற்குரிய தோழியை அழைத்தாள். "தோழீ! என் வளை கழலுமாறு கைமெலியத் துயர் செய்தான் ஒருவன் உளன். அவனோ் தலைசிறந்த ஆண்மகன் ; குரிசில் ; பீடும் பெருமையும் உடையோன் ; மாண்புறு குணம் பல நிறைந்து நம்மை மணத்தற்குரிய தகுதியிற் சிறந்தோன் ; ஆடுகளம் சென்று ஆடி மகிழும் இயல்புடையான் ; ஆகவே, யானும், அவ்வாடுகளஞ்சென்று ஆடி மகிழும் விருப்பமுடையேனாய், வீரர்கள் பலர் கூடி ஆடும் மற்போர் விழாக்களத்தும், மகளிர் கூடி ஆடும் துணங்கைக்கூத்தின் கண்ணும் தேடித்தேடிப் பார்த்தேன். எங்கும் அவனைக் காணேன். இதற்கு யான் என்செய்வேன் ?" என்று கூறிக் கலங்கினள்.

தோழி அறிவே உருவானவள் ; தலைவி, தலைவனை "மாண்தக்கோன்", "பீடுகெழுகுரிசில்" எனப் புகழ்வதாலும், அவனை மற்போர் விழாவிலும் துணங்கைக் கூத்தின்கண்ணுமே தேடினேன் எனக் கூறுவதாலும், அவன் தன் வளை நெகிழ்த்தான் என அறிவிப்பதாலும், தலைவி, தக்கான் ஒருவன்பால் அன்புகொண்டுள்ளாள் என்பதையும், அத் தலைவன் ஆண்மையிற் சிறந்த வீரன் என்பதையும், துணங்கைக்கூத்தின்கண் அவன் கை கொடுக்க அவனோடு ஆடி அன்பு கொண்டுள்ளாள் தலைவி என்பதையும் அறிந்தாள் ; இந் நிலையில், அவன் பெற்றோர், அவளை அயலார்க்கு மணம்செய்து கொடுக்க முடிவு செய் வாராயின் அவள் வாழாள் ; இறந்துபோவாள். ஆதலின்,

அவ் விருவர் தம் நட்புறவைத் தாய் தந்தையர்க்கு அறி வித்து, அயலார்க்கு மணஞ்செய்து கொடுப்பதைத் தடுத்து அத் தலைவனுக்கே மணம் நேருமாறு துணைபுரிதலே தன் தலையாய கடனும் என்று முடிவு செய்தாள்.

இவ்வாறு, தானும் தலைவனும் பெற்று மகிழும் கள வொழுக்கத்தைத் தன் தோழிக்கு அறிவிக்கும், அறத் தொடு நிற்றலாகிய துறையமைத்துப் பாடிய ஆதிமந்தி யாரின் அழகிய பாடல் இது :

"மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாணடும் காணேன் மாண்தக் கோனை ;
யானும்ஓர் ஆடுகள மகளே ; என்கைக்
கோடுஈர் இலங்குவளை நெகிழத்த
பீடுகெழு குரிசிலும்ஓர் ஆடுகள மகனே." (குறுந் · 5க)

ஆதிமந்தியார் வரலாற்றைப் பாணரும், வெள்ளிவீதி யாரும் பாராட்டியதோடு, ஆதிமந்தியாரின் அருமைத் தந்தை கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ அரசன் எனவும், அவர் கணவனை ஆட்டனத்தி, வஞ்சிமா நகரைத் தலைநகராகக்கொண்ட சேர நாட்டான் எனவும், கற்புக்கடம்பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகி பாராட்டிய கற்புடை மகளிர் எழுவரில் ஆதிமந்தியாரும் ஒருவர் எனவும் இளங்கோவடிகளும் பாராட்டியுள்ளார். அஃது இதோ :

"மன்னன் கரிகால் வளவன் மகள, வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
'கன்னவில் தோளாயோ !' என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னகு கொடிபோலப் போதந்தாள." (சிலப், உக: கக-ரு)

ஆதிமந்தியார் பிறந்து மொழிபயின்ற பட்டினம், பூம்புகார்ப் பட்டினமே என்று கூறுவர் பட்டினத்துப் பிள்ளையார்.

ச. ஊண்பித்தை

இவர் பெயர் ஊண்பித்தியார் எனவும் வழங்கப்பெறும். புறநானூற்றில் மாற்பித்தியார் என்ற பெயருடைய பெண் பாற்புலவர் ஒருவர் உளர். இவர் பெயரும் பித்தியார் என வருவதைக்கண்டு, இருவரையும ஒருவராகவே கருதுவர் சிலர்; அது தவறு இருவரும் வேறு வேறுவர் என்பதை அறிவிப்பதற்காகவே, ஒருவர் பெயர்முன ஊண் என்பதை யும், மற்றொருவர் பெயர்முன் மால் என்பதையும் சேர்த்து, ஊண்பித்தியார், மாற்பித்தியார் என வழங்கியுள்ளார்கள்; மேலும் இவர்பெயர் ஊண்பித்தி என்றே பெரும்பாலான ஏடுகளில் காணப்படுகிறது; இவர் வரலாறுபற்றிய எதையும் தெரிந்துகொள்ள வழியில்லை.

இல்லறம் இனிது ஆற்றவேண்டும்; அதற்கு நிறையப் பொருள் வேண்டும் என்ற எண்ணமுடையவனுய் வெளி நாடு சென்ற கணவன், 'வருவேன்' என்று கூறிச் சென்ற காலததில் வந்திலன்; அதனல் வருந்திய அவன் மனைவி, "அவர் என்னை நினைந்திலர்; மறந்துவிட்டார்" என்று வருந்தினுள். ஆனல், அவன் இயல்பை நன்கு உணர்ந்த வள் அவள் தோழி அவன் அவளை மறவான் என்பதை உணர்ந்தவள். சென்ற தொழில்நினைவால், அவன் ஒரு வேளை மறப்பினும், சென்றவழியில் அவன் கண்ட காட்சி அவனை மறக்கவிடாது; மாருக, தலைவியை என்றும் நினைப் பூட்டி, வீடுநோக்கி விரைந்து வருதல்வேண்டும் என்பதை அறிவுறுததும் தன்மையுடையது. வழியில் ஓர் ஆண்மான், மரல் என்ற செடியை வயிரார மேய்ந்துவிட்டு, அருகே யுள்ள யாமரத்தின் நிழலையடைந்து கவலையின்றி உறங்கு வதைக் கண்டுகொண்டே சென்றுள்ளான். அக் காட்சி அவன் உள்ளத்தை உறுததாதிராது; தான் விரும்பிய உணவை வேண்டிய அளவு உண்டதும், அங்கேயேயிருந்து உழலாது, நிழலிடம் தேடிப் படுப்பதைப்போல், நாமும் வேண்டிய பொருளை ஈட்டிக்கொண்டு விரைவில் வீடுவந்து சேர்தல்வேண்டும் என்ற எண்ணத்தை அவனுக்கு உணர்த்

தியே யிருக்கும். ஆகவே அவன் விரைவில் வருவான் என்னும் உறுதியுடையவள் தோழி. ஆனால், அவன் கூறிச் சென்ற காலமெல்லாம் கடந்தும் அவன் வரவில்லை; அதனால், தலைவி அவன் தன்னை மறந்துவிட்டான் என்றே உறுதியாக எண்ணுகிறாள். அந் நிலையில், அவளிடத்தில் சென்று, "அவன் மறவான்" என்று வெளிப்படையாகக் கூற அஞ்சுகிறாள் தோழி; என்றாலும், அவள் அதைக் கூறக் கடமைப்பட்டவள் ஆகவே, தலைவியின் கருத்தையும் ஏற்றுக்கொள்வாள் போல், "அவர் நம்மைப்பற்றி நினைக்கவே மறந்துவிட்டாரோ?" என்ற ஐயத்தை எழுப்பிப் பின்னர், அதை மறுப்பாள்போல், "அல்லது, வந்த வேலையை விரைவில் முடித்துக்கொண்டு மீள்வதற்குரிய வாய்ப்பு கிடைக்கவில்லையோ?" என்று ஐயப்படுவாள் போல்கூறி, "அவன் வராமைக்குக் காரணம அதுவே; அவன் மறதி அன்று" என்று துணிந்து கூறிக் தலைமகளைத் தேற்றினாள்.

இக் கருத்தடங்கிய பாடலைப்பாடி, "அறிவே உருவான வள் தோழி" என்ற அகத்திணைக் கொள்கைக்கு அரண் செய்தார் ஊண்பித்தை:

"உள்ளார் கொல்லோ? தோழி! உள்ளியும்
வாய்ப்புணர்வு இன்மையின், வாராா கொல்லோ?
மரல்புகா அருந்திய மாவெருத்து இரலை
உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்
மாயிரும் சோலை மலையிறந் தோரே." (குறுந் : உகஉ)

ரு. ஒக்கூர் மாசாத்தியார்

இவர் இயற்பெயர் சாத்தியார்; இது சாத்தனர் என்ப தன் பெண்பாற் பெயராகும். சாத்தன் என்பது, ஐயனர் என்ற கடவுட்பெயர். சாத்தன், சாத்தி என்ற இப் பெயர் கள், இலக்கண மேற்கோட் பெயர்களாகப் பயில ஆளப்படு கின்றன; சாத்தன் என்ற பெயர்கொண்ட புலவர்களும் பலர் உள்ளனர்; இதனல், அக் காலமக்கள் இப் பெயர்களைப் பெருவழக்காக மேற்கொண்டிருந்தனர் என்பது புலனகும். இவர் பெயர்க்கு முன்வரும் *ஒக்கூர், புலவர் பிறந்த ஊர் போலும்; ஆனல், அது யாண்டுளது என்பது அறியக்கூட வில்லை; இவர் பிறந்த ஒக்கூரிலேயே, இவர் பெயர்கொண்ட ஆண்பாற் புலவரும் ஒருவர் இருந்தனர்; ஒக்கூர் மாசாத்த னர் இவ் விருவரும் உறவுடையவராகவும இருத்தல் கூடும். ஆனல், அவர் உறவு, எத்தகைய உறவு என் பதையோ, அவர் உறவுடையவர் என்பது உண்மைதான் என்பதையோ உறுதிசெய்யும் சான்று ஒன்றுமில்லை.

ஒக்கூர் மாசாத்தியார் பாடிய பாடல்களில் நமக்குக் கிடைத்தவை எட்டு. அவற்றுள் ஒன்று புறத்துறை தழு விய பாடல்; ஏனைய ஏழும் அகத்துறைக் கருத்துக்கள் கொண்டவை. அவர் பாடிய பாக்கள் எல்லாவற்றுள்ளும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் சிறப்பளித்துத் தனக்கும் புகழ் அளித்த பெரும்பாட்டு, புறநானூற்றில் காணப்படும் பாட்டே

தமிழ்நாட்டுச் சிற்றார்த் தெருவொன்றில் நடந்த நிகழ்ச்சியிது; நாடு காவலுக்கான போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலம்; காலைநேரம்; ஊர் நடுவே அமைந் திருக்கும் மன்றத்தே உள்ள போர்ப்பறை ஒலிக்கத் தொடங்கிவிட்டது; அதைக் கேட்டாள் ஒரு கிழவி; நாடு காவலுக்கு நம் தொண்டும் இருக்கவேண்டுமே; நம் குடியி

---

* ஒக்கூர் என்னும் ஊர் பாண்டிநாட்டில் சிவகங்கைக்கு வட பால் ஆறுகல் தொலைவில் ஒன்று இருக்கின்றது. அதுவே போலும்!

னிருந்தும் ஓர் ஆள் செல்லவேண்டுமே என்று எண்ணினாள்; எண்ணியவள் ஏக்கம் மேற்கொண்டாள்; காரணம், போருக்குச் செல்லத்தக்க பேராண்மை மிக்க ஆண்மகன் ஒருவனும் அவள் வீட்டில் இல்லை; அவள் ஆண்துணை அற்றவள் அன்று; உடன்பிறந்த ஆண்மக்களையோ, மணந்த கணவனையோ பெறாதவள் அன்று; அத்தகைய உறவினரைப் பெற்றே இருந்தாள்; ஆனால், சிலநாட்களுக்கு முன் நடைபெற்ற போரில் கலந்துகொண்டு, பகைவர் யானைப்படையைப் பாழ்செய்துவிட்டுக் களத்திலேயே மாண்டு மறைந்துபோனான் அவள் அண்ணன்; முன்னாள் நடைபெற்ற போரில், பகைவர் யானைவரிசைகளை எதிர்த்துப் போரிட்டு இறந்துபோனான் அவள் கணவன்; இருந்த ஆண்மக்கள் இருவரும் இவ்வாறு இறந்துவிட்டனர்; அவர்கள் இறந்துவிட்டனரே என்று அவள் கவலை கொள்ளவில்லை; இனறு நடைபெறப்போகும் போருக்குத் தானும் ஒரு வீரனை அனுப்பமுடியவில்லையே, என்றே கலங்கினாள்; கலங்கி நின்றவள், சிறிது நேரத்துக்கெல்லாம் எதையோ எண்ணிக்கொண்டவள்போல் தெருக்கோடிக்கு விரைந்தோடினாள். அவள் மகன் அங்கே மயிரை விரித்துக் கொண்டு மண்ணில் புரண்டு ஆடிக்கொண்டிருந்தான். ஒரே மகன்; ஆடும் பருவம் கடவாத இளைஞன்; அவன் கையைப் பிடித்து அழைத்துவந்தாள்; வீட்டினுட் கொண்டுசென்று நீராட்டினாள்; பெட்டியில் மடித்துவைத்திருந்த தூய வெள்ளிய ஆடையை எடுத்து விரித்து உடுத்தினாள்; பறட்டைத்தலையில் எண்ணெய் தடவி வாரி முடித்தாள்; அவள் முன்னோர் ஆண்ட வேலைக் கையிலே கொடுத்தாள்; தெருவிற்கு அழைத்துவந்து, "அதோ, அங்கேதான் நடைபெறுகிறது போர்; போ அங்கே விரைந்து" என்று வழிகாட்டி அனுப்பி, அவன் செல்லும் திசைநோக்கி நின்றாள். அவள் வரலாற்றினையும், அன்று அவள் நடந்துகொண்ட செய்கைகளையும் கண்டனர் அத்தெருவார். அவருள்ளம் திடுக்குற்றது. "என்னே இவள் துணிவு! இவள் செயல், அம்ம! அமம!! கொடிது! கொடிது!! மறக்குடி மகள் என்பது இவளுக்கே தகும்" என்று வியந்து பாராட்டினர்.

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன், தமிழ்நாட்டில் எங்கோ ஒரு பகுதியிலிருந்த சிற்றூர்த் தெருவொன்றில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியைத் தமிழர்கள் தமிழகம் உள்ள வரையிலும் மறவாதிருக்கச்செய்த மாண்பு மாசாத்தியார்க்கே உரித்து.

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே ;
மூதில் மகளிர் ஆதல் தகுமே ;
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே ;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே ;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
'செருமுகம் நோக்கிச செல்க'என விடுமே."

(புறம் · உஎக)

வீரச்சுவையை விளங்கப் பாடிய மாசாத்தியார், இன்பச்சுவை சொட்டும் அகப்பாடல் சிலவும் பாடியுள்ளார் : பொருள் கருதிப் பிரிந்துசென்ற கணவன் நினைவாகவே இருக்கிறாள் ஒருத்தி ; ஒருநாள் மாலைக்காலத்தே, அவளும் அவள் தோழியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்நேரத்தில், எங்கிருந்தோ வந்த மணியோசையைக் கேட்டாள் தலைவி. மணியோசை, காலையில் சென்று காட்டில் மேய்ந்து மாலையில் வீடுதிரும்பும் ஆனிரைகளின் கழுத்தில் கட்டிய மணிகளினின்றும் வந்திருக்கும் ; அல்லது, காவலர் புடைசூழத் திரும்பிவரும் கணவன் ஏறி வரும் தேரில்கட்டிய மணிகளினின்றும் வந்திருக்கும். ஆகவே, அவளால் ஒசையைக்கண்டு துணிய முடியவில்லை. மணியோசை கேட்கிறது என்றால், அது மிகச் சேய்மையிலிருந்து வந்திருத்தல் இயலாது ; அண்மையிலிருந்தே வந்திருத்தல் வேண்டும் ; சிறிதுநேரம் கழித்தால் உண்மை விளங்கிவிடும் ; ஆனால், அதுவரை காத்திருக்கவிடவில்லை

அவள் உள்ளம்; உடனே அறிந்துகொள்ளத் துடித்தாள்; ஆகவே, அண்மையில் கிடந்த உயர்ந்த கல்மீது ஏறி நின்று பார்த்து அறிந்துகொள்ளலாம் வா எனத் தோழியை அழைக்கிறாள். தலைவியின் உள்ளத்துடிப்பை யுணர்த்தும் ஒரு செய்யுள்:

"முல்லை யூர்ந்த கல்லுய ரேறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி!
எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை யினத்துப்
புல்ஆர் நல்ஆன் பூண்மணி கொல்லோ!
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
வல்வில் இளையர் பக்கம் போற்ற
ஈர்மணல் காட்டாறு வருஉம்
தேர்மணி கொல்? ஆண்டு இயம்பிய உளவே."

(குறுந். உஎந)

தலைவியின் ஆர்வ உள்ளத்தைக்காட்டிய மாசாத்தியார், தலைவனின் விரைவுள்ளத்தையும் அவன் உள்ளம் அறிந்து ஓட்டும் தேர்ப்பாகனையும் நமக்கு அறிவிக்கும் முறை சாலச்சிறந்தது. வந்த வேலை முடிந்ததும், வீடு அடைவதில் பெருவிருப்புடையன் தலைவன் என்பதை அறிவான் பாகன்; ஆகவே, தேரை விரைந்து ஓட்டிவந்து தலைமகளின் வீட்டு வாயிலில் நிறுத்தி, "இறங்குக" என்று தலைமகனை நோக்கிக் கூறினான். அதுகேட்ட தலைவன் வியப்புற்றுக் கூறுகிறான்: "பாக! தேர் ஏறியதுதான் எனக்குத் தெரியும்; தேர் ஓடியதாகவே எனக்குத் தோன்றவில்லை; இதோ, தலைவியின் வீட்டின்முன் நிறுத்தி விட்டு "இறங்குக" என்ற நின் சொல் கேட்டு வியப்புற்றேன்; வாயுவேகம், மனோவேகம் என்பார்களே, அப்படியல்லவோ வந்திருக்கிறது தேர்! ஒருவேளை காற்றையே குதிரையாக மாற்றிப் பூட்டிக்கொண்டனையோ? அல்லது. உன் மனத்தையே குதிரையாகமாற்றிப் பூட்டி ஓட்டினையோ? எவ்வாறு இவ்வளவு விரைவில் வந்தது தேர்?" என்று பாராட்டிக்கொண்டே, தோளோடு தழுவி அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்று விருந்தளித்து மகிழ்ந்தான்.

"பெருந்தேர் யானும்
ஏறியது அறிந்தன் றல்லது, வந்தவா றுு
நனியறிந் தன்றே இலனே ;.....
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
"இழிமின்" என்றநின் மொழிமருண் டிசினே ;
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ ?
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ ?
உரைமதி ; வாழியோ ! வலவ." (அகம் : ஈடஅச)

மழை பெய்துவிட்ட நிலத்தில் தேர்உருளை ஓடிய வழியே, நீர் விரைந்து ஓடுவது ஊர்ந்துசெல்லும் பாம்பு விரைந்து பாய்வதுபோலும் என உவமை காட்டுவதும்,

"தண்ணில மருங்கில் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச
செல்லும் நெடுந்தகை தேர்." (அகம் : ஈஉச)

மாலை வந்துற்றலும், வேலியைக் கடந்துவரும் காட்டுப்பூனையால், தன் பார்ப்புகளுக்கு ஏதம் உண்டாதலும் கூடும் என அஞ்சிய கோழி, அவற்றை ஏமம் சேர்ந்த இடத்திற்குக் கூட்டிச்செல்லுமாறு, கவலையோடு பலகால் கூவி அழைக்கும் எனக் கூறிச் சிற்றுயிர் மாட்டும் உளவாம் நற்றாய் அன்பினைப் புலப்படுத்துவதும் போற்றற் குரியவாம்.

கூ. கச்சிப்பேட்டு* நன்னாகையார்

நாகையார் என்பதே இவர் இயற்பெயர்; இது நல்லவர் எனச் சிறப்பிக்கவரும் நல் என்ற அடையைப் பெற்று நன்னாகையார் என்று ஆயிற்று. இவர் பெயர் சில இடங்களில் நன்னாகையார் எனவும், சில இடங்களில் கச்சிப்பேட்டு நன்னாகையார் எனவும் வருகிறது; தொண்டைநாட்டில் சிறப்புற்றோங்கிய காஞ்சிமாநகரை அடுத்துக் கச்சிப்பேடு என்றோர் ஊர் உளது. ஒரு நகரத்தின் புறத்தே அதைச் சார்ந்து இக்காலத்துச் சந்தைபோல் நாள்தோறும் நிகழும் வணிக நிலையத்தைக் குறிக்க வழங்கிய பேட்டு என்ற பெயர் இன்று பேட்டை எனத்திரிந்து வழங்குகிறது. கச்சிப்பேடு, புலவர் பலர் வாழ்வால் பெருமையுற்றது. இளந்தச்சனர், பெருந்தச்சனர், காஞ்சிக்கொற்றனர் முதலிய புலவர்களைப் பெற்றெடுத்த பெருமையும் அதற்குண்டு.

நாகையார் பாடிய பாடல்கள் எட்டு; அவை அனைத்தும் குறுந்தொகை என்ற ஒரு நூலிலேயே தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் பாடல் முழுதும், கணவன் பொருள் குறித்துப் பிரிந்தான் என்பது கண்டு மனைவி ஆற்றுமை; அவள் ஆற்றுமைகண்டு தோழி ஆற்றுதல் என்ற பொருள் வயிற்பிரிவே பொருளாக அமைந்துள்ளன. இவர் மேற் கொள்ளும் உவமைகள் மிகச் சிறந்தனவாதலேயன்றி, அரியகருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிப்பனவாகவும் உள்ளன.

கணவன் பிரிவால் மனைவிக்கு உண்டான வருத்தம் சிறிதும் குறைதலின்றிப் பெருகிற்று என்பதற்குக் கொல்லன் உலையில் காற்றடிக்கும் துருத்தியின்தோல் சிறிதும் ஓய்வின்றித் தொழிலாற்றப்படுவதை உவமை கூறியுள்ளார். ஊருக்கு ஒரு உலை என்று இருந்தால், அத்துருத்திக்கு ஓய்வு சிறிது கிடைப்பினும் கிடைக்கும்; துருத்தியின்தோல் ஆட்டப்பெறுமல் அமைதி கொள்ளுதலும் கூடும். ஆகவே, அத்தோல் சிறிது அமைதியுறுவதே

(பாடம்) * கசசிப்பெட்டு.

போல், மனைவியின் துயர் சிறிது குறைதலும் கூடும் என்ற பொருள்பட்டுத் தலைவியின் துயர் குறைந்து தோன்றும். ஆகவே, ஓய்வின்றித் தொழிலாற்றும் துருத்தி என்று அறிவிக்க விரும்புகிறார். ஓர் ஊருக்கு ஒரு உலையாயின் தொழில் குறைந்திருக்கும்; பல ஊர்களுக்கும் சேர்ந்து ஒரு உலையானால், அதற்குச் சிறிதும் ஓய்வே இராது ஆகவே, தலைவியின் துயர்க்கு ஏழூர்க்குமாக ஓர் ஊரில் அமைந்த ஓர் உலையினை உவமை கூறினர்.

ஏழூப் பொதுவினைக்கு ஓரூர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்தும் என்நெஞ்சே.

(குறுந: களஉ.)

இதனால், தலைவியின் துயர் மிகுதி உணர்த்தப்படுதலோடு, பண்டைத் தமிழகத்தின் வாழ்க்கை அமைப்பு முறைகளில் ஒன்றும் விளங்குகிறது. ஊர்தோறும் ஒரு உலை வைத்தால், போதியதொழில் கிடைக்காது கொல்லன் வாழ்க்கை நிரம்பாது போகும். அதனால் பல ஊர்களுக்கும் நடுவிடமாக அமையும் ஓர் ஊரில் அவன் உலை வைத்துக்கொள்ள, அவ்வூரைச் சூழ உள்ள மக்கள் அனைவரும் அவ்வொருவனிடத்திலேயே, தம் தொழிலுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வாராயினர். இதனால் வேண்டிய தொழிலைப் பெற்று அவனும் வளமாக வாழ்வான்; இது பழந் தமிழர் கண்ட பண்டைக்காலச் சிற்றூர் அமைப்பு முறையாம்.

எ. கழார்க் கீரன்எயிற்றியார்

கழார் என்பது, காவிரி கடலோடு கலக்குமிடத்தில் இருக்கும் ஒரு சிற்றூர்; காவிரிப்பூம்பட்டினத்திற்கு நான்கு அல்லது ஐந்துகல் தூரத்தில் இருப்பது; அவ் வூருக்கு அருகே, காவிரியில் அமைந்த படித்துறை, பலரும் படிந்து ஆடும் பெருமை வாய்ந்தது; சோழராட்சிக்கு அடங்கிய மத்தி என்போனுக்கு உரியது. அவ்வூரில் கீரன் என்பார் ஒருவர் இருந்தனர். கீரன் என்ற பெயர், ஒரு வகைப் பார்ப்பாருக்கு உரிய குலப்பெயர் என்றும், சங்கை வாள்கொண்டு அறுத்துக் கைவளை முதலியன செய்தல் அக் குலத தொழிலாம் என்றும் கூறுவர்; பொற் கொல்லர், இரும்புக் கொல்லர், மரத்தச்சர் ஆகியோராகிய கம்மியரையே கீரர் என்ற சொல் குறிக்கும் என்று கொள் வோரும் உளர் அஃது எவ்வாறாயினும், அக்குடி, நக்கீரர் போன்ற நல்லிசைப்புலமை சான்ற நல்லாசிரியர் பலர் பிறந்த பெருமையுடையது என்பதில் ஐயமில்லை. அத் தகைய பெருமைமிக்க குடியிலே பிறந்தவர் கீரர். ஆகவே, வழிவழியாகத் தமிழ் வளர்த்த மரபோடு தொடர்புடைய வர் நம் எயிற்றியார் என்பது அவருக்குப் பெருமை யளிப் பதே. எயினி என்பதைப்போலவே, எயிற்றி என்பதும் குறிஞ்சிநிலப் பெண்மக்கள் பெயராம்; ஆகவே, இவர் குறவர் குடியிலே பிறந்தவர் என்பது உறுதி; குறவர் குடியிலே பிறந்த இவர், கீரன் என்ற வேறு குடியிற் பிறந் தவரை மணந்து, மணவினைக்குத் தடை செய்யும் வகையில் குடிப்பிரிவினையைக் கொள்ளவில்லை தமிழர் என்ற கொள் கைக்குச் சான்றாயினர் என்று கொள்ளுதல் நன்று.

எயிற்றியார் கழார்த்துறையில் வாழ்ந்தவர் ஆகவே, அவ்வூர, அவ்வூராள், அவ்வூரையடுத்து வாழும் பிற உயிர் இவற்றின் இயல்புகளை நன்குணர்ந்துள்ளார்; ஒரு பாட் டில், அவ்வூர் மக்கள் நாள்தோறும் தாம் உண்ணும் முன் னர்க் காக்கைக்குச் சோறுபோடும் இயல்பினர் என்பதை யும், அதை நாள்தோறும் உண்டு பழகிய காக்கைகள், காற்றும் மழையும் கலந்தடிக்கும் காலத்திலும் அச் சோற்

றிற்காக வழக்கமாய் உட்காரும் மரக்கிளையில் இருந்து காத்திருப்பதையும் அழகாக எடுத்துக் கூறியுள்ளார் (நற் : உஅச.)

இவர் பாடல்கள் எல்லாம் குளிர்காலக் கொடுமையை விளக்குவனவாகவே உள்ளன. வாடைக் காற்று வீசும் பனிக்காலக் கொடுமையை விளக்கிக் கூறும் இவர் பாடல் களைப் படிப்பவர் ஒவ்வொருவரும், அவ்வாடையின் கொடு மையால் தாமும் தாக்குறுவதுபோன்ற உணர்ச்சியினைப் பெறுவர்; அவ்வளவு நுண்மையாக, அப்பனிகால இயல்பை விரித்துரைத்துள்ளார்; தண்ணீரில் வாழும் தாமரையை யும் கருக்கும் பனி, மலையும் நடுங்கும் குளிர் என ஓர் இடத்தில் கூறியுள்ளார்.

"முளரி கரியும் முன்பனிப் பாளுள்
குன்றுநெகிழ்ப் பன்ன குளிர்" (அகம் : கசுஉ.)

நகர்க்காவலர் நள்ளிரவிலும் உறங்குவதொழிந்து, நாழிகை எண்ணுவாராய் விழித்திருப்பதே போல், தலைவ னைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியும் துயில் ஒழிந்து துயர் உற்றுள் எனப்பாடி நகர்க்காவலர் தம் நல்லியல்பினை யும் வெளுக்கும தொழில்வல்ல வண்ணுத்தி கஞ்சியில் தோய்த்து ஒருமுறை தப்பிவிட்டுத் தண்ணீரிற் போட்ட வெள்ளாடை சிறிதே முறுக்கு நெகிழ்ந்து தோன்றுவது போல் பச்சிலைகட்கிடையே வெண்ணிறப் பகன்றை மலரும் எனப்பாடி வண்ணர் தம் வெளுக்கும் தொழில் வன்மை யினையும் வாயாரப் பாடியுள்ளார்:

"நள்என் யாமத்து ஐயெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி ணுணும் என்கண்
துஞ்சா வாழி தோழி! காவலர்
கணைக்காய் வகையின் வருந்தி என்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே." (குறுந் : உசுக.)

"நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ."
(குறுந் : கூ0.)

அ. காக்கைபாடினியார் நச்செள்ளையார்

பெரும்பாலான தமிழ்மக்களால் நன்கு அறியப்பட்டு அவர்கள் உள்ளத்தில் என்றும் நீங்காது குடிகொண்டிருக்கும் நல்லிசைப் புலமை மெல்லியலார் ஒரு சிலருள், காக்கைபாடினியார் நச்செள்ளையாரும் ஒருவராவர். பண்டைத் தமிழர்களின் மறக்குடி மாண்பைப் படம் பிடித்துக் காட்டும் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றே, அவருக்கு அத்தகைய பெரும்புகழை அளிக்கின்றது.

தமிழ்நாட்டுச் சிற்றூர் ஒன்றில் ஒரு வீட்டின் வெளியே கிழவியொருத்தி நின்றுகொண்டிருக்கிறாள்; தளர்ந்த நரம்புகள்; வற்றிய உடல்; நரம்புகளெல்லாம் மேலே எழுந்து நன்கு தோன்றுகின்றன; இடையோ மிகவும் சிறுத்துக் காணப்படுகிறது; அவளுக்கு அவ்வளவு மூதிர்ந்த ஆண்டு; அங்கே யாரையோ வெகு ஆவலோடு எதிர்நோக்கி நிற்கிறாள். சிறிது நேரத்திற்கெல்லாம், வீரர் பலர் வெற்றிமுழக்கத்தோடு வீடு திரும்புவதைக் கண்டாள்; அவர்கள் ஒவ்வொருவரையும் உற்று நோக்கிக் கொண்டே வந்தாள்; அவள் தேடும் ஆள் அவர்களோடு வருவதைக் காணவில்லை; அவள் அச்சமும் ஆவலும் மிகுதிப்பட்டன; அவ் வீரருள் ஒருவனை அழைத்தாள்; "அப்பா! காலையில் உங்களோடு களம்நோக்கி வந்தானே என் மகன்; அவன் எங்கே? எனக்கிருப்பவன் அவன் ஒரு மகன்; மேலும் ஆண்டில் உங்களைக் காட்டிலும் இளைஞன்; அவன் உங்களோடு வரக் காணோமே ஏன்? களத்தில் அவனைக் கண்டாயா?" என்றெல்லாம் கேட்டாள் "பாட்டி! அவனா? பகைவர் படையைக் கண்டவுடனே அஞ்சி ஓடிவிட்டான்" என்று கூறி அவ் வீரன் அப்பாற் சென்றான்.

அவ் வீரன் கூறியதை அவள் நம்பவில்லை; நம்ப மறுத்தது அவள் உள்ளம்; மேலும் பல வீரரை வினவினாள்; அவர்களும் அவ்வாறே கூறினர்கள். "என் மகனா தோற்றோடிப் போனான்; உண்மையாயிருக்குமா? என்

மகன் தோற்றோடிப் போயிருப்பானு? என் குடியிற் பிறந்த எவருமே அவ்வாறு செய்யாரே! என் மகன் மட்டும் எப்படித் தோற்றோடியிருப்பான்; பலர் கூறுகின்றார்களே 'தோற்றோடிப் போனன்' என்று; அது பொய்யாகவா யிருக்கும்? அவ்வளவு பேருமா பொய் கூறுவர்? என் குடியின் இயல்பிற்கு மாறுக, 'அவன் தோற்றோடினன்' என்பது உண்மையாக இருக்குமானால், அது அவன் பழியாக இராது; அவனை வளர்த்த என் பழியே: அவனை நான் வளர்த்த முறையே தவறுடையதாகும்; அவனுக்குப் பாலூட்டி வளர்த்த நானே தவறுடையேன்; பிறந்த குடிக்குப் பழிதேடித் தந்த மகனைப் பெற்று வளர்த்த என் உடலையே சிதைக்கவேண்டும்" என்று முடிவுசெய்தாள்; கையிலும் வாளை எடுத்துக்கொண்டாள்.

இந்நிலையில், "நின் பால் குடித்து வளர்ந்த நின் மகன் தவறு செய்யான்; நின் பால் குடித்து வளர்ந்த நின் மகன் தவறு செய்யான்" என்று யாரோ கூறுவதுபோல் தோன் றிற்று. பலர் கூறியதையும் ஏற்க மறுத்தாள்; போர்க் களம் புகுந்து பார்க்கவேண்டும் என்று எண்ணினாள்; கையில் கொண்ட கத்தியுடன் களத்திற்குச் சென்றாள்; அங்கே இருபடை வீரர்களும் இறந்து வீழ்ந்து கிடந்தனர்; அப் பிணங்கள் ஒவ்வொன்றையும் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்தாள்; கடைசியில், பல பிணங்களுக்கு அடியில், உருத் தெரியாமல் ஒரு பிணம் சிதைந்து கிடப் பது கண்டாள்; உற்று நோக்கினாள்; அப் பிணம் தன் மகன் பிணமே யென்பதை அறிந்தாள்; அறிந்தாளோ இல்லையோ, அவள் உள்ளம் அளவிலா இன்பம் அடைந் தது; இன்பக் கண்ணீர் சொரிந்தாள்; அவனைப் பெற் றெடுத்த அன்று பெற்ற இன்பத்தைக் காட்டிலும் பேரின் பம் பெற்றாள்; இன்பத்தால் ஆடினாள்; பாடினாள்; அக மகிழ்ந்தாள்.

வயது முதிர்ந்தவள்; மகப்பேறு பெறும் பருவத் தைக் கடந்தவள்; ஒரு மகன் அல்லது வேறு மக்களைப் பெறுதவள். "தன் மகன் போரில் பிழைத்து வந்து

விட்டான்; தள்ளாத வயதில் தனக்குத் துணையாய் இருப்பான்'' என்று மகிழ்வதற்கு மாறுக, ''பிழைத்தோடி வந்துவிட்டானே! பிறந்த குடிக்குப் பழிகொண்டு வந்துவிட்டானே!'' என்று பதைபதைப்பதும், அவன் அக்களத்தே இறந்தான் என்பதை யறிந்து அகம் மகிழ்வதும் ஆகிய, அக்காலத் தமிழ்மகளிரின் வீர உணர்ச்சியை விளங்க உரைத்துள்ளார் காக்கைபாடினியார் நச்செள்ளையார்.

''நரம்பெழுந் தலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர்கூற
'மண்டமர்க்கு உடைந்தன னுயின், உண்டவென்
முலையறுத் திடுவென் யான்'எனச சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச
செங்களம் துழவுவோள் சிதைந்து வேறுகிய
படுமகன் கிடக்கை காணூஉ
என்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே.' (புறம்:உஎஅ)

இப் பாட்டைப் பாடித் தமிழர் உள்ளத்தில் அழியா இடம் பெற்ற இவ் வமணமையாரின் இயற்பெயர் செள்ளை என்பதாம்; செள்ளை என்ற இப்பெயர், பண்டைக் காலத்தில், தமிழ்ப் பெண்களுக்கு இட்டு வழங்கப்பட்டிருந்தது; சேரர் மரபில் வந்த மகள் ஒருத்தி அந்துவஞ்செள்ளை என அழைக்கப்படுகிறாள்; செள்ளை என்ற இயற்பெயர்கொண்ட இவ் வம்மையார், புலமையாலும், பிறவற்றினாலும் பெருமையும் சிறபபும் பெற்றிருந்தனர்; ஆகவே, அவர் பெயர்க்கு முன்னே, பெருமையும் சிறப்பும் குறிக்கும் 'ந' என்ற சிறப்பு அடையினையும், பின்னே, 'ஆர்' என்ற உயர்வு குறிக்கும் பன்மை விகுதியையும் கொடுத்து நச்செள்ளையார் என அழைக்கப் பெற்றார். நச்செள்ளையார் என்ற அவர் பெயரைக் காக்கைபாடினியார் என்ற தொடர் மேலும் சிறப்பித்து நிற்கிறது. அச் சிறப்புத் தொடர், அவர் பாடிய பாட்டு ஒன்றைக் கண்டு, அப் பாட்டில் அவர் கூறியுள்ள கருத்தின் சிறப்பை உணர்ந்து பாராட்டிய பிற்

கால அறிஞர்கள், அவ் வம்மையாருக்கு அளித்த பாராட்டுப் பெயராகும்.

தமிழ்மகன் ஒருவனும், தமிழ்மகள் ஒருத்தியும் தனிக் குடித்தனம் செய்கிறார்கள்; அவ் விருவர் பெற்றோரும் பெருஞ் செல்வர்களே; என்றாலும் தான் முயன்று ஈட்டிய பொருளைக்கொண்டே தன் வாழ்க்கையை நடத்துதல் வேண்டும் என்ற தனிப் பேருள்ளம் உடையவன் தமிழ் மகன்; அவன் மனைவியும் அதுவே அறநெறி என்று உணர்ந்தவள். ஆகவே, அவன் அவளை வீட்டில் விட்டுப் பொருள்தேட வெளிநாடு சென்றுவிட்டான்; செல்வது அறம் என்று கருதி அவனைச் செல்லவிட்டாள் என்றாலும், பிரியாத அவன் பிரிந்து சென்றதால் பெரிதும் வருந்துவாளாயினாள்; நாள் செல்லச்செல்ல வருத்தம் மிகுந்து கொண்டே வந்தது; வருத்தம் மிகமிக, அவள் உடலின வனப்பும் வளமும் குன்றத் தொடங்கின. சென்றவன் எவ்வளவு தொலைவு சென்றுள்ளான்? சென்ற நாட்டின் தன்மை யாது? சென்ற இடத்தில் அவன் நலம் எவ்வாறுளது? எப்போது அவன் வருவான்? என்பனவற்றை அறிந்து கொள்ள முடியாத காலம் அது அதனால், அவன் காலம் தாழ்த்தத் தாழ்த்த அவளுக்குக் கவலை மிகுந்து கொண்டே வந்தது. அவள் உடல்நலம் முற்றும் கெட்டு விட்டது. இந்நிலையில், ஒருநாள் காலை ஒரு காக்கை அவள் வீட்டுக் கூரையில் வந்து உட்கார்ந்தது. வந்த காக்கை வாயைத் திறந்து "கா, கா" எனக் கரைந்தது; காக்கை கரைந்தது கேட்டாள் அவள்; துள்ளிக் குதித்தது அவள் உள்ளம்; துன்பம் குறைந்தது; இன்பம் மிகுந்தது, உடலும் பண்டேபோல் வனப்பும் வளமும் பெற்றது; காரணம், காக்கை கரைந்தால் காதலர் மீள்வர்; விருந்தினர் வருவர் என்பதை உறுதியாக நம்பினர் அக்காலத் தமிழர்கள். வெளிநாடு சென்றோர் வருகையை அறிவிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு அஃது ஒன்றே. ஆகவே, காக்கை கரைந்தது: வேற்றார் சென்ற அவர் விரைந்து வருவார் என்று நம்பினாள்; உவகை கொண்டாள்.

அவள் எண்ணியவாறே, அவனும் அன்றுமாலையே வந்துசேர்ந்தான்; மனைவியைக் கண்டான்; தன் பிரிவு காழாது தளர்ந்திருப்பாள் என்று எண்ணினான்; ஆனால், அவள் தன் பிரிவுகுறித்துக் கவலைகொண்டதாகவோ, அதனல் உடல்நலம் குன்றியதாகவோ அவள் உடல்நிலை உணர்த்தவில்லை; அதனல், அவள் தன் பிரிவுகுறித்துக் கவலை கொள்ளவில்லை என்று எண்ணவில்லை அவன்; மாறுக, அவள் கவலைகொள்ளாது இருந்தாள்; கவலையுற்றுக் கலங்கியே யிருப்பாள்; அவள் கவலையைப் போக்கி ஆற்றியிருப்பாள் அவள் தோழி என்றே எண்ணினன்; தோழியைக் கண்டு அவள் செயலுக்கு நன்றி தெரிவித்தான்; ஆனல், அந் நன்றியை ஏற்றுக்கொள்ள மறுத்தாள் அவள். "தலைவ! நீ பிரிந்தமை கண்டு ஆற்றாது அழுத அவளுக்கு நான் எவ்வளவோ ஆறுதல் உரை கூறினேன் என்பது உண்மையே; ஆனல், அவள் அதைப் பொருட்படுத்தவில்லை; கவலைமிக்குக் கவினழிந்து வாடிக்கொண்டேதான் இருந்தாள்; ஆனல், காலையில் காக்கை ஒன்று கரைந்தது; பிறகுதான் அவள் கவலை யொழிந்து கவினுற்றுள்; ஆகவே உண்மையில் நன்றி செலுத்துவதாய் இருந்தால், அக் காக்கைக்குத்தான் நன்றி செலுத்தவேண்டும்; நள்ளி என்ற வள்ளலுக்கு உரிய காட்டிலே வாழும் இடையர்களின் பசுக்களிடத்தே பெற்ற நெய்யோடு தொண்டிநகரில் விளைந்த வெண்ணெல் அரிசி யாலான சோற்றைக் கலந்து எழுகலத்தில் வைத்துக் கொடுப்பினும், அக் காக்கை தினைக்குச் செய்த உதவிக்கு அது ஈடாகாது" என்று கூறினள்.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது; என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே."

(குறுந்: உகo.)

இவ்வாறு காக்கை கரைதலினுல் கிடைத்த சிறப்பைப் பாராட்டிப் பாடியதினுலேயே காக்கை பாடினியார் என்ற சிறப்புப் பெயர் அவருக்குக் கிடைத்தது. காக்கை பாடினியார் என்ற இப் பெயர் பிற புலவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது; இலக்கண ஆசிரியர்கள் வரிசையில் பெருங்காக்கை பாடினியார், சிறுகாக்கை பாடினியார் என்ற இருவர் இடம் பெற்றுள்ளனர்.

நச்செள்ளையாரால் பாராட்டப்பெற்ற அரசன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்பவன்; சேரர் குடியில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பேரரசன் ஒருவன் இருந்தான்; அவனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை; மற்றொருத்தி, வேளாவிக்கோமான் பதுமன் என்பவன் மகள்; வேளிர்குடியிலே வந்த இப் பதுமன் மகளுக்கும், நெடுஞ் சேரலாதனுக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவர்; ஒருவன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்; மற்றொருவன், நச் செள்ளையாரால் பாராட்டப்பெற்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் அவன் நாட்டிற்கு அண்மையில் கண்டாரணியம் என்றோர் பெருங்காடு இருந்தது. அக்காட்டில் வாழ்ந்திருந்த காட்டு மனிதர்கள், இவன் நாட்டினுள் புகுந்து, அங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டுள் மறைந்து விட்டனர்; உடனே, சேரலாதன் பெரும் படையுடன் அக் காட்டினுள் புகுந்து, அக் காட்டு மனிதரை வென்று, அவ்வாட்டுமந்தைகளை மீட்டுவந்து, தொண்டி நகருள் கொண்டு நிறுத்தினன்; இவ்வரும்பெருஞ் செயலினுலேயே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனச் சிறப்பிக்கவும் பட்டான்.

இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பத்துப் பாடல்களால் பாராட்டினர் நம் நச்செள்ளையார்; அப் பாடல்கள், பதிற்றுப்பத்தினுள் ஆறும்பத்து என்ற தலைப்பின்கீழ் வரி

சைப் படுத்தப் பெற்றுள்ளன. அப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சேரலாதன், நச்செள்ளையார்க்குப் பரிசிலாக நூற்றுயிரம் *காணமும் கொடுத்து, 'அணிகலன் ஆக்கி அணிந்து கொள்க' என்று ஒன்பது† காப் பொன்னும் கொடுத்தான். அஃதோடு அமைதி கொள்ளாது தன் அரச அவையில், தன் அரியணைக்கு அண்மையிலேயே அவர்க்கு இடமும் அளித்துச் சிறப்புச் செய்தான்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் வரலாறாக நாம் அறியக் கூடியன எல்லாம் இவ்வளவே, அவர் ஒரு பெண் பாற் புலவர்; புலவர்களும் போற்றும் புலமை வாய்ந்தவர்; கண்டீரக்கோப் பெருநள்ளியின் காலத்தே வாழ்ந்தவர்; மேற்குக் கடற்கரைத் துறைமுகப் பட்டினங்களுள் மிகச் சிறந்த துறைமுகமாகிய தொண்டிநகரை அறிந்தவர்; ஆடு கோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிப் பரிசில் பெற்றவர்; அணிகள் பல அணிந்து கொள்ளத்தக்க இளமைப் பருவ வதிலேயே பெரும் புலவராய்த் திகழ்ந்தவர்; இவையன்றி அவர் வரலாறாக வேறு எதையும் அறிய முடியவில்லை.

வீர உணர்ச்சியையும், காதல் உள்ளத்தையும் விளங்க உரைக்கும் அவர் பாடல்கள் இரண்டைக் கண்டோம்; இனி ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாராட்டி அவர் பாடிய பாடல்கள் சிலவற்றைக் கண்டு அவர் புலமையின் நலத்தைச் சிறிது நுகர்வோம்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன்னைச் சேர்ந் தோர்க்கு இனியன்; சேராதவர்க்கு இன்னன்; கொடியன் என்ற அவனியல்பை விளக்க விரும்புகின்றார் புலவர்; கடற்கரையைச் சேர்ந்த ஒரு பொழில்; அதில் நெய்தல் மலர்களால் அணி செய்யப்பெற்ற அழகிய பந்தல்; அப் பந்தலில் அரசர் பலர் அமர்ந்துள்ளனர்; அழகிய விறலியர் ஆடல் புரிகின்றனர்; ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அவ ரிடையில் அமர்ந்து விறலியர் ஆடலைக் கண்டும், பாடலைக்

---

* காணம்—பழங்காலத்தில் வழங்கிய செலாவணி நாணயம்.

† கா—பழங்கால ஒரு நிறுத்தலளவை.

கேட்டும் மகிழ்ந்திருக்கிறான். அவனுடைய இவ் வின்ப வேட்கையை அறிந்தனர் அவன் பகையரசர்கள்; அவன் மிகவும் மெல்லியன், எளியன் என்று எண்ணிவிட்டனர்; அப் பகைவர் அறியாமை கண்டு இரங்குகின்றார் நம் புலவர். "சோரலாதன் இன்பத்துறையில் ஈடுபாடுடையனே என்றும் போர்க்களம் புகுந்தால் அவனை வெல்வார் யார்? அங்கே அவன கண்வலிப்பட்டுப் பிழைத்தார் எவரும் இலரே! எமன் விரித்த வலையில் வீழ்ந்தவர் பிழைப்பது எவ்வாறு இயலாதோ, அவ்வாறே இவன் பார்வையிற் பட்டவரும் பிழையாரே! போர்க்களத்தில் இவன் பார்வை ஒருவர்மீது வீழ்ந்தது என்றால், அவர்மீது எமன் வலை வீசிவிட்டான் என்றே பொருள்; அங்கே அவ்வளவு கொடியவனையிற்றே சோரலாதன்; அத்தகையானை எளியன் என்று எண்ணுகின்றனரே அவன் பகைவர்; அந்தோ! என்ன பாவம்!" என்று ஏங்குகின்றார்.

"விறலியர், பாடல் சான்று நீடினை யுறைதலின்
வெள்வே லண்ணல் மெலியன் போன்மென
உள்ளுவர் கொல்லோ நின் உணரா தோரே!
மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்
வலைவரித் தன்ன நோக்கலை." (பதிற்று : ஙக)

ஆடவரும் மகளிரும் கைகோத்து ஆடும் துணங்கை என்ற ஆட்டத்தை ஆடிமகிழ்வர் அக்கால மக்கள்; அத் தகைய ஆட்டம் ஒன்றில் ஒரு பெண்ணிற்குக் கைகொடுத் தான் சோரலாதன், இதையறிந்தாள் அவன் மனைவி; சினங்கொண்டாள்; கையில் பிடித்திருந்த குவளைமலரை அவன்மீது எறிய ஓங்கினாள்; உடனே சோரலாதன், அவளை அணுகி, "மலரை வீசி எறியாதே; வாடிவிடும்; என் கையிற் கொடுத்துவிடு" என்று இருகை விரித்துக் கேட் டான். ஆனால், அவளோ அதை அவனிடத்தே கொடுக்க மறுத்து, "நீ யாரோ; நான் யாரோ; நின்னிடத்தே என் மலரைக் கொடேன்" என்று கூறி வேறு இடம் சென்று விட்டாள்; சோரலாதன் செய்வதொன்றும் அறியாது அவள் சென்ற திக்கையே நோக்கித் திகைத்து நிற்கின்

ருன் : அந் நிலையில் அங்கே வந்து சேர்ந்தார் நம் புலவர் ; நகைச்சுவை தோன்ற நையாண்டி செய்யத் தொடங்கி விட்டார்.

"சேரலாத ! உன் னுடைய கை நின்னிடத்தில் வந்து நின்று பொருள் வேண்டும் இரவலர்க்கு அவர் விரும்பும் பொருளைக் கொடுக்கக் குவிந்து கவிழுமே யல்லாது, பிறர் பால் சென்று இரப்பதற்காக என்றும் மலர்ந்து விரியாது என்றெல்லாம் பிறர் கூறக் கேட்டிருக்கிறேன் ; அவை யெல்லாம் பொய் என்பதை இன்று அறிந்தேன் ; இருகை விரித்துப் பிறர்பால் இரந்து நிற்பதை இதோ காண்கி றேனே !" என்று நகைத்துக் கூறினர் ; அம மட்டோடு நின்றாரல்லர். "சேரலாதன் சிறந்த வீரன் ; பகைவர் கோட்டைகளைப் பாழ்படுத்திக் கைக்கொள்ளும் போராற்றல் வாய்ந்தவன் என்று புகழ்கிறார்கள் உன்னை ; அதையும் நான் நம்பவில்லை ; அவள்பால் இரு கையேந்திக் கேட்கிறாய் அம் மலரை ; அவள் மறுத்துவிட்டு, 'யாரையோ நீ' என்று இகழ்ந்து கூறிவிட்டுச் சென்றாள், நின் மனைவியின் கையில் உள்ள குவளை மலரை நீ கேட்கிறாய் ; அவள் மறுக்கிறாள் ; உன்னால் அதைக் கைப்பற்ற முடியவில்லை ! பகைவர் கோட்டைகளை எவ்வாறு நீ கைப்பற்றியிருப்பாய் ?" என்று கூறி எள்ளி நகைத்தார்.

"தடக்கை
இரப்போர்க்குக் கவித லல்லதை இரைஇய
மலர்புஅறி யாஎனக் கேட்டிகும்"

"நின், எறிய ரோக்கிய சிறுசெங குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள் நீயெமக்கு
'யாரையோ' எனப் பெயர்வோள் கையதை
கதுமென வுருத்த நோக்கமோடு அதுங்
பாஅல் வல்லாய் ஆயினை ; பாஅல்
யாஙகு வல்லுநையோ ..வேந்தர்தம் எயிலே." (பதிற்று : ஙஉ)

"நல்லாறு எனினும் கொளவ்தீது ; மேல்உலகம்
இல் எனினும் ஈதலே நன்று".
(திருக் : உஉஉ)

என்ற குறளுரைக்கு ஏற்ப, புலவர்க்கும் இரவலர்க்கும் கொடுத்துப் பழகிய அவன் கொடைச்சிறப்பையும், பிறர் பால் கையேந்திக் கேளாப் பெருமைக் குணத்தையும், பகைவர் கோட்டையைப் பாழாக்கும் போராற்றலையும், தன் இல்லாள்பால் கொள்ளும் இன்பச் சிறப்பையும் ஒருங்கே உணர்த்தி விளங்கவைத்த புலவர்தம் சிறப்பை நோக்குங்கள்.

வேற்றார் செல்லவிரும்புகின்றான் ஒருவன்; ஊர்தி ஏறிச் செல்ல வசதியில்லாக்காலம் அது; எங்கும் நடந்தே செல்லுதல் வேண்டும்; அவன் செல்லவேண்டிய இடமோ நெடுந் தொலைவில் இருக்கிறது; பகலில் நடந்து சென்றால் வெயிலின் வெப்பம் வாட்டும் என்று அஞ்சினான்; ஆகவே, பின் இரவில் எழுந்து நடக்கலானான்; செல்லும் தொழில் மேலுள்ள வேட்கை, அவனை விடியற்காலத்திலேயே விரட்டிவிட்டது; வெளியே வந்தான்; பனி மழைபோலக் கொட்டுவதைக் கண்டான்; குளிர் தாங்கமுடியவில்லை; திறந்தவெளியில் வாழ்ந்து பழகிய விலங்குகளும் குளிரால் உடல் குன்றித் துன்புறுகின்றன என்றால் பனியால் அவன் படும்துயரை அளவிட்டுக் கூறல் இயலாது. என்றாலும், மீண்டு வீட்டிற்குச் சென்றுவிடாமல் வழிநடக்கின்றான். விரைவில் இருள்போய்ப் பகல் வரும் என்ற நம்பிக்கை அவனை நடக்கவைக்கிறது; அந் நம்பிக்கையால் நடுங்கும் குளிரையும் தாங்கிக்கொண்டு வழிநடக்கிறான்; நடக்கிறான்! நடக்கிறான்! நடக்கிறான்; ஆனால் இரவு குறைவதாகவோ, பகல் தோன்றுவதாகவோ தோன்றவில்லை; அப்போது தான், அது மாசித்திங்கள் என்ற நினைப்பு வந்தது; மாசித் திங்களில் பகல் குறைவு; இரவே நீண்டது என்பதை யுணர்கிறான்; உள்ளம் கலங்குகிறது; எனினும் உறுதி குலையாமல் குனிந்து நடந்துகொண்டே செல்கிறான்; நெடுந்தொலைவு சென்று நிமிர்ந்து நோக்கினான்; கிழக்கே ஞாயிறு தோன்றிவருவதைக் கண்டான்; அந் நிலையில் அவன் உள்ளம் எவ்வளவு மகிழ்ந்திருக்கும் என்பதை உணர்த்தமுடியுமா? வழியில் வருந்தும் அவன் வாட்டம்

தீர ஞாயிறு தோன்றியதைப்போல, இரவலரின் இடும்பை தீரத் தோன்றினன் சோரலாதன் என்று சிறப்பிக்கின்றார் நம் புலவர். இவ் உவமையால், அவ்விரவல் மக்களின் நீண்டகால வறுமையின் கொடுமையும், அவர்களுக்குப் பொருள்களை வாரி வழங்கும் சோரலாதன் வள்ளன்மையும் ஒருங்கே தோன்றக் கூறியுள்ள சிறப்பை யுணர்க.

"பகல்நீ டாகாது இரவுப்பொழுது பெருகி,
மாசி நின்ற மாகூர் திங்கள்
பனிசுரம் படரும் பாண்மகன் உவப்பப்
புல்லிருள் விடியப் புலம்புசேண் அகலப்
பாயிருள் நீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றி யாஅங்கு
இரவன் மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய .....செல்வர் செல்வ!" (பதிற்று : ருக)

செய்யுளில் உவமையினை மேற்கொள்வதில் நம் புலவர் புதுமுறையொன்றை மேற்கொண்டுள்ளார்; "மாரியன்ன வண்மை" என்று ஒருவன் வள்ளல் தன்மைக்கு மழையை உவமை கூறுதல் மரபு; இதனால், வள்ளல் மேகம் போன்றவன் என்று பொருள்படும்; இவ் உவமைகண்டு அஞ்சுகின்றார் நச்செள்ளையார்; நீர் ஏந்திக் கருக்கொண்டு வந்த மேகம், மழையைப் பெய்தபின்பு வெண்ணிறம்பெற்று, மேலே எழுந்து சிறுசிறு பிசிராக மாறி மறைந்துவிடும்; இது மேகத்தின் இயல்பு; சோரலாதன் மேகத்தோடு ஒப்பானவன் என்று கூறினால், அவனும் அம் மேகத்தைப் போன்றே தேய்ந்து அழிந்துபோய் விடுவானே என அஞ்சுகின்றார்; ஆகவே, அவ்வாறு "அழியாது வாழ்க" என்று வாழ்த்துகிறார்.

"பெய்து புறந்தந்து பொங்க லாடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச
சென்று அரூலியரோ பெரும!"

சோரலாதனுக்கு மேகத்தை உவமைகூறி, தம் உள்ளத் தூய்மையையும் உணர்த்தும் அவர் புலமையின் சிறப்பே சிறப்பு!

ஈ. காமக்கணிப் பசலையார்

பசலையார் என்ற பெயர், பசலை என்ற நோயின் இயல்பைப் பாடிய காரணத்தால், மாறேக்கத்து நப்பசலை யார்க்கே உரியது என்றாலும், அக் கால மகளிர் பலரும், அப் பெயரைத் தாமும் வைத்துக் கொண்டிருந்தனர்: சூமிழி நாழலா நப்பசலையார், போந்தைப் பசலையார் என்ற பெயர்களைக் காண்க; அத்தகைய மகளிருள் காமக்கணிப பசலையாரும ஒருவர். பசலையார் என்ற பெயரை எவ்வாறு மகளிர் பலரும் வைத்துக் கொண்டிருந்தனரோ, அவ்வாறே காமக்கணி அல்லது காமக்கண்ணி என்ற பெயரையும் அக்கால மகளிர் பலரும் தங்கள் பெயராக வைத்துக் கொண்டிருந்தனர்: வெறிபாடிய காமக்கண்ணியார் என்ற பெயரைக் காண்க. இவர், அவ்விரு பெயரையும், தம் ஒரு பெயராகக் கொண்டுள்ளார். மதுரை காமக்கணி நப்பாலத்தனர் என்ற புலவர் ஒருவர், அகநானூறு பாடிய புலவர் வரிசையில் காணப்படுகிறார். காமக்கணி என்ற தொடர் இருவர் பெயரிலும் வருவதைக்கண்டு, இருவரை யும் ஒருவராகக்கொண்டு, காமக்கணி நப்பசலையார் மதுரை யில் வாழ்ந்த நல்லிசைப் புலமை மெல்லியலார் என்று கூறுவர் சிலர்.

இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்தது நற்றிணை யில் வரும் பாட்டொன்றே; ஒன்றேயாயினும், அது அழகு நிறைந்து அறிவுரை பல கூறும் ஆற்றல் வாய்ந்து காணப் படுகிறது.

இளவேனிற்காலம், கணவனும் மனைவியும் கலந்து வாழவேண்டிய காலம்; சோலைக் குயில்கள் தம் பெடை யோடு இணைபிரியாதிருந்து இன்பம் அனுபவிக்கும் காலம்; இத்தகைய காலத்தே ஒருத்தியின் கணவன் பொருள் தேடிவரப் பிரிந்து சென்றுவிட்டான். "நாம் வாழ்க்கை யில் இன்பத்தை துகர்ந்து வெறுத்துவிட்ட முதியோர் அல்லர்; நல்ல இளமையுடையோம்; இன்ப உலகில் இப் போதுதான் அடியெடுத்து வைத்துள்ளோம்; அவ்வா

முகவும், இந்தப் பருவத்தில் இத்தகைய இளவேனிற் காலத்தில்—என்னைத் தனியேவிட்டுப் பிரிந்துவிட்டார்; குயில்கள் கூடியிருந்து 'கூ, கூ'வெனக் கூவுவதைக் கேட்டு மகிழ்ந்தவர்தான் அவர்; கூ, கூ எனக் கூவும் குயில்கள் என்ன கூறுகின்றன தெரியுமா? 'மக்காள்! செல்வம் நிலையற்றது; சூதாடு கருவி உருட்டுந்தோறும் உருட்டுந்தோறும் ஒன்றுபோல் விழாமல், மாறி மாறி விழுவதேபோல், செல்வமும் ஒரே தன்மையாய் இராமல் குறைவதும் நிறைவதுமாய் மாறி மாறி வரும்; ஆகவே, அச் செல்வத்தை மதித்து இன்பம் அனுபவிக்கவேண்டிய இளமைக் காலத்தில், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து போய்விடாதீர்கள்; எங்களைப்போல் இணைந்து இருந்து இன்பம் நுகருங்கள்,' என்று கூறுகின்றன, என அன்று எனக்குக் கூறி மகிழ்விதவர்தான் அவர்; நிலையாத பொருளைத் தேடிப் பெறவேண்டும் என்று அவர் பிரிந்து போய்விட்டார்; 'பிரியேன்; பிரியின் உயிர்தரியேன்; அறன் அல்லன செய்தவனும் ஆவேன்' என்று அன்று கூறியதை அழித்துப் பேசும் அறனிலி அல்லர் அவர்; அறத்தை அறிந்தவர்; அறவழி நடப்பவர்; இருந்தும், இன்று பிரிந்துவிட்டாரே!" என்று பெரிதும தன்புற்றாள். பினனர்ச் சிறிதுநேரம் அமைதியாக இருந்து சிந்தித்தாள; "இளமை நில்லாது; இளமை கழிந்தபின்னர் இன்பமு நுகர்தலும் இயலாது; பொருளோ சகடக்கால்போல் மாறி மாறி வரும் இயல்புடையது. சேர்ந்தோர் துயர்உறத் தான் பிரிந்து செல்லுதல் அறன் அன்று என்றெலலாம் அறிந்தவர் பிரிந்தார் என்றால், பிரிவின் இன்றியமையாமையினை உணர்ந்தே பிரிந்திருத்தல் வேண்டும். இருந்து வாழ்ந்தால் இருவரும் இன்பம் பெறுவோம்; ஆனல் பொருள் பெறமுடியாது; பொருள் நில்லா இயல்புடையது என்றாலும், அது இல்லையானல் அறவோர்க்கு அளித்தல்முதலிய இல்லறக் கடமைகளை இனிது ஆற்றல் இயலாது.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு." (திருக்குறள்: அக)

அன்றே அந்தக் கடமையில் தவறுதல் கூடாது; அதற்குப் பொருள் மிக மிகத் தேவை;

"அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச செவிலியால் உண்டு." (திருக்குறள். எருள)

ஆகவே, அறத்திற்கும் பொருள்தேவை; அறத்தினும் பொருளே சிறப்புடைத்து," என்று அறிந்தார் அவர்; ஆகவே பிரிந்தார் என்று அவளுக்கு உண்மை உணர்வு உண்டாயிற்று "பொருளின அருமையே அருமை" என்று அவள் உள்ளம் அவளறியாமலே கூறிற்று.

"பொதும்புதோ றல்கும் பூங்கண் இருங்குயில்
'கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின்! அறிவுடையீர்!' எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல,
மெய்யுற இருந்து மேவர நுவல,
இன்னே தாகிய காலைப் பொருள்வயின்
பிரிதல் ஆடவாக்கு இயல்பெனின்
அரிதுமன் றம்ம! அறத்தினும் பொருளே." (நற்றிணை: உசஉ

"என்னைவிட்டுப் பிரிந்தானே" என்று ஏங்கிச் சினவாது, "பிரிதல் அவர்கடன்; அதற்குத் துணைசெய்தல் என்கடன்; இல்லறப் பண்பிற்கு ஏற்றது" எனத் தன் கடமையுணர்ந்து தயர் பொறுத்துக்கொள்ளும் தலைமகள் ஒருத்தியைக் காமக்கணிப் பசலையார், நமக்கு அறிமுகம் செய்துவைத்துள்ளார்.

கo. காவற்பெண்டு

காவற்பெண்டு என்பது செவிலித்தாயைக் குறிக்க அக்காலத்தே வழங்கிய ஒரு பெயர். அதுவே இவர்க்கு இயற்பெயராக அமைந்துவிட்டது. சிறந்த அரசர்குடி ஒன்றில் இவர் செவிலித்தாயாகத் தொழிலாற்றியிருப்பர் என எண்ணுவர் சிலர். சோழன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழ அரசனுக்குச் செவிலித்தாயாக இவர் இருந்தா என்றும் கூறுவர்; ஆனல், அதற்கான சான்று எதையும் அவர்கள் காட்டவில்லை புறநானூற்றில், இவர்பாட்டு, போரவைக் கோப்பெருநற்கிள்ளியைப் பாராட்டிவந்த பாக்களையடுத்து வைக்கப்பெற்றுள்ளமையே இவரை, அவன் செவிலித்தாயாகக் கோடற்குக் காரணம் போலும்; முன்பாட்டு, இன்னரைக் குறிக்கிறது; ஆகவே, இதுவும், அவரையே குறித்ததாதல் வேண்டும் எனக் கோடல் பொருந்தாது. முன்னும், பின்னும்வரும் பாக்கள், ஒருவரையே குறிக்க, இடைவரும் பாட்டு, யாரைக்குறிப்ப தெனும் தெளிவின்றிவரின், ஒரோவழி அப்பாட்டையும், அவரைக் குறிப்பதாகவே கோடல் பொருந்தும்; இவர் பாட்டு அவ்வாறு வரிசை செய்யப்பெறவில்லை; இவர் பாட்டை அடுத்துவரும் பாட்டு, போரவைக்கோப்பெருநற் கிள்ளியைக் குறிக்கவில்லை; மாறாக அதியமான் நெடுமானஞ்சியைக் குறிக்கிறது. ஆகவே, இவரை அப் போரவைக் கோவின் செவிலித்தாயாகக் கோடல் பொருந்தாது எனக் கொள்க. சில ஏடுகளில் இவர் பெயர் காதற்பெண்டு என்றும் காணப்படுவதை நாம் மறத்தல் கூடாது. இவர் பெயர் எதுவேயாயினும் இவர் தொழில் எதுவேயாயினும், இவர் பாட்டைப் படிப்போர் ஒவ்வொருவரும், இவர் ஒரு மறக்குடி மகளாய்ப் பிறந்து மற்றொரு மறக்குடியில் வாழ்க்கைப்பட்டவர் என்பதும், மறம்விளங்கும் மகன் ஒருவனுக்குத் தாயாம் பேறுபெற்றவர் என்பதும், சிறு சொற்களால் பெரும்பொருள்களை விளங்கவைக்கும் புலமையுடையவர் என்பதும் உணர்வர்.

காவற்பெண்டு, "இடம்பட வீடிடேல்;" "சிறுகக் கட்டிப் பெருகவாழ்;" என்பதற்கேற்ப, சிறிய, ஆனல், அழகிய வீடொன்று கட்டி வாழ்ந்திருந்தார். அவர் ஒரே மகன், நாடுகாவல் கருதி நடக்கும் போரில் கலந்து கொள்ளச் சென்றிருந்தான். போர் பல நாள் நீடித்தது; அதனல், அவ்வூரார் அவனை நெடுநாளாகப் பார்க்கவில்லை; அந்நிலையில் அண்டைவீட்டு மகள் ஒருத்தி அவர் வீட்டிற்கு வந்தாள்; வந்து அவ்வீட்டுத் தூண்களில் ஒன்றைத் தழுவி நின்றுகொண்டே அவரை நோக்கி, "நின் மகனை நெடு நாளாகவே காணமுடியவில்லையே! அவன் எங்கே? பெற்ற உன்னைத் தனியேவிட்டு அவன் எங்கே போயிருக்கிறன்?" என்று கேட்டாள். அதற்கு அவர், "அம்மா! என் மகன் என்னைத் தனியேவிட்டுப் போய்விட்டான் என்று துயருறு கின்றாய்; என்பால் நீ காட்டும் அன்பிற்கு நன்றி; ஆனல் ஒன்று உரைக்கிறேன் கேள்; என்னைத் தனியேவிட்டுப் போய்விட்டானே யென்று கவலைகொள்கிறாயே, எனக்கும் அவனுக்கும் உறவென்ன இருக்கிறது? நான் அவனைப் பெற்றேன் என்பது உண்மைதான்; அவனைப் பத்துமாதம் சுமந்த வயிறும் இந்த வயிறுதான்; அதனலேயே அவன் எப்போதும் இங்கேயே இருக்கவேண்டுமா? புலிகூட இளமையாக இருக்குமபோது மலைக் குகைகளில் சில நாள் இருந்து வாழ்கின்றன; அதனல் அது எப்போதும் அங் கேயே வாழ்வது கிடையாது; அவ்வாறு வாழ்ந்திருக்கும் என்று எவரும எண்ணுர்; அதைப்போல், நான் பெற்றேன் வளர்த்தேன்; என் கடன் அஃதேதாடு தீர்ந்தது; அவனும் ஆண்மகனுகிவிட்டான்; ஆண்மகனுகிவிட்ட அவன், இனி யும என்னேடு இருந்து இங்கேயே வாழவேண்டும் என்று எண்ணுவது அறிவுடைமையன்று; அவன் தன் கடன் செய்யச் செல்வதே அறம்; களிறு எறிந்து பெயர்த லன்றே அவனைப்போன்ற காளையர்க்குக் கடன்; அதை அவன் செய்யப் போயிருப்பான்; அவன் அதில் சிறிதும் தவறுன்; ஆகவே, எங்கே போயிருக்கிறன்? என்ன செய் கிறன் என்றெல்லாம் கவலைப்படவேண்டிய நிலை எனக்கு இல்லை. அவனைக் காணவேண்டும் என்று எப்போதாவது

எண்ணினுல் நேரே போர்க்களம் செல்வேன்: அவன் அங்கே யிருப்பது உறுதி; காண்பேன்; மீள்வேன்; இப் போதும் அவன் அங்கேதான் இருப்பான்" என்று கூறினர்:

"சிற்றில் நற்றூண் பற்றி 'நின்மகன்
யாண்டுள னோ?"என வினவுதி, என்மகன்
யாண்டுள னுயினும் அறியேன்; ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்லள போல
என்ற வயிரே இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே." (புறம்: அசு)

இப்பாட்டு ஒன்றினுலேயே, காவற்பெண்டின் மறக்குடி உள்ளத்தின் மாண்பும், அக்கால இளைஞர் தம் கடமையில் சிறிதும் தவறார், ஆகவே, தாய் தந்தையர் அவர் ஒழுக்கங் குறித்துச் சிறிதும் கவலைகொள்ளார்; மக்களைப் பெற்றுப் பேணிவிடுவதே தம் கடன்; அஃதோடு அவர்க்கும் தமக்கும் உள்ள உறவு அற்றது; இனி அவர், அவர்கடன் ஆற்றச் செல்லவேண்டும் என்று எதிர்பார்ப்பதன்றி, என்றும் தம் அருகிலேயே யிருந்து தமககு வேண்டுவனவே புரிந்து கொண்டிருக்கவேண்டும் என எதிர்பார்ப்பது அறிவுடைமை யன்று எனறே அக்காலப் பெற்றோர்கள் கருதினர் என்ற உண்மைகளும் வெளியாதல் காண்க. இவ்வளவு கருத்துக் களையும் தம் சிறுபாட்டு ஒன்றினுலேயே விளங்கவைத்த காவற்பெண்டின் புலமைச் சிறப்பே சிறப்பு!

௪௪. குமுழிஞாழலார் நப்பசலையார்

குமுழி ஞாழலார் நப்பசலையார் என்ற இப்பெயர் இவருக்கு ஏன் வந்தது என்பதை அறிந்துகொள்ள முடிய வில்லை ; இவரின் பிறவாழ்க்கை வரலாறுகளையும் அறிந்து கொள்ள இயலவில்லை.

இவர் பாடிய பாட்டு ஒன்று ; அது அகநானூற்றில் நெய்தல்திணை குறித்து வந்துளது; இவர் மக்கள் உள்ளத் தையே அன்றி, பிற உயிர்களின் இயல்பையும் உள்ளவாறு உணர்ந்து உணர்த்தவல்லவர் என்பது அச் செய்யுளால் அறியப்படும்; ஆமை முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும் முறையை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்; சூல்கொண்ட பெண் ஆமை, முட்டையிடும் காலம் நெருங்கிவிட்டது என்பதை அறிந்துகொண்டவுடனே, அந் நீர்நிலையைவிட்டு வெளிவந்து, கரையில் மேடான இடத்தைத் தேடிக் கண்டு, அங்கே குழியொன்று பறித்து அதில் முட்டைகளையிட்டுக் குழியை மண்ணால் மூடிப் புதைத்துவிட்டு, அவ்விடத்தை யும் அருகே வளர்ந்திருக்கும அடம்பங் கொடிகளால் மறைத்து விட்டுச் சென்றுவிடும் ; பின்னர், அம் முட்டைகள் குஞ்சு ஆகும்வரை அவ்விடத்தை விட்டக லாது ஆண் ஆமை காத்துக்கிடக்கும் என்று கூறுகிறார். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே நம் புலவர் அறிந்து கூறிய உண்மை இது.

“ஆமை இராக்காலங்களில் நிலத்திடைப் போதரும். சினையீனும் காலத்தில் நீராலும் பிறவற்றாலும் இடையூறு நிகழாததோர் தனியிடம் கண்டு, ஆங்கொரு குழிசெய்து, அதன்கண் தன் சினைகளை ஈன்று, மணலான் மெத்தென மூடிவிட்டுப் பின் வேறொரு வழியால் நீர்நிலையை அடை யும். சினையீனும் காலம் எய்திய வழியும், அக்காலத்து அது செய்தலால் தனக்காதல் தன்சினைகட்காதல் ஊறு நிகழும் என்பது தோன்றின், அது நிகழாமைக்குரிய காலம் வருமளவும் சினையீணுது நின்று, பெயர்த்துக் கரு வுயிர்க்கும் பெற்றிமையுடையது ; சினையீன்ற ஆமை,

முன்னர்ப் போந்தவழியே மீளாமல், பிறிதொரு வழியாற் சேறல், பகையுயிர்கள் தன் சுவடுபற்றிப்போந்து, தன் சினை கட்குத் தீங்கு விளைவிக்கும் என்பது கருதிப்போலும்!.... முட்டை இட்டவுடன், ஆமைப் பார்ப்புகள் மணலைக் கிளைத்துக்கொண்டு வெளிவரும். அவற்றிற்கு அக்காலத்துக் கண் முதலிய பொறியில்லையாயினும், வாயிலால் மணலைக் கறித்துக்கொண்டே நீர் நிலையை யடையும். காந்த வூசியை எவ்வழியிற் றிருப்பினும், அது வடதிசையையே நோக்கி நிற்றல்போல, ஆமைப் பார்ப்புகள் நீர்நிலையை அடைதற்குரிய நெறியைப் பறறுதவாறு எத்துணையிடையீடுபடுப்பினும், அவை அவ்வனைத்தும் கடந்து நீர்நிலையையே தவறுது அடையும் இயற்கைவன்மை படைத்துள.*

இக்கால உயிர்நூற் புலவர்கள் பலவகையாலும் ஆராய்ந்து கண்ட உண்மை இது.

"அடும்புகொடி சிதைய வாங்கிக் கொடுங்கழிக்
குப்பை வெண்மணல் பக்கம் சேர்த்தி
நிறைசூல் யாமை மறைத்துஈன் றுய்த்த
கோட்டுவட்டு உருவின் புலவுநீ றுமுட்டைப்
பார்ப்புஇட முகும அளவைப் பகுவாய்க்
கணைவன ஓம்பும்." (அகம்: கசுo)

---

* The tortoises leave water only when the time comes for them to lay eggs The site of man will keep them off shore and the females will retain their eggs for long, rather than force unnatural risk. Landing in the still of night, they march in land to some point high enough to escape flood and high tide, dig deep pits in the sand and there lay their eggs. Then they return to the sea but not by the way they came in as if to lead astray any who should follow them to their nurseries. The young turtles, when hatched form the eggs, bite their way out of the sand and may be seen with their mouths full of grit as they march to the water. Instinct is strong and over-mastering with them. No matter how many times they may be diverted or even turned round and forced in as cpposite direction they make for the sea as a magnetic needle points to the north :...Book Of Knowledge.

௧௨. குறமகள் இளவெயினி

குறிஞ்சிநில மக்கள் எயினர் எனப்படுவர்; அவர்க ளுள் பெண் மகள் எயினி எனப்படுவாள் ஆதலாலும், குற மகள் என்றே இவர் அழைக்கப்படுதலாலும், "எம்மோன்"- எங்கள் தலைவன்—என்று பாராட்டிய ஏறைக்கோனை "குறவர் பெருமகன்" என்று இவரே அழைப்பதாலும் இவர் குறவர் குடியிற் பிறந்தவர் என்பது தெளிவு. கல்வி, செல்வம், நாகரிகம் இவற்றுல் இழிநிலையிலிருக்கும் இன் றைய குறவர்நிலையைப் பார்ப்பவர்க்கு, அக் குடியிற் பிறந் தவர் ஒருவர், அதிலும் பெண் ஒருவர் பெரும்புலவராய் விளங்கினர் என்பது அற்புதச் செயலாகவே தோன்றும். குறவர் குடியிலே பிறந்த இவர், மிகமிக இளமைக் காலத்தி லேயே புலமை பெற்றுப் பாடல் புனையத் தொடங்கி விட்டார். ஆகவே இவர், குறமகள் இளவெயினி எனஅழைக் கப்பெற்றார்.

குறமகள் இளவெயினி இனப்பற்று மிக்கவர்; புலவர் பலர் கூடியிருந்த அவையொன்றில், தம்மால் பாராட்டப் பெறும் தங்கள்குலத் தலைவனாகிய ஏறைக்கோன் என்பா னுக்கும், அப் புலவர்களால் பாராட்டப் பெறும் ஏனைய தலைவர்களுக்கும் உள்ள உயர்வு தாழ்வுகளை எடுத்துக் காட்டி, "எல்லா வகையாலும் எங்கள் தலைவன் ஏறைக் கோனே சிறப்புடையான்' என்று காரணம் காட்டி உறுதி செய்துள்ளார். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," எனக் கொள்வதே புலவர் பண்பு; அதற்கு மாறுக, "நீங்கள்; உங்கள் தலைவர்கள்; நான்; என் தலைவன் எனப் பேதங் காணல், பெரும் புலவர்க்கு அழகு அல்ல என்றுலும், ஆண்டு இளமை, புலமையினும் ஆற்றல் மிக்கது ஆகவே, இளமை யுடையாராகிய இளையினி, இனப்பற்று மிக்கு அவ்வாறு கூறினர்; இளமையால் இனவுணர்ச்சி கொண்டு, பிரிவினை காட்டிப் பாடினர் என்றுலும், அவர் புலமைச் சிறப்பு, அக் குறை மறைத்து அவரைப் பெரும்புலவர் வரிசையில் வைத்துப் பாராட்டியது.

ஏறைக்கோனைப் பாராட்டிய பாட்டில், சிறந்த பல குணங்கள் ஏறைக்கோன் ஒருவனிடத்திலேயே உள்ளன; பிறர் எவரிடத்தும் அவற்றைக் காண முடியாது என்று கூறினர்; அவ்வாறு கூறுமுகத்தான், நல்லோர்பால் இருக்கவேண்டிய நற்குணங்கள இவை இவை என்று உலகோர்க்கு எடுத்துரைத்துதவியுள்ளார்.

நம்மோடு நட்புக்கொண்டு நெடுநாள் பழகி வாழ்பவர் ஒரோவழி தவறு செய்துவிட்டால், அவர் தவறு செய்து விட்டனரே என்று வெகுண்டு, அவரோடு அன்றுவரை கொண்டிருந்த தொடர்பை மறந்து, அவரைப் பகைத்துக் கொண்டு, அவர்க்குத் துயர் தருதல் கூடாது; அது சான்றோர் செயலன்று.

இரப்பாரைக் கண்டு எள்ளி நகைத்தலும், பிறர் வறுமை கண்டு வாட்டம் கொள்ளாது, அதைத் தன் வாழ்வின் உயர்விற்குப் பயன்படுத்திக் கொள்வதுமே இன்றைய உலக நிலை. இந்நிலை இருபபதாலேயே உலகம் அமைதி இழந்து அல்லல் உறுகிறது. "நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற உண்மையை உணர்ந்து தன்னைப போன்றே உலகோர் அனைவரும் உயாந்து வாழ வேண்டுமெ என்று விரும்பி, அதற்காக உழைபபதே தனக்குமெ பிறர்க்கும் நலம் தருவதாம். இதை உணர்ந்தவர் மட்டுமே, வாட்டம் ஒருபாலும், ஆட்டம் ஒருபாலும், வறுமை ஒருபாலும், செழுமை ஒரு பாலும் இருப்பது காண உளம் நடுங்குவர். அந் நடுங்கும் உள்ளம் எல்லா மக்களுக்கும் உண்டாஞல், உலகம் அன்றே உயர்ந்துவிடும்.

"எப்படியாவது வெற்றிபெற வேண்டும்; எம்முறை யைக் கையாண்டாவது வெற்றி காணவேண்டும்" என எண்ணுவது பேடி.ச்செயல்; இன்றைய உலகப் போர்த் தலைவர்கள் அதையே போர்த் தந்திரம் எனப் போற்று கின்றனர்! உண்மை வீரன், வெற்றி தரும்வழி, பழிதரும் வழியாக இருத்தல் கூடாது என்பதில் கருத்துடைய ஞவன்;

"கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது." (திருக்குறள் : எஎஉ)

என்ற எண்ணம் அவன் உள்ளத்தே தோன்றுதல் வேண்டும்.

"அழியுநாபுறக்கொடை அயில்வே லோசசாக்
கழிதறுகண்மை."

யைக் காதலிக்க வேண்டும் அவன்; அதுவே உண்மை வீரனுக்கு அழகாம்.

இம் மூப்பெருங் குணங்களால் சிறந்தார் ஒருவர் எவர்க்கும் அஞ்ச வேண்டுவதில்லை; எவர்க்கும் பணிந்து போக வேண்டுவதும் இல்லை; எங்கும் அவர் பெருமித மாகவே வாழலாம்; அரசர் பலர் கூடிய அவையிலும் அவர் நிலை உயர்ந்தே நிற்கும்; ஆகவே, அரசரும் மதிக்க வாழும் அப் பெருவாழ்வைப பெறவே ஒவ்வொருவரும் முயன்று உழைத்தல் வேண்டும்

ஏறைக்கோன், முன்னர்க் கூறிய மூக்குணங்களையும் பெற்றோன் ஆகவே, அரசவைகண்டு அஞ்சாது பெருமை யோடு வாழ்ந்தான் என்று கூறியுள்ளார்.

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்,
பிறர்கை யறவு தான்கா ணுதலும்
படைப்பழி தாமா மைந்தினன் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு நட்கலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல; எம்மோன்
பெருங்கல் நாடன் எம் ஏறைக்குத் தகுமே."

(புறம் : கஙஎ)

இவ்வாறு தம் தலைவன் புகழ் பாடுவார்பால், உலக உயர்விற்கு ஒரு வழிகாட்டியாய் நின்று அறிவுரை கூறிய எயினியார்க்கு உலகம் நன்றி செலுத்துவது கடப்பாடாகும்.

கஉ. குறமகள் குறியெயினி

இவரும் குறவர் குடியிற் பிறந்த பெண்பாற் புலவரே என்று அவர் பெயர் அறிவிக்கும் வரலாறு கதிரப் பிற ஒன்றும் அறிய முடியவில்லை; ஏறைக்கோனைப் பாடிய குறமகள் இளவெயினியாரே இவர்; இளமையில் ஏறைக்கோனைப் பாடியவராதலின் அங்கே அவர் இளவெயினி எனப் பட்டார் என்றும் தன், வாழ்நாளின் பிற்காலத்தே பாடிய நற்றிணைச் செய்யுளில், "நின்குறிப்பெவனே தோழி! என் குறிப்பு" என்ற முதலடியில் குறிப்பு என்ற சொல்லை அடுக்கிவைத்துப பாடிய காரணத்தால் இவர் குறிப்பெயினி எனப்பட்டார்; ஏடு எழுதினோர் அதைக் குறியெயினி என மாற்றி யிருத்தலும் கூடும் என்றும் கொள்வர் சிலர். குறமகள் என்பதைக் குறிஞ்சி நிலத்து நன்மகள் என்று கொள்ளாது குறக்குடியிற் பிறந்த மகள் என்று கொள்வது பிழை எனக் கூறுவர் வேறு சிலர். குறமகள் குறியெயினி, குறமகள் இளவெயினி என்பாரெல்லாம் குறவர்குடி மகளிரே என்பது குறமகள் என்ற சொல்லால் அன்றி, எயினி என்ற சொல்லாலேயே நன்கு உறுதி செய்யப்படும் என்பதை அவர் உணர்ந்திலர் போலும்.

குறவர் குடியிலே புலவரா? அக் குடிமகளிரில் இவ் வளவுபேர் புலமை பெற்றிருக்க முடியுமா? என்ற ஐய நெஞ்சத்தின் விளைவே இத்தகைய முடிவுகளெல்லாம். குறவர் குடியில் பெண்கள் பலர் புலமை பெற்றிருத்தலும் கூடும்; பேய்மகள் இளவெயினி என மற்றொரு புலவரும் இருப்பதே இதற்குச் சான்று. அவர்களை வேறு பிரித்துக் காண்பதற்காக, குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி; குறி எயினி, இள எயினி என அவர் பெயர்களுள் சில சொற்களை, அவர் பாடிய பாடலகளின் இயல்புக்கேற்ப மாற்றியமைத்து வழங்கியுள்ளனர். ஆகவே, அவ் இளவெயினியாரே, இக் குறி எயினியார் என்று கொள்வது சரியன்று; புலவர் வரலாறுகளை உணர்ந்துகொள்ளும் வழிவகையற்றிருக்கும் நிலையில் பலரை ஒருவராக்குவது, ஒருவரைப்

பலராக்குவது போன்ற தவறுகளைச் செய்யாது இருப்பதே தமிழறிஞர் தமிழ்மொழிக்கு ஆற்றும் கடனும்.

தாம் பாடிய குறிஞ்சித் திணைப்பாட்டில் வரும் தலைமகள், தலைமகன் தன்னை விரைவில் வரைந்து கொள்ளாது வாழ்கிறான் என்பதை அறிந்தும் அதுகுறித்து வருந்தாது இருக்கிறாள். அஃது எவ்வாறு எனக் கேட்பாள்போல் அவள் முகம் நோக்குகிறாள் தோழி; அதற்கு அவள் "தலைவனைக் கண்டு உறவுகொண்ட அந் நாளில், 'பிரியேன்; பிரியின் தரியேன்; அறனல்லன செய்தவனுமாவேன்' என்று சூளுரைத்துள்ளான் தலைவன்; அவ்வாறு சூளுரைத்த அந் நாளை நினைக்குந்தோறும், அவன் வரைந்துகொள்வது உறுதி என்ற எண்ணமே தோன்றுகிறது; அதனால், என் உள்ளம் அன்புறுவதில்லை; இதுவே என் கருத்து; தோழி! இதில் நின் கருத்து யாது?" என்று கூறுகிறாள். தலைவன் தெளித்த சொல்லைத் தேறியிருப்பதே தமிழ் மகள் கடன் என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார் தமிழ்நாட்டு பெண்பாற் புலவராகிய குறி எயினியார்.

"நின்குறிப் பெவனே தோழி! என்குறிப்பு
என்னெஞ்சும் நிலையா தாயினும், என்றும்
நெஞ்சுவடுப் படுத்துக் கெடவறி யாதே .....
சாரல் நாடனெஞ்சு ஆடிய நாளே." (நற்றிணை: 58)

கசு. தாயங்கண்ணியார்

பெயரன்றிப் பிறிதொன்றும் அறிய முடியாத புலவர் வரிசையில் இவரும் ஒருவர். தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவரும், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற புலவர் ஒருவரும் ஆக இரு புலவர்கள் புறநானூற்றினால் அறியப்படுகின்றனர். அவ்விருவரும் ஒருவரே எனக் கொண்டு, தாயங்கண்ணனார், தாயங்கண்ணியார் என்ற பெயர்களிடையே காணப்படும் ஒற்றுமையினைக் கண்டால், தாயங்கண்ணியார், அப் புலவரோடு யாதோ ஒரு வகையில் உறவுடையவரோ என எண்ணவும் கூடும். அஃது உறுதியாகுமானால், நம் தாயங்கண்ணியாரும் எருக்காட்டூரில் வாழ்ந்தவரே என்பதும் உறுதியாகும்; எருக்காட்டூர், தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் காவாலக் குடிக்குக் கீழ்த்திசையில் உள்ள ஓர் ஊர் என்றும், திருவாரூர்க்குத் தென்மேற்கே மூன்று நாழிகை வழித் தூரத்தில் உள்ளது என்றும கூறுவர். தாயம என்பது உரிமை என்று பொருள்படும்; அது அரசர்கள் வரி நீக்கி ஒருவருக்கு உரிமையாக்கும் நிலத்தையோ அல்லது ஊரையோ உணர்த்துவதாகும். இதனால், நம் தாயங்கண்ணியார், எருக்காட்டூரைத் தாயமாகப் பெற்ற பெருமை மிக்க குடியோடு தொடர்புடையவர் என்பதும் உறுதி செய்யப்படும.

தாயங்கண்ணியார், கணவனை இழந்த கைம்பெண்களின் துயர் நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டவல்லவர்.

கணவனும் மனைவியும் கூடி இல்லறம் ஆற்றிய பொழுது, ஆக்கிய சோறும் கறியும் மணக்கும் தாளிப்பு மணம், இரவலர் பலரை இழுத்துக் கொணர, அவர்கள் வீட்டுவாயில் என்றும் குறைவின்றிக் கூடியிருக்கும் சிறப்புடையது. வறுமையால் வாடிக் கண்ணீர் விட்டுக் கலங்கும் பலருடைய கண்ணீரை மாற்றிக் கருணை புரிந்தது அவ்வீட்டின் முன்னே அமைந்த பந்தல்; அவ்வளவு சிறப்புடைய வீடு இப்போது பொலிவிழந்து விட்டது;

கணவன் இறந்துவிட்டான்; அவன் மனைவி, தலைமயிரையும் கைவளையையும் இழந்து, அல்லி அரிசியாலான புல்லரிசி உண்டு புலம்புகிறாள்; முன்னே பலர் கண்ணீரை மாற்றியது அவ்வீடு; ஆனால் இப்போது அவள் ஒருத்தியின் கண்ணீரைக்கூட அதனால் மாற்ற முடியவில்லை; அறுசுவை அடிசில் வீடு நோக்கி வந்தவர் பலர்க்கும் அளித்த அவ்வீடு, அவள் ஒருத்திக்கு உணவளிக்க முடியவில்லை; வனப்பும் வளமும் பெற்றிருந்த வீடு, அவள் கணவன் இறந்துவிட்டானாக, வாழ்வும் வளமும் இழந்து, அவளோடு கூடி வாடி வருந்துகிறது என்ற கருத்தமைந்த அவர் பாடல் இது.

"குய்குரல் மலிந்த கொழுந்துவை அடிசில்
இரவலர்த் தடுத்த வாயிற் புரவலர்
கணைணீர்த் தடுத்த கண்ணறும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீகி
அல்லி உணவின் மனைவியோ டினியே
புல்லென் றனையால் வளங்கெழு திருநகர்
வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வா தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே."

(புறம் : உருo.)

மனைக்குரியோன் மாண்டானாக, மன மாண்பிழந்துவிட்டது எனக் கூறும் புலவர், மன மாண்பிழத்தலாவது இரவலரை இனிதேற்று, இனியன அளித்து, அவர் கண்ணீரை மாற்ற மாட்டாமையே எனக் கூறுவது பாராட்டற்குரியதாம்.

கரு. பாரி மகளிர்

பாண்டி நாட்டில் பறம்பு என்றோர் மலையுண்டு; அது மிகவும் உயர்ந்தும் அகன்றும் விளங்கிற்று; அதனால் என்றும் நீர் அறாத அருவிகள் பல அம்மலையில் பாய்ந் தோடிக்கொண்டிருந்தன; அவ்வருவிகளே யல்லாமல், இனிய குளிர்ந்த நீர் நிறைந்த சுனைகள் பலவும் அம் மலையில் உண்டு. இவ்வாறு நீர் வளம் நிறைந்திருந்ததால், அம் மலை மண்வளத்திலும் சிறந்திருந்தது; அதனால் பலா போன்ற பழவகைகளும், வள்ளிபோன்ற கிழங்கு வகைகளும், நெல் போன்ற உணவு வகைகளும் நிறையக் கிடைக்கும்; இனிய தேன் வகைகளுக்கும் இருப்பிடமாயிருந்தது அம் மலை. இவ்வாறு எல்லா வகையாலும் சிறந்த அம் மலையைச் சூழ முந்நூறு ஊர்களும் இருந்தன; அம் முந்நூறு ஊர்களைக் கொண்ட நாட்டிற்கும் அம் மலையின் பெயராகிய பறம்பு என்பதே பெயராக அமைந்தது.

அப் பறம்பு மலையையும், அப் பறம்பு நாட்டையும் ஆண்டுவந்தான் பாரி என்னும் பெருவீரன்; பெரிய கொடைவள்ளல்; அன்பும் அருளும் உடையான்; அறிவுடையோரை ஆருயிர் நண்பராகக் கொள்ளும் அவாவுடையான்; அவன் நண்பர்களுள் சிறந்தவர் கபிலர் என்ற முது பெரும் புலவர்; அவனுக்குப் பெண்மகளிர் இருவர் இருந்தனர்; அவர்கள் பெயரை அறிந்துகொள்ள முடியாத காரணத்தால், பண்டைத் தமிழர்கள் அவர்களைப் பாரிமகளிர் என்று அழைத்தனர்; ஆகவே, நாமும் அவர்களை அவ்வாறே அழைப்போம்; தமிழ் நாவலர் சரிதை என்ற நூல் மட்டும் அவ்விரு மகளிர்க்கும் அங்கவை, சங்கவை என்று பெயரிட்டு அழைக்கின்றது.

பாரிமகளிர் தம் தந்தையைப் போன்றே அன்பும் அருளும் உடையவர்; அறிவிற் சிறந்தவர்; தந்தை பாரி புலவர்களை அழைத்து அவர் பாடல் கேட்டு மகிழும் பண்புடையனே தவிர, பாடும் ஆற்றலைத் தான் பெற்றவ னல்லன்; ஆனால், அவன் மகளிரோ, அருங்கவி பாடும் அறிவுடையவர்; புலவரும் போற்றும் புலமையுடையவர்.

இவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்த அவர்கள் வாழ்வும் பாழ்பட்டது; தாழ்வுற்றது; அவர்கள் தந்தை பாரி, பேரும் புகழும் பெருக வாழ்வதைக்கண்டு பொறுமை கொண்டனர், அப்போது தமிழ்நாட்டை யாண்டுவந்த சேர சோழ பாண்டியர் என்ற தமிழரசர்கள் மூவரும்; பொறுமை, பகையாக வளர்ந்தது; பாரியை அழித்துவிட முடிவு செய்தனர்; பெரும் படைகொன்டு பாரியை எதிர்த்தனர்; அவன் மலையை முற்றுகை செய்தனர்; முற்றுகை பல நாள் நீடித்தது; என்றாலும் பாரியை வெல்ல அவர்களால் முடியவில்லை; போர் செய்து அவனை அழிக்க முடியாது என்பதை யுணர்ந்த அவர்கள், அவனை வஞ்சனையால் கொன்றனர்; பாரிமகளிர் தந்தையை இழந்தனர்; தந்தையைத் தொடர்ந்து தாயும் மாண்டாள்; பாரிமகளிர் பெற்றோர் இழந்த பேதையர் ஆயினர்; தனியராய் நின்று தவிக்கும் அம் மகளிரை அவர்கள் தந்தையின் ஆருயிர் நண்பராகிய கபிலர், ஆறுதல் கூறித் தம்முடன் அழைத்துச் சென்றார்.

பறம்புமலையை விட்டுப்பிரிந்து ஒரு திங்கள் ஆயிற்று; ஒரு நாள் அவர்கள் மூவருமம ஓர் ஊரில் ஒரு குடிசை வீட்டில் தங்கியிருந்தார்கள்; அன்று முழு நிலா நாள்; அவர்கள் அவ் வீட்டில் அமர்ந்திருக்கும்பொழுது, அவ் வீட்டை அடுத்துச் செல்லும் பெருவழி வழியாக உமணர்கள் என்னும் உப்புவணிகர் தம் உப்புவண்டிகளை வரிசையாக ஓட்டிக்கொண்டு சென்றனர். ஒழுங்காகச் செல்லும் அவ் வுப்புவண்டிகளைக் கண்டதுமே, அம்மகளிர் உள்ளம் மனக்கவலைமறந்து மகிழத்தொடங்கிற்று; இருந்த இடத்தைவிட்டு எழுந்து ஓடினர்; வீட்டருகேயிருந்த குப்பையொன்றே உயர்ந்த இடமாகஇருப்பது உணர்ந்தனர்; அதன்மீது ஏறிநின்றனர்; உப்பு வண்டிகளை ஒன்று இரண்டு என எண்ணத் தொடங்கினர்.

இக் காட்சியைக் கண்டார் கபிலர்; கண்களில் நீர் விட்டுக் கலங்கினர்; வாழ்க்கையில் நிகழும் ஏற்றத்தாழ்வுகளை எண்ணினர்; அவர் உள்ளம் உருகிற்று; அம் மக

ளிர், அவர்கள் தந்தை உயிரோடு இருந்த காலத்தில் வாழ்ந்த செல்வவாழ்வும், அப்போது அவர்கள் மேற் கொண்டிருந்த இன்ப விளையாடல்களும் அவர் மனக்கண் முன்வந்து நின்றன : பாரியை அழிக்க எண்ணிய மூவேந் தர்கள், அவன் மலையை முற்றுகையிட்டுள்ளனர் ; அம் முற்றுகைப் படையில் கலந்து வந்துள்ள யானையும் தேரும் குதிரையும் பிறவும் கணக்கிலடங்கா ; இவ்வாறு புறத்தே பகைவர் பெரும்படை ; ஆனல், அம் மகளிர்க்கு அதைக் குறித்துக் கவலைகொள்ளாக் குழந்தையுள்ளம் ; பறம்பு மலையின் உயரமான உச்சி யொன்றின்மீது ஏறிநின்றனர் ; மலைக்கோட்டைக்கு வெளியே வந்துநிற்கும் பகைவர் படைவரிசையைக் கண்டனர் ; பெரும்படை கண்டு அச்சங் கொள்வதற்கு மாருகப் பார்த்து நகைத்தனர் ; நம் தந்தை யொருவரை அழிக்க மூன்று பெரும் அரசர் களா ? இவ்வளவு பெரும் படையா ? படையில் கலந்து வந்திருக்கும் குதிரைகள்மட்டும் எவ்வளவு ? என்று ஏள னம் செய்துகொண்டே அக் குதிரைகளை ஒன்று இரண்டு என்று எண்ணிப் பார்த்தனர் ; அன்று இவ்வாறு ஆடி மகிழ்ந்தனர் ; அம் மகளிரின் இன்றைய நிலை . ? என்று ஏங்கித் துயருற்றார் ; முன்பு அவர்கள் பெற்றிருந்த செல்வ வாழ்வும், அவர்களின் இன்றையச் சிர் அழிந்த நிலையும் அவரை ஆழித் துயர்க்கடலில் ஆழ்த்தின ; குன்றேறி நின்று குதிரைகளை எண்ணிய அவர்கள், இன்று குப்பை மேடேறி, உப்புவண்டிகளை எண்ணும கோரக்காட்சி கபி லர் கண்களைக் கடலாக மாற்றிற்று

கபிலர் கண்ணீர், கவலைமறந்து களித்துத் திரியும் அம் மகளிர் உள்ளத்தே பண்டைய நினைவுகளை எழுப்பிற்று ; முந்திய முழுநிலா நாளில் தங்கள் தந்தையோடிருந்து, பல் வளம் நிறைந்த தங்கள் பறம்புமலையில் ஆடிப்பாடி அக மகிழ்ந்து வாழ்ந்த இன்ப நினைவுகளை எண்ணினர் ; அன்று, தாங்கள் ஆடிப்பாடி அகமகிழ்ந்து வாழ்தற் கிடமாயிருந்த தங்கள் இன்பப் பறம்பு, இன்று, பகையரசர் ஆட்சிக் குரிமையாகிவிட்டது ; அன்று, தங்கள் ஆடல் பாடல்களை

அருகிருந்து கண்டு அகமும் முகமும் மலர மகிழ்ந்த தம் தந்தை இன்று இல்லை; இறந்துவிட்டான்; ஒருமாத காலத்தில் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த இம் மாறுபாடு அம் மகளிர் உள்ளத்தை மத்தடிபட்ட தயிரேபோல் கலங்கச் செய்தது; தங்கள் அவலவாழ்வு குறித்து அழுது அழுது பாடினர்; அவர்கள் அழுது பாடிய பாட்டிலே ஒன்று நமக்கும் கிடைத்துளது; அது:

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்:எம் குன்றும்பிறர்கொளார்;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே."

(புறம் ௨௩௨)

ஆற்றுது தாம் அழுவதைக்கண்டு அம் மகளிரும் அழுகின்றனர் என்பதறிந்தார் கபிலர்; தாமும் தேறினர். மகளிரையும் தேற்றினர்; அம மகளிர் மணப்பருவம் எய்திய மங்கையர்; ஆகவே, அவர்களைத் தக்கார்க்கு மணஞ் செய்துவைப்பது, அவர் தந்தையின் நண்பனாகிய தன் கடனே என்று உணர்ந்தார்; மகளிரை அழைத்துக் கொண்டு விச்சிக்கோன் என்ற குறுநில மன்னன் ஒருவன் பால் சென்றார்; அவன் வளஞ் சிறந்த மலைநாடுடையோன்; யானைப்படையால் நிறைந்த பெரும் படையுடையான்; அவனை அணுகி, "அரசே! இதோ நிற்கும் இம் மகளிர், என் நண்பன் பாரியின் மகளிர்; பாரி, முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் என்ற புகழுடையான்; குலத்தாலும் குணத்தாலும் நிறைந்த இவர்களை ஏற்று மணஞ்செய்து கொள்வாயாக" என்று வேண்டினர்; ஆனால், யாது காரணத்தாலோ அவன், அம் மகளிரை யேற்றுக்கொள்ள மறுத்து விட்டான்.

முயற்சியைக் கைவிட்டாரல்லர் கபிலர்; இருங்கோவள் என்ற மற்றொரு சிற்றரசன்பால் சென்றார்; பழைய தமிழ்க்குடிகளுள் ஒன்றாகிய வேளிர்குடியிலே வந்தவன்

அவன்; போராற்றல் வாய்ந்தவன்; அவன் அரசனை சென்று அவனைக் கண்டார்; மகளிரைக் காட்டினர்; "அரசே! தன்னைப் பாடிவந்த புலவர்களுக்கே, தன் முந்நூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துப் புகழ்பெற்ற பாரியை நீ அறிவாய்; அவன் மகளிர் இவர்கள்; நான் அப் பாரியின் உயிர்நண்பன்; கபிலன்; பாரி இறந்துவிட்டான்; ஆகவே, இம் மகளிர்க்கு ஆவனபுரிதல் என் கடன்; இவர்களை நான் நினக்குத் தருகிறேன்; ஏற்று மணஞ் செய்து கொள்வாயாக" என்று வேண்டினர். அவர் வேண்டுகோளை அவனும் மறுத்தான்.

பெரும் புலவராய தம் வேண்டுகோளைக் குறுநில மன்னர்கள் மறுப்பதுகாண மனங்குன்றினர் கபிலர்; பேரரசனாகிய பாரியின் மகளிரை இவ்வாறு அரசனைவைதோறும் அழைத்துத் திரிதல் மானக்கேடு என்று எண்ணினர்; ஆகவே, தமக்கு வேண்டிய பார்ப்பார சிலரிடத்தே அம் மகளிரை ஒப்படைத்தார்; திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருக்கோவலூர்க்குச் சென்றார். அந் நாடு மலையமான்கள் என்ற ஓர் அரச மரபினரால் ஆளப்படுவது; அப்போது அவர்கள் வழியிலே வந்த சிற்றரசன் ஒருவன் ஆண்டுவந்தான், அவனைக் கண்டு, பாரி மகளிரை மணக்க அவனை இசையவைத்தார், பின்னர் அம் மகளிரை அழைத்துச் சென்று அம் மலையனுக்கு மணம் செய்து கொடுத்தார்; பாரி மகளிரும் மலையனை மணந்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

பாரி மகளிரின் திருமணத்தைப்பற்றிய மற்றொரு கதையும் தமிழ்நாட்டில் வழங்குகிறது; அதைப்பற்றி யறிந்துகொள்வதும் நன்று.

பாரி மகளிர் பார்ப்பாரில்லத்தில் வாழ்ந்துகொண்டிருந்தனர்; ஒருநாள் பெருமழை பெய்துகொண்டிருந்தது; அப்போது ஔவையார் மழையால் முழுதும் நனைந்த மேனியராய் அவ் வீட்டினுள் நுழைந்தனர்; அம் மகளிர் வந்தவர் ஔவையார் என்பதை யுணர்ந்துகொண்டனர்;

ஔவையாரை அணுகி நலனந்த அவராடையை அகற்றிவி உடுத்துக்கொள்ள அவர்க்கு வேறு ஆடை இல்லாமைய தங்கள் நீலநிறச் சிற்றுடையைக் கொடுத்து நடுங்(அவர் உடற்குளிர் போக்கினர்; கொல்லையில் கொழு விட்டு வளர்ந்திருக்கும் குப்பைக் கீரையைப் பறித்து வ னர்; சுவைபடச் சமைத்துச் சுடச்சுட அளித்தனர்; ஔ யாரின் உள்ளம் குளிர்ந்தது; ஊக்கம் பிறந்தது

"இன்னது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு." (திருக்குறள் · உ

என்றார் திருவள்ளுவர். அவ் வறிவுரையினை மதியா வந்தவர் இன்முகம் காணும்வரையிலும் பொருள்களை வ வழங்குவதே வாழ்வின் பயன் என்று கொண்டான் மகளிரின் தந்தை பாரி; அதனாலேயே உயிரும் த தான்; இதை அம் மகளிர் நன்றாக அறிந்திருந்த அறிந்திருந்தும், தந்தையை இழந்து தனித்துயர் உற் தவிக்கும் அந் நிலையிலும், ஔவையாருக்கு ஆடைய உணவும் அளித்துப் பேணினர்;

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்று அ
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடி!
நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி."
(நன்னெறி: ச

என்ற செய்யுள், பாரிமகளிரின் பண்பு கருதியே பாடப்ப டதாயினும்; அவ் விளமகளிரின் செயல், ஔவைய உள்ளத்தில் அளவிலா மகிழ்ச்சியை உண்டாக்கிற். உடனே,

"வெய்தாய் நறுவியதாய் வேண்டளவுந் தின்பதாய்
வெய்தான் அளாவி நிறம்பசந்த—பொய்யா
'அடகு' என்று சொல்லி, அழுதத்தை யிட்டார்
கடகம் செறியாதோ கைக்கு."

"பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரி அன்று ஈந்த களாக்கொட்டும்—சேரமான்

'வாராய்' என அழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச சிற்ருடைக்கு நேர்."

என்ற பாடல்களைப் பாடி அம மகளிரைப் பாராட்டினர்.

பாடல்பாடிப் பாராட்டியமாதாடு தம் கடன் தீர்ந்தது எனக் கருதவில்லை அவா. அவர்களின் நிலையறிந்து இரங்கி அவர்கள் திருமணத்தை முன் நின்று முடித்தலைத் தம் கடனைகக் கொண்டார்.

பாரி மகளிரை மணந்து கொள்ளதக்க பீடும் பெருமையும், அறிவுடம, ஆற்றலும், ஆண்மையும், அழகும், ஒழுக்கமும், உயர்வும் உடையவன் யாவன் என எண்ணிப் பார்த்தார் ஔவையார்; இவ்வளவும் உடையவன ஒருவன் உளன்; அவன் தென் பெண்ணையாறு பாயும் திருமுனைப் பாடி நாட்டுத் திருக்கோவலூர் அரசன் தெய்வீகன் என்பவன்; அவ்விரு மகளிரையும் அவன்பால் அழைத்துச் சென்று மணம் செய்துகொள்ளுமாறு வேண்டினர்; புலவர் வேண்டுவனவற்றைக் குறிப்பால் அறிந்து, அவர் அகமும் முகமும் மலர அள்ளி அள்ளிக் கொடுக்கும் அருள் உள்ளம உடையவனே அவனும்; என்ருலும், ஔவையாரின் வேண்டுகோளை ஏற்க மறுத்தான்; ஔவையார்க்குச் செய்வதான்றும் புலப்படவில்லை "பேரழகும், சீரிளமையும் வாய்ந்தவர் பாரி மகளிர்; குலத்தால் குணத்தால் குறையுடையவரல்லர்; அறிவிலும், அன்பிலும் அனைவரிலும் சிறந்தவர்; இவ்வளவும இருந்தும், மன்னர்கள், இவர்களை மணக்க மறுப்பானேன்? மகளிர் முகத்தையும் காண மறுக்குமளவு, மன்னாகள தறவுள்ளம கொண்டுவிட்டனரோ என்ருல் இல்லையே! அரசனொருவன்பால் அழகுள்ள மகள் ஒருத்தி இருக்கிருள் என்றறிந்தால் போதும்; அவள் இசையினும் இசையாவிடினும் அவளை மணந்து கொள்ளத் துடிப்பர்; உற்ருரும், பெற்ருரும் மறுத்தால், பெரும்படைகொண்டு, அவள் நாட்டையும், கோட்டையையும் அழித்து அவளை வலிதிற் பற்றிக் கொள்வர்; அவ்வளவு வெறி பிடித்தவர்கள்தானே அரசர்

கள்! அவ்வாறுகவும், அழகிற்சிறந்த ஆரணங்குகள், அவர் அரண்மனைவாயில் வந்து காத்துக்கிடப்பினும் அவர் களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனரே! என்ன காரணம்?" என்று எண்ணி எண்ணிப் பார்த்தார் ஒன்றும் விளங்க வில்லை "அரசே! இம் மகளிரை மணக்க மறுப்பது ஏன்?" என்று அரசனையே கேட்டார்

"அறிவுசான்ற அம்மையே! இவ் விளமங்கையர் இருவரையும் மணந்துகொள்ள மறுக்கும் எண்ணம் எவ ருக்கும் எளிதில் உண்டாகாது; என்றாலும், இவர்களோ பாரியின் மக்கள்; பாரியோ, பேரரசர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் பகைவன்; அதனாலேயே அவனை அழித்தும் ஒழித்தனர்; இப்போது, நான் இவ்விரு மகளிர் களை மணந்துகொள்வதென்றால், அம் மூவேந்தர் பகையை இரு கையேந்தி வரவேற்றவனாவேன்; இன்பம் எனக் கருதித் துன்பத்தை மேற்கொள்வேன்; இன்று இவர்கள் இன்முகம் கண்டு இரங்கி இச்சை கொண்டால், மூவேந்தர் படை நாளை என் நாட்டின்மீது போர்தொடுக்குமே; அதைத் தடுப்பார் யார்? ஆகவேதான் அவர்களை மணக்க மறுக்கிறேன்." என்று தன்மனத்திடை ஒருங்கே மண்டிக் கிடக்கும் ஆசையையும் அச்சத்தையும வெளியிட்டான்.

பாரி மகளிரை மணக்கப் பார் மன்னர்கள் மறுக்கும் காரணத்தின் உண்மையை உணர்ந்தார ஔவையார்; இதற்கு என்ன செய்வது என எண்ணினர்; அவருக்கு ஒரு வழி தோன்றிற்று; வேந்தர் மூவரும் தம்மிடத்தில் போன்புடையவர்; தாம் விரும்பும் எதையும் செய்யும் இதயமுடையவர்; அவாகளிடத்தில் பாரிமகளிர் துயர் நிலை கூறி, அவரை மணக்க விரும்பும் மன்னனபால் பகை கொள்ளுதல் கூடாது என்று வேண்டினால் அவர்கள் மறுக்கமாட்டார்கள்; மனம் ஒப்புவர். ஆதலின், அவர்கள் ஒப்புதலைப் பெற்றுத்தர உறுதிமொழியளித்து அரசனை இசைய வைத்தல் வேண்டும் என எண்ணினர்; அரசனும் அதற்கு உடன்பட்டான். உடனே ஔவையார், தெய்வீ கன் பாரி மகளிரை மணந்துகொள்ள இசைந்ததை அறி

வித்து, அம் மண விழாவிற்கு வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு மூவேந்தர்க்கும் அழைப்பு அனுப்பினர்.

"சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவல்
ஊரளவும் தான்வருக உட்காதே;—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசர் மனமிசைந்தார்
சங்கவையையும் கூடத் தான்."

இது சேரனுக்கு அனுப்பிய அழைப்பிதழ்.

"புகார் மன்னன் பொன்னிப் புனல்நாடன் சோழன்
தகாதென்று தான்அங கிருந்து—நகாதே
கடிதின் வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டாம் நாள்."

இது சோழ வேந்தனுக்கு அனுப்பிய அழைப்பிதழ்.

"வையைத் துறைவன் மதுராபுரித் தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடிய ஈரென்பான்நாள்
ஈண்டு வருக இசைந்து."

இது பாண்டிய மன்னனுக்கு அனுப்பிய மண ஓலை

இவ்வாறு அரசர்க்கு அழைப்பு அனுப்பிய ஔவையார், பின்னர்த் திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். திருமணச் செலவு வகைகளுக்குப் பொன்னும் பொருளும் ஏராளமாகத் தேவை என்பதை உணர்ந்தார்; அவற்றைப் பிற அரசர்பால் இரந்து பெறுவதினும் தம் ஆற்றலால் தாமே தேடித்தருவதே சிறப்பு என்று கருதினர்; வருணனை நோக்கி,

"கருணையால் இந்தக கடல்உலகம் காக்கும்
வருணனே! மாமலையின் கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி."

என்ற பாடலைப் பாடினர்; உடனே, அவ் வூராட்க்கும், அம் மணவினைக்கும் வேண்டுமளவு பொன்மழை பெய்து மக்கள் மனதில், மகிழ்ச்சியை விளைவித்தது. பொன்னும் பொருளும் கிடைத்துவிட்டன; மணவிழாக் காண வருவோர் அழகிய ஆடையும், இனிய உணவுமே விரும்புவர்; அவற்றைப் பெற்று அளித்தலும் தம் கடனே என்று எண்ணினர்.

"பொன்மாரி பெய்யும் ஊர்; பூம்பருத்தி ஆடையாம்;
அந்நாள் வயலரிசி ஆகும் ஊர்;—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதினில்
ஓங்கும் திருக்கோவ லூர்."

"முத்தெறியும் பெண்ணே! முதுநீ ரதுதவிர்ந்து
தத்தியநெய், பால் தலைப்பெய்து—குத்திச
செருமலைத் தெய்வீகன் திருக் கோவலூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா."

என்ற இரு பாடல்களைப் பாடினர்; உடனே, அந் நாட்டுப் பருத்திச் செடிகள் எல்லாம் ஆடைகளாகவே காய்த்தன; நன்செய் வயல்களில் வளர்ந்திருக்கும் செந்நெற் பயிரெல்லாம் அரிசியாகவே விளைந்துவிட்டன; திருக்கோவலூரை அடுத்துப் பாயும் பெண்ணையாறு நீரோடுவது நீங்கி, ஒரு பக்கம் நெய்யாகவும், ஒருபக்கம் பாலாகவும் பெருக் கெடுத்து ஓடத் தொடங்கிற்று.

இவ்வாறு திருமணத்திற்கான எல்லாம் இனிது நிறை வேறின; திருமண நாளும் வந்தது; முடியுடை மன்னரும், குறுநில மன்னருமாக எல்லா அரசர்களும் வந்து சேர்ந்தனர். மணவிழாத் தொடங்கவேண்டிய நேரம்; தெய்வீகனுக்கு அளித்த வாக்கை நிறைவேற்ற எண்ணினர்; "அங்கவை, சங்கவை ஆகிய அவ்விரு மகளிரைத் தெய்வீகன் மணஞ்செய்து கொள்வதைத் தடுக்கவில்லை; அதுகுறித்து அவனோடு பகை கொள்ளோம்; இம் மணம் நிகழ்வது எங்களுக்கும் விருப்பமே" என்று அறிவிக்கு மாறு ஔவையார் மூவேந்தரையும் வேண்டினர். அரசர்

கள் ஔவையாரை நோக்கி, "அம்மையே, இம் மணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயின், இத்திரு மணப் பந்தரிலே ஏதேனும் ஓர் அற்புதம் நிகழ்தல் வேண்டும்; நிகழ்ந்தால், இத் திருமணத்திற்கு எங்கள் இசைவினைத் தருவோம்; மணமக்களையும் வாழ்த்திப் போற்றுவோம்," என்று கூறினர்கள்.

உடனே ஔவையார், திருமணப் பந்தலுக்குக் காலாக நிற்கும பனந்துண்டு ஒன்றை நோக்கி,

> "திங்கட்குடையுடைச சோணும், சோழனும், பாண்டியனும்
> மங்கைககு அறுகிட வந்து நின்றூர் மணப்பந்தரிலே;
> சங்கொக்க வெண்குருத்தீன்று, பசுஞ்சோலை சலசலத்து
> நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனிதிவந்து
> பழுக்குக் மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே."

என்ற பாடலைப் பாடினர். உடனே, வெட்டுண்டு உலர்ந்து போன அப் பனந்துண்டு உயிர்பெற்றது; வெண்குருத்து வெளிவந்து பச்சோலையாக மாறிச் சலசல என ஒலித்தது; ஒருபால் பனங்குலையொன்று தோன்றி, நுங்கு முற்றிக் காயாகிக், காய் கனியாகிக் காட்சியளித்தது. ஔவை யாரின் இவ்வரும் பெரும் செயல் கண்டு அச்சமும், வியப் பும் கொண்டனர் அரசர்கள் மூவரும். மணவினைக்கு மேலும் தடையாக இருத்தல் தகாதெனக் கொண்டனர்; மணவிழாவை முன்நின்று முடித்து, மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர். இவ்வாறு பாரிமகளிர்க்கு மணம செய்து கண்டு களித்தார் ஔவையார்.

பாரிமகளிர் திருமணத்தைப்பற்றி மேலும் பல கதை கள் நாட்டில் வழங்குகின்றன. பாரிமகளிரைப் பார்ப் பார்க்கு மணஞ்செய்து கொடுத்தார் கபிலர் என்ற ஒரு கதையும் உண்டு; அங்கவை, சங்கவை என்ற இருவரும் பாரிசாலன் என்ற சிங்கள நாட்டு மன்னனின் மகளிராவர்; ஔவையார் அவர்களைத் தெய்வீகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்; இவ்வாறு ஒரு கதை கூறும்; பாரி மகளிருள் ஒருத்தியை மலையனுக்கு மணம்செய்து கொடுத்-

தார் கபிலர்; மற்றொருத்தியைத் தெய்வீகனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார் ஔவையார்; இவ்வாறு கூறுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

பாரிமகளிர் திருமணத்திற்குத் துணைபுரிந்தவர் கபிலரா? ஔவையாரா? இவர்கள் ஒவ்வொருவரும், அம் மகளிர் இருவர் திருமணத்திற்கும் துணைபுரிந்தார்களா? அல்லது, கபிலர், ஒருத்தி திருமணத்திறகும், ஔவையார் மற்றொருத்தி திருமணத்திற்குமாகத் தனித்தனியே துணைபுரிந்தார்களா? அம் மகளிர் இருவரும் ஒருவரையே மணந்துகொண்டனரா? அல்லது வேறுவேறு அரசர்களை மணந்துகொண்டார்களா? இவை போன்ற ஐயங்களுக்குத் தெளிவான உண்மை காணமுடியவில்லை.

பாரிமகளிர்க்குத் திருமணம் செய்யக் கபிலர் முயன்றார் என்று தெளிவாகக் கூறுகிறது புறநானூறு; அதைப் போலவே, அம் மகளிரை மலையமான் வழிவந்த ஒருவனுக்கு மணமசெய்து கொடுத்தார் கபிலர் என்று தெளிவாகக் கூறுகிறது திருக்கோவலூரில் உள்ள பழைய கல்வெட்டு. பாரிமகளிர் திருமணத்தோடு கபிலரைத் தொடர்புபடுத்தும் இவ்விரு ஆதாரங்களைப் போல், அவர்கள் திருமணத்தோடு ஔவையாரைத் தொடர்புபடுத்த நல்ல ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆகவே, விச்சிக்கோன், இருங்கோவேள் ஆகிய இருவரிடத்தும் அம் மகளிரை அழைத்துச் சென்று பயனின்றி மீண்ட கபிலர், அம் மகளிரைப் பார்ப்பார்பால் அடைக்கலமாக விட்டுச் சென்று, மலையமானைக் கண்டு உடன்படுத்திப் பின்னர் அம் மகளிரைக் கொண்டுசென்று அவனுக்கு மணம்செய்து கொடுத்தார் என்று கொள்வதே பொருந்தும்; அம் மகளிரின் இம் மண முயற்சியில் கபிலர்க்குத் துணையாய் ஔவையாரும் இருந்தார் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

௧௩௰. பூங்கணுத்திரையார்

இவர் இயற்பெயர் உத்திரையார் என்றிருக்க, அத் துடன் அவர் பெற்றிருந்த அழகிய கண்களைக் கண்டு பிறர் அளித்த பூங்கண் என்ற சிறப்புப் பெயரும் சேர, பூங்கணுத் திரையார் என்பது இவர் பெயராயிற்று என்று கூறுவர். பூங்கண் என்ற பெயருடைய ஊர் ஒன்று காவிரியின் வட கரைக்கண் உளது எனக் கல்வெட்டுக்களால் (M. E. R. No. 153 of 1932) தெரிவதால், இவரை அவ்வூரினராகக் கொள்வாரும் உளர். பூங்கணுத்திரையார் பாடிய பாடல் களுள் புறத்தில் ஒன்றும் குறுந்தொகையில் இரண்டும் இடம் பெற்றுளளன. குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில் அவர் மேற்கொண்ட உவமை படித்தவர்களுக்கு நகைப் பூட்டும் இயல்பிற்று.

தலைமகள் ஒருத்தி தலைமகன் ஒருவனோடு நட்புக் கொண்டு வாழ்ந்து வருகிறாள ; இடையில் அவனை மணஞ செய்துகொள்வதற்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொண்டுவர அவன் வெளிநாடு சென்றிருந்தான் ; இவர்கள் உறவும் முடிவும் பெற்றோர் அறியார் ; தலைமகள் தோழி ஒருத்திமட்டுமே அறிவாள். இந்நிலையில், ஒருநாள் முதி யோர் சிலர், தலைமகள்வீட்டிற்கு வந்திருந்தனர் ; அவர்கள் யார்? ஏன் வந்தார்கள் என்பதை அறிந்துகொண்டாள் தோழி ; அவர்கள், தலைமகளைத் தங்கள் மகன் ஒருவனுக்கு மணம் பேச வந்திருந்தனர் ; தலைமகள், தலைமகனோடு கொண்டிருக்கும் உறவை அறியாத அவள் பெற்றோர், அப் புதியோர்க்கு இசைந்து விடுவரோ என அஞ்சினாள் ; ஓடோடியும் சென்று செய்தியைத் தலைமகளுக்கு அறிவித் தாள். அவள் கூறியதையும் கூறிவிட்டு நடுங்கும் அவள் நிலையைப்புங் கண்டு, தலைவி நகைத்துக் கூறுகிறாள்: "தோழி! மழை பெய்த புதுநீர் குளத்தில் புகுந்து நிறைவதைக் காணக் காலையில் குளக்கரைக்குச் சென்றோமே அங்கே கண்டதை நீ மறந்தாயா? வலைஞன் ஒருவன் வலை வீசி னானே, எதைக் கருதி வீசினான்? மீனைப் பிடிக்கவேண்டும் என்றன்றோ வீசினான்? ஆனால், அவன் வலையில் மீன்

அகப்பட்டதா? இல்லையே? நீர்நாய் அன்றே அகப்பட்டது? மணம பேச வந்தவர் செயலோடு அதை ஒப்பிட்டுப் பார்; இவர்கள் என்னை மணம் பேசவே வந்திருக்கின்றனர் என்பது உண்மை; ஆனல், இவர்கள் என்னைப் பெறப் போவது இல்லை; இவர்களுக்குக் கிடைக்கப்போகிறவள் நான் அல்ல; வேறு எவளோ; ஆகவே, மணம் பேசவந்து விட்டனரே என்று கவலற்க; மணம்பேச வந்தவுடனே அவர்கள் எண்ணம் ஈடேறிவிடும் என்று எண்ணுதே; அவ்வாறு ஒன்றும் நடவாது; அஞ்சற்க," என்று கூறினள்.

"காணினி வாழி! தோழி! யாணர்க்
கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட
மீன்வலை மாப்பட்டாங்கு
இது; மற்று எவனே நொதுமலர் தலையே."

காக்கைபாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர்மாசாத்தியார் போன்ற புலவர்களைப்போலவே, இவரும் தமிழ் நாட்டு வீரத்தாய்மார்களின் இயல்பை விரித்துரைத்துள்ளார்.

ஒரு கிழவி; அவள் தலைமயிர் முற்றும் கொக்கின் இறகேபோல் வெளுத்து நரைத்துவிட்டது; அவளுக்கு ஒரே மகன்; அவனே மிகவும் சிறியன். எனினும் நாடு காவற் போரில் தன்குடியும் பங்குகொள்ளுதல் வேண்டும் என்ற கருத்தினள் ஆதலின், இளையன் என்றும் பாராது போருக்கு அனுப்பினள; அவனும் தன் குடிப்பண்பிற்கு ஏற்பக் களத்தே களிறு பலவற்றைக் கொன்றான்; ஆனல், இளையனகிய அவனல் தொடர்ந்து போரிடமுடியவில்லை; பகைவர் படைக்கலம்பட்டு வீழ்ந்து மாண்டான்; காலையில் களம் நோக்கிச் சென்றோன், மாலையில் வெற்றியோடு வீடு திரும்புவான் என்று எதிர்நோக்கியிருந்தாள் கிழவி ஆனல், அவன் வரவில்லை; வீரர் பலர் அவள் வீட்டிற்கு வந்தனர்; "நின் மகன் மிகவும் இளைஞன்தான்; ஆனலும் அவன் ஆற்றிய போருண்டே! ஆ ஆ! அருமை! அருமை!!

பகைவர் படையில் எத்தனை களிறுகள் அவனுல் கேடுண்டன? இருந்தும் இறுதியில் இறந்துவிட்டானே!" என்று கூறி அழுதனர். வீரர்பலர், தன்வீடு நோக்கிவந்து, தன் மகன் ஆற்றிய அரும்போர் குறித்துப் புகழ்வது கேட்டாள்; பொங்கிற்று அவள் மகிழ்ச்சி; பூரித்தது அவள் உள்ளம். "பிள்ளை பெற்ற பேற்றினை இன்றே அடைந்தேன்; இவனைப் பெற்றபோது நாடுகாவலுக்கு நமக்கும் ஒரு மகன் பிறந்துவிட்டானே என்று மகிழ்ந்தேன்; இன்று, அவன் தன் கடனுற்றி என் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டான்; வாழ்வின் பயனை இன்றே அடைந்தேன; அவனே என் மகன்," என்று மகிழ்ச்சிக் கண்ணீர்சொரிய ஆடிப்பாடி மகிழ்வாளாயினள். "இறந்துவிட்டானே இளைஞன்" என்று வீரர் கண்ணீர்விட்டுக் கலங்குகின்றனர்.

"புரந்தார்கண் நீர்மல்கச சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்க துடைத்து." (திருக்குறள்: எஅ0)

என்பதற்கேற்ப, பிறர் புகழும் பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டான் தன்மகன் என்பதுகண்டு, அவனைப் பெற்ற அன்று தான்கொண்ட மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி கொள்கிறுள் கிழவி.

தமிழகத்தில், அன்று தாம்கண்ட இவ்வருங்காட்சியை என்றும் அழியா ஓவியமாய்த் தீட்டிக் காட்டுகிறுர் பூங்கணுத்திரையார்.

"மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள், 'சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்' என்னும் உவகை,
சான்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே." (புறம்: உளஎ)

கஎ. பெருங்கோப்பெண்டு

பாண்டிய மன்னர்களில் பூதப்பாண்டியன் என்பவன் ஒருவன் இருந்தான்; பாண்டியர்க்குரிய ஒல்லையூர் எவ் வாறே பகைவர் கைப்பட்டிருந்தது; இவன் அப் பகைவரை வென்று அவ்வூரை மீட்டமையால் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என அழைக்கபபெற்றான். பூதப்பாண்டியன் சிறந்த புலவன்; அவன் பாடிய பாடல்கள் பல எட்டுத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. சிறந்த வீரனும் பெரும் புலவனுமான இவன் மனைவியே பெருங்கோப் பெண்டு; ஆகவே இவர் பூதப்பாண்டியன் தேவி பெருங் கோப்பெண்டு என அழைக்கப்பெற்றார். இருவரும் பெரும் புலவர்; ஒருவரை யொருவர் அன்புடன் நேசித்து வாழ்ந்துவந்தனர்; பூதப்பாண்டியனுக்குப் பகைவர் சேர னும், சோழனும். அவர்கள் இவனோடு போரிடவந்தனர்; அவரோடு போரிடச் செல்லும் பூதப்பாண்டியன், "என் னோடு போரிட இருபெரும் அரசர்கள் வந்துள்ளனர்; அவர் களைப் போரின்கண் புறமுதுகுகாட்டி ஓடச்செய்யேனையின், அழகிய பெரிய மையுண்ட கண்களையுடைய சிறந்த என் மனைவியைப் பிரிந்து துன்புற்று வாழ்வேனுகுக," என்று கூறிய வஞ்சினம்,

> "அவர்ப்புறம் காணே னையின் சிறந்த
> பேரமர் உண்கண் இவளினும் பிரிக"

என்பது. இது தன் மனைவிபால் அவன் கொண்டுள்ள அன் பின் மிகுதியைப் புலப்படுத்தும். பூதப்பாண்டியன் தன் மனைவியைப் பிரிந்தறியான்; அவள் அழகும் அறிவும் கண்டு கண்டு மகிழ்வான் என்பது இதனாற் புலப்படும்.

இவ்வாறு அன்புகொண்டு வாழ்ந்து வருகையில், அவர்களிடையே எதிர்பாராப் பிரிவு ஒன்று வந்து சேர்ந் தது. போரில் பூதப்பாண்டியன் இறந்துவிட்டான்; தன் கணவன் இறந்துவிட்டான் என்ற செய்தி கேட்டார் பெருங் கோப்பெண்டு; அவரை இன்றி எவ்வாறு வாழ்வேன்

என்று ஏக்கமுற்றார்; கணவனைப் பிரிந்து தனித்து வாழ்வது தன்னால் இயலாது என்பதை உணர்ந்தார்; உடனே சுடுகாட்டில், கரிய கட்டைகளைக் கொண்டு பிணப் படுக்கையொன்று அமைக்க ஏற்பாடு செய்தார். குளித்து நீர் ஒழுகும் மயிர் இருபக்கமும் தொங்கச் சுடுகாடுநோக்கி நடக்கத் தொடங்கினர். அவரை அந்நிலையிற் கண்டார் மதுரைப் பேராலவாயர் என்ற பெரும் புலவர். "முழவோசை எப்போதும் முழங்கிக்கொண்டிருக்கிறதே; காவலர் கண் இமையாது காத்திருக்கின்றனரே என்று கருதி அவள் கணவன் முன்னர் ஒருசமயம் அவளைச் சிறிது பொழுதுவிட்டுப் பிரிந்திருந்தான்; அதற்கே அஞ்சினாள் இவள்; அவ்வளவு மென்மையும் இளமையும் உடைய இவளா இப்போது சுடுகாடு நோக்கிச் செல்கிறாள்!"

"நீர்வார் கூந்தல் இரும்புறம் தாழப்
பேரூர்க் கண்ணள் பெருங்காடு நோக்கித்
தெருமரும் அம்ம; தானே; தன் கொழுநன்
முழவு கண்துயிலாக் கடியுடை வியன்நகர்ச
சிறுநனி தமிய ளாயினும்
இன்னுயிர் நடுங்கும் தன் இளமை புறங்கொடுத்தே."

(புறம்: உசஎ)

என்று எண்ணினார்; இருகண் நீர்சோர அழுதார்; அழுது என்ன பயன்? பெருங்கோப்பெண்டு சுடுகாட்டை அடைந்து அவ்வீமத்திற்குத் தீவைத்தார். அவரோடு அதுவரையிலும் தொடர்ந்துவந்த சான்றோர் பலரும், அவர் செய்கை யறியாது திகைத்து நின்றனர். இறுதியாக, அவர்கள்பால் விடைபெற்றுத் தீயில் குதிக்கத் துணிந்தார்; அந்நிலையில் புலவர் அனைவரும் அவரைத் தடுத்து நிறுத்தினர்; கணவன் இறந்தமையால் அரசிழந்து அல்லல் உறும் அந்நாட்டை அவருக்கு நினைவூட்டினர்; உடனுயிர் மாயாது உயிர் வாழ்தலும் உத்தம மாதர்க்கு உரியதே என உணர்த்தினர்.

உடனே பெருங்கோப்பெண்டிர்க்கு வந்தது கோபம். "'கணவன் இறந்ததால் அவனோடு உயிர் விடுவதே கற்புடை

மகளிர் கடமை என்று அறிவுரை கூறுவதே சான்றோர் கடன்; நீங்கள் அக் கடமையில் தவறினீர்; அறிவுரை யொன்றுங் கூறாது விட்டதே உங்கள் சான்றாண்மைக்கு இழுக்கு; அவ்வாறாகவும், நீங்கள் கூறாது போயினும், என் அன்பும் கடமையும் கொண்டு தீப்பாய நானே துணிந் தேன் என்றால், என் செயல் கண்டு எனக்குத் துணை செய் யாது, என்னைத் தடுத்து நிறுத்துகிறீர்களே! நீங்கள் உண் மையில் சான்றோரல்லர்; ஏனைப் பெண்களைப்போல் என் னையும் எண்ணி விட்டீர்களா? வெள்ளரிக்காய் விதை போல் நெய்கலவாமல் நீரில் மிதந்துகிடக்கும் பழஞ் சோற்றை, வெந்த வேளைக்கீரையோடும், எள் துவையலோ டும் கலந்து உண்டு, பாறற்கற்கள் உறுத்தும் பாழுந்தரை யில் பாயில்லாமல் படுத்துறங்கித் துன்புற்றுக் கைம்பெண் ணாய் வாழும் வாழ்வை நான் பொறேன். எமத் தீ என்னைச் சுடுமே என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்; இத்தீ எனக்குத் துன்பம் தரும் என்று கவலற்க," என்று கூறித் தீப் பாய்ந்து இறந்தார்.

"பல்சான் றீரே! பல்சான் றீரே!!
செல்கனைச சொல்லாது ஒழிகன விலக்கும்
பொல்லாச சூழ்சசிப் பல்சான் றீரே!!!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பாறற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரி தாகுக; திில்ல; எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென, அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே." (புறம்: உசசு)

கஅ. பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார்

இவர், பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார் என அழைக்கப் பெறுவர். சோழநாட்டுத் தலைநகர்களுள் ஒன்றாகிய உறையூர்க்குக் கோழி என்பது ஒரு பெயர். நாய்கன் என்பது கடல் வாணிகம் மேற்கொள்ளும் இனத்தார் வைத்துக்கொள்ளும் பட்டப் பெயர்; கண்ணகியின் தந்தைக்கும் மாநாய்கன் என்பதே பெயராதல் காண்க. ஆகவே, நக்கண்ணையார், உறையூர்ப் பெருவணிகன் ஒருவன் மகளாதல் பெற்றும். கண்ணன் என ஆடவர்க்குப் பெயரிடுவர்; அவ்வாறே, கண்ணை எனப் பெண்டிர்க்கும் பெயரிடுவர்; அப்பெயரோடு 'ந' என்ற சிறப்பும் சேர, நக்கண்ணையார் என ஆயிற்று.

போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்ற சோழ அரசன் ஒருவன் உறையூரிலிருந்து ஆண்டிருந்தான். அவன், ஆண்மையும் அழகும் நிறைந்த இளைஞன்; மற் போரில் வல்லவன். இக் கிள்ளியின் ஆண்மையும் அழகும் ஆற்றலும் கண்டு அவன்பால் காதல்கொண்டார் நக்கண்ணையார். ஆனல், அவர் காதல் ஒருதலைக் காதலாயிற்று; கிள்ளிபால் இவர் காதல் கொண்டார்; ஆனல், அவனுக்கு இவர்பால் காதல் உண்டாகவில்லை. இதனல் நக்கண்ணையார் அவனையடைந்து மணந்து மகிழ்ந்து வாழ முடியவில்லை; அவனை அடையமாட்டாமையால் கவலை மிகுந்து, உடல் மெலிந்து கைவளையும் கழலத் தொடங்கிற்று.

வளை கழலுவது கண்டு, தன் தகாக் காதலறிந்து தாய் கடிந்துகொள்வாளோ என்ற கவலை ஒருபால்; வளை கழலாமை வேண்டின், தானே சென்று அவன் உறவைப் பெறுதல் வேண்டும். ஆனல், காதலர் இருவர்க்கும் மணம் முடித்து வைப்பது, அவ்வூர் அவையில்வாழ் சான்றோர் கடன்; அவர் அதுகுறித்து ஒன்றும் செய்யாதிருப்ப, அவர் அறியாது அவன் உறவைப் பெறுதல் அறன் அன்று என்ற அச்சம் மற்றொருபால்; இவ்வாறு இருவகையாலும் கவலை. தாய் இல்லாதிருந்தால், கவலைகொண்டு வளை

கழலுவது கண்டு தன்னைக் கண்டிடப்பார் ஒருவரும் இரார்; ஆகவே, ஒன்று தாயாவது இல்லாதிருக்க வேண்டும்; அல்லது ஊர் அவை இல்லாதிருப்பின், நாமே சென்று அவனுறவைப் பெறுதலும் கூடும்; ஆகவே, அவ்வவை யாவது இல்லாதிருக்க வேண்டும்; ஆனல் 'இருவரும் உளரே என் செய்வேன்' என்று வருந்துகிறூர்.

"அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்குஎன்
தொடிகழித் திடுதல்யான் யாய்அஞ் சுவலே;
அடுதோள் முயங்கல் அவைஞா ணுவலே;
என்போற் பெருவிதுப புறுக என்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்ட இம்மைய லூரே." (புறம்: அக)

இந்நிலையில் திதன் என்பானெரு பெருவீரன் பெரும்படையோடும் போந்து உறையூரை வளைத்துப் போரிட்டுப் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியை வென்று அவனைத் துரத்திவிட்டு அவ்வூரில் தானிருந்து அரசாள்வா னையினன். கிள்ளி, உறையூரைவிட்டு முக்காவல் நாட்டைச் சேர்ந்த ஆமூர் சென்று வாழத் தொடங்கினன். கிள்ளிபால் காதல் கொண்ட நக்கண்ணையாரும் அவன் அண்மையில் வாழ்ந்தால் தம் காதல் கைகூடினும் கூடும்; அவனுக்குத் தம்பால் காதல் உண்டாதலும் கூடும் என்று எண்ணினர்; ஆகவே, அவரும் உறையூரைவிட்டு ஆமூர் சென்று அவன் வாழும் இடத்திற்கு அணித்தே உள்ள ஓர் இடத்தில் வாழத் தொடங்கினர்; ஆனல், இவ்வாறு அருகில் வந்து வாழ்ந்தும் அவன் அன்பைப் பெற முடிய வில்லை; தாம் காதல் கொள்ளத் தம் காதலை ஏற்றுக் கொள்ளாதிருக்கின்றூனே என்று அவன்பால் கோபம் கொண்டாரல்லர் நக்கண்ணையார். அவன் இவர் காதலை அறியாதவனுய் இருக்க இருக்க, அவன்பால் இவர் கொள்ளும் அன்பு வளர்ந்துகொண்டே யிருந்தது; அவன் ஆண்மையும் பிறவும் இன்பத்தை மேலும் மேலும் வளர்த் துக்கொண்டே யிருந்தன. தன்னுடவிட்டு வந்து வறுமை வாழ்வு மேற்கொண்டமையால் புலரிசி உணவு உண் கிறூனே, அவன் உடல் தளர்ந்துவிடுமோ? என்று அஞ்சி

னர் ; ஆனல், அவன் தோள் தளராது முன்னிலும் பருத்து இருப்பது கண்டு மகிழ்ந்தார் ; அவன் தோள் தமக்கு உரிமையாகி இன்பம் அளிக்காது வருத்துகிறது என்பதை யுணர்ந்தும் எதிர்த்த பகைவர் எவரையும் எளிதில் வெல்லும் அதன் ஆற்றல் கண்டு அகமகிழ்ந்தார்.

மல்லர்க்கும், மற்போருக்கும் சிறந்தது அவ்வாமூர் ; மல்லருள் சிறந்தான் ஒருவன் அவ்வூரில் இருந்தான் ; அவன் சிறப்பறிந்த அவ்வூரார் அவனை ஆமூர் மல்லன் என்றே அழைத்தனர். தான் வாழும் ஊரில் தன்னினும் வலியான் ஒருவன் வாழ்வதா என்ற எண்ணத்தால் ஆமூர் மல்லற்கும் கிள்ளிக்கும் பகை உண்டாயிற்று. பகை வளர்ந்து ஒரு நாள் இருவரும மற்போர் நிகழ்த்தத் தொடங்கிவிட்டனர் ; ஊர்மக்கள் எல்லாம் போரைக் காண ஒன்று திரண்டுவிட்டனர். கிள்ளி அந்நாட்டையோ, அவ்வூரையோ சேர்ந்தவனல்லன் ; ஆகவே, அவனியல்பறிய மாட்டாத அவ்வூர்மக்கள் போரின் முடிவு குறித்து பல்வேறு கருத்துக்களை வெளியிடலாயினர். "கிள்ளிக்கே வெற்றி" எனப் பேசிச் சென்றனர் சிலர் ; "கிள்ளிக்கு வெற்றி இல்லை" எனப் பேசிச் சென்றனர் வேறு சிலர் ; இவ்வாறு ஊர் மக்கள் பேசிக்கொள்வது நக்கண்ணையார் காதில் விழுந்தது ; காற்சிலம்பு ஒலிக்க ஓடினர் ; மற்போர் நிகழும் இடத்திற்கும், தம் வீட்டிற்கும் அணித்தே உள்ள பனைமரத்தருகே நின்று மற்போரைக் கண் இமையாது கண்டு நினறார். கடைசியில் வெற்றி தம் காதலன் கிள்ளிக்கே கிட்டியது கண்டு மகிழ்ந்து மீண்டார்.

"என்னைக்கு ஊர்இஃது அன்மை யானும்,
என்னைக்கு நாடுஇஃது அன்மை யானும்,
ஆடுஆ டென்ப ஒருசா ரோரே :
ஆடன்று என்ப ஒருசா ரோரே ;
நல்ல, பல்லோர் இருநன் மொழியே ;
அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி எம்மில்
முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான்கண் டனன்அவன் ஆடுஆ குதலே." (புறம் : அரு)

இவ்வாறு, கிள்ளிபால் கொண்டிருந்த தம் காதல் உள்ளத்தைக் கவிகள் வழியாகவே காட்டியுள்ளார் நக்கண் ணையார்; அவர் காதல் கைவரப்பெற்றதா? அல்லது இறுதிவரை கைக்கிளையாகவே முடிந்ததா? என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை.

"என் காதல் நிறைவேறவில்லை; என் காதலை ஏற் றுக்கொள்ளாத ஒருவன் நல்வாழ்வு வாழ்வதா? அதையும் நான் பார்ப்பதா? கூடாது. என் காதலை மறுத்த அவனை வாழவிடேன்," என்று எண்ணும் இழிகுல மகளிரைப் போல் அல்லாமல், "அவன் எம் காதலன்; எமமால் அன்பு செய்யப்பெற்றவன்; எம் காதலை அவன் மதியாது போயினும் கவலையில்லை; எமக்கு அவன்பால் காதல் உண்டு; ஆகவே, அவன் நல்வாழ்வு வாழவேண்டும்; அவன் வாழ்வில் தாழ்வு ஏற்படல் கூடாது; அவன் தாழ்ந் தான் என்ற சொல்லையும் ஏற்க மறுக்கும் எம் காதுகள்" என்று எண்ணும் நக்கண்ணையார் உள்ளத் தூய்மையின் உயர்வை உணருங்கள்!

புறத்தில் பாடிய தம் வாழ்வுப் பாடல்களை யல்லாமல், அகத்துறைப் பாடல்கள் மூன்றும் பாடியுள்ளார் நக்கண் ணையார்; அவற்றுள் ஓர் இடத்தே அவர் மேற்கொண்ட உவமையொன்றே அவர் புலமையின் சிறப்பை உணர்த்தும்.

தலைமகள் ஒருத்தி, தலைமகன் ஒருவனோடு கள வொழுக்க உறவுகொண்டு வாழ்கிறாள்; ஆனால், அவ் வாழ் விற்கு எத்தனையோ இடையூறுகள் உண்டாகின்றன. தலைவன்பால் கொண்டுள்ள பேரன்பு, அத் தடைகளை யெல்லாம் அகற்றச் செய்கிறது; அதனால், பெண்கள்பால் இயல்பாக நிறைந்து காணவேண்டிய பெண்மைக் குணங்கள் எல்லாம் சிறிது சிறிதாக மறைந்துவிட்டன; இறுதியாக அவள்பால் நிற்பது நாண் ஒன்றே; அதுவும் எப்போது அவனைவிட்டு நீங்கிவிடுமோ என்ற நிலை. இம் மாறுபாட் டைக் கண்டாள் அவள் தாய்; அந் நிலை ஏற்படாதிருக்க, மிகவும் விழிப்போடு நின்று தன் மகளைக் காக்கத் தொடங்கிவிட்டாள். இரவிலும் உறக்கத்தை மறந்து

மகள் நலம்பேணத் தொடங்கிவிட்டாள். இதை உணர்ந்து கொண்டாள் தலைவி. இனி, களவொழுக்கம் மேற்கொள் வது இயலாது; மணந்துகொள்வதே வழி என அறிந் தாள். தன் நிலை, தன் காதலின் தன்மை, தன் தாய் நிலை ஆக இவற்றை அழகிய ஓர் உவமையால் விளக்கித் தன் கருத்தைத் தலைமகற்கு உணர்த்துகிறாள் தலைவி.

சிறு கரையுடைய ஒரு பெருங்குளம்; கடமை யறிந்த காவற்காரன் ஒருவன். ஒருநாள் இரவு காற்றோடுகூடிய பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது; குளம் முழு தும நீர் நிறைந்துவிட்டது; மேலும் மழை பெய்து கொண்டே யிருக்கிறது; காற்றும் நிற்காமல் வீசிக் கொண்டேயுளது; அதனல், குளத்துநீர் அலையெடுத்து மோதிக் கரையை அழிக்கவும் தொடங்கிவிட்டது. அதன் கரையோ அவ்வளவு பெருநீரைத் தாங்கும் ஆற்றல் அற்றது; சிறியது; ஆகவே, அதன் காவற்காரன், கரை எங்கே உடைந்துவிடுமோ? எப்போது உடைந்துவிடுமோ? என்ற கவலையால், இரவுமுழுதும் கண்மூடாது கரையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டே யிருக்கிறான். இந்தக் காட்சி யைத் தலைவனுக்குக் காட்டினள்; காட்டிவிட்டு "கரை அழிந்துவிடுமோ என்று கவலைகொள்ளும் காவற்காரனைப் போல் என் துயர்நிலை கண்டு கவலையால் கண் விழியாது காக்கிறாள் என் தாய்; குளநீர்போல் பெருகியுளது என் காதல்; அக் குளநீரையும், அதன் மோதுதலையும் தாங்க ஆற்றுத அதன் சிறு கரைபோல், காதல் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தமாட்டாது சிறுமைப் படுகிறது, பெண் மைக் குணமெல்லாம் ஒழியத் தனித்து நிற்கும் நாண்" என்றுகூறி மணத்திற்கு உடன்படுத்துகிறாள் தலைவனை.

"ஈங்கைத்
தூய்யவிழ் பனிமலர் உதிர வீசித்
தொழின்மழை பொழிந்த பாஅட் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறு கோட்டுப்
பெருங்குளம் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில்மறந் தனளே." (அகம்: உருஉ)

௧௯. பேய்மகள் இளவெயினி

இவர் குறவர் குடியிற் பிறந்தவர் : இளமையிலேயே பாடல் புனையும் ஆற்றல் வாய்ந்தவர் ; இவர் பெயர்க்கு முன்வரும் பேய்மகள் என்ற தொடர் எதனால் வந்தது என்பது புலனுகவில்லை ; புறநானூற்றிற்கு அரிய உரை யெழுதி அளித்த பழைய ஆசிரியர், கண்ணுக்குத் தெரியாத பேயே இளவெயினி என்னும் பெயரோடு தோன்றிப் பாடிற்று என்ற கதை தன் காலத்தே வழக்கத்தில் இருந் தது எனக் கூறுவர் ; "இவள் பேயாயிருக்கக் கட்புலனை தோர் வடிவுகொண்டு பாடினளொருத்தி யெனவும், 'இக் களத்து வந்தோர் யாவரும் பரிசில் பெற்றார்கள் ; எண்டு நின்னோடு எதிர்ந்து பட்டோரில்லாமையான், எனக்கு உணவாகிய தசை பெற்றிலேன்' எனத் தான் பேய்மக ளானமை தோன்றப் பரிசில் கடாயினள் எனவும் கூறு வாருமுளர்." ஆனல், அவர் அக் கதையை நம்பாமை நன்கு புலனுகும். பேய்மகள் என்பது தெய்வமேறியாடும் தேவராட்டி அல்லது பூசாரிச்சியைக் குறிக்கும் ; தெய்வ மூற்றுற்போல் வந்துநின்று குறி கூறுவது இவர்கள் தொழில் ; அத்தகைய தேவராட்டிகளுள் இளவெயினி யும் ஒருவர் ; ஆகவே, அவர் பேய்மகள் எனப்பட்டார் என்று கூறுவர் சிலர். போர்க்களத்துப் பிணந் தின்னும் பேய்மகளிரை வியந்து விரியப்பாடிய சிறப்பால் இளவெயி னியார்க்குப் பேய்மகள் என்பது சிறப்புப் பெயராயமைந்த தாகல்வேண்டும் என்பர் மற்றும் சிலர்.

பேய்மகளார், பாலைபாடிய பெருங்கடுங்கோ என்ற அரசனைப் பாராட்டியுள்ளார். கடுங்கோ, சேரர் மரபிலே வந்த பேரரசனுதலேயன்றிப் புலவரும புகழும் பெரும்புலவ னுவன் ; பாலைத்திணையைச் சிறப்பித்துப்பாடிப் 'பாலைபாடிய' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவன் ; கலித்தொகையுள் பாலைக்கலி முற்றும் இவன் பாடியனவே ; இவையேயன்றி, ஏனைய நூல்களுள் வரும் பாலைத்திணைப் பாடல்களுள் பெரும்பாலன இவன் பாடியனவே. தலைமகளை நோக்கி,

"நின்னைப் பிரியேன்; பிரியின், இரவலர் என்பால் வந்து பொருள்பெறுத நாட்கள் பல ஆகுக" என்று தலைமகன் கூறியதாகப் பாடி, இரவலர்க்குப பொருள்தந்து பேணும் தன் கொடையுள்ளத்தைப் புலப்படுத்தியுள்ளான்; போரில் விழுப்புண் பெற்று விழுந்த வீரனை, "அருங்கடன் இறுத்த பெருஞ செயலாளன்" எனவும், அவன் "சேண் விளங்கு நல்லிசை நிறீஇ, நாகவில் புலவர் வாயுளானே" எனவும தன் வீரஉள்ளத்தையும் விளங்க வைத்துளான்.

இவனைப் பாடிய பேய்மகளார், இவன் தன்னைப் பாடிய பாண் மகனுக்கு, வெள்ளிநாரால் தொடுத்த பொற்றுமரைப் பூவையும், பாணன் பாட்டிற்கேற்பப் பாடிய பாடினிக்குச் சிறந்த பல கழுநுசால்லன அழகிய அணிகளையும் அளித்தான் என்று அவன் கொடைச் சிறப்பைப் புகழ்ந்தார்; இளமகளிர் பலர், சேரநாட்டுக் கருவூரை அடுத்துப் பாயும் பொருநை ஆற்றிற்குச் சென்று, அங்கே மணலால் பாவை அமைத்து, அப் பாவைக்கு மலர்பறித்து அணிவித்து ஆடிமகிழ்ந்து, பின்னர்ப் பொருகை ஆற்றுநீரிற் குதித்து நீநதிமகிழ்வர் என்றுகூறிச் சேரநாட்டு வளத்தையும், பகைவர் பயமின்றி ஆடிமகிழும் அந் நாட்டுபெற்றிச் சிறப்பையும விளங்கப் பாடியுள்ளார் பேய்மகளார்.

"வாலிழை மடமகளையர்
வரிமணல் புனைபாவைக்குக
குலவுசினைப் பூகைகொய்து
தண்பொருநைப் புனல் பாயும்
விண்பொரு புகழ்விறல் வஞ்சி.[1]"

"மறம் பாடிய பாடினியும்மே
ஓருடைய விழுக்கழுஞ்சின்
சீருடைய இழை பெற்றிசினே;
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மக னும்மே,
எனவாங்கு,
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரான் பூப்பெற் றிசினே." (புறம்: கக)

---

20. பொன்முடியார்

ஔவையார்க்கு நெல்லிக்கனி கொடுத்துப் புகழ் பெற்ற அதியமான் நெடுமானஞ்சியைப் பாராட்டிய புலவர் களுள் பொன்முடியாரும் ஒருவர். அதியமான், தகடூ ரைத் தலைநகராகக்கொண்ட சிறுநாட்டை ஆண்டுவந்த அரசன்; சிறந்த போர்வீரன்; பெருங்கொடை வள்ளல்; இதனால் அவன் பெற்ற புகழ் அவனுக்குப் பகைவர் பல ரைத் தேடித்தந்தது; பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் அதியமானோடு பகைத்து அவன் தகடூரை முற்றுகையிட்டுத் தாக்கி அழித்து, அவனையும் கொன்றான். இத் தகடூர்ப்போர் நிகழும்காலத்தில், அதியமானோடு அத் தகடூரில் தங்கியிருந்து, அவ்வப்போதுள்ள போர்நிலைமையை அதியமானுக்கறிவித்து அறிவுரை கூறித் துணைபுரிந்த புலவர்களுள் பொன்முடியாரும் ஒருவர் ஆவர்; அப்போது பொன்முடியார் பாடிய பாடல்கள் பல "தகடூர் யாத்திரை" என்ற நூலில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, பழங் காலக் கோட்டைகளின் அமைப்பையும், அக் கோட்டை மதிலின்கண் வைக்கப்பட்டிருந்த பல்வேறு வகையான படைப்பொறிகளையும் இன்றும் நாம் அறிந்துகொள்ளும் வகையில், விளங்க உரைக்கும் தன்மையுடையது.

தகடூர் யாத்திரையில் காணப்படும் பாடல்களே அல்லா மல், நூழிலாட்டு, குதிரைமறம் என்ற துறைதழுவி அவர் பாடிய பாடல்கள் இரண்டு புறநானூற்றில் உள்ளன. நூழி லாட்டு என்பது, பகைவர்படைகளைப் பாழ்படுத்திப் பெரும் போரிட்டுவரும் வீரன் ஒருவன், தன் கைப்படை யெல்லாம் போயவழி, தன் மார்பில் தைத்திருக்கும் வேலைப்பிடுங்கிப் பகைவர் படைமீது எறிந்து அழித்தான் எனப் பாடுவது; அதியமான் நெடுமானஞ்சியால் அன் போடு வளர்க்கப்பட்டவன் ஒரு வீரன்; சிறு குழந்தையாய் இருக்கும்போது, அஞ்சி அவனுக்குப் பால் உணவு அளிப் பான்; விளையாட்டு நினைப்பால், அதை உண்ண மறுப்பான்

அவன் ; அவனை அச்சுறுத்தி உண்ணுவிக்குமாறு, அஞ்சி, கையில் சிறுகோல் ஏந்தி அடிப்பான்போல் ஓங்குவான் ; இவ்வாறு அவனல் வளர்க்கப்பட்டவன் இன்று ஓர் அழகிய இளைஞனாயினன் ; அவன் உச்சிக்குடுமியும், முகத்து மீசையும் அழகை மேலும் அவன் மீது அள்ளிச் சொரிந்தன ; இந்நிலையில் நாட்டில் போர் மூண்டுவிட்டது ; முன்னாள் போரில், அவன் முன்னோர் பலரும் மடிந்துவிட்டனர் ; அழகும் ஆண்மையும் மிக்க அவ்விளைஞன் மறுநாள் போர்க்களம் புகுந்தான்.

களம்புகுந்த அக்காளை, பகைவர் படைவரிசையுள்ளே பாய்ந்துசென்று களிறு பலவற்றைக்கொன்று கடனாற்றி, இறுதியில் கைப்படை இழந்து, களத்தே வீழ்ந்துகிடக்கும் களிறு ஒன்றின்மீது சாய்ந்துவிட்டான் ; அவன் நிலை குறித்தும், தன் படைநிலை குறித்தும் கவலை கொண்டான் அஞ்சி ; அதேநேரத்தில், களிற்றின்மீது வீழ்ந்துகிடக்கும் அவனும் கவலைகொள்ளலாயினன் ; "கைப்படை யெல்லாம் போய்விட்டதே ! இன்னும் படையிருந்தால், பகைவர் களிறுகளில் மேலும் சிலவற்றையேனும் அழித்திருப்பேனே !" என்று எண்ணினன் ; எண்ணியவாறே தன் மார்பைத் தடவிக்கொடுத்தான் ; அங்கே பகைவர் எய்த அம்பொன்று தைத்துக்கிடப்பதை அறிந்தான் ; போர் வெறியால் அம்பு தைத்ததை அப்போதுவரை அறியாத அவன், அதைக்கண்டவுடனே பெருமூச்செறிந்தான். "அந்தோ ! போரிடும் வலிமையோடிருந்த அப்போது மார்புப்புண்ணில் அம்பொன்று கிடப்பதை அறியாது போனேனே ; அறிந்திருந்தால், இவ்வம்பால், பகைவர் யானையுள் ஒன்றையாவது வீழ்த்தியிருப்பேனே," என்று கவலையுற்றனன் ; இக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் பொன்முடியார்,

"பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்,
செரூஅது ஒச்சிய சிறுகோல் அஞ்சியொடு
உயவொடு வருந்து மன்னே ; இனியே,
புகர்நிறங் கொண்ட களிறட் டானே

முன்னுள் வீழ்ந்த உரவோர் மகனே,
'உன்னிலன்' என்னும் புண்ஒன்று அம்பு"

(புறம்: ஈக0)

பொன்முடியார் பாடிய பாடல் பலவற்றினும் அவருக்குப் பேரும் புகழும் அளித்தது, "என்று புறம் தருதல்" என்ற புறநானூற்றுப் பாடல் ஒன்றே; அப் பாட்டில் வீடும் நாடும் வாழ வழி கூறியுள்ளார்; வீடும் நாடும் அவற்றில் வாழ்வோரையே குறிக்கும்; வீடு என்ற உடனே, பெற்றோரும் பிள்ளைகளும் ஆகிய இவர்களே நம் கண்முன் தோன்றுவர்; அவ்வாறே நாடு என்றவுடனே, நாட்டில் வாழும் மக்களும் அம் மக்கள் தலைவனும் அரசனும் நம் கண்முன் தோன்றுவர்; ஆகவே, வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர் நல்லவராயின் வீடும் நாடும் விளங்கித் தோன்றும்; வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர் நல்லவராதல், அவர்கள் தங்கள் தங்கள் கடனறிந்து வாழ்தலே ஆகும். ஆகவே, வீட்டையும் நாட்டையும் நன்னிலையில் காண விரும்புவோர், வீட்டிலும் நாட்டிலும் வாழ்வோர்க்கு அவர் கடன்களை அறிவித்து அதன்வழி நடக்கப் பழக்குதல் வேண்டும்; அதைச் செய்துள்ளார் பொன்முடியார்.

வீடு பல கொண்டதே நாடு ஆதலின், வீட்டைமுதலில் நோக்குகிறார். வீட்டிலும், தாய் தந்தை மக்கள் என்போரில் தாயே முன்னவள்; ஆகவே, தாயின் கடமையை முதற்கண் எடுத்துக்கூறுகிறார். ஒருவர்க்கு அறிவுகூறுவோர், முதலில் அதைத்தான் அறிந்து அதன்வழி நடப்பவராதல் வேண்டும்; ஒருவருக்கு அறிவுரை கூறுவதினும், அவ்வாறு நடந்துகாட்டுவதே நன்முறை; இதை உணர்ந்தவர் பொன்முடியார். உலகத் தாய்மார்களுக்கெல்லாம் அவர் கடமையை உணர்த்த விரும்புகிறார்; அத் தாய்மார்களுள் தானும் ஒருதாய் ஆதலின், "உங்கள் கடமை இது" என்று கூறுவதினும், "என் கடன் இது" என்று கூறினர்; தாயாம் தன் கடன் யாது? "ஈன்று புறந்தருதல்." பொன்முடியார் வாழ்ந்தகாலம், நாட்டில் புறப்பகையும், அகப்

பகையும் மிக்க காலம்; ஆகவே, அப்பகை போக்கி நாட்டைக் காப்பதே நாட்டுமக்களின் தலையாய கடன்; நாடு காவலுக்கு நல்ல வீரர் பலர் தேவை; ஆகவே, நல்ல ஆண் மக்களைப் பெற்றுத்தருவதே நாட்டுத் தாய்மார்களின் தலையாய கடன்; மக்களைப் பெற்றுவிட்டு, அவர்கள வளர்ப்பிலே கவலைகொள்ளாதுபோயின், அவர்கள் நல்லுடல் பெறலின்றி நலிவர்; மக்கள் நலிந்துபோனால், அவர்களைப் பெற்றும் பயனில்லாதுபோகும்; ஆகவே, மக்களைப்பெற்ற தோடு தீர்ந்தது தன் கடன் என்று நின்றுவிடாமல், அம் மக்கள் நல்லுடல்பெற்று வாழுமாறு வளர்த்துவிடுவதும் தாயின் கடமையே; ஆகவே, "என்றுபுறந்தருதல் என்தலைக் கடன்" என்று கூறினர்.

மகன் வளருகிறான்; வளரும் மகனை அப்படியே விட்டு விட்டால், அவன் நாடுகாவலுக்குப் பயன்படான்; தான், தன்வீடு, தன்நாடு, இவற்றிற்குத தான் செய்யவேண்டிய தொண்டு, அத் தொண்டினை நிறைவேற்றும் வழிவகைகள் இவற்றை அவன் அறிந்துகொள்ளுதல்வேண்டும். அவற்றை அவன் தானே அறிந்துகொள்வான் என எதிர்பார்த்தல் இயலாது; அறிந்த ஒருவர் அவற்றை அவனுக்கு அறிவிக்க வேண்டும்; தன் மக்கள் நன்னிலைபெறவேண்டும் என்று விரும்புவோர், பெற்றோரினும் வேறு இரார்; பெற்றோர் இருவரில், தாய், வீட்டின் உள்ளிருந்து மக்களை வளர்த்துப் பழகியவளேயன்றி, வெளியேசென்று நாட்டின் தேவையை அறிந்தவள் அல்லள். அவற்றை அறிந்தவன் ஆண்மகனாகிய தந்தையே; ஆகவே, மக்களுக்கு அறிவூட்டுவது அவன் கடமையே; அறிஞர் பலர்கூடிய அவையில் தன் மகன் முதலிடம் பெறுமாறு அவனை அறிவுடையவனாக்குவது தந்தை கடனே.

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச செயல்." (திருக்குறள்: கூஎ.)

என்று வள்ளுவரும் கூறினர்; ஆகவே, "சான்றோன் ஆக்கு தல் தந்தைக்குக் கடனே" என்றார்.

நாட்டு இளைஞர், தம்கடன் அறிந்த காளையர் ஆயினர்; நாடுகாவலை மேற்கொள்ள முன்வருகின்றனர்; ஆனால், களத்தே பயன்படுத்தப் படைக்கலம் பல தேவை; படை வீரர் ஒவ்வொருவருக்கும் தேவையான படைக்கலங்களை அவரவரே செய்துகொள்வாராக என விடுவது அறி வுடைமையாகாது; அது, காலக்கேடும் பொருட்கேடும் பயப்பதாம்; ஆகவே, ஓர் ஊரில் உள்ள வீரர் பலர்க்கும் வேண்டிய படைக்கலங்கள் அவ்வளவையும் செய்துதர, ஊர்தோறும் ஒரு கொல்லனை அமர்த்தியிருந்தனர் அக் கால மக்கள். போருக்குச் செல்லப் படைவீரர் தயார் ஆயினும், அவர்களுக்குத் தேவையான படைக்கலங்களைத் தேவையான காலத்தே படைத்துத் தருவதில் கொல்லன் தவறிவிட்டால், அவ்வீரரால் போர்புரிந்து நாட்டைக் காத்தல் இயலாது; ஆகவே, வேண்டும் புது வேல்களை ஆக்கித் தருவதிலும், இருக்கும் பழைய வேல்களைச் செம்மை செய்து கூராக்கித் தருவதிலும் அவன் தவறக்கூடாது; எனவே, அக் கொல்லனுடன் தன் கடன் அறிந்தவனுதல் வேண்டும்; ஆகவே, "வேல்வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே" என்றார்.

நாடுகாவலை மேற்கொள்ள வேண்டியவர்கள், ஒழுக்கந் தவறியவராயின் நாட்டிற்கே கேடாம்; ஆகவே, அவர்கள் ஒழுக்கத்திற் சிறந்த நல்லோராக விளங்குதல் வேண்டும். அதைப் பெற்றோர்கள் செய்வது இயலாது; தாயும் தந்தையும் தம் மக்களைத் தீயவழியிற் செல்லாவண்ணம் பாதுகாத்தல், அம் மக்கள் வீட்டோடு உள்ளவரையிலுமேதான் இயலும். மக்கள் வீட்டில் வாழ்காலத்திலும், வீட்டின் வெளியே வாழும் காலமே மிகுதியாம்; வீட்டிற்கு வெளியே, தாய் தந்தையர் தலைமறைவில் வாழும்போது மக்கள் தகாதன செய்தலும் கூடும்; அதை அப்போது அறிந்து திருத்துவார் யாரும் இராது போனால், அம் மக்கள் ஒழுக்கம் கெடுவர்; ஆகவே, அம் மக்கள் ஒழுக்கத்தில் விழிப்பாய் இருக்கவேண்டுவது வேந்தன் கடமை; நாட்டு இளைஞர் கெட்டவராயின், அப்பழி அந் நாட்டு அரசனையும், ஆட்சிமுறையையுமே சாரும்; அவர்கள் நல்லொழுக்க

மிக்கவராய் வாழ வழிகாட்ட வேண்டியவன் அரசனே ; ஆகவே, "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்றார்.

நாடுகாவல் ஒன்றே அன்றைய நாட்டின் நிலைமைக்குத் தேவை என்பதையும், அதை நன்கு அமைக்க நல்ல இளைஞர்கள் தேவை எனபதையும் அக்கால மக்கள் அறிந்திருந்தனர். ஆகவேதான், தாய், மகனைப் பெற்றுப் பேணி வளர்த்தாள் ; தந்தை அறிவூட்டிச் சான்றோனாக்கினன் ; கொல்லன், அவனுக்கு வேண்டிய படைக்கலங்களைப் பண்ணித்தந்தான் ; அவன் நல்லொழுக்கம் பெற நாட்டு அரசன் முயன்றான் ; ஆகவே, நாடுகாவலை நல்லமுறையில் மேற்கொள்வதே நல்ல மகனுக்குரிய கடமை; அவன், அதற்கு மாறாகத் தன் கடமையில் தவறினால்?—போருக்குச் சென்று புறமுதுகுகாட்டி ஓடி ஒளிந்துகொண்டால்?-அனைத்தும் பாழ் ; அனைவர் உழைப்பும் பாழ் ; அந்நாடும் பாழாம் ; ஆகவே, அவ்வினைஞன், தன் கடமையில் தவறுதல் கூடாது ; தன் கடமை, மாறார் படையைப் பாழாக்குவது ; பகைவர் படையில் பெரும் பகுதியாக வரும் களிற்றினங்களைக் கண்டதுண்டமாக்கி வெற்றி காண்பது ; இதில் அவன் தவறக்கூடாது ; ஆகவே, "களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்" என்றார்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவான் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

(புறம் : கூகஉ)

இவ்வளவு அரும் பெரும் கருத்துக்களை எவ்வளவு தெளிவாகக் கூறியுள்ளார் நோக்குங்கள்! அவர் கூறிய கருத்துக்கள், அக்கால நாட்டுநிலை நோக்கிக் கூறப்பட்டனவே எனினும், அவை இக்கால மக்களும் ஏற்றுப் போற்றக் கூடியனவே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உக. போந்தைப் பசலையார்

தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்கும் துறை யமைத்து இவர் பாடிய அழகிய பாட்டொன்று அகநா னூற்றில் காணப்படுகிறது.

மகளின் வேறுபாடுகண்ட செவிலித்தாய், அவள் உயிர்த்தோழியை அழைத்து மகள் வேறுபாட்டிற்குக் காரணம் யாது என்று கேட்டாள்; அவள் வேறுபாட்டிற் கான காரணத்தை அறிந்த தோழி, அதை இன்றுவரை பிறர் அறியாவாறு மறைத்துவைத்ததேபோல் இனியும் மறைத்துவைத்தல் கூடாது என்று எண்ணினள்; ஆகவே, நடந்த நிகழ்ச்சியை உரைக்கத் தொடங்கினள்:

ஒருநாள் ஊர்ப்பெண்கள் எல்லோரும்கூடிக் கடற் கரைக்குச் சென்றோம்; கடல்நீரில் குதித்து ஆடினோம்; மணல் வீடுகட்டிச் சிறுசோறு ஆக்கினோம்; பின்னர் இவ் வாறு ஆடியதால் உண்டான களைப்புத்தீர சோலை நிழலில் தங்கினோம்; அந்த வேளை ஓர் இளைஞன் அங்கே வந்தான்; இளைஞன் ஒருவன் வருவதுகண்ட நாங்கள் எழுந்து ஒருவர் உடலில் ஒருவர் மறைந்துகொண்டு நின்றோம்; இளைஞன் எங்களை அணுகி, "பொழுதும் போய்விட்டது; நானும் நடக்கமுடியாமல் தளர்ந்துவிட்டேன்; ஆகவே, நீங்கள் ஆக்கிய இச் சோறுண்டு, இதோ இந்தச் சிறிய வீட்டில் இரவு தங்கிச் செல்ல விரும்புகின்றேன்; உங்களுக் கொன்றும் தடையில்லையே?" என வினவி நின்றான். அவன் வேண்டுகோளை ஏற்க விரும்பாத நாங்கள், அதை நேரே மறுக்காது, "புலால் நாறும் மீன் உணவு நினக்கு ஆகாது" என்று கூறினோம்; மேலும் அங்கேயே நின்றால், அவனோடு மேலும் சொல்லாடவேண்டிவருமே என்ற கவலையால், அவனைவிட்டு அகலுவது எப்படி என்று எண் ணிக்கொண்டிருந்தோம்; அந்நிலையில், "கடலில் கப்பல்; கடலில் கப்பல்; காண்போம் வாருங்கள்" என்று கூறிக் கொண்டே, சிற்றிலையும் சிதைத்துவிட்டு எல்லோரும் ஓடி விட்டனர்; நான்மட்டும் சற்றே நின்றேன்; நின்ற என்

னைச் சிறிதுநேரம் உற்று நோக்கிவிட்டு "நான் போகவா" என்றனன்; "செல்க" என்றனன் நானும்; நான் அவ்வாறு கூறியும் போகாஞ்கித் தன் தேரைக் கையாற் பற்றிக் கொண்டு நின்றுகொண்டே யிருந்தான். அக் காட்சி இன்றும் என் கண்முன் நிற்கிறது; இதுதான் உண்மை. இதுதவிர வேறு ஒன்றும் அறியேன்; கடவுள்மீது வேண்டு மானாலும் ஆணையிட்டுக் கூறுகிறேன்," என்று கூறி முடித்தாள்.

இது, அவர் செய்யுட் பொருள்: இதுவே அறத்தொடு நிற்றல். தோழி அவ்வாறு கூறக்கேட்ட செவிலித்தாய், இளைஞன் இத் தோழியை நெருங்கிப் "போகவா" என்றதனால், நம் மகளைப் பெற அவன் இவள் துணையை நாடியுள்ளான்; இவள் கூறுவதை நோக்கின், இவளும் அவனுக்குத் துணைசெய்துள்ளாள்; அவனைப் பெரு மனக்கவலையால் மகள் உடல் மெலிந்தது. ஆகவே, அவனிடத்தில், இவளும் அன்புகொண்டிருக்கிறாள்; தோழி "போ" எனச் சொல்லியும் அவன் போகாமையால் அவனும் இவளிடத்தில் பேரன்புவைத்துள்ளான்; தேரில் வந்து சென்றான்; ஆகவே, அவன் செல்வத்தாற் குறையிலன்; ஆதலால் இருவர்க்கும் மணஞ்செய்து மகிழ்வதே நம் கடமை என்று உணர்ந்தாள்.

ஒன்றைப்பற்றிய பேச்சு நீடிழுங்கால் அப் பேச்சில் விருப்பம் இலாதார், "நீவிர் பேசுவது எமக்கு விருப்பம் இல்லை" என நேரே கூறுவது அத்துணை நன்றன்று எனக் கருதி, வேறு பொருள்பற்றிப் பேசத் தொடங்குவர்; அல்லது அவணின் நீங்கி அப்பாற் செல்வர். இதை அறிந்தார் போல், தலைமகனோடு இருந்து உரையாடலை விரும்பாத அவ் விளமகளிர் "கடலில் கப்பல் தோன்றுகிறது; காணுவம் வாருங்கள்" எனக் கூறிக்கொண்டே அவ்விடத்தின் நீங் கிச்சென்ற நிகழ்ச்சி நினைந்து இன்புறற்குரியதாம். இத் துணை அரும்பொருளெலாம் நிறைந்த அழகிய ஒரு பாட்டை அளித்தவர், போந்தைப் பசலையார் என்பதல்லது, இவர் வரலாறுக வேறு எதையும் அறிந்துகொள் வதற்கில்லை.

" அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க ;
பிறிதொன்று இன்மை அறியக் கூறிக்
கொடுஞ்சு ழிப்புகார்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவள் நினக்கே ; கானல்
தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும்,
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீரயாம் சிறிது
இருந்தன மாக, எய்த வந்து,
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின்று ; அசைவு மிகவுடையேன் ;
மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டு, யானும்இக்
கல்லென் சிறுகுடித் தங்கின் மற்றெமவே
என மொழிந்தனனே ஒருவன் ; அவற்கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக்கு அரிய வல்ல, இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் ; இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காண மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு, நன்னுதால்
ஒழிகோ யான்என அழிதகக் கூறியான்,
பெயர்கு என்ன, நோக்கிற் றுன்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும் என் கட்கே."

(அகம் : ஙஙo)

௨௨. மாற்பித்தியார்

மாற்பித்தியார் பாடிய பாக்கள் இரண்டிலும், இல்லறத்தில் இனிது வாழ்ந்திருந்த கணவன், துறந்து காடு சென்றுவிட்ட கொடுங் காட்சியைக்கண்டு அவன் மனைவி அழுது அரற்றியதையே பாட்டின் பொருளாக மேற்கொண்டுள்ளார்; அவ்வாறு அழும் மனைவி மாற்பித்தியாரே; துறந்து காடுசென்று விட்டவன் மாற்பித்தியார் கணவனே; இல்லறத்தே இருந்து இன்பம் அளித்த தம் கணவன், துறந்து மறந்துபோனதைக் கண்டு மாற்பித்தியார்க்கு மயக்கமும் பித்தமும் உண்டாயின; தம் இழிநிலை குறித்துப் பாடிப் பாடி அழுதார்; அவ்வாறு அவர் பாடிய பாடல்களே அவை; ஆகவேதான் அவருக்கு மாற்பித்தியார் என்பது பெயராயிற்று என்று கூறி, மால் என்றால் மயக்கம்: பித்தி என்பது பித்தன் என்பதன் பெண்பாற் பெயர்; ஆகவே அறிவு பிறிதானவள் என்பதே மாற்பித்தி என்ற சொல்லின் நேர்பொருளாம் என்று கூறுவர் சிலர்.

புறத்துறை தழுவிய பாக்களில் தாபதநிலை என்ற துறை தழுவிய பாடல்கள், தாபதவாகை என்ற துறை தழுவிய பாடல்கள் என்று இருவகைப் பாக்கள் இருக்கின்றன; தாபதநிலையாவது, கணவன் இறந்துபோக இருந்து வருந்தும் மனைவியின் கைம்மை நிலை குறித்து எழுந்திப் பாடல். தாபதவாகையாவது துறவிகளின் துறவு வாழ்க்கையினைச் சிறப்பித்துப் பாடல். மாற்பித்தியார பாடியபாக்கள் இரண்டும் தாபதவாகை என்ற துறை தழுவியன; ஆகவே, கணவன் துறவு கண்டு மனைவி வருந்துவதோ, அல்லது கணவன் துறவு கண்டு வருந்தும மனைவி நிலைகண்டு பிறர் வருந்துவதோ அல்ல அதன் பொருள்; அப் பாக்கள் இரண்டும், இல்லறத்தில் இருந்து இன்பம் நுகரவேண்டிய இளமைப் பருவத்திலேயே பெருந்துறவியாகிவிட்ட ஒருவனின் பெருமையைப் பாராட்டிக் கூறுவனவாம்; ஆகவே, அப் பாக்கள் மாற்பித்தியார் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியை விளக்குவன அல்ல; அப் பாட்டின் பொருளுக்கும், அவர்

வாழ்க்கை வரலாற்றிற்கும் யாதோர் தொடர்பும் இல்லை. இதனல், அவர் பெயருக்குக் கூறப்பட்ட பொருள் தவ முடையது என்று ஆகாது; அப் பெயரின் பொருள் அதுவே; ஆனல், அவருக்கு அப்பெயர் ஏன் வந்தது என் பதை அறிய முடியவில்லை. மாரிக்காலத்தில் மலரும் இயல்பினதான பித்திகம், புலவர் பலரின் பாராட்டைப் பெற்ற பெருமை வாய்ந்தது

"மாரிப் பித்திகத்து ஈரிதழ் அலரி." (நற்: ஈகச)

"மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை." (குறுந்: கசஅ)

இவ்வாறு புலவர்களின் பாராட்டைப் பெற்ற மாரிப் பித்திகத்தை, மாண்புறச் சிறப்பித்துப் பாடிய சிறப்பால், இவர், மாரிப்பித்தியார் என அழைக்கப் பெற்றுளார். மாற்பித்தியார் என்பதன்று இவர் பெயர்; அவ்வாறு பாடிய அவர் பாட்டு இப்போது கிடைத்திலது போலும் எனக்கூறுவர் வேறுசிலர்.

இனி, அவர் பாடிய பாக்கள் இரண்டின் பொருளையும் திரட்டித் தருகின்றேம்; படித்து இன்புறுங்கள்:

பரந்து உயர்ந்த வீடு; ஓவியத்தில் காண்பதே போன்று அழகு நிறைந்தது; அந்த வீட்டிலே, கொல்லிப் பாவைபோல் குறைவின்றி நிறைந்த அழகுடைய மகளிர்; அவர்கள் அறிவையும் மயக்கும் ஆண் அழகன் ஒருவன்; அவன் தெரு வழியே சென்றால், அவனைக்கண்டு அன்பு கொண்ட மகளிர் அவனைப் பெறமாட்டாக் கவலையால் தம் கைவளை கழலுமாறு தளர்வர்; அவனை விரும்பாத மகளிர் இலர்; அவன், தான் விரும்பிய மகளிரைப் பெறமாட்டாது பின்னடைந்ததும் இலன்; மயிலை வலைகொண்டு மடக்கும் வேட்டுவனைபோல், மகளிரைத் தன் சொல்வலையால் பிணிக்கும் சொல்லழகன்; இவ்வாறு, செல்வச் செருக்கிலே வாழ்ந்த அவன் வாழ்வின் சிறப்பினைக் கண்டவர், இன்று அவன் நிலையைக் கண்டால் அவனை வியந்து பாராட்டா திரார்; இப்போது அவன் வாழ்வது நாட்டிலே, பெரிய வீட்டிலே அன்று; காட்டிலே வாழ்கிறான்; காலையில்

எழுந்து காட்டாற்று நீரில் மூழ்குகிறான்; அதனால் அவன் தலைமயிர் தன் பண்டைக் கருநிறம் ஒழிந்து செந்நிறம் பெற்றுவிட்டது; அது, மேலும் பல சடைகளாகத் திரிந்து தும்பிவிட்டது; கட்டுக்கடங்காக் காளையெனத் திரிந்த அவனை காட்டு வாழ்க்கையில் கைதேர்ந்துவிட்டான் என்றே எண்ணத் தோன்றும்; அவனுக்குக் காட்டுவாழ்க்கையில் எவ்வளவு பெரும் பழக்கம்; நீராடிய ஈரத்தை உலர்த்த நெருப்பு மூட்டும் அவனுக்கு வேண்டிய விறகுகளைக் காட்டு யானைகள் அன்றே கொண்டுவந்து தருகின்றன! எவ்வளவு பெரிய துறவியாகிவிட்டான் அவன்! என்னே அவன் நிலை!

"ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்;
கழைக்கண் நெடுவரை அருவி யாடிக
கான யானை தந்த விறகில்
கடுந்தெறல் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே" (புறம்: உருக)

"கறங்கு வெள்ளருவி ஏற்றலின் நிறம் பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோடு
அள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே."

(புறம்: உருஉ)

உங. மாறோக்கத்து நப்பசலையார்

பாண்டிய நாட்டில் கொற்கை நகரைச்சூழ இருந்த நாட்டிற்குப் பழங்கால மக்கள் வைத்து வழங்கிய பெயர் மாறோக்கம் என்பது; மாறோகம் என்றும் சிலர் அழைப்பர்; அந்நாட்டு மக்கள், வீட்டிற்கு வெளியேசென்று விளையாடும் பேதைப் பருவத்து மகளிரைப் பெண்மகன் என்று கூறுவார்கள். அந்நாட்டுப் பெண்களுள் புலமையிற் சிறந்தவரொருவர் இருந்தார். அவர் பெயர் பசலையார்; பசலையார் என்ற இப் பெயர், அவர் தாய் தந்தையர் வைத்த இயற் பெயரன்று; பசலை என்ற நோயின் தன்மையை விளங்கப் பாடியதால் பெற்ற காரணப் பெயராம். இப் பெயரோடு, பெரும்புலவர்களுக்கு அவர் புலமையும் புகழும் கருதி அளிக்கும் 'ந' என்ற சிறப்படையும் சேர, நப்பசலையார் என்று அழைக்கப்பெற்றார்; பசலை யென்பது கணவன்மார் கல்வி, பொருள், போர் இவை குறித்துப் பிரிந்து வெளி நாடு சென்றகாலத்தில் அவர் மனைவியர்க்குத் தோன்றும் ஒரு நோய்; அவர்கள் நெற்றி, கணவன்மார் உடனிருந்த காலத்தில் பெற்றிருந்த அழகும் ஒளியும் கெட்டு, கண்ணுடியில் வாயினுல் ஊதினுல், அக் கண்ணுடி ஆவி படர்ந்து ஒளி மழுங்குவதுபோல், வேறுபட்டுத் தோன்றும் ஒரு நோய். நற்றிணையில் தாம் பாடிய பாட்டொன்றில், இப் பசலை நோயை,

> "மணிமிடை பொன்னின் மாமை சாயஎன்
> அணிநலம் சிதைக்குமார் பசலை."
>
> (நற்றிணை : ஈ0ச)

என்று நப்பசலையார் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பாண்டிய நாட்டிற் பிறந்து தம் நாட்டுப் பற்றும் ஊர்ப்பற்றும் கெடாவகையில் தான் பிறந்த ஊர்ப்பெயரைத் தம்பெயரோடு இணைத்து வழங்கும் நம் புலவர் பாராட்டிய அரசர்கள் அனைவரும் சோழர்குலத் தொடர் புடையவராகவே காணப்படுகின்றனர்; அவர் பாடல் பெறும் பேறுபெற்ற அரசர்கள் மூவர்: சோழன் குளமுற்றத்

துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரி, மலைய மான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்போர்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பெரும்புலவர் பலருடைய பாராட்டைப் பெற்ற பேரரசன்: பதின்மூன்று புலவர்கள் அவனைப் பாராட்டியுள்ளனர் என்றால் அவன் புகழை என்னென்பது! புலவர் பாராட்டப் பெறுதற்கு அவன் கொடையும், வீரமும் மட்டும் காரணமாகா: அவன் புலமையும் காரணமாம்; அவனே ஒரு பெரும் புலவன்; அப் புலவர்கள் பாட்டோடு ஒருங்குவைத்து மதிக்கத்தக்க அழகிய பாடல் பாடும் ஆற்றல் வாய்ந்தவன். கிள்ளிவளவன், உறையூரைத் தலைநகராகக்கொண்டு அதைச் சூழ இருந்த சோழநாட்டை ஆண்டவன்; சிறுகுடிகிழான் பண்ணன் என்ற கொடைவள்ளல்பால் பெருமதிப்புடையவன்: மலையமான் திருமுடிக்காரியும், சேரவேந்தனும் அவன் பகைவர்; சோழர் குடியினும் அவனுக்குப் பகைவர் இருந்தனர்; சேரர் தலைநகராகிய கருவூரை முற்றுகையிட்டு அழித்தான்; இமயமலையில் தங்கள் குல இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்துப் புகழ்பெற்று விளங்கிய சேர அரசனைத் தொலைத்தான்; மலையமானைப் போரில் வென்று அவன் மக்களைக் கைப்பற்றிக் கொணர்ந்து யானையைவிட்டு மிதித்துக் கொல்லத் துணிந்தான்; அச் செய்தியறிந்த கோவூர்கிழார் என்ற புலவர் வந்து வேண்ட விடுதலை செய்தான். போரில் பொறுத்தற்கரிய கொடியனே என்றாலும் புலவர்களிடத்தே பெருமதிப்புடையவன்; அவன் காலத்தில் அவன் நாட்டில் வெள்ளைக்குடி என்ற ஊரில் நாகனார் என்ற புலவர் இருந்தார்; அவ்வூரில் அவருக்கு உரிமையான நன்செய் நிலத்திற்குச் செலுத்தவேண்டிய இறைப் பணத்தை அவரால் செலுத்த முடியவில்லை; இறை தண்டுவோர் விடவில்லை; என்ன செய்வார் அவர்? கிள்ளி வளனைக் கண்டார்; தன் குறைகூறினர்; அழகிய பாடல் ஒன்று பாடினர்; உடனே அரசன், அந் நிலத்திற்குச் சேரவேண்டிய பழைய கடனையும் தள்ளிவிட்டு அந் நிலத் தையும் இறையிலியாக மாற்றினன்.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பதில் கிள்ளிவளவன் என்பதே அவன் இயற்பெயர்; குளமுற்றத்துத் துஞ்சிய என்பது, அவன் இறந்த பிறகு அவனுக்குக் கொடுத்த சிறப்புப் பெயர். ஒரே பெயர் கொண்ட அரசர்கள் பலர் வாழ்ந்தால், அவர்களைப் பிரித்து அறிவதற்காக, அவர் வாழ்க்கையோடு தொடர்புடைய சில நிகழ்ச்சிகளை அவர் பெயர்களோடு இணைத்து வழங்குவது வழக்கம். பழந்தமிழ் அரசர்கள் போர்வேட்கை யுடையவராவர்; ஆகவே, அவர்கள் அனைவரும் தங்கள் அரண்மனைகளிலேயே இறந்தார்கள் என்று சொல்வது இயலாது; பல வேறு இடங்களில் நடைபெற்ற போர்களில் ஈடுபட்ட அவர்கள் அப் போர்க்களங்களிலேயே இறந்திருப்பர். வாழ்வின் பயன் வீரச்சாவு என்பதே பழந்தமிழர பண்பாடாதலின், அரசர்கள் அரண்மனையில் இறவாது அமர்க்களத்தே இறந்தால், அதை அவரின் புகழுக்குரிய செயலாகக் கொண்டு அவ் விடங்களின் பெயர்களை அவ் வரசர் பெயர்களோடு இணைத்து வழங்குவர்: காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி; யானைமேல் துஞ்சிய பெருமான் கிள்ளிவளவன், குளமுற்றம் என்ற இடத்தே இறந்தவன் ஆகவே, அவன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என அழைக்கப்பெற்றான்.

கிள்ளிவளவன் என்பதும் அவனுக்கு உரிய இயற்பெயரன்று; சோழ அரசர்கள் என்பதைக் குறிக்கச் சில சோழ அரசர் பெயர்களுக்குப் பின் வளவன் என்பதும் வரும; நலங்கிள்ளி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி: திருமாவளவன், மாவளத்தான். சோழ அரசர்கள் என்று அறிவிக்க வரும் இவ்விரு குறியீட்டுப் பெயர்களும் இணைய, கிள்ளி வளவன் என்பது இவனுக்குப் பெயராயிற்று. பழந்தமிழ் அரசர்கள் பெயரிடும் முறைகளுள் இதுவும் ஒன்று: பாண்டிய அரசர்கள் எனக் குறிக்கவரும குறியீடுகள் மாறன் என்பதும், வழுதி என்பதுமாம்: முதுகுடுமிப் பெருவழுதி, நன்மாறன்; இவை இணைந்து மாறன்வழுதி என ஒரு பாண்டியன் பெயராக வருதலும் காண்க.

மலையமான் திருமுடிக்காரி கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; பெண்ணையாறு பாயும் மலாடு என்ற நாட்டை ஆண்டவன்; திருக்கோவலூர் அவன் தலைநகர்; முள்ளூர் என்ற அரணமைந்த மலைக்கு உரியவன்; சிறந்த போர் வீரன்; சேர சோழ பாண்டியர் மூவர்க்கும் படைத்துணை அளிக்குமளவு பேராற்றல் வாய்ந்தவன்; இவன், தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதிகமான் நெடுமானஞ்சியால் ஒரு முறை தோற்கடிக்கப் பட்டான்; உடனே, அவ் வதிகன் பகைவனனை பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசன் துணையைப் பெற விரும்பினன்; அதற்காக அவன் பகைவனும், கொல்லிமலைக்குத் தலைவனுமாகிய ஓரி என்பானைக் கொன்று அக் கொல்லிமலையைச் சேரனுக்கு அளித்தான்; உடனே அச் சேரன் அதியமான் தகடூர்மீது போர் தொடுத்து அழித்து அவனைக் கொன்றனன்; மலைய மான் தன் அரசுரிமையை மீண்டும் பெற்றனன்.

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன், மலைய மான் மரபிலே வந்தவன்; சோழர் படைத்தலைவன். மலையமான் திருமுடிக்காரியின் மகன் இவன் என்று கூறுவர் சிலர்; ஆனால் அதை உறுதிசெய்யும் தெளிவான சான்றுகள் கிடைத்தில. சோழர்குலச் சிற்றரசன் ஒருவன் தன் தாயத்தார்க்கு அஞ்சி இவனிடம் அரண் புகுந்தான். அவனைத் தன் முள்ளூர் மலையில் வைத்துக் காத்த தோடு, அவன் பகைவரையும் வென்று அவனைச் சோழர் அரியணையில் ஏற்றினன்.

நப்பசலையார் பாராட்டிய அரசர்களின் வரலாறுகள் இவை; இனி, இவர்களைப் பாராட்டிய அவர் பாடல்களின் சிறப்புக்களைச் சிறிது நோக்குவோம்.

கிள்ளிவளவன் ஈகைச்சிறப்பு, வெற்றிச் சிறப்பு, செங்கோற் சிறப்பு ஆகியவற்றைப் புகழவந்த நப்பசலையார், "அரசே! நின்பால் வரும் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் பொருள்களை வாரிவாரி வழங்குகின்றாய் என்று கூறுகின்றார்கள்; என்றாலும் அஃது உன் புகழாகாது.

எதிர்த்த பகைவர்கள் எவ்வளவு பேராற்றல் வாய்ந்தவராயினும், பாம்பினை அழிக்கும் இடியேற்றினைப்போல் அவர்களை அழிக்கும் ஆண்மையுடையாய் என்பர்; அதுவும் உனக்குப் புகழைத் தராது; முறை வேண்டினர்க்கும், குறைவேண்டினர்க்கும் போர் அத்தாணிக்கண் இருந்து அறம் பிறழாது தீர்ப்பளிக்க வல்லாய் என்று நின்னைப் புகழ்வர்; அதுவும் நின் புகழாகாது," என்று கூறுகிறார். இவ்வாறு கூறுவது, உண்மையில் புகழ்ச்சியன்று; இகழ்ச்சி என்றே எவர்க்கும் எண்ணத் தோன்றும். ஆனால், இவையெல்லாம் அவன் புகழாகா என்பதற்கு நப்பசலையார் கூறும் காரணத்தை அறிந்தால், இதுவே உண்மைப் பாராட்டு என்ற முடிவிற்கு வருவர்.

சோழர் குடியிற் பிறந்தவர் வழிவழியாகவே கொடுத்துப் புகழ் பெற்றவர். அவர்கள் குல முன்னோன் ஒருவன் தன்பால் அடைக்கலம் புகுந்த புறா ஒன்றைக் காப்பாற்றுவதற்காகவே துலாவில் ஏறி அமர்ந்து தன் உடலையே தானமாகக் கொடுத்துள்ளான். அதைப்போலவே, சோழர் குடி தோன்றிய காலத்திலிருந்தே சோழர்கள் பெரு வீரர்கள்; அவர்களுள் ஒருவன், தேவர்க்கும் அசுரர்க்கும் நடந்த போரில் தேவர்க்குத் துணைபோய், அசுரர்கள் தங்கள் பாதுகாப்பிற்காகப் பெற்றிருந்த வானத்திலேயே பறந்து திரியும் இயல்புடைய மூன்று பெருங் கோட்டைகளை அழித்து அவ் வசுரர்களையும் கொன்றான். சோழர்கள் என்றுமே முறைதவறியவரல்லர்; அவர்கள் தலைநகராகிய உறந்தை நகரில் உள்ள அறங்கூர் அவையிடத்தே அறம் என்றும் நின்று நிலைபெற்றிருக்கும்; அதைப் புலவர் பலரும் பாராட்டியுள்ளார்கள்.

இவ் வுண்மைகளை அறிந்தவர் நப்பசலையார். "ஆகவே, புறாவின் பொருட்டுத் துலைபுக்க சிபியின் வழிவந்தவனாகவே, வந்தவர்க்கெல்லாம் பொருள்களை வாரி வழங்குகின்ற நின்செயல் நினக்குப் புகழாகாது; அவுணர் கோட்டை மூன்றையும் அழித்த நின் முன்னோன் செயலோடு ஒப்பிட்டு நோக்குங்கால், உன் ஆண்மை

ஆண்மையாகாது; உங்கள் உறவுகை அவையில் என்றும் அறம் நின்று நிலைபெறும் என்பதை அறிந்தால், நீதி தவறுதவன் நீ என்பதில் பொருளே இல்லை," என்று கூறினர். "இவ்வாறு உன் புகழெல்லாம் உன் முன்னோர்களிடத்திலும் காணப்படுவதால் உன்னை நான் எவ்வாறு புகழ்வேன்! யாது கூறி உன்னைப் பாராட்டுவேன்!" என்றும் கூறுகிறார்.

இதனால், கிள்ளிவளவன் அருள், ஆண்மை, அறம் ஆகிய பெருங் குணங்களையுடையான் எனறும், வழிவழியாகவே அக் குணங்களால் சிறபபுடைய குடியிலே வந்தவன் என்றும், தன்குடி வழிவழியாகப் பெற்றிருந்த அக் குணங்களை அழிக்காமல் போற்றிக் காப்பாற்றிய பெருமையுடையான் என்றும் பாராட்டிய பெருமையைக் காணுங்கள்:

"புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக:
ஈரல் நின் புகழு மன்றே, சார்தல்
ஒன்னூர் உட்குந் துன்னருங் கடுந்திறல்
துங்கெயில் எறிந்தநின் ஊங்கணேனர் நினைப்பின்
அடுதல்நின் புகழு மன்றே, கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று ஆகலின் அதனால்
முறைமைநின் புகழு மன்றே;" (புறம்: ஙக)

கிள்ளிவளவன் வீரமும் கொடையும் விளங்கப் பாட விரும்பிய நப்பசலையார்க்கு அதற்கு ஏற்ற காலம் கிடைத்தது. கிள்ளிவளவன் இறந்து விட்டான்; நப்பசலையார் அச்செய்தி கேட்டார்; அவர் உள்ளம் நடுங்கிற்று. அவ்வளவு போராற்றல் வாய்ந்தவன் எப்படி இறந்தான்! அவனை வென்று கொல்ல யாரால் முடியும்? அவனை அணுகவும் அஞ்சுவரே பகையரசர்கள்! எமன் எப்படி அவன் உயிரைப் பற்றினன்? அவனை நெருங்கக்கூடிய ஆண்மை எமனுக்கு எது? எமன் தன் ஆற்றல் காட்டி அவனுயிரைக்

கவர்ந்திருக்க மாட்டான்; பகைத்து அவனுயிரைப் பற்ற அவனல் முடிந்திராது; பின் எவ்வாறு அவன் உயிரைக் கவர்ந்தான்; கிள்ளிவளவன் பெருங் கொடைவள்ளல் என்பதை எமன் அறிந்திருக்க வேண்டும்; ஆகவே, அவன்பால் பாடிச்சென்று பரிசில் பெறும் இரவலர் போலவே தானும் சென்று இருகை கூப்பி வணங்கி இரப்புரை கூறி நின்றே அவனுயிரைப் பெற்றிருத்தல் வேண்டும்:

"செற்றன் ருயினும் செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினும் உய்வின்று மாதோ!
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன் ருகல் வேண்டும்: பொலந்தார்
மண்டமர் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே" (புறம்: உஉசு)

என்று கூறினர். இரந்து அவன் உயிரைப் பெற்ருன் எமன் என்று கூறியதால், அவனை அணுக எமனும் அஞ்சுவான் என அவன் ஆண்மையினையும், இரப்போர்க்குத் தன் உயிரையும் கொடுப்பான் என அவன் கொடைச்சிறப்பையும் நப்பசலையார் விளக்கியுள்ளார்.

மலையமான் திருமுடிக்காரியைப் பாராட்டுகிறூர் நப பசலையார். "பகையரசர்களின் பட்டத்து யானைகளுக்கு நெற்றியில் அணியும் பொன்னலாகிய பட்டத்தை அழித்துச் செய்த பொற்ருமரை மலர்களைத் தம்மைப் பாடும் பாணர்களின் தலையிலே சூட்டுவர் நின் முன்னேர்," என அவன் குல முன்னேர் பெருமையையும், காவற்காடு சூழ்ந்து அருவி நிறைந்து விளங்கும் அவன் முள்ளூர் மலையையும் பாராட்டினர்.

பின்னர் மலையமான் புகழ் பாடுவார்போல பெரும் புலவராகிய கபிலர் புகழையும் ஒருங்கே பாராட்டிய உயர்வு உள்ளுந்தோறும் மகிழ்தற்குரியதாம். "கபிலன் உலகில் வாழும் மக்கள் எல்லாரினும் குற்றமற்ற அறிவுடைய அந்தணன்; அவ்வளவு சிறந்த கபிலன் நின்னைப் பாடினன்! எப்படிப் பாடினன்? உன்பால் வந்து உன் புகழ் பரவி,

அதைக்கேட்டு நீ அளிப்பன பெற்று வாழ்வர் இரவலர்; இனி அவர்கள் பிழைப்பிற்கு வழியில்லை. அவர்களால் புகழ்ந்துபாட முடியாத அளவு கபிலர் நின்னைப் புகழ்ந்து பாடிவிட்டார். இனி, வேறு யாரும் நின்னைப் புகழ்ந்து பாடல் முடியாது; மேற்குக் கடற்கரையின்கண்ணே உள்ள சேரக்குரிய துறைமுகங்களுக்குள்ளே, பொன்னை ஏற்றிக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து வந்த பெரிய கப்பல்கள் வந்து தங்கிவிட்டால், ஏனைய சிறு கப்பல்கள் எப்படி அத் துறைமுகத்தினுள்ளே நுழைய முடியாதோ, அப்படியே, என்னைப்போன்ற சிறு புலவர்கள் உன்புகழ் பாட முடியாத அளவு கபிலர் நின்புகழ் பாடி விட்டார்,'' என்று கூறுகிறார்.

“நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்; அதற் கொண்டு
கினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறகலம் செல்கலா தனேயேம்” (புறம்: கஉசு)

கபிலர் புகழைப் பெறுவது அரிது; பெறக்கூடிய பேறுகள் அனைத்தினும் சிறப்புடைய பேறு என்று கூறிக் கபிலரைப் புகழ்ந்தார். முள்ளூர்மலையின் சிறப்பைப் பாராட்டிய பிறிதோரிடத்திலும், “பெய்யா நாவின் கபிலன் பாடிய....எள்ளறு சிறப்பின் முள்ளூர்” என்று பாராட்டிக் கபிலரையும் பாராட்டிப் பாடியுள்ளார். “அத்தகைய கபிலரும் நின்னைப் புகழ்ந்து பாடினர் என்றால் உன் பெருமையே பெருமை!” எனக் காரியையும் புகழ்ந்தார். இவ்வாறு இருவர் புகழையும் ஒரேபாட்டில் வைத்துப் பாராட்டியதோடு, அதை விளக்கும் வகையில், பழந்தமிழ் மக்களின் கடல்வாணிப வளத்தையும் விளங்கக் கூறியுள்ளார்

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனைப் பாராட்ட விரும்புகிறார் நம புலவர் நப்பசலையார். காவிரி

பாய்ந்து வளங்கொழிக்கும் சோழவளநாடு, பங்காளிப் போரால் பாழடைந்துவிட்டது; நல்ல அரசை இழந்து விட்டது அந் நாடு; அந் நாட்டு அரியணைக்கு வரவேண் டியவனே மிகவும் இளைஞன்; அவன் தாயத்தார் அவனை யும் அழித்தொழிக்கத் திட்டமிட்டுவிட்டனர். அஃதறிந்த அவன், தங்கள் குலத்தின்பால் குன்றாத அன்புடையவர் களும், தங்களுக்குத் துயர் வந்தபோதெல்லாம் துணைபுரி வோருமாகிய மலைய மன்னர்கள்பால் வந்து அடைக்கலம் புகுந்தான்; அப்போது அந் நாடாண்டிருந்தோன் திருக் கண்ணன். அவன் தந்தையும் அப்போதுதான் இறந்து விட்டான். ஆகவே, தானே முன்வந்து, தன் தந்தை தோழன், சோழர்குல இளவரசனுக்குத் துணைபுரிந்தான்; பகைவர் அணுகுதற்காகத் தன் முள்ளூர் மலையிடத்தே வைத்துக் கேடொன்றுமின்றி அவனைக் காத்தான், இறுதி யில் அவன் பகைவரையும் அழித்து அவனைச் சோழநாட் டிற்கு அரசனாக்கி, அரசிழந்து அல்லலுற்ற அந் நாட்டு மக்கள துயரையும் போக்கினன்.

இவ் வரலாறுகளை யெல்லாம விளங்க உரைத்துவந் தப்பசலையார், தந்தை இறப்பத் திருக்கண்ணன் தோன்றி, தன் தந்தை தொண்டினைத் தான் மேற்கொண்ட சிறப் பினைப் பாராட்ட விரும்புகிறார். அவன் தந்தை மறை வால் உண்டான கேட்டின் மிகுதியையும், அதைப் போக் கும் வகையில் திருக்கண்ணன் தோன்றிய காலத்தின் அருமையையும், அவன் முன்வந்தது கண்டு மக்கள் கொண்ட மகிழ்ச்சிப்பெருக்கையும் விளக்க ஓர் அரிய அழகிய உவமையினை அமைக்கின்றார்.

கொடிய கோடைகாலம்; அக் கோடையும் குறுகிய தாகாது, நீண்டு செல்கிறது; கோடைக் கொடுமையால் மலைகள் வெப்பந் தாழாது வெடித்துப் பொடியாகின்றன. காடுகள் எல்லாம் தீப்பற்றி எரிகின்றன; நீர் நிறைந் திருந்த நீர்நிலைகள் பலவும் அந் நீர் முற்றும் வற்றி உலர் கின்றன; இந்நிலையில் கோடை நீளுகிறது; இக் கோடை யின் கொடுமை கண்டு மக்கள் கண்கலங்குகின்றனர்.

கோடை, இவ்வாறு கொடுமை யளித்துக்கொண்டிருக்குங்கால், திடீரென, வானம் இருண்டு, இடியும் மின்னலும் கலந்து, மண்ணும் பிளந்து போகுமாறு பெருமழை பெய்யத் தொடங்கிவிட்டது : மக்கள் மனத்துயர் மாய்ந்தது ; மகிழ்ச்சி பொங்கிற்று.

இக்காட்சியைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்திக் கோடையின் கொடுமைபோன்றது திருக்கண்ணன் தந்தை மறைவு என்றும், பெருமழை பெய்ததுபோல வந்து முன்நின்றான் திருக்கண்ணன் என்றும் உவமை கூறி, கோடையின் கொடுமைகாண நடுங்கிப், பெருமழை காண மகிழும் நம் பசலையார் தம் மனித உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார்.

“கவலை நெஞ்சத்து அவலந்தீர
நீ தோன்றினையே ; நிரைத்தார் அண்ணல்
கல்கண் பொதிய, கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பின் கயம்பல உணங்க
கோடை நீடிய பைதறுகாலை
இருநிலம் நெளிய எண்டி
உருமுரறு கருவிய மழைபொழிந்தாங்கே.” (புறம் : எச)

இம் மூவரையேயன்றி அவியன் என்ற ஒரு தலைவனையும் பாடியுள்ளார் பசலையார். கோழிக்குரல் கேட்டு, எழுந்து கொடுமைசெய்யும் குளிரையும் பொருட்படுத்தாது சென்று அவனைப் பாடியதையும், தன் பாடல் கேட்ட அவனும், தன் தகுதியறிந்து வரவேற்றுச் சிறப்புப் பல செய்து, பாம்பின்தோல் போன்றனவும், பெரு மூங்கிலினுள்ளே பிரித்தெடுக்கப்படும் வெள்ளிய மெல்லிய தோல் போன்றவுமாய அழகிய ஆடைகள் பல அளித்ததையும் விளக்கிவிட்டு, அத்தகையான் ஒருவனைப் பெற்றுவிட்ட காரணத்தால், “வறுமை என்னை வாட்டாது ; மழை இன்மையால் காலமே கெடினும் கவலைகொள்ளேன் ; மழைக் கோளாகிய வெள்ளி எங்குச செல்லினும் அதுகுறித்து இனி வருந்தேன்,” என்று பெருமிதம் தோன்றக் கூறியுள்ளார் :

"கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன் என
ஒருவனை உடையேன் மன்னே;
அருந்; எவன் பரிகோ வெள்ளியது நிலையே?" (புறம் · நஅந)

போர்க்களத்தே வீரப்புண் பெற்று மாண்டான் கணவன்; அஃதறிந்த மறக்குடியிற் பிறந்த அவன் மனைவி அவன் உடலை ஒன்றும் தீண்டாதவாறு அன்றிரவு காத்துக் கிடக்கின்றாள். இந்நிலையை விளக்கும் ஒரு செய்யுளை இறுதியாகப் பாடியுள்ளார், பெண் உள்ளம் அறிந்த நம் பெண்பாற் புலவர் பாம்பு அறியும் பாம்பின் கால் என்பர்; பெண்கள் துயரைப் பெண்களே அறிவர்; ஆகவே, கணவனை இழந்த அப் பெண் வாயிலாகக், கணவனை இழந்த மகளிர்தம் துயர்நிலையைச் சித்திரித்துக் காட்டுகிறார்.

"கணவன் மார்புப் புண் அவன் உயிர் மீளாவாறு செய்துவிட்டது; ஆகவே, அது மிகமிகக் கொடிய புண்; நடுநாள் யாமத்திலும் தும்பி வந்து புண்ணைச் சுற்றுகிறது; அதைத் துரத்துதல் வேண்டும் உடல் வீழ்ந்து கிடக்கும் இடம், ஊர்ப்புறம். ஆகவே, ஏற்றிய விளக்கை எரியவிடாது அலைக்கிறது காற்று. உறங்கிப் பலநாள் ஆயினமையால், கண்களும் உறக்கத்தை மேற்கொள்ளுகின்றன; இடை இடையே எழும் கூகையின் குரலோ அச்சத்தைத் தருகிறது. 'என் கணவன் உயிர்மீண்டு எழுமாட்டானோ' என்ற ஆவலால் நற்சொல் கேட்டுநிற்கும் பெண்கள் எண்ணமும் நிறைவேறுது. தலைமயிர் கழித்து, தண்ணீரில் மூழ்கி நல்லாடை இன்றி அல்லிக்காய் அரிசி தின்னும் கைம்பெண்ணாய் வாழும் கருத்திலேன் யானும். இதுகாறும் இவன்பால் பொருள்பெற்றுப் பிழைத்துவந்த ஏ! பாண! ஏ! விறலி! இனியும் நீங்கள் இங்கேயிருந்து வாழ்தல் இயலாது; நீங்கள் இனி எங்ஙனம் வாழ்வீர்?" (புறம் : உஅ0)

இது, அப் பெண் அழுது பாடியதாக அவர் பாடிய ஆனந்தப்பையுள். இதில், தாம் துயர்உறும் காலத்தும், தம் துயரைப் பெரிதென மதியாது, பிறர் துயரையே பெரிதெனக்கொண்ட உயர்நிலையும் விளக்கப்பட்டுள்ளவியப்பைக் காணுங்கள்.

உசு. வெண்ணிக் குயத்தியார்

வெண்ணி என்ற ஊரில் வாழ்ந்த வேட்கோவர் குடியிற் பிறந்த பெண்பாலார் இவர். வெண்ணி என்ற ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில், நீடாமங்கலத்திற்கு அண்மையில் உள்ளது; இப்போது, வெண்ணில் எனவும் கோயில் வெண்ணி எனவும் அழைக்கப்பெறும். வணிகர் குடியிலே சிறந்தார்க்கு எட்டிப் பட்டமும், படைவீரருள சிறந் தார்க்கு ஏனாதிப் பட்டமும் வழங்குவதேபோல், பழங்கால அரசர், வேட்கோவர் குடியிலே சிறந்தார்க்குக் குயம் என்று பட்டமளித்துச் சிறப்பித்தனர். பின்னர் வேட் கோவர் என்ற பெயர் மறைய, குயவர் என்பதே குடிப்பெய ராயிற்று; குயவர் குடியிலே பிறந்து குன்றாப் புகழ்பெற்ற புலவராய் இருந்தமையால், இவர், குயத்தியார் எனக் குலப் பெயராலேயே அழைக்கப்பெற்றார்; அவர் பெயரோடு, அவர் பிறந்த ஊர்ப் பெயரையும் இணைத்து வெண்ணிக் குயத்தியார் என்று அழைத்தனர். இவரைப்போலவே, ஊரும் குலமும் அறிய நின்ற புலவர்களும் இருந்தனர்: ஆலத்தூர்கிழார், கோவூர்கிழார்.

வெண்ணிக்குயத்தியார், சோழநாட்டு அரியணையில், கரிகாலன் என்ற பேரரசன் வீறறிருந்த காலத்தே வாழ்ந் தவர்; கரிகாலன் முன்னோர் வரலாற்றையும், சிறப்பையும் நன்குணர்ந்தவர். ஆண்டில் அவ்வப்போது வீசும் காற்றின் தன்மையை உணர்ந்து, மாறி மாறி வீசும் அதன் இயல்பை உணர்ந்து, அதற்கு ஏற்ப, கப்பல்களைப் பிற நாட்டிற்குக் கொண்டுசெல்வதும், பிறநாட்டினின்றும் கொண்டுவருவதும் ஆய தொழில்களை அந்தக் காலத்தி லேயே மேற்கொண்டவர் கரிகாலன் முன்னோர்; பழந் தமிழர். வெண்ணிக்குயத்தியார் இதை உணர்ந்து கூறி யுள்ளார்.

கரிகாலனுக்கும், சேரமான் பெருஞ்சேரலாதனுக்கும் புலவர் ஊராகிய வெண்ணி அருகே பெரும் போர் நடந் தது; அதனால் அவ்விடம் வெண்ணிப் பறந்தலை என்று

அழைக்கப்பட்டது: போர் நிகழ்ந்த இடத்தைப் பறந்தலை என்று அழைத்தனர் பண்டைக்கால மக்கள்; பாழிப் பறந்தலை, வாகைப் பறந்தலை எனவும் வருதல் காண்க. போரில் கரிகாலன் எய்த அம்பு ஒன்று, சேரலாதன் மார்பில் தைத்து ஊடுருவிச் சென்று, முதுகுவழியே வெளிவந்துவிட்டது; அதனால், அவனும், அவன் படையும் தோற்றனர். ஆனால், சேரலாதன் இறந்தானல்லன்; புறப்புண் பெற்றது காண உள்ளம் நாணினான். மானம் அழிந்து வாழும் வாழ்வும் வாழ்வா என எண்ணினான்; வாழ்வை வெறுத்தான்; உடனே கையில் வாளேந்தி, வடக்கு நோக்கி அமர்ந்து, உண்ணாது இருந்து உயிர் இழந்தான்; இவையெல்லாம் தன் ஊர் அருகிலேயே நிகழ்ந்தமையால் அவற்றை நன்கு உணரும் வாய்ப்பு புலவருக்குக் கிட்டியது. படையைப் பாழ்செய்து பெற்ற கரிகாலன் வெற்றிச் சிறப்பையும் கண்டார்; தோற்ற சேரலாதன், புறப்புண் பெற்றமைக்கு நாணி, வடக்கிருந்து உயிர்விட்டுப் பெற்ற புகழ்ச் சிறப்பையும் கண்டார். இவ்விரு சிறப்புக்களில் சிறந்தது எது என ஆராய்ந்து கண்டார்; வென்று கொண்ட புகழினும், வடக்கிருந்து பெற்ற புகழே அவருக்குச் சிறந்ததாகத் தோன்றியது. வெற்றிக் களிப்போடு நிற்கும் கரிகாலனைக் கண்ட குடபுலவியனார், "வடக்கிருந்து இறந்த அவன், வென்ற நின்னினும் நல்லன்" என்று சிறிதும் கூசாது கூறினார்.

"களியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!
களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க்கடந்த நின்ஆற்றல் தோன்ற
வென்றோன்! நின்னினும் நல்ல னன்றே
களிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே." (புறம்: ௬௮)

உரு. வெள்ளிவீதியார்

மதுரையில் வெள்ளியம்பலவீதி என்றொரு வீதியுண்டு; அது வெள்ளிவீதி எனக் குறைந்தும் வழங்கப் பெறும். அவ் வீதியில் வாழ்ந்தமையால், சிலர் இவர் வெள்ளிவீதியார் என அழைக்கப்பெற்றார் என்பர். மக்கள் பெயரைத் தெருவிற்கு வைக்கும இக் காலம்போலன்றி, அக்காலத்தில் தெருவின் பெயரை மக்களுக்கு வைத்து வழங்கினர்போலும். வெள்ளிவீதியார் தம்மையொத்த ஒரு புலவரைப் பாராட்டி, மற்றொரு புலவரால் பாராட்டப் பெற்றுப் பெருமையடைந்தவராவர்; இவர் பாராட்டைப் பெற்ற புலவர் ஆதிமந்தியார்; இவரைப் பாராட்டிய புலவர் ஔவையார்; வெள்ளிவீதியார் பாராட்டிய புறத்திணைத் தலைவர்கள் இருவர்; ஒருவர் ஆதிமந்தியார்; மற்றொருவர் திதியன். ஆதிமந்தியார் வரலாற்றை முன்னரே அறிந்திருக்கிறோம்; காவிரியில் மறைந்த தம் கணவனைத் தேடிக் திரிந்த ஆதிமந்தி என்று அவர் வரலாற்றின் சிறப்புடைய பகுதியைக் குறித்துள்ளார். திதியன் சிறந்த போர்வீரன்; சேர்ந்தோர் துயர் தீர்க்கும் சிறப்புடையோன்; அன்னி மிஞ்சி என்பவள் ஒருத்தியும், அவள் தந்தையும் பசுக் காத்தல் தொழில் மேற்கொண்டு வாழ்ந்திருந்தனர்; ஒரு நாள் அவர்கள் பசு, கோசர் என்பவர்களுக்கு உரிய நிலத்தில் பயிரை மேய்ந்துவிட்டது அச் சிறு குற்றத்திற்கு அவர்கள், அவள் தந்தையின் கண்ணைப் போக்கிவிட்டனர்; அதுகண்டு, அவரைப் பழிவாங்காமுன் உண்ணேன் என்று சூளுரைத்துத் திதியனிடம் சென்று முறையிட்டாள்; அவன் அவரைக்கொன்று அவள் துயர் தீர்த்தான்; அன்னி என்பவன் திதியனோடு பகைத்தான்; பலர் தடுத்தும் கேட்கவில்லை; குறுக்கைப் பறந்தலை என்னுமிடத்தில் இரு வருக்கும கடும்போர் நடந்தது; களத்தில் அன்னி இறந்தான்; திதியன், அன்னியின் காவல் மரமாகிய புன்னையை அழித்து மகிழ்ந்தான்; திதியன் பெற்ற இவ் வெற்றிச் சிறப்பையும், அதைக் கண்டு பாணர், கூத்தர் முதலியோர்

மகிழ்ந்து பாடியதையும் வெள்ளிவீதியார் பாராட்டியுள்ளார்.

வெள்ளிவீதியார் பாடிய பாடல்கள் பதின்மூன்று; அவை அனைத்தும் அகத்துறை தழுவிய பாடல்கள்; அவற்றுள் ஒன்றே ஆண்மகன் கூற்று; மற்றவை எல்லாம் தலைவி, தோழி, செவிலி என்ற பெண்பாற் கூற்றுக்களே. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் வரும் அவர் பாடல்களை எல்லாம் கோவை செய்து கண்டால் வெள்ளிவீதியாரின் வாழ்க்கை வரலாறு ஒரு வாறு விளங்குதல் கூடும் என்பர்.

வெள்ளிவீதியார் தலைவன் ஒருவனைக்கண்டு காதல் கொண்டு வாழ்ந்து வந்தார்; இடையில், அவன் தங்கள் திருமணத்திற்கும், இல்லறவாழ்விற்கும் பொருள் தேவை என்பது உணர்ந்து, அதைத் தேடிப் பெற்றுவர வெளி நாடு சென்றுவிட்டான்; பல நாளாகியும் அவன் வராமை போல் வெள்ளிவீதியார் வருத்தம் மிகுவதாயிற்று; ஒருநாள் காலை வீட்டைவிட்டு வெளியே வந்தார்; அவன் ஊருக்குப் போகும் வழியில் ஒரு நீர்நிலை; அதனருகே நின்றுகொண்டிருந்தார்; அந் நிலையில் அவனூர்ப்பக்கமிருந்து நாரை யொன்று வந்து நீர்நிலையில் தங்கிற்று. அதைக்கண்ட அவர், "ஏ நாரையே! நாள்தோறும் இங்கே நீ வருகின்றாய்; எங்களூர் நீர்நிலையில் உள்ள மீன்களைப் பிடித்து உண்கிறாய்; மாலை ஆனதும் அவருருக்குச் சென்றுவிடுகிறாய்; நான் வளைகழல வருந்துவதை நாள்தோறும் காணும் நீ; அதை ஒருநாளாவது அவருக்கு அறிவிப்பாய் என எதிர் பார்க்கிறேன்; ஆனால், நீ அதைச் செய்வதாகத் தெரிய வில்லை; ஏன்? உனக்கு என்பால் அன்பில்லையா? அல்லது மறதி மிகுதியோ?" என்று அதைக் கேட்பார்போல் தம் துயர்கூறி அழுதார்.

"சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
எம்மூர் வந்து எம் ஒண்துறைத் துழைஇச்
சினைக்கெளிற்று ஆர்கையை, அவளூர்ப் பெயர்தி,

அனைய அன்பினையோ? பெருமறவினையோ?.....
கழனி நல்லூர் மகிழ்நர்க்கு என்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே.”

பொருள் தேடிக்கொண்டு தலைவனும் வந்து சேர்ந்தான்; ஆனால், வெள்ளிவீதியாரின் பெற்றோர் அவரை அவனுக்கு மணம் செய்துகொடுக்கமாட்டார்போல் தோன்றிற்று; மேலும், அந்த ஊரிலேயே இருந்து, பிறர் யாரும் அறியாவண்ணம் அவனோடு கூடி வாழ்தல் இனியும் இயலாது என்பதை உணர்ந்தனர் இருவரும்; தோழியோடு கலந்தனர்; அவனோடு அவனூர் சென்று மணந்துகொள்வது என்று முடிவு செய்தனர்; காலையில் எவரும் எழுந்திருக்காமுன் வந்து அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டு அவன் சென்றுவிட்டான்; வெள்ளிவீதியார் தனியே இருக்கிறார்; அவர் உள்ளத்தில் எண்ணங்கள் பல தோன்றின; “உற்றோரும் பெற்றோரும் அறியாவண்ணம் அயலான் ஒருவனோடு சென்றுவிடுதல் நாணுடை மகளிர்க்கு அழகல்லவே; அவ்வாறு செல்லும் மகளிரிடத்தே நாண் நில்லாது நீங்குமே; என் நிலையும் அதுதானே? என்னைவிட்டு நாண் நீங்குவதா? நாண் இல்லா மகளிரும் மகளிரோ? தாயினும் சிறந்ததன்றே நாண்? அதை எவ்வாறு இழப்பேன்,” என்று ஏங்கினர்; பின்னர்ச் சிறிது நேரம் கழித்து, “நாணைப்போற்றி அவரோடு செல்லாது போனால், பின்னர் அவரைப் பெறுதல் முடியாது; பெற்றோரும் பிறன் ஒருவனுக்கு என்னை மணம்செய்து வைத்துவிடுவர்; அந் நிலையில் என் கற்பு என்னும்? நாணைக் காட்டினும் கற்பன்றே சிறந்தது? நான் கற்புடைமகளாதல் வேண்டுமாயின் நாணை மறந்தே ஆகவேண்டும்? அதை விட்டே ஆகவேண்டும்,” என்ற துணிபு பிறந்தது. மேலும் எண்ணங்கள் வளர்ந்தன. “இந் நிலை என் உண்டாயிற்று? என்னோடு பிறந்து, என்னோடு வளர்ந்த நாணை நானே கைவிடவேண்டிய இந் நிலை எதனால் உண்டாயிற்று? நான் அவர்பால் காதல்கொண்டு காம நோயை வளரவிட்டதாலன்றே? காமநோய் என் மனத்திடை வளர வளர, அதன்

தாக்குதலைத் தாங்கமாட்டாது, நீரின் தாக்குதலைத் தாங்காமல் மணற்கரை அழிந்து மறைவதேபோல், நாணும் இன்று என்னைவிட்டு நீங்குகிறது; அந்தோ! நாணே! உன் நிலைகண்டு வருந்துகிறேன்," என்று வருந்தினர்.

"அளிதோ தானே நாணே; நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே; இனியே,
வான்பூங் கரும்பின் ஓங்குமணல் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே." (குறுந்: ௪௪௯)

வெள்ளிவீதியார் தலைமகனோடு சென்றுவிட்டார்; காலையில் அவளைக் காணுத பெற்றோர் கவலை கொண்டனர்; தோழியை அழைத்துக் கேட்டனர்; அவள் நடந்தது கூறினாள்; உடனே, அவரைத் தேடிக்கண்டு அழைத்து வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டாள் செவிலித்தாய்; வழியில் பலர் ஆணும் பெண்ணுமாய்க் கலந்து கலந்து வருகின்றனர்; அவர்களைத் தொலைவில் காணும்போதெல்லாம் அவர்கள் தன் மகளும் அவள் காதலனுமே என்று மகிழ்வாள்; ஆனால், அவர்கள் அண்மையில் சென்று கண்டு வேறுதல் அறிந்து வருந்துவாள்; இவ்வாறு பலமுறை ஏமாந்தாள்; இறுதியில் அவளுக்கு ஓர் உண்மை புலப்பட்டது; தவறு செய்தவள் தன்மகள் ஒருத்திமட்டும் அன்று; உலகில் பலர் அத்தகையவரே; ஆகவே, இஃது உலகியல்; அவர்களுக்கு மணம் செய்துவைத்து மகிழ்தலே பெற்றோர் கடன் என உணர்ந்து வீடுதிரும்பினள்:

"அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற; இவ்வுலகத்துப் பிறரே." (குறுந்: ௫௫)

தலைவனை மணந்து இல்லற வாழ்வினை மேற்கொண்டார் வெள்ளிவீதியார்; அவர்கள் வாழ்வு இனிதே கழிந்துகொண்டிருந்தது; இடையே வந்தது ஒரு பேரிடி; அமைதி குலைந்தது; தலைவன்பால் தவறான ஒழுக்கம், அதாவது பரத்தையர் வீடுசெல்லும் வழக்கம் இருப்பதாக உணர்ந்

தார் வெள்ளிவீதியார்; ஆகவே, அவனோடு தொடர்பின்றி வாழத் தொடங்கினர்; அந் நிலையைப் பொறுக்கமாட்டாத அவன், ஒருநாள் வெள்ளிவீதியாரை நெருங்கி, "ஆணையிட்டுக் கூறுகிறேன்; நான் எத்தகைய தவறும் செய்திலேன்," என்று கூறினன். ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை; மாறாக "உன்னோடு இன்றுவரை வாழ்ந்த வாழ்வு போதும்; இனி, அதை நான் விரும்பேன்; உன்னைக்கண்டதும் சிரித்து மகிழ்ந்த இந்தப் பற்கள் உடையட்டும்; எனக்கு வாழ்வும் வெறுத்துவிட்டது; ஆகவே என் உயிரும் அழியட்டும்," என்று கடுஞ்சொற்களை அவன் மீது அள்ளி வீசிவிட்டார்.

"நான் தவறு செய்யவில்லை; அவளிடத்தில் அதை ஆணையிட்டு அறிவித்தேன்: அவள் ஏற்க மறுத்துவிட்டாள்; இனி இங்கிருந்து பயனில்லை," என்று எண்ணி எங்கோ சென்றுவிட்டான் அவன்; பல ஆண்டுகள் ஆயின; வெள்ளிவீதியார் உள்ளத்தில் அவன் தவறு செய்திலன் என்ற எண்ணம் மெல்ல மெல்லத் தோன்றிற்று; உடனே, அவன்பால் பழையபோல் அன்பும், இரக்கமும் உண்டாயின; உண்டாகி யாது பயன்? அங்கிருந்தால்தானே அவனை யடையலாம்? அவன்தான் எங்கோ சென்றுவிட்டானே; என்ன செய்வார்? பாவம்! நிலவைக் காண்கிறார்; கடல் போல் பரந்த அதன் பேரொளி தன் உயிரை வாட்டுவதை உணர்கிறார்; ஊரில் விழா நிகழ்வதைக் காணுகிறார்; விழாக் காணக் காதலனும் காதலியுமாய்ச் செல்வோர் காட்சி, தம் கண்ணை உறுத்திக் கவலையைப் பெருக்குவதை உணர்கிறார்; பொழுதுபோக்கப் பூஞ்சோலைக்குப் போகிறார்; அங்கே தம் துணைவியோடிருந்து தேன் உண்ணும் வண்டுகள் தம் வருத்தத்தை வளர்ப்பதை உணர்கிறார். எங்குச் செல்லினும் அவருக்கு அமைதியில்லை; உலகமே தம்மோடு பகைகொண்டு போரிடுவதாக நினைக்கிறார்; அழுகிறார்; தம் தோழியை அழைத்து "என் காமம் பெரிதே; கனைஞ ரோவிலரே; நான் யாது செய்வேன்!" என்று கவலைப் பட்டார்.

அவர் கவலையும் கண்ணீரும் கண்ட தோழி, அவருக்கு ஊக்கம் பிறக்குமாறு "அம்மா! அவர் எங்கே போய்விடுவார்? நிலத்தைக் குடைந்துகொண்டோ, மேகத்தில் நுழைந்தோ, கடலைக் கடந்தோ மறைந்துபோயிருக்க மாட்டார் அவர்; இந்த உலகில்தானே எங்கேனும் இருக்கப் போகிறார்? ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும் தேடினால் அகப்படாமலா போவார்? உறுதியாக அகப்படுவார்; அவரைத் தேடிப் பிடித்துவிடலாம்; நீ கவலை கொள்ளாதே," என்று கூறித் தேற்றினாள்:

"நிலந்தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்;
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ, நம் காதலோரே?"

(குறுந்: ௫௯0).

தோழி கூறிய அச்சொற்கள் அவருக்கு ஊக்கம் அளித்தன; தலைவனைத் தேடிக் காண்பது தம் கடனே என்பதை உணர்ந்தார்; அந்நிலையில், கணவனை இழந்து, கடுந்துயர் அடைந்து, அவனைத் தேடிக் காண எங்கெங்கோ அலைந்து அலைந்து துயர்உற்ற ஆதிமந்தியார் அவர் மனக் கண் முன்வந்து நின்றார்; சிறிது அச்சம் உண்டாயிற்று; அவரைப்போல் நானும் அலைந்து துன்புறவேண்டுமே! என்று ஏங்கினார்.

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ?"

(அகம்: ௪௫)

என்று ஏங்கினார். என்றாலும், தலைவன்பால் கொண்டுள்ள பெருங்காதல், அவனைத் தேடுவதால் வரும் துன்பத்தை மறக்கச் செய்தது. புறப்பட்டார் வீட்டை நோக்கி; எங்கெங்கோ அலைந்தார்; ஆனால், அந்தோ! அவர் முடிவு என்னையிற்று என்பதை அறிய முடியவில்லை; வெள்ளி

வீதியார் கணவனைத் தேடி அலைந்தார் என்பதை ஔவை யார் தம் பாட்டொன்றில் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்:

"வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே."

வெள்ளிவீதியார் பாடிய பாக்களுள், தலைமகன் கூற் றாகவரும் செய்யுளொன்று சிறந்த ஓர் உவமையினைப் பெற்றுள்ளது.

இளைஞன் ஒருவன் ஒரு பெண்ணிடத்தே காதல் கொண்டான்; அவளைப் பெறவேண்டும் என்ற வேட்கை யால் அறிவு மயங்கினன் போலானான்; தன் கடமை யாது என்பதையும் மறந்தான்; இந்நிலை கண்டான் அவன் நண் பன்; நகுதறகு அன்று நட்டல்; தவறு காணின் இடித் துக் கூறித் திருத்துவதற்கே என்பதை உணர்ந்தவன் நண் பன்; ஆகவே, "உன் போக்கு தகாது" என்று நண்பனைக் கடிந்தான். அது கேட்ட இளைஞன், "தவறு கண்டு இடித் துக் கூறித் திருத்த முயலும் நண்பரே! நும் செயல் கண்டு மகிழ்ச்சி; நன்றி; ஆனால், இடித்துக் கூறித் திருத்த முய லும் நீ, என்னைப்பற்றி வருத்தும் இந் நோயைப் பெருகா மல் தடுத்து நிறுத்த வல்லையாயின் நன்று; அது பரவுவ தைத் தடுப்பது என்னால் இயலவில்லை," என்று கூறினன். தடுக்க முடியா நிலையில் பரவும் காமநோயினை விளக்க ஓர் உவமையினைக் காட்டுகிறான்.

ஞாயிறு தன் முழுக்கதிர்களையும் விட்டுக் காய்கிறான்; அஞ் ஞாயிற்றின் ஒளியால் வெம்மையுற்றுக் கிடக்கிறது ஒரு கற்பாறை; அக் கற்பாறைமீது வெண்ணெயைக் காய வைத்து, அதைக் காத்து நிற்குமாறு ஒருவனை நியமித் துள்ளார்கள்; அவனோ, கைகள் இரண்டும் அற்ற மூட வன்; பேச முடியாத ஊமை; ஆகவே, வெண்ணெய்க்குக் கேடுவந்தால், கையில் எடுத்துக்கொண்டு காப்பதோ, பிற ரைக் கூவி அறிவிப்பதோ அவனால் இயலாது; அத்தகை யான் காத்துக் கிடக்கிறான் வெண்ணெயை; வெயிற் கொடுமையால் வெண்ணெய் உருகிக் கீழே ஒழுகிப் பரவத்

தொடங்கிவிட்டது; அவனும் பரவிப் பாழாவதைப் பார்க்கிறான். ஆனால், பரவிப் பாழாவதைக் கையால் தடுக்கவோ, பிறர்க்கு அறிவிக்கவோ அவனால் முடியவில்லை; இந்தக் காட்சியைக் காட்டிவிட்டு, அக் கையில்லா ஊமை காக்கும் வெண்ணெய் போன்றது என் காமநோய் என்று கூறினான்; இதனால், "வெண்ணெய் உருகிப் பரந்து ஓடுவதைப் பார்ப்பது தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாத கையில் ஊமையைப்போல், காதல் நோய் பெருகி வருத்துவதைப் பார்த்துக்கொண்டிருப்பது தவிர, அதைத் தடுத்துக் கொள்வதோ உன்னைப்போன்ற நண்பர்களுக்கு உணர்த்தி வழி தேடுவதோ என்னால் முடியவில்லை; யாது செய்வேன்யான்?" என்று தன்நிலை விளக்கியவாறு காண்க

"இடிக்கும் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றிலே னன்று மன்தில்ல;
நாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காககும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே."
(குறுந. ஐஅ)

வெள்ளிவீதியார் பாடல்கள் இது போன்ற உவமைகளாலும், மணம் பேசவரும் பெரியவர்கள், கையில் தடியும், கீலியில் துணியும் உடையராய் வருவர்; அக்காலத்தே தமிழகம் பல நாடுகளாகவும், நாடு பல ஊர்களாகவும், ஊர் பல குடிகளாகவும் பகுக்கப்பட்டு இருந்தது என்பன போன்ற செய்திகளாலும் சிறந்து விளங்குகின்றன.

உசு. வெறிபாடிய காமக்கண்ணியார்

இவர் இயற்பெயர் காமக்கண்ணியார்; இது காமாட்சி என்ற வடசொல்லின் தமிழாக்கம். பாடிய பாட்டின் சிறப்பிற்கு ஏற்பப் பெயர் தருவது பண்டையோர் வழக்கம்; பாலைபாடிய பெருங்கடுங்கோ, கோடைபாடிய பெரும் பூதன் என்ற பெயர்களைக் காண்க. இவர், வெறியாடலை விளங்கப பாடிய காரணததால், வெறிபாடிய காமக்கணணியார் என்று அழைக்கப்பெற்றார்.

ஒரு பெண், ஆண்மகன் ஒருவனோடு காதல்கொண்டு வாழ்கிறாள்; அவர்கள் உறவினை அவள் பெறறோர் அறியார். இடையே, அவன், அவளிடததே வருவது சில காரணத்தால் தடைப்படுகிறது, அதனல், அவள் தாங்காத்துயர்கொள்ளுகிறாள்; கவலைமிகவே உடல்தளர்ந்து நோயுற்றாள்போல் ஆகிறாள் தன் மகளின் நிலையைத் தாய் நோக்குகிறாள். "ஐயோ! என் மகள் இவ்வாறு தேய்ந்து போகிறாளே" எனத் தேம்புகிறாள், ஊரில் உள்ள சிலமுதிய பெண்களிடததே தன் குறை கூறிப் புலம்புகிறாள்; அவர்கள் கூறியவாறே, குறி கூறுவாளை அழைத்துக் கேட்கிறாள்: அவள் முறதத்தில் நெல்லைப் பரப்பிப் பார்த்தும, கழற்கொடிக்காயை எண்ணிப் பார்த்தும், "இது தெய்வக் குற்றம்; முருகனுக்கு வழிபாடு செய்; எல்லாம் நன்மையாக முடியும்," என்று கூறிச்சென்றாள் உடனே தாய், வீட்டைத் தூய்மைப்படுத்தி அணிசெய்தாள்; ஊரில் உள்ள இசைக்கருவிகள் எல்லாம் அவள் வீட்டு வாயிலில் முழங்கின; வேலனை அழைத்து வந்தாள்; வேலன் என்பவன், கையில் வேலேந்திக் கடவுள் ஏறி ஆடும் பூசாரி; வந்த வேலன், கையில் காப்புக் கட்டிக்கொண்டான்; கழுத்தில் மாலை அணிந்து கொண்டான்; களத்தில் வேலை நட்டுச் சந்தனமும் மஞ்சளும் தெளித்து மாலை சூட்டினன்; ஆட்டுக்கடா அறுத்துக்கொண்ட குருதிகலந்த அரிசியைப் பலியாகத் தூவினன்; தீபதூபம் காட்டினன்; மலைகள் எதிரொலிக்குமாறு வாய்விட்டுப் பாடி முருகனை

அழைத்தான்; முருகனும் அவன்மேல் வந்து ஆடி அவன் குறை தீர்த்தான். இவ்வாறு முருகனை அழைப்பதையே வெறியாடல் என்ப.

காமக்கண்ணியார் பாடிய பாடல் ஐந்து; அவற்றுள் மூன்று அகத்துறை தழுவிய பாடல்களாம்; அம் மூன்றிலும் இவ் வெறியாடற் பொருளையே விரித்து உரைத்துள்ளார்.

"தோழி! தாய் வெறியாடத தொடங்கிவிட்டாள்; அங்கே வேலனும் வந்து ஆடுவான்; அப்போது, 'நாங்கள் தலைவனிடத்தில் பேரன்பு கொண்டிருக்கவும், அவன் மட்டும் எங்கள்மீது சிறிதும அன்பின்றிப் பிரிந்திருக்கின்றனே; அது ஏன்?' என்று அவ் வேலனையே கேட்போமா?" என்று தலைவி தோழியிடங் கூறித், தன், தாய், வேலன் ஆகிய இருவரின் அறியாமை கண்டு எள்ளி நகையாடுகிறாள்:

"நாடற்குக
காதல் செய்தலும் காதல மன்மை
யாதெனிற் கொல்லோ தோழி! வினவுகம்
பெய்ம்மணல் முற்றம் கடிகொண்டு
மெய்ம்மலி கழுங்கின் வேலற் றந்தே." (நற். உசுஅ)

இது நற்றிணைப் பாட்டு.

"தோழி! என் நோய், தலைவனைக் காணுக் கொடுமையால் நேர்ந்தது என்பதை அன்னை அறிந்திலள்; ஆகவே, கைவளை கழலத் தளரும் என் உடல்நோய்க் காரணம் யாது எனக் கட்டுவிச்சியைக் கேட்க, அவள், "இது தெய்வத்தால் வந்தது; நெடுவேள் பேணத் தணியும்," என்று சொல்ல, அவள் ஆட்டியவாறெல்லாம் ஆடும் நம் தாய் வெறியாடத் தொடங்கிவிட்டாள். அவள் செயல் எனக்கு அச்சத்தைத் தருகிறது. இந் நோய் வேலனால் வந்தது அன்று; ஆகவே, வெறியாடுவதால் இது தணியப் போவது இல்லை; வெறியாடிய பினனரும் இந் நோய்

தணியாமையைக் கண்டால், இவ்வூர்ப் பெண்கள் சும்மா இரார்; 'இவள் நோய்க் காரணம் வேறே என்று கொண்டு இல்லாததும், பொல்லாததும் கூறிப் பழிதூற்றத் தொடங்கி விடுவர்; அதை நான் எவ்வாறு தாங்கிக்கொள்வேன்? ஒருவேளை, வெறியாடல் கண்டு மகிழ்ந்த முருகவேள், என் நோய் தணிய அருள் புரிந்துவிட்டால், 'இவள் நோய் நம் உறவு இல்லாமலே தணிந்துவிட்டது; ஆகவே இவள் நோய்க் காரணம், நம் பிரிவு அன்று; வேறு யாதோ' என்று நம் தலைவர் எண்ணிவிட்டால், நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்; வாழேன்." இவ்வாறு தாய் செயல் கண்டு தலைமகள் அஞ்சுவதாக ஒரு செய்யுள்:

"ஆடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயின், இம்மறை
அலரா காமையோ அரிதே; அஃதான்று
அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
'செறிதொடி யுற்ற செல்லலும் பிறிது' எனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிதே."

"தோழி! என் உடல் மெலிதல் தலைவன் பிரிவால் நேர்ந்தது என்பதை அறியாது, ஊரில் உள்ள கிழங்கள் கூறியதைக்கொண்டு, தாய் வெறியாடத் தொடங்கினள்; வெறியாடல் நிகழ்ந்துகொண்டிருக்கும் அன்று இரவு, யானையைப் பிடிக்க பாயும்புலி, பதுங்கிப் பதுங்கிச் செல்வதேபோல், நம் ஊர்க்காவலர் அறியாவண்ணம் ஒளிந்து ஒளிந்து நம் தலைவனும் அங்கே வந்துசேர்ந்தார். அவர் வரவினைக்கண்ட நான், வெறியாடுகளத்தின் நீங்கித் தலைவர் இருந்த இடஞ்சென்று மகிழ்ந்து மீண்டேன்; அதனால் என் நோய் நீங்கிற்று; இவ்வாறு தலைவன் வரவால் என் நோய் நீங்கியதை அறியமாட்டாமல், தன்னால் நீங்கிற்று எனறு கூறினன் வேலன்; இவ் வேலன் அறியாமை கண்டு சிரித்துச் சிரித்து என் வயிறெல்லாம் புண்ணையிற்று," என்று தலைவி கூறியதாக மற்றொரு செய்

புள். இவ்வாறு, பல்வேறு கோணங்களில் நின்று வெளி யாடல் சிறப்பை விரித்துரைத்த நயம்கண்டு மகிழ்க.

"முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆரம் நாற, அருவிடர்த் தகைந்த
சாரல் பல்பூ வண்டுபடச சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நன்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை உள்ளத்து நன்னசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனே யானே எய்த்த
நோய்தணி காதலர் வரவு ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே." (அகம் : ஊஉ)

காமக் கண்ணியார் பாடிய புறப்பாடல் இரண்டு; ஒன்று, மதிலையும் அகழியையும் காத்துநின்ற வீரர்கள் போரிட்டு இறந்ததைப் பாராட்டும் செருவிடை வீழ்தல் என்ற துறை தழுவியது; மற்றொன்று, ஒரு வீரனுடைய குதிரை, போர்க்களத்தே ஆற்றிய ஆண்மையைச் சிறப் பித்துக் கூறும் குதிரை மறம் என்ற துறை தழுவியது.

கழக வெளியீடு: ௬௫0

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - VI

உவமையாற் பெயர்பெற்றோர்

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.,
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. : : சென்னை-1.

First Edition: May, 1953

[All Rights Reserved]

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS,
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS - 1.

Head Office

24, EAST CAR STREET, THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.

பதிப்புரை

தன்னுரிமையுடன் திகழ்ந்த நம் தண்டமிழ் நாடு, பண்டை நாளில் புலவர் பெருமக்கள் பலரைப் பெற்று இலங்கிற்று.

அப் புலவர்கள் தாம்கண்ட இயற்கைக் காட்சிகளைத் தம் மனக்கண்ணில் அமைத்து நிறுத்தி அவைகளையே தாம் கூறக் கருதிய பொருள்களோடு இணைத்து உவமை யாக அமைத்துப் பாட்டு வடிவில் தருவாராயினர். இப் பெருமையால் அவர் புலாலுடல் போயினும் எழுத்து அசை சீர் தளை அடி தொடைகளையே தம் கண் முதலிய உறுப்புக்களாகக் கொண்டு பாவுடல் எடுத்துக் கருத்துயிர் பெற்றுப் பொன்றாப் புகழுடன் இன்றும் நமமுடன் உறவுகொண் டுலவுகின்றனர்.

இத்தகையாரின் பெயாகள் பல இடையீடுகளால் அறிய இயலாமல் மறைவுற்றன. ஆயினும் அவர் பெருமையுணர்ந்த தமிழுலகு, அவர்கள் அமைத்த உவமை முதலிய தொடர்களையே அவர்கட்குப் பெயராகச் சூட்டி மகிழ்ந்தது. அப் பெயர்களை—அப் பாக்களை—நாமும் நம் பிற்காலத் தமிழ்மக்களுமை கண்டு மகிழ, **புலவர் திரு. கா. கோவிந்தன்** அவர்கள் இருபத்திரண்டு புலவாகள் வரலாற்றை அரிய பெரிய நூலாக்கி அளித்துள்ளார்கள்.

இதற்குமுன் **சங்கத் தமிழ்ப்புலவர் வரிசையில் கபிலர், பரணர், நக்கீரர், ஒளவையார், பெண்பாற் புலவர்கள்** என்னும் ஐந்து நூல்களையும் வெளியிட்டுள் ளோம். அவைகளுடன் இதனையும் ஆறுவதாக **'உவமை யாற் பெயர்பெற்றோர்'** எனப் பெயரமைத்து வெளியிட் டுள்ளோம். நம் தமிழக மாந்தர்கள் இதனையும் ஏற்றுக் கற்று இன்புறுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

		பக்கம்
	தோற்றுவாய்	1
க.	அணிலாடு முன்றிலார்	6
உ.	ஓதேருழவர்	11
ங.	கயமனார்	25
ச.	கல்பொரு சிறுநுரையார்	42
ஞ.	கவைமகனார்	46
ட.	காலெறி கடிகையார்	51
ண.	குப்பைக் கோழியார்	54
த.	கூவன்மைந்தன்	58
ந.	செம்புலப் பெயனீரார்	63
ன.	தனிமகனார்	70
ஙக.	தேய்புரிப் பழங்கயிற்றினர்	80
ஙஉ.	மீனெறி தூண்டிலார்	89
ஙங.	விட்ட குதிரையார்	92
ஙச.	வில்லக விரலினர்	94
ஙஞ.	ஓரிற் பிச்சையார்	97
ஙட.	கங்குல் வெள்ளத்தார்	101
ஙண.	குறியிறையார்	107
ஙத.	கூகைக் கோழியார்	111
ஙந.	தும்பி சொகினனார்	114
ஙன.	தொடித்தலை விழுத்தண்டினர்	118
உ0.	நெடுவெண் நிலவினர்	123
உக.	பதடிவைகலார்	125

உலகமெலாம் பெயர்பெற்றோர்

தோற்றுவாய்

உலக மக்களால் வழங்கப்பெறும் மொழிகள், சற்று ஏறக்குறைய ஓராயிரம் மொழிகளாம என்ப. அவற்றுள் நான்கு அல்லது ஐந்து மொழிகளே 'தொன்மொழிகள்' என்ற சிறப்பினுக குரியவாய்க் காணப்படுகின்றன; அம் மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று, பேச்சுவழக்கற்று ஏட்டுவழககாய்மட்டில் நிற்பனவே பெரும்பாலான தொன் மொழிகளின் இயல்பாகக் கொள்ளப்படுமெ; ஆனல், தொன் மொழிகளுள் ஒன்றென உயர்ந்தோராற் பாராட்டப்பெறும் தமிழ்மொழிக்கு, அக்குறைபாடு கூறல் இயலாது; தமிழ் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாச் சீரிளமைத்திறம் வாய்ந்த செம்மையுடையது; ஆகவே, தமிழ்மொழியினைத் "தொன்மொழி" எனபபெயரிட்டுப பாராட்டுவதோடு, அது "உயர்தனிச் செம்மொழி" என்றும் உயர்த்திக் கூறுவர்.

தமிழ், உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்ற சிறப்பினை அது பலநூறு ஆண்டுகட்கு முன்னரே பெற்று விட்டது; அது அப் புகழினைப் பெற்ற காலம், தமிழகத் தில் புலவர்கள பலர் வாழ்ந்த சங்ககாலமாகும்; சங்ககாலம், தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் (Augustan age of Tamil Literature) எனப் போற்றப்படும். சிரிய பேரிலக்கிய இலக்கண நூல்களாகிய, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியம், ஐஞ் சிறு காப்பியம், ஒல்காப் புகழ்கொள் தொல்காப்பியம் முத லாய நூல்கள் அச்சங்க காலத்திலேயே தோன்றின; சங்ககாலம் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு

கட்கு முற்பட்டகாலம் என்ப; அத்துணைப் பழைய காலத் திலேயே தமிழர்கள் உலகமக்களெலாம் வியந்து போற் றும் உயர்நிலை பெற்று விளங்கினர்கள்; வளம்பல நிறைந்த வாழ்வுடையராயினர்; நாடு செல்வத்தில் சிறந்து விளங் கிற்று; நாகரிகத்தின் எல்லையைக் கண்டது தமிழகம்; நாடாளும் திறம் தெரிந்து நல்லரசு அமைத்திருந்தனர்; இவ்வாறு நாடும் வீடும் அமைதியின் இருப்பிடமாய் விளங் கிய காரணத்தால், புலவர் பெருமக்கள, பொருள்தேடி உழலும் பொல்லாவாழ்வு வாழவேண்டிய நிலையற்று, நிரம்பிய வாழ்க்கையும், நிறைந்த உள்ளமும் உடையராய்ப் பொன்றாக் கலைவளத்தைப்போற்றும் பேருளம் படைத்து, இலக்கிய, இலக்கணங்களாம் இறப்ப உயர்ந்த செந்தமிழ்க் கருவூலங்களைப் பெற்றுத் தந்தனர்.

பண்டுதான் பெற்றிருந்த சீரும், சிறப்பும் இழந்து இழிநிலையுற்ற இக்காலத்திலும், தமிழகமும், தமிழரும், உலக மக்கள் உள்ளத்தில் உயர்வானதோர் இடம் பெற் றுள்ளமைக்குத் தமிழ்மொழி பெற்றிருக்கும் தனிச் சிறப்புவாய்ந்த இலக்கியசெல்வங்களே காரணமாம். அத்தகைய இலக்கியங்களை இயற்றித்தந்து, உலக அரங்கில் தமிழகத்திற்கு உறுபுகழ் வாங்கித்தந்த புலவர் பெருமக் கட்குத் தமிழ்நாட்டார் என்ன கைம்மாறு செய்வரோ அறியேம்! மறைந்து மாண்புற்ற அப்புலவர்க்குத் தமிழ் நாட்டார் இனிச் செய்யக்கூடிய கைம்மாறு எதுவும் இல்லை. ஆதலின், அவர்களை மறவாது அறிந்து மதித்தலாவது செய்வாராக.

ஆனால், சிறிய பேரிலக்கியங்களை ஆக்கித்தந்து சிறப் பளித்த புலவர்களின் வரலாறு நம்மால் அறியும் நிலையில் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியவராயுள்ளோம். மிகப்பழைய காலத்தே வாழ்ந் தார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினை அறியத் துணை புரிவனவாகிய தங்கள் வாழ்க்கைவரலாற்றினைத் தாங்க ளாகவே எழுதிவைத்துச் சென்ற தம் வரலாறுகள் (Autobiography), வாழ்க்கையில் அவ்வப்போது நிகழ்ந்த

நிகழ்ச்சிகளை நிரல்படக் குறித்துவைக்கும் நாட்குறிப்புக்கள் (Diary), நண்பராகவோ, உறவினராகவோ உடன் வாழ்ந்து ஒருவர் வரலாற்றை எழுதிவைத்த வரலாற்றுக் குறிப்புக்கள் (Biography) போன்ற வரலாற்றுச் சான்றுகள்எவையும், பழந்தமிழ்ப்புலவர்களின் வரலாற்றை அறியத் துணைபுரிவன அல்ல; இவைபோன்ற முறைகளை அக்காலத்தார் அறிந்திருந்தார் அல்லர்.

புலவர்கள் பாடிய பாடல்கள் பலப்பல; ஆனால் அவற்றுள் ஒன்றும் அவர்கள் வரலாறு உரைக்கும் உள்ளுணர்வு கொண்டு இயற்றப்படவில்லை; புலவர்கள், இலக்கிய வளர்ச்சியிலேயே கருத்துடையவராய் நின்றுவிட்டனரே அன்றித் தங்கள் வரலாற்றைத் தங்கள் பாக்களின் வாயிலாகவே அளிக்கத் தவறிவிட்டனர்; தங்கள் வரலாற்றை அறிவிக்கத் தவறிய புலவர்கள், யார் யார் வரலாறுகளையோ அறிவிக்கத் துணைபுரிந்துளளனர், அவர் பாடல்களால் வரலாறு உணர நிற்போர் எத்தனையோ அரசர்களாவர்; ஆனால், அப்பாக்கள் ஒன்றுவது, அக்காலப் புலவர்கள் வரலாற்றினை உணர்த்துகின்றதா என்றால் இல்லை. இதனால், புலவர்களின் வரலாற்றினைப் புலவர்களின் பாக்கள் துணை பெற்று அறிதல் இயலாது போயிற்று; புலவர் புகழ் வேண்டார்; ஆகலின் தம்மை உலகிற்கு உணர்த்தாது ஒழிந்தனர் என்றால், அவர்கால மக்களாவது அவர்கள் வரலாற்றை அறிந்து பிறர்க்கும் உணர்த்திப் பெருந் தொண்டு புரிந்தனரா எனின்; இல்லை. இதனால், புலவர்களுடைய வரலாறு நம்மால் அறிய இயலாமல் போய்விட்டது; அம்மட்டோ! அப்புலவர்களில் பலரின் இயற் பெயர்தாமும் மக்கள் மனத்தினின்றும் மறைந்துவிட்டது. தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கத் துணைபுரிந்த புலவர்களுக்குத் தமிழ்மக்கள் அளிக்கும் கைமமாறு என்னே!

புலவர்களின் வரலாற்றை அறிய மறந்த நன்றிகெட்ட தமிழர்களிடையே, நன்றி மறவாத் தமிழர்களும் வாழ்ந்திருந்தனர்; அவர்கள் அப் புலவர்களின் வரலாற்றினை அறியப் பெரிதும் முயன்றுள்ளனர்; முயன்றவர், முழு

வெற்றியும் பெற்றாரல்லர் எனினும், அத்துறையில் அவர்கள் முழுதும் தோல்வியே கண்டனர் என்றும் கூறுவதற்கில்லை: புலவர்கள் வரலாற்றினை முழுதும் அறிய முயன்று முடியாமற்போன நிலையில், அப்புலவர்களின் பெயரையாவது அறிந்து கூறலாம எனத் துணிந்தனர்; அவ்வாறு அப்புலவர்களின் பெயர்களை அறியும் முயற்சியில், அப்புலவர்களின் வரலாற்றின் ஒரு பகுதியினைத் தங்களை அறியாமலே அறிந்து அறிவித்துள்ளனர். உறையூர் ஏருத்துவன் தாமோதரனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்ற பெயர்களை அறிவிதது அப்புலவர்களின், ஊர், தொழில், இயற் பெயர் அறியத துணைபுரிந்தனர்: மதுரை அளகைக் நொழலார் மகனார் பள்ளியார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்ற பெயர்களை அறிவிதது, அபபெயருடைப் புலவாகளின் ஊரையும், பெயரையுமை, அவாகளின் தநதைமாரையும் அறியவைததனர், உறையூர் இளம்பொன் வணிகனார, வெண்ணிக்குயத்தியார் என்ற பெயராகளை அறிவித்து, அவாகளின ஊரையுமை, தொழிலையுமை உணரத் துணை புரிநதனர: கல்லாடனார், காரத்தலையார் போன்ற பெயர்களால், அப்புலவர்களின் ஊர் எது என்பதை எளிதில் அறியப பேருதவிபுரிந்தனர்.

இவ்வாறு புலவர்களின பெயர்களை அறிவித்தே, அவர்களின் வரலாறுகளை விளங்கவைதததமையோடு அவர்கள் நின்றாரல்லர். பிறந்த ஊர், பெற்ற இயற்பெயர, மேற்கொண்ட தொழில், பெற்ற தந்தை, இவற்றுள் எதுவும் அறியமாட்டாப புலவர்களையும், அவர்கள ஆக்கித்தந்த அரிய பாடல்களைப் பல்கால் பயின்று பயின்று, அப்பாக்களில் காணபபெறுமை இனிய உவமைகள், அரிய நயஞ் செறிந்த சொற்றொடர்கள் இவற்றை உணர்ந்து, உளமமகிழ்ந்து, அவற்றினூலேயே அப்புலவர்களுக்குப் பெயரிட்டு நமக்கு அறிமுகம் செய்துவைத்துச் சென்றனர்.

இம் முறையில், உவமையாற் பெயர்பெற்ற புலவர்கள் அணிலாடுமுன்றிலார், ஒரேருழவர், கயமனார், கல்பொரு சிறுநுரையார், கவைமகனார், காலெறி கடிஞையார், குப்பைக் கோழி

யார், கூவன்மைந்தன், செம்புலப் பெயனீரார், தனிமகனார், நெய்தற்றிப் பழங்கண்ணனார், மீனெறி தூண்டிலார், விட்டகுதிரையார், வில்லகவிரலினர் முதலிய பதினெல்வராவர்; தாம் பாடிய பாக்களில் அமைத்துள்ள அரிய நயம் செறிந்த தொடர்களால் பெயர்பெற்றோர், ஒரிற்றிரிச்சாயார், கங்குல் வெள்ளத்தார், குறியிறைப் புதல்வர், கூகைக் கோழியார், நம்பியேர்க்கோவர், நொச்சிநியமங்கிழார், நெடுவெண்ணிலவினர், பதடிவைகலார் ஆகிய எண்மராவர். இவ்வாறு, உவமையாலும், தொடராலும் பெயர்பெற்ற புலவர்கள் பெயர்பெற்ற முறை ஓர் அளவு ஒற்றுமை உடையதாகக் காணப்படுகின்ன, அவர்கள் அனைவரது வரலாறும் ஒரே வரிசையின்கீழ் உரைக்கப்பட்டுள்ளன.

பிறபுலவர்களாவது, தம்மைப் பேணிய பேரரசர்களையும், குறுநிலமன்னர்களையும், கொடை வள்ளல்களையும் தம் பாக்களில் வைத்துப் பாராட்டியுள்ளனர், அதனால், அவ்வரசர்களின் வரலாற்றினை அறிந்து வருங்கால், அவரோடு தொடர்புடைய அப்புலவர்கள் வரலாற்றின் சில பகுதிகளை அறிய முடிந்தது, ஆனால், எண்டுக் கூறிய புலவர்களின் பாக்களில், அத்தகைய குறிப்புக்கள் யாண்டும் காணப்படாமையால், அப்புலவர்களின் வரலாற்றின் சிறு பகுதியினையும் நம்மால் அறிய இயலவில்லை; ஆகவே, அவர்கள் வரலாறுக, எண்டுக் குறிப்பிடுவன எல்லாம், அவர பாக்களைப பயின்றுர்க்குப் புலப்படும் அவர்களின் உள்ளத்தின் பண்பாடும், அவர்கள் புலமை நலமுமே ஆம்.

அவ்வழி, அவர் பாக்களைப் பயின்று, அப்பாக்களில் வரும் உவமையினையும் தொடர்களையும் உணர்ந்து, அவற்றால, அவர்க்குப் பெயர்வைத்த பெருமக்களின் நன்றிமறவாமைப் புலமைநலத்தைப் போற்றிப் புகழ்பெறுவேமாக.

---

5. அணிலாடு முன்றிலார்

நற்குடிப் பிறந்த மகளிர் இயல்பாகவே எழிலுற்றுத் திகழ்வர்; அவர் காதல்கொண்ட அன்புடைக் கணவர் அவரைவிட்டு அகலாது உடனிருந்து வாழ்வும் பெறுவராயின், அந்நிலையில் அவர் உள்ளம் இன்பத்தால் உந்தப் பெற்றுத் துள்ளுமாகலின், அவர் இயற்கை அழகு மேலும் சிறப்புற்றுத் தோன்றும். இயல்பாகவே பேரழகுடைய ஒருத்தி காதலித்த கணவனைப் பிரியாது வாழும் பேற்றினைப பெற்றுவிட்டாள; அதனல் அவள் பேரழகு மேலும பலமடங்கு மிக்குத தோன்றுவதாயிற்று; அந்நிலையில் அவளைக கண்டாள் அவள் தோழி; அவள் பேரழகு கண்டு பாராட்டினள்; பாராட்டியதோடு அமையாது, அவள் அத்துணை அழகுற்று விளங்குவதற்காம் காரணத்தை அறியவும் விரும்பினள்; தலைவி, தோழியின் உள்ளதனை உணர்ந்தவள். ஆதலின் அவளை நோக்கி "இயற்கைக்கு மேற்பட்ட என் எழில் கண்டு வியந்து நிற்கும தோழி! இவ்வெழில் எனக்கு இயல்பானது அன்று; இதைப் பெறுவதும் என்னல் இயலாது; ஆனல் இதை நான் எளிதில் பெறுமாறு எனக்கு அளிக்கவல்லவர் நம் ஆருயிர்த் தலைவராவர்; அவர் என்னை விட்டு அகலாது இருந்து வாழ்வராயின், இலலாத எழில் பலவும் என்னை வந்து அடைந்து விடுகின்றன; என் எழில்கண்டு வியக்கும் மற்றோர் உண்மையினையும் உணர்தல் வேண்டும். இவ்வாறு என் நலம் பெருகத் துணைபுரியும் அவரே, இயல்பாக எனக்குள்ள எழிலையும் அழித்து, என்னை அழகிழந்தவளாக்கி அழிப்பர் அவர் என்னைவிட்டு அகன்று விடுவாரனல், அந்நிலையிலேயே அவர் இருந்து அளித்த பேரழகும் போம்; இயல்பாக நான் பெற்றிருந்த அழகும் என்னை விட்டுப் போயவிடும்; அழகிழந்து அலமந்து வாடுவேன் நான்; எனக்கு அழகு அளிப்பதும் அழிப்பதும் அவரே; அவர் இருந்தால் பொலிவு தோன்றி மகிழ்வேன்; அவர் பிரிந்தால் அழகிழந்து அழிவேன்" என்று கூறினள்.

அவ்வாறு கூறும் அவள், கணவனோடு வாழும் வாய்ப் பினைப பெற்றக்கால் தான்பெறும் பேரழகிறகு ஒரூர் விழா நிகழ்காலததே பெறும் பேரழகினையும, கணவன் பிரிந்தக்கால் கவினிழந்து வாடுமத தன் வருத்த நிலைக்கு, வாழ்வோரை இழந்துவாடும் ஓர் ஊரின் பாழ்பட்ட நிலை யினையும உவமைகாட்டி உணாததியுளளாள்.

பழந் தமிழ்நாடு விழாக்கள் பல கண்ட பெருஞ் சிறப் புடையது; காத்திகைத் திருவிழா, மாகழித் திருவிழா, வெளில் விழா, போன்ற விழாக்களை மகளை அன்றே கண்டு மகிழ்ந் துளளனர்; மதுரை ஆவணி அவிடடம, உறையூர்ப் பங்குனி உத்தரம், கருவூர் உள்ளிவிழா என இவ்வாறே ஒவவோர் ஊர், ஒவவோர விழாவிற்குச் சிறப்புடையதாகவும விளங்கிற்று.

ஓர் ஊரில் விழா நடைபெறுகிறது என்றால், விழாத் தொடங்குவதற்கு முன்னர், முரசடிக்கும் முதுகுடியிற் பிறந்த முதியோன் ஒருவன் விழாமுரசினை யானைப் பிடாத்தலையேற்றித் தெருக்கள்தோறும சென்று, "திரு விழை மூதூர் வாழ்க!

"திருவிழை மூதூர வாழ்கென் றேத்தி
வானம முமமாரி பொழிக! மனனவன
கோளநிலை திரியாக் கோலான ஆகுக!
.....
பசியும, பிணியும், பகையும நீங்கி
வசியும, வளனும சுரகக." (மணிமேகலை: கூஉ சா, எக உ)

என்று வாழ்தது்துரைத்து விழாத் தொடங்கும நிகழ்ச்சி யினையும, விழா நிகழுமம நாட்களையும ஊர மக்களுக்கு அறிவிப்பன; விழா நிகழ்வதுணாந்த ஊராமக்கள் செற்ற மும் கலாமும மறநது, விழாச சிறபபிற சென்ற மனத் தினராய் மகிழ்வர; தோரண வீதிகளிலும, தோமறு கோட்டிகளிலுமம பூரண குமபம், பொற்பாலிகை, பாவை விளக்கு முதலாயவற்றைப பரப்பிவைத்துப் பாராட்டுவர்; குலைகளோடு கூடிய கமுகு, வாழை, வஞசி, வல்லி, கரும்பு போன்ற மரங்களையும, மகாடிகளையும் கொணர்ந்து ஆங் காஙகே நாட்டுவர்; வரிசை வரிசையாக விளங்கும் திண்ணை

களில் நிற்கும் பசும்பொன் தூண்களில் முத்துச்சரங் களை முறைமுறையே நாலவிடுவர்; வீதிகளிலும, மன்றங் களிலும் பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர்; மாடங்களிலும், வாயில்களிலும் வகைவகையான கொடி களைக் கட்டிப் பறக்கவிடுவர, ஊர்களில் உள்ள கோயில் களில் எல்லாம், சிறப்பும் பூசனையும் சிறக்க மேற்கொள் வர்; மணல் பரந்து தண்ணெனக் குளிர்ந்த பந்தர்களிலும், தாழ்ந்து நிழல்தரும் மரத்தடிகளிலும், அறவோர் பலர் அமர்ந்து அறவுரை கூறி, அகமகிழ்வர்; பல்வேறு நாடுகளி னின்றும் போந்த பல்வேறு சமயக் கணக்கர் பட்டி மண்ட பத்தே ஒருங்கிருந்து சமய உண்மைகளை உணர்த்தியும் உணர்ந்தும உறுதொழில் புரிவர; மக்கள், கண்கவர் அணி யும் ஆடையும் அணிந்து விழாக்காண விரைந்து செல்வர்; வந்த மக்கள் விழாநிகழ் வீதிகளில் ஆங்காங்கே நடை பெறும் அற்புத நிகழ்ச்சிகளைக் கண்டு கண்டு மகிழ்வர்; கள்ளுண்டுகளிப்போன் பின் செல்வோர் சிலர்; மையலுற்ற மகன் செயல் கண்டு மகிழ்வோர் சிலர்; பேடிக்கூத்தர் பின் சென்று அவர் ஆடல் கண்டு மகிழ்வார் சிலர்; வீதி யில் இருமருங்கும் உள்ள வீடுகளின் வெண்சுதைமீது வித் தகப்படம் எழுதப்பெற்று விளங்கும் கண்கவர் ஓவியங் களைக் கண்டு நிற்பர் சிலர். கார்த்திகை விழாப்போன்ற நாட்களில், மலைகளின்மீதும், மனைகளிலும விளக்குகளை வரிசை வரிசையாக ஏற்றி மகிழ்வதும் உண்டு; இத்தகைய விழாநிகழ் ஊர்கள், விழா நிகழா ஏனைய நாட்களினும், விழாநிகழ் காலத்தே பல்லாற்றானும் பொலிவுற்றுத் தோன்றும்.

பழந் தமிழ்நாடு, இத்தகைய விழாப் பல கண்டு வீறு கொண்டதே எனினும், அமைதி நிறைந்த வாழ்வினை அந் நாட்டு வாழ்மக்கள் அனைவரும் பெற்றிருந்தனர் எனக் கூறுவதற்கில்லை. பகைவேந்தர் படையெடுப்பால் பல ஊர்கள் பாழாவதும், ஆறலைகள்வர்களால் மேலும் பல அழிவுறுவதும் பழங்காலத் தமிழகத்தில் உண்டு. உள் நாடுகளில் உள்ள ஊர்களும் இவ்வாறு அழிவுறும் எனின்,

வழியோர ஊர்களின் அழிவைப்பற்றிக் கூறவே வேண்டுவதில்லை. பகையரசர்களாலுமம, பிறராலுமம எளிதில் அழிவுக்குள்ளாகும் ஊர்கள் அவைகளே ; ஆதலின், அத்தகைய ஊர்களில் மக்கள் வாழவும் அஞ்சுவர் : அஞ்சி அஞ்சி ஆண்டே வாழ்வதிலும் வேற்றார் சென்று வாழவே அவர்கள் விரும்புவர். ஆதலின், அவ்வூர்கள் பலவும மக்களை இழந்தே காணப்படுமம ; மக்கள குடிவாழ்வதே ஊர்களுக்கு அழகாம் ; அவர்கள் ஆண்டு வாழாராயின், அவ்விடங்கள் அழகிழப்பது மட்டும் அன்று, அவை ஊர் எனவும் படா ; பாழிடம் என்றே அழைக்கப் பெறும். அந்நிலையில், அவை திருவிழாக்காலப் பெருநலன்களையே யன்றி, உள்ள அழகையுமம, ஊர் என்ற பெயரையும் இழந்து பாழ்தறும்.

இவ்வாறு விரைந்திகழ் ஊர்களின் வெற்றிச் சிறப்பினையும், வாழ்வோர் போகிய பேரூர்களின் பாழ்பட்ட நிலையினையும் உணர்ந்த தலைமகள், கணவனோடு கலந்துறை காலத்தே தான் பெறும் கவினுக்கும், அவனைப் பிரிந்துறை காலத்தே எழில் குறைந்து விளங்குமம தன் இழி நிலைக்கும் அவ்விரண்டினையுமம முறையே உவமையாக்கி உரைப்பாளாய்ப் பாடியுள்ளார் ஒரு புலவர்.

“காதலர் உழையராகப் பெரிதுவந்து
சாறுகொள் ஊரின் புகல்வென் மன்ற ;
அதகம் நண்ணிய அகுகுடிச் சீறூர்
மக்கள் போகிய **அணிலாடு முன்றில்**
புலம்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி! அவா அகன்ற நுான்றே.”
(குறுந் சக)

கணவனைப் பிரிந்து கவினிழந்து நிற்குதம் தலைமகள் நிலையினை விளக்க மேற்கொண்ட உவமை மக்கள் போகிய சிறார் என்பதாம் ; அவ்வூரின் தனிமையினையும், அதன் பாழ்பட்ட நிலையினையும் விளக்குவந்த புலவர், அவ்வூர் அணிலாடு முன்றில உடையது என்று கூறி அமைவாராயி

னா. அணில்கள், உயிர்வகைகளுள் பேரச்சம் உடை யவை; காம் ஏறி ஆடி மகிழும் மரத்தின் கிளைகள் சிறிதே அசையினும் அவை அஞ்சும்; மக்களோ பிறரோ வரு வதை உணர்ந்தால் ஓடி ஒளியும் இயல்பின; மக்கள் நிழ லைக் காணினும் மருளும்; அவற்றின் இயல்பு இது வாத லின், மக்களோ பிற உயிர்களோ பயில இயங்கும் இடங் களில் அவற்றைக் காணல் இயலாது; அவர் அற்ற இடங் களில் மட்டுமே அவை இயங்கும் "வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது" (பெருமபாண்: 86) என்பர் பிறரும். இவ்வாறு அஞ்சும் இயல்புடைய அணில்கள் பல கூடி அச் சம்விட்டு ஆடி மகிழுமெ என்றால், அவ்விடம், மக்கள் வாழ் விழைந்த வெற்றிடமாதலே வேண்டும். இவ்வாறு வாழ் வோரா போகிய பாழ்பட்ட இடம் என்பதை உணர்த்த, அணில்கள் ஆடிமகிழும் முன்னிடங்களை உடைய, பொலிவு குன்றிய தனிமைகொண்ட இல்களையுடைய இடம்; "அணி லாடு முன்றில் புலம்பில்" என்று கூறி உவமை அமைத்த சிறுபபால, இப்பாவின் ஆசிரியர், அணிலாடு முன்றிலார் என்ற அழகிய பெயரினைப் பெற்றுப் பெருமை உற்றார்.

உ. ஓரேருழவர்

ஒரு பாட்டின் பொருளை உள்ளவாறு உணர்தல் வேண்டுமாயின், அப் பாட்டைப் பாடிய புலவன் உள்ளத்தை முதற்கண் உணர்தல்வேண்டும்; புலவன் உள்ளத்தை உணர்தல், அப் புலவன் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையினை நன்கு உணர்ந்தார்க்கே இயலும். ஓரேருழவர் பாடிய பாக்களுள் நமக்குக் கிடைத்தன இரண்டு; ஒன்று, அகத்திணை தழுவியது; பிறிதொன்று, புறத்திணைப் பொருள் உணர்த்துவது; இரண்டும் இரு மணிகள்; அவற்றை அறிந்து, அவற்றின் பொருளை உணர்ந்து மாண்புற விரும்பும் நாம, அவர் வாழ்ந்த காலத்தின் இயல்பையும, அவர் உளளதனை உணர விருமபுமம நாம் வாழும் காலதனின இயல்பையும், இரண்டிற்குமம உள்ள ஒற்றுமை வேறுமைகளையும சற்று நோக்குவோமாக

உழவுத்தொழில் இன்றும் நடைபெறுகிறது; ஆனல், இன்று அத் தொழில் நடைபெறுமம முறைக்கும், பண்டு அது நடைபெற்ற முறைக்கும் பெரிதும் வேறுபாடுண்டு.

இன்று, நிலத்திற்கு உரியவன் வேறு; அந்நிலத்தை உழுபவன் வேறு; நிலத்திற்குரியவனே அந்நிலத்தை உழுகிறான் என்பதில்லை; நிலதனிறகுரியோர் பெரும் பாலுமம உழுதொழில் மேற்கொள்வதிலை; நிலம் இருக்குமம ஊரிலுமம, நிலத்திற்குரியவர் வாழ்வதில்லை; நிலம் எங்கோ ஓர்ஊரில் இருக்கும்; நிலத்திற்குரியவர், நெடுந் தொலைவில் உள்ள ஒரு பேரூரில் வாழ்வா; தங்கள் நிலம் எவை எவை? அவை எங்கெங்கே உள்ளன? அவற்றைப் பயிரிடுவோர் யார்? அவற்றில் பயிரிடப்படும் பொருள் எது? அவர்கள் பயிரிடும்முறை யாது? தங்கள் தொழிலிற்குவேண் டும் தண்ணீரை எங்கிருந்து பெறுகின்றனர்? என்ற இவற்றை அறியாத பெருநிலக்கிழவர்பலராவர். ஆண்டு தோறும் இவ்வளவு நெல் என்ற உடன்பாட்டின்கீழ் நிலம் உழுவோர்பால் ஒப்படைக்கப்பட்டிருக்கும்; நிலம் விளைந் தாலும் விளையாவிட்டாலும் குறிப்பிட்ட அந் நெல்லை,

அதற்கு நிகரான பொருளோ அவர்களுக்கு வந்து சேர்ந்து விடும். அதனால், 'மழை பெய்யவில்லையே! பெய்யாத மழை பெய்துவிட்டது; நிலத்தை உழுது பயிரிடுதற்கான ஏர்கள் கிடைக்கவில்லையே!' என்ற கவலையினை அவர்கள்பால் காணல் இயலாது ஆகவே, இத்தகைய பெருநிலக்கிழவர் களுமட்டுமே அறிந்தாரால், ஒரேருழவர்தம் உள்ளதனை உணர்தல் இயலாது.

நிலத்திற்கு உரிமை இல்லாதவன் நிலத்தை உழுகின் றான்; நிலத்தை உழுது பயிர் செய்வதற்காக அவனுக்கு அளிக்கப்படும் பங்கு, பெருமபாலான இடங்களில் அவன் மனதை மகிழ்விக்கும் அளவில் அமையவில்லை; நிலத்தை உழுவதற்காக அவனும், அந்நில முதலாளியும் மேற்கொண் டுள்ள ஒப்பந்தம் அவனுக்கு உளக்கமூட்டுவதாக இல்லை. வாழ்வை வளர்க்க, உழுதொழிலேபோல் வேறுபல தொழில் களும் உள என்பதையும் அவன் அறிந்துகொண்டுள் ளான்; இக் காரணங்களால், அவன் உழுதொழிலில் உளன்றிய உள்ளம் செலுத்துவதில்லை. அதற்காகப் பெரும்பொருள் செலவிடவோ, அரும்பாடுபடவோ அவன் விரும்புவதில்லை.

நிலத்திற் குரியவனே அந்நிலத்தின் உழவுத்தொழிலை யும் மேற்கொண்டுள்ளான் என்றாலும், அவனுக்கு அந் நிலம் விளைந்தால்தான் வாழ்வு என்றநிலை இல்லை; உழவே அன்றி வாணிபம், வேறு பிற தொழில்கள்போன்ற பல வகைகளில் வருவாய்க்கு வழிதேடிக் கொள்ளுதல்கூடும் என்பதை அவன் அறிந்துளான் ஆதலின், உழவு ஒன் றையே நம்பி இருக்கவேண்டிய நிலை அவனுக்கும் இல்லை; அதனால், தனக்கு வசதியாக நீரும் ஏரும் கிடைத்த வழி நிலத்தை உழுதுகொள்ளலாம் என்று எண்ணுகின்றனை ஒழிய, எப்படியாவது ஏர் கொண்டுவர வேண்டும்; எப்பாடு பட்டாவது நீர்பெறவேண்டும்; இன்றேல் நீர்கிடைத்த போதே தன் தொழிலை எத்துணைப் பாடுபட்டாவது முடித்துவிடவேண்டும் என்று அவன் அவசரப்படுவதில்லை.

நிலத்திற்கு உரியவனே நிலத்தை உழுகிறான்; அவனுக்கு அதுவன்றி வேறு வழியில்லை; ஆகவே, அத்தொழிலில் அவன் ஊக்கம் காட்டி உழைக்கிறான் என்றாலும, உழவுத்தொழில் நன்கு நடைபெறவேண்டுமே, என்று கவலை கொள்ளவேண்டிய அவலநிலை இன்று இல்லை. இன்று, உழவன் பெற்றிருக்கும் வாய்ப்பும் வசதியும மிக மிக அதிகம.

நம்மிடம் இருப்பது ஒரு ஏர்தானே! இவ்வளவு நிலத்தையும் எவ்வாறு உழுது முடிபபது? என்ற கவலை கொள்ளவேண்டிய தில்லை; பணம் கொடுத்தால்—ஊர்க் கூலிக்குமேல் சிறிது கூட்டிக் கொடுத்தால்—எத்தனையோ ஏர்கள கூலிக்கு வரும, அவற்றைக்கொண்டு எவ்வளவு நிலத்தை வேண்டுமானாலும ஒரேநாளில் உழுதுவிடலாம். மாடுகொண்டு உழும ஏகாளை தேடிக்கொண்டு போக வேண்டிய தொல்லையும் இப்போது குறைந்துவிட்டது; விஞ்ஞானவளர்ச்சி அதற்கான வசதிபல செய்தளித்துளது; ஒரேமணி நேரத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தையும் எளிதில் உழுதுதள்ளிவிடும பொறியியற்கலப்பைகளை இன்றைய உழவன் பெற்றுள்ளான். அக் கலப்பைகளுக்குப் பெரும்பொருள் கொடுத்து வாங்கி வைத்திருத்தல் வேண்டும என்பதும் தேவை இல்லை; ஊருக்கு ஒன்று, பல ஊர்களுக்கு ஒன்று என அரசியலாரே வாங்கிவைத்துள்ளனர், அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சிறு பணத்தைமட்டும் கொடுத்துவிட்டுத் தன் பரந்த நிலங்களைப் பண்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இன்று உளது; ஆகவே நிலம் பரந்துகிடக்கிறது; ஏர் கிடைபபது அரிதாக உளது என்று கவலை கொள்ளவேண்டிய நிலை ஒழிந்துவிட்டது.

ஏர் கிடைக்கிறது; ஆனால், நிலம் உழுவதற்கான பக்குவம் அடையவேண்டுமே! அதற்கு நீர் வேண்டுமே! நீர்தரும் மழை வேண்டுமே என்ற கவலையும் இன்றைய உழவனுக்கு இல்லை. வேண்டும்போது, வேண்டிய இடத்தில் வேண்டிய அளவு மழையினைப் பெற்றுக்கொள்ளத்

தக்க அறிவுவளத்தை அவன் பெற்றுவிட்டான் ; இயற்கை வழிப் பெறும் மழையற்ற இடங்களிலும, நிலத்திற்கு வேண்டுமை நீரை, அவன் பல்வேறு வழிகளில் பெற்று விடுகிறான் ; பேராறுகளின் குறுக்கே அணைகட்டித் தேக்கிய ஆற்றுநீர, கால்வாய்வழி வந்து அவனுக்கு ஆயுட் காலம் முழுதும் துணைபுரிகிறது ; ஆண்டுமுற்றும நீர் ஓடும பேராறுகள் இல்லா இடங்களில், சிற்றாறுகளில் மழைபெய்து வெள்ளம் வருங்கால், அவ் வெள்ளநீரை வாய்க்கால் வழியே கொணர்ந்து தேக்கிவைக்கும் பெரிய பெரிய ஏரிகள், பல ஆண்டுகளுக்குப் பயனளிக்கும் ; இத்தகைய பெரிய நீர்நிலைகளை அல்லாமல், ஓராண்டிறகு, ஆறு திங்களுக்கு, மூன்று திங்களுக்காம நீரைத் தரும நீர்நிலைகள் பல ஆங்காங்கே அமைந்து அவனுக்கு நீர் அளித்துத் துணைபுரிகின்றன ; ஆற்றுக் கால்வாய்களோ, நீர்நிலைகளோ இல்லாத இடங்களில தோண்டிய கிணறுகள் அவனுக்கு நின்று உதவுகின்றன , கிணறுகளில மேல்நீர் வற்றிவிடினும், நீர்த்தாரை உள்ளவரையும துளைத்துச் சென்று அநநீரை மேலே கொணரும் வழி வகைகளையும் இன்று உழவர் பெற்றுள்ளனர்.

கிணறுமை இருக்கிறது ; கிணற்றில் நீரும் நிறைந்துளது என்றாலும, இவ்வளவு ஏர் அமைத்திவிட்டோமே ; இவையெல்லாம் தொழிலாற்றுவதற்கான நீரை எபபோது இறைப்பது என்ற கவலையும் இவனுக்கில்லை ; ஏற்றமும், கபிலையும்கொண்டே இறைக்கவேண்டும் என்றநிலை எப்போதோ மறைந்துவிட்டது ; முடுக்கிவிட்டால், மூச்சு விடும்முன்னே மிகப் பரந்த நிலத்திற்கும் தேவையான நீரை வாரி வழங்கத்தக்க விஞ்ஞானப் பொறிகளை அவன் இன்று பெற்றுளான் ; அதன் உதவியால், சிறிதுநேரத்தில் பெரிய கிணறுகளையும் வற்றச்செய்து வேண்டும் நீர் பெறும் வாய்ப்பு அவனுக்கு இருக்கிறது. ஆகவே, நீர் இல்லையே என்றோ, நீர் உள்ளபோதே உழவுத்தொழிலை முடித்துவிடவேண்டுமே என்றோ அவன் கவலைகொள்ளத் தேவையில்லை ; அவன் எப்போது கலப்பையைக் கையில்

பிடித்துக்கொண்டு கழனியில் இறங்குகின்றானே, அந்தக் கணமே அவனுக்கு வேண்டும் நீர் அளிக்கவல்ல வழி வகைகள் பலப்பல இன்றுள்ளன.

ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் நடைபெறும் இன்றைய உழவுத் தொழிலையும், உழுபவனையும் மட்டுமே அறிந்தவர்களால், ஓரேர் உழவர் உள்ளத்தை உணர்தல் இயலாது; அவர் வாழ்ந்த காலத்தில், உழவுத்தொழில் நடைபெறுதற்காம் சூழ்நிலையினையும், அச் சூழ்நிலையில் நின்று தொழில்புரிந்த அக்கால உழவனையும் உணர்ந்தவர் களாலேயே அவர் பாட்டின் பொருள் உணர்ந்து பாராட்ட முடியும்; ஆதலின் அக்கால உழவனைச் சிறிது அறிந்து கொள்வோமாக.

நிலத்திற்குரியவன் வேறு; அந்நிலத்தை உழுபவன் வேறு என்ற நிலை பண்டு இல்லை; நிலத்திற்குரியவனே நிலத்தை உழுதல் வேண்டும்; ஒவ்வொருவரும் ஏதோ ஓர் அளவுள்ள நிலத்தைத் தங்களுக்கெனப் பெற்றிருந்தனர் ஆதலின், பிறர்நிலத்தில் கூலிக்கு உழவுத்தொழில் புரிவோர் அரியராயினர், ஆகவே, தன் நிலதில பிறர் உழுது பயன் அளிப்பர் என நிலமுடையோன் எதிர் பார்த்தல் இயலாது; இதனால், நிலம் படைத்தோன் உழவுத் தொழிலின் நுட்பங்களை உணர்ந்தவனாய் விளங்கினன்; ஏரின் அருமை, நீரின் இன்றியமையாமை, பருவத்தே பயிர்செய்யவேண்டிய பண்பு ஆகிய இவற்றை அவன் நன்குணர்ந்திருந்தான்; தன்தொழிலைத் தானே முடிதல் வேண்டும்; தன்கையே தனக்குதவி என்ற அறிவு அவன்பால் அமைந்திருந்தது.

வாழ்வதற்கான வழிகள் இன்று வகைவகையாக வளர்ந்து தோன்றுவதேபோல், பண்டு விரிந்து விளங்க வில்லை. பண்டைக்கால மக்கள் அனைவரும் உழவுத்தொழில் ஒன்றையே நம்பி உயிர்வாழ்ந்திருந்தனர்; அதுவன்றி வேறுதொழில்களை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்று கூறுதல் அருமையே; ஆதலின், வாழவேண்டும் என்று

விரும்பிய அக்கால உழவன், தன் நிலத்தையே நம்பி வாழ வேண்டியவனாயினன். உழவேண்டிய காலத்தில் உறங்கிவிட்டால், ஓராண்டிற்கு உணவின்றி வாடநேரிடும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்; அதனால், நிலத்தை தக்க காலத்தே உழுது பயிரிடவேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில ஆழக் குடிகொண்டிருந்தது. நிலதனை உழுதே ஆகவேண்டும் என்ற கட்டாய நிலையால் உழவேண்டும் என்ற ஊக்கத்தோடு உழைக்க முன்வரும அக்கால உழவன், அதனதாழிலை எளிதாக மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் வாழ்ந்தானல்லன்; தான் வேண்டும்போது பயிர் செய்யலாம்; வேண்டும் போது வேண்டிய ஏர் கிடைக்கும்; நீர நினைத்தபோது வந்து நிறையும் என்ற நிலை அவனுக்கு இல்லை; எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்மையை, அவன் உழவுத் தொழிலில் பெற்றிருக்கவில்லை. மிக மிகத் துயர்தரும் சூழ்நிலையிலேயே, அவன் தன் உழவுத்தொழிலை மேற் கொண்ட வந்திருக்கக் காண்கிறோம்.

உழவே உயிரூட்டும் தொழில்; அத்தொழிலை எவ் வாறாயினும் செய்தே ஆகவேண்டும்; தன் நிலத்தைத் தானே உழுதல்வேண்டும்; தன் நிலத்தில் பிறர் வந்து துணைபுரிவர் என எதிர்பார்த்தல் இயலாது. "கொள் ளுக்கு இரண்டு சால்" என்ற முறையில் நாமும் உழுதோம் என்று அரைகுறையாக உழுதல் கூடாது; அதற்கு உள் ளமும் இடந்தராது; நன்றாக உழவேண்டும்; அகல உழுவதினும் ஆழ உழவேண்டும்; எல்லா நிலத்திலும் பயிர செய்ய வேண்டியதில்லை; நிலத்தின் ஒருபகுதியில் மட்டும் பயிர்செய்தால் போதும் என்று எண்ணுதல் கூடாது; எல்லார்க்கும் தேவையான உணவுப்பொருளை உண்டாக்குதல் வேண்டும். ஆதலின், எல்லா நிலத்தையும் உழுதல்வேண்டும்; எவ்வளவு பெரிய நிலத்தையும் எளிதில் உழக்கூடிய இயந்திரக் கலப்பைகள் இல்லை; கூலிக்கு ஏர் கொணர்வாரும் இலர்; தான் ஒருவனே உழுதல்வேண்டும்; தன்னிடம் உள்ள ஒரு ஏரைக் கொண்டே உழவேண்டும்;

இன்றைக்கு இந்நிலம்; நாளைக்கு அந்நிலம் என்ற முறையில், ஒருநாளைக்கு ஒரு நிலமாக உழுதுவிடலாம் என்று எண்ணினால் அதுவும் இயலாது; அத்தகைய வாய்ப்பு அக்கால உழவனுக்கு இல்லை; நிலத்தை உழுவது, அந்நிலம் ஈரம்பட்டுப் பக்குவமாய வழியே இயலும்; மிக ஈரம் உள்ளபோதும் இயலாது; ஈரம் பெரிதும் புலர்ந்த வழியும் இயலாது; இன்று இருப்பதுபோன்ற நீர் வசதி அன்றும் இருந்திருந்தால் அது இயலும்; ஆனால் அவை அன்று இல்லை; தன் நிலத்திற்கு வேண்டிய நீருக்கு அக்கால உழவன் வானத்தையே எதிர்நோக்கியிருந்தான். நீர் பெறும் பலப்பல வழிமுறைகளைக் கண்டிருக்கும் இக்காலத்திலும் மழையின் வருகையை மக்கள் வேண்டி நிற்கின்றனர் என்றால், அதத்தகைய வசதி யொன்றும் இன்றி, தன் தொழிலிற்கு அஃதொன்றையே நம்பி வாழ்ந்த பழங்கால மக்கள் எதற்கும் மழையையே எதிர் நோக்கி நின்றதில் வியப்பொன்றுமில்லை.

சாவா மருந்தாம அமிழ்தேபோல் உலகிற்கு உணவளிதாதுப் புரப்பது மழையே.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தானஅமிழ்தம் என்று உணரற் பாற்று." (திருக்குறள்: கக)

மழை இல்லாமல் உலகம் இயங்காது; "நீர் இன்று அமையாது உலகு;" "மழை இன்றி மாநிலத்தார்க்கில்லை;" மழைஇல்லாது போனால் உலகில் உயிர்களும் வாழா.

"மாரிஎறங் கூரின் மன்னுயிரிலவே;"

ஆதலின், உலகத்து உயிர்கள் எல்லாம் மழையையே எதிர் நோக்கி வாழ்கின்றன.

"வாழ்நெககி வாழுமு உலகெல்லாம்." (திருக்குறள்: நுகூ)

மழை இல்லையேல் உழுதொழில் நடைபெறாது;

'எரின்உழார் உழவர்; புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.' (திருக்குறள்: கச)

அவர் அஃது ஆற்றாராயின், உலகில் பகியும் பிணியும் பகையும் கூடிப் பாழ்பல புரியும்.

"விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி." (திருக்குறள்: கஙூ)

நிலம் வான்போல் பரந்துகிடப்பினும், நீரில்வழி அந் நிலத்தால் பயனின்றும்; நிலமுமை நீரும் சேர்ந்ததே உணவு எனப்படும்; நிலமும் நீரும் ஆகிய இரண்டும் கூடியே இயங்குதல் வேண்டும்; நீரின்றி இயங்கும நிலம் நன்னிலம் எனப் போற்றப்படாது; புன்னிலம் எனத் தூற்றப்படும்.

"உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
.....விதிதிவானநோக்கும் புன்புலம்
கணைகொள் வைப்பிற்று ஆயினும் நண்ணி
ஆளும்இஃ றவன் தாட்கு உதவாதே"

மழையின் மாண்பறிந்த புலவர்கள் இவ்வாறெல்லாம் போற்றிப் புகழ்ந்தார்கள்.

மழை, உழவன் வேண்டும்போது வாய்த்து வழங்கும் இயல்புடையதன்று; மழை எதிர்பார்க்கும்போதும் பெய் யாது; எதிர்நோக்கும் அளவும் பெய்யாது; எபபோது பெய்யும் எவ்வளவு பெய்யும் என்று எவரும கூறார்; ஆதலின், அது வந்து வாய்த்த காலத்திலேயே அதனைப் பயன்படுத்திகொள்ளுதல் வேண்டும்; மழைபெய்தலால் பெற்ற ஈரம பலநாள் இருத்தலும் இல்லை; அது விரைவில் உலர்ந்துபோம் இயல்புடையது; ஒருமுறை பெய்து உழு தொழிலுக்குத் துணைபுரிந்த மழை மீண்டும் வருமா? வருமாயின் எப்போதுவரும் என்பதை எவரானும் கூறல் இயலாது. ஆதலின், இந்த மழைக்கு இந்நிலம்; நாளை மழைக்கு அந்நிலம எனவரைந்து கொண்டு உழுதல் இயலாது; மழை பெய்துவிட்ட உடனே, நிலம் பக்குவப் பட்டிருக்கும்போதே, அப்பக்குவம் கெடுவதற்கு முன் னரே, எல்லாநிலத்தையும் உழுது முடித்துவிடல் வேண் டும்; இது அக்காலச் சூழ்நிலை. இத்தகைய சூழ்நிலையினை

மனதில் பதியவைத்துக்கொண்டு, ஓரேருழவர் பாட்டைப் பார்ப்போமாக.

காற்காலம் தொடங்கியவுடனே மீண்டு வந்துவிடு வேன் என்று உறுதிகூறிப் பொருள் சேர்க்கச்சென்ற ஒரு தலைமகன், "கிழவி நிலையே வினையிடத்துரையார்" என் பதற்கேற்ப, தான் மேற்கொண்ட வினைமேற் சென்ற நினைவால், மனைவியின் எண்ணம் அவன் மனதில் எழ வில்லை; காலம் செல்வதையும் கருதிலன்; வந்த வேலை முடிந்தது; கருமமே கண்ணாய் நின்று பெரும்பொருள் சேர்த்துவிட்டான்; வினைமுடித்து நோக்கியவழி, தான் கூறிவந்த காற்காலம் தொடங்கி விட்டமையை உணர்ந் தான்; உடனே மனைவியைப் பற்றிய எண்ணம் உள் ளத்தில் இடம்பெறலாயிற்று; ஆடுகின்ற அழகிய மருங்கிலைப் போன்ற பருத்த அவள் தோள் அழகும், அன்பும் அருளும் தழும்பும் அவள் கண் அழகும் அவன் கண்முன் வந்து நிற்கலாயின; தன் ஊரில், தன் வருகையை எதிர்நோக்கி நிற்கும் அவள் நிலையினை எண்ணுவானுயினன்.

"அவர் குறித்துச்சென்ற காலமும் வந்தது; அவர் வந்திலர், ஆதலின், நம்பால் அவருக்கு அன்பில்லை போலும்! அதனால் அவர் நம்மை மறந்தாரோ? 'பிரியேன், பிரியின் உயிர்தரியேன்' என்று சூளுரைத்தவா நம் தலைவர்; ஆதலின், அவர் நமமை மறவார்; நமமை அவர் மறப்பி னும, அவர் சென்றவழியில், ஆணும் பெண்ணுமாய் அன்பு கொண்டு கலந்துவாழும் உயிர்வகைகள், அவருக்கு மனைவி யோடு கலந்து வாழவேண்டிய கடமையை நினைப்பூட்டி யிருக்கும்; ஆதலின், அவர் நமமை மறந்திரார்; பின் அவர் வராமைக்கு யாதுகாரணம்? ஒருவேளை, அவர் மேற் கொண்டு சென்ற வினை இன்னும் முடிந்திலதோ? இல்லை; அவ்வாறிருக்க முடியாது; அவர் எண்ணியது எண்ணி யாங்கு முடிக்கும் திண்ணியர்; ஆதலின், எடுத்த வினையை எப்போதோ முடித்து இருப்பர், முடித்தும் இன்னும் என்வந்திலர்? அவர் சென்றவழி, கடத்தற்கரிய கொடு வழி என்ப; அவ்வழியில் அவருக்கு ஏதம் ஏதேனும்

உண்டாயிருக்குமோ?" என்றெல்லாம் பலப்பல எண்ணி வருந்தும் தலைவியின் தயார்நிலை அவன் கண்முன் வந்து நிற்பதுபோல் தோன்றிற்று

"அவள் அவ்வாறு மனக்கவலை கொண்டு மாழ்கினால், அவள் அழகு என்னும்? உளைக்கவலையால் உடல் நலம் குன்றுமே! அதனால், அவளை அழகிழந்து அழிவளே! அந்தோ! அவளைப் பிரிந்து வருந்கால் பார்த்து மகிழ்ந்த அவள் தோள அழகையும, கண்ணழகையும் மீண்டு சென்ற வழிக் காண்பதேனோ? காணவேண்டுமாயின், இன்றே அங்கு அடைதல்வேண்டும; இப்பொழுதே அடைதல்வேண்டும்; ஆனால், அந்தோ! அஃது எளிதில் இயலாதுபோல் தோன்றுகிறதே! அவள் இருக்கும் இடத்திற்கும் நமக்கும் இடைப்பட்ட இடமதான் எத்தனை தொலைவு! மிகமிகச் சேய்மைக்கண் அன்றோ அவள் இருக்கிறாள்? செல்லும் வழியாவது ஏதமுமு இடையூறுமம இல்லா நல்வழியாக உளதா? அது, காடும மலையும் கானறும் கலந்தன்றோ காட்சி அளிக்கிறது! இத்தகைய அரிய - கொடிய - மிக நீண்ட வழியை எப்போது கடபபேன்: பையக கடத்தல் கூடாதே; குறித்தகாலம சிறிது கழியினும பொறா அவளை, இவ்வழியை மெல்லக் கடந்துசென்றால் காணவும் இயலாதே; அந்தோ! யாது செய்வேன்? எப்படிக் கடப்பேன் இப் பெருவழியை? எப்போது கடப்பேன்? அவளை எப்போது காண்பேன்? அதுவரை எவ்வாறு ஆற்றியிருப்பேன்?" என்றெல்லாம் உள்ளம் துடிக்க நிற்கிறான்.

இத் தலைமகன் உள்ளத்துடிப்பை விளக்க, புலவர் ஒரேருழவர் அழகிய ஓர் உவமையினை மேற்கொண்டுள்ளார்.

உழவன் ஒருவன்; சிறிது நிலம் உடையவன்; அந் நிலத்தையே நம்பிவாழும் பொருள்வளம் உடையவன்; தன் நிலத்தைப் பயிரிட்டுப் பயன்பெறவேண்டும் என்ற எண்ணத்தால் பல நாட்களாக மழையை எதிர்நோக்கி இருந்தான். பெய்யாத மழையும் வந்து பெய்து ஓய்ந்தது; சரம புலர்வதற்குமுன்பே எல்லா நிலத்தையும உழுதுவிட

வேண்டும் என்று எண்ணினான், அவனிடம் உள்ளது ஒரே ஒரு ஏர்; அதை எடுத்துக்கொண்டு நிலத்தை அடைந்தான்; நிலம் ஈரம்பட்டுப் பக்குவமாக இருப்பது உணர்ந்தான்; ஏர் பூட்டி உழுது தொடங்கிவிட்டான்; வெய்யில் ஏற ஏற, ஈரம் சிறிது சிறிதாகப் புலர்ந்து நிலப்பக்குவம் குறைவதை உணரலாயினன். "அந்தோ! ஈரம் போய் விடுகிறதே! இவ்வளவு நிலத்தையும் உழுதாகவேண்டுமே! நம்மிடம் இருப்பது இந்த ஏர்தானே? இந்த ஏரைக்கொண்டு இவ்வளவு நிலத்தையும் எப்போது உழுது முடிப்பேன்? அதுவரை ஈரம் நில்லாதுபோல் தோன்றுகிறதே! அந்தோ! என்செய்வேன்? எப்படி உழுது முடிப்பேன்?" என்று அவன் உள்ளம் துடியாய்த் துடிக்கத் தொடங்கிவிட்டது; மனத்தில் அமைதி இல்லை, உள்ளமும் உடலும் ஒருவழி நிற்கவில்லை "உழவேண்டிய நிலம் இன்னும் உளது, ஈரம் புலர்ந்துகொண்டே இருக்கிறது; உள்ளதோ ஒரே ஏர்! எப்படி உழுது முடிப்பேன் இந்த ஒரு ஏரைக்கொண்டு? எப்போது உழுது முடிப்பேன் இந்த ஒரு ஏரைக்கொண்டு?" என உள்ளம் துடிக்க, உள்ளமவழி செயல் துடிக்க, ஏரை ஓட்டு ஓட்டு என விரைந்து ஓட்டுவானுயினன்.

"தலைவியைக் காணவேண்டும்; இடையிலே மிக நீண்டு கிடக்கும் கடத்தற்கரிய வழியைக் கடந்து சென்று காண வேண்டும்; எப்படிக் கடப்பேன் இப பெருவழியை? எப்போது காண்பேன் தலைவியை" எனத் துடிக்கும் தலைவன் உள்ளத்துடிப்பிற்கு, "எல்லா நிலத்தையும் உழுதாக வேண்டும், ஈரம புலர்வதற்கு முன்பே உழுதாகவேண்டும்; என்னிடம உள்ள ஒரு ஏரைக்கொண்டு எப்படி உழுது முடிப்பேன்? எப்போது உழுதுமுடிப்பேன்" எனத் துடிக்கும் ஓரேருழவன் உள்ளத்துடிப்பை உவமைகாட்டி, அக்கால ஆண்மக்கள்தம் உள்ளச் சிறப்பையும், உழவின் அருமையையும் ஒருங்கே விளக்கி, விளக்கிய அக்காரணத் தினாலேயே, தம் இயற்பெயரைக்கொடுத்துவிட்டு ஓரேருழவர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்று அறிவுடைப் பெருமக் களால் பாராட்டப்பெற்றார் நம்புலவர் பெருந்தகையார.

“ஆடுஅமை புரையும் வனப்பின், பணைத்தோள்,
போஅமர்க் கண்ணி இருந்த ஊரே,
நெடும் சேண் ஆர் இடையதுவே! நெஞ்சே!
ஈரமபட்ட செவ்விப் பைமபுனத்து,
ஒரேருழவன் போலப்
பெருவிதுபபு உற்றனரால்; நோகோ யானே.’

(குறுந்: ககூக.)

உழவுத் தொழிலின் உயர்வை உணர்த்திப் புகழ்பெற்ற புலவர் ஒரேருழவனார், உலகியலை நன்கு உணர்ந்தவர் என்பது அவர பாடிய மற்றொரு பாட்டால் நன்கு விளங்குகிறது.

உலகவாழ்வு, இல்லறம் துறவறம் என இரண்டாக நடைபெறுவதே எனினுமம, பெருமபாலான மக்களால் விரும்பி மேற்கொள்ளப்படுவது இல்லறமே; இலலறத்தே இருந்து வாழுவே மக்கள் விரும்புகின்றனர்; துறவறம் மேற்கொள்வதாயினும், இல்லறத்தேயிருந்து பெருவாழ்வு வாழ்ந்த பின்னரே அதை மேற்கொள்ளுதல் வேண்டும்; அதுவே இயற்கையோடியைந்த துறவுநெறியாமம என்று தமிழர்கள் உணாந்திருநதனர்.

“காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சானற மகளொடு துவனறி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழதகியும்
சிறந்தது பயிற்றல் இறந்தனன் பயனே.”

(தொல். கற்பு: நக)

எனத் தொல்காப்பியர் விதித்தலும் நோக்குக. இல்லறத்தே இருந்து ஆற்றவேண்டிய கடமைகளைக் கைவிட்டுவிட்டுத் துறவறம் மேற்கொள்வது கடமை யுணர்ந்தார் செயலாகாது; பலர்க்கும் பயன்பட வாழும் இல்லறத்தை விட்டுத் தன் ஒருவன் உயர்விற்கே உறுதுணை புரியும் துறவறத்தை மேற்கொள்ளுதல் கூடாது; இதை உணர்ந்தே வள்ளுவரும்,

" அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன் ?"

' ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து." (திருக் : சசு, சஅ)

எனத் துறவறத்தினும் இல்லறமே நன்றும் என நாட்டுவர்.

உலகில் பிறத்தல், 'நாம் ஒருவர்மட்டும் வாழ்ந்தால் போதுமே ; நம் வாழ்வுமட்டுமே உயர்ந்தால் போதும்' என்ற குறுகிய நோக்கத்திற்காதல் கூடாது ; ஊரெல்லாம் வாழ வேண்டும் ; அவர்கள் வாழ்விற்குத் தான் துணையாதல் வேண்டும் ; பிறர்வாழத் தான் துயர் உறுவதால் தவறு ஒன்றும் இல்லை ; தனித்துவாழ்ந்து சிறு துயரும் தாங்க மாட்டாது, துறவறம் மேற்கொளவதினும், சுற்றம் சூழ வாழ்ந்து, அவர்கள் நல்வாழ்வு வாழுக துணைபுரிந்து, அதனல் துயருறவேண்டிவரினும் அதையே பெருமக்கள் விரும்புவர். " பல்லார் பயன்துய்க்கத் தான் வருந்தி வாழ்வதே நல்லாண் மகற்குக் கடன் " என்பர் புலவர்கள்.

இல்லறத்தை விட்டுத் துறவறத்தை மேற்கொள்வது அவ்வளவு எளிய செயல் அன்று ; நாட்டைவிட்டுக் காட்டை அடைதல் எளிதில் நிகழக்கூடியதன்று ; உலகில் வாழ்வோர் நாம் ஒருவர் மட்டும் அன்று ; நம்மைச் சூழ ஒரு பெரும் சுற்றம் உளது ; அவரவர்க்கு வேண்டுவன எல்லாவறனையும் முடித்துவைத்துவிட்டுத் துறவறம் மேற்கொள்வது அத்துணை எளிதன்று. அவ்வளவு பெருஞ் சுற்றத்தையும அறவே மறந்துவிட்டு, 'அவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன ?' என்று எண்ணித் துறந்து ஓடுவதும அழகன்று ; ஆகவே சுற்றம் சூழ வாழ்பவர் துறவறத்தை மேற்கொள்ளுதல் ஆகாது : கூடாது ; அத் தகைய சுற்றம் எதுவும இல்லாதவரே இல்லறத்தை எளிதில் விட்டுத் துறவறத்தை மேற்கொள்ளுதல் இயலும்.

இக் கொள்கையைப், புலவர் ஓரேருழவனுர் மற்றொரு வகையால் விளக்குகிறுர் :

'காணும் இடமெங்கும்மணல் பரந்து விளங்கும் ஒரு பெரு வெளியில் தனித்த ஒருவனுல் துரத்தப்படும் ஒரு மான் மிக எளிதில் தப்பி ஓடிவிடும்; ஆனுல், மலையும் மரமும் செறிந்த ஓரிடத்தே பலர் கூடி வேட்டையாடும் மான், அவர்களைத் தப்பி ஓடுதல் இயலாது; பரந்த மணல் வெளியில் வாழும் மான்போல் தனித்து வாழுவில்லை நான்; அவ்வாறு வாழ்ந்திருந்தால் எப்போதோ துறவறத்தை மேற்கொண்டிருப்பேன்! ஆனுல், மரம் பல செறிந்த காட்டில் வாழும் மான்போல், ஒக்கலும் மக்களும் சூழ உள்ள இடத்திலன்றே நான் வாழ்கின்றேன்; துறவறம் மேற்கொள்ளலாம் என்ற எண்ணத்தை அவர்கள் வாழ்வு, அறவே மறக்கச் செய்துவிடுகின்றதே; என் கால் கட்டுக் களாம் அவர்களை மறந்து, நான் எங்ஙனம துறவறம மேற் கொள்வேன்!' என்ற கருத்தமைந்த பாடல் அவர் உள் ளத்தை உணர்த்துவது அறிக:

"அதள்எறிந்தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய போல,
ஓஒ உய்தலும் கூடுமன்!
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே." (புறம் · ககூக)

ஓரேருழவனையும், ஒருவன் ஆட்டும் புல்வாயினையும் உவமை காட்டி, உழவின் சிறப்பையும், உலகியல் உணர் வையும் உணர்த்திப் புகழ்பெற்ற புலவர் ஓரேருழவனுர் உள்ளம் உணர்ந்து பாராட்டற்குரியதன்றே!

5. கயமனார்

உவமையாற் பெயர் பெற்ற புலவர்களுள் கயமனாரும் ஒருவராவர். இன இனமான மீன்களால் நிறைந்த உபயங் கழி ஒன்று பசிய இலைகள் படர்ந்து காணப்படுகிறது. அவ்விலைகளுக்கிடையே நெய்தற் பூ ஒன்று மலர்ந்துள்ளது; அம்மலர் சற்றுப் பருத்து உயர்ந்த தண்டினை உடையது; அக்கழி கடலோடு தொடர்பு கொண்டிருப்பதால், கடல் நீர் பொங்குந்தோறும் கழியில நீர் அளவு சற்று உயர்வதும், கடல அலை ஒய்ந்து அடங்குந்தோறும் கழிநீர் அளவு சற்றுக் குறைவதுமாக நிகழும். இவ்வாறு, கடல் நீரின் ஏற்றிழிவிற்கேற்ப, கழிநீரும் ஏறி இழியுமாம இயல் புடையதாம்; கழியில் நீர்ஏறி நிற்பின், அக்கழியில் மலர்ந்த நெய்தல் மலர்நீருள் படிந்து மறைந்துவிடும; கழியில் நீர் இழியின், அமமலர் மேலே எழுந்து காட்சி தரும்; இவ்வாறு கழிநீரின் ஏற்றிழிவிற்கேற்ப, கழியில் மலர்ந்த நெய்தல் மலர், நீருள் மறைந்தும, நீர்மேல் எழுந்து தோன்றியும மாறிமாறிக் காட்சிதரும. இக் காட்சி, குளத்தில் நீராடுமை மகளிர நீருள் மூழ்கி மூழ்கி எழுங்கால் தோன்றும் அவர் கண்களின் காட்சியோடு ஒத்திருப்பதை உணர்ந்தார்; மகளிர் கண்களுக்கு நெய்தல் மலரை உவமிப்பது உண்டு; ஆகவே, கழிநீரில் மறைந்தும் வெளிப்போந்தும மாறிமாறிக் காட்சிதரும் நெய்தல் மலர், கயத்துள் மூழ்கி மூழ்கி எழுமை மகளிர் கண்களைப் போன்று உள்ளன என்று உவமை கூறினர்; அதனால் அவர் **கயமனார்** என்றும் அழைக்கப்பெற்றார்.

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்,
இனமீன் இருங்கழி ஒதம் மல்குதொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணினை மானுமம்" (குறுந். கூ.)

கயமனார் என்ற பெயர் பெறுதற்குக் காரணமான இச் செய்யுள், புலவர்க்கு வாங்கித் தந்த புகழினும், புலவர் பாடிய ஏனைய பாடல்கள், அவருக்கு வாங்கித்தந்த புகழ் மிகமிகப் பெரிதாம். புலவர் கயமனார் பாடிய பாடல்

களாக நமக்குக் கிடைத்துள்ளன இருபத்து மூன்று: இவற்றுள் ஒன்றே புறப்பாட்டு; ஏனைய எல்லாம் அகப் பாடல்களே; அவ் அகப்பாடல்கள் இருபத்திரண்டிலும், அவர்க்குப் பெயர் சூட்டும் பெருமை வாய்ந்த இப்பாட்டு ஒன்று மட்டுமே மருதத்திணையினைச் சார்ந்து வேறு பொருள் குறித்ததாம். ஏனைய இருபத்தொரு பாடல் களும் "உடன் போக்கு" என்ற ஒரு துறையினையே பல் வேறு வகையான் விளக்கிக் கூறுகின்றன.

தோழியின் துணை ஒன்றே பற்றுக் கோடாகத் தாய் தந்தையர் அறியாமல் களவில் காதல் கொண்டு வாழ்ந்த ஒரு தலைவனும், ஒரு தலைவியும், தம் தாய்தந்தையர் அறியாமல் மேலும் களவில் காதலித்து வாழ்தல் இயலாது என்பதையும், தமருக்கு அஞ்சித் தம் காதல் ஒழுக்கத் தைக் கைவிடுதலும் இயலாது என்பதையும் உணர்ந்து, தம் களவொழுக்கத்திற்கும், தம் கற்பு நெறிக்கும் கேடு நிகழா வகையில் வாழவேண்டுமாயின், தமர் அறியா வண்ணம் தலைமகன் உளர் சென்று மணந்து வாழ்தலே செய்யக்கடவது எனத் தெளிந்த அறிவினராகி ஒன்று கூடிப் போய்விடுவதே உடன்போக்கு எனப்படும்.

உடன்போக்கு நிகழ்வதற்கு முன்னும் பின்னுமாக, உடன்போக்கே இறுதியாக மேற்கொள்ள வேண்டுவது என்பதைத் தோழி உணர்தல், உணர்ந்த தோழி அதைத் தலைமகற்கும் தலைமகட்கும் உணர்த்தி அவர்களை உடன் போக்கிற்கு உடன்படுத்தல், தலைவி, தலைவனோடு சென்று விடுதல், இடைச்சுரத்தில் அவர் இயல்புடன், ஆங்கு அவரைக் கண்டார் இயல்பும், தன் மகள் உடன்போக்கினை மேற் கொண்டுவிட்டாள் என்பதறிந்த செவிலி அழுது அரற்றி அவளைத் தேடிச்சென்று மீளுதல், தலைமகளைப் பெற் றெடுத்த நற்றாய், வீட்டிலும் தெருவிலும் இருந்து, சென்ற மகளை நினைந்து புலம்பல் ஆகிய செயல்கள் நிகழும்; இவற்றையெல்லாம் வகுத்துரைப்பதும் உடன்போக்கின் பாற்படும். உடன்போக்கு, ஐம்பத்தாறு உள்துறைகளை உடையது என்பர் இலக்கண ஆசிரியர்கள். இத்துறை

களவ புலவர் கயமனார் மிகமிகத் தெளிவாகச் சொற்சுவை, பொருட்சுவை தோன்றப் பாடியுள்ளார்.

உடன்போக்கு நிகழ்ச்சியில் பெரும்பங்கு கொள்வார் மகளிரே ஆவர்; அம் மகளிர் தோழி, தலைவி, செவிலி, நற்றாய் என நால்வேறு வகையினராவர்; இந்நால்வகை மகளிரின் மன இயல்பினையும், அவர் ஒழுக்கத்தின் உயர் வினையும் உணர்த்தும் பகுதி, இவ்வுடன்போக்குப் பகுதியே யாம்; தோழியின் கடமையுணர்ச்சி, தலைமகளின் கற்புச் சிறப்பு, தாய்மார்களின் அன்புளமை அவ்வளவும் இங்கே தான் நன்கு படம்பிடித்துக காட்டப்படும்; மகளிர் கற்பே பொற்பெனக்கொண்ட மாண்புடை மனைவியாய், அறிவே உருவென வந்த தோழியாய், அன்பின் திருவுரு வாம் தாயாய் விளங்கவேண்டியவ ராதலின், அப்பண்பு களைக் குறைவறப் பெற்று விளங்கும் தமிழ்நாட்டு மகளிர் தம இயல்பினைத் தெளிய உணாதல் வேண்டும்; ஆகவே, கயமனார் போற்றும் தோழி, தலைமகள, தாய், செவிலி ஆகியோரின் பண்புகளை உணாந்து, உடன்போய், உயர்வு பெறுவோமாக!

தலைவனும் தலைவியும் ஒன்றுகலந்த அன்பினராய் வாழ உறுதுணை புரியும் தோழி, அவர்கள் அன்பு வாழ்க் கைக்கு உடன்போக்கு ஒன்றே வழியாம் எனத் துணிந்து, அருநிலையினை இருவர்க்கும் எடுத்துக்கூறி இசைய வைத் தாள். தலைமகன் போக்கிற்கு ஆவன முடித்துக்கொண்டு குறித்த நாளன்று குறித்த காலததில், குறிப்பிட்ட இடத் தில் வந்து சேர்ந்தான்; அவர்கள் வெளியேறுதற்காகக் குறிபபிட்ட காலம், ஊரில், மகளிர் துயிர்கடையும் இருள் நீங்கியும் நீங்காமலும் உள்ள வைகறைப் பொழுது, தலைவி வெளியேறுங்கால் தன்னை யாரும் அறிந்து கொள் ளாவண்ணம் தன் உருவினைக் கரந்துகொண்டாள்; நடந்து செல்லுங்கால், ஒலி எழுப்பித் தன் செலவினைப் பிறர் அறி யச் செய்யும் என்று அஞ்சித் தன் காற்சிலம்பினை நீக்கி னள்: அதையும் அன்றுவரை தான் ஆடி மகிழ்ந்த பந்தை

யும் ஒரிடத்தே வைக்கச் சென்றாள் ; அந்நிலையில் அவள் உள்ளம் அவனை அறியாமல் நெகிழத் தொடங்கிற்று.

"பொழுது புலர்ந்ததும், என்னோடு ஆடிமகிழும என் ஆயத்தார் அனைவரும வருவர் ; வந்து என்னைத் தேடுவர் ; என்னைக் காணுமல் அலைவர் ; அலைவார் கண்முன் இவை காணப்படும் ; இவற்றைக் கண்டு என் நிலையினை உணர்வர் ; உணர்ந்து, உணர்விழந்து, உளம் நொந்து அழுது நிற்பர் ; அந்தோ ! அபபோதைய அவர்கள நிலையினைக் காணவும் உள்ளம் நடுங்குமே !" என்று எண்ணினாள். அவ் வெண்ணம் தோன்றியவுடனே, அவள் கண்கள் அவனையும் அறியாமல் நீர் பல்கின ; தலைவியின் இச் செயல்களையும், அவள் உள்ளத தடிப்பினையும் தோழி உணர்ந்தாள் ; அவள உளளம சல்லென்று ; அவள் உளளமும கசிந்தது ; இவ்வாறு வருந்த வருந்த வெளியேறுவதினும், நிகழ்ந்தனவற்றைத் தாய்க்கும் பிறர்க்கும் உணாதது, மேல் நிகழக் கடவனவறறை மேற்கொள்வதே நன்று எனத துணிந்தாள் ; தலைவியை விட்டுத தலைவன்பால் சென்றாள

"ஐய ! நின்னொடுவரத் தலைமகளும் இசைந்தாள் ; போக்கிற்கு ஆவனவற்றையும் மேற்கொண்டாள் ; ஆனல் ; அவள் உளளம் வருந்தி வாடுகிறது ; அவள் கண்கள் அவனை அறியாது நீர் சொரிகின்றன ; இந்நிலையில், உடன்போக்கினை மேற்கொள்ள என் உள்ளம் அஞ்சுகிறது ; என் செய்வேன் ! ஆதலின், உடன்போக்கினைத் தவிர்வதே நலமாம" என்று கூறினாள் ; உடன்போக்கும் நின்றது.

"வைகுபுலர் விடியல் மெய்கரந்து, என்கால்
அரி அமை சிலம்பு கழீஇப், பன்மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்மோள்,
இவை காணெனாறும் நோவர் மாதோ !
அளியரோ ! அளியா !! என் ஆயத்தோரா எனை
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத் தன்றியும் கலுழ்ந்தனை கணேணை." (நற் : கஉ)

இப்பாட்டில், கற்பொழுக்கநெறி நின்ற நற்குடிப் பிறந்தாள் ஒருத்தி, காதல்வாழ்வினை விரும்பிப் பெற்று வளர்த்த தாயையும், பிறந்ததுமுதல் உடன் ஆடிப் பழகிய ஆயத்தாரையும் பிரிந்து செல்வதா? அல்லது, இவர்பால் கொண்ட அன்புடைமையால் இவரைப் பிரிய அஞ்சிக் காதல்வாழ்வினைக் கைவிடுவதா? எனத் துணிய இயலாது நடுங்கும் உள்ளத்தின் கடுமாற்றமும், உடன்போக்கே உறுதி பயப்பதாம எனினும், அது, தலைவியின் உளம் வருந்த நிகழ்தல் கூடாது என உணரும் தோழியின் உள்ளத்தின் உயர்வும் உணர்த்தப்பட்டுள்ள திறங்கண்டு மகிழ்க

உடன்போக்கு நின்றவிட்டது; அவர்கள் அன்பு வாழ்க்கையினைக் கமாக்கு உணர்த்தி அறத்தொடு நிற்க விரும்பினாள் தோழி: ஆனால், அதை எவ்வாறு உணர்த்துவது என அறியாது, உணர்த்தாம் உள்ளத்துணிவும் இன்றி மயங்கியிருந்தாள். இவ்வாறு சின்னாட்கள் சென்றன; கமர், வீட்டிற்கு வெள்ளையடித்தும் செம்மண்பூசி அழகு செய்வாராயினர்: தெருவில் புதுமணல் பரப்புவாராயினர்; தாழும் தேன்முதலாம இனியபீர் உண்டு மகிழ்வாராயினர்; கமரின் இச்செயல்கள் தோழிக்கு ஐயத்தை அளித்தன; அவள் உள்ளம் அவாகளின் இச்செயல்களுக்குக் காரணம அறியத் துடித்தது. அந்நிலையில், "எம் மகள மணவிழா ஏற்பாடுகள இவை" என அவர்களே கூறியும் விட்டனர்; அவர்கள் கூறுவதைக் கேட்டாள் தோழி, தலைமகள் இனியும சண்டே இருத்தல் அவள் கற்பிற்குக் கேடு பயக்கும் என உணர்ந்தாள்; எண்டு இருந்து அவா மேற்கொள்ளும் மணத்திற்கு இசையின், கற்புக் கெடுமை: இசையாது மறுத்தலோ இயலாது; ஆகவே, உடன்போக்கினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனத் துணிந்தாள்; பெற்றோரையும் பழகியோரையும் பிரிந்து செல்வதா? என்ற எண்ணம் அப்போது அவள் உள்ளத்தில் இடம் பெறவில்லை; தலைமகளின் கற்புநெறி வாழவேண்டும் என்ற எண்ணத்தின்முன் தாயன்பும், ஆயத்தார் நட்பும் நில்லாது மறைந்து மாய்ந்

தன ; ஒடினுள் தலைமகளிடம். "நம் பெற்றோர் வேற்று வரைவிற்கு வேண்டுவ மேற்கொண்டார் ; ஆகவே நீ தலை மகனுடன் சென்றுவிடுவதே இப்போது செய்ய வேண்டு வது ; அதற்காவனவற்றை இன்னே, இப்போதே மேற் கொள்வாயாக" என்று அவளை முடுக்குவாளாயினள்.

"நனவினை நறவின் சேறல் யாந்திப்,
புனவினை நலவில தருமணல் குவைஇப்,
'பொம்ம லோதி எம் மகள் மணன்' என
வதுவை அயாந்தனர் நமரே அதனால்,
புதுவது புனைந்த சேயிலை வெள்வேல்
மதியுடம் பட்ட மையணற் காவோ
....
. ...அவணெடு
....
அருஞ்சுர மேறல் அயாந்தனெ னாயின்."
(அகம் ...)

உடன்போக்கினை மேற்கொண்டே யாதல் வேண்டுமெனத் தோழி கூறிவிட்டாளேனும், தலைவியின் உள்ளம் அதனை ஏற்றுக்கொள்வதாகத் தோன்றவில்லை ; பிறந்த இடத்தைவிட்டுப் பிரிந்து செல்ல அவள் உள்ளம் விரும்பவில்லை போலும் ! இருந்தால் கற்புநெறிக்குக் கேடு வரும் என எடுத்துக்காட்டிய பின்னரும், அவள் போக்கிற்கு உடன்படா உள்ளமுடையளாதல் கண்டு தோழி வியப்புற்றாள் ; தலைமகளின் தயக்கத்திற்குக் காரணம் யாதாம் என எண்ணுவாளாயினள் ; உடன்போக்கு தலைமகனுக்கு உடன்பாடோ இல்லையோ என ஐயுறுகின்றனளோ என எண்ணினாள் ; உடனே, "அவன் போக்கிற்குச் சம்மதித்து விட்டான் ; வேலை மாசுபோகத் துடைத்து நெய்பூசிக் கையில் எடுத்துகொண்டான் ; அவன் ஏவலாளர்களும் புறப்பட்டு விட்டனர்" என்று கூறினாள்.

அதைக் கேட்டும் அவள் உள்ளம் உறுதி கொண்டதாகத் தோன்றவில்லை ; போவதற்கு வேண்டும் ஏற்பாடுகளைத்

தான் இன்னும் செய்யவில்லை; அவற்றைத் தன்னல் செய்யவும் இயலாது எனக் கருதித் தயங்குகின்றனளோ என எண்ணினள். உடனே, "நீ செய்ய வேண்டுவனவற்றையெல்லாம நானே செய்து முடித்துவிட்டேன்: நினக்கு வேண்டும் மாலைகளையும் தொடுத்துவிட்டேன்; இலை ஆடைகளையும் ஆக்கிவிட்டேன்" என்று கூறினள்; அப்போதும் தலைமகள் போக்கில் மாறுதல் நிகழக் காணேம்; ஒருகால், செல்லும்வழி இப்போது செலலுதற் கேற்றதாகாது; மிகவும் அருமை உடையது என வழி ஏதம எண்ணி வருந்துகின்றனளோ என எண்ணினள். "நிலம் நீரின்றி வற்றியிருந்த நிலைமை போய்விட்டது; பெருமழை பெய்துளது; மரங்கள் எல்லாம் பழுத்து உலர்ந்த பழைய இலைகளை உதிர்த்துவிட்டுப் புதிய தளிர்களைவிட்டுத் தழைத்துள்ளன; போகும்வழியில் உள்ள பொழில்கள், மலர்கள் நிறைந்து மணக்கின்றன; காடுகளும் இனிமை தருவனவாய் மாறிவிட்டன; பனிக்காலமும் நீங்கிவிட்டது; நிலவும் பால்போல ஒளிவிடத் தொடங்கிவிட்டது" என்று கூறி, "வழிச் செல்வோர்க்கு ஏதம் ஒழித்து இனிமை தருவதாக மாறிவிட்டது" என்றும் கூறினள்; அந்நிலையிலும அவள் அசைந்து கொடுப்பாளாய்த தோன்றவில்லை; தோழிக்கு ஆராய்ச்சி மேலும வளர்ந்தது. "நான் போய்விட்டால், நான் பேணிவளர்த்த மேடைமீதிருக்கும் மலர்ச் செடிகள் மங்கி மாண்பிழக்கும்; வயலைக கொடிகள் வாடும்: நொச்சிக் கதிர்கள் கவின் இழக்கும; அவற்றின் அந்நிலையினை அன்னை கண்டால், அலமந்து அழிவள்! அந்தோ! அன்னை அழ நான் பிரிவதா" என்று அவள உள்ளம் வாடுகிறது போலும்; அன்னை அன்பே அவளைத் தடைசெய்கிறது எனக் கருதினள்; உடனே, "அன்னை நின்னை நனி விரும்புகின்றாள் எனினும் நின் தாயினும் சிறந்தது நின் கற்பு என்பதை அன்னைமீது கொண்ட அன்பால் மறந்துவிடாதே; அவளை எண்ணி எண்ணே இருந்துவிடுதல் கூடாது" என அறிவுரை கூறிப் பார்த்தாள்; அப்போதும் தலைவி இசைவாளாய்த் தோன்றவில்லை.

அப்பால் தோழிக்கு ஓர் உண்மை புலப்பட்டது; தலை மகள் தன் அண்ணன்மார் ஆற்றல் கண்டே அஞ்சுகின்றாள்; அவர்களோ புலியெனப்பாயும் போராற்றலும், பெருஞ் சினமும் உடையார்; தம் உடன் பிறந்தாளை ஏதிலான் ஒருவன் உடன்கொண்டு சென்றுவிட்டான் என உணர்ந் தால், அந்நிலையில் அவர்களுக்குண்டாகும் சினத்தால் யார் யாாக்கு எத்துணை எதத்துணைக் கேடுகள் வந்துறுமோ என்று எண்ணியே அஞ்சுகின்றாள் என்றது அவள் உள்ளம். உடனே, "நீ கற்பு வாழ்க்கையினை விரும்புவை யாயின், நின் முன் பிறந்தார் ஆற்றலையும் எதிர்த்து நிற் கும் திண்ணிய உள்ளம் நினக்கு வேண்டும்; உறுதி உள் ளம் படைத்தார்முன் உறுபடை ஒன்றும் செய்யாது; ஆதலின், அண்ணன்மார் ஆற்றல் கண்டு அஞ்சாது புறப் படுக" என்று கூறி, அவளை இசைவித்து, உடன்கொண்டு சென்று தலைமகன்பால் ஒப்படைத்து, இருவரும் செல்வது கண்டு மனவருத்தமும் மகிழ்ச்சியும் மாறி மாறிக்கொண்டு மீண்டாள்

"வேலும் விளங்கின; வினைஞரும் இயன்றனர்;
சாரும் தையின; தழையும் தொடுத்தனம்;
நிலம் நீரற்ற வெம்மை நீங்கப்
பெயல்நீர் தலைஇ, உலைவைத்தலை நீத்துக்
குறுமுறி ஈன்றன மரனே; நறுமலர்
மேவந்தன போலத தோன்றிப் பலவுடன்
தேம்படப் பொதுளின பொழிலே: கானமும்
நனி நன்றுகிய; பனிநீங்கு வழிநாள்
பாலெனப் பரந்தரும் நிலவின் மாலைப்
போது வந்தன்று தூதே; நீயும்
கலங்கா மனத்தையாகி, என்சொல்
நயந்தனை கொண்மோ; நெஞ்சமர் தகுவி!
தெற்றி உலறினும், வையெலை வாடினும்,
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கி, நின் ஐயா

புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய்" (அகம் : உருக)

பொழுது புலர்ந்தது; தலைவி துயின்ற இடத்தில் அவள் இல்லை; மகளைக் காணுது செவிலி கலங்கினள்; செவிலி, தலைமகளின் நற்றாய்க்கு உயிர்த்தோழியாய் விளங்கிய உயர்வுடையவள்; தலைமகளின் உயிர்த்தோழியைப் பெற்றெடுத்த நற்றாயாம் பேறு பெற்றவள்.

"தோழிதானே செவிலி மகளே"
(தொல். பொருள். களவியல் : சூச)

தலைமகளுக்குப் பாலும் சோறும் ஊட்டி அவள் உடலை வளர்த்ததோடு, நல்லன எல்லாம் எடுத்துக்கூறியும், அறனல்லனவற்றின் அழிவினை அறிவுறுத்தியும் அவள் உள்ளுணர்வையும் வளர்த்த பெருமை உடையவள்.

"கழிவினும், வரவினும், நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும், அல்லவை கடிதலும்
செவிலிக்கு உரிய வாகும் என்ப."
(தொல். பொருள். கற்பு : கஉ)

இதனால் தலைமகளின் உண்மையான தாய் செவிலியே என உயர்ந்தோராற் பாராட்டவும் பெறுவாள்.

"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாய்எனப் படுவோள் செவிலி யாகும்."
(தொல். பொருள். களவு : சுசு)

இத்துணை உரிமை உடையளாய செவிலி, தலைமகளைக் காணுது கலங்கினள்; பின்னர்த் தலைமகளுக்குத் தலையாய தோழியாம் தகுதிப்பாட்டினை உடைய தன் மகள் வழி நிகழ்ந்தன அறிந்துகொண்டாள்.

மகள் எதிலான் ஒருவன்பின் சென்றுவிட்டாள் என்பதறிந்து பெருந் துயருற்றாள்; மகள் பிரிவு மாற்

றுணைத் துயர்தருவதாயிற்று ; அவளை நினைந்து அழுதாள் ; அரற்றினாள் ; அலறினாள் ; செவிலி உலகியல் உணர்ந்தவள் ; ஆதலின், தன் மகள் பருவம்வந்த மகளிர் மேற்கொள்ளும் ஒழுகலாற்றினையே மேற்கொண்டுள்ளாள்; எனவே, தவறில்லை என உணர்ந்தாள் ; என்றாலும் மகள் பால் கொண்டிருந்த அன்பு அவளுக்குப் பெருந்துயர் தருவதாயிற்று , மகளின் இளமையும், அவள் சென்ற வழியின் கொடுமையும் அவள கண்முன் மாறிமாறித் தோன்றி அவள் மனத்துயரை மிகுத்தன.

வீட்டில் தன்னோடு ஆடி மகிழும் இளமகளிரோடு கூடிப் பாடோ, அன்றிக் கழங்கோ சிறிதுநேரம் ஆடினாலும், உடலெலாம வேர்க்கத் தன்பால்வந்து, 'உடலெலாம் வலிக்கிறது, அன்னாய் !' என்றுகூறி அணைத்துக்கொள்ளும் அவள் இளமைக் காட்சி இவள் கண்முன் தோன்றும் ; அத்துணை இளமை உடையாள் கொடிய காட்டுவழியில் கால்கடுக்க நடந்துசெல்லும காட்சியும் அவள் கண்முன் தோன்றும் ; கண்கள நீர்நிறையும் இக் கொடுவழியைக் கடந்து செல்லும அத்துணை ஆற்றல் அவள் கால்களுக்கு எவ்வாறு வந்ததோ என்று எண்ணிவருந்துவாள் :

"வளங்கெழு திருநகர்ப் பந்துசிறிது எறியினும்
இளந்துணை ஆயமொடு கழங்குடன் ஆடினும்
'உயங்கினை று அன்னை ! என்மெய்' என்று அணைஇ
மயங்குவியர் பொறிந்த நுதலள் தண்ணென
முயங்கினள் விதியும் மன்னே , இனியே .....
என், சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லெகால் செல்லத் தாமே கல்லென.....
மைபடு மாமலை விளங்கிய சுரனே." (அகம் கள)

பொரி கலந்து சுவைமிக்க பால்நிறைந்த பொற்கலத்தைக் கையில் ஏந்திக்கொண்டு அவள்பின் ஓடி ஓடி உண்ணுமாறு வேண்டவும் 'இவ்வளவு பால் வேண்டாம ; இது மிகுதி ; இவ்வளவையும் என்னால் உண்ணல் இயலாது,'

என மறுத்துவிட்டு ஓடி மறையும் மகள் காட்சி மனக்கண் முன்வந்து நிற்கும். உடனே, நிழலும் நீரும் அற்றுப் போன நீண்டவழியில் விரைந்து நடந்துசென்று, நீர் வேட்கை மிகுந்து சுனைபல ஓடியும் உண்ணுநீர் காணுமல் வருந்தி, இறுதியில் சுனை ஒன்றில் வற்றிக் கலங்கலாகி, வெம்மையுற்றுக்கிடந்த சிறிது நீரைக் கண்டு மகிழ்ந்து, வேட்கை நீங்க விரும்பிக் குடிக்கும் காட்சி வந்துநிற்கும். இத்துணை அறிவும தெளிவும் அவளுக்கு எவ்வாறு வந்தனவோ என்று எண்ணி வருந்துவாள் :

"நிழலான்று அவிந்த நீரில் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின மறுகுபு வெந்த
வெவ்வெய கலுழி சுவ்வெனக் குடிக்கிய
யாங்கு வல்லுநள் கொல்தானே ஏந்திய
செம்பொற் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலவென உண்ணுள்
கோலமை குறுந்தொடித் தடக்கை மேனாளே."

(குறுந். 42)

மகள் இளமையும், அவள் சென்ற சுரத்தின் கொடுமையும் எண்ணித் துயருற்ற செவிலி, தன் மகளை உடன் கொண்டுபோய அவ் ஆண்மகன், 'கணையோர் அஞ்சாக் கடுங்கண் காளை'யாம் என்றும், 'சுடர்வாய் நெடுவேல்' அவன் கையில் உண்டு என்றும், அதனல், அவன் எதனலும் தொலைதல் இல்லா விடலையாவன் என்றும், அவன் இன்னுதலின், தன் மகளைக் காக்குந் திறனுடையான் எனவும் அறிந்ததும் சிறிது ஆறுதல் உற்றுள்.

அந்நிலையில், அறியாப்பருவத்தளாய தன் மகளைக் கொண்டுபோய்விட்டானே, மகள் ஏதிலான் ஒருவன்பின் சென்றுவிட்டாளே எனக் கோபமும், வருத்தமும் கொள்வதை மறந்தாள் ; தங்கள் காதலுறவினையும் கருத்தையும் எமக்கறிவித்தால், அவர்கள் மணத்திற்காம் வழிவகை

களைக் காண்பனே ; மணமுரசு முழங்க, ஊரார் எல்லாம் தங்கள் வீட்டு மணமெனக்கருதி விழாக்கொண்டாட மணம் நிகழும் ; அம் மணவிழாக்கண்டு, யானும் நற்றாயும் மகிழ்வோம் ; இவ்வாறு எல்லாரும் மகிழ மணஞ்செய்து உடன் கொண்டுபோகத் தவறிவிட்டனனே என்றும், சென்றவன், தளரும் இளமைபடர் பருவத்தாள் இவள் ; இவள் வருந்தா வண்ணம் கோடையின் வெம்மை நீங்கிக், குளிர்ந்தகாலத்தில் கொண்டு சென்றிருத்தல் கூடாதா ! மழை இல்லாமையால் கல்லும் உருகும் கடுமைதோன்றும் கொடிய இக் கோடையில் கொண்டு சென்றனனே என்றும் வருந்துவாளாயினள் ; மகளிடத்தும், மகள் காதலனிடத்தும் அவள் கொண்டுள்ள அன்புதான் என்னே !

"என்மகள் பெருமடம் யான்பா ராட்டத்,
தாய்தன் செமமல் கண்டுகடன் இறுப்ப,
முழவுமுகம் புலரா விழவுடை வியனகர்
மணனிடை யாகக் கொள்ளான், கல்பகக்
கணமழை தூறந்த கான்மயங் கழுவம்
எளிய வாக மாஅயோட்கு எனத்
தணிந்த பருவம் செல்லான்." (அகம் : 8-கூ)

அவள் அன்பு அம்மட்டோடு நிற்கவில்லை. 'என் மகள் மழையும் நிழலும் இல்லா மலைவழியில் செல்கின்றனளே ; அந்தோ ! அவற்றின் கொடுமையினை எங்ஙனம் ஆற்றுவள்? அவள் சென்றவழியில் ஞாயிறு காயாது மறையாதோ? மரங்களெல்லாம் தழைத்து நிழலைத் தாராவோ ? மலைவழிகளில் மணல் பரவாதா ? மழைபெய்து வழி தண்ணெனக் குளிராதா?' என்று ஏங்கினள் ; 'அவள் சென்றவழி அவ்வாறே இனிதாக அருள்புரிவாயாக' என ஆண்டவனை நோக்கி வேண்டினள் :

"ஞாயிறு காயாது, மரம் நிழல்பட்டு,
மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின்றுக ! நம் நீத்துச்

சுடர்வாய் நெடுவேல் காளையொடு
மடமா அரிவை போகிய சுரனே.” (குறுந்: ஈஎஅ)

ஊரிலும் சேரியிலும் நின்று இவ்வாறு புலம்பிய செவிலி, மேலும் இவ்வாறு புலம்புவதாற் பயனில்லை; நடப்பன நடந்துவிட்டது; இனிமேல் நிகழக்கடவனவற்றை ஆய்ந்து மேற்கொள்வதே அறிவுடைமையாம் எனத் துணிந்தாள்; புணர்ந்துடன் போகிய மகளையும், அவள் காதலனையும் மீட்டுக்கொணர்ந்து மணஞ்செய்து மகிழ்ந்து மனையறப்படுத்தலே மாண்புடைமையாம் என எண்ணி அவர்களைத் தேடிக்கொணரும் பணியினை மேற்கொண்டாள்; அவர்கள் சென்ற சுரநெறியில் நடக்கலாயினள்; வழியில் வருவாரை எல்லாம் அவர்கள்பற்றி வினவினள்; தன் ஆற்றுமையால் ஆண்டு உறையும் மான் முதலாம் விலங்குகளிடத்தும், தன் மகள் நிலை எடுத்துக்கூறி, ‘அவரைக் கண்டீரோ’ எனக் கேட்டுக்கொண்டே சென்றனள்.

எதிரே, தன் மகளை போலும் பெண்ணொருத்தியும், அவள் காதலன்போன்ற ஓர் ஆண்மகனும் கூடி வருவாரைக் கண்டாள்; சேய்மைக்கண் வந்தவழி அவர்கள் தம்மவர்களே என எண்ணி மகிழ்ந்தாள்; ஆனல் அண்மைக்கண் நின்று கண்டவழி அவர்கள், அன்னரல்லர் என அறிந்தாள்; மகிழ்ச்சி மறைந்தது; ஆனல், அவர்கள் இவ்வழியில் வருகின்றனர் ஆதலின், எதிரில தன் மகளைக் கண்டிருப்பர், அவர்கள் வழியாகத் தன் மகள் உள்ள இடமும் நிலையும் உணர்ந்துகொள்ளலாம் என உணர்ந்தாள்; அவ் ஆண் மகனை அணுகினள். ‘மிகச்சேய இடத்தினின்றும் வரும் ஆண்மகனே! நின் அருகே நிற்கும் இவளைக் கண்டவுடனே, நேற்று இச்சுரவழியே எதிலான் ஒருவனுடன் புணர்ந்து போகிய என் மகள் நினைவு உண்டாயிற்று; கண்கள நீர் நிறைந்தன; அவள் தாயை உளர் இது; அவளை ஈன்றெடுத்தவள் யான்; சென்றவள் இவளேபோன்றிருப்பாள்; வழியில் அவளைக் கண்டிருபபீராயின், அவள்பற்றி அறிந்தன எல்லாம் உரைக்கவேண்டுகிறேன்; உங்களை அவள் தந்தை

யின் இவ்வூரில் விருந்தினராக ஏற்று உபசரிப்பேன்; உங்களுக்கும் பெருமபுகழ் உண்டாம்':

"சேயின் வளருடம் மதலலி!.....
மூன்ளுள் உம்பர்க் கழிந்த என்மகள்
கண்பட டீராழ்ந் தன்றே; தந்தை
தன்னூர் இடவயின் தொழுதேன் .....
வாஅந்திலஙகு வாலெயிற்றப், பொலிந்ததார்ச,
சில்வளைப், பல்கூந்தலளே அவளே.
மையணல் எருத்தின், முன்பின், சடக்கை,
வல்வில் அம்பின, எய்யா வண்மகிழ்த்
தந்தை தன்னூர் இதுவே:
ரன்றேறன் யாதனை; பொலிகநும் பெயரே"

(நற்றிணை · ககஉ)

செவிலியின் நிலை இது; இனி, தலைமகளைப் பெற்ற தாயின் நிலையினையும சிறிது காண்பாம். தன் மகள் செயல எலலாம் செவிலியால் அறிந்த நற்றாயின் துயருக்கு ஓர எல்லை உண்டாமோ; எதிரே மகள் வளர்த்த வயலைக் கொடியினைக் கண்டாள; அது நீர்வார்ப்பாரின்றி வாடுவதைக கண்டாள்; தன் மகள், தன் கைவளை ஒலிக்குமாறு நீர் மொண்டுவந்து, தாய் தன் மகளை அன்போடு நோக்குவாள் போல், அவ்வயலை நோக்கி வேண்டும் நீர்வார்த்து வளர்த்த வகைகளை நினைந்தாள். 'அந்தோ வயலையே! தன்னைப் பேணி வளர்த்த என்னை மறந்து, ஊரும் சேரியும் ஒருங்கு அழ, எதிலாரேறுகூடி, நாடும் தேயமும் நனி பலகடந்து சென்ற வன்கண்மை உடையாளை வளர்த்த தாய்மார் வருந்திக் கலங்குவதேபோல் நீயும் கலங்குகின்றனை; இனி நின்னை நீர் ஊற்றிப் புரப்போர் எண்டு யாருளர்?' என்று கூறி அதன் அணித்தே நின்று அழுதாள்.

"தற்புரந் தெடுத்த எற்றுறந்து உள்ளாள்
ஊரும் சேரியும் ஒராங்கு அலர்எழக்

காடும் காவும் அவனெடு துணிந்து
நாடும் தேயமும் நனிபல இறந்த
சிறு வன்கணணிக்கு எர்தேறுவனென
வாடினை வாழியோ வயலை !.....
ஆரீர ஊட்டிப் புரப்போர
யார்மற்றுப் பெறுகுவை அளியை நீயே.'' (அகம் · நஅந)

தலைமகளை வளர்த்த அருமையினை நினைத்தாள் ; தன் ஆயத்தாரோடு சிறிது ஆடிய உடனே, வாடியிருக்கும் அவள் உடல் என உட்கொண்டு பாற்சோறு நிறைந்த கிண்ணதனைக் கையிலேந்தி அவள் பின்சென்று ஊட்டத் தொடஙகி, அவள் மறுபபதுகண்டு, 'எனக்காக ஒருகவளம்; அப்பாவிற்காக ஒரு கவளம' என்று அன்புரைகளை அள்ளி அள்ளி வீசிக்கொண்டே ஊட்டி வளர்த்த முறைகளை எண்ணினாள் ; அவ்வாறு பிறந்தது முதல் சிறநதன தந்து வளர்த்த என்னை மறந்துபோயினள எனச் சினநது அவளை மறப்பதைவிட்டு என் ஏழை நெஞசம், 'வலிய பாலை வழியில் நடக்கும் ஆற்றல் அவள் கால்களுக்கு உண்டாமோ?' என எண்ணி வருந்துகின்றதே என் செய்வேன் என்று வருந்தினாள்.

''பால்பெய வள்ளம் சால்கைபற்றி
'எனபா டுண்டனை யாயின், ஒருகால்
நுந்தைபாடும் உண்' என்று ஊட்டிப்,
பிறந்ததற் கொண்டும சிறந்தனை செய்து யான்
நலம்புனைந்து எடுதத என் பொலந்தொடிக் குறுமகள்
அறனி லாளனெடு இறந்தனள் இனி யென
மறந்தமைந் திராஅ நெஞ்சம் நோவென்.'' (அகம: உகக)

மகளைப்பெற்ற தன் வருத்தத்தினை எண்ணியகாலை, தன் மகளைக் கொண்டுசெல்லுமை தாயின் நினைப்பு அவளுக்கு உண்டாயிற்று ; என் துயரிற்குக் காரணம், என் மகள் பிரிவு ; என் மகள் பிரிவிற்குக் காரணம் அவள் தன் காதலன்பால்கொண்ட அன்பு ; இவ்வாறு என் மகள் பிரிவிற்கு இவன் காரணமாயினனே என எண்ணியவுடனே தலைவன்

மாட்டு மாறுச் சினம் பிறந்தது; அவனைப் பழிக்கத் துணிந்தது அவள் நா; ஆனல் அவனைப் பழிப்பதால் உண்டாகும் ஏதம் தன் மகளையும் சாருமே என எண்ணினுள்; உடனே அவனைப் பழிப்பதற்குமாறுக, இத்தகைய ஆண்மகனைப் பெற்றுளே அவளைப் பழிக்கவேண்டும் என்று எண்ணிற்று அவள் உள்ளம்; உடனே மகளை இழந்து வருந்தும் என்னைப்போன்றே, வன்கண்காளையை ஈன்ற தாயும் பெருந் துன்புறுவாளாக என்று பழித்தாள்.

"எம் போல்
பெருவிதுப்புறுக மாதோ! எம்மில்
பொம்ம லோதியைத் தன்மொழிக் கொளீஇக்
கொண்டுடன் போக வலித்த
வன்கட் காளையை ஈன்ற தாயே." (நற். உகஉ)

சென்ற தன்மகளை, அவள் காதற் கொழுநனேடு அழைத்துவந்து மணமுடித்து மகிழ்ந்து காணவிரும்புகின்றுள்; அந்நிலையில் ஒருத்திவந்து, தன் மகனும், நின் மகளும், தன் மனைக்கே வருவர் என்று கொண்டு, தலைமகனைப் பெற்றதாய், வீட்டுச் சுவரில் செம்மண் பூசி, முன்னிடத்தே மணலைப்பரப்பி, மாலைகளைத் தொங்கவிட்டு வரவேற்பிற்கானவற்றை மகிழ்ந்து மேற்கொண்டுளாள் என்று கூறினுள்; ஆனல் தலைமகள் நற்றாய்க்கு, அவர்களைத் தன் வீட்டிலேயே முதலில் வரவேற்க வேண்டும் என்ற விருப்பம்; ஆனல், மகளை உடன் கொண்டுசென்ற அவ் வாண்தகை, அவளை முதலில் தன் வீட்டிற்குக் கொண்டு செல்வனே? அன்றித் தலைமகள் வீட்டிற்கு அழைத்துவருவனே? அதை யாரும் அறியார்; அறிந்து கொள்ளத் துடித்தது நற்றாய் உள்ளம்; ஆனது அறிந்து கூறவல்ல வேலனை அழைத்தாள்; தலைவன் கருத்து யாதாம் என்பதை அறிந்து கூறுமாறு அவனை வேண்டினுள். நற்றாயின் நிலை இது.

"அருஞ்சுரம் இறந்த என் பெருந் தோட்குறுமகன்
திருந்துவேல் விடலையொடு வரும் எனத் தாயே

புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை காற்றி
உவந்தினிது அயரும் என்ப ;.....
ஆகுவதறியும் முதுவாய் வேல !
கூறுகமாதோ நின் கழங்கின் திட்டம் .....
எம்மனை முந்துறத் தகுமோ ?
தன்மனை உய்க்குமோ ? யாதவன் குறிப்பே.?"

(அகம் : ககூ)

இவ்வாறு உடன்போக்கினை விளக்க மேற்கொண்டு, அக்காலப் பெண்மணிகளின் உள்ளத்தின் உயர்வைப் புலவர் கயமனார் படம் பிடித்துக்காட்டிய திறம்கண்டு மகிழ்வோமாக.

ச. கல்பொரு சிறுநுரையார்

புதுப்புனல்வரும் ஆற்றின் அழகிய காட்சியைக்கண்டு மக்கள் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளுவதைக் காண்கிறோம்; உள்ளுறுப்புக்களின் இயல்பு காலவேறுபாட்டால் மாறுபாடுறுவதில்லை; ஆற்றில் வெள்ளம் வரும காட்சியினை, இன்றே போல் அன்றும் மக்கள் கண்டு மகிழ்ந்தனர்; மகிழ்வதோடு நில்லாது, அவ் வாறுகளில் புதுப்புனல் விழாக் கொண்டாடியும மகிழ்ந்தனர; இயற்கைக் காட்சிகளோடும், அவை தரும் இன்பத்தோடும இரண்டறக் கலகக்கும இயல்பினராய பழந்தமிழ்ப் புலவர்கள், அத்தகைய புனல்விழாவினைக் கண்டு மகிழ்ந்தனர் எனல் மிகை. பண்டைக்காலத்தே நடைபெற்ற இத்தகைய ஒரு விழாவைக் காணப் புலவர் ஒருவர் சென்றிருந்தார்; ஆற்றில் நீர பெருகிவரும் வகையினைக் கண்டு களித்துக்கொண்டிருந்தார; ஆற்றுநீர் தான் ஓடிவரும வழியில் கிடந்த பொருள்களை எல்லாம வாரிக்கொண்டு வருங்காட்சியைக் கண்டிருந்த புலவர் கண்கள் ஆற்றின் கரைப்பக்கம் சென்றன; ஆங்கே, அவவாற்று நீர் கொணர்ந்த மலை போல் பருத்த நுரைத்திரள் ஒன்றைக் கண்டார்; அஃது, ஆற்றுநீர் அலைக்குந்தொறும் அலைக்குந்தொறும், ஆற்றின் கரைக்கண் அமைந்த கல்மீது மோதிமோதி மீள்வதையும், அஃது அவ்வாறு மோதுந்தொறும் மோதுந்தொறும், அதன் அளவு சிறிது சிறிதாகக் குறைவதையும் கண்டார்; கண்டுகொண்டிருக்கும்போதே சிறிது நேரத்திற்குமுன் மலைபோல் பருத்திருந்த அந் நுரைத்திரள் அடியோடு அழிந்து இருந்த இடமும் தெரியாவாறு மறைந்துவிட்டது. நீர மேட்டுநிலத்தினின்றும் பள்ளம நோக்கிப் பாயுழி, அதன்கண் சிறியவும் பெரியவுமாய நீர்க்குமிழிகள் பல தோன்றும்; அந்நீர்க் குமிழிகள் பலவும் ஒன்றுதிரண்டு ஓர் உருப்பெற்றவழி, அவை நுரை என்ற பெயர் பெறும். நீர்க்குமிழிகள் தோன்றிய உடனே, தோன்றிய இடத்திலேயே, அழிப்பார் இல்லாமலே அழியும் இயல்பின; நுரைத்திரளில், நீர்க்குமிழிகள் பலகூடி இணைந்து

நின்றமையால் சிறிதுநேரம் அழியாது இருந்தன ; நுரை கல்லில் மோதியவழி, குமிழிகள் சிதறித் தனிநிலை உற்று விடும். ஆதலின், அந்நுரைத்திரள் உருத்தெரியாமல் அழியலாயிற்று.

ஆற்றின் இத்தகு காட்சியைக் கண்டு வீடுதிரும்பிய புலவர், தலைமகன் பிரிவுத்துயரால் வருந்தும் தன்னை நோக்கி ஆற்றியிருக்க வேண்டும் என அறிவுரை கூறும் தன் தோழிமீது சினம்கொண்ட தலைமகள் ஒருத்தி உரைக்கும் உரை அமைந்த அகத்திணைச் செய்யுள ஒன்றைப் பாட எண்ணினர், எண்ணினர் கண்முன் அவர் கண்ட ஆறும், ஆற்றில் ஓடிவரும் பெருநீரும், அந்நீர் அடித்துக் கொணருபு நுரைத்திரளும், அந் நுரைத்திரள்கள், ஆற்றின்கரையில் மோதி மோதி அழிந்து போவதும் வந்து நின்றன; அவர் பாடிய பாட்டினுள் அனைவையும் இடம் பெற்றுவிட்டன.

கல்வி, பொருள், புகழ் இவற்றுள் ஒன்று குறித்துக் கணவன் வேற்றுநாடு சென்றுவிட்டான்; சென்றகாலை, 'இன்னகாலத்தே மீண்டு வருவேன்', என அவன் குறித்துச் சென்ற காலமும் கடந்துவிட்டது, ஆனால் அவன் வந்திலன். அவன் மனைவியோ அவனைப் பிரிந்து வாழ்ந்தறியாப் பேரன்பினளாவள்; அவள அவனைக் காணமாட்டாது கடுந்துயர் உற்றாள்; அவள உள்ளத்துயர், உடல் உறுப்புக்கள் வழியாக உருவுகாட்டத் தொடங்கி விட்டது; நாட்கள் செல்லச் செல்ல அவள் உடல்நலம் சிறிதுசிறிதாகக் குன்றத தொடங்கிவிட்டது; இந்நிலை மேலுமம நீடித்தால் அவள் இறந்துபடுவது உறுதி; இந்நிலையினை அவள் உயிர்த்தோழி உணர்ந்தாள்; 'இவள் இவ்வாறு அவன் பிரிவையே எண்ணி எண்ணித் துயர் உறுவளாயின், இவள் உடல்நலம் கெடுமே; உடல்நலக்கேடு உயிருக்கு நன்றன்றே', என்ற கவலை அவளுக்கும் உண்டாயிற்று; தலைமகளிடம் சென்றாள்; 'அவர் பிரிந்து விட்டமையால் உண்டாம்துயர் எத்துணைப் பெரிதாயினும்

அதுகுறித்து வருந்தி அழுதுகொண்டிருப்பது அழகன்று; ஆற்றியிருப்பதே அறிவுடையோர்க்கு அறமாம்' என்ற அறம் நிறைந்த அறிவுரை கூறினாள்.

தலைமகள் அது கேட்டாள்; "இவள் நம் உயிர்த் தோழி; நம் உள்ளம் உணர்ந்தவள்; காதலின் ஆற்றலையும், காதல் இயல்பையும் உணராதவள் அன்று; கணவரைப் பிரிந்த பெண்டிர்படுங் கொடுந்துயரை உணர்ந்தவள்; இவளே இவ்வாறு கூறுகின்றனளே" என்று எண்ணினாள். அவள்மீது பெருஞ்சினம் பிறந்தது; பிறரை நோக்கிக் கூறுவாள்போல், தோழியின் உள்ளத்தே படுமாறு, காமநோயைப் பொறுத்துக்கொள்ள வேண்டும், பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்; அவ்வாறு கூறுகின்றவர்கள் ஒன்று காமம என்பது என்ன என்றே அறியாப் பேதையராதல் வேண்டும்; நாணையும், நல்லாண்மையையும் அழிக்கவல்ல ஆற்றலுடையது காமம்; கணவரைப் பிரிந்து தனித்துறையும மகளிரைத் தெறாஉம் இயல்புடையது காமம என்ற உண்மையினை உணராதவராதல் வேண்டும்; அல்லது, அத்தகைய ஆற்றல்வாய்ந்த காமநோயினைப் பொறுத்துக் கொள்ளவல்ல பேராற்றலைத் தாம் பெற்றவராதல் வேண்டும்; அதனால்தான், 'காதலென்பது என்? பூதமோ? பேயோ? வெருட்டினால் நாய்போல் ஓடிடும்; வெருவில் துரத்தும் குரைக்கும தொடரும் வெகுதாலே' என்றெல்லாம் உரைக்க முன்வந்துவிடுகின்றனர்; அத்துணை ஆற்றல் எனக்கில்லை; காதலரைச் சிறிதுபோது காணாதுவிடினும் உள்ளம் உறுதுயர் கொண்டுவிடுகிறது; உளைதுயருக்கேற்ப உடல் நலனும் சிறிது சிறிதாகக் குன்றத் தொடங்கிவிடுகிறது; யான் என் செய்வேன்; யாரொடு நோகேன்; யார்க் கெடுத்துரைப்பேன்" என்று கூறுவாளாயினள்

இப்பொருள் அமைந்த பாடலைப் பாடிய புலவர், காதலரைக் காணமாட்டாக் கடுந்துயருடையாளொடு தலைமகளின் உடல்நலம் சிறிதுசிறிதாகக் கெட்டு ஒழிவதற்குப் பெருநீரில் மிதந்துவந்த சிறுதுரைத்திரள் ஒன்று,

கரைக்கண் இருந்த கல்லின்மீது மோதி மோதிச் சிறிது சிறிதாக அழிந்துபோவதை உவமைகாட்டிய சிறப்பால் கல்பொரு சிறுநுரையார் என்ற உயர்பேர் பெயர் பெற்றுப் பாராட்டப் படுவாராயினர்.

"காமம் தாங்குமதி என்போர்தாம் அஃது
அறியலர் கொல்லோ? அணைமதுகையர் கொல்;
யாம் எம்காதலர்க் காணுமாயின்,
சென்றுணி பெருகிய நெஞ்சமொடு பெருந்தீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லாகுதுமே." (குறுந்: உகூ0)

ரு. கவைமகனர்

தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் ஒப்ப உயர்ந்த காதல் உடையராய்க் களவொழுக்கம் மேற்கொண்டிருந்தனர்; அவர்கள் தம் களவொழுக்கத்திற்கு உறுதுணை புரிந்துவந்தாள் தலைமகளின் உயிர்த்தோழி. தலைமகளின் பருவம் அறிந்து காக்கவேண்டும் பண்பாடுணர்ந்த தாய், தலைமகளை வீட்டைவிட்டு வெளியேறுவதை தடைசெய்து விட்டாள்; இதனால், தலைமகளைத் தாம் விரும்பிய இடத்தில் விரும்பிய காலத்தில் கண்டு மகிழ்தல் தலைமகனுக்கு இயலாது போயிற்று. இந்நிலையினைத் தோழி தலைமகற்குக் உணர்த்தி, 'தலைவி இனி நினக்கு அரியள்' என்று கூறினாள். தலைவன், தலைவி மாட்டுகொண்டுள்ள அன்பு அளவிறந்தது; அவளைக் காணாது ஒருநாள் வாழ்தலும் அவனால் இயலாது; ஆதலின், அவன் தலைவியை நோக்கி, 'அவ்வாறாயின், இரவிலே எவரும் அறியாவண்ணம் உங்கள் வீட்டிற்கு வந்து செல்வதை மேறகொள்வேன்' என்று கூறினான்.

தலைவன், தலைவி உறையும் ஊரினன் அல்லன்; வேற்றூர் வாழ்வோன்; இருவர்க்கும் இடைப்பட்டவழி ஏதமில்லாப் பெருவழியன்று; கழிபல கடந்தே வருதல் வேண்டும்; அக்கழிகளோ என்றும வற்றுதல் அறியா நீர்வளம் உடையன; ஆழமிக்குக் கருநிறம பெற்ற கழிகள் அவை; முதலைகள் பெருங்கூட்டமாய் வாழும் அவற்றில்; முதலைகளுள் ஆண் முதலைகள் ஆற்றலிற் சிறந்தன; தம் வளைந்த கால்களைக் கொண்டு வழிவரு வாரைக் கவ்வி ஈர்த்துக் கொல்லும் இயல்புடையன; முதலைகளின் இக்கொடுமை அறிந்து அவ்வழியே செல்ல எவரும் அஞ்சுவர்; இத்தகைய கொடுமைமிக்க வழியிலே அவன் வருதல் வேண்டும்; இதை உணர்வாள் தோழி. "தலைவன், கொடுமை மிக்க வழியிலே, இரவிலே வரத் துணிகின்றான்; அவன் தலைவி மாட்டுக் கொண்டுள்ள பேரன்பே இதற்குக் காரணம்; இத்தகைய அவன் அன்பை

மதியாது, அதற்கு ஊறுசெய்து 'வாராதே' என அவனை விலக்குதல் கூடாது" என்றும் உணர்ந்தாள்; ஆனல் தடைசெய்யாது விடினே, அவன் இரவில் வருதலே வழகக மாகக் கொள்வன்; தலைவன் பேராற்றல் வாய்ந்தவனே எனினும், யானைக்கும் அடிசறுக்கும் என்ப; ஆதலின், தவறி அவனுக்கு இடர் உண்டாயினும் உண்டாம். எனவே, அவன் இரவில் வருதலைத் தலைமகள் விரும்புவாள் அல்லள்; அவன் வரும் வழியின் ஏதம்கண்டு வருந்து வாள் ஆகவே, தலைவன் விரும்புமாறு அவன் இரவு வருகைக்கு வரவேற்பளித்தல் கூடாது எனத் துணிந்தாள்.

துணிந்த தோழி தலைமகனை நோக்கி, "தலைவ! நீயோ, நின் அன்புடைமையால் ஆற்றின் அல்லல் கண்டும் அஞ் சாது வரத்துணிகின்றனை; அதுதகைய அன்புடைய நின்னை 'வாரற்க' என்று கூற என் உளம் அஞ்சுகிறது; ஆனல், அவளோ, நின் அன்பின் ஆழத்தையோ, ஆற்ற லின் பெருமையினையோ அறியாளாய், கொடியவழியில் இரவில் வருதலை எண்ணி எண்ணி வருந்துகிறாள்.

"அவள் வருத்தம் மிகுமாறு 'வருக' என்று கூறவும் என் உளம் அஞ்சுகிறது; 'வாரற்க' என்று கூறின் நின் உள் ளம் வருந்துமே என்றும் அஞ்சுகின்றேன்; 'வருக' என்று கூறினல் அவள் உள்ளம வருந்துவது கண்டும் அஞ்சு கின்றேன்: என் செய்வதென்று அறியாது விழிக்கின் றேன்; நின் அன்பின் பெருமையை, நின் ஆற்றலின் சிறப்பை அவளுக்கு அறிவுறுத்தி, நின் வருகையினை விருமபியேற்குமாறு செய்யலாமெனிலோ, அவள் நீ வரும் வழி ஏதம் கண்டுகொண்ட அச்சம்தவிர வேறு எதையும் அறியும் அறிவுடையளாய்த் தோன்றவில்லை.

"அறிவற்றநிலையில் உள்ள அவளைக் காரணங்காட்டித் தெளிவித்தல் இயலாது; காரண காரியங்களை அறிந்து தெளியும் அறிவு இப்போது அவள்பால் இல்லை; ஆகவே 'வருக' என நினக்கு இசைந்து, அதை ஏற்றுக்கொள்ளு மாறு அவளிடம் கூறுதல் இப்போது இயலாது.

"அவளைக் காணமாட்டாமையால் நினக்குமட்டுமே வருத்தம் உண்டு என்று எண்ணற்க. நின்னைக் காணுது வருந்தும் வருத்தம் அவளுக்கும் உண்டு; நின்னைக் காணுது நெடிதுநாள் வாழ்தல் அவளாலும் இயலாது; அவள் நின் வருகையினை விரும்பாமைக்குக் காரணம், நின் பால் அன்பில்லாமையால் அன்று; வரும் வழியின் கொடுமைகண்டு அஞ்சியே அவள், 'வாரற்க' எனக் கூறுகின்றாள்.

"நின்னால் அன்பு செய்யப்பட்டாளின் வருத்தத்திற்கு நின் செயலே காரணமாக உளது; நின்னால் அன்பு செய்யப்பட்டாள் வருந்த நடந்துகொள்வது நினக்கு நன்றன்று; அது நின் அன்புடைமைக்கு அழகாகாது; ஆகவே, அவள் வருத்தம் கண்டாவது நின் வருகையினைக் கைவிடுவது நன்று; 'பகலிலும் வருதல் இயலாது; இரவிலும் வருதல் கூடாது என்கின்றனை; அவ்வாறுயின் அவளைக் காணல் இயலாது போகுமே; அவளைக் காணுமல் எங்ஙனம் ஆற்றி வாழ்வேன்' என்று ஏக்கம் கொள்ளற்க. இரவில் வருதலை விடுத்து விரைந்து வரைந்துகொள்வதற்கான வழிவகைகளை எண்ணித்துணிக; வரைந்துகொண்டால், இருவர் வருத்தமும் ஒருங்கே ஒழியும்; ஒன்றிய அன்பினராய் ஒருங்கிருந்து வாழலாம்" என்றுகூறி, விரைவில் வரைந்து கொள்வதன்றி வேறுவழியில்லை என்ற எண்ணம் தலைமகன் உள்ளத்தில் உறுதியாகத் தோன்றுமாறு செய்து, இருவர் துயரும் ஒழிய, இருவரும் இடையீடில்லா இன்பவாழ்வில் வாழ்வதற்கான வழிவகைகளை வகுத்துவிட்டாள்.

தலைமகன், அன்புடையன், ஆற்றலுடையன் என்பதை ஏற்றுக்கொண்டு, அதேநிலையில், 'நின் அன்புடைமையால் அறிவிழந்துவிட்டாள் தலைவி' என்று கூறும் முகத்தான், அவள் அன்பின் மிகுதியினையும் எடுத்துக் காட்டி, 'அறிவற்றவள் அவள் ஆகவே, அவளுக்கு ஏற்பன கூறமுடியவில்லை; ஆகவேதான் நினக்குக் கூறுகின்றேன். 'வாரற்க' என்று கூறுவாள் போல் கூறி, அவன் ஆசையை

அடக்கி, அரியவழிகளையும் அஞ்சாது கடக்கும் ஆற்றலும் துணிவும் உடைய ஆண்மகனாகிய அவனை வெற்றிகொண்டு, அவர்கள் இருவரும் அறவாழ்வு வாழத் துணைபுரியும் தோழியின் அறிவுடைமையினையும், கடமை யுணர்ச்சி யினையும் கண்டு மகிழ்க :

" கொடுங்கால் முதலைக் கோள்வல் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி நீந்தி, நீ நின்
கயனுடைடமையின் வருதி, இவள்தன்
மடனுடைடமையின் உயங்கும்; யான் அது
கலை மக நஞ்சுண் டாஅங்து
அஞ்சுவல் பெரும! என் நெஞ்சத்தானே."

(குறுந் : ௹௨ச.)

இப்பாட்டில், தலைவன், தலைவி இருவரின் உள்ளத் துடிப்பினையும் உணர்ந்துள்ளமையால், எதுவும் செய்ய மாட்டாது, வருந்தும் தன் நிலைக்கு, இரட்டைக் குழந்தை களை யுடையாள் ஒருதாய், அவ்விரு குழந்தைகளும் ஏக காலத்தில் நஞ்சுடைப் பொருளை உண்டக்கால், இந்தக் குழந்தையைக் கவனிப்பதா? அந்தக் குழந்தையைக் கவனிப்பதா? நஞ்சுதீர் மருந்தை இந்தக் குழந்தைக்கு முதலில் அளிப்பதா? அந்தக் குழந்தைக்கு முதலில் அளிப் பதா? என அறியாது துடிக்கும் தயர்நிலையினை உவமை காட்டித் தன் உள்ளத்துடிப்பைத் தோழி ஒருவாறு உணர்த்தியுள்ளாள்; இருவரில் ஒருவர்பாற் சென்ற உள்ளம் இன்றி, நடுவுநின்ற நல்நெஞ்சினராய் கடமை யுணர்ச்சி கொண்டு வாழும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இத்தகைய போராட்டம் உருப்பெறுதல் உறுதி. இத் தகைய உள்ளப் போராட்டம் உடையவரே, உண்மையில் உயர்வுடைய மக்களாகவும் மதிக்கப் பெறுவர்.

இவ்வாறு இருவர் நிலையினையும் உணர்ந்து, இருவர்க் கும் ஏற்றதொருவழியைக் காணல் எத்துணை அரிய செயல் என்பதை, மாறுபட்டார் இருவர், ஒருவர் உள்ளத்தை

ஒருவர் உணர்ந்து, இருமையில் ஒருமையுண்டு என உணரவைக்கும் செயல், பகைத்துப பெரும்படைகொண்டு களத்தே நிற்கும் காவலர் இருவரிடையேயும் மாறி மாறிச் சென்று, அவர் மன இருள் போக்கி மாறுபாட்டை நீக்க முயலும் அறிவுடையோர் செயல்போல் அருமையுடைய தாம.

“ இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
விசையிடை நின்ற சான்றோர் போல
இருபேர் அசசமோடு யாணும் ஆற்றலேன் ”
(குறிஞ்சிப் பாட்டு. உவ - கூ)

என்றுகூறி விளக்குகிறாள் மற்றொரு தோழி.

இத்தகைய அறிவுடைய தோழியின் உள்ளத் துடிப்பினை உள்ளவாறு உணர்த்த, தான்பெற்ற இரட்டைப் பிள்ளைகள் ஒரேகாலத்தில் நஞ்சுண்டமை அறிந்து, அது தீர்க்கும் வழிவகை காணத் துடிக்கும் தாயின் உள்ளத் துடிப்பை உவமை கொண்ட அருமை அறிந்து, அப் பாடலைப் பாடிய புலவர்க்குக் கவைமகனார் என அவ்வுவமையினையே பெயராக ஆக்கி மகிழ்ந்த அறிவுடையோர்க்கு அறிவுடை உலகம் தலைவணங்கி வாழ்த்து அளிக்குமாக.

ஊ. காலெறி கடிகையார்

மணந்து மனைவியோடிருந்து மகிழ்ந்து வாழும் தலை மகன் ஒருவன், ஈந்து இசைபட வாழும பெருவாழ்வு வாழ எண்ணினான்; அதற்குப் பெரும்பொருள் தேவை என் பதையும் உணர்ந்தான; இயல்பாகவே அவன் பெரும் பொருள் உடையவன்; எனினும், தன் வாழ்க்கைக்காம் பொருளைத் தானே தேடிப் பெறல்வேண்டும் என்று எண் ணும் உயர் பேருள்ளமுடையவன்.

"தெண்ணீர அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினியது இல"

(திருக்குறள் : கஅ நி).

என்ற குறளுரை உணர்ந்தவன்; ஆகலின் பொருள்தேடிப் பிறநாடு செல்ல எண்ணினான்; அந்நிலையில், அவன் மனை யின் பேரழகும், அவள் தரும பேரின்பமும அவன் உள் ளத்தே உருபபெற்று நிற்கலாயின, வளையணிந்து வனப் பில் மிகுந்து இளமை எழில் தோன்ற நிற்கும அவள் அழகு அவன் கண்ணிற்கு விருந்தாய் அமைந்தது; அவ் அழகு, அவள் தரும் இன்பத்தையும் நினைப்பூட்டிற்று; அவள் வாயில் ஊறும் உமிழ்நீர் தரும இன்பத்தை எண்ணி னான்; பொருள்கருதிப் பிறநாடு சென்றுவிட்டால் இவ் வின்பத்தை இழக்கவேண்டி வருமே என்று ஏங்கினான்; பொருள்பெற்று மீண்டுவந்து இல்வாழ்க்கையின் பயன் துய்க்கலாம் எனில் அஃது இயலாது; இளமை கழிந்த பின்னா இருந்து துய்க்கும இன்பம் இன்பமாகாது; இளமையிற் சிறந்த வளமையும் இல்லை; இளமை கழிந்த பின்றை வளமை காமம் தருதலும இன்று; இளமை நெடிதுநாள் நிற்பதும் இல்லை; இன்பம் துய்க்கவேண்டும் என்ற எண்ணம், இளமை தீர்ந்த பின்னர் எழுதலும் அரிது; மேலும் இளமை கழிந்தபின்னர் இன்ப உணர்வினராதலும் அத்துணைச் சிறப்புடையதாகாது; ஆனல் இன்ப நுகர்ச் சிக்கு இளமைபோல், பொருளும் இன்றியமையாததாம்.

ஆதலின், அதைப் பெற்றுவந்த பின்னரே இன்பந் துய்க்கவேண்டும் என்று எண்ணுவோம் எனில், அதுவும் இயலாது; ஒருவர் வாழ்நாள் எப்போது உலந்துபோம என்பதை எவரும் அறியார்; இன்று இருப்போர் நாளை இருப்பர் என எண்ணுவதற்கில்லை; வாழும் நாள் கழிந் தாரை, அந்நாள் கழிந்தபின்னர் ஒரு நாழிகையும் வாழ விடான் கூற்றுவன்; பொருள் கருதிப பிரிந்து சென்றவர் உயிரோடு மீள்வர் என்பதற்கோ, வந்து வீட்டுள் இருந் தாரை உயிரோடு காண்பர் என்பதற்கோ உறுதியில்லை; நிலையற்றது இவ்வாழ்வு; நிலையறற இவ் வாழ்க்கையினைப் பெற்றோர், கிடைத்தற்கரிய, கழிந்தால் மீண்டும பெறலாகா இளமைக்காலத்திலேயே நுகரவேண்டிய இன்பங்களை நுகர்தல் வேண்டும் என்றே அறிவுடையோர் அனைவரும் எண்ணுவர்; உலகமே ஒன்று திரண்டு வந்தாலொத்த பெரும் பொருளே பெறுவதாயினும், அப்பொருள் கருதி அவ்விளமை இன்பம அழியப பிரிய எண்ணார்; இவ்வாறெல் லாம், அவன் உள்ளம், இளமை, இன்பம், வாழ்நாள், பொருள் இவற்றின் இயல்புகளை எண்ணி எண்ணி, எதை யும் துணியமாட்டாது இரங்குவதாயிற்று.

தன்னைக் காதலிக்கப்பட்டாள் ஒருத்தியின் வாய்நீர், காதலனுக்குச் சாவா மருந்தாம் அமிழ்தேபோல் இன்பம் தரும் என்ப; அந்நீரின் இன்பம், பாலும் தேனும் கலந்த கலவை நீரின் இன்பம் போன்றது என்றெல்லாம் காதலன் பாராட்டுவன்.

> ''பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி
> வாலெயிறு ஊறிய நீர்.'
>
> (திருக்குறள். ககஉக.)

இப்போது நாம் கூறும் தலைமகன், தன் மனைவியின் வாய் ஊறும் நீரின் சுவைக்கு நிகரான சுவையுடைப் பொருளாக வேறு ஒரு பொருளைக் கூறுகின்றான்.

இனிய சுவையுள்ள பொருள்களுள் தலையாயது கரும்பு; மிக மிக இனியாரை உருவகமாக 'என் கரும்பே!'

என அழைப்பதும் காண்க. இக்கருமபு புலவர்களின் உள்ளத்திற்கும் சுவை தந்துளது; அவர்கள் தாம் பாடிய பாடல்களில் வேண்டியாங்கு எடுத்து ஆண்டு போற்றுவர். நண்பர்கள் இயல்பை விளக்கப் புகுந்த புலவர் ஒருவர், நல்லோர் நட்பு கரும்பை நுனியில் தொடங்கித் தின்று கொண்டே சென்றால், முதலிற் சுவை குறைந்து, வரவர மிகுவதேபோல், பழகப பழக இன்பம மிகுந்துகொண்டே செல்லும். தீயோர் நட்பு, கரும்பை அடியிற்றொடங்கித் தின்றுகொண்டே சென்றால், தொடக்கத்தில் பேரினிப் புடையதாய் வரவர இனிமை குறைந்து போவதேபோல், தொடக்கத்தில் நன்றாய் இறுதியில் தீதாய் முடியும் என்று கூறியுள்ளார்.

இவ்வாறு, கருமபில் அதன் அடிப்பகுதியே மிக்க சுவை உடையது என அறிந்த நம தலைமகன், தன் மனைவியின் வாயில் ஊறுமம நீருக்கு, கரும்பின் அடிப்பகுதியின் மிக்க சுவையினை உவமை கூறுகின்றான்.

இருகணை நூலதது ணைடு பயப் பெருவளம
ஒருகுடன் இயைதாயினும், **கரும்பின்**
காலெறி கடிகைக் கண்ண அயின்றன்ன
வாலெயிறு ஊறிய வகையில தீநீர,
கோலமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிப,
ஆள்வினை மருகிற் பிரியா; நாளும்
உறன்முறை மரபின் கூற்றதது
அறனில் கோள்நற் கறிந்திசி னோரே. (குறுந். உசுஎ.)

இவ்வாறு தலைமகளின் வாயில் ஊறும் நீருக்குக் கரும்பின் அடிப்பகுதியில் வெட்டிய துண்டத்தினின்றும் ஊறும் சாற்றினை உவமைகாட்டிய சிறப்பால், அக்கால மக்கள், இப்பாட்டைடப் பாடிய புலவரின் இயற்பெயரை மறந்து "**காலெறி கடிகையார்**" என அவ்வுவமையினையே அவருக்குப் பெயராக வைத்துப் பாராட்டுவாராயினர்.

எ. குப்பைக் கோழியார்

பெண்மைக்குரிய குணங்களால் நிறைந்த பெண் ணொருத்தி, பெற்றோரும் உற்றோரும் அறியாமல் தக்கான் ஓர் ஆண்மகனோடு காதலொழுக்கம் மேற்கொண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தாள். அவள் காதல்வாழ்விற்கு ஒரு கடை வந்துசேர்ந்தது; மகள் மணப்பருவம் எய்திய மங்கையாயது அறிந்த தாய், அவள், இனியும் விரும்பி யாங்கு எங்கும் செல்லாவாறு இற்செறித்துவிட்டாள். இதனால், தான் விரும்பிய அவ் ஆண்மகனோடு பண்டே போல, பழகுதல் தலைவிக்கு இயலாதாயிற்று; ஆனால், அவன்பால் அவள் கொண்டுள்ள காதலோ பெரிது; அவனைக் காணுதல் ஒருபோதும் வாழ்தலும் அவளால் இய லாது, இப்போது அவனைக் காணமாட்டா நிலைவந்தற்றது; அதனால் உண்டான அவள் காதல்நோய் அவளைப பெரிதும் வருத்துவதாயிற்று: காதல்நோய் பிறர்க்குணர்த்தலாம் பெற்றியுடையதன்று; ஆகவே, அந்நோயைப் புறத்தார்க் குப் புலனாகா வண்ணம் உள்ளடக்கியே வந்தாள்: அதனால் அது அவள் உள்ளுறுப்புக்களை அழிக்கத் தொடங்கி விட்டது: எலும்புகளையும் உருக்கத் தொடங்கி விட்டது: காதல்நோய் பெருகிய காலத்தும், தம் காதலைப் பிறர் உணருமாறு செய்து தலைவன்பால் தாமே சேர்வதைப பெண்மையுணர்ச்சி தடைசெய்யும்.

"உடம்பும் உயிரும் வாடிய காலும்
என்னும் றனகொல் இவையெனின் அல்லது
கிழவோற் சேரதல் கிழவதிக்கு இல்லை"
(தொல். பொருள். கூ.)

என்பர் தொல்காப்பியனாரும் ஆகவே, தலைமகன் உறையும் இடம் அடைந்து இன்புறுதல் அவளுக்கு அரிதாயிற்று; அவள் செயலற்றவளானாள்.

இவள் நிலை இஃதெனின், அவளுவது, ஈண்டு வந்து இவள்துயர் போக்கும் ஆறறல் உடையனே என்றால்,

இல்லை; அத்துணை எளிதில் அவன் ஈண்டுவரல் இயலாது; ஆகவே அவனும் செயலற்றவனாயினன்.

இந்நிலையில், இருவர் துயரையும் போக்கித் துணைபுரிவாள் தலைமகள் தோழி ஒருத்தியே; இருவர்க்கும் இடையில் நிலவும உறவு முறையினைப் பெற்றோர்க்கும் பிறர்க்கும் உணர்த்தி, மணத்திற்கு ஆவனசெய்தல் அவள் ஒருத்தியினுலேயே இயலும்; ஆனல், அவள் அதை மேற்கொண்டாள் அல்லள்; தன்நிலையினைப பெற்றோர்க்கு உணர்த்தி, மணத்திற்கு ஆவனபுரிந்து அறத்தொடு நிற்குமாறு தோழியை வேண்டத தலைவி விரும்புகிறுள். "என் நிலையினைத் தாய்க்கு அறிவிப்பாயாக" என வெளிப்படக் கூறல் அவள் பெண்மைக்குச் சால்பன்று; தன் பெண்மையும் கெடாவாறு, தன் எண்ணமும் நிறைவேறுமாறு தன் கருத்தை வெளியிட விரும்பினுள்; தான் கூறுவனவற்றைக் கேட்கும் அளவில் தோழி வந்து நிற்கும் காலம் நோக்கி, எங்கோ நோக்கிக் கூறுவாளாயினுள்.

"அவர்பால் நான்கொண்டுள்ள காதலோ பெரிது; ஆனல், அவரைக் காண இயலாநிலை இப்போது வந்துற்றது; அதனல் உண்டாய நோய் என் உடலையும் அழிக்கத் தொடங்கிவிட்டது; என் உடலே அழிவதாயினும், அவரைச் சென்று அடைதல் என்னல் இயலாது; என்பால் வந்து என்துயர் துடைப்பதும் அவரால் இயலாது; இந்நிலையில் என்னைப்பற்றி நலியும் இந்நோய், தன் முழு ஆற்றலையும் காட்டி என்னை வருத்திவிட்டு, மேலும் அழிக்க ஒன்று இல்லாமையால், அழிக்கும தன் ஆற்றல இழந்து தானே அழிய வேண்டுமேயனறி, இடையிட்டு அதை அழிப்பார் எவரும் இலரே! அந்தோ!! என் செய்வேன்!" என்று கூறினுள்.

தலைவி அவ்வாறுகூறி வருந்துவது கேட்ட தோழி, 'தலைவி இவ்வாறு கூறுவது என் பொருட்டே; இவள் நிலையை இவள் பெற்றோர்க்கு உணர்த்தி, இவள் துயர் தீர்க்குமாறு என்னைப் பணிபபதற்கே இவள் இவ்வாறு

கூறுகிறாள்; ஆகவே, இனி அறத்தொடு நிற்பதே என் கடனும்' எனத் துணிந்தாள்.

இந்த அழகிய காட்சியை இப் புலவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்:

"கண்தர வந்த காம ஒள் எரி,
என்புஉற நலியினும் அவரொடு பேணிச
சென்று நாம் முயங்கற்கு அருங்காட்சியமே,
வந்து அளூர் கொளதலே அவா ஆற்றலரே;
உய்த்தனர் விடாஅர்; பிரித்து இடைகொளாயார்,
துப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விடுதியினல்லது
கொலோவோர் இலையான் உற்ற நோயே" (குறுந் தொகை)

ஒருவனேடு ஒருத்தி கொள்ளும் தொடர்பிற்கு முதற் காரணமாயது கண்; கண், அவனை முதலிற் காண்பதினலேயே அவன் உறவு உண்டாகும்; ஆதலின், ஒரு பெண்ணின் காதலுக்கு முதற்காரணமாயது கண்ணே ஆதலின், காதல் நோயைக் கண் தரவந்த காமம் என்றும், காதல்நோய், நோய் கண்டார் உள்ளூறுப்புக்களையும் உடலையும் எரியிட்ட இழுதென உருக்கி அழிக்குமாதலின், அக்காதலைக் காம ஒள்ளரி என்றும், புலவர் இப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமகளின் காமநோய் களைவார் எவரும் இன்றி விடப்பட்ட நிலையினை விளக்க, புலவர் அழகிய ஓர் உவமையினை எடுத்து ஆண்டுள்ளார்.

தமிழகத்தில், மக்கள் பண்டு மேற்கொண்ட விளையாட்டுக்களுள், கோழிச்சண்டையும் ஒன்று. சண்டைக் கென்றே மக்கள் கோழிகளை வளர்ப்பர்; ஊரில் விழாப் போன்ற மகிழ்ச்சி மிக்க நாட்களில், கோழிகளைப் போரிட விட்டுப் பெருங்கூட்டமாகக் கூடிநின்று கண்டு களிப்பர்; 'போரில் எங்கள் சேரியைச் சேர்ந்த கோழியே வெல்லும்,'

எனக்கூறிப் போர் தொடங்குவதும், தங்கள் சேரிக் கோழி வென்றமை கண்டு மகிழ்வதும் செய்வர்.

இவ்வாறு, போருக்கென்றே வளர்க்கப்பெறும் கோழிகள் மட்டுமே போரிடும் என்பதில்லை; கோழிகள் இயல்பாகவே போர்க் குணமுடையவாம்; பிறரால் வளர்க்கப் பெறுமல், குப்பைகளை மேய்ந்தே வளரும் கோழிகளும் போரிடும்: ஆனால் அவற்றின் போர் கண்டு மகிழ்வாரோ, அன்றி அவற்றின் போராட்டத்தை இடைநின்று போக்குவாரோ எவரும் இரார்; போரை, அவை தாமே தொடங்கும். காண்பாரைப் பெறுமலே போரிடும்; தாமே ஓய்ந்து அடங்கும்.

இத்தகைய குப்பைக் கோழிகளின் போரை உணர்ந்த புலவர், தலைமகள் கொண்ட காமநோய், களவார் எவரையும் பெறுமல் விடப்பட்ட நிலையினை விளக்க, பிறரால் விடப்படாமல், கண்டு மகிழ்வாரையும் பெறுமல், இடையிட்டு நீக்குவாரையும் இன்றி, தாமே தொடங்கி, தனியிடத்தே போரிட்டு, தாமே ஓய்ந்து ஒழியும் குப்பைக் கோழிகளின் போரை உவமையாகக் கொண்டார்.

எவர் கண்ணிலும் படாமல், எங்கோ நிகழ்ந்து ஒழிந்து போகும் இழி நிலையுடையதான குப்பைக் கோழிகளின் போரினை, அறிவுடைப் பெருமக்கள் எல்லாம் அறிந்து பாராட்டுமாறு, தம் பாட்டில் அழகிய உவமை வடிவில் எடுத்துக்காட்டிய புலவர் பெருந்தகைக்கு, **குப்பைக் கோழியார்** என்ற அவ் உவமையாலாய பெயர் எத்துணைப் பொருத்தமுடைத்து!

அ. கூவன்மைந்தன்

தலைமகன் கல்வி, பொருள், காவல், புகழ் இவற்றுள் ஒன்று குறித்துப் பிரிந்து வேற்றுநாடு சென்றுள்ளான். அதனால், தலைமகள் பெருந்துன்புறலாயினள்; அவள் துயர், அளந்தறியாப் பெருந்துயராய்ப் பெருகித் துன் புறுதலாயினது; துன்பத்தால் துயில்கொள்வதையும் மறந்தாள். அவள் அவ்வாறு துயருறுதற்காம் காரணம், "'பிரியேன்' என்றுகூறி மணந்த தலைவர் பிரிந்துவிட் டனரே! இருந்து இன்பம் துய்க்க வேண்டிய இளமைக் காலம் கொன்னேகழியப் பிரிந்து சென்றுவிட்டனரே! பிரிந்து தனித்திருந்து வாழ்ந்தறியா யான், எவ்வாறு இத் தனிமையைத் தாங்கி வாழ்வேன்?" என அவள் துயர் கருதிபபிறந்ததன்று; இல்லறத்தின் பண்பும் பயனும், அன்பும் அறனுமாம என்றும், அவ்வன்பும் அறனும், ஆற்றவும் பொருள்படைத்தார்க்கே வாய்க்கும் என்றும் அறிந்த அறிவுடையாள் ஆதலின், அவள் தனித்துறையும் தன் துயா கண்டு வருந்திலள், அவள் தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடியாவள்; ஆதலின், பிரிந்துவிட்டனரே என்று வருந்திலள்.

அவள் வருந்திய வருத்தமெல்லாம், சென்றவர் ஏதம் எதுவுமின்றி இனிது வந்து சேர்தல் வேண்டுமே என்ற எண்ணத்தால்தான்: அவள் அவ்வாறு வருந்துவதால், தலைவன் ஆண்மையில் ஆற்றலில் அவள் குறைகாணு கின்றாள் என்று ஆகாது; கல்லினும் வலியன் தன் கணவன; அவன ஆணைமையும, ஆறறலும உடையன என்பதை அவள் உணர்வாள்; எனினும், அவன் சென்ற வழியின் நிலை, அவளை அஞ்சச் செய்கிறது; அவன் சென்ற வழி, கண்மூடிச் சென்றாலும் கருதிய இடத்திற் கொண்டு சேர்க்கும் நேர்வழியன்று. 'நாம் வந்தவழி இதுவோ? அதுவோ? நாம் செல்ல வேண்டியவழி இதுவா? அதுவா?' என்று எவரும் மயங்குதற்காம், ஒன்றேபோல் ஒன்று காணப்பெறும் கவர்த்த வழிகள் பலவற்றை இடை

யிடையே உடையது அவன் சென்றவழி ; அதனால், சென்றவர், சென்று சேரவேண்டிய இடத்திற்குச் செல்ல மாட்டாமல் இடைவழியிலேயே இன்னல் பல அடைதலும் கூடும் ; அன்றிச் சென்று மீண்டுவருங்கால் வழிதெரி யாது மயங்கி, வேறுவழியிறபுகுந்து நிலைதடுமாறி அலை தலும கூடும் என்று எண்ணினாள் ; அச்சம் அவள் உள்ளதே குடிபுகுந்து கொண்டதுபோ, உறங்க மறுத்து விட்டன அவள் கணைகள்.

'நின் கணவர், வழிதடுமாறுமளவு பழகி அறியாதவ ரன்று. ஆதலின் வழிமயக்கம அவருக்கு உண்டாகாது ; நேரியவழி அறிந்து செல்வர் ஆதலின் கவலற்க' என்று யாரோ கூறுவதுபோன்ற உணர்ச்சியொன்று உண்டா யிற்று ; ஒருவாறு கவலையும் சிறிதே நீங்கிற்று, ஆனால் அடுத்தகணமே 'வழிமயக்கம அவருக்குண்டாகாது எனி லும வழிஏகம எதுவும இன்றி அவர்வந்து சேரவேண் டுமே ! அவர் சென்றவழி ஏதமில்லா இனிய வழியன்றே ! எங்கும், எந்த நேரத்திலும் ஏதம பல உண்டாகுமே ! அவ வழிவாழ் ஆறலைகள்வரின் பிழைத்து அவ் வழிவந் தார் அரியர் என்பரே ! அதுவேயுமன்றிக் களிறும கடுவா யுமேபோன்ற கொடுவிலங்குகளின் வாழ்விடமன்றே அவர் சென்றவழி? அவற்றின் கொடுமைகளினின்றும் பிழைத்து வருகல்வேண்டுமே' என்று எண்ணினாள் : அவற்றால் அவர் தையருவதுபோன்ற காட்சி அவள் மனக்கண்முன் தோன்றி மறைந்தது, அகன்ற அச்சம, மீண்டும் அவளை வந்தடைந்தது. அதனால் அவர் நோய் முன்னிலும் பெருகிற்று

மீண்டும் ஒரு தெளிவு. 'நம் தலைவர அவற்றால் அழி வுறுமம அதற்கில்லை எளியரல்லர் ; எதிர்த்தார் எவரையும் எளிதில் அழிக்கவல்ல ஈடிலா ஆற்றலுடையவராவர் ; ஆதலின், அனைவ அவரை ஒன்றும் செய்யா ; அவற்றால் இவர்க்கு ஏதம் எதுவும் வந்துறாது' என்ற எண்ணம் அவள் உள்ளத்தின் ஒருபால் உதித்தது, உள்ளம் ஒரு வாறு ஆறுதல் கொண்டது ; ஆனால், 'அவர எத்தனை

ஆற்றல் உடையரே ஆயினும், அவர் விரைவில் வருதுசேர் தல் இயலாதே; அவர், நனிசேய நாட்டிற்கன்றே சென் றுள்ளார்; சென்றுள்ள நீண்ட பெரிய வழியினைக் கடந்து எப்போது வந்து சேர்வாரோ? அதுகாறும் எவ்வாறு ஆற்றியிருப்பேன்' என்று எண்ணினாள்; அச்சம், மீண்டும் அவள் உள்ளத்தை ஆட்சிசெயத் தொடங்கிவிட்டது. "'நாம் செல்லும் வழியின் இயல்பு இது; இதை அவள் அறிவாள்; அவ்வழியில் நாம சென்றால் அவள் பொறாள்' என்று உணராது சென்றுவிட்டனரே! அவர் உளந் தான் எத்துணைக் கொடுமை உடையது!" என்று வருந் தினாள்; அவள் உள்ளம் நோயின் உருவேயாகி உறுதுயர் பெறுவதாயிற்று; அவள் கண்களும உறக்கம் ஒழிந்து துன்புறலாயின

உறக்கம் இன்றி உறுதுயர் உறும தலைமகளின் நிலை யினை உணருகிறாள் தோழி "அந்தோ! துயர்க்கொடுமை தாழாது உடல் உருகி மெலியும் இவள் இறுதியில் இறந்து படுவளோ? அந்தோ! இதற்கு என் செய்வேன்? வேற் றார் சென்ற தலைவர் எப்போது வருவார்? எப்போது இவள் துயர் நீங்கும்? அவர் வரும்வரை அழிந்துபோகா வண்ணம் இவளை எவ்வாறு காக்கவல்லேன்?" என்று எண்ணி எண்ணி அவளும் துயர் உறுவாளாயினள் அவள் துயர், தலைமகள் துயரினும் கொடிதாயிற்று.

தோழியின் இத்துயர்நிலையினைத் தலைவி உணர்கிறாள். "பிறர் துயர் காணப் பார்த்து இருத்தல் பண்புடையார்க்கு அழகன்று என்பரே! என் கண்முன்னரே, இதோ, இவள் என் உயிர்த்தோழி துயர் உறுகின்றாள்; அதுவும் அவள் துயர் உறுவதற்குக் காரணமும யான் அன்றே? இத்தகையாள் துயர் போக்குவதன்றே என் கடன்? ஆனால், அந்தோ! யான் என் செய்வேன்? என் துயரையே என்னால் போக்கிக்கொள்ள முடியவில்லையே; இந் நிலை யில், இவள் துயரை எவ்வாறு போக்கவல்லேன்? அவர் சென்ற வழியின்நிலை எண்ணி வருந்தும் என் நோயினும்,

தோழியின் நோயன்றே பெரிதாக உளது? நான் என் துயரை ஒருவாறு ஆற்றினும் ஆற்றுவன்; ஆனல் தோழியின துயர்நிலைகண்டு தோன்றிய இந்நோயை எவ்வாறு ஆற்ற வல்லேன்? தோழியின் துயர்நிலைகண்டு உளம் பொறுது அழுவதன்றி அதைத் துடைக்கும் ஆற்றல் இல்லா என்னைப்போல் செயலற்றுத் துயர் உறுவாரும் உலகில உளரோ?"

நல்ல ஒரு பசு: கிணற்றிலே விழுந்துவிட்டது; அதைக் கண்டான் ஓர் ஆண்மகன்; அவனே அருள் நிரம்பிய உள்ளம் படைதத உயாநதோர் தோன்றிய குடியிலே பிறந்தவன்; அதனல் அதைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இயல்பாக உண்டாயிற்று; ஆனல், பசுவின் துயரினைத தன்னுல் தனித்துப் போக்க முடியாது என்பதை உணாந்தான்: யாரேனும் சிலரைத் துணைக்கு அழைத்தல்வேண்டும்; ஆனல் அதை அவனல் செய்ய முடியவில்லை; அந்த இடததில் இருந்தவாறே "ஆநதோ! ஆநதோ!! பசு ஒன்று கிணற்றில் விழுந்துவிட்டது; அவலம்! அவலம!! ஓடிவாருங்கள்; ஓடிவாருங்கள்," என்று உரக்கக் குரலிட்டால் எவரேனும் ஓடிவருவர்; அதை அவனல் செய்யமுடியாது; காரணம், அவனேர் ஊமன்; உள்ளககருத்தை உரையால் உணர்த்தல் அவனல் இயலாது; இருந்த இடத்தில் இருந்தவாறே எவரையும கூவி அழைக்க முடியாது என்றல், கண்ணில் கண்டார் எவரிடத்திலாவது ஓடிச்சென்று, நேர்ந்த நிகழ்ச்சிகளை எழுத்தாலோ அன்றி வேறு வகையாலோ அவர்க்கு அறிவித்து அவரை அழைத்துவரத பசுவின் துயர் போக்கலாம் என்றல், அதையும் அப்போது செய்தல் இயலாது; காரணம், அது நிகழ்ந்த நேரம், இராக்காலம்; எவரும் வெளியில வழங்கா; வழங்குவார் உளராயினும் அவர் வழங்குவதை அறிந்துகொள்ள முடியா இருட்காலம்; ஆகவே, எங்கேனும் ஓடி, எவரையேனும் கண்டு, நடந்த ஏதத்தை அவர்க்கு எவ்வாறுயினும் உணர்த்தி அழைத்து வருவதும் அவனல் இயலாது.

இவ்வாறு, தன்னுலும் போக்க முடியாது; அதைப் போக்கவல்லாரைக் கண்டு உணர்த்தி அவர் துணைபெற்றுப் போக்கவும் இயலாது; அந்நிலையில் "பசு கிணற்றில் வீழ்ந்து துயர் உறுவதைப் பார்த்துப் பார்த்துத் தானும் துயர் உறுவதல்லது போக்க இயலாது வருந்தும் உயர்திணைப் பிறந்த ஊமனைப்போல், தோழிபடும் துயரைப் பார்த்துத் தன்புறுவதல்லது அதைப் போக்கவல்லேன் அல்லேன்; அந்தோ! என் துயரின் கொடுமைதான் என்னே!" என்று வருந்துவாளாயினள்.

"கலலே யாத்த, அவல நீளிடைச
சினலோ கொடுமை எற்றிற, தும்சா
நோயனுமை நோயாகினறே, கூவல்
தூஉல்ஆன் படுதுயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயாபொறுக கலலேன தோழி நோய்க்கே."

(குறுந். 228)

இவ்வாறு தனித்துவாழும் தன் துயர்நிலை எண்ணி வருந்துவதினும், தன் துயர்நிலை கண்டு வருந்தும் தோழியின் துயாநிலை கண்டே பெரிதும் வருந்தினள் என்று கூறித் தமிழ்நாட்டு மகளிர்தம், தம் துயர்காணுத் தகைமையினைத் தமிழுலகிற்கு உணர்த்திய புலவர், தோழியின் துயர்நிலை கண்டவழி அதைப் போக்கக் கடமைப்பட்டிருந்தும், போக்கவல்ல ஆற்றலின்றிக் கண்டு வருந்தும் தலைமகனின் நிலைக்கு, பசு ஒன்று கிணற்றில் வீழ்ந்து தன் புற்றக்கால், அதைப் போக்கக் கடமைப்பட்ட உயர்குடிப் பிறப்பும் உள்ளமும் உடையான், தன் உறுப்புநலக் குறைவால், அதைப் போக்கவல்ல ஆற்றலும் வகையும் காணுது, அதன் துயர்நிலையினைக் கண்டு கண்டு வருந்தும் ஊமன் ஒருவன் நிலையினை உவமித்த, உயர் பேரிலக்கியப் பண்புடைமையால் **கூவன் மைந்தன்** என்ற புகழ்நிறைந்த பெயர் பெற்றுத் திகழ்வாராயினர்.

ஈ. செம்புலப் பெயனீரார்

கோப்பெருஞ் சோழனும், பிசிராந்தையாரும் உயிரொத்த நண்பராவர்; கோபபெருஞ் சோழன், சோழநாட்டு உறையூரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்திருந்த ஓர் அரசன்; பிசிராந்தையார், பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்திருந்த ஒரு புலவர்; இருவரும் வேறு வேறு நாட்டினர்; ஒருவரையொருவர் கேள்வியளவொன்றாலேயே அறிந்திருந்தனர்; பார்த்துப் பழகி அறியார்; என்றாலும் இருவர் உள்ளமும் ஒன்றுபட்டுவிட்டன; இருவரும் நெருங்கிய நண்பராயினர்; நண்பராய பின்னரும் ஒருவரையொருவர் கண்டிலர்; வடக்கிருந்து உயிர் துறக்கவேண்டிய நிலை சோழனுக்கு உண்டாகிவிட்டது; அந் நிலையில், அவனையடுத்திருந்த சிலர், "உயிர் நண்பன் எனப் பெருமை தோன்றப் பேசினையே; அவன் ஒருமுறையும் நின்னைவந்து கண்டிலனே" என்று கூறினர், அதற்கு அவன், "என் நண்பன் என் செல்வக்காலே என்பால் வந்திலன் எனினும், என் தன்பக்காலே வாராதிரான்:

"செல்வக்காலே நிற்பினும்
அல்லற்காலே நில்லலன்" (புறம். உகந)

அவன் இருக்க என் அருகே இடனெழித்து வைக்க" என்று கூறி இறந்தான்.

தம் நண்பனுக்குற்ற துயர் நிலையினைப் புலவர் எவ்வாறோ அறிந்துகொண்டார்; ஓடோடி வந்தார் உறையூருக்கு; நண்பன் நிலை கண்டார்; வருந்தினர்; 'அவன் இறந்த பின்னர் வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா?' என்று எண்ணினர்; அவன் அருகிலேயே அமர்ந்து வடக்கிருந்து உயிர் நீத்தார்; இவ்விருபெரும் நண்பர் செயல்களையும், அவர்தம் நட்பின் பெருமையினையும்,

"வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே"
(புறம். உகள)

என்று புலவர்கள், வியந்து பாராட்டினர். இவ்விருவர் கொண்டநட்பே நட்பாம்; உயரிய நட்பிற்கு ஒருவரை யொருவர் அறிந்து பழக வேண்டுவதில்லை; இருவர் உள்ளமும் ஒன்றுபட்டால் அதுவேபோதும்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்" (திருக்குறள். எஅநு)

உள்ளம் ஒன்றுபடுவதே உயரிய நட்பாம்;

"நெஞ்சத்து அகம்நக நட்பது நட்பு" (திருக்குறள். எஅநு-சூ)

உள்ளம் ஒன்றுபட்டார்க்கு உரையும் செயலும் ஒன்றுபடும்.

"உள்ளதில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்." (பாரதியார்.)

தமிழ்நாட்டுக் கணவனும மனைவியும் இத்தகைய உள்ள ஒற்றுமை கொண்டு வாழ்ந்தனர்; அக்காலப் புலவர்கள், அவர்கள் அவ்வாறு வாழவேண்டுமென்று விரும்பினர்; அத்தகைய உள்ள ஒற்றுமை உடையார்தம் இருவர்க்கிடையே, புறவேற்றுமை எவ்வளவு இருப்பினும், அவற்றைக்கண்டு கவலையுறார்; அப் புறவேற்றுமைகள் எல்லாம் ஒன்றுகூடி எதிர்ப்பினும், அவர்கள் உள்ளங்கள் ஒன்றுபடுவதைத் தடைசெய்தல் இயலாது; அவை ஒன்றுபட்டே தீரும்; ஒன்றுபட்ட உள்ளங்களைப் பிரித்தலும், அப்புறவேற்றுமைகளால் இயலாது. தமிழ்நாட்டுக் காதலர்தம் இவ்வுளள இயல்பைக் காதலன் ஒருவன் தானே உணர்த்தும் முறையில், ஒரு புலவர் உணாததியுள்ளார்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஆண்மகன் ஒருவன், ஒருநாள் ஓரிடத்தில் தன்னைப்போன்றே ஒப்பாரும், மிக்காரும் இல்லாப் பெண்மகள் ஒருத்தியைக் கண்டான்; அவளும், அவனைக் கண்டாள்; அவளை அவன் அதற்குமுன் அறியான்; அவளும் அவனை அதற்குமுன் அறியாள்; அவள் தாய் யார் என்பது அவனுக்குத் தெரியாது; அவன்

தாய் யார் என்பது அவளுக்குத் தெரியாது; அவன் அவள் தந்தை யார் என்பதை அறியான்; அவள், அவன் தந்தை யார் என்பதை அறியாள்; அவளூர் அவனுக்குத் தெரியாது; அவனூர் அவளுக்குத் தெரியாது. 'வடகடல் இட்ட ஒருநாகம் ஒருதுளை, தென்கடல் இட்ட ஒரு கழி சென்று கோத்தாற்போல' இருவரும் ஒரிடத்தே எதிர்ப் பட்டனர்; நிலமும் நீரும் கலந்த கலவைபோல் இருவர் உள்ளமும் ஒன்று கலந்துவிட்டன.

இருவரும் சிறிதுபொழுது கலந்து உரையாடி மகிழ்ந் தனர்; தலைவன் பிரிந்து விடுவானே? நம் மகிழ்ச்சிக்குக் கேடு வந்துறுமோ என்ற அச்சம அவளுக்கு உண்டா யிற்று; அவள் உள்ளக்குறிபபினை உணர்ந்துகொண்ட அவன், அவளுக்கு ஆறுதல் உண்டாக "என் தாயும், நின் தாயும் இதறகுமுன் ஒருவரையொருவர் அறிந்தவரா? அலலர்; என் தநதைக்கும, நின் தநதைக்கும் இதற்குமுன் யாதேதனும் உறவுண்டா? இல்லை; நாம் இருவருந்தான் இதற்குமுன் ஒருவரை ஒருவர் கண்டு பழகியதுண்டா? இவ்வாறு நம் புறத்தொடர்பெல்லாம எத்தகைய உறவும் இன்றிக் கிடக்கவும், நாம் இருவரும் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள உண்மையான அன்பினைபபெற்ற நம் உள ளங்கள் இரண்டும், நல்ல மண்ணும் பெய்த தண்ணீரும் சேர்ந்து உண்டான கலவையே போல் ஒன்றுகலந்துவிட் டன; ஒன்றுபட்ட நம் உள்ளங்கள், இனிப்பிரியா; அவற் றைப் பிரிக்கவும் இயலாது; ஆதலின், 'பிரிந்து விடுவமோ? பிரிவு வந்து நேருமோ?' என்று எண்ணி அஞ்சற்க" என்று கூறினன்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர?
யானும் நீயும் எவ்வழி அறிதும?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே."

(குறுந். 40.)

உள்ளம் ஒன்றுபடுவதே உயரிய காதலருக்கு உரிய பண்பாம் என்றுணர்த்த வந்த புலவர், அவ்வுள்ளங்கள் எவ்வாறு ஒன்றுபடுதல் வேண்டும் என்பதை உணர்த்த 'செம்புலப்பெயல்நீர்' கலந்த கலவையாம் அழகிய உவமையினை மேற்கொண்டு, அக காரணத்திலேயே "செம்புலப் பெயல்நீரார்" என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுத் திகழ்ந்துள்ளார்; அவர்க்கு அப்பெயர் வாங்கித்தந்த அவ்வுவமையினை நுணுகி நோக்கினலன்றி, அவர் உணர்த்தும் காதலர்தம் உள்ள ஒற்றுமையின் இயல்பும், அவர்க்கு அப் பெயரிட்டு வழங்கும் பெருமையின் சிறப்பும் விளங்கா ஆதலின், அவ்வுவமையினைச் சிறிது நோக்குவாம்.

இரு பொருள்கள் சேர்ந்து நின்றன என்றால், ஒரு பொருளோடு மற்றொரு பொருள் வந்து சேர்தல் வேண்டும்; அவ்வாறு சேர்ந்து நின்ற இரு பொருள்களுள் ஒன்று, மற்றொன்றைவிடச் சிறந்ததாயின், அச் சிறந்ததன் இயல்பையே ஏனையது பெறும்; சேர்ந்து நின்ற இரு பொருள்களுள் சேர வரும்பொருள், அது எப்பொருளோடு சேர வருகிறதோ அப்பொருளினும் சிறிது தாழ்வுடையதாகவே இருக்கும்; அதனால், சேரவரும் பொருள், தன் இயல்பு அழிந்து அது சேர்ந்து நிற்கும் பொருளின் இயல்பைப் பெற்றுவிடுமேயன்றி, அப்பொருளின் இயல்பை அழித்து அதற்குத் தன் இயல்பை ஏற்றிவிடும் ஆற்றலுடையதாகாது. "பொன்மலையைச் சேர்ந்த காகமும் பொன் நிறம் பெறும்."

"ஊரங் கணனீர உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்."

"ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படும்."

(காலடியார். கஎந-சு.)

எனப் புலவர்கள் கூறுவனவும் காண்க. இவ்வாறு சேர்ந்து நிற்கும் பொருள்களுள், சேரவரும் பொருள்களினும் சேர்த்துக்கொள்ளும் பொருள்களே சிறந்து விளங்குவதி

ணலேயே, ஒருங்கு சேர்ந்து இயங்கும் பொருள்களிடையே மேற்கொள்ளப்படும் 'ஒடு' என்ற உருபினைச் சேரவரும் பொருளின் பின் அமைக்காது, சேர்த்துக் கொள்ளும் பொருளின் பின்னர் அமைப்பதை இலக்கண ஆசிரியர்கள் மேற்கொள்வாராயினர்.

"பாலோடு அளாயநீர் பாலாகும்." (நாலடியார் களை)

பால் நீர் இரண்டனுள், பால் சிறப்புடையது; நீர் அத் தனைச் சிறப்பில்லாதது; அது, பாலோடு சேர்ந்தால், அதுவும் பாலாய்ச் சிறப்புடையதாகும். ஆகவே சிறப் புடைய பால் என்பதோடு, 'ஒடு' கொடுத்து வழங்கினர்.

"ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே."
(தொல். சொல். வேற்றுமை மயங: அ)

என்பது விதி. இந்த நியதியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்." (திருக்குறள்: சஞ்ஞ)

என்ற வள்ளுவர் காட்டிய உவமை, "செம்புலப் பெயர் நீர் போல்" என்ற இந்த உவமையினையும் அந்த முறைமை யின் அடிப்படையில் பொருள் காணுதல் கூடாது; இந்த உவமையின் பொருளாய் விளங்கும் உள்ளங்களுக்கு உரிய ராய அவனும் அவளுமே ஒருவரின் ஒருவர் உயர்ந்தவரல்லர்; ஒருவரைச் சார்ந்து ஒருவர் வாழவேண்டிய நிலையினை உடையாரல்லர்; உருவாலும் திருவாலும் ஒத்த பண்பின ராவர்.

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப." (தொல். களவு: உ)

என்பர் தொல்காப்பியனாரும். அத்தகையார் இருவர் உள் ளமும் இணைந்தன; ஒருவர் உள்ளம் நின்றுருக நிற்க, ஏனையோர் உள்ளமே உருகி, அவர் உள்ளத்தோடு கலந் தது என்று கூறுதல் பொருந்தாது; அதுதான் உண்மை யெனின், அஃது ஒருதலைக் காமமாம் கைக்கிளையாம்;

அன்பின் ஐந்திணையின்பாற் படாது; அவன் உள்ளம் உருகி, அவள் உள்ளத்தே புகுந்தது, அவள் உள்ளம்உருகி அவன் உள்ளத்தே புகுந்தது; அவன் தன் இயல்பு கெட்டு அவள் இயல்பானான்: அவளும் தன் இயல்பு கெட்டு அவன் இயல்பானாள்; முழு ஆண்மைத்தன்மை அவனிடம் குடி கொள்ளவில்லை; முழுப் பெண்மைத்தன்மையும் அவளிடம் இல்லை; ஆண்மையில் சிறிது குறைந்தான் அவன்; பெண் மையிற் சிறிது குறைந்தாள் அவள்; ஆண்மையும் உரனும் அவன்பால் நில்லாது ஓடின: நாணும் மடனும் இவள்பால் நில்லாது மறைந்தன; இவ்வாறு இருவரும் தம்தம் இயல் பிற் குறைந்து, ஏனையோர் இயல்பை ஏற்று, இரண்டறக் கலப்பதே உண்மைக் காதலுக்கு இயல்பாம்; அங்கிலையில் ஒருவரைவிட ஒருவர் உயர்ந்தவர் என்ற நிலை இராது; அவ்வெண்ணம் இருத்தலும் கூடாது.

"இருவருமே ஒருவர் எனில் எவர் பெரியர் சிறியர்"

எனக் கேட்கும் காதலன் ஒருவன் கூற்றைக் கூர்ந்து உணர்க. ஆண்டவன், ஆண் பெண் வடிவினன் என்ற உண்மை இதனையே உறுதி செய்வதும் காண்க.

இயல்பால் ஒருவரின் ஒருவர் உயர்ந்தவரல்லர்; ஒத்த வரே என்று கொள்ளினும், எவர் உள்ளம் முதலில் நெகிழ்ந்து, ஏனையோர் உள்ளத்தில் புகுந்தது என்று கண்டு, அவ்வழியாக உயர்வு தாழ்வு கொள்ளலாம் என்று கருதினால் அதுவும் இயலாது; கூடாது.

"அண்ணலும் நோக்கினன். அவளும் நோக்கினள்."

(கம்ப. மிதிலைக்: 44)

என்பதைப் போல இருவரும் ஒரே நேரத்தில் காண்பர்; இருவர் உள்ளமும் ஒரே நேரத்தில் நெகிழும்; ஒருவர் உள் ளத்தில் ஒருவர் உள்ளம் மாறிக் குடிபுகுதலும் ஒரே நேரத்தில் நிகழும், ஆதலின், 'எவர் முன் அணைந்தார்? எவர் பின் அணைந்தார்?' என்று கூறுதலும் இயலாது.

"சிவகாமி! யான் உனது சிதம்பரனே என்னச்
செப்புமுனம் இருவரும் அற்று ஒருருவமானார்

எவர்தாம்முன் அணைந்தனர்என்று இதுகாறும் அறியோம்
இருவரும்ஒன் றுயினென் றேஅறையும் சுருதி.''

என்ற சிவகாமி சரிதச்செய்யுளைக் (சஅ) காண்க.

ஆதலின், காதலர் இருவர் உள்ளம் கலந்த பு-றை யினை விளக்கவந்த 'செம்புலப் பெயல்நீர்' என்ற உவமை யில்வரும் புலம், நீர் என்ற இரண்டையும், நிலத்தோடு நீர் வந்து சேர்ந்தது, அதனால், நீர், நிறமும் குணமும அற்ற தன் இயல்புகெட்டு, நிலத்தின் இயல்பாம் செந்நிறத்தைப் பெற் றது எனப் பொருள்கொள்ளுதல் தவறும்; நிலத்தோடு நீர் வந்துசேரவில்லை; நீரோடும் நிலம்வந்து சேரவில்லை; நிலத் தின் இயல்பை நீர் பெற்றுவிடவில்லை; நீரின் இயல்பை நிலமும் பெற்றுவிடவில்லை; இரண்டுமே ஒன்று கலந்தன; இரண்டுமே தம் இயல்பு இழந்தன; அங்கே தனி நீரும் இல்லை; தனிப்புலமும் இல்லை; நீரின் ஒடுந்தன்மையும் இல்லை; நிலத்தின் திண்மைத்தன்மையும் இல்லை; நீரும் நிலமும் மறைய, சேறு என்ற புதுப்பொருள் தோன்றிற்று; அங்கே நீரின்தன்மையும் உண்டு; நிலத்தின்தன்மையும் உண்டு; இருபொருளும் அவற்றின் இரு இயல்புகளும் இரண்டறக் கலந்து காட்சியளிக்கும்.

இவ்வாறு, நிலமும் நீரும் தத்தமக்குரிய பண்புகளைத் தனித்தனியே பெற்றிராது; அவற்றை ஓர் அளவு இழந்து, தம் பண்புகள் பிரிக்க ஒண்ணுவாறு கலந்து நிற்கப் புதிய தோர் உருவினைப் பெற்றுற்போல், தனி ஆண் உள்ளமும், தனிப் பெண் உள்ளமும் வேறுபட்ட இருபொருள் என்ற இயல்பினை இழந்து, பின்னர்ப் பிரித்துக்காண இயலாவாறு இரண்டறக்கலந்த புது உருவினைப் பெற்றுவிட்டன என்று கூறி உண்மைக் காதலர்தம உள்ளத்தன்மையை உள்ள வாறு உணர்த்தவல்ல பொருள்செறிந்த சிறந்த உவமை யினைக் கண்டார்க்கு, அவ்வுவமையால் ''செம்புலப் பெய னீர்'' எனப் பெயரிட்டுப் பெருமைப்படுதியது தமி ழுலகம் எத்துணைப் பொருத்தம்! எத்துணைச்சிறப்பு!!

---

60. தனிமகனர்

பழங்காலத் தமிழ்ப் பேரூர்கள், பண்பாட்டிற் சிறந்தன; கோட்டையும் வாயிலும் கோயிலும் கொண்டு குடிவாழ்வார்க்குப் பாதுகாப்பளிப்பன; நெல்லும் பொன்னும் நிறைந்து, நெடுநிலத்துள்ளாரையும் தம்பால் ஈர்க்கும் நீர்மைய; ஆடரங்குகளும் அறங்கூர் அவைகளும் பெற்று, அழகும் அறமும் விளங்குவன; பேரூர்கள் ஒவ்வொன்றையும் சூழ்ந்து, பகைவர் புகுவதற்கும அருஞ்சும் காவற்காடு அமைந்திருக்கும்: அகத்தே நன்செய் நிலங்கள் செந்நெல் விளைந்து செழித்து விளங்கும்; பொய்கைகள், கழுநீர மலர்ந்து கவின்பெறத் தோன்றும்; வயல்களில் உழவர்கள் ஏர்பல கொண்டு தொழிலாற்றும் காட்சி, கண்கொளாக் காட்சியாகும்; ஊர்ப்புறத்தே பசுக்கள் நிரை நிரையாக மேய்ந்து மகிழ்ந்து வாழும்; உலக மக்கள் எல்லாம் ஒருங்கேபுகினும் இடங்கொடுக்கும் பேரிடம் கொண்ட பெருவாயில்கள் பல, நகரைச்சூழ அமைந்து அணிதரும்.

ஊர்நடுவே அமைந்த மன்றங்களில், மகளிர் பலரும் கூடிக் குரவையும் தழங்கையும் ஆடி மகிழ்வர்; அறங்கூறும் அவைகளில், சான்றோர் பலரும் சேர்ந்திருந்து நகரில் அறனல்லன நிகழாவண்ணம் காத்து நிற்பர்; வேற்றூர்களில வாழ வழியின்றி வந்து சேர்ந்த சுற்றத்தையும் ஓம்பித் தாமும் இனிதுவாழும் செழுங்குடிச் செல்வர் பலர் வாழ்ந்திருப்பர்; பேரூர்களில் உள்ள வீடுகள் தோறும், நெல்முதலாம் ஒன்பான்வகை உணவும் நிறைந்து கிடக்கும் குதிர்கள், குன்றுகள்போல் தோன்றிக் காட்சி தரும்; காளங்காடிகளின் நறுமணம், மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சி தருவதாம்; விழாக்குறித்தும் வெற்றிகுறித்தும் எடுத்த கொடிகள், நகரின் எம்மருங்கும் நின்று அசைந்து அழகு தரும்.

தமிழ்நாட்டுப் பேரூர்கள், இவ்வாறு வளத்தால் வனப்புடையதாய், ஆடல் பாடல்களால் அழகுடையதாய், காவற்சிறப்பாற் கவினுடையதாய் விளங்குவது கண்ட புல

வர்கள், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, பேதைமை, நிறை முதலாம் பெண்மைக்குணங்களால் நிறைந்தும், பேரழகாற் சிறந்தும் விளங்கும் தமிழ்நாட்டு மகளிர் தமக்கு அப்பேரூர்களை உவமைகூறிப் பாராட்டுவதை மரபாகக் கொண்டனர் :

"ஆர்கோடன்ன இவள் பழிதீர் மாணலம்." (குறுந்: உருஅ)

"எளகெழு தோண்டி அன்ன இவள்நலம்." (அகம: கம)

"கள்கமழ் பொறையாறு அன்னஎன நற்றேழுள்."
(நற் : கருக)

"பெருமபெயராக் கூடல் அன்னநின கரும்புடைத்தோள்."
(நற் · நுகூ)

"கூடல் நாளங் காடி நாறும் நறுநுதல்." (அகம் · கூநு)

"பிணட நெல்லின் அள்ளூர் அன்ன என் ஒளைஎருடி."
(அகம . சசு)

"கழுமலத் தன்ன அம்மா மேனித தொன்னலம."
(அகம் · உஎம)

"வேம்பி அன்ன என் நலலெழில் இளநலம்."
(அகம்: உசகூ)

"வஞ்சி அன்ன என் நலம்." (அகம்: நுகூசு)

"பல்பூக கானல் பவத்திரி அனஇவள்
நல்லெழில் இளநலம்." (அகம . நுசம)

புலவர்தம் பாராட்டைடப் பெறுதற்காம் பெருஞ்சிறப்புற்றுத் திகழ்ந்த பேரூர்கள், பகையரசர் படையெடுப்பால் பாழுறுவதுமம உண்டு ; பாழான பேரூர்கள் பார்க்கவும் ஒண்ணாப் பெருங்கேடடையும்.

காவற்காடுகள் அழிவுறும் ; வளங்குன்ற வயல்களில் விளைந்த பயிர்வகைகள் நெருப்பிட்டு எரிக்கப்பெறும் ; பசுநிரைகள் மேய்ந்த இடங்களிலெல்லாம் காட்டுவிலங்குகளின் கூட்டமே காணப்பெறும் ; ஊர்மன்றங்கள் மகளிர்

மகிழ்ந்து ஆடிய குரவையையும் துணங்கையையும் இழந்து பொலிவுகுன்றித் தோன்றும்; ஆன்றோர் இருந்து அற முரைத்த அவைக்களத்தே, பேய்கள் கூடிக் குலாவும்; அகழும் முகழும் மலர வருவாரை எதிர்நோக்கி நின்ற மகளிரெல்லாம், மக்களையும் மனையையும் இழந்ததை எண்ணி எண்ணி வாய்விட்டுப் புலம்புவர்; வந்தார்க்கெல் லாம் விருந்தளித்துப்புரந்த பெருங்குடிச் செல்வர்கள், தம் செல்வம் இழந்து, வறியராய் வாழ்விழந்து, தம்மை வாழ் விப்பாரைத் தேடிப் பிறநாடு நோக்கிச் சென்றுவிடுவர்; நெல்லிருந்த குதிர்கள் முற்றும் எரிந்து பாழாக, பாழான அவ்விடங்களில் கோட்டான்கள் கூடிக் கூவிக் கொண்டிருக் கும்; கழுநீர் மலர்ந்து கண்ணிற்கு மகிழ்ச்சி அளித்த பொய்கைகள், கோரை பல வளர்ந்து பாழ்ங்குளமாம்; எர்பல நிறைந்து எழில்பெறவிளங்கிய வயல்களில், பார்க்கு மிடமெங்கும் பன்றிகளின் பெருங்கூட்டமே காணப்படும்; இவ்வாறு நாடு எனும் பேர் மறைந்து காடெனும் பேர் விளங்குமாறு, ஊர் இருந்த இடமெல்லாம் பாழாகும். அவ்வாறு பாழான ஒரு காட்சியைப் படம்பிடித்துக் காட்டி யுள்ளார் ஒரு புலவர்:

"கடிகாவின் நிலை தொலைச்சி,
இழிபு அறியாப் பெருந்தணைபணை
குரூஉக் கொடிய எரிமேய,
நாடு எனும்பேர் காடாக,
ஆ சேந்தவழி மாசேப்ப,
ஊர் இருந்தவழி பாழாக,
இலங்குவளை மடமங்கையர்
துணங்கை அம்சீத தழூஉ மறப்ப,
அவை இருந்த பெரும்பொதியில்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பு ஆட,
அணங்கு வழங்கும் அகலாங்கண்
நிலத்தாற்றும் குழூஉப் புதவின்
அரந்தைப் பெண்டிர் இனைந்தனர் அகவ,

கொழும்பதிய குடிதேம்பிச்
செழுங்கேளிர் நிழல்சேர,
நெடுநகர் வீழ்ந்த கரிகுதிர்ப் பள்ளிக்
குடுமிக் கூகை குராலொடு முரலக்,
கழுதீ பொலிந்த கண்ணகன் பொய்கைக்
களிறுமாய் செருந்தியொடு கண்பமன்று ஊர்தர,
நல்லோ நடந்த நசைசால் விளைவயல்
பன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள,
வாஅ ழாமையின் வழிதவக் கெட்டுப்
பாழா யினநின் பகைவர் தேஎம்."

(மதுரைகாஞ்சி : கஙிட - எசு)

இவ்வாறு பகைவர் படைகளால் பாழான இடங்களின் கொடுமை, அழிந்துபோன விசயநகரப் பேரரசின் தலைநகராகிய ஹம்பியினையும், இரண்டாம உலகப் பெரும் போரில் சென்மானியப்படையால் பெருமபாழுற்ற இரஷ்யப் பெரு நகராகிய ஸ்டாலின்கிராடு நகரையும் கண்டார்க்கு நன்கு புலனும்.

பொன்னும் பொருளும் நிறைந்து பொலிவு தோன்ற விளங்கிய பேரூர்களைப் பெண்மைநலத்தால் நிறைந்து சிறந்து விளங்கிய மகளிர்க்கு உவமைகொண்ட புலவர்கள், கணவரைப்பிரிந்து கவினிழந்து நிற்கும் மகளிர்க்குப் பாழுற்றுப் பலவளமும் இழந்து, குடிவாழ்வாரை அற்றுத் தம் பண்டைப்பொலிவு இழந்து கிடக்கும் பேரூர்களை உவமையாகக்கொள்வதையும் மரபாகக் கொண்டுள்ளனர்.

புலவர் தனிமகனார், அத்தகைய பாழூர் ஒன்றையும், வாழ்வாரை இழந்து வெற்றிடமாகக் கிடக்கும் அப்பாழ் நிலத்தை இரவு பகலாகத் தனியே காத்துக்கிடக்கும் காவலன் ஒருவனையும் கண்டார்; அவ்விடத்தின் கொடுங் காட்சிகளும, அக்காவலனின் அவலநிலையும் அவர் உள்ளத்தைத் தொட்டன; அழகிய ஒரு பாட்டில், தம் உள்ளத்துயரை உணர்த்துவாராய், அக்காலமகளிர்களின் மாண்புடைய உள்ளத்தின் உயர்வை உணர்த்திச் சென்றுள்ளார்.

வாழ்வாரை இழந்து பாழான இடங்களை அணுகவும் பார்க்கவுமே மக்கள் அஞ்சுவர் ஆதலாலும், ஆங்குப் பேணத் தக்க பொருள் ஒன்றும் இராது ஆதலாலும், அவ்விடங் களைக் காக்கவேண்டிய நிலைமை எவர்க்கும் உண்டாகாது; அவ்விடங்களைக் காவல்புரியக் கருதுவோரும், அக்காவற் றொழிலை ஏற்க முன்வருவோரும் எவரும் இரார்.

ஆனல், அத்தகைய பாழ் இடங்களையும் காத்தல் வேண்டும் என்றுகொண்டு, அக்காவற்றொழிலைத் தனியே ஒருவன்பால் ஒப்படைக்க, அவனும் அவ்விடத்தே சென்று இரவு பகலாகத் தான் ஒருவனுகவே நின்று காத்து நிற் பான் எனில், அவன் நிலை என்னை? அக்காவற்றொழிலும் ஒருநாளில் ஒழியாது தொடர்ந்து செல்வதாயின் அவன் துயரின் கொடுமைக்கும் ஓர் எல்லை உளதாமோ? அத்த கைய துயராளன் ஒருவனை, புலவர் தனிமகனர் தம்முடைய பாட்டொன்றின் உவமையாக மேற்கொண்டுள்ளார்.

கணவன் பொருளீட்டும் முயற்சிமேற்கொண்டு பிரிந்து சென்றுளான்; சென்றகாலை, 'கார்காலத் தொடக் கத்தே நில்லாது மீண்டுவிடுவேன்: வருந்தற்க' என்று தன் காதலிபால் கூறிச் சென்றிருந்தான்; அவன் மனைவியோ அவன்பாற் கொண்ட பேரன்பினள்; அவனை அன்றுவரை பிரிந்தறியாதவள்; என்றலும், இல்லறம் நல்லறமாகப் பெரும்பொருள் தேவை என உணர்ந்த கடனறி உள்ளத் தவளாதலின், அவன் கூறிச்சென்ற கார்காலம் வரும்வரை ஒருவாறு ஆற்றியிருந்தாள்.

கார்காலம் தொடங்கிவிட்டது; அவன் வரவில்லை; கிழக்கடல் நீரை வாரிக்கொண்ட மேகங்கள், கொண்டல் கொண்டலாக எழத் தொடங்கிவிட்டன; அவன் வந்திலன்; மேகங்கள் மேலைத்திசைநோக்கி எழலாயின; அப்போதும் அவன் வந்திலன்; மேகங்கள் எழுந்து பரந்துவிட்டமை யால், உலகெலாம் இருண்டுவிடுவதையும் கண்டாள்; ஆனல் அவனைக் கண்டிலள்; உலகிருள் எல்லாம் ஒருங்கே ஒழிந்து, அவ்வுலகெலாம் நன்குதோன்றுமாறு தோன்றிய

மின்னலையும் கண்டாள்; கணவன் வரக்கண்டிலள்; ஓரிடத்தே அன்றி உலகம் முழுதும் பெய்த மழையையும் கண்டாள்; இடித்துப் பெய்த மேகம் நீர் முற்றும் வற்றி வெண்ணிறம் பெற்றுத் தென்திசை நோக்கி ஓடி மறை வதையும் கண்டாள்; அந்நிலையிலும் அவன் வந்திலன்; ஒளிவிடும் மின்னலும், பெய்யும் மழையும், ஒலிக்கும் இடியும் அவர் சென்ற நாட்டிலும் நிகழ்ந்திருக்குமே; அவற்றைக் கண்டும் வந்திலரே என்று வருந்தினள்; வாடினள்.

அவள், நாணும் நிறையும் முதலாம் பெண்மைக் குணங்களால் நிறைந்தவள்தான்; ஆனால், தலைவன்பால் கொண்டுள்ள அவள் காதலும், அவள காட்டிய நெறி பிறழா அவள் கற்பு வாழ்வும், அப் பெண்மைக்குணங்களி னும் சால்ச் சிறப்புடையன என உணர்ந்தவள்; உடலிற்கு இன்றியமையாதது உயிர்; ஒருவர்க்கு உயிரினும் சிறந்த ஒரு பொருள் இல்லை என்ப; ஆனால், நாணும் நிறையும் முதலாம் பெண்மைக்குணங்கள் உயிரினும் சிறந்தன வாகும்.

"உயிரினும் சிறந்தன்று நாணே." (தொல். பொருள்: கசகூ)

என்பர் தொல்காப்பியர். நாணம் உயிர் இரண்டனுள் ஒன்றே பெறலாகும்; ஒன்றை விரும்பின் ஒன்றை இழத்தல் வேண்டும் என்ற நிலை உண்டானால், உயர்ந்தோர் உயிரையே இழப்பர்; நாணை இழக்க எண்ணுவர்.

"நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணுள் பவர்." (திருக்குறள்: கஅகஎ)

நாண்இல்லா வாழ்வு, உயிருடை வாழ்வாகாது; அது, பிறர் இயக்க இயங்கும் பாவைவாழ்வு போலாம்.

"நாண்அகத் தில்லார் இயக்கம், மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று." (திருக்குறள். கஅஉ()

"தாயிற் சிறந்தன்று நாண்." (திருக்கோவையார்: உ()ச)

என்றும்,

"..... என் கண்மணி போன்று
ஒருநாள் பிரியாது, உயிரிற் பழகி, உடன் வளர்ந்த
வருநாண்" (திருக்கோவையார்.)

என்றும் அதன் பெருமை பேசுவர் மணிவாசகப் பெருந் தகையாரும்.

இத்துணைப் பெருமை வாய்ந்த நாண் முதலாம் பெண்மைக்குணங்களை அவள், அவன்பால் கொண்ட காதற் பெருமையால் இழந்துவிட்டாள்; காதல் மிக்கவழி நாண் நில்லாது; காதலும் நாணும் ஒருவழி நில்லா; ஒன்றுள்ள இடத்தில் ஒன்று இராது.

"காமம் விடுஒன்றே; நாண்விடு நன்னெஞ்சே!
யாரே பொறேன் இவ் விரண்டு." (திருக்குறள்: கஉசஎ)

என்று காதல் உள்ளம் கொண்டார் ஒருவர் கூறுவதும் காண்க. காதலுக்கு முன்னே நாண் நில்லாது; காதலை எதிர்க்கும் ஆற்றல் நாணிற்கு இல்லை; உப்பளை கொண்டு பெருகிவரும வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துதல் இயலாது; அதைப்போலவே உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கி வரும் காதலைத்தடுத்து நிறுத்தும் ஆற்றல் நாணிற்கும் நிறைக்கும் இல்லை.

"உப்புசசிறை நிலலா வெள்ளம் போல
நாணுவ ரா நில்லாக் காமம்." (அகம: உ-ஏ)

"சிறையும் உணடோ செழும்புனல் மகளிர்?
நிறையும உண்டோ காமம்காழ்க் கொள்ன்?"
(பணி, ரு கசு - உ0)

என்று அறிஞர்கள் காதற்சிறப்புரைத்துள்ளமை காண்க.

காதலின் இயல்புணர்ந்த வள்ளுவர், அதற்குப்
"பெண்மை உடைக்கும் படை." (திருக்குறள்: கஉருஅ)
எனப் பெயரிட்டு அழைப்பர்.

நாணம் உயிரினும் சிறந்தது ; ஆகவே உயிரைவிட்டாயினும் நாணைக் காத்தல் நல்லோர்க்குக் கடனே எனினும், அந்நாணைக் காட்டினும் நற்குடிப்பிறந்த மகளிர்க்குக் கற்புச் சிறந்ததாகும் ; உயிரினும் சிறந்தது நாண் என்றும், தாயினும் சிறந்தது நாண் என்றும் உரைத்த ஆசிரியர் தொல்காப்பியனாரும், மணிவாசகப் பெருந்தகையாரும்,

" .... ணாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தனள்." (தொல் பொருள்: கசுஉ)

என்றும்,

" தாயிற் சிறந்தன்று நாணைதைய லாருக்கு அந் நாண், தகைசால்
மேயிற சிறந்தமென் தோளி ! திண் கற்பின் விழுமிதன்று."
(திருக்கோவையார் : உ0ச)

என்றும் கூறுவர். ஆகவே, நாணை இழந்தாயினும் கற்பைக் காத்தல் அவர் தலையாய கடமையாகும் ; கற்பாவது, காதலர் கற்பித்த நெறிநிற்றலாம் ; ஆகவே, " ஆற்றி இருக்க ; ஆண்டு நில்லாது அண்மையில் மீள்வேன் " என்று உரைத்துச் சென்ற சொல்லைத் தேறியிருத்தல் இவர்தம் நீங்காக கடமையாயிற்று. ஆகவே உயிரைத் தாங்கி, நாணை இழந்து வாழலாயினர் ; இவ்வாறு நாண் இழந்து வாழும் வாழ்க்கையின் தயர்நிலையினையும், காதல் கற்பு இவற்றின் ஆற்றலையும சிறப்பையும்,

" .....என்னெஞ்சம் வளாந்த
பொற்பா திருநாண், பொருப்பர் விருப்புப் புகுந்துநந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்து எறியக்கழிக."
(திருக்கோவையார்: உ0அ)

என்று பாராட்டிப் பெண்களின் வாழ்வு உடன் பிறந்த நாணும் அழிய வாழும் கொடுமை மிக்குக் காணப்படுதலின், அவர்கள் பிறந்து பெருந்தயர் உறுவதினும் பிறவாமையே நன்றும்.

" இற்பாற் பிறவற்க எழையர் வாழி எழுமையுமே."
(திருகோவையார்: உ0அ)

என்று கூறும் ஒரு பெண்ணின் உள்ளத்தையும் உணர்க.

தலைவன்பால் கொண்ட காதலாலும், கற்பின் சிறப் புணர்ந்த காரணத்தாலும், நாணும் நிறையும் முதலாம் பெண்மைக்குணங்களை எல்லாம் இழந்து நிற்கிறாள் தலைவி; நாண் அகத்தில்லா அவள் உடல், உயிரற்ற பாவை போன்றுகிவிட்டது; சுருங்கக் கூறினால், அவள் நடைப் பிணம் ஆயினாள்; அந்நிலையில் அவளுக்குத் துணையாய் இருந்தது அவள் உள்ளம் ஒன்றே; அதுவும் அவள்பால் நில்லாது அவனிருக்கும் இடம் தேடிச் சென்றுவிட்டது; அஃதாவது, அது, அவன் நினைவாகவே ஆகிவிட்டது.

"கெட்டார்க்கு நட்டார் இல்" என்ப. அதைப் போல, பெண்மைக் குணங்களை எல்லாம் இழந்து நிற்கும் தன்னைத் தன்னெஞ்சும் கைவிட்டுச் சென்றமை கழிபெரும் துன்பத்தைத் தந்தது. எல்லாம் ஒழியத் தனித்து நின்ற உடலை ஓம்பியிருக்கும நிலையினை எண்ணினாள்; துயர் எல்லை கடந்தது. "நான் ஏனை உயிர் வாழ்கிறேன்? இந்த நிலையிலும் உயிர் வாழவேண்டியுளதே! இந்த உடலும் அழிந்தால் இந்நிலை எனக்கிராதன்றே? எல்லாம் ஒழிந்த பின்னரும், இந்த உடல் மட்டும் ஏனை ஒழியாது உளது? அஃது இருப்பதாலன்றே அதைக் காக்கவேண்டி நான்வாழ வேண்டியுளது? அந்தோ என் உடலே! நீ அழியாயா? எல்லாம் அழியவும் அழியாது கிடக்கும் இப்பாழ் உடலைத் தனியே காத்துநிற்கும் என் உயிரே! நின் நிலைகண்டு வருந்துகின்றேன்," என்றுகூறி வருந்துகிறாள்.

இவ்வாறு காதற் சிறப்பால், நாணும் நிறையும் முதலாம் பெண்மைக்குணங்களை இழந்து, நெஞ்சுத் துணையும் பெறாது தனித்துயருற்றுவாடும் தலைமகள் ஒருத்தியின் நிலைக்கு, வாழ்வோரெல்லாம் ஓடிப்போமாறு முழுதும் பாழுற்ற ஓர் இடத்தைக் காத்து நிற்கும் நடுகல் ஒருவனை உவமை கூறித் தலைமகளர் என்ற தனிச் சிறப்பைப் பெற்றுவிட்டார் நம்புலவர் பெருந்தகையார்.

"குணகடல் முகந்து, குடக்கோர்பு இருளி,
மண்திணி ஞாலம் விளங்கக், கம்மியர்

செம்பு சொரி பானைபின் மின்னி, எவ்வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி,
தென்புல மருங்கில் சென்றுற் றாகு
கெஞ்சம அவாவயின் சென்றன, ஈண்டுஒழிந்து
உணடல் அளித்து என்உடம்பே ; விறற் போா
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூாப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே.” (நற் கஎ)

புலவர் தனிமகனார், பழங்கால அரசர், தம பகைவர் நாட்டைப் பாழாக்கும கொடுமை, கற்பே பொற்புடைக் குணமாம் ; அதை எத்துணைக் கேடறினும் காத்தல் தம் கடனும் என உணரும சங்காலத் தமிழ்மகளிர் உள்ளம், செம்பால் பானை செய்து அதற்கு விளக்கம் தருதற்குக் கடைந்தெடுக்கும் தொழில் நுணுக்கம் தெரிய வாழ்ந்த தமிழர் தம் நாகரிகச் சிறப்பு, கீழ்க்கடலில் படிந்து நீருண்டு மேலைதிசை நோக்கி எழுந்து பரந்து மினனி இடித்துப் பெய்து பின்னர் தென்திசை நோக்கிப் பாயும் புயலின் தன்மை ஆகிய இவை எல்லாம், தம் ஒரு பாட்டி லேயே அமையப பாடிய சிறப்பு பாராட்டி மகிழ்தற் குரியதாம். உவமையாற் பெயர்பெற்ற பெருமையுடைய இப்புலவர், இந்த ஒரு பாட்டிலேயே, மின்னலுககுக் கம்மியர் செம்புசொரி பானை, தலைவியின நெஞ்சம் தலைவன்பால் சென்றமைக்குக் கீழ்ககடலில் எழுந்த மேகம் தென்புலமருங்கிற் சென்று சோந்தமை, பெண் மைக் குணமெல்லாம் இழந்து தனிதது துயருறும் தலைவி யின் நிலைக்கு வாழ்வோர் போகிய பேரூர்ப்பாழ் காத்திருந்த தனிமகனின் துயர்நிலை ஆகிய அழகிய மூன்று உவமைகளை ஆண்ட அவர் புலமைநலம் புகழ்ந்து போற்றுதற் குரியதாம்.

கக. தேய்புரிப் பழங்கயிற்றினர்

மக்கள் உள்ளம் ஆசை உடையது; ஆசை, மக்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு அதன் உயர்விற்கு உறுதுணை புரிவது; ஆசையற்ற ஒருவன் வாழ்வில் வளர்ச்சியை வனப்பைக் காணல் இயலாது; ஆனல், அவ்வாசை அளவிற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்; "ஆசைக்கோர் அளவில்லை" என்ற நிலையை அடைந்துவிடுதல் ஆகாது; ஆசை அளவுமீறிச் செல்வதை ஒருவாறு ஏற்றுக்கொள்ளினும், அது ஆகாத பொருள்மீது உண்டாதல் சிறிதும் கூடாது; ஆசை நல்லனவற்றின்மீது செல்லும்வரை, அதை, நல்லது; அவ்வாறாயும் இருக்கவேண்டுவது என்று கருதிக்கொள்ளலாம்; ஆனல் அது தீய பொருள்கள்பால் செல்வதாயின், அதை, அந்நிலையிலேயே அடக்கவும், அகற்றவும் வேண்டும்.

ஆனல், உலகத்தில் மிகச்சிலரே போதும் என்ற பொன்னன மனம படைத்துப் புகழ் பெற்றவராவர்; உலக உயிர்கள் பலவும் அளவிற்குமீறிய ஆசையின் வடிவாகவே காணப்படுகின்றன; அதைப்போலவே, நல்லபொருள்கள்பால் நாட்டம கொள்வதினும், தீயபொருள்கள்பால் தோன்றிய ஆசைக்கு அடிமையாவதையே உள்ளம் பெரிதும் விரும்புகிறது. நல்ல பொருள்கள்மேற் சென்ற ஆசை உடையார், நாட்டில் அரியர்; தீயபொருள்கள்பால் ஆசை செல்வதையே பெரும்பாலோர் விரும்புவர்; இந்நிலை அத் தகைய உள்ளம உடையாராகும், அவராகள வாழும நாடடிற்கும் கேடு பல விளைவிக்கும்; ஆதலின், உள்ளத்தை அது சென்றவழிச் செல்லவிடுதல் கூடாது; அதை அடக்கி ஆளுதல் வேண்டும்; உள்ளம், ஆசைக்கு அடிமைப்படுதல் கூடாது; ஆசையை அது அடிமைகொள்ளுதல் வேண்டும்; ஆசைக்கு அடிமைப்பட்ட உள்ளம், உலக இன்பம் ஒரு சிறிதையும் உண்ணுது; ஆசையை அடிமை கொண்ட உள்ளம், உலக இன்பம அனைத்தையும் ஒருங்கே துய்க்கும்.

"ஆசைக்கு அடியான் அகில லோகத்தினுக்கும்
ஆசற்றநல் அடியான் ஆவானே—ஆசை
தனை அடிமைகொண்டவனே தப்பாது உலகந்
தனை அடிமை கொண்டவனே தான்." (நீதிவெண்பா · கஉ)

என்ப.

ஆசைக்கு அடிமைப்பட்டு அதன்வழி நின்ற உள்ளம், அவ்வடிமைத தளையினின்றும விடுதலைபெற விரும்புவ தில்லை; விரும்பினாலும, அடிமைப்பட்டு ஆற்றல் இழந்து போன அதனால் அஃது இயலவும இயலாது; ஆகவே, அவ்வுள்ளத்தை ஆசைத்தளையினின்றும மீட்க வேறு ஒரு பொருள் துணை செயல் வேண்டும்; அவ்வாற்றல் உடையது அறிவு ஒன்றே; உள்ளம செல்ல விரும்பிய இடங்களி லெல்லாம் சென்று கெட்டொழியவிடாது, தீய பொருள் களபால் சென்ற அதன் போக்கைத தடுத்து நற்பொருள் பால் போகவிடுதலும, நற்பொருள்பாலும், அதுவிரும்பி யாங்கு அளவின்றி ஆசை கொள்ளவிடாது, அளவே செல்லவிடுதலும அறிவின் கடனமையாகும்.

"சென்ற இடந்தால் செலவிடா தீதொரீஇ
நன்றினபால உய்ப்பது அறிவு." (திருக்குறள்: கூஉஉ)

இவ்வறிவையே ஆறாவது அறிவு என்ப; மன அறிவு என வழங்கபபெறுவதும இதுவே, இவ்வறிவினைப் பெற்றவர் மட்டுமே மக்கள் என மதிக்கப்பெறுவர் என்று கூறுவர் ஆசிரியர் தொல்காப்பியனர்.

"மக்கள் தாமே ஆறறி வுயிரே' (தொல். மரபு: ஞஅஅ)

"ஆறறிவதுவே அவற்றிறு மனனே.' (தொல். மரபு: ஞஅஉ)

இவ்வறிவு வாய்க்கப் பெறுது, உள்ளம் சென்றவழி ஓடும் இயல்புடையார், செய்யத்தக்க செயல் இவை, செய்யத் தகாச் செயல் இவை என உணரும் ஆற்றல் இல்லாதவராகி விடுவராதலின், அவர்கள் மக்கள் என மதிக்கப்படார். மாக்கள் எனவே மதிக்கப் பெறுவர்.

"தக்க இன்ன; தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலராயின் உபாந்துள
மக்களும் விலங்கே" (சம்பராமா. கிட்கிந் கக2)

நல்லெண்ணம் கொண்டு நன்னெறிக்கண் நிறுத்த முன்வரும் அறிவின் கட்டளைக்கு உள்ளம் இணங்கிவிடுதல் எளிதில் நிகழ்வதில்லை; உள்ளம் ஆசைக்கு அடிமைபபடுவிட்ட காரணத்தால், அறிவின் தொண்டு தன்னை உடையாளை உயர்நிலைக்கு உய்விக்குமென்பதை உணராமாட்டாது, அறிவொடு மாறுபட்டுப் போரிடும். உள்ளத்திற்கும் அறிவிற்கும் உண்டாகும் இப்போராட்டம், பெரும் போராட்டமாம்; இதில் அறிவு தனித்துநிற்க, உள்ளம் கண், காது, மூக்கு நாக்கு, உடல் ஆக இவைவழியாக வெளிப்பட்டுத்தோன்றும் ஆசைகள் ஐந்தின் துணைபெற்றுப் போரிடுவதால், பெரும்பாலான இடங்களில் அறிவே தோற்றுவிடும்; ஒரு சில இடங்களில் மட்டும் அது வெல்வதும் உண்டு; மதயானை, உருவால் பெரியதே எனினும் சிறிய அங்குசத்திற்கு அது அடங்கிவிடும் இயல்புடையதாகும்; அதைப்போலவே, ஆசைகள் மதயானை போன்ற ஆற்றல் உடையனவே என்றாலும், உண்மை என்ற உருமிக்க அறிவு அவ்வாசைகளை அடிமைகொள்ளும் ஆற்றலை ஒரோவழிப் பெறுவதும் உண்டு ஆனால், அவ்வாறுவென்ற அறிவுடையார் உலகத்தில் மிகச் சிலராவர், அத்தகையாரே போற்றற்கும், புகழ்வதற்கும உரியவராவர்; அவர் ஒழுக்கமே "பொய்தீர் ஒழுக்கம்" எனப் பாராட்டப்பெறும்

"பொறிவாயில் ஐந்து அவித்தான பொயதீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்." (திருக்குறள் கூ)

என அவர்க்கு வாழ்த்துக் கூறுவர் வள்ளுவப்பெருந்தகையார்.

மக்களை மூவகையினராகப் பிரிக்கலாம்; ஆசைக்கு அடிமைப்பட்ட உள்ள முடையவர்; ஆசை ஆகாது, அதை

அடக்குதல்வேண்டும் என உணர்ந்து போராடிப் போராடி இறுதிவரை வெற்றி தோல்வி காணமாட்டாமல் மாண்டு மடிந்தவர்; ஆசைக்கு அடிமைப்பட்ட உள்ளத்தைத் தமக்கு அடிமை கொண்ட அறிவுடையவர் முதல் வகையைச் சேர்ந்தோர், ஆசை தவறு என்று உணர்ச்சியே இலலாதவர், தக்க இன்ன, தகாதன இன்ன என்று உணரமாட்டா முதன்மையான விலங்கினத்தைச் சேர்ந்தவர்; ஆதலின், அவர்கள மக்கள் என மதிக்கும் தகுதி உடையாரல்லர்: மூன்றும வகையினர் முற்றும் துறந்து முழுமுதற்றன்மை பெற்றவர், மக்கட்கு மேலான நிலையினை யெய்தி மாண்புற்றவர்; ஆக, இவ்விருவர்க்கும உலகவாழ்வோடு உறவு இலை. உலகவாழ்வோடு உறவுடையவர், ஆசையுமை உடையராய்ப், அதன் இயல்புணராது அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமும் கொண்டு ஒயாது போர புரிபவராவர்

அத்தகையார நிலை, அந்தோ! மிகமிக வருந்தத்தக்கதாம; அவர தம் உளளதிறகும அறிவிற்கும் நடைபெறும போர, அமமமம! கொடிது கொடிது!! அவரறிவு ஒன்று அழிய, ஏனையது வலலுமவரை போர் ஒயாது; இரண்டுமாறி இணையிலலா ஆறறல் உடையவை; ஆகலின், போர் மிகவிகக கடுமையாகவே இருககும்; அது நீண்ட காலப போராகவும், ஆயுட்காலப் போராகவும் ஆகும்; இரு பெருமை படைகளை நின்று போரிடும் போராக்களமும, அதைச சூழ உளள இடமும எத்துணைப் பாழுறும் என்பதை பார்த்திருக்கிறோம

அறிவிற்கும, ஆசைக்கு அடிமைப்பட்ட உள்ளத்திற்குமை நடைபெறுமை இப்போராட்டமை நிகழும் இடமாகிய ஒருவன் உடலநிலை என்னை! எத்துணைக் கேடுறும்! அவன் உடற்கேட்டை வாயால் உரைகக்வுமை படுமோ? இத்தகைப் போராட்டத்தால அழிந்தார் சாம எத்தனை எத்தனை கோடி? அதை எண்ணிப பாத்தலுமை இயலுமோ? இப் போராட்டத்தால அவர் உடல் அழிவது உறுதி என்று

லும், அவர் உயிர் போற்றப்படும்; புகழப்படும்; வணங்கவும் படும்; ஆகலின், ஆசைக்கு அடிமைப்பட்டு அழிந்துவிடா வண்ணம உள்ளத்தை அடக்கி ஒருவழி நிறுத்தவேண்டும் என்ற உணர்வு வரபபெற்ற உரனுடையோர் உலகத்தில் மிகச் சிலரே எனினும், அம்மிகச் சிலராலேயே இவ்வுலகம இயங்குகிறது.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான."

என்ப.

உள்ளமும் அறிவும் ஒருவழி நில்லாது, மாறுபட்டுப் பொரும் இப்போராட்டக் கொடுமையினை உணர்ந்த ஒரு புலவா, அதை அழகிய ஓர் உவமையால் நன்கு விளக்கி யுள்ளார்.

அண்மையில் மணம் முடித்துக்கொண்ட இளைஞன் ஒருவன்; இல்லிருந்து நல்லறமாற்றி வையத்துள் வாழ் வாங்கு வாழவேண்டும என்ற நலலுள்ளம் உடையவன்; அறவோர்க்கு அளிததலும், அந்தணர் ஓம்பலும், துற வோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறபபின் விருந்து எதிர்கோடலும் இல்லறத்தார்க்கு இயல்புடைப் பண்பாம் என உணர்ந்தவன்; 'இசையும், இன்பமும், ஈதலும் ஏனை றும் அசையுடன் இருநூதோாக்கு' ஆகாது என்ற அறிவும் உடையான்; ஆதலின், அழகும் அன்பும நிறைந்த தன் ஆருயிர் மனைவியைப் பிரிந்து பொருள் சேர்க்க வேண்டி வேற்றார் நோக்கிப் புறப்பட்டு விட்டான்; அவளைப் பிரிந்து வந்துவிட்டானே ஒழிய, இடைவழியில் அவள் அழகும் அன்பும் அவன் உள்ளத்தைத் தன்பால் ஈர்த்துக் கொண்டே இருக்கலாயின.

கண், காது, நாக்கு, மூக்கு, உடல் ஆகிய இவற்றுள் ஒன்றின் வழியாகப்பெறும் இன்பத்திற்கே அடிமையாகி விடும் இயல்புடையது உள்ளம்; பெண்களோ, இவ் ஐவ

கைப் பொறியானும் பெறும் இன்பம் அனைத்தையும் ஒருங்கே உடையவர் என்ப.

"கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள." (திருக்குறள்: ககக.)

ஆகலின், மனித உள்ளம் மகளிர்பால் எளிதில் இரங்கிவிடும் இயலபுடையதாகும்; இளைஞன் மனவியோ பேரழகும், பேரன்பும உடைய பெண்மணியாவாள்; பின்னிவிடப் பெற்றுப் பின்புறதே தாழ்நதுகிடக்கும கூந்தல் அழகையும், நெய்தல்மலர்போல் நிறங்கொண்டு அருள் ஒழுகும் கண்களின் அழகையுமே ஆயுட்காலம் முழுதும் கண்டு மகிழலாம் போல் தோன்றும்; ஆதலின், இளைஞன் உள்ளம, அவள்பால் கொண்ட ஆசைக்கு அடிமையாகிவிட்டதில் வியப்பொன்றும் இல்லை; மேலும், அவன் பிரிநது வருகையில், பொருள்வயிற் பிரிதல் ஆடவர்க்கு இயல்பு என்ற உலகியற்கு அஞ்சிப் பிரிவிற்கு உடன் பட்டாள எனினுமை, 'இதற்கு முன் சிறிது காலமும் பிரிந் தறியா இவனை பிரிநது எவ்வாறு இதநதுணைக் காலம் ஆற்றி வாழ்வேன்' என்று எண்ணி எண்ணி வருந்தியே வழி அனுபபினள்; அவள அழகிற்கும அன்பிற்கும் மேலாக, அக்காலை அவள் கொண்ட துயர்நிலை அவன் உள் ளத்தை மிகுதியும் வருத்துவதாயிற்று; அதனல், அது அவள் ஆசைக்கு முழுதும் அடிமையாகிவிட்டது.

உடனே அது, வழியே சென்று கொண்டிருந்த இளை ஞன் காலளைத் தளைத்துவிட்டது. 'அன்பும் அழகும் உடையாரைப் பிரிந்து வருவதே தவறு; நமக்கு இன்பம் தருவார் வருந்த விட்டுவருவது மேலும் தவறும்; அவர் துயர் போக்கவேண்டிய கடமை கருதியாவது மீண்டு வீடு அடைதல் வேண்டும்' என்றது; இளைஞன் ஏற்கெனவே காதலால் கட்டுண்டவன்; காதலால், தான் பண்டு பெற்றி ருந்த நாணையும் நல்லாண்மையையும் இழந்து பெற்றவன்; அத்தகையான், தன்னல் காதலிக்கப் பெற்றாரின் துயர் நிலையினைப் பிறர் எடுத்துக்காட்டிய பிறகும், அவர்பால்

சென்று அவர் துயர் போக்காது, வேறுவினை மேற்செல்லத் தயங்குவானுயினன்; ஆகவே அவன் ஆங்கேயே நின்றுவிட்டான்.

பொருள் சேர்க்கும் நன்முயற்சியில் முனைந்து முன்வந்த இளைஞன், திடீர்என நின்றுவிட்டதையும், அவனுக்கு அவன் உள்ளம் கூறுவனவற்றையும், அவ்வுரைகேட்டு அவள் மயங்கி நிற்பதையும் அவன் அறிவு உணர்ந்தது; உடனே அது, அவள் உள்ளத்தை நோகாகி, "எவ் வினையும் தொடங்காமல் இருப்பது நன்று; தொடங்கினால், அதைக் குறைவற முடித்துவிடுதல் வேண்டும்; தொடங்கி இடையே மடங்குதல் மாண்புடையார்க்கு அழகன்று, ஆகவே 'எண்ணித் துணிக' என்ப; தொடங்கிவிட்டோம, இடையே கைவிடுதல் அறியாமை மட்டும் அன்று; நம் செயல் பிறரால் இகழ்வுமபடும்; ஆதலின் மேற்கொண்ட வினையை மறந்து வறிதே மீளுதல அறிவுமை அன்று. ஆண்மையுமாகாது; ஆகவே, உள்ளமே! நீ விரைந்து எதையும் முடிவு செய்துவிடாதே; சிறிது பொறுமையோடிரு; அவன் முயற்சியைத் தடைசெய்யாதே" என்று கூறலாயிற்று

அறிவின் அறவுரை கேட்ட இளைஞன் கால்கள், உள்ளத்தின் வழியே உளர்நோக்கிச் செல்வதை நிறுத்திக் கொண்டன; உள்ளம் பின்புறம் ஈர்ப்ப, அறிவு முன்னே உந்த, இளைஞன் செய்வதறியாது முன்னோக்கியும செல்லாது, பின்நோக்கியும் வராது நின்ற நிலையிலேயே இருப்பாயினன்; உள்ளம் காட்டிய காதலியின் துயர்நிலை அவனை வீடுநோக்கிச் செல்லத் தூண்டும், பிறரால் பழிக்கப்படுவாய் என்ற அறிவின் அச்சுறுத்தல, உள்ளம் வழிச் செல்வதைத் தடுக்கும்; இவ்வாறு உள்ளத்திற்கும், அறிவிற்கும் இடையே உண்டான இப் போராட்டத்தில் ஒரு பாற்றுணியமாட்டாமல் இளைஞன் வருந்தி வாடலாயினன், இத்தகைய போராட்டத்தின் விளைவால், தன் உடல் கெட்டு அழிந்துவிடுமோ என்று அஞ்சினன், அஞ்சினன் கண் முன் வந்து நின்றது ஒரு காட்சி.

இரண்டு பெரிய ஆண் யானைகள் மதங்கொண்டு மாறுபட்டுப் போரிடுகின்றன ; அவை இரண்டின் போராட்டத்தின் நடுவிடமாக அமைந்துவிட்டது ஒரு கயிறு; யானைகள் இரண்டும், அக் கயிற்றின் இரு முனைகளையும் பற்றி ஈர்க்கின்றன , இக்காட்சி பள்ளியில் நடைபெறும் கயிறிழுத்தல் (Tug-of-war) விளையாட்டை நினைப்பூட்டுவதாக அமைந்துளது ; யானைகள் இரண்டுமே, ஆற்றலாலோ அன்றி எண்ணத்தாலோ ஒன்றற்கொன்று இளைத்தன அல்ல ; இந்நிலையில், அவற்றின் இடைப்பட்ட கயிறு, எவ்வளவு புதுமையும் எத்துணைப் பருமையும் உடையதாயினும், அது அறுந்து அழியாது அப் போராட்டத்தின் இறுதி வரை நின்று நிலைக்கும் என்பது அரிதினும் அரிது ; ஆனால், அவ் யானைகள் இப்போது பற்றியிருக்கும் கயிறோ, நைந்து தேய்ந்து போன பரிகளைகொண்ட ஒரு பழங் கயிறு ! அது, அப் போராட்டதின் தொடக்கத்திலேயே அழிந்துபோவது உறுதி ; அது சிறிது சிறிதாக அறுந்து அழிந்துகொண்டே வரவும் தொடங்கிவிட்டது.

அக் காட்சியினை மேலும்காண் அருகிலுள்ள இளைஞன் ; அறிவும் உள்ளமும் மாறுபட்டுப் பொரும் நிலைக்களமாம் தன் உடலும், யானைகளால் ஈர்ப்புண்ட கயிறேபோல் அழிய வேண்டியது தானே என்று எண்ணி இரங்கலா யினன்

புறந்தாழ்பு இருணெடு கூந்தல், போதின்
நிறம்பெறும் ஈர்தழ் பொலிந்த உணகண்,
உளமபிணிக்கொண மோளவயின நெஞ்சம்
‘செல்லல தீகமம செலவாம’ எனலும் ;
‘செயவினை முடியாது எவ்வம செயதல்
எய்யா மைமையாடு இளிவுதலைத தரும்’ என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும : ஆயிடை
ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பறறிய

தேயிபுரிப் பழங்கயிறு போல
வீவது கொல்! என் **வ**ருந்திய உடம்பே."

(நற்றிணை: உஅசா.)

இவ்வாறு, உள்ளத்திற்கும் அறிவிற்கும் இடையே நடைபெறும் போராட்டம், இருபெரும் யானைகளுக கிடையே நடைபெறும் போராட்டத்திற்கு ஒப்பாகும் என்று கூறி, அப் போராட்டத்தின் விளைவால், அவ்வுயரிய உரனும் உள்ளமும் உடையார் தம் உடல், நலம் குன்றிக் கெட்டு அழிவதற்குப் போரிடும் இரு யானைகள்பற்றி ஈர்க்கும் **நேய்புரிப் பழங்கயிறு**, புரி நைந்து அறுந்து அழிவதை உவமையாக்கி அழகிய பாடல் ஒன்று பாடி, உயர்ந்தோர் ஒழுக்கநெறி உணர்த்திய இம் முதுபெரும புலவர்க்குத் **நேய்புரிப் பழங்கயிற்றினர்** என்ற பெயரிட்டுப் போற்றினர் தம் புலமையின் சிறப்பே சிறப்பு!

கஉ. மீனெறி தூண்டிலார்

மீனெறி தூண்டிலார் என்ற இப்புலவர் பாடிய பாட்டொன்று குறுந்தொகைக்கண் இடம் பெற்றுளது. ஒரு தலைவனும, ஒரு தலைவியும காதலித்துக் களவொழுக்கம மேற்கொண்டு ஒழுகுகின்றனர்; தலைமகன், கற்பொழுக்கத்தினும் களவொழுக்கமே இன்பம் நிறைந்தது எனவும், கற்பொழுக்கநெறியினை மேற்கொண்ட பின்னர், களவொழுக்க இன்பத்தைப பெறல் இயலாது எனவும எண்ணினான்.

அதனால், களவொழுக்கத்தினையே மேலும் சிலநாள் மேற்கொள்ள விரும்பினன்; ஆனால், அது தலைவிக்குத் துயர் தருவதாயிற்று; களவொழுகக நெறிநின்ற தலைமகன், தலைமகளைக் காண இரவென்றும பகலென்றும பாராமல், கடத்தற்கரிய வழிபல கடந்து வருதல் வேண்டும, அவன் வரும வழிஎதங்களை எண்ணும் தலைமகளுக்குத் துயர் மிகும், அவ்வழியில் அவன் வருங்கால, அவனுக்கு ஏதேனும் இடையூறு நேரின் என்னுட என எண்ணி எண்ணி ஏங்குவாளாயினள்; இதனால், அவள் நலன்குன்றத் தொடங்கிவிட்டது; அவளறிந்த தோழி, "தலைமகன் தவறுது வந்து தழுவளி செய்யவும் நீ நலம் குன்றுவது ஏன்? எங்கே ஒழிந்தன நின் நலன் எல்லாம்?" என்று வினவினள்.

அதற்கு அவள், "நான் இங்கு இருக்கின்றேன்; அவர் நலன் என் நலன்; ஆகவே, என் நலன் எல்லாம, அவர்க்குத் தினை புரிவான் வேண்டி அவரோடு தங்கிவிட்டன; அதைப பெறல் என்னால் இயலாது; அதை மீண்டும நான் பெறல் வேண்டுமாயின், அவர் என்னை மணந்துகொள்ளுதல் வேண்டும்" என்று விடை கூறினள். இக்கருத்து அடங்கியது அப்பாட்டு.

அதில், தலைமகனுடைய காட்டைப்பற்றிக் கூறுங்கால், "அது யானைகள் நிறைந்தது; யானைகளுக்கு உணவான

மூங்கில்களும் அங்கே நிறைய உண்டு; வாலுற ஓங்கிவளர்ந் திருக்கும் அம் மூங்கில்களை யானைகள் பற்றி வளைத்து அவற்றின் தழைகளை உண்ணும்; அவை, அவ்வாறு தின்று கொண்டிருக்குமபோது, அக்காட்டிற்கு அணிதேட உளள தினைப்புனங்களைக் காவல் புரிவோர், தினைக்கதிர்களை உண்ணவரும் யானை போன்ற விலங்குகளை விரட்ட வேண்டிக் கவண்வீசுவர்; அக்கவணினை, மரங்கிலை தழைகளின் றுகொண்டிருக்கும யானைகளின் காதிற் படடவுடனே, பறறியிருந்த மரங்கிளைகளைக் கைவிட்டு யானைகள பருண்டு ஓடிவிடும். யானைகளால் விடப்பட்ட மரங்கிளைகள் வானாகுறு வண்மீனைச் சுற்றிய பாயும,” என்று பாடியுள்ளார்

யானையின் பிடியினின்றும விடுபட்ட மரங்கிள்கள், விண்நோக்கி வானகற்கு, தூண்டிலைகொண்டு மீனை பிடிப போன், தன் தூண்டிலில் மீன் சிக்குணர்விட்டதை எனபதை அறிந்தவுடனே, அதை விரைந்து மேலே தூக்குவன். அந்நிலையில் அத்தூண்டற்கோல் எத்தூரை விரைவாக, எத்தூரை உயரம மேல்நோக்கி எழுமோ, அத்தூரை விரைவாக, அதைத்தூரை உயரம், அம்மரங்கிளைகள் நிமிர்ந்துவிடும் என்று உவமைகூறி, மீனெறி தூண்டிலார் எனற பெயரையும பெற்றார் என்ப

“யானை, எணைடை பெயரினை; என் நலனை
எனல் காவலா கவெணினி வெளரீஇக்
கான யானை கைவிடு பசுங்தழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனெடு ஆணெடொழிந் தனறே.’ (குறுந் 58.)

கபிலர், தாம் பாடிய ஐங்குறுநூற்றுச் செய்யுளொன்றில், “மீனெறி தூண்டில” என்ற இதே உவமையினை இந்த ஆசிரியர, இநத உவமையினை எநதப பொருளை விளக்க மேற்கொண்டுள்ளாரோ, அதே பொருளை விளக்க மேற்கொண்டுள்ளார்; இவ்வுவமையினையேயன்றி, “மீனெறி தூண்டிலின் நிவக்கும்” என்ற தொடரையும மேற்கொண்டுள்ளார்.

"சிலபின் வெதிரத்துக் கணைவிடு கருழக்கோல்
குரங்கின வன்பறழ் பாய்ந்தென, இலுங்கி
மீனெறி தூண்டிலின் நிவக்குமம்." (ஐங்குறு: உஎஅ)

இதனை கபிலர் காலத்திற்கு முன்னரே இப்பாட்டும, இப் பாட்டில் ஆளப்பட்டுள்ள யாழ்நரம்பைவிடு பசுங்கழை மீனெறி தூண்டில் என்ற அழகிய உவமையும அறிஞர்களால் பாராட்டப் பெற்றனபோலும் என எண்ணுதலும் கூடும்.

கஉ. விட்ட குதிரையார்

தமிழிலக்கியச் செய்யுட்களுள் மக்களுக்குத் திருந்திய பண்பாட்டினை உணர்த்தவல்லன அகத்துறை தழுவிய செய்யுட்களே ஆம்; அவ்வகத்துறையிலுள பெண்களின் பண்பு நலங்கள் பலவும் தோன்றி விளங்கும் இடம் களவொழுக்கமே ஆதலின், புலவர்களெல்லாம் அக்கள வொழுக்கக் கைகோள் பற்றியே பெரிதும் பாடுவாராயினர். விட்ட குதிரையார் பாடிய பாடலாக நமக்குக் கிடைத்துள்ள ஒரு பாட்டும் இக் களவொழுக்க நெறியினையே உணர்த்துகிறது.

தலைவியின் அன்பைப்பெற்ற தலைமகன் ஒருவன் களவொழுக்க நெறியிலேயே மேலும சில நாள் செல்ல விரும்பினான்; தலைவியைக் களவிற் காணல் அரிது என்பதையும அவன் அறிவான்; பலநாள் முயன்றும் அவளைக் காணமாட்டாது வறிதே மீண்டும் உள்ளான்; என்றாலும், அவன் உள்ளம் அக் களவொழுக்க இன்பத்தையே பெரிதும் விரும்புவதாயிற்று.

ஒருநாள் தலைமகள் ஊர் சென்றான்; அவள் தோழியைக் கண்டான்; தன் விருப்பத்தினை ஏற்குமாறு வேண்டினான்; அவளும் அதை ஏற்றுக்கொண்டு தலைமகளை எவ்வாற்றானும் ஆண்டுக் கொணர்வதாகக் கூறிச்சென்றாள்; சென்று தலைமகளைக் கண்டாள்; தலைமகளோ, அவனைக் காணமாட்டாமையால் கொண்ட தியரும் சினமும் உடையவளாய்க் காணப்பட்டாள்.

தோழி, மக்களின் உள்ளப்பண்பு உணர்ந்தவள்: இந்நிலையில், அவளிடம் தலைவன் விருப்பத்தினைக் கூறினால், நம்நிலை குறித்து வருந்தாது, அவன்நிலை குறித்து வருந்து நின்றனளே எனச் சினப்பள் என அறிவாள்; ஆகவே, 'தலைமகன் பெரிதும் அறிவற்றவன்; அவனை எண்ணி எண்ணி வருந்தும் நம் வருத்தத்தினை அறியாது கொன்னே உளனே' என்று தொடக்கத்தில் தலைவனைப் பழித்தாள்.

தலைவி சிறிது நெகிழ்ந்து தன் சொற்களுக்குக் காது கொடுத்துள்ளாள் என்பதை அறிந்தபின்னர், "நாம் வருந்துகிறோம் இவ்வாறு; அவளுவது வருத்தமின்றி வாழ்கின்றனை? அவனும் நம்மைப்போன்றே நம் நலன்வேண்டி, அதையே எண்ணி வருந்துகின்றான்; அவன் வருத்த நிலையினைக் கண்டுவந்த சிலா, கடுங்கோடையால் உண்ணும் உணவையும் குடிக்கும் நீரையும் இழந்ததோடு நில்லாமல், கோடையின் கொடிய வெம்மையால் வாடி வருந்தும் நம் காளைமாடுகளைப்போல், அவனும் நம் நலம்பெற மாட்டாமையால் மெலிந்து வாடுகின்றான் என்ப; என்னே அவன் அறியாமை!" என்று கூறினாள்.

"விட்ட குதிரை விசைப்பின் அன்ன
விசுமபுறாய பசுங்கணைழக் குன்ற நாடன்
யாம்தற் படர்ந்தனம் அறியான்: தானும்
வேனில் ஆனேறு போலச
சாயினன் என்பநம் மாணலம் நயந்தே." (குறுந்: எச)

தலைமகள், தன்துயரினும் தலைவன் துயரினை எண்ணியே வருந்தும் இயல்பினள் ஆதலின், அவன் வாடி மெலிகிறான் எனக் கூறக் கேட்டவுடனே தன் துயரையும், தன்துயர் பெருக ஒருகுமை அவன் கவறையும் மறந்து, அவனை எவ்வாற்றானும கண்டு அவன் துயர் போக்குதல் வேண்டும் என்று எண்ணினாள் அவனைக் காணும் வழி வகைகளைச் செய்யுமாறு தோழியை வேண்டினாள்; தோழி, தான் முன்னியது எளிதில் முடிந்தமை கண்டு மகிழ்ந்தாள்; இக்காட்சியைக் காட்டும் புலவர், காட்டு மூங்கில் விசைத்து மேல் எழுவதற்கு அமிழ்ந்தது விடப்பட்ட போர்க் குதிரைகள் விரைந்து பாய்வதை உவமை காட்டி அதனையே விட்டகுதிரையார் எனவும் பெயர்பெற்றார்.

கபி. விவ்லக விரலினர்

"புல்லிதழ் பூவிற்கும் உண்டு" என்ப கற்பே பொற் பெனக்கொண்ட தலைவி, அறிவே உருவெனவந்த தோழி, அருள் வடிவாம் செவிலி, அன்பின் திருவுருவாம் நற்றாய் போன்ற மகளிர்குலமாணிக்கங்கள் வாழ்ந்த தமிழகத்தில், பரத்தையர் போன்ற பண்பிலா மகளிர சிலரும வாழ்ந திருக்கக் காண்கிறோம் தலைவி, தோழி, நற்றாய, செவிலி முதலாம உயர்குலமகளிர்தம் மாண்புகளைப பாராடடிப பாவும பழந்தமிழ்ப் பாடல்கள, பரத்தையர் என்ற இப்பழி நிறை மகளிரைப்பற்றியும் பகர்கின்றன பரத்தையர ஒழுக்கம் தமிழகத்தில் பண்டுதொட்டே இருந்தது என்பது தமிழர் தம் நாகரிகப் பண்பாட்டிற்கு ஓர் இழுக்கே

பரத்தையர்ப் பிரிவு பழந்தமிழ்ப பாடலகளில இடமபெற்றமைக்குப் புலவர்கள் பலவாறு அமைதிகாண முயல்வர தலைவியின் ஊடலுக்குக காரணமே வேண்டுமெனவும் சிறுகாரண புலவர்கள் படைத்துக்கொண்ட ஒரு துணைப்பொருளே பரத்தையர பிரிவு எனபர் சிலர. பரத்தையர உறவு பெறுதொண்டு, தலைமகன் ஒழுக்கத்தின் இழுக்கிய காலத்தும, தலைவி தனிமையில் சிறிதும மாறுபடல் அருகலின்மேட்டுக் குணமாகி அன்புகொண்டொழுகினாள் எனக் கூறுக, தலைமகனின் கற்பின் பொற்பினைக குன்றிவிட்ட வியக்கெனத் தோன்றச் செய்யவே இப் பரத்தையர பிரிவொழுக்கம மேற்கொளளப்பட்டது என்பர் மற்றும சிலர் மணிவாசகப்பெருந்தகையாரின் திருச்சிற்றம்பலக் கோவைக்கு உரைகண்ட பேராசிரியர, "பரத்தையிற் பிரிவென்பது தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலில நுகர்வாளொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து அதன் இனிமையை நுகர்ந்தாற்போல, அவள் நுகர்ச்சியின் இனிமையறிவதற்குப் புறப்பெண்டிர்மாட்டுப் பிரியா நிற்றல; அல்லதூடம, பண்ணும பாடலுமம முதலாயின காட்டிய புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எலலார்க்குந தலைவனதலின் அவர்க்கும் இன்பம் செய்யப் பிரியாநிற்றல் என்றுமாம; அல்லதூடம் தலை

மகளை ஊடலறிதற்குப் பிரிதல் என்றுமாம்,” என்று கூறி அமைதிகாண முயல்வர்

பரதையர் ஒழுக்கத்திற்குப் புலவர்கள் எத்தகைய அமைதி காட்டினும, அவ்வொழுக்கம் இழுக்குடையது என்பதில் சிறிதும ஐயம இல்லை, வள்ளுவப் பெருந்தகை யார் பத்துக் குறட்பாக்களில் அவ் வொழுக்கத்தைப் பழிபடா ‘அன்பின் விழையார் பொருள விழையும ஆய் தொடியா,’ ‘பயன் தூக்கிப பண்புரைக்கும பண்பில் மகளிர்,’ ‘பொருட் பெண்டிர்,’ ‘இருமனபெண்டிர்’ எனப பரதையராகளையும ‘நிறைநெகிழ்சம இல்லவா,’ ‘திருநீகபபட்டா’ என அப பரத்தையர் ஒழுகுகம மேற்கொண்டாரையும பழிபபது காண்க

இவ்வாறு பலராலும் பழிக்கப்பெறும் பரத்தையருள், பொருளையே பொருளெனக கருதாம புலலொழுகுகம பிக்க சேரிப பரதையரைப்போலனறி, தலைமகனின் அன்பு ஒனையுறையே கருதிக காதலிகாண்டு அவன் ஒருவனை அன்றி பிற எவரையும மனதாலும மெதாடா டாண் புடையராய் வாழ்ந்திதாருமம உளர் அவராலும சில தரம மகனை முனபாக மனைந்து பினபுணறவுதனைவிட பெரு மனைக் கிழசியாடம பெருமிலை பெற்றிருமம உளர. அதக கையராகளை இற்பரதனை, காதற்பாதனை என்ற பெயர் சூட்டிப பாராடுகின்றன பரதமிழ்ப பாடல்கள. இத தகையபண்புடைய பரதையர பரதமிழகத்தில் பலர் வாழ்ந்திருந்தனர, மாதவியின மாண்புகண்டவர, பரதைதை யாகுலம முரடவணையுமே பழிக்க எண்ணுவர் அன்றே? அததகைய பணபுடைய பரதனை யொருதியின் உள்ளத் தின் உயர்வையும புலவர விள்ளக விரலினர் காம்பாடிய பாட் டொன்றில் விளகுகியுளளார்.

தலைவன் பரதையரொழுகுகம் மேற்கொண்டான் என்பதறிந்த தலைமகள, தலைவனின் தவறான ஒழுக்கத் திற்குப பரதனதிய காரணமாம எனக் கருதிப் பரத்தை யைப பழிகளாயினள.

தலைவியின் பழியுரைகளைப் பரத்தை கேட்டாள்; தலைவியின் செயல் கண்டு வருந்தினாள். "தலைவனை ஆசை காட்டி ஆட்கொண்டேன் என்று கூறுகின்றனர்; நான் அத்தகையாளல்லள்; தலைவாமாட்டு எனக்கு அன்பு உண்டு என்பது உண்மை; ஆனால், அதற்காகத் தலைமகள வருந்த அவரை வலிந்து பெறவோ அவர் என் வீட்டிலேயே இருக்கவோ விரும்புவேனல்லன்; எண்டு அவரே வந்தார்; வந்தாரை மகிழ்ந்து வரவேற்று வாழ்வதில் தவறு இல்லை என்றே அவரோடு வாழ்வேன்; பிரிந்துசெல்ல அவர் விரும்புவராயின், பிரியவிட்டுத் தனிதிருந்து வருந்தி வாழ்வேனேயன்றிப் போகவிடாது தடை செய்யேன்; இவ் வாறுகவும் தலைவி என்னைப் பழிபடுத்த ஏதென?" என்று கூறி வருந்தினள அன்பின் விழையாது பொருள் விழையும் பரத்தமை இழந்து, அன்புகொண்டு விழையும அறிவுடையளாய இப்பரத்தையின் பண்புடைமையினைப் பாராட்டுவோமாக!

"பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்துறை யூரனெடு
இருப்பின் இருமருங் கினமே! கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தி அவனை
நல்லகம் சேரின் ஒருமருங் கினமே." (குறுந். கூஎ0)

பண்புடைப பரத்தை யொருத்தியின் நலம் பாராட்டும் இப்பாட்டில் தலைவன் தன்மனை வதக்கால், அன்பால் அவனோடு இரண்டறக் கலந்துபோம அவள் நிலைக்கு வில்லைப் பிடித்த கைவிரல்கள் ஒன்றோடொன்று நெருங்க இணைந்து நிற்கும் நிலையினை உவமை காட்டிய காரணத்தால், இப்பாட்டாசிரியர்க்கு **வில்லக விரலிற்** பெயராய் அமைந்தது; பரத்தை யொருத்தியின் பண்புளம் கண்டு பாராட்டும் புலவர், விற்பயிற்சியும் உடையார் என்பது அவ்வுவமையால் அறியப்படுதல் காண்க.

கரு. ஓரிற் பிச்சையார்

'இசையும், இன்பமும், எதலும் மூன்றும் அசைவுடன் இருப்போர்க்கு அரும்புணர்வில்' என அறிந்த உள்ளத்தனைய தலைவன், தன் மனைவியை அரிதிற்பிரிந்து பொருள் தேடச் சென்றுவிட்டான்; சென்றக்கால், 'வினையை விரைவில் முடித்துக்கொண்டு கார்காலம் தொடங்க வந்து சேர்வன்; வருந்தற்க' என்று கூறிச் சென்றிருந்தான். அவன் மனைவியும் தன் கடமை உணர்ந்தவள்; 'அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும்' மகளிரின் தலையாயகடன்; அக்கடனற்ற பெரும்பொருள் தேவை; அதைப பெற்றுவரச் செல்கிறான் கணவன் எனத் தெளிந்த உள்ளத்தளாய் அவன் செல்ல இசைந்தாள்; செல்ல இசைந்தது அவள் கடமை உள்ளம்; ஆனல் அவள் அன்புள்ளம், அவன் பிரிவைப் பொறுது பெரிதும் வருந்துவதாயிற்று; அவன் பிரிவையே எண்ணி எண்ணித் துயருறுவாளாயினள்.

இவளுக்கு ஒரு தோழி; அவள்வேறு தான்வேறு என வாழ்ந்தறியாதவள்; இவள் துயரைத் தன்துயரெனக் கொண்டாள்; அவள் துயர்போக்க எவ்வளவோ முயன்றாள்; முடியவில்லை; அவன் வந்தாலன்றி அவள் துயர் தீராது என உணர்ந்தாள்; அவன் வரவை எதிர்நோக்கும் தோழி, அவன்வரும் காலத்தை அறியப் பெரிதும் விரைந்தாள்; அவன் கார்காலத்தொடக்கத்தே வருவதாகக் கூறிச் சென்றான்; ஆகவே, கார்காலம் எப்போது வரும் என்பதை அறிந்தால், அவன்வரும் காலதனை அறிந்து கொள்ளுதல் கூடும்; ஆகவே கார்காலம் தொடங்கும் காலத்தை அறிந்துகொள்ள விரும்பினள்; ஆனல், அதை அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை; ஒரு பொருளை எதிர்நோக்கி யிருபபார்க்கு உள்ளம் ஒருவழி நில்லாது; அது எப்போது வரும், எப்போது வரும் என்ற ஏக்கமே பெரிதாம்; அதனல் அதுவரும் காலத்தை ஆராய்ந்து

அறியும் ஆற்றல் அவர்க்கு இல்லாது போகும்; அதுவரும் காலத்தை அறிந்துகொள்வதில் அவர்க்கிருக்கும ஆர்வம், அது எப்போது வரும் என்பதை எதிர்ப்படுவார் எவரையும் கேட்கத் தூண்டும்; இஃது உலகியல். மேலும் நாட்களை அளந்து அறிந்து காட்டவல்ல நாட்காட்டிகள் (Calendar) இல்லாக்காலம் அது; கோளின் நிலை அறிந்தே நாளை அறிந்துவந்தனர் அக்கால மக்கள்; கோள்களின் நிலைமாற்றங்களை அறியவல்லாராலேயே நாட்களை அறிந்து கூறல் இயலும்; அவ்வறிவினை அக்கால மக்கள் அனைவரும் பெற்றிருந்தாரல்லர். அதை அறிந்து கூறவல்ல அறிவர் சிலர் இருந்தனர்.

அறிவராவார், காம வெகுளி மயக்கமற்று, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூக்கால நிகழ்ச்சிகளை முற்றும் உணரவல்ல மூதறிவுடையோராவர்; "மறுவில் செய்தி, மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்" (புறத்: உo), அவர் கூறும் அறவுரைகளைக் கேளாரும், கேட்க மறுப்போரும் அக்காலத்து அரியர் ஆதலின், தலைவனும் தலைவியும் அவர் கூறும் அறநெறி நின்று வாழக் கடமைப்பட்டவராவர். ஆதலின், அவர்க்கு நல்லனகூறி, அல்லன கடிதலை அறிவர்தம் கடன் என மேற்கொண்டிருந்தனர்; தலைவனும், தலைவியும் அறநெறியிற் பிறழ்ந்தபோது வன்சொல் பல வழங்கி இடித்துரைத்து நன்னெறிப்படுத்துவதிலும் அவர்கள் நாட்டம் உடையராவர்.

"கழிவினும், வரவினும் நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும், அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய வாகும் என்ப."

"சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய."

"இடித்துவரை நிறுத்தலும் அவர தாகும்,
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்."

(கற்பு: கo, கந, கச)

என்று அக்கால அறிவர்க்கு இலக்கணம் வகுப்பர் ஆசியர் தொல்காப்பியனர்.

தலைவன்வரும் கார்காலம் எப்போது வரும் என்பதை அறியத் துடித்த தோழி, அது அறிந்து கூறவல்ல அறிவரை அடைந்தாள்; அவரை வணங்கினாள்; "பெரியீர்! எம் தலைவர் வாடைவீசும் குளிர்காலத்தே வருவேன் எனக் கூறிச் சென்றுளார்; அக்காலம் எப்போது வருமோ என்று ஏங்கி வருந்துகிறாள் எம் தலைவி; அக்காலம் எப்போது வரும்! அருள் கூர்ந்து அறிந்து கூறுங்கள்; கூறுவீராயின் உங்களுக்குப் பெரும் புண்ணியம் உண்டாம்; நீங்கள், உங்கள் உணவிற்காகவேண்டி ஊர் முழுதும் அலைந்து திரியாமல், குற்றம் தீர்ந்து விளங்கும் தெருவில், நாய் உறைதல் அறியா நன்மைமிக்க வீடு ஒன்றிலேயே, செந்நெல் அரிசியாலாய சோற்றையும், தூய வெண்ணிற நெய்யையும் பெற்று வயிறார உண்டு, பனிக்காலத்தே விரும்பிக் குடித்தற்காம வெப்பம் பொருந்திய நீரையும் செப்புக் கலத்தில் வேண்டும் அளவுபெற்று மகிழ்வீராக," என்று வாழ்த்தி நின்றாள்.

இச்சிறு நிகழ்ச்சியை, ஒரு புலவர் அழகிய ஓவியமாக்கி நமக்கு அளித்துள்ளார்.

"ஆசில் தெருவில், நாய்இல் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே!
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி?
அக்கால் வருவர் எம்காத லோரே." (குறுந்: உஎஎ)

அறிவர், தமக்கு வேண்டும் வெண்ணெய் கலந்த செந்நெற் சோற்றினை வீடுதோறும் சென்று இரந்து உண்ணுமல், ஒரு வீட்டிலேயே பெற்று உண்டனர் என்றும், அவர் அவ்வாறு உண்ட உணவை ஒரு வீட்டாரே இட்டனர் என்றும் கூறி, அவ்வுணவை ஓரில் பிச்சை என்ற பெயரிட்டுப் பெருமைப்படுத்திய சிறப்பால், இப்புலவர், ஓரிற் பிச்சையார் என்ற பெயர் பெற்றுப் பெருமை உறுவாராயினர்

குப்பையும், கூளமுமாம் கழிபொருளும், கழிநீரும் கலந்து முடைநாற்றம் வீசும் நகரங்களையும்,

"முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி, அகத்தானும்
இன்சொ லினதே அறம்." (திருக்: கூட)

என்ற பண்டைத் தமிழ்ப்பண்பை மறந்து, புலிநிகர் பெரு நாய்களை வாயிலில் நிறுத்தி, 'நாய்கள் ஜாக்கிரதை' (Beware of dogs) என்ற எழுத்தோவியங்களை எழுதி மாட்டும் நாகரிகம் நனிவிளங்கும் மாடங்களையும், வீடு நோக்கிவரும் பிச்சைக்காரர்களை ஓட ஓட விரட்டுவோரும், வாயால் இல்லை என்பதற்கு மாறாக நாமும் இட்டோம் என்று சிறிதே அளித்துக் கையால் இல்லை என்று கூறி வழி அனுப்புவோரும் ஆய பெருங் கொடைவள்ளல்களை யும்கொண்ட இன்றைய தமிழுலகம, ஆசில் பெருந் தெருக் களையும், நாயில்வியன் கடைவீடுகளையும், வீடுநோக்கி வந்த பிச்சைக்காரர், மேலும் ஒரு வீடு சென்று இரக்கவேண்டிய நிலை இன்றி வயிறார உண்ணுமாறு வெண்ணெய் கலந்த செந்நெற் சோறுமம, வெந்நீரும் விரும்பித்தரும் பேருள்ளம் படைத்த பெருமக்களையும் கொண்ட பண்டைத் தமிழுல கத்தின் பண்பறிந்து அறிவுகொள்ளுமாக.

௧௩. கங்குல் வெள்ளத்தார்

உலக உயிர்கள் அனைத்தும் பிறப்பால் ஒத்த நிலையின என்றாலும், அவை தம்முள் வேறுபடுவது அவை ஒவ்வொன்றும் மேற்கொண்டொழுகும் தொழில் வேற்றுமையான் ஆம் என்று கூறுகின்றார் ஆசிரியர் வள்ளுவப் பெருந்தகையார் :

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்." (திருக்: ௯௭)

இஃது ஓரளவு உண்மையே எனினும், ஊன்றி நோக்கியவிடத்து, அவ்வேறுபாடு, அவ்வுயிர்கள் மேற்கொள்ளும் தொழில் வேறுபாட்டான் ஆகிறது என்பதினும், அவ்வுயிர்கள்தம் மனவேறுபாட்டான் ஆகிறது எனக் கொள்வதே பொருத்தமாதல் விளங்கும். ஒருவரின் சொல் வேறுபாடு, தொழில்வேறுபாடுகளுக்குக் காரணமாய் நிற்பது அவர்தம் மனவேறுபாடேயாம்.

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்."

என்ற பாரதியார் பாட்டும்,

"மனத்துக்கண் மாசிலனாதலே அறமாம்."

என்ற வள்ளுவர் வாக்கும்,

"நினைத்தலும் செய்தலோடு ஒக்கும்."

என்ற பரிமேலழகர் உரையும் இக் கருத்தையே அரண் செய்தல் காண்க.

மக்கள், இவ்வாறு ஒத்த உள்ளத்தினராய் இல்லாது இருத்தலின், அவர்களால் காணப்படும் பொருள் ஒன்றே ஆகவும், காணும் அம்மக்கள் உள்ளத்தே பல்வேறு எண்ணங்கள் எழுகின்றன. நிலவொளி வீசி எழும் முழுத்திங்கள், உலகில் உள்ள எல்லாவுயிர்க்கும் ஒத்த காட்சியையே அளிக்கின்றது என்றாலும், அதைக் காணும் அரசன்

உள்ளம் பகைவர் நாடுமீது படையெடுத்துச்செல்ல இக் காலம் எத்துணை நல்லகாலம் என எண்ணுகிறது; உழவன் உள்ளம், பயிர்களுக்கு இளைப்பின்றி நீர்பாய்ச்ச இன்பம் அளிக்குமே இக்காலம் என எண்ணுகிறது; கள்ளர் உள்ளம், தம் தொழிலைத் தடைசெய்கின்றதே இந்நில வொளி என அத்திங்களைக் காய்கின்றது; இளைஞர் உள்ளம், மணல்வீடு கட்டி மகிழ்ந்து விளையாடத் துள்ளு கிறது. மணமகன் ஒருவனைப்பற்றி எண்ணுங்கால், மண மகள் தந்தை, மணமகனின் கல்வியின் மாண்பை நோக்கு கின்றான்; மணமகள் தாய், மணமகனின் செல்வச் செருக் கில் சிந்தனை செலுத்துகிறாள்; மணமகள், மணமகனின் அழகிலும் ஆண்மையிலும் அறிவை இழக்கிறாள்;

"'ஆரணம் காண்'என்பர் அந்தணர்; யோகியர் 'ஆகமதின்
காரணம் காண்'என்பர்; காமுகர் 'காமனன் னூலது'என்பர்,
'ஏரணம் காண்'என்பர் எண்ணர்; 'எழுத்து' என்பர் இன்புலவோர்;
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என்ற செய்யுளும் இக்கருத்தே கூறுதல் காண்க. புகார் நகரத்தே இந்திரவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஆனல், கோவலனேடு கூடியுறையும் வாய்ப்பினளாய மாதவி, மகிழ்ச்சியாற் சிறந்து விழாக் காணச் செல்லுகிறாள்; அவனைப் பிரிந்துறையும் பெருந் துன்பினளாய கண்ணகி கருங்கண்ணளாய்க் கலங்கி நிற்கின்றாள் என்ற காட்சிகளைச் சிலப்பதிகாரம் சித்திரித்துக் காட்டுவதையும் காண்க.

இவ்வாறு காணப்படும் ஒரேபொருள் காண்பார்தம் தகுதிக்கேற்ப அவர்தம் உள்ளத்தே பல்வேறு வகைப்பட்ட கருத்துக்களைத் தோற்றுவிப்பதே அன்றி, காணுகின்ற ஒருவர் உள்ளத்திலேயே காலவேறுபாட்டான், வேறுபட்ட கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் உண்டு. ஞாயிற்றின் தோற்றம் என்றும் ஒன்றுகவே இருப்பினும், அதை இளமையில் கண்டக்கால் எழுந்த உள்ளக்கிளர்ச்சி, அவர்க்கு முதுமையில் அதைக் காணுங்கால் உண்டாகுதல் இல்லை.

மாலைக்காலம் மனக்கினிய காட்சிகளையுடையது; அணிபெறத் தோன்றும் ஆறும், சோலையும்; மகளிர் சூடிக்கொள்ளுதற்காம் மணமிக்க மலர்களை மனம் உவக்கும்வகை தொடுத்து விலைகூறிவரும் மலர் மகள்; வீடு நோக்கிவரும் ஆக்களைத் தொடர்ந்துவரும் ஆனேறுகள்; ஆணும் பெண்ணுமாய் அணி அணியாய்ப் பறந்துவரும் பறவைகள்; ஆயன்குழல்; கோயில் முழவு ஆகிய இவை அக்கால அணிகளாம். மாலைக்காலத்தின் இம் மாண்புகளில் மாறுதல் நிகழ்தல் எப்போதும் இல்லை; ஆனால், கணவனோடு கலந்துறையும் மகளிர்க்கே இத்தகைய மாலைக் காலம் மனம் நிறை மகிழ்ச்சியினை அளிக்கவல்லதாம். கணவனைப்பிரிந்து தனித்துறையும் தலைமகள் ஒருத்திக்கு அம்மாலைக்காலமும், அக்காலக் காட்சிகளும், அவள் தன் கணவனோடு கூடியிருந்தகாலத்து இன்ப நிகழ்ச்சிகளை நினைவூட்டிப் பெருந் துயரையே தரும். 'காதலர் இல்லாத விடத்துக் காணும் மாலைக்காலம், கொலைக்களத்தே கொல்ல வரும கொலையாளிகளைப்போல் தோன்றிக் கொடுமை செய்கிறதே!' என்றும், 'இமமாலை இத்துணைக் கொடியது என்பதைக் காதலரொடு கலந்துறை காலத்து அறியேனே!' என்றும் கூறி வருந்துகிறாள் ஒரு தலைவி.

"காதலா இல்வழி, மாலை கொலைக்களத்து
எதிலர் போல வரும்." (திருக்: 1220)

"மாலை நோய்செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்." (திருக்: 1222)

மாலையின் மாண்பு என்றும் ஒன்றேயாகவும், மகளிர், தம் சூழ்நிலைக்கேற்ப, அதை இன்பவுற்றுகவும், துன்பச் சூழலாகவும் மாற்றி மாற்றிக் கொளவதைப்போன்றே, இரவுக்காலத்தையும் மதிபபர். தலைவனோடுறையும் பெரு வாழ்வு பெற்றுளொருத்திக்கு இரவு பேரின்பம் தருவ தாய்த் தோன்றும். அத்தகையாள், இதுகாலை; இது பகல்; இது மாலை; இது நள்ளிருள்; இது விடியல் எனப் பொழுதைப் பிரித்தறியும் ஆற்றலையும் இழப்பள்; அந்த அறிவு நல்லோர் காதலுக்குச் சான்றுகாது என்ப.

"காலையும், பகலும், கையறுமாலையும்
ஊர்துஞ்சு யாமமும், விடியலும் எனறு
இப்பொழுதிடை தெரியின பொய்யே காமம்."

(குறுந்: ஈ உ)

அப்பேறு பெற்றுள் பொழுது கழிவதையும் அறியாள்;

"செங்கதிர்ச செல்வன் எழுசசியுப, பாடும்
திங்களும நாளும் தெளிதல் செயயா.'

என்று அவர் நிலையினை விளக்குவர் பெருங்கதையாசிரியர். அத்தகைய இனிய இரவையும, அதில் இன்துயிலையும் பெற்றுள் ஒருமகள், விடிந்ததுபொழுது என அறிவிக்கத் தன் குரலை எழுப்பித தன் துயிலிற்குக் கேடுவிளைத்த சேவலைச் சினந்து சபிக்கும் குறுந்தொகைச் செய்யுள், மகளிர்தம் மனஇயல்பை நன்கு விளக்குவது காண்க.

இவ்வாறு, கணவரோடு உடனுறை மகளிர்க்குப் பேரின்பம்தந்து அளவால் குறுகியதுபோல் தோன்றும் இரவு, தம் கணவர் கல்வி, பொருள் முதலாயின குறித்துப் பிரிந்து சென்றுராகத் தனித்துறை மகளிர்க்கு நிறைதுயர் தந்து பெருகிதேதான்றும்; ஊரெலாம் துஞ்சியவிடத்தும் அம்மகளிர்க்கு உறக்கம் வாராது; சென்ற கணவரையே எண்ணி இருக்கும் அவர் உறக்கம் கொள்ளார்; தாம்மட்டும் உறங்காது இருக்கவுமம, கவலையற்று உறங்கும் ஊரார் மாட்டுப் பெருங்கோபம் உண்டாம்; கண்வரோடு இருந்த காலத்தில் கணத்தில்கழிந்த இரவு, பிரிந்து தனித்துறையும் காலத்தில் ஓர்இரவு ஒரு யுகம்போல் நீண்டுதோன்றும். "ஒருநாள் எழுநாள்போல் தோன்றும்." அத்தகைய இரவை,

"கொடியார் கொடுமையின் தாம்கொடிய, இந்நாள்
நெடிய கழியும் இரா."

(திருக்· கஉஉ)

எனச் சினந்து கூறுகிறுள் ஒரு தலைமகள்.

மகளிர் மாலைக்காலத்தையும், நள்ளிருள் யாமத்தையும் மதிக்கும் மதிப்பீடு இது. மாலைகண்டு மருண்டு, இரவு

கண்டு அரற்றும் தலைமகள் ஒருத்தியின் நிலையினை சுண்டுக் காண்க. கணவன் யாதோ ஒருகாரணம்பற்றி வெளிநாடு சென்றுளான். தலைவி தனித்துவாழ்கிறாள்; ஒருநாள் மாலை; மாலைக்காட்சிகள் தன் மனத்துயரைத் தூண்டி விட்டதாக வருந்தி நிற்பாளாயினள்; அவள் அருகே அவள் ஆருயிர்த்தோழி நிற்கிறாள்; ஆற்றியிருப்பதே மகளிர்க்கு அறமாம் என அறிந்த அறிவுடையாளவள்; தான் அறிந்த இவ்வறவுரையினைத் தலைவிக்கு உணர்த்தி ஆற்றக் கடமைப்பட்டவள் தான் என உணர்ந்தாள; 'இம் மாலைக் காட்சிகளால் மதிமருண்டு மனத்துயர்கொண்டு வருந்துவது அழகன்று; ஆற்றியிருத்தலே அறநெறியொழுகும் அன்புடை மகளிர்க்கு அறமாம' என்று கூறினள். அது கேட்ட தலைமகள், "தோழி! ஆற்றியிரு; ஆற்றியிரு; என்கின்றனை; ஆற்றியிருக்கவே யானும விரும்புகின்றேன்; ஆனல், அந்தோ! யான என்செய்வேன்? பகலோ கழிந்து விட்டது; முல்லையும மலர்ந்து மணங்கமழத் தொடங்கி விட்டது; ஞாயிறு வெப்பம்குறைந்து குளிர்ந்துவிட்டது; இந்த இன்பச்சூழல், அந்தோ! என்னைச் செயலறும்படி செய்துவிடுகிறதே! என்செய்வேன்? எவ்வாறு ஆற்றுவேன்? நின் அறிவின் துணைகொண்டு, இரவு தொடங்கும் வரை உளதாகிய சிறுபொழுதாம் இம் மாலைக்காலத்தை ஒருவாறு கழித்துவிடுதலும கூடும்; ஆனல், அதனல் யாது பயன்? இம் மாலையைத் தொடர்ந்து வருகிறதே இரவு! அவ்விரவிற்கு எல்லை காண்பதே அரிதாயிற்றே! கடலிற்குக் கரை காணினும் காணலாம், இவ்விரவிற்கு எல்லைகாணல் இயலாதே! அத்துணை நெடியஇரவை யான் எங்ஙனம் ஆற்றுவன்? என் ஆற்றல் இத்தகையதாகவும், அதனை அறிந்துகொள்ளாது 'ஆற்றியிரு; ஆற்றியிரு' என ஓயாது உரைக்கின்றனையே; நின் செயலின் அறியாமை தான் என்னே?" என்றுகூறி, தலைவனைப்பிரிந்து தனித்து வாழ்தலறியாத் தன் உள்ளத்தினை உணர்த்தினள்:

எல்லை கழிய, முல்லை மலரக்,
கதிர் சினம் தணிந்த கையறு மாலையும்
இரவு வரம்பாக நீந்தினம ஆயின்,

எவன் கொல்? வாழி தோழி!
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே. (குறுந்: ஈஅஎ)

தமிழில் மிகப்பெரும் எண்களைக் குறிக்கவரும் எண்ணுப் பெயர்களுள், தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன சிறப்புடையனவாம்; இப்பெயர்களை,

"ஐ, அம், பல் எனவரூஉம் இறுதி
அல் பெயர் எண்." (தொல். எழுத்து: ஈகஈ)

என வழங்குவர் ஆசிரியர் தொல்காப்பியனார். அளவிடற்கரியது என்ற காரணத்தினாலேயே மழை பெய்தவிடத்துப் பெருகிவரும் பெருநீரை வெள்ளம் என்று பெயரிட்டு அழைப்பாராயினர்; தமிழ்நாட்டுப் பேச்சுவழக்கில், தேவைக்கு மேற்பட்டது என்ற பொருளில் வெள்ளம் என்றசொல் இன்றும் வழங்கக் காண்கிறோம். இச் செய்யுளுள், தனித்துநிற்கும் மகளிர்க்கு மிகநீண்டு தோன்றும் இரவினைக் குறிப்பிடக் கங்குல் வெள்ளம் என்ற தொடரை மேற்கொண்ட இப் பெருமையினால் இச் செய்யுளைப் பாடிய புலவர், தம் இயற்பெயர் மறைய, கங்குல் வெள்ளத்தார் என்ற சிறப்புப்பெயரினைப் பெறுவாராயினர்.

கஎ. குறியிறையார்

தலைவியோடிருந்து அவளுக்கு அறிவுரை கூறியும், அவள் துயர் போக்கியும் துணை புரிதல் தோழியின் கடமை. அது நன்கு நடைபெற அவள் விரும்புவாள்; அதற்கு அவள் பலப்பல வழிகளை மேற்கொள்வாள்; தோழியின் தொண்டு நிறைவேற அவள்பால் வன்கண் சூழ்ச்சிகள் பல வேண்டியிருக்கும். தலைவனைப் பிரிந்து தனித்துறையும் தலைவியின் துயர்போக்கி ஆற்றும்செயல் அத்துணை எளிய தன்று; தலைவி, பிரிவுத்துயரை எளிதில்மறந்து மன மகிழ்ச்சி கொள்வாளல்லள்; ஆதலின் அவள் துயர் போக்கத் தோழி பலவழிகளை மேற்கொள்ள வேண்டிவரும். உலகியலும், அறநெறியும் பயன்படாத போயவிடத்து, 'இவளை நம்மால் ஆற்றுதல் அரிது; அவளை அழுது ஓயட்டும்' எனவிட்டுத் தன் தோல்வியை ஒப்புக்கொள்வா ளல்லள்; அவளை ஆற்றி வெற்றிபெறவே விரும்புவாள்; எல்லா முறையும் தோல்வியுற்றவிடத்து அவள் மேற்கொள் ளும் முறை யொன்றுண்டு

தலைவி, தலைவன் தன்னைப்பிரிந்து சென்றுவிட்டான்; தனித்து விட்டுச்சென்ற அவன் செயல் அறக்கொடிது என்றெல்லாம் எண்ணும் இயல்பினளாயினும், தலைவனைத் தன்முன் பிறர் பழிகூறுவதைப் பொறாள்; 'தகைசான்ற சொற்காத்த'லன்றே தலையாய தமிழ்ப்பெண்ணின் கடமை? இந்த உண்மையினை உணர்வாள் தோழி; தலைவியின் துயர்போக்கத் தான் மேற்கொண்ட முயற்சியெல்லாம் தோற்றுவிட்டபின்னர், தோழி தலைவியின் காதில்படுமாறு, 'என்ன தலைவன் இவன்? அறநெறி யுள்ளதகளாய எம் தலைவி எதையுமே மறந்து அழுதுநிறகுமாறு தனித்திருக்க விட்டுப் பிரிந்துவிட்டானே; அறநெறி யுணர்ந்தவனை அவன்? அன்புடையான் என்று அன்று எண்ணியது தவறு; ஆற்றவும் கொடியான் அவன்; அத்தகைய கொடி யவனை நினைந்துகொண்டு இவள் அழுகிறாள்; இவள் பேதைமைதான் என்னே?" என்று கூறுவாள். கேட்ட

வுடனே தலைவிக்குச் சினம் பிறக்கும்; 'நம் தலைவரை நம் கண்முன் பிறர் பழித்துரைக்கின்றனரே; அவரைப் பழித்துரைக்க இந்தத்தோழி யார்?' என வெகுள்வாள்; ஆனால் அவளோ குணமென்னும் குன்றேறி நின்றவள்; ஆதலின் உடனே சினம் மறையும்; தன் தவறு தன்முன் வந்துநிற்கும்; தலைவன் தவறு செய்துவிட்டான் என்று எண்ணிய தானன்றோ யான் அவன்பிரிவை ஆற்றாது அரற்றினேன்? யானே அவன்மீது குறைகண்டேன் எனின், அவன் உண்மை இயல்பை—உள்ள அன்பை உள்ளவாறு உணராத பிறர், அவன்பால் குறை காண்பதில் வியப்பொன்றும் இல்லையன்றே? ஆகவே, தோழி தலைவனைப் பழித்துரைத்தற்கு யானே காரணம்; தவறியவள் யான்; தோழி அல்லள் என்று உணர்வாள்; உடனே அழுகை ஓயும்; அழுகையைக் கைவிடுவதோடு நில்லாள்; "தோழி! தலைவன் ஏதோ தவறு செய்துவிட்டான் என்று கூறுகின்றனையே! அவரை நீ அறிவாயா? உலகமே நிலைமாறினாலும் அவர்மாட்டுக் குறை நிகழாது; தெரியுமா? அவரை அறியாதநீ அவரைப பழிகூறுவதை இனியும் மேற்கொள்ளாதே" என்று கூறவும் தலைப்படுவள். தலைவியின் செயல் கண்ட தோழி தன் கடன்முடித்த வெற்றிக்களிப்பால் உள்ளூர நகைகொள்வள், இது தோழியின் தொண்டுகளுள் ஒன்று; அத்தகைய தோழி ஒருத்தியின் தொண்டினைக் கூறுவதே இச் செய்யுள்.

தலைவியொருத்தி பிரிந்துசென்ற தன் கணவனையே நினைந்து வருந்திக்கொண்டிருக்கிறாள்; அவள் தோழி அவள் துயர் போக்கத் தன்னாலானதெலாம் செய்து பார்த்துவிட்டாள்; பயனில்லை; இறுதியில் தலைவியிடம் சென்றாள்; அவளை நோக்கி, "தலைவி! யானைகள் குட்டியாய் இருக்கும்போது பார்த்திருக்கிறாய் அல்லவா?" என்றாள்; தோழி ஏதோ புதிய நிகழ்ச்சியொன்றைக் கூறப்போகிறாள் என எண்ணிய தலைவி "ஆம்" என்றாள்; உடனே தோழி, "அந்த யானைக் கன்றுகள் காட்டில் வாழும் குறுகிய முன்கைகளையுடைய குறவர்களின்

குழந்தைகளோடு ஆடி மகிழும் காட்சியைக் கண்ட துண்டா?" என்றாள்; தலைவி, "ஆம்" என்றாள். "சில ஆண்டுகள் கழிந்தபின்னர், அந்தக் குறச்சிறுவர்கள் காத்து நிற்கும் புனத்துத்தினையை அன்று அவரோடு ஆடி மகிழ்ந்த அதே யானைகள் புகுந்து அழிப்பதையும், தம் புனத்துட்புகுந்து கேடுசெய்யும் அந்த யானைகளைக் குறச் சிறுவர்கள் அடித்து விரட்டுவதையும் கண்டதுண்டா?" என்றாள்; தலைவி அதற்கும் ஆம் என்றாள். "விளையாடும் சிறு பருவத்தில், இந்த யானைக்கன்றுகள் பிறிதொரு காலத்தில தாம் காகரும் தினைப்புனத்துட் புகுந்து பாழ் செய்யும் எனக் குறச் சிறுவர்கள் அறிந்திருப்பார்களானால், அந்த யானைக்கன்றுகளோடு ஆடி, அவற்றிற்கு மகிழ்ச்சி அளித்திருப்பார்களா? அன்று அந்த அறிவு அவர்களுக்கு இல்லை; ஆகவே அவற்றோடு ஆடி மகிழ்ந்தார்கள்; இன்று அழிக்கின்றன அவை; இந்த நிலையில், "அன்று நம்மோடு ஆடிய யானைகள் இவை; இவற்றை அடித்து ஓட்டுவதா? கூடாது; இப்போதும் அவற்றோடு ஆடி மகிழ அழைப் போம்" என்று எண்ணுது, கவண்வீசித துரத்த அன்றோ தொடங்குகின்றனர்; குறச் சிறுவர் உணர்ந்த இச் சிறு உண்மையினையும் நீ உணர்ந்தாயல்லை; என்னே நின் பேதைமை? தலைவர் அன்று நம்மோடு கூடி ஆடி மகிழ்ந் தார்; குறச் சிறுவர்களோடு யானைகள் ஆடி மகிழ்ந்ததைப் போல; இன்று பிரிந்து சென்று நமக்குத் துயர் தருகிறார், யானைகள் புனத்தை அழிப்பதுபோல்; அவர் இயல்பு அது; நின் அறிவு என்னயிற்று? கேடு செய்யும் யானைகளைக் குறவர்கள் அடித்து விரட்டுவதுபோல், துயர் விளைக்கும் தலைவரை மறந்து ஒதுக்குவதைவிட்டு அவரையே நினைந்து வருந்துகின்றனையே; இஃது அறிவுடைமையா?" என்று பொருள்தோன்றக் கூறி நிறுத்தினள்.

"முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந்தோடி
முன்னுள் இனியதாகிப், பின்னுள்

அவர்தினை மேய்தந் தாங்குப்
பகையாகின்று அவர் நகைவிளையாட்டே.''

(குறுந் : ஈடுஅ)

தலைவனைத் தோழி பழிக்கத் தன் ஆற்றுமை எந்த அளவு துணைபுரிந்து விட்டது என்பது அறிந்து அஞ்சிய தலைவி உள்ளம் தெளிந்து உறுதி கொள்வாள்; தோழி, தன் கடன் குறைவற முடிந்தது கண்டு மகிழ்வாள்

தலைமகளைத் தேற்ற வன்சொல் சிறிதாவது வழங்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே, தோழி குறவர் செயலைக் குறிப்பிட்டாள் எனினும், அதனால் தலைவனை வெறுத்தல் வேண்டும் என்னும் கருத்தினள் அல்லள்; அவள் அவ்வாறு கூறுவது அறமுமாகாது; தோழிக்கு அது கருத்தன்று என்பதை அறிவிக்கவே குறச் சிறுவர்களைக் குறுகிய முன்கையினர்—குறியிறைப் புகல்வர்—என்றார்; குறுங்கையர்பால் பேரறிவுகாணல் அரிது; பேரறிவினர் நீண்டகையினராதல் இயல்பு. குறவர் செயல் அறச் செயலற்றது; அவர் செயல் நமக்குப் பொருந்தாதென்பதைக் குறியிறை என்ற ஒரு சொல்லினாலேயே விளங்கவைத்தமையால் இச் செய்யுளைப்பாடிய புலவர் குறியிறையார் என வழங்கப்பட்டார்.

கஅ. கூகைக் கோழியார்

செல்வம் எங்கும் ஓர் அளவினதாகாது ஒருவரிடத்தே பெருகியும், மற்றொருவரிடத்தே குறைந்தும் நிற்பதே உலகப் போராட்டங்களுக்கு அடிப்படையாம். இந்த உண்மையினை மக்கள் இன்றேபோல் அன்றும் உணர்ந் திருந்தனர்; அதனல், அச்செல்வம் அவ்வாறு நெறியின்றிக் குவிவதை நிறுத்தி நிறைசெய்யவேண்டும் என்று அவர் களும் எண்ணினர்; ஆனல், அதற்கு அவர்கள் மேற் கொண்டமுறை இக்கால முறையினும் முற்றிலும் வேறு பட்டது; ஆனல் முழுப்பயன் அளிக்கவல்லது; அம்முறை களுள் ஒன்றே,

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை." (திருக்: கூஉஉ)

என்ற திருக்குறள் போன்ற அறவுரை கூறல். பெரும் பொருள் பெற்றூர்பால் தேங்கிக்கிடக்கும் பொருள், அது பெறுத ஏழைகள்பால் சென்று சேரவேண்டும் எனின், அதைச் செல்வர்களினின்றும் வலிதிற் கவர்ந்து அளிப்பது கூடாது; அதனல் நாட்டில் அமைதிக்குப்பதில் ஆத்திரமே நிலவும். ஆகவே அந்தச் செயலைச் செல்வர்கள் தாமே விரும்பிச் செய்தல்வேண்டும் என விரும்பினர் அக்கால மக்கள்; அதற்கு அவர்கள் மேற்கொண்ட வழிகளில் ஒன்றே நிலையாமையினை எடுத்துக் கூறுவது. உடலும், பொருளும் அழிவற்றன என்ற எண்ணம் பெரும் பொருள் சேர்க்கத்தூண்டும். அவை நிலையற்றன; ஒருநாள் அழியக் கூடியன என்ற எண்ணம் அவற்றின்பால் பற்றறச் செய்யத் துணைபுரியும்; அந்த எண்ணம் உண்டாயவர் அவற்றின் பால் உள்ளத்தைச் செலுத்தார்; இஃது இயற்கை நியதி; இந்த உண்மையை உணர்ந்த புலவர்கள், செல்வர்கள் உள் ளத்தில் இவ்வுண்மை குடிபுகும் வகையில் நிலையாமையினை விளக்கிப் பல பாக்களைப் பாடிச்சென்றனர்; அந்த எண் ணம் இடம்பெற்ற உள்ளத்தினராய் காரணத்தால் அக் காலச் செல்வர்கள், தாம் சேர்த்த பொருளைத் தமக்

கெனவே கொள்ளாது, அது ஏழைமக்களுக்கும் பயன் படுமாறு பல்வேறு அறத்துறைகளை மேற்கொண்டனர்; இதனல் அக்கால மக்களிடையே அழிவுதரும் பொருளா தாரப்பூசல் இடம்பெறுது போயிற்று.

இத்தகைய அரும்பணி ஆற்றிய புலவர்களுள் கூகைக் கோழியாரும் ஒருவர். அரசன் ஒருவனைக் கண்டார்; அவன் மறத்தைப் பாடினர்; அவன் பெருமையைப் பாடினர்; பின்னர்ச் சுடுகாட்டின் இயல்பினைச் சுட்டிக் காட்டினர்: நிலம் பிளவுபடுமாறு படர்ந்துசெல்லும் பெரு வேர்களையுடைய பழைய மரங்கள், அம்மரப் பொந்துகளில் இருந்துகொண்டு கேட்போர்க்கு அச்சம் வருமாறு கூவிக் கொண்டிருக்கும் பேராந்தைகள், இறந்து வீழ்ந்தோர் உடல்களைக் கவிழ்த்துவைக்கும் எண்ணைத் தொலையாத் தாழிகள் முதலாயின இருப்பதை எடுத்துக் கூறினர். தாழிகளின் நினைவு, நாமும் ஒரு நாள் அழியவேண்டியவர் களே என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் உண்டாக் கியதை உணர்ந்தார்; அவ்வாறு இறந்து அக்காடு அடைந்த பின்னர்ப் பெறமுடியாத பேரின்பம் ஒன்று உண்டு; அதை இன்றே அடைவோம் என்றார்; அரசன் உள்ளமும் அவர் வழிச்சென்றது; உடனே புலவர் "அந்த இன்பம் ஈத்துவக்கும் இன்பம்; நின்னைப் பாடிவரும் பாண்மகளுக் குப் பொன்மாலையும், பாணனுக்குப் பொற்றுமரைப் பூவும் தந்து பெருமைசெய்து, ஆட்டுக்கடாவைக் கொன்று பெற்ற ஊனைத் தீயிலிட்டுச் சுட்டுக் காயம் முதலாயின இட்டுச் சமைத்த நல்ல உணவினை நாமும் உண்டு, நம்பால் வந்து இரப்போர்க்கும் ஈந்து அவர் இன்முகம் கண்டு மகிழ்ந்து வாழும் வாழ்வு பின்னர்க் கிடைக்காது; அதை இன்றே பெறுவோமாக" என்று கூறி அமைந்தார்.

"வாடா மாலை பாடினி அணியப்,
பாணன் சென்னிக் கேணி பூவா
எரிமருள் தாமரைப்பெருமலர் தயங்க,
மைவிடை இரும்போத்துச் செந்தீச் சேர்த்திக்
காயம் கனிந்த கண்ணகன் கொழுங்குறை

நறவுண் செவ்வாய் நாத்திறம் பெயர்ப்ப
உண்டும், தின்றும், இரப்போர்க்கு ஈய்ந்தும்,
மகிழ்கம் வம்மோ மறப்போ ரோயே !
அரிய ஆகலும் உரிய ; பெரும் !
நிலம்பக வீழ்ந்த அலங்கல் பல்வேர்
முதுமரப் பொதுதிற் கதுமென இயம்பும்
கூகைக்கோழி ஆனைத்
தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே.” (புறம் : ஈகூ)

இந்தப் பாட்டைப் பாடிய புலவர் கூகைக் கோழியார். கயமனார், ஐயாதிச் சிறுவெண்டேரையார் முதலாய புலவர்கள் வாழ்ந்தகாலத்தே வாழ்ந்தவர். அவர்கள் பாராட்டிய தலைவனையே இவரும் பாடியுள்ளார் ; இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்துளது பெருங் காஞ்சித்துறை தழுவிய இப்பாடல் ஒன்றே. இதில் முதுகாட்டின் இயல்பை விளக்கிக்கூறும் பகுதியில், அது முதிர்ந்து பருத்த பெருமரங்களையுடையது ; அம்மரப் பொந்துகளில் பேராந்தைகள் இருந்துகொண்டு கேட்பார்க்கு அச்சம் வருமாறு கூவும் என்று கூறிவருங்கால், அபபேராந்தையினைக் கூகைக்கோழி என்று பெயரிட்டு அழைத்துள்ளமையால் இவர் பெயர் கூகைக்கோழியார் என வழங்கப் பட்டது.

---

௧௩. தும்பி சொகினனார்

இவர் இயற்பெயர் யாது என்பதில் புலவர்களிடையே ஒருமைப்பாடு உண்டாகவில்லை. நற்றிணை உரையாசிரியர், "இவர் பெயர் தும்பிசோகீரன்: கீரன் என்பது இயற்பெயர்; சோ—அடைமொழி. இதன் பொருள் விளங்காமையால் இவர் பெயரைச் சேர்கீரனென்று பதிப்பிக்கலாயிற்று; தமது பாடலிலே தும்பியை.....பாராட்டிக் கூறலின், இவர் தும்பிசோகீரனெனப்பட்டார்" என்று எழுதியுள்ளார். டாக்டர் உ. வே. சா. அவர்கள், "தும்பியை விளித்துக் கூறியதாக அமைத்தமையின் இச் செய்யுளைப் பாடிய புலவர் தும்பிசேர் கீரனென்னும் பெயர்பெற்றார் போலும்; இதனைத் தும்பிசொகினனென்று படித்தற்கும் இடமுண்டு" எனக் குறுந்தொகையிலும், "தும்பி: ஒரு வகை வண்டு; சொகினம: நிமித்தம். தும்பியை நோக்கிச் செய்திகூறிய சிறப்பால் இவர் தும்பி சொகினனார் எனப் பெயர் பெற்றார்போலும்; தும்பிசேர்கீரனார் என்றும் பிரதிபேதமுண்டு" எனப் புறநானூற்றிலும் கூறியுள்ளார். திருவாளர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் "சொகினன் என்பது காரணம்பற்றி வந்தபெயர்; அவர் தொழில், நிமித்தங்கூறுதல். நிமித்தம் கூறுவார்க்கு அரசர் ஊர்பல அளித்துச் சிறப்புச்செய்தல் உண்டு; அவ்வாறே இவரும் அரசரால் சிறப்புச் செய்யப்பெற்றுளார்; அவ்வாறு அவர் பெற்றவூர் வேங்கடத்துக் கண்மையில் உள்ள திருச்சானூர்; அது பண்டைக்காலத்தில் திருச்சொகினனூர் என வழங்கியுளது என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள; ஆகவே இவர் தொண்டைநாட்டினராவர்" என்றும், "அவர் பெயர்க்கு முன்வரும் தும்பி என்ற சிறப்புப்பெயர், தும்பியைப் பாடிய காரணத்தால் வந்ததன்று; அது காரணமாயின், பாலைபாடிய என்பதேபோல், தும்பி பாடிய சொகினனர் என வந்திருக்கும்; சில ஏடுகளில் தும்பி என்பது தும்பை எனக் காணப்படுகிறது; தொண்டைநாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்துப் பொன்னேரிக்கு வடக்கே "தும்மூரு"

என்ற ஓர் ஊர் உளது ; அவ்வூர்க் கோயிலில் காணப்படும் சோழர்காலக் கல்வெட்டுக்கள், அவ்வூரைத் தும்பையூர் என்று குறிப்பிடுகின்றன ; சொகினனார் இத் தும்பை யூரைச் சேர்ந்தவராவர் ; ஆகவே அவர் பெயர் தும்பைச் சொகினனர் என்றே வழங்குதல்வேண்டும்'' என்றும் கூறுவர்.

தும்பியைப் பாடியவர் பெயர், தும்பியைப் பாடிய என்றே அடையடுத்தல்வேண்டும் எனல் பொருந்தாது ; ஓரேர் உழவு, தனிமகன், தொடித்தலை விழுத்தண்டு முத லாயவற்றைப் பாடிய புலவர் பெயர்கள் ஓரேர் உழவு பாடிய, தனிமகன் பாடிய, தொடித்தலை விழுத்தண்டு பாடிய என அடையடுத்து வராமல், ஓரோ உழவனர், தனி மகனர், தொடித்தலை விழுத்தண்டினர் என்றே வழங்குதல் காண்க. பல நூல்களைப்பற்றிய பல ஏடுகளில் பயில வழங்கும் தும்பி என்ற பாடத்தை ஒதுக்கிவிட்டு, புற நானூறு ஏடு ஒன்றில்மட்டும் கண்ட தும்பை என்ற பாடத்தைமட்டும் மேற்கொள்வதும், அதையே உண்மை யெனக்கொண்டு, அந்தச் சொல், தொண்டைநாட்டில் உள்ள ஓர் ஊரின் பெயரோடு ஒற்றுமை உடையதாக உளது என்ற ஒரே காரணம் காட்டி, வேறு நல்ல சான்று எதுவும் காட்டாமலே, அவர் அவ்வூரினர் எனக் கூறுவ தும் பொருந்தாது.

நமக்குக் கிடைத்த இவர் பாடல்கள் ஆறு ; புறத்தில் ஒன்று ; நற்றிணையில் ஒன்று ; குறுந்தொகையில் நான்கு ; இவர் பாடல்கள் அனைத்தும் எவர் பெயரையும குறிப் பிடாமல் பொதுவாகவே அமைந்துவிட்டமையால், இவர் வரலாறு எதையும் அறிந்துகொள்வதற்கு இயலாது போயிற்று.

கணவனை இழந்தமகளிர் அவன் நடுகல்முன் இடத்தை மெழுகித் தூய்மைசெய்து வழிபடும் வழக்காற்றினை அடிப் படையாகக்கொண்டு பாடிய புறநானூற்றுப் பாட்டில், தன் கண்ணீரையே நீராகக்கொண்டு மெழுகுவாள்,

"மெழுகும் ஆப்பிதன் கண்கலுழ் நீரான்"

என்று கூறும் பகுதி, கணவனை இழந்த மகளிர்தம் கடுந் துயர்க்காட்சியினை நம் கண்முன்கொண்டு நிறுத்துவ தாகும்.

இற்செறிக்கப்பட்ட தலைமகள் ஒருத்தி, தும்பி யொனறை நோக்கி, "மலர்தோறும்சென்று மதுவைத் தேடி அலையும் ஏ மணிச்சிறைத் தும்பி! இங்கே இவ்வா று அலைவதைவிடுத்து எம் தலைவர் நாட்டிற்குச் செல்; அவர் நாடு வளததிற் சிறந்தது; அந்நாட்டு மலைகளில் வரிசை வரிசையாகத தேனடைகள் தொங்கும்; ஆகவே ஆங்குச் சென்றால் கவலையின்றி வாழ்வை; ஆங்குச் சென்றபின்னர், இத்தலையும மூறிய எனக்காக ஒன்று செய்ய வேண்டு கிறேன்; நீ செய்யப்போவது கெடுதி யுடையதன்று; நல்லதொன்றையே செய்யச்சொல்கிறேன்; நல்லதுசெய்ய நீ அஞ்சவேண்டியதில்லை; ஆண்டுச்சென்றால், அவரைக் கண்டு, "நும் காதலி இன்னும இற்செறிக்கப்பட்டுளாள்; அவள் சுற்றத்தார் உழைத்துப்பெற்ற பொருளும் வலியும் உடைய உயர்ந்தோராவர்; ஆதலின் அவர்களறியாது அவளை அடைதல் அரிது: முறைபபடி சேரின், வரவேற்று விரும்புவ அளிக்கும் அருள்உள்ளம் உடையராவர் என்று கூறுக," என்று பாடிய பாடற்பொருளும்,

தான் அவ்வாறு வேண்டவும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், வேலியிற் படர்ந்திருக்கும் கொடிகளில் மலர்ந்து மணக்கும் பீர்க்கம்பூவில் உளள தேனைத் தேடிச் சென்றும், தன் இனிய பெடையுள்ள இடம நோக்கிச் சென்று கூடி மகிழ்ந்தும் காலம் கடத்தும் தும்பியைச் சினந்துநோக்கி, "ஏ தும்பி! நின் உடல்தான் கரிது என்று எண்ணினேன்; நின் அறிவும் கரிது என்பதை அறியாதுபோயினேன்; கொடுமை உள்ளம் படைத்த நின்னிடத்தில் என் குறையினைக் கூறிய காரணத்தி னாலேயே இந்நோய் முன்னினும்பெருகித் துயர் செய்வ தாயிற்று" என்றுகூறும் நற்றிணைப் பகுதியும்,

பரத்தையர் ஒழுக்கம்பூண்டு தவறிய தலைமகனுக்காகத் தலைவிபால் தூதுவந்தவர்களை நோக்கி "பெரியவர்கள் நெடிய பெரிய தேர்செய்து அதில் ஏறி அமர்ந்து ஊர்ந்து மகிழ்வார்கள் என்றால், இளஞ்சிறுவர்கள், சிறிய தேர் செய்து அதை ஈர்த்தே இன்புறுவர்; அதைப்போன்றே, தலைவனைப்பெற்றுப் பேரின்பம் அடையும் பேற்றினை எவராயினும் பெறட்டும்; நாங்கள் அவன் அன்று அளித்த நட்புரிமை ஒன்றை உள்ளத்தில்கொண்டே மகிழ்ந்து வாழ்வோம்; ஆகவே அவர்பொருட்டுத் தூதுவர வேண்டியதில்லை" எனத் தோழிகூறும பகுதியும் நயம்செறிந்து தோன்றுதல் காண்க.

தசசன் செய்த சிறுமா னையம்
ஊர்ந்து இன்புறூஉ ஆ ஆயினும் கையின்
ஈர்தது இன்புறூஉம இஃதேபோ லும,
உற்று இன்புறேனம ஆயினும், நற்றோர்ப்
பொயகை யூரன் கேணமை
செயதின் புற்றனெம்; செறிந்தன வெளவே.

(குறுந் : சுக.)

உ0. தொடித்தலை விழுத்தண்டினர்

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது"

என்றார் பெரியாரொருவர்; உள்ளம் ஒருவழி நில்லாது ஏதேனும் ஒன்றை எண்ணிக்கொண்டேயிருக்கும் இயல்புடையது; ஒலி, ஒளிகளினும் விரைந்து செல்லக்கூடிய வன்மை உடையது; உலகனைத்தையும் ஒரு நொடியில் சுற்றிவந்துவிடும் உள்ளத்தை ஒரு நொடிப்பொழுதும் ஓயவைத்து உறங்கவைத்தல் இயலாது; ஒன்றைவிட்டு ஒன்றைத் தொடர்ந்து எண்ணிக்கொண்டே யிருக்கும்; தொடர்பில்லாத பல பொருள்களைத் தொடர்ந்து எண்ணிக் கொண்டேயிருக்கும்; உள்ளத்தின் இவ்வியல்பை யுணர்ந்தே அதை மனக்குரங்கு என அழைப்பர். உள்ளம் நிகழ்கால நிகழ்ச்சிகளைமட்டுமே வரிசையாக எண்ணிப் பார்க்கும என்று கொள்ளுதல்கூடாது; எதிர்கால நிகழ்ச்சிகள் எவ்வெவ்வாறு இருத்தல்வேண்டும் என்று எண்ணி ஏங்குவதும் உண்டு; எதிர்காலத்தை எண்ணி ஏங்கும் உள்ளம் இறந்தகால நிகழ்ச்சிகளையும் நினைவூட்டிக் காண்பதும் உண்டு.

வாழ்நாள் முழுதும் ஒரேநிலையில், அதாவது என்றும் வறியராகவோ, அல்லது என்றும் செல்வராகவோ வாழ்ந்தவர் உலகத்து அரியர்; தொடக்கத்தில் பெருவாழ்வு வாழ்ந்து இறுதியில் வறியரானவரும், தொடக்கத்தில் நிறைந்த வறுமை வாழ்வினராய்ப் பின்னர்ப் பெருவாழ்வு பெற்றவருமே உலகதில் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். வறுமையில் தொடங்கி வளத்தில் வாழ்வு நடாத்துவோர் சிறிது அறிவுடையராயின் தம் பழங்காலவாழ்வை மறவாது, அது கற்றுத்தந்த பாடத்தை மனதில் இருத்திப் பண்புடைவாழ்வை மேற்கொள்வர்; அவர்பால் அவ்வறிவு இல்லாதுபோயின், அன்னர் தம் பண்டைய நிலையினை மறந்து செல்வச்செருக்கால் செய்வதறியாது கேடு பல செய்து வீழ்வர்; பெருவாழ்வில் வாழ்ந்து கெட்டவர் நல்லவராயின், அவர் தம் பண்டைய நிகழ்ச்சிகளை எல்லாம்

எண்ணிப்பார்த்து அவை இப்போது இல்லையே என்று எண்ணி எண்ணி ஏங்குவதோடு, அவ்வாறு கெடுதற்கு அன்று தாம்செய்த பிழையினையும் உணர்ந்து, அந்தப் பிழை மீண்டும் தம்பால் நிகழாவண்ணம் விழிப்பாயிருப்பர்; இந்நெறியால் மக்கள் தம் இறந்தகால நிகழ்ச்சிகளை எண்ணிப்பாத்தல் எத்துணை நன்று என்பது புலனும்.

மக்கள் வாழ்நாளில் இளமைக்காலத்தைப்போன்ற இன்பம் நிறைந்த காலத்தை வேறு எப்போதும் காணல் அரிது; இளமைக்காலந்தான் இன்பம் துய்ப்பதற்கு ஏற்ற காலமாகும்; இளமை கழிந்தகாலத்தில் இன்பம துய்ப்பதும் கூடாது; அஃது இயலவும் இயலாது;

"இளமையிற் சிறந்த வளமையும் இல்லை;
இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும இன்றே" (நற்: கஉசு.)

என்று அறிஞர் ஒருவரும் கூறுவர். முதுமை எய்தியவர், தம் இளமைக்கால இன்பநிகழ்ச்சிகளை எண்ணிப்பார்த்து அவற்றை இப்போது பெறமுடியவில்லையே என்று ஏங்கி நிற்பது உலகியல். அத்தகைய முதியோர் ஒருவரைத் தொடித்தலை விழுத்தண்டினர் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று நமக்கு அறிமுகம் செய்துவைக்கிறது.

ஆற்றுப் படுகையிலும், கடற்கரையிலும் பரந்துகிடக்கும் மணலில் பாவைசெய்து, அதற்குப் பலநிற மலர்களைப் பறித்துச் சூட்டி ஆடும் இளஞன் ஒருவன்; அருகே உள்ள குளிர்ந்த நீர்நிலைகளில் குதித்து ஆடும் மகளிரையும் கூட்டிக்கொண்டு, அவர் கைகளோடு தன் கைகளைக் கோத்து உலாவி, அவர்கள் ஆடியபடியெல்லாம் ஆடித் தீர்த்துப் பின்னர்த் தன்னைப்போன்றே உள்ளத்தே எத்துணையும் வஞ்சனை நஞ்சினைப்பெறுத சிறுவர்களோடு சென்று, ஒரு நீர்நிலையினை அடைந்து, அந் நீர்நிலைக்கு அணித்தே வளர்ந்துள்ள உயரிய மரத்தின்கிளைகளுள், நீர்வழிச் சாய்ந்துநிற்கும் கிளையில் ஏறிநின்று, கரையில் நிற்பார் எல்லாம் அச்சத்தால் கண்இமையாது கலங்கிப்

பார்த்துக்கொண்டிருக்க, நீர்மேலோங்கி எழுந்து சிதறுமாறு துடும் எனக்குதித்து நீர்நிலையின் அடிவரை மூழ்கிச் சென்று மண்கொணர்ந்து காட்டி மகிழ்வான்; அத்தகைய இளமைவாழ்வையுடைய அவன் இப்போது ஆண்டு முதிர்ந்து கிழவனாகிவிட்டான்; நடை தளர்ந்துவிட்டது; ஆகவே கையில் ஊன்றுகோல் ஏந்திக்கொண்டான்; கோல் கொண்ட பின்னரும் நடுக்கம் தீர்ந்திலது; சில சொற்களைக் கூறியவுடனே பெருமூச்சுவாங்கத் தொடங்கிவிடும்; இருமல் வேறு இடையிடையே தோன்றித் துயர்செய்யும்; இந்த அளவிற்கு மூத்துவிட்டான்; அந்த நிலையில் அவனுக்குத் தன் இளமைக்கால இனிய காட்சிகள் கண்முன்பு நிற்கலாயின; அவற்றைக் கண்ட அவன் கண்கள் நீர் மல்கின; அவனும் 'அந்தநாள் வாழ்வு எங்கோ சென்று மறைந்துவிட்டதே! அதை மீண்டும்பெற எங்கேசென்று தேடுவேன்?' என்று கூறிக் கலங்குவானாயினன்.

இனி நினைந்து இரக்க மாகின்று; தினைமணல்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்,
தணைகயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து,
தழுவுவழித் தழீஇத், தூங்குவழித் தூங்கி,
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயாநினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து,
குளித்துமணல் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே? யாண்டுண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று
இரும் இடை மிடைந்த, சிலசொல்
பெருமூதாளரோம் ஆகிய எமக்கே. (புறம்: உசுக)

இந்தப் பாட்டில், கிழவர் ஏந்திய கைத்தடியினைப் பற்றிக் கூறுங்கால், அது தலையில் பூண் உடையது; மிகவும் பருமை உடையது என்று கூறியது, அந்த முதிர்ந்த நிலையில் அவர்க்குப் பொருளாய் நிற்பது அத்தடி ஒன்று

மட்டுமே என்பதை அறிவித்தற்காம்; ஆண்டு முதிர்ந் தோர்க்கு அரியபொருளாக விளங்கும் தடியினைத் தொடித் தலை விழுத்தண்டு எனச் சிறப்பித்துக் கூறினமையால், இப் பாட்டாசிரியர் பெயர் தொடித்தலை விழுத்தண்டினர் என வழங்கலாயிற்று.

இந்தப் பாட்டைப் பாடிய புலவர், தொடித்தலை விழுத் தண்டினர் என்பதல்லது, அவர் இயற்பெயரோ, அவர் காலப் புலவர்கள் யாவர் என்பதோ, அவர் பாடல்கேட்டுப் பாராட்டிப் பரிசில அளித்த பெருங் கொடைவள்ளல் யாவன் என்பதோ எதுவும் அறிந்துகொள்ள முடிய வில்லை. திருவாளர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை யவர்கள், இந்தச் செய்யுள் தொடித்தலை விழுத்தண்டினர், ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனை பாராட்டிய பாடல்களுள் ஒன்றெனக்கூறி, இப் பாட்டுப் பாடுதற்குக் காரணமாய் இருந்த சூழ்நிலை ஒன்றையும குறிப்பிடுகிறார். இப் பாட்டிற்கும, ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்த னுக்கும் தொடர்பு உண்டு என்பதை டாக்டர் உ. வே. சா. அவர்களின் புறநானூற்றுப் பதிப்பில் வரும் கொளு உணர்த்தவில்லை; ஆனல், பாடினோர், பாடப்பட்டோர் வரலாற்றில், ஒல்லையூர் கிழான்மகன் பெருஞசாத்தனைப் பாராட்டிய புலவர்களுள் ஒருவராக இவரையும் கூறியுள் ளார். ஆனல், தாம் கொள்ளும் பாட பேதங்களுக்கெல் லாம் ஆதாரம் காட்டிச்செல்லும் பண்பினராய டாக்டர் உ. வே. சா. அவர்கள், ஈண்டு அவ்வாறு கொண்டதற்கு ஆதாரமாய சான்று இது என எதையும் கூறினரல்லர்; பிள்ளையவர்கள் ஐயர் அவர்களினும் ஒருபடி முன்சென்று, "ஒல்லையூர் கிழான் மகனை பெருஞ்சாத்தன் பேரிளையனுய் இருந்தகாலத்தில் ஒருகால் தொடித்தலை விழுத்தண்டினர் என்னும் சான்றோர் அவனைக் காணச்சென்றார்; சாத்த னும் அவரை மிக்க அன்புடன் வரவேற்று இனிமை மிகப் பேசி அளவளாவினன்; வேறுபல சான்றோரும் அங்கே கூடியிருந்தனர்; அக் கூட்டத்தில் இளமையின் வளமை பற்றிப் பேச்சுண்டாயிற்று;.....நம் தொடித்தலை விழுத்

தண்டினர், இளமைச் செய்கைகளை ஒருவகையால் தொகுத்
துரைப்பாராய் இப்பாட்டைப் பாடினர்" என இப் பாட்டுப்
பாடுவதற்குக் காரணமாய சூழ்நிலையினையும் வரைந்து
காட்டுவர்; ஆனல், தாம் அவ்வாறு கூறுதற்குப், புற
நானூற்றில் பாடினேர், பாடப்பட்டோர் வரலாற்றுப்
பகுதியில் டாக்டர். உ. வே. சா. அவர்கள் குறிப்பிடும்
ஆதாரமற்ற சான்றுதானே? அல்லது தமக்குக் கிடைத்த
தாகக்கூறும் அரித்துவார மங்கலம் வா. கோபாலசாமி
ரகுநாத ராசாளியார் ஏட்டுப் பிரதியில் அவ்வாறு கூறப்
பட்டுளதா என எதையும் கூறினரல்லர். இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு பாட்டைக்குறித்து யார்
எதை வேண்டுமானலும் கூறிவிடலாம் என்ற நிலையினை
உண்டாக்கிவிடாமல், கூறும் எதற்கும் பொருந்தும் ஆதா
ரம் உண்டு என்பதை உணரும்வகையில் உணர்த்துவதைத்
தமிழறிஞர்கள் ஒழுக்கமாகக் கொள்வார்களாக.

உக. நெடுவெண் நிலவினர்

தலைவன் ஒருவன் தலைமகள் ஒருத்தியைக் கண்டு அன்புகொண்டான்; அவ் விருவர்க்கும் இடையில்வளர்ந்த காதலைத் தலைமகள் தமர் அறியார்; ஆகவே தலைவன் தன் காதலியைக் காண இரவுக்காலத்தே வரலாயினன்; தலைவி அவன்பால் பேரன்பினள்; அவனைச் சிறிதுபோது பிரிந்திருப்பதையும் பொறாள்; ஆகவே அவன் களவில் வந்து செல்வதைத் தலைமகளின் உயிர்த்தோழி கண்டித்து நிறுத்த அஞ்சினாள்; ஆனல் மற்றோர் அச்சம் அவள் உள்ளத்தில் வளர்ந்துகொண்டே வந்தது; தலைவன் வரும் வழி கொடுவிலங்குகள் வாழும் காட்டுவழியாம்; புலிகள் நிறைந்தது; மேலும் வேங்கைமலர் உதிர்ந்த பாறைகள் புலிகளைப்போலவே தோன்றுமாம்; இரவில் வரும் தலைவன், அத்தகைய பாறைகளைக் கண்டு பழகியவன், ஒருநாள் உண்மையான புலியையும் இரவு மயக்கத்தால் வேங்கை மலர் உதிர்ந்த பாறையெனக் கருதிவிடுதலுங் கூடும்; அதனல் அவனுக்குக் கேடுண்டாகவும் கூடும்; அப்படிப்பட்ட நிலையாதேனும் உண்டாகிவிடின் தலைவியின் நிலை என்னுமென்று அஞ்சினாள்; ஆகவே அவன் காட்டுவழி வருவதை நிறுத்தி விரைவில் மணந்துகொள்ளுமாறு செய்தல்வேண்டுமெனத் துணிந்தாள்; ஆனல் இதை எவ்வாறு அவனிடம் கூறுவது என எண்ணிக்கொண்டிருந்தாள்; ஒருநாள் இரவு, தலைமகன் வந்து வீட்டின் பின்புறம் நின்று கொண்டிருக்கிறான்; நிலவு நன்றாகக் காய்கிறது; காதலர் தம் களவொழுக்கத்திற்கு நிலவொளி இடையூறும்; இந்த நிலையினைத் தோழி நன்கு பயன்படுத்திக் கொண்டாள்; தாங்கள் தலைவனைக்காணப் பெரிதும் துடித்துக்கொண்டிருப்பதைப்போலவும், அதற்குத் தடையாய் நிலவு வந்துவிட்டது கண்டு வருந்துவதுபோலவும் தலைவன் எண்ணுமாறு நிலவை நோக்கி, "நிலவே, தலைவர், தலைவியைக் காண, அரியகாட்டைக் கடந்து வந்துளார்; வந்த அவர் தலைவியை அடைந்து இன்புறுவாறு இடையில் தடையாய் நின்று காய்கிறாய்; நிலவு வீசத்தொடங்கிய நீ விரை

வில் மறைந்தாவது போவாய் என்றால், நீண்டுகொண்டே போகிறது நின்ஒளி; ஆகவே, தலைவர்க்கு நீ நல்லது செய்கின்றாயல்லை'' எனத் தலைவன் காதில் படுமாறு கூறினாள்.

கருங்கால் வெங்கை வீயுகு தறுகல்
இருமபுலிக் குருளையிற் றோன்றும் காட்டிடை
எல்லி வருநர், களவிற்கு
நல்லை யல்லை, நெடுவெண் நிலவே. (குறுந்: சுஎ.)

இவ்வாறு தோழி கூறக்கேட்ட தலைமகன், தன் வரும் வழி ஏதம் கண்டு தளர்ந்து வருந்துகிறாள் எனறும், தன்னைக் கூடப் பெறாமல் தடைசெய்யும நிலவு ஒளிகண்டும் வருந்துகிறாள் என்றும், இவ்வாறு அருஞ்சுரம் கடந்துவருதும் தலைவிக்கு இன்பம் அளிக்காமல் துன்பமே அளிக்கும் இக் களவொழுக்கைக் கைவிட்டுக் கடிதில் மணம்புரிந்துகொள் வதே நலம என்றும் எண்ணிச்செல்வன்; இவ்வாறு தான் கருதியது முடிக்கும் கருத்தினளாய தோழியின் செயலைக் கூறும் இப்பாட்டில், ஆசிரியர் நிலவை, நெடுவெண் நிலவு என்று கூறியுள்ளார்; உண்மையில் தலைவனுக்கு இடை யூறாய் இருந்தது என்றாலும், தங்கள் தலைவன், காட்டில், புலி எது, பாறை எது என எளிதில் அறிந்துகொள்ளத் துணைபுரிகிறது இந்நிலவு; தலைவன் களவொழுக்கத்திற் குத் தடைவிதித்து மணம்கொள் முயற்சியில் தலைமகனை உந்தவேண்டும் என்ற தம் எண்ணத்திற்கு உறுதுணை புரிந்தது இந்நிலவு என்ற கருத்தினள் தோழியாதலின் அவள் நிலவை நெடுவெண் நிலவு எனப் பாராட்டினள் என்றகருத்து வெளிப்படப் பாடியுள்ளமையால், இப் பாட் டாசிரியரும், அத் தொடரின் பெயரையே பெற்று நெடு வெண் நிலவினர் என அழைக்கப்பெற்றுளார்.

———

௨௨. பதடிவைகலார்

போலிப் பொருள்கள் புகுந்துவிட்ட காலம் இது; உண்மையான பொருள் ஒன்று இருந்தால், அதன் உண்மையான இயல்பினைப் பெறுமல், அதன் உருவத்தைமட்டும் பெற்றிருக்கும் பொருள் ஒன்று இருக்கும். நெல் உண்டு; நெல்லைப்போன்ற பதடி உண்டு; அதன் உள்ளே அரிசி இராது; அதைக் கருக்காய் என்பர்; மக்களிலும் பதடி உண்டு என்பர் வள்ளுவர்;

"பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்
மக்கட் பதடி எனல்" (திருக்: ககூ)

என்ற அவர் குறள் காண்க; மக்கட் பண்பில்லாக் கயவர்களைக் கூறுங்கால்,

"மக்களே போல்வர் கயவர்" (திருக். கஎக)

என்று கூறுவதையும் காண்க. இவ்வாறு உலகப் பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் போலிகளாகிய பதடிகள் இருப்பதைபோன்றே, நாட்களிலும் பதடிகள் உண்டு; நாட்களில் பதடியாவது, நாள் பயன்படாமல் கழிவது; வீரனுக்கு ஒருநாள் பயன்படாத நாளாகக்கழிதல், அன்று அவன் போர்க்களம் புகுந்து பகைவர்களை அழித்து வெற்றிகொண்டு, அம்முயற்சியில் புண்பெறுது கழிதலாம்;

'விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன் நாளை எடுத்து" (திருக்: எஎசு)

என வள்ளுவர் பேசும் வீரத்தின் சிறப்பை நோக்குக.

நாள் அளிக்கும் பயன் இது என்பது அவரவர்கள் மனநிலைக்கேற்ப மாறுபடும்; குறுந்தாகையில் வரும் தலைமகன் ஒருவன், பயனின்றிக் கழிந்த பதடிநாள் ஒன்றைக் குறிப்பிடுகின்றான்; மணந்துகொண்ட மனைவியோடு மனையில் இருந்து அவளோடு உறங்கி எழுந்த நாட்களே பயனுடைய நாட்கள்; அவைதாம் உண்மையில் வாழ்ந்த

நாட்கள்; அவளைவிட்டுப் பிரிந்துசென்று தனித்துறைந்த நாட்கள் எல்லாம் பயனின்றிக் கழிந்த நாட்களேயாம்; ஆதலின் அவையெல்லாம் பதடிநாட்கள் என்று கூறும் அவன் உள்ளத்தை உணர்க;

"எல்லாம் எவனே பதடி வைகல்!
பாணா படுமலை பண்ணிய எழாலின்
வானகத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறுமந றுநுதல்
அரிவை தோள்நிணைத துஞ்சிக்
கழிந்தநாள் இவண வாழும் நாளே." (குறுந்: 400)

இவ்வாறு தலைவியோடு இன்புறுதநாட்களைப் பதடி வைகல் என்று கூறுகிறான் தலைமகன் என்று பாடிய சிறப் பால் இச்செய்யுளைப் பாடிய ஆசிரியர் பதடிவைகலார் எனப்பட்டார். இவர் கூறிய கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நம் வாழ்நாட்களில் நல்லன செய்தொழுகுதல் கடமையெனக்கொண்டு சிறப்புற வாழ்வேமாக.

சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை

(க முதல் சூ வரை)

ஆசிரியர்: திரு. புலவர், கா. கோவிந்தன், எம். ஏ. அவர்கள்

க. கபிலர்:

இது சங்கத் தமிழ்ப் புலவர் வரிசையில் முதன்முதல் வெளிவந்தது. கபிலர் தம் செய்ந்நன்றி மறவாச் சீர்மையையும் இயற்கைநெறியில் வாழ்ந்த அவர்தம் இயற்பண்பையும் அவர் பாவின் உட்கிடக்கையைக் கொண்டே விளக்கிக் காட்டும சிறந்த நூல்.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0

உ. பரணர்:

இவர் நடுநிலைதவறு நெஞ்சப்பாங்கினர். வரலாற்று ஆசிரியா; இவர் காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளை உவமை வாயிலாக அமைதறுத திறமபடக் காட்டும் திட்பமதி மிக்கவர். இதனை இவர் வரலாறு கூறும் இந்நூலிற் பரக்கக் காணலாம்.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0

ங. நக்கீரர்:

இவர் அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண்மையாளர். இவர் வரலாறு சுவைமிக்கது; தமிழார்தம் வீரத்துக்கு இலக்காக இலகுவோா. இவர் வரலாற்றை நெடுநுகத்துப் பகல்போல் ஆய்ந்து உண்மை தெளிக்கும் உயரிய நூல்; தமிழார்தம் வாழ்க்கைக்கு வழிகாட்டி.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0

சு. ஔவையார் :

இவரை அறியாத தமிழ்மாந்தர் யாருமிலர். அதற்கு இவர்தம் புலமைச் சிறப்பே ஏதுவாகும். இவர் பெண்மை யுலகின் மணியாகத் திகழ்வோர். இவர்தம் தமிழ்த் தொண்டு ; தன்னலங் கருதாமாண்பு ; நெஞ்சத் திண்மை ; கைம்மாறு வேண்டாக் கடப்பாடு முதலியன இவர்தம் பாக்களிலிருந்தே தெளித்துரைக்கப்பட்டுள்ளன. கருத் தோவியம் மிக்க கவின்தரு நூல்.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0

ரு. பெண்பாற் புலவர்கள் :

உலகம் இருவேறுகத் திகழ்கின்றது. அவை ஆண்மை பெண்மை என்பன. பெண்ணுலகு தாய்மைப் பேறு. அவர் கல்வி கேள்வியிற் சிறந்தால் நாடு உயரும் ; நாடுயர எல்லா நலமும் உயரும். இந்நிலை பழங்காலத் தமிழகம் பெற்றிருந்ததற்குச் சான்றுதரும் விளக்கக் கண் ணுடியே இந்நூல். இதனைத் தமிழுலகம் கண்டு தெளிய வழித்தெடுத்த மாபெரும் நூல்.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0

சுரு. உவமையாற் பெயர்பெற்றோர் :

காணு ஒன்றை மனக்கண்ணுற் காண வைப்பது உவமம். அவ்வுவமங்கொண்டு கருத்தைத் தெளிவிக்கும ஆற்றல் நம பழங்கால அறிஞரிடையே திகழ்ந்தது. அவர் பெயரும் அறியாவண்ணம் மறைந்தனர். அவர் பெயரை நிலைநாட்டியன அவர் பாக்கள் ; அப்பாக்களிடை ஊறிய கருத்தூற்றே அவர் பெயராகக் காணக் கிடக்கின்றன. இவைகளைத் தெற்றென விளக்குவது இந்நூல் ; படித் தறிக.

இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 1-12-0